மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்

2011–2012

சிறப்பு வெளியீடு எண். 45

தமிழரசு

இலவச வெளியீடு

மே 2015

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.

அறிமுகவுரை

“மக்களால் நான்
மக்களுக்காகவே நான்”

என்ற உன்னத இலட்சியத்துடன் தமிழக மக்கள் நலனுக்காகவே வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2011ஆம் ஆண்டு மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று 27.05.2011 முதல் 24.04.2012 வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆற்றிய உரைகள் தொகுக்கப்பட்டு **“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்”** என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில் கடந்த 2011ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற அரசு தற்போது நான்காண்டுகள் நிறைவடைவதையொட்டி, வெளியிடப்படும் இந்நூல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனைகளையும், அரிய கருத்துகளையும் பொதுமக்கள் அறிந்து பயன்பெற பெரிதும் உதவும்.

இந்நூலினை தொகுத்து வெளியிட்டுள்ள செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன் இஆப அவர்களையும், உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் பாராட்டுகிறேன்.

மூ. இராசாராம் இஆப
அரசு செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	சட்டப்பேரவையில், சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் சட்டப்பேரவைத் தலைவர் துணைத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுரை–(27.05.2011)	1
2.	சட்டப்பேரவையில், சட்டமேலவை நீக்கத் தீர்மான உரை–(07.06.2011)	9
3.	சட்டப்பேரவையில், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோரும் தீர்மான உரை–(8.6.2011)	10
4.	சட்டப்பேரவையில், கச்சத்தீவு மீட்பு குறித்த தீர்மான உரை–(09.06.2011)	12
5.	மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மான விவாத பதிலுரை–(10.06.2011)	14
6.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி அரசு விழா உரை–(19.06.2011)	49
7.	தொழுநோயாளிகளுக்கான நியாயவிலைக்கடையைத் திறந்து வைத்து ஆற்றிய உரை–(28.06.2011)	69
8.	இந்தியத் தொழில் கூட்டமைப்பின் தேசியக்குழுக் கூட்ட உரை–(05.07.2011)	70
9.	புதுடெல்லி மத்தியத் திட்டக்குழுக் கூட்டஉரை–(06.07.2011)	75
10.	விரைவுப் பட்டா மாறுதல் திட்டம் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(18.07.2011)	86

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
11.	புதிய மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(25.07.2011)	88
12.	சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம்–(08.08.2011)	90
13.	காற்றாலை மூலம் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்–(08.08.2011)	92
14.	பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம்–(11.08.2011)	95
15.	சட்டப்பேரவையில், இலங்கைக்குக் கண்டனம் தெரிவிக்க வலியுறுத்தும் தீர்மான உரை–(11.08.2011)	100
16.	100 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தல்–(12.08.2011)	106
17.	உகந்த பயிர்மேலாண்மை கடைப்பிடிக்கும் திட்டம்–(12.08.2011)	108
18.	சுதந்திரத் திருநாள் உரை–(15.08.2011)	110
19.	வனவிலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத்தொகை உயர்த்தல்–(17.08.2011)	120
20.	ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நவீன மருத்துவமனை உருவாக்குதல்–(19.08.2011)	122
21.	புதிய காவல்நிலையங்கள் மற்றும் மகளிர் காவல் நிலையங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை–(22.08.2011)	125
22.	சட்டப்பேரவையில், தமிழ்ப்புத்தாண்டு (விளம்புகை), நீக்க சட்ட முன் வடிவின் மீதான விவாத உரை–(23.08.2011)	128

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
23.	சட்டப்பேரவையில், காவல்துறை மற்றும் தீயணைப்பு மீட்புப்பணித்துறை மானியக் கோரிக்கை விவாத பதிலுரை–(24.08.2011)	131
24.	கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதியினை விரிவுபடுத்துதல்–(25.08.2011)	150
25.	உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிட முன்னுரிமை–(26.08.2011)	152
26.	புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித்தடங்களைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(26.08.2011)	157
27.	கைதிகள் மூவரின் தூக்குத் தண்டனை ரத்து தொடர்பான அரசின் நிலை–(29.08.2011)	158
28.	குறைந்த செலவில் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி சேவை–(30.08.2011)	164
29.	அரசு கேபிள் டிவி சேவையைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(02.09.2011)	167
30.	பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டைமூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(02.09.2011)	169
31.	இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பின் தேசிய செயற்குழுக் கூட்ட உரை–(05.09.2011)	170
32.	சென்னையில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையம்–(06.09.2011)	171
33.	இரயில்வே கடவுகளில் பாலங்கள், சாலைகள் மேம்பாடு–(07.09.2011)	176
34.	திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம் (08.09.2011)	179

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

35. 11ஆவது அகில இந்தியக் காவல் துப்பாக்கிச் சுடும் போட்டி நிறைவு விழா உரை–(08.09.2011) 182

36. மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம்–(10.09.2011) 184

37. மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர்களைத் தேர்வு செய்ய தனிவாரியம்–(10.09.2011) 189

38. சத்துணவு, அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல்–(12.09.2011) 193

39. சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் அமைத்தல்–(12.09.2011) 197

40. சட்டப்பேரவையில், விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறித்து அளித்த பதிலுரை–(12.09.2011) 200

41. நாகப்பட்டினம் பகுதியில் மீன்வளப் பல்கலைக்கழகம்–(13.09.2011) 203

42. திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் சிறப்புத் திட்டங்களைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை– (15.09.2011) 206

43. ஜப்பான் தொழில் அதிபர்கள் மத்தியில் ஆற்றிய உரை–(22.09.2011) 213

44. மாநிலத் திட்டக்குழுவின் முதல் கூட்டத் தலைமையுரை–(11.10.2011) 216

45. புதுடெல்லியில் நடைபெற்ற 56ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்ட உரை–(22.10.2011) 220

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

46. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழா உரை–(03.11.2011) 242

47. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(13.11.2011)....................249

48. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டு நிறைவுரை–(14.11.2011) 257

49. மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(14.11.2011)....................266

50. காவல்துறை அதிகாரிகள் மாநாட்டு நிறைவுரை–(14.11.2011) 270

51. சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் முல்லைப்பெரியாறு அணைகுறித்த தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை–(15.12.2011) 280

52. சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணைகுறித்த தீர்மானத்தின் மீதான பதிலுரை–(15.12.2011) 288

53. 2011–தொழில்நுட்ப வளர்ச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(21.12.2011)....................296

54. கடலூரில் “தானே” புயல் நிவாரணம் வழங்கி ஆற்றிய உரை–(04.01.2012) 307

55. சட்டப்பேரவையில், மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மான பதிலுரை–(04.02.2012) 309

56. சென்னை மணலியில், பிறழ்நிலை நீராவி டர்பைன் ஜெனரேட்டர் உற்பத்தி ஆலையைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–(12.02.2012)....................346

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
57.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி அரசு விழா உரை—(13.02.2012)	350
58.	தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற பயிற்சி உதவி ஆய்வாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா உரை—(15.02.2012)	361
59.	“2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கான தொலைநோக்குப் பார்வை” ஆவணத்தை வெளியிட்டு ஆற்றிய உரை— (22.03.2012)	370
60.	காவல்துறையினருக்கான சிறப்பு அங்காடிகளை திறந்து வைத்து ஆற்றிய உரை—(28.03.2012)	379
61.	சிறப்புக் காவல்படை மற்றும் ஆயுதப் படையினருக்கான மருத்துவ சேவை மையங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை—(28.03.2012)	381
62.	மின்வெட்டைக் குறைத்திட புதிய மின்திட்டங்கள்—(29.03.2012)	383
63.	தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.740 கோடி மானியம்—(03.04.2012)	389
64.	சங்ககிரியில் மாவீரர் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம்—(04.04.2012)	396
65.	அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு—(09.04.2012)	399
66.	தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழா—(10.04.2012)	401
67.	புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகளுக்கு ரூ.50 கோடி—(12.04.2012)	405
68.	தமிழ்ப் புத்தாண்டு விழாவில் ஆற்றிய உரை—(13.04.2012)	408

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
69.	உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம்–(16.04.2012)	416
70.	அனைத்து துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குவதே எனது குறிக்கோள் (18.04.2012)	427
71.	11 இடங்களில் புதிதாக இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்–(19.04.2012)	434
72.	சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாக மக்கள் கொண்டாடி வருகின்றனர்–(19.04.2012)	436
73.	தமிழ்நாடு பல்மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் (20.04.2012)	442
74.	புதிய எழுச்சியுடன் தமிழகக் காவல்துறை செயல்படுகிறது (24.04.2012)	444

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்,*
27.5.2011 அன்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட
மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. டி. ஜெயக்குமார் மற்றும்
மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் திரு. ப.தனபால்
ஆகியோரை வாழ்த்தி, பாராட்டி தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையில் ஆற்றிய உரை.

நல்லதைப் பாராட்டி, தவறைத் தட்டிக் கேட்கும் ‘‘சபாநாயகராக’’ நடுநிலை நழுவா நாயகராக விளங்கவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மக்களே, மக்களுக்காக, மக்களால் நடத்தும் ஆட்சி மக்களாட்சி” என்று கூறியவர் முன்னாள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன். இப்படிப்பட்ட மக்களாட்சி மலர்வதற்கு முன், பல்வேறு வகையான ஆட்சிகள் பல அமையப் பெற்றிருந்தாலும்,

அவை அனைத்தும் மக்கள் கருத்துகளுக்கு செவி சாய்க்காத ஆதிக்க ஆட்சிகளாகவே திகழ்ந்தன. மக்களாட்சி ஏற்பட்ட பின்பும், தனி மனிதன் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சிகள் மக்களாட்சி என்ற போர்வையில், பல்வேறு இடங்களில் நடைபெற்றே வந்துள்ளன. ஒரு குடும்பம் ஆதிக்கம் செலுத்தும், "குடும்ப ஆட்சி" கூட ஜனநாயகத்திற்கு விரோதமாக, மக்களின் பொது நன்மைக்கு எதிராக, ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்திற்கு முரணாக, மக்களாட்சி போன்ற தோற்றத்தில் அமைக்கப்படுவதுதான்.

மிக அதிகமானவர்களுக்கு, மிக அதிக நன்மையைப் பயப்பதுதான் உண்மையான மக்களாட்சி.

இப்படிப்பட்ட மக்களாட்சி முறையைச் செயல்படுத்தும் மன்றம் இந்தச் சட்டமன்றம். ஓர் அரசாங்கத்தைத் தங்கு தடையின்றி நடத்தி, பலதரப்பட்ட கட்சிகளின் கருத்துகளைப் பெற்று, மக்கள் பயன்பெறும் வகையில் சட்டங்கள் இயற்றி, ஜனநாயகத்தின் இதயமாகவும், மூளையாகவும் செயல்படுகின்ற மன்றம் இந்தச் சட்டமன்றம். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தச் சட்டமன்றத்தின் தலைவராக தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளீர்கள். தங்களுடைய தேர்வுக்கு எனது மனமார்ந்த மகிழ்ச்சியினையும், பாராட்டினையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவைத் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன் அவை முன்னவரும் எதிர்க்கட்சித் தலைவரும் தங்களுடைய கரங்களைப் பிடித்து, தங்களை அழைத்துச் சென்று சபாநாயகர் ஆசனத்தில் அமர வைத்தார்கள். இது சம்பிரதாயமாக நடைபெறுகின்ற ஒரு நடைமுறை. நாடாளுமன்ற மக்களவையானாலும், மாநிலங்களிலுள்ள சட்டமன்றப் பேரவையானாலும், சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரை அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் கரம் பிடித்து அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரவைப்பது வழக்கம். இந்தச் சம்பிரதாயம் எப்படி வந்தது? இந்தப் பழக்கம் எப்படி வந்தது? என்பதை

எடுத்துச் சொன்னால் அனைவருக்கும் மிகவும் சுவாரசியமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த மரபுக்குப் பின்னால் ஒரு பெரிய வரலாறே இருக்கிறது. நம்முடைய இந்திய ஜனநாயகம் என்பது பிரிட்டிஷ் ஜனநாயகத்தைப் பின்பற்றியே அமைக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் உள்ள பாராளுமன்றம் எவ்வகையில் அமைக்கப்பட்டதோ அதே வகையில் அமைக்கப்பட்டதுதான் இந்தியப் பாராளுமன்றமும், இந்தியச் சட்டமன்றங்களும். அங்கே, இங்கிலாந்து நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாராளுமன்றம் வந்துவிட்டது. அது மன்னர் ஆட்சி இருந்த காலம். சர்வ வல்லமை படைத்த மன்னரும் இருப்பார்; பாராளுமன்றமும் இருக்கும். இங்கே இந்தியாவில் அந்த முறையைப் பின்பற்றியபோது மன்னர் இல்லை. ஜனாதிபதி இருக்கிறார். பின்னர் பாராளுமன்றம் இருக்கும். அந்தக் காலத்தில் இங்கிலாந்து நாட்டில் மன்னர் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று விரும்புவார். அதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டும். பெரும்பாலும் பாராளுமன்றத்தில், உறுப்பினர்கள் மன்னருடைய விருப்பத்தை நிராகரித்து விடுவார்கள். இந்தச் செய்தியை யார் போய் மன்னரிடம் கூறுவது ? அவர்தான் பேரவைத் தலைவர். அதனால்தான் பாராளுமன்றத் தலைவர் என்று பெயர் வைக்காமல் ஸ்பீக்கர் என்று பெயர் வைத்தார்கள்.

ஏனென்றால் பாராளுமன்றத்தின் கருத்து என்னவோ அதைச் சென்று மன்னரிடம் எடுத்து உரைப்பவர்தான் ஸ்பீக்கர். நாம்தான் இங்கே பேரவைத் தலைவர் என்று அழைக்கிறோமே தவிர, இன்றுவரை, அங்கே வெளிநாட்டில், இங்கிலாந்தில், ஸ்பீக்கர் என்றுதான் அழைக்கிறார்கள். அப்படி மன்னர் எதை விரும்பினாரோ அதைச் செய்ய இயலாது என்று ஒரு ஸ்பீக்கர் சென்று துணிச்சலுடன் மன்னரிடம் கூறும்போது என்ன நடக்கும் ? சில காரியங்கள் செய்வதற்குத்தான் மன்னருக்கு பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டுமே தவிர, அந்த ராஜ்ஜியத்தில் உள்ள எந்தப் பிரஜைக்கும் மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் மன்னருக்கு உண்டு. ஆகவேதான் விரும்பியது நடக்காது என்று ஸ்பீக்கர் எடுத்துரைக்கும்போது, உடனே மன்னர் அவருக்கு மரண தண்டனை விதிக்கும்படி ஆணையிடுவார். தலையை வெட்டி

எடுங்கள் என்று ஆணையிடுவார். இது பலமுறை நடந்ததால் யாருமே அந்த ஸ்பீக்கர் பதவிக்கு வர விரும்ப மாட்டார்கள்.

ஆகவே, புதியதாகப் பாராளுமன்றம் அமையும்போது, ஒரு ஸ்பீக்கரைத் தேர்ந்தெடுக்கும்போது, இன்னார்தான் ஸ்பீக்கர் என்று அறிவித்தவுடன் அவர் உடனே தப்பித்தால் போதும், தலை தப்பித்தால் போதும் என்று ஓட்டம் பிடிப்பார். அப்போது அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அவரை ஓட விடாமல் தடுத்து நிறுத்தி அவர் கைகளைப் பிடித்து, இழுத்து வந்து, ஆசனத்தில் அமர வைப்பார்கள். இதுதான் அந்தக் காலத்தில் இருந்துவந்த மரபு. காலப்போக்கில் அது மாறி இப்போது ஜனநாயக முறை ஏற்பட்ட பிறகு, ஸ்பீக்கர் இப்போது ஓட்டம் பிடிக்கவேண்டிய அவசியமும் இல்லை, ஸ்பீக்கரின் தலையை எடுங்கள் என்று சொல்லக்கூடிய மன்னரும் இங்கே இல்லை. ஆனால், அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவைத் தலைவரின் கரங்களைப் பிடித்து ஆசனத்தில் அமர வைக்கும் மரபு மட்டும் அப்படியே இருக்கிறது. நிச்சயமாக, பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி சார்பில் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன். நீங்கள் தப்பித்தால் போதும் என்று ஓட்டம் பிடிக்கும் சூழ்நிலையை நாங்கள் எந்த நாளிலும் உருவாக்கமாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஓர் உண்மையான மக்கள் அரசு எவ்வாறு வாக்களித்தோருக்கும், வாக்களிக்காதோருக்கும், பொதுவாகச் செயல்படுகிறதோ, அதேபோன்று, இந்த அவையிலே உள்ள அனைத்து சாராருக்கும் பொதுவானவர் நீங்கள். பேரவையின் மாண்பையும், கண்ணியத்தையும், பேரவை உறுப்பினர்களின் மதிப்பையும், பாதுகாக்க வேண்டிய பொறுப்பை இந்த மாமன்ற உறுப்பினர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். பேரவையின் தலைவர் என்பவர் எவ்வாறு நடுநிலையோடு விளங்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்

திரு. ஜெ. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். அவரைப் பொறுத்தவரை அமைச்சரும் ஒன்றுதான், உறுப்பினரும் ஒன்று தான். ஆளும் கட்சி உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற வித்தியாசமின்றி தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கண்டிப்புடன் நடந்து கொள்வார் என்பதை நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். இவரைப் போலவே, டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்களும் நடுநிலையோடு அவையை நடத்தி அனைத்து உறுப்பினர்களின் பாராட்டினையும் பெற்றிருக்கிறார். இதேபோன்று, திரு.எஸ்.செல்லப்பாண்டியன் அவர்களும் அவையை நடுநிலையோடு நடத்தியதில் தனி முத்திரையைப் பதித்து இருக்கிறார். இந்த வரிசையில் அனைத்து உறுப்பினர்களின் அன்பையும் பெற்றவராகத் திகழ்ந்தவர் மறைந்த டாக்டர் கா. காளிமுத்து அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் தாங்கள் சாதாரண நடுத்தரக் குடும்பத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். நான்கு முறை இந்த மாமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு முறை, அதாவது பத்தாண்டுக் காலம், அமைச்சராகப் பணியாற்றி இருக்கிறீர்கள். குறிப்பாக, சட்ட அமைச்சராகப் பணியாற்றிய அனுபவம் தங்களுக்கு உண்டு. மூன்றாவது முறை, எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து, ஆளும் கட்சியின் குறைகளை, அராஜகங்களைச் சுட்டிக்காட்டிய அனுபவமும் தங்களுக்கு உண்டு. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆளும் கட்சியின் அமைச்சராக இருந்த அனுபவமும், எதிர்க்கட்சி உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவமும், தங்களுக்கு உண்டு. இரு சாராரின் மனநிலையையும் தாங்கள் நன்கு அறிந்தவர் என்பதால், நான்காவது முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீங்கள் பேரவைத் தலைவராக இன்று ஏற்றிருக்கின்ற இந்தப் பொறுப்பை மிக நல்ல முறையில் நிறைவேற்றுவீர்கள், அனைவரது பாராட்டினையும் தாங்கள் நிச்சயம் பெறுவீர்கள் என்று நம்புகிறேன். சீர்மிக்க இந்த அவையின், இழந்த பழம் புகழை, மீட்பதற்கான பக்குவத்தினையும்,

பயிற்சியினையும் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். தங்களுடைய சட்டமன்ற அனுபவமும், அனைவரிடத்திலும் அன்பாகப் பழகும் தங்களுடைய குணமும், இந்தப் பேரவையை நல்ல முறையில் நடத்திச் செல்ல நிச்சயம் உறுதுணையாக இருக்கும்.

திரு. ஜெ. சிவசண்முகம் பிள்ளை, டாக்டர் யு. கிருஷ்ணாராவ், திரு. எஸ். செல்லபாண்டியன், திரு. என். கோபால மேனன் போன்றவர்கள் எல்லாம் இந்தப் பேரவையின் கண்ணியத்தை எப்படிக் காத்தார்கள்; அதே சமயத்தில் கனிவுடனும், கண்டிப்புடனும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், மரபுகள், நெறிமுறைகள் ஆகியவற்றை எல்லாம் அலசி ஆராய்ந்து,

> “குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்.”

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, சட்டமன்ற நடவடிக்கைகள் சீராக, செம்மையாக, அமைதியாக நடைபெறும் வகையிலும், சட்டமன்ற ஜனநாயகப் பண்புகள், நெறிமுறைகள், பேணிப் பாதுகாக்கப்படும் வகையிலும் இந்த அவைக்குத் தாங்கள் பெருமை சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆளும் கட்சி அமோக வெற்றி பெற்றுவிட்டது; எதிர்க்கட்சியினருக்கு மிகக் குறைந்த இடங்களே கிடைத்துள்ளன என்ற சூழ்நிலை தற்போது நிலவினாலும், “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு” என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அமுத மொழிக்கு ஏற்ப, எதிர்க் கட்சியினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க ஆளும் கட்சி தயங்காது என்பதையும் சட்டமன்ற ஜனநாயகம் வாழவும், வளரவும், வளம் பெறவும், நிலைத்து நிற்கவும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதையும் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுக்குத் துணையாக, பக்கபலமாக, ஏழை, எளிய விவசாயக் குடும்பத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவரும்; ஏற்கெனவே கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றியவரும்; இதற்கு முன்பு நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவருமான திரு. ப. தனபால் அவர்கள் பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார். அவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டினைத் தெரிவித்துக் கொள்வதோடு, கடமை உணர்வோடு பணியாற்றி, அனைவரது பாராட்டினையும், அவர் பெறவேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சி சார்பற்ற நடுநிலையை இந்த அவையில் தாங்கள் கடைபிடிக்க வேண்டும் என்ற என் அவாவினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவையின் வரலாற்றில், கடந்த ஐந்து ஆண்டு காலத்தில், நடுநிலை எப்படி கடைபிடிக்கப்பட்டது என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்றாலே எட்டிக்காய் போன்ற கசப்புணர்வு காணப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றியது; அவை நடவடிக்கையையே சில மணித்துளிகளுக்கு ஒத்தி வைத்தது; “மைனாரிட்டி” என்ற சொல்லை சட்டமன்ற மரபிற்கு ஒவ்வாத சொல்லாகப் பாவித்தது; தமிழ்ப் பண்பாட்டையே சீர்குலைக்கும் வகையில் வணக்கம் தெரிவித்தால், பதில் வணக்கம் கூட தெரிவிக்காதது என பல மரபு மீறிய, விதிகளுக்கு முரணான சம்பவங்கள் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிகழ்த்தப்பட்டன. எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், “ம்” என்றால் வெளியேற்றம், “ஏன்” என்றால் தற்காலிகப் பணி நீக்கம் என்ற நடைமுறைதான் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் கடைபிடிக்கப்பட்டது. இவற்றை எல்லாம் நான் இங்கே சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், யாரையும் குற்றம் சாட்ட வேண்டும், குறை கூற வேண்டும் என்பதற்காக அல்ல; அரசியலுக்கு அப்பாற்பட்டு, மனிதர்களை மதிக்கும் நல்ல பண்புகள்

நிலைநாட்டப்பட வேண்டும்; தமிழ்ப் பண்பாடு போற்றப்பட வேண்டும்; அவையின் மரபும், மாட்சிமையும், மதிப்பும், காக்கப்பட வேண்டும், என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் இதையெல்லாம் எடுத்துக் கூறுகிறேன் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறே இப்பேரவையின் மாண்பினை தாங்கள் மீண்டும் நிலை நிறுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தவறு நிகழ்ந்த பின் தண்டிப்பது என்ற தத்துவத்தைவிட, தவறு நிகழாதபடி கண்டிப்பது என்பது மிகவும் சிறந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, நாணயமான தராசு முள் போல், எந்தப் பக்கமும் சாயாமல் தீர்ப்புக் கூறுவதுதான் உண்மையான நடுவு நிலைமை என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றிற்கு ஏற்ப, தங்களின் பணி அமைய வேண்டும்; நடுநிலை தவறாமல், நல்லதைப் பாராட்டி, தவறைத் தட்டிக் கேட்கும் “சபாநாயகராக”, “நடுநிலை நழுவா நாயகராக” தாங்கள் விளங்க வேண்டும்; தங்களது நடுநிலைப் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்; இதைத் தாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதைத் தெரிவித்து, தங்களையும், பேரவை துணைத் தலைவரையும், மீண்டும் ஒருமுறை மனதாரப் பாராட்டி, வரவேற்று, என்னை இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, மிகப் பெரும்பான்மையோடு இங்கே ஆட்சி அமைக்க இத்தனை சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பிய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,*
***07.06.2011** அன்று சட்டமன்றப் பேரவையில்,*
தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை தேவையென
எடுக்கப்பட்ட முடிவினை நீக்கிக் கொள்வது தொடர்பான
தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவினைத் திரும்பப் பெறவேண்டும் என்கிற தீர்மானத்தினை நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம்

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை ஒன்றைத் தோற்றுவிக்கலாம் என்று எடுக்கப்பட்ட முடிவு இச்சட்டப்பேரவையால் திரும்பப் பெறவேண்டும் என்றும், இந்த முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், நாடாளுமன்றம் தேவையெனக் கருதும் அளவிற்கு, இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களிலும் திருத்தம் கொண்டு வருவதற்கு உரிய அவசியமான விதிக்கூறுகளை உள்ளடக்கிய தேவையான சட்டத்தினை இயற்ற வேண்டும் என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது."

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்,*
08.06.2011 *அன்று சட்டமன்றப் பேரவையில்,*
இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க
மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரும்
தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பன்னாட்டுப் போர் நெறிமுறைகளை மீறி இலங்கையில் இனப் படுகொலையை நிகழ்த்தி, போர்க் குற்றம் புரிந்தவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்றும் இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முழு மறுவாழ்வு அளித்து, அவர்கள் வசித்த இடங்களிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்தி, சிங்களர்களுக்கு உரிய அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு சார்பில் பின்வரும் தீர்மானத்தினை நான் முன்மொழிய விழைகிறேன்.

தீர்மானம்

"தமிழர்களின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல. யாரையும் தாழ்த்துவதல்ல" என்றார் பேறிஞர் அண்ணா. இப்படிப்பட்ட உயரிய எண்ணத்தைக் கொண்ட தமிழர்கள் உலகெங்கும் பரவி இருக்கிறார்கள். மொழி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தில் ஒற்றுமையுடன் திகழும் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் இடையே உள்ள தொப்புள்கொடி உறவு அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இலங்கைக்கு விடுதலை கிடைத்து விட்டாலும் அங்கு வாழும் தமிழர்கள் அவர்கள் நாட்டிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுவதை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள் பல்லாண்டு

காலமாகப் போராடி வந்தனர். இவர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்து, தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து, தமிழர்கள் கவுரவத்துடனும், சம உரிமையுடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்காமல் அவர்களை முற்றிலும் ஒழித்துக்கட்ட இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது.

1. பரவலாக குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது;
2. மனிதர்கள் வாழும் இடங்களின் மீதும், மருத்துவமனைகள் மீதும் குண்டுகளை வீசியது;
3. மனிதாபிமான முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது;
4. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக் கூடியவர்கள் உட்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது;
5. இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு வெளியே இருப்பவர்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது, போன்ற கடுமையான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை உள்நாட்டுப் போரின் போது இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு கண்டறிந்து இருக்கிறது.

எனவே, இத்தகைய போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும்; தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வகையில்; அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்; மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.”

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
09.06.2011 அன்று சட்டமன்றப் பேரவையில்,
கச்சத்தீவினை இலங்கைக்குத் தாரைவார்த்ததை
எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில்,
தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையைச் சேர்க்க
வலியுறுத்தக் கோரும் தீர்மானத்தை
முன்மொழிந்து ஆற்றிய உரை.

கச்சத்தீவு ஒப்பந்தங்கள் செல்லத்தக்கவை அல்ல!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கச்சத்தீவினை, 1974 மற்றும் 1976ஆம்

ஆண்டுகளில் போடப்பட்ட இந்திய–இலங்கை ஒப்பந்தங்களின் மூலம் இலங்கைக்குத் தாரை வார்த்ததை சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் என்னால் தொடுக்கப்பட்ட வழக்கிற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் பின்வரும் தீர்மானத்தினை இன்று இப்பேரவையில் நான் முன்மொழிய விழைகிறேன்.

தீர்மானம்

“இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்” என 1960ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பெருபாரி வழக்கில் தீர்ப்பளித்தது. ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் வாயிலாக கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டு இருக்கிறது. இந்த ஒப்பந்தங்கள், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல என 2008ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழக்கு தொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த வழக்கிற்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக, கச்சத்தீவு குறித்த அனைத்து ஆவணங்களையும் தன் வசம் வைத்துள்ள தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை தன்னை இவ்வழக்கில் சேர்த்துக் கொள்ளும்படி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது.

★ ★ ★

*சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை **10.06.2011.***

மீண்டும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள், தங்களுக்கு எப்படிப்பட்ட ஆட்சி வேண்டும் என்பதை சிந்தித்து, அதற்கான செயல்வடிவம் கொடுக்கும் அரசமைப்புதான் ஜனநாயகம் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால் அதற்குப் பின்னணியாக விளங்குவது மக்கள் தான். அதனால்தான், "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்றார் பேரறிஞர் அண்ணா.

இந்தத் தேர்தலில் தமிழகத்தில் மீண்டும் உண்மையான "ஜனநாயகம்" மலர தமிழக மக்கள் வழிவகை செய்துள்ளனர். மக்களின் உள்ளக்கிடக்கை இந்தத் தேர்தலில் பிரதிபலிக்கப்பட்டு உள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக்கும்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கிடைத்துள்ள இந்த வெற்றி ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி.

மக்கள் சக்தியை முடக்கி விடலாம் என்ற மமதையில் "தேர்தல் முடிந்து மே மாதத்திற்குப் பிறகு அதிமுக என்ற இயக்கம் இருக்காது" என்று பேட்டி அளித்தார் நாடாளுமன்றத்தில் பதில் அளிக்கவே அஞ்சும் ஓர் மத்திய அமைச்சர். இன்று அந்த அமைச்சர் இருக்கின்ற இடம் தெரியாத அளவுக்கு; நான் எதிர்க்கட்சித் தலைவராக இங்கே உரையாற்றிய நாட்களில் என்னை பேசவிடாமல்

குறுக்கீடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த முன்னாள் மைனாரிட்டி தி.மு.க. அரசின் அமைச்சர்கள்; இந்த அவையிலேயே நுழைய முடியாத அளவுக்கு மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். தி.மு.க.வின் “பண பலம்”, “படை பலம்”, “அதிகார பலம்” ஆகியவற்றை முற்றிலும் புறக்கணித்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு நான் பதில் அளிக்கும் வகையில் என் மீதும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் நம்பிக்கை வைத்து; கழகத்தின் தலைமையிலான கூட்டணி வேட்பாளர்களை 203 தொகுதிகளில் வெற்றி பெறச் செய்ததோடு மட்டுமல்லாமல்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை 146 தொகுதிகளில் அமோக வெற்றி பெறச் செய்த என் அன்பிற்கினிய தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும்; என்னை இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்; கூட்டணியின் வெற்றிக்காகப் பாடுபட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும்; தோழமைக் கட்சியினருக்கும்; ஆதரவு நல்கிய பல்வேறு அமைப்புகளுக்கும்; எல்லாவற்றிற்கும் மேலாக, கழகத்தின் வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்த புரட்சித் தலைவர் MGR–ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை கழக உடன்பிறப்புகளுக்கும் என் மனமார்ந்த நன்றியினை முதற்கண் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

தமிழக மக்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கவும்; தமிழ்நாடு மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறவும்; விலைவாசியைக் கட்டுப்படுத்தவும்; தமிழ்நாட்டை மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றவும் அயராது பாடுபடுவேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திரு.பொள்ளாச்சி V.ஜெயராமன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு என் பதிலைத் தொடங்குகின்றேன்.

கடந்த ஐந்து ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மக்கள் பட்ட வேதனைகள் சொல்லி மாளாது. சட்டம்–ஒழுங்கு சீரழிவு, கடுமையான மின்வெட்டு, விண்ணை முட்டும் விலைவாசி, மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனை, ரேஷன் பொருட்கள் கடத்தல், வேலையில்லாத் திண்டாட்டம், போலி மற்றும் காலாவதியான மருந்து விநியோகம், நில அபகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளில் தமிழக மக்கள் சிக்கித் தவித்தனர். ஒரு குடும்பத்தின் பிடியில் தமிழ்நாடு சிக்கித் தவித்தது.

ஐந்து ஆண்டு கால கொடுங்கோல் குடும்ப ஆட்சி ஒழிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களாட்சி மலர்ந்தவுடன் சுதந்திரம் கிடைத்த உணர்வு தமிழக மக்களிடையே எழுந்துள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஏழு வாக்குறுதிகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டன. இதுவரையில் இல்லாத அளவிற்கு, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கென்று ஒரு தனி அமைச்சகமும் அமைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவருமே சட்டம்–ஒழுங்கைப் பற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழக மக்கள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினை சட்டம்–ஒழுங்கு சீரழிவு. அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அமளிக்காடாக மாற்றியதுதான் திரு. கருணாநிதியின் கடந்த ஐந்து ஆண்டு கால சாதனை. இதனைச் சீர்செய்யும் விதமாக சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டவும், நிருவாகத்தைச் செம்மையாக்கவும் ஆளுநர் உரையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கிறது. தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை என்றும் ஸ்காட்லாண்டு யார்டு போன்ற உலகில் சிறந்து விளங்கும் காவல் துறைக்கு இணையானது என்றும் பெயர் பெற்று விளங்கியது. அத்தகைய காவல் துறை, கடந்த ஐந்து ஆண்டுகளில் தன்மானம் இழந்து, மனோதிடம் இழந்து, தான் பெற்ற புகழை எல்லாம் இழந்து பரிதாபகரமாகக் காட்சி அளித்ததை தமிழ்நாடே நன்கு அறியும்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் போதெல்லாம், காவலர்கள் தங்கள் பணிகளில் எத்தகைய குறுக்கீடும், இடையூறும் இல்லாமல் தங்கள் கடமையைச் செவ்வனே செய்வது வாடிக்கை. அப்போதெல்லாம் சமூக விரோதிகள் மீதும், தீவிரவாதிகள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தமிழகம் ஒரு அமைதிப்பூங்காவாகத் திகழும் என்பதும் அனைவரும் அறிந்ததே. எனவே, சட்டம்–ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டி மக்கள் எவ்வித பயமும் இன்றி அமைதியாகத் தங்களது வாழ்க்கையை நடத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நான் ஏற்கெனவே எடுத்துள்ளேன்.

காவலர்கள் தங்கள் பணிகளை நியாயமாகவும், நேர்மையாகவும் செய்ய வேண்டும் எனில், அவர்களது பணியில் எந்தவித குறுக்கீடும் தலையீடும் இருக்கக் கூடாது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அப்படிப்பட்ட நிலைமை உருவானால்தான் சமூக விரோதிகள் காவலர்களையும் அரசையும் கண்டு அஞ்சும் சூழ்நிலை ஏற்படும் என்பதை உணர்ந்து அத்தகைய சூழ்நிலையை நான் பொறுப்பேற்ற உடனேயே கொண்டு வந்துள்ளேன் என்பதை இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டம்–ஒழுங்கை நிலை நாட்டுதல், குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருதல், குற்றங்கள் நிகழாமல் தடுத்தல், ஆகிய பணிகளை செவ்வனே செயல்படுத்த வேண்டுமெனில் தேவையான அளவு காவலர்களின் எண்ணிக்கை இருத்தல் அவசியமாகும். இந்தப் பணிகளைச் செய்ய வேண்டிய காவலர்கள் அதிகாரபூர்வமற்ற முறையில், அதாவது, unofficial ஆக வேறு பணிகளுக்கு அனுப்பப்பட்டால் சட்டம்–ஒழுங்கை நிலை நாட்டுவதை காவல் துறை எவ்வாறு செம்மையாகச் செய்ய இயலும்? முன்னாள் முதல்வர் திரு.கருணாநிதியின் குடும்பத்தினர் வெளியே செல்லும் போதெல்லாம் பாதுகாப்பிற்காகக் காவலர்கள் சென்று கொண்டிருந்தால் அதிகாரபூர்வமாக அந்தக் காவல்துறை அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலையை யார் செய்வார்கள்? முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதியின் பரந்து விரிந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள், மனைவி, துணைவி, மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள் என ஏறக்குறைய 135 பேர் இருக்கின்றனர்.

இவர்கள் அனைவருக்கும் அதிகாரபூர்வமற்ற முறையில் unofficial–ஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். 135 குடும்பத்தினருக்கும் பாதுகாப்பிற்குக் காவலர்கள் சென்று விட்டால் சட்டம்–ஒழுங்கை நிலை நாட்டவும், குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் காவலர்கள் எங்கிருந்து வருவார்கள்? அதே போல, மத்திய அமைச்சர் திரு. அழகிரி வீட்டில் unofficialஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். அவருக்கு நெருக்கமானவர்களுக்கும் அதாவது அவருடனேயே சுற்றித் திரியும் சில சமூக விரோதிகளுக்கும் unofficialஆக காவலர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். மேலும், பல வணிக நிறுவனங்களிலும் தவறான முறையில் பாதுகாப்புப் பணியில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

மேலும், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணி என்ற போர்வையில், சென்னை மாநகரத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களிலும்; மதுரை மாநகரில், அரசியல் பிரமுகர்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும், செல்வாக்குடைய தனிப்பட்டோரின் சொந்த நலன் கருதி காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சென்னைப் போக்குவரத்துக் காவல்துறைக் காவலர்கள் அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை, சில முக்கியப் பிரமுகர்களின் போக்குவரத்து ஒழுங்குப் பணி என்ற போர்வையில் ஐந்திற்கும் மேற்பட்ட இடங்களிலும் அவற்றிற்கு இடையேயான வழித் தடங்களிலும் கடந்த 5 ஆண்டுகளாகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அக்காவலர்கள் திரும்ப அழைக்கப்பட்டு சென்னை மாநகரில் பொதுமக்களுக்குச் சீரான போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் போக்குவரத்துப் பணிகளில் தற்போது ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடுவோர்; நில ஆக்கிரமிப்பு செய்வோர்; கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனையாளர்கள்; ரேஷன் பொருட்கள் கடத்துவோர்; மணல் கொள்ளையர்கள் போன்றோர் எந்தவித பயமுமின்றி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்தார்கள் என்பதைத் தமிழக மக்கள் அனைவரும் நன்கு அறிவர். சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது எவ்விதப் பாகுபாடும் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறைக்கு

நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் கண்கூடாகப் பார்த்திருப்பீர்கள். இந்த மாமன்றத்தில் பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்களும் ஒரு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டி இதைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், காவலர் முதல் காவல் துறை உயரதிகாரிகள் வரை எங்கு நியமிக்கப்பட வேண்டும் என்பது திரு.கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்கள் அன்றைய ஆளும் கட்சியினர், உள்ளூர்ப் பிரமுகர்கள் ஆகியோரின் உத்தரவின் பேரில் முடிவு செய்யப்பட்டதால் காவல் துறையினர் மீதான உயரதிகாரிகளின் கட்டுப்பாடும், அரசின் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. உள்ளூர் அரசியல் பிரமுகர்களின் கட்டளைக்கிணங்க காவல் துறை நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவையெல்லாம் தற்போது நீக்கப்பட்டுவிட்டன என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள்.

சமூக விரோதிகள் சிலர் அரசியல் ஆதரவுடன் கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபட்டு நிலம் மற்றும் சொத்துப் பிரச்சினைகளில் தலையிட்டு பொதுமக்களிடமிருந்து பணத்தை அபகரித்து வந்தனர். தனது சொத்தை ஒருவர் விற்க நினைத்தால் அந்த சொத்தை செல்வாக்கு உள்ள ஒரு சிலரின் அனுமதியின்றி ஒருவர் வாங்க இயலாத நிலை கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்தது. அந்தச் சொத்துகளைச் செல்வாக்கு மிக்க நபர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்க நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையையும் மக்கள் நன்கு அறிவார்கள். அவ்வாறு கட்டாயமாக பிடுங்கப்பட்ட சொத்துகளை மீட்பதற்குத்தான் தனிச் சட்டம் கொண்டு வரப்படும் என்று ஆளுநர் உரையிலேயே தெரிவித்துள்ளோம். அந்தச் சட்டம் வெகு விரைவில் இயற்றப்படும் என்ற உறுதியினை நான் இந்த மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

கடந்த ஆட்சியில் நீராதாரம் பாதிக்கும் வகையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி இயந்திரங்கள் மூலம் வரம்பின்றி மணல் அள்ளப்பட்டு பிற மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டதை யாரும் தட்டிக் கேட்க இயலாத சூழ்நிலை நிலவியது. இவ்வாறு மணல் திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டதன் அடிப்படையில்

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு வார காலத்திற்குள்ளாகவே மணல் கொள்ளையில் ஈடுபட்ட 897 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மீது 810 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மேலும், மணல் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 112 லாரிகள், 74 டிராக்டர்கள், 4 தானியங்கி பளுதூக்கும் லாரிகள், 2 தானியங்கி பாரமேற்றும் இயந்திரங்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

காவல் துறையினர் எவ்விதப் பாகுபாடும் இன்றி சட்டம்–ஒழுங்கை நிலை நாட்டுவதிலும், குற்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதிலும், குற்ற நிகழ்வுகள் நடைபெற்ற இடத்தில் குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தரவும் முழு மூச்சுடன் செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

காவல் துறையினர் இழந்த பழம் பெருமை விரைவில் மீட்கப்படும் என்பதையும், தமிழகம் விரைவில் முழு அமைதிப் பூங்காவாக மாறும் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தில் நிலவும் மின் பற்றாக்குறை சூழ்நிலை பற்றி கருத்துத் தெரிவித்தார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தின் மின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து, மக்களுக்கு எவ்வளவு நேரம் மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத ஒரு நிலைக்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டனர்.

சென்னை மாநகரில் ஒரு மணி நேரம், மாநிலத்தின் இதரப் பகுதிகளில், மூன்று மணி நேரம் மின் தடை என முந்தைய தி.மு.க. அரசு அறிவித்தது. ஆனால், உண்மையில், அதற்கு மேலும் அறிவிக்கப்படாத மின் தடையாக மேலும் 2, 3 மணி நேரம் எல்லா பகுதிகளிலும் மின் தடை இருந்தது என்பதை தமிழக மக்கள் அனைவரும் அறிவர். மேலும், தொழிற்சாலைகளுக்கு 20 சதவீதம் மின் வெட்டும் மற்றும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான உச்ச மின் தேவை காலத்தில் 90 சதவீதம் மின் வெட்டும் அமல்படுத்தப்பட்டது. தேவைக்கேற்ப மின் திட்டங்களை

ஏற்படுத்தாததும், நிருவாகச் சீர்கேடுகளும்தான் இவ்வாறு மின் வெட்டு ஏற்பட முக்கியக் காரணம் ஆகும். கடந்த ஐந்தாண்டு முழுமையும், இவற்றை எல்லாம் மறைத்து, முந்தைய எனது ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் தீட்டப்படாததுதான் மின் வெட்டுக்குக் காரணம் என உண்மைக்கு மாறான செய்தியை முந்தைய தி.மு.க. அரசு பரப்பி வந்தது.

ஆனால், உண்மை நிலை என்னவென்றால், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், வடசென்னை அருகில், வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.07.2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதேபோன்று, தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.06.2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த இரு மின் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் ஒதுக்கீடு பெறவும், பல்வேறு அனுமதிகளைப் பெற ஆய்வுகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம், வைகைப் படுகையில் உள்ள இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி வழுதூரில், 95 மெகாவாட் திறன் கொண்ட புதிய எரிவாயு சுழலி மின்நிலையத்தை அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டது. 29.09.2004 அன்று இந்த மின் நிலையத்திற்குத் தேவையான எரிவாயுவை வழங்குவதற்கு இந்திய எரிவாயு ஆணையத்தோடு ஒப்பந்தமும் கையெழுத்தானது. மார்ச் 2006இல், இதற்குண்டான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்து ஒப்பந்தமும் வழங்கும் இறுதி நிலையில் இருந்தது.

வட சென்னை அனல் மின் நிலையத்தில் போதுமான நிலம் இருந்ததால் அங்கு 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ 12.12.2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைத்திடுவதற்கான கருத்துரு அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் முதற்கட்டப் பணிகளான காடுகளின் நில அளவை போன்ற பணிகளை 08.09.2005 அன்று முதல் துவக்கியது.

எனது அரசு மேற்கொண்ட முயற்சிகளை அதற்குப் பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, தொடர்ந்திருந்தால் தற்போது மாநிலத்தில் நிலவும் மின் தட்டுப்பாட்டை சுலபமாகத் தவிர்த்திருக்க முடியும்.

குறைந்த செலவில் அதிக மின் உற்பத்தி ஏற்படுத்த பல மாநிலங்களில் 4,000 மெகாவாட் திறனுடைய பிரம்மாண்ட மின் திட்டங்களை அதாவது, Ultra Mega Power Project–களை நிறுவுவதற்கு 2006இல் இந்திய அரசு ஒரு கொள்கையை அறிவித்தது. தமிழ்நாட்டிலும், 2 பிரம்மாண்ட மின் உற்பத்தித் திட்டங்களை நிறுவ அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இத்திட்டங்கள் அமைவதற்கான இடங்களைத் தெரிவு செய்ய முந்தைய தி.மு.க. அரசு காலதாமதம் செய்ததால் இத்திட்டங்கள் இன்னமும் தொடங்கப் பெறாமல் உள்ளன. இந்திய அரசின் தொடர் வலியுறுத்தலின் காரணமாக 31.03.2008 அன்று, அதாவது, கிட்டத்தட்ட ஒன்றரை வருட கால தாமதத்திற்குப் பிறகு செய்யூரில் பிரமாண்ட மின் திட்டத்தை நிறுவ தமிழ்நாடு அரசு, அதாவது, தி.மு.க. அரசு ஒப்புதல் அளித்தது. அப்பொழுதும், தமிழ்நாடு அரசால் உயயீவளைந துறைமுகத்தை உறுதி செய்ய முடியாமல் அதன் பிறகு அக்டோபர் 2009இல் மட்டுமே முடிவெடுக்க முடிந்தது. எனவே, கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் இந்தக் காரணத்தால் வீணானது. இரண்டாவது இடத்திற்கு இந்திய அரசால் இன்னமும் ஒப்புதல் வழங்கப்படாமல் உள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை முந்தைய தி.மு.க. அரசு சரிவர நிருவகிக்காததால் மின் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்தில், அதாவது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நம்முடைய அனல் மின் நிலையங்கள் முறையான பராமரிப்பினாலும், தகுந்த கண்காணிப்பினாலும் மிக நன்றாகச் செயல்பட்டு, மத்திய எரிசக்தி துறையினுடைய சிறந்த உற்பத்தித் திறனுக்கான தேசிய விருதுகளைப் பெற்றன. ஆனால், 2006 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில், அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில், எந்தவிதமான விருதையும் இந்த அனல் மின் நிலையங்கள் பெறவில்லை.

6,000 மெகாவாட்டிற்கும் அதிகமான காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் தமிழகத்தில் உள்ளன. ஆனால், அந்த

மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான மின் தொடரமைப்பு வசதி இல்லாததால், காற்றாலைகள் மூலம் பெறப்படும் மின்சாரத்தை முழுமையாகப் பெற இயலவில்லை. தேவையான மின்தொடர் கட்டமைப்பு வசதிகளை எனது அரசு விரைவில் ஏற்படுத்தும்.

பழுதடைந்த நிலையில் உள்ள மின் நிலையங்களை உடனே சரி செய்ய போர்க்கால அடிப்படையில் எனது அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஜனவரி 2010 முதல் பழுதடைந்த நிலையில் இருந்த வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம், நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்னர் இந்த ஜூன் மாதம் மீண்டும் இயக்கி வைக்கப்பட்டது. இதே போன்று, ஓராண்டுக் காலமாகப் பழுதடைந்த நிலையில் இருந்த குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையமும் இந்த மாதம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த இரண்டு மின் திட்டங்களும் ஓராண்டுக் காலமாகப் பழுதடைந்த நிலையில் இருந்தும், அவற்றைச் சரி செய்ய தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டே வார காலத்திற்குள் இவற்றைச் சரி செய்து, இவை இரண்டும் இன்று பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

முந்தைய தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கடலூர் பவர் கம்பெனி என்கின்ற நிறுவனத்துடன் 1,320 மெகாவாட் அனல்மின் திட்டத்தை நிறுவ 28.09.2006 அன்று மின் கொள்முதல் ஒப்பந்தம் கையெழுத்திட்டது. இத்திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தி முழுமையாகத் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

திறமையற்ற நிருவாக முடிவுகளினாலும், நிலக்கரி விநியோகிக்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு அற்ற செயல்களாலும் நிலக்கரி இடப்பெயர்வு மேலாண்மை பாதிக்கப்பட்டது. இதனால், பல நேரங்களில் நிலக்கரித் தட்டுப்பாட்டின் காரணமாக, தூத்துக்குடி, மேட்டூர், வட சென்னை மற்றும் எண்ணூர், அனல்மின் நிலையங்களில் மின் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டது.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2,518 மெகாவாட் மின் நிறுவு திறன் கூடுதலாக நிறுவப்பட்டது. ஆனால், முந்தைய

தி.மு.க. ஆட்சியில் வெறும் 206 மெகாவாட் மட்டுமே நிறுவு திறன் அதிகரிக்கப்பட்டது. இதே போன்று, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் 2,595 மெகாவாட் கூடுதல் மின் திட்டங்கள் நிறுவுவதற்கு வழிவகை செய்யப்பட்டது.

முந்தைய தி.மு.க. அரசு மின் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக வியாபாரிகளிடமிருந்தும், மின் சந்தையிலிருந்தும், மின் திருப்புதல் முறையிலும், மின் கொள்முதல் செய்து வந்தது. இதில் மின் கொள்முதலுக்காக சராசரியாக, யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 50 பைசா வரை செலவிடப்பட்டது. ஆனால், இந்திய மின்சார சட்டம், 2003ன்படி, நீண்டகாலக் கொள்முதல் முறையான Case-1 bidding மூலம் மின் கொள்முதல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் ஏற்கெனவே மின் கொள்முதல் செய்த விலையில் பாதி விலைக்கே மின் கொள்முதல் செய்திருக்க முடியும்.

தற்போது, மாநிலத்தில் நிலவும் மின் பற்றாக்குறை நிலையை மாற்றி அமைக்க குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களின் அடிப்படையில் எனது அரசு பல்வேறு முயற்சிகளை எடுக்கும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பழுதடைந்த மின் நிலையங்கள் உடனடியாகச் சீரமைக்கப்பட்டுள்ளன. குறுகிய கால மற்றும் நீண்ட கால மின் கொள்முதல் முறையை இணைத்து லாபகரமான மற்றும் நிலையான மின் கொள்முதல் கொள்கையை எனது அரசு கடைபிடிக்கும். அடுத்த ஐந்தாண்டுகளில், மின் வாரியத்தின் நிறுவு திறன் மேலும் 10,000 மெகாவாட்டிற்கும் அதிகமாக அதிகரிக்க, நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போது, எனது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக அறிவிக்கப்படாத மின் வெட்டுகள் நிறுத்தப்பட்டு விட்டன. மேலும், வரும் ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டு 2 மணி நேரமாகக் குறைக்கப்படும். படிப்படியாக, மின் வெட்டே இல்லா மாநிலமாகத் தமிழகம் விரைவில் மாறும் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2001 முதல் 2006 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில், 2006ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாகத்தான் இருந்தது. இன்னும் அதிகமான மின் நிறுவுத் திறனுடன் அதைவிட சுபிட்சமான

நிலையை இந்த ஆட்சிக் காலத்தில் அடைவோம் என்று உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தைப் பற்றி சில உண்மைகளை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழக சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத் துறைகள் அனைத்தும் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்தே செயல்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டதன் அடிப்படையில் 14ஆவது சட்டமன்றம் தற்போது புனித ஜார்ஜ் கோட்டையில் செயல்பட்டு வருகின்றது. சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய கட்டடத்திலிருந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றப்பட்டதற்கு ஒரு சிலர் விமர்சனம் செய்து வருகின்றனர். சட்டமன்றமும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்கு மாற்றப்பட்ட ஒரு சில துறைகளும் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள கட்டடத்திற்கு மாற்றி உத்தரவிடப்பட்டது ஏன் என்பதை 20.5.2011 அன்றே ஒரு அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளேன். எனினும், ஒரு சில அரசியல் கட்சியினர் சட்டமன்றமும் தலைமைச் செயலகமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்க வேண்டும் எனவும் அந்தப் புதிய கட்டடம் முந்தைய தி.மு.க. அரசால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால்தான் நான் அதனை மாற்றுவதற்கு உத்தரவிட்டதாக தவறான கருத்தினைத் தெரிவித்துள்ளனர். அரசு நிருவாகத்தில் நான் என்றுமே அரசியலைப் புகுத்தியதில்லை என்பதை நடுநிலையாளர் அனைவரும் ஒப்புக் கொள்வர்.

தலைமைச் செயலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுவதை நான் ஒரு போதும் எதிர்த்தது இல்லை. ஆனால் தற்போது கட்டப்பட்டுள்ள அந்தக் கட்டடத்திலிருந்து பணியாற்றுவதால் நிருவாகக் குறைபாடு எதுவும் ஏற்படாது என்றால் நான் அங்கிருந்தே பணியாற்றி இருப்பேன். அவ்வாறு இயலாது என்பதால்தான் அங்கிருந்து பணியாற்றுவது நிருவாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் என்பதால்தான் சட்டமன்றம் மற்றும் அங்கு மாற்றப்பட்ட ஒரு சில துறைகளை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

04.07.2007 அன்று பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையில் (G.O.Ms.No.209) ஓமந்தூரார்

அரசினர் தோட்டத்தில் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில், 8 இலட்சம் சதுர அடியில், சட்டமன்றம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்கள், தலைமைச் செயலாளர் அலுவலகம் மற்றும் பொதுத் துறை, உள்துறை மற்றும் நிதித்துறை முதலிய முக்கிய துறைகளுக்காக 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எந்த ஒரு அறிவார்ந்த அரசாவது சட்டமன்றம் மற்றும் முதலமைச்சர் அலுவலகம், ஏனைய அமைச்சர் அலுவலகங்கள் மற்றும் 2, 3 துறைகளுக்கு மட்டும் ஒரு புதிய கட்டடத்தை அதுவும் 2 கிலோ மீட்டர் தொலைவில் கட்டுமா ? 200 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்ட இந்த பிளாக் A கட்டடத்திற்கு இன்றைக்கு 600 கோடி ரூபாய்க்கு மேலான செலவுக்கு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

பிளாக் A கட்டடத்தின் மொத்த உட்பரப்பு 97,829 சதுர மீட்டர்கள் ஆகும். அதில், அலுவலக உபயோகத்திற்காகப் பயன்படுத்தக் கூடியது 47,491 சதுர மீட்டர்கள் தான். அதாவது, 49 சதவீதத்திற்கும் குறைவான கட்டட உட்பரப்பையே உபயோகப்படுத்த இயலும். ஏனைய கட்டடப் பரப்பு எல்லாம் சுற்றுப் பாதை, நடைக் கூடம், வாஸ்து மீன் தொட்டி போன்ற அலுவலக உபயோகங்கள் அல்லாத வேறு உபயோகங்களுக்கான இடங்கள்தான். அந்தக் கட்டடத்தின் வடிவமைப்பு வணிகக் கட்டடங்களைப் போன்று அமைக்கப்பட்டுள்ளதால் தான், அலுவலகத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய இடம் 49 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், 624 கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தை செலவு செய்து கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தில் பாதிக்கு மேல் பயன்படுத்த முடியாத வெற்றிடமாக உள்ளது. மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

பிளாக் A கட்டுவதற்கு உத்தரவு வழங்கி ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு 21.05.2009இல் அரசாணை எண்.81 இல் ஏனைய அரசுத் துறைகளுக்காக பிளாக்–B கட்டடத்தைக் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. ஒரு சில அரசுத் துறைகள் மற்றும் அமைச்சர்களின் அலுவலகங்கள், சட்டமன்றம் மட்டும் ஒரு இடத்திலும், ஏனைய அரசுத் துறைகள் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேறு ஒரு இடத்திலும் செயல்பட வேண்டும் என்று அறிவார்ந்த எந்த அரசும் முடிவு செய்ய இயலுமா ? அரசு நிருவாகத்தைப் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல் கட்டடம் கட்டப்பட

ஆணையிடப்பட்டதால்தான் பெரும் நிருவாகச் சிக்கல் ஏற்பட காரணமாயிற்று.

ஓமந்தூரரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள பிளாக் A கட்டடத்தில் கட்டடப் பணிகள் முழுமையாக முடிவடையாமலேயே 2010ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் திறப்பு விழா நடத்தப்பட்டது. அந்தக் கட்டடத்தின் மேற்கூரை கோபுரம் கட்டி முடிக்கப்படாமலேயே தற்காலிக செட்டிங் போட்டு 3 கோடி ரூபாய்க்கு மேல் வீணடிக்கப்பட்டது. கட்டடத் துவக்க விழா நடத்தப்பட்டு விட்டதால் முழுமையடையாத கட்டடத்தில் இருந்து 19.03.2010 அன்று சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற வேண்டியதாயிற்று. அவ்வாறு 19.3.2010 அன்று சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற்றபோது சட்டமன்றத் தரையில் புதிய தரை விரிப்பு தான் போடப்பட்டிருந்தது. காலரிகள் உள்ள முதல் மாடி முடிக்கப்படாததால் பெரிய திரைச்சீலை ஒன்றினால் சுவர்கள் மறைக்கப்பட்டும், தற்காலிக இருக்கைகள் அமைக்கப்பட்டும் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றப் பேரவைத் தலைவர் இருக்கையும் கூட தற்காலிகமாக உயர்த்தப்பட்ட மேடையில் நிறுவப்பட்டது.

திறப்பு விழா நடைபெற்றும் பணிகள் முடிக்கப்படவில்லை என்று மக்கள் குறை கூறிய காரணத்தால் ஒரு சில துறைகள் மட்டும் அவசர கோலத்தில் 2010ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டன.

தான் சிந்திக்காமல் கட்டடம் கட்ட எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப முதலமைச்சர் அலுவலகம், அமைச்சர்களின் அலுவலகங்கள் மற்றும் 6 துறைகளை மட்டும் புதிய கட்டடத்திற்கு மாற்றி விட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. தலைமைச் செயலகம் இவ்வாறு 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இரண்டு கட்டடங்களிலிருந்து செயல்பட இயலுமா ? அரசு நிருவாகத்தைப் பற்றி, தெரிந்த எவரும் இவ்வாறு 2 கட்டடங்களிலிருந்து செயல்பட வேண்டும் என்று கூற மாட்டார்கள். தலைமைச் செயலகத்தில் கோப்புகளில் எவ்வாறு உத்தரவுகள் இடப்படும் என்று அறிந்த எவரும் இவ்வாறு இரண்டு வெவ்வேறு கட்டடங்களிலிருந்து செயல்படுங்கள் என்று கூற மாட்டார்கள். உதாரணமாக, பள்ளிக் கல்வித் துறையிலிருந்து ஏதேனும் ஒரு உத்தரவு வேண்டி கோப்பு

முதலமைச்சர் வரை சுற்றனுப்பப்படுகிறது என்றால், அந்தக் கோப்பு எவ்வாறு பயணிக்கும் என்பதை இப்போது பார்ப்போம். சுற்றோட்டக் குறிப்பு அதாவது Circulation Note தயாரித்து பள்ளிக் கல்வித் துறைச் செயலர் கையெழுத்திட்ட பின் அந்தக் கோப்பு தலைமைச் செயலர் கையெழுத்திடுவதற்காக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கட்டடத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தலைமைச் செயலர் கையெழுத்திட்ட பின் அந்தக் கோப்பு மீண்டும் துறைச் செயலருக்கு புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து, அதன் பின்னர் அமைச்சரின் கையெழுத்திற்காக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கட்டடத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பெறப்பட்டு முதலமைச்சர் ஆணைக்காக புதிய கட்டடத்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு ஆணை பெறப்பட்ட பின் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள துறைக்கு மீண்டும் அனுப்பப்பட்டு அரசாணை வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொரு கோப்பும் இவ்வாறு பல முறை ஒரு கட்டடத்திலிருந்து இன்னொரு கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வந்தால் நிருவாகம் நடத்த இயலுமா ?

அதே போல, துறை அமைச்சர் தனது துறைச் செயலாளருடன் ஏதாவது விவாதிக்க வேண்டும் என்று கருதினால் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தனது அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். அவ்வாறு விவாதிக்கும் போது ஏதேனும் ஒரு கோப்பை அமைச்சர் பார்வையிட வேண்டும் என்று எண்ணினால், அவர் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து அந்தக் கோப்பை எடுத்துக் கொண்டு ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திற்கு மீண்டும் செல்ல வேண்டும். இது நடைமுறையிலே சாத்தியமா ? அரசு நிருவாகத்தைப் பற்றி கவலையே படாதவர்கள் இரண்டு வெவ்வேறு இடங்களில் மாத்திரமென்ன பல இடங்களில் இருந்தும் செயல்பட முடியும். ஆனால், அரசு நிருவாகம் திறமையாகச் செயல்படவேண்டும் என்று நினைப்பவர் யாரும் இவ்வாறு இரண்டு வெவ்வேறு கட்டடங்களிலிருந்து செயல்பட முடியாது. செம்மையான நிருவாகம் இருந்தால் தான் மக்கள் பணியை சிறப்பாகச் செய்ய முடியும் என்பதால் தான், புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட ஆறு துறைகளையும் எஞ்சிய 30 துறைகள் செயல்பட்டு கொண்டிருக்கும் புனித ஜார்ஜ்

கோட்டைக்கு நான் மாற்றியுள்ளேன். நிருவாக வசதிக்காக எடுக்கப்பட்ட இந்த முடிவில் அரசியல் காரணம் எங்கிருந்து வந்தது ?

மேலும், போக்குவரத்து நெரிசல் மிகுந்த சென்னையின் மத்தியப் பகுதியில் உள்ள அண்ணா சாலையில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதால் மேம்பாலங்கள் கட்டப்பட்டால்தான் அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கலாம் என்பதை முந்தைய அரசே உணர்ந்திருந்தது. எனவேதான், அங்கே மேம்பாலங்கள் கட்டப்படும் என 2010–2011ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அறிவிப்புகளிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மேம்பாலங்கள் கட்டப்படவில்லை. சாலை மேம்பாலம் துவங்கப்படாத நிலையில் ஓமந்தூரார் அரசினர் தோட்ட கட்டடப் பகுதியிலுள்ள அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவே இயலாது.

இவ்வாறு, முழுமையடையாத, நிருவாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய கட்டடத்திலிருந்து எவ்வாறு செயல்பட முடியும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்.

புதிய பிளாக் A கட்டடம் பயன்படுத்தப்படாமல் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டு விடும் என்று தி.மு.க.வினர் அங்கலாய்க்கத் தேவையில்லை. இந்தக் கட்டடம் உரிய முறையில் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத் தான் நான் முதலமைச்சராகப் பதவியேற்று கொண்ட அன்றே மக்கள் பயன் பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன். மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால்தான் எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். மிக அதிகமாக இலவசங்கள் வழங்குவோம்

என்று கூறி மக்களிடமிருந்து ஓட்டுக்களைப் பறித்துக் கொள்ளும் திட்டமாக இதை நான் கருதவில்லை. இலவச அரிசி என்பது மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை அளிக்கக் கூடிய திட்டம். எனவே தான் முதல் நாளிலேயே அதற்கான உத்தரவைப் பிறப்பித்தேன்.

அதைப் போன்றுதான் அன்று பிறப்பித்த ஏனைய உத்தரவுகளும். மகளிருக்கு வழங்கும் திருமண உதவித் திட்டத்துடன் தாலிக்கான 4 கிராம் தங்கம்; இளங்கலைப் பட்டம், பட்டயம் படித்த மகளிருக்கு 50,000/– ரூபாய் மற்றும் தாலிக்கான 4 கிராம் தங்கம் வழங்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தேன். இது திருமணத்திற்காக இலவசமாக வழங்கும் பரிசு அல்ல. இதில் ஒரு பெரும் பொருள் புதைந்து இருக்கிறது. பாரதி கண்ட கனவான 'ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை' என்ற நிலை ஏற்பட வேண்டும் என்றால் பெண் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். எனவேதான் இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையை இரட்டிப்பாக்கி 50,000/– ரூபாய் என உத்தரவிட்டேன். உலகப் பொருளாதார காரணங்களினால் தங்கத்தின் விலை விண்ணை எட்டும் அளவு ஏறிக் கொண்டிருக்கும் நேரத்தில் திருமண உதவியாக தங்கம் வழங்க வேண்டும் என்பதால்தான் தேர்தல் அறிக்கையிலேயே அதைக் குறிப்பிட்டு அதற்கான உத்தரவையும் பிறப்பித்தேன்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவித் தொகைகளுக்கு எல்லாம் குறை கண்டுபிடிக்க வேண்டும் என்றே தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் தங்களது திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன அவ்வளவுதான் என்று பொத்தாம் பொதுவாகக் கூறியுள்ளனர்.

மேலும், முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி தனது கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பல இலவசத் திட்டங்களைத் தங்கள் காலத்திலேயே ஏற்படுத்திய போது மக்களின் வாழ்க்கையையே பாழாக்குகிறார்கள் என்றும்; மக்களை முன்னேற விடாமல் சோம்பேறி ஆக்குகிறார்கள் என்றும்; சில எதிர்க்கட்சியினரும் ஏடுகள் நடத்தும் சிலரும் கண்டனம் தெரிவித்தார்கள் என்று கூறி தற்போது இலவச அரிசித் திட்டத்தை பத்திரிகைகள் பாராட்டுவதற்கு தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். மக்கள் வறுமையில் இருந்து விடுபடும்

வரை வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவையானவை வழங்கப்படுவதும்; இலவசம் என வழங்கப்படுவதும் வேறு வேறு ஆகும். மனித வளம் மேம்பட மனிதர்கள் தங்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பெற அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை நாங்கள் என்றுமே எதிர்த்தது கிடையாது. வாழ்க்கைத்தரம் முன்னேற வழங்கப்படும் சலுகைகளுக்கும் இலவசங்களுக்கும் உள்ள வித்தியாசம் ஒரு சிறிய எல்லைதான். எந்த எல்லைக்குள் இருப்பது மனிதவள மேம்பாட்டிற்கு ஏற்றது என்பதும்; எந்த எல்லைக்கோட்டை தாண்டுவது மக்களை ஏமாற்ற வழங்கப்படும் இலவசம் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறு மக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக வழங்கப்படும் இலவசங்களைத்தான் நாங்கள் எதிர்த்து வந்தோம். இலவசமாக வழங்குகிறோம் என்று இறுமாப்புடன் சொல்வது; மக்கள் நலத் திட்டங்களை ஏதோ தானமாகக் கொடுப்பதாக நினைத்துக் கொள்வது ஆகியவைதான் தவறு.

ஏழைகளுக்கு வழங்கப்பட்டவைகளை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு இலவசம் என்று கொச்சைப்படுத்தியது. ஏழைகள் உள்ளவரை இலவசங்கள் தொடரும் என்று இறுமாப்புடன் கூறினார் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி. இலவசங்களை வழங்கி மக்களை ஏமாற்றி விடலாம் என்று தி.மு.க. கருதியதால்தான் இலவசங்களைப் பெற்ற மக்கள் நன்றியுடன் தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் நலத் திட்டங்களை வாக்குகள் பெறப் பயன்படும் கருவியாகப் பார்த்தார்கள். மக்கள் நலத் திட்டங்கள் மக்களின் வரிப் பணத்தாலேயே வழங்கப்படுபவை என்பதை மறந்து அதை மறைத்து மக்களுக்கு ஏதோ தானம் வழங்குவதைப் போல தி.மு.க.வினர் பேசினார்கள்.

இலவசங்களை மக்களுக்கு பயன்படுபவையாகக் கருதாமல் தங்கள் சொந்த நலனையே முந்தைய தி.மு.க. அரசு கருதியது என்பதற்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டமே சிறந்த உதாரணமாகும். 2006ஆம் ஆண்டு தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் மகளிர் பொது அறிவு வளர்வதற்காக தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று தெரிவித்து விட்டு, பின்னர் அரசாணை வெளியிடப்படும் போது வண்ணத் தொலைக்காட்சி பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு

14 inch வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும் என அரசாணை வெளியிடப்பட்டது. அதன் பின்னர், வாய்மொழியாக குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்களுக்கு வழங்கப்பட்டதாக முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சொல்லும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை சுமார் 1 கோடியே 64 இலட்சமாகும். 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி உள்ள குடும்பங்களின் (Household) எண்ணிக்கை 1 கோடியே 42 இலட்சமாகும். அதில் கிட்டதட்ட 56 இலட்சம் குடும்பங்கள் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருந்தார்கள். இதில் எவ்வளவுபேரிடம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை என்ற புள்ளிவிவரம் மக்கள்தொகை கணக்கெடுப்பில் இல்லை. எனினும், 50 சதவீதம் பேர்தான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருந்தார்கள் என்று எடுத்துக் கொண்டாலும் 2001ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பின்னர் புதியதாக ஏற்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக்கொண்டாலும் 1 கோடியே 64 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்குமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் யார் என்ற முழுமையான கணக்கையே முந்தைய தி.மு.க. அரசு எடுக்கவில்லை. எந்த ஒரு அரசுத் திட்டமானாலும், எந்த ஒரு கோரிக்கையானாலும், தனக்கு என்ன தேவை என்பதை அதைக் கோருபவர் கையொப்பமிட்டு விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்பதுதான் அரசின் நடைமுறை. ஆனால், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தில் எந்த விண்ணப்பமும் பெறப்படவில்லை. முந்தைய தி.மு.க. அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழு (Committee) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் என தயாரித்த பட்டியலின் அடிப்படையிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு விட்டன. எனவேதான், சொந்தமாக கார் வைத்திருப்பவர்கள் கூட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்க தங்கள் காரிலேயே வந்து அதனை வாங்கிச் சென்றதையெல்லாம் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

இவ்வாறு வழங்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டித் திட்டம் மக்களுக்குப் பயன் தரக் கூடிய திட்டமா ? அல்லது ஆட்சியாளர்களுக்குப் பயன்படக் கூடிய திட்டமா ? என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களும், தமிழக மக்களும் தீர்மானிக்கட்டும்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கான கேபிள் இணைப்பிற்கு மக்கள் கட்டணம் செலுத்த வேண்டும். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்திற்காக ஐந்தாம் கட்டம் வரை முந்தைய தி.மு.க. அரசு ஒதுக்கீடு செய்த தொகை, 3,687 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஆகும். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒவ்வொன்றும் பல்வேறு கட்டங்களில் 2,061 ரூபாயில் இருந்து 2,965 ரூபாய் வரை வாங்கப்பட்டு உள்ளது. அதாவது, சராசரியாக ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு 2,265 ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. இந்தப் பணம் மக்கள் வரிப் பணத்தில் இருந்து வழங்கப்பட்டதுதான். அவ்வாறு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொண்ட மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக கேபிள் கட்டணம் செலுத்த வேண்டும். கேபிள் இணைப்புத் தொழிலில் கோலோச்சிக் கொண்டிருப்பவர்கள் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் பேரன்கள் திரு. கலாநிதி மாறனும், திரு. தயாநிதி மாறனும், திரு. துரை தயாநிதியும் தான். 2,265 ரூபாய் மதிப்புள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுக் கொண்ட பொதுமக்கள் திரு. கருணாநிதியின் குடும்பத்திற்கு கேபிள் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4,000 கோடி ரூபாய் செலுத்தி வருகின்றனர். அதாவது, மக்கள் வரிப் பணத்தில் இருந்து, கவனிக்க வேண்டும், 3,687 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவழித்து விட்டு, ஆண்டுதோறும் தனது குடும்பத்திற்கு 4,000 கோடி ரூபாய் வருமானத்திற்கு வழி செய்து விட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. திரு. கருணாநிதியின் குடும்பத்திற்கு ஓராண்டிற்கு 4,000 கோடி ரூபாய் கேபிள் கட்டணமாகக் கிடைக்கிறது என்றால் 5 ஆண்டு காலத்திற்கு 20,000 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது என்றுதான் கணக்கிட வேண்டும். எனவே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் மக்கள் நலனைக் கருதாமல் சொந்த நலனுக்காக தி.மு.க. ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் என நான் ஆணித்தரமாகக் கூறுகிறேன்.

எனவேதான், கடந்த ஜனவரி மாதம் முந்தைய தி.மு.க. அரசால் ஆறாம் கட்டமாகக் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்ட 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இதுவரை கொள்முதல் செய்யப்படாத சுமார் 7 இலட்சத்து 48 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதலுக்கான உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், அதாவது, 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இதுவரை கொள்முதல் செய்யப்படாத சுமார் 7 இலட்சத்து 48 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதலுக்கான உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும்; ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு இன்னமும் வழங்கப்படாத 1 இலட்சத்து 27 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, அனாதை இல்லங்கள், அரசுப் பள்ளிகள், ஊராட்சிகள், அரசு மருத்துவமனைகள், சுகாதார துணை மையங்கள், அங்கன்வாடி மையங்கள் போன்ற அமைப்புகளுக்கு வழங்க இந்த அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! முந்தைய தி.மு.க. அரசால் கொண்டுவரப்பட்ட எல்லா இலவசத் திட்டங்களுமே இது போன்ற ஊழல் மலிந்த திட்டங்கள் தான். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை மட்டும் இங்கே சொல்லி அத்துடன் நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ஊரக வீட்டு வசதித் திட்டம் பற்றி சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் கைவிடப்படுவதைப் பற்றி இங்கே சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளைக் கொண்டது. அத்திட்டத்தில் வழங்கப்படும் மானியமான 75 ஆயிரம் ரூபாயில் ஏழை எளிய குடும்பங்கள் வீடு கட்ட இயலாத நிலையிலேயே இருந்தனர். கட்டுமானச் செலவு இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்து விட்ட நிலையில், ஏழைக் குடும்பங்கள் கடன் வாங்கித்தான் வீடு கட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கடன் சுமை இல்லாத வகையில் கிராமப்புர ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டும் என்பதால், சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். இந்தத் திட்டத்தின் படி, சுமார் 300 சதுர

அடி அளவில் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் அரசே வீடு கட்டிக் கொடுக்கும். அதைப் போலவே, நகர்ப்புர ஏழைகளின் வீட்டு வசதிக்காக ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய, தரமான மருத்துவச் சேவையை வழங்குவதே இந்த அரசின் குறிக்கோளாகும். முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டுவந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அனைவருக்கும் பயன்படக் கூடிய வகையில் அமையப் பெறவில்லை. அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ஒரு இலட்ச ரூபாய் ஆகும். குடும்பத்திலுள்ள ஒரு நபர் இந்தத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள முழுக் காப்பீட்டுத் தொகையையும் பயன்படுத்தி விட்டால், அவரோ அல்லது அவரது மற்ற குடும்ப உறுப்பினர்களோ திட்டம் அமலில் உள்ள நான்கு ஆண்டுகளுக்கு இத்திட்டத்தின் மூலம் எந்தப் பயனையும் பெற இயலாது. மேலும், அனுமதிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையான ஒரு இலட்ச ரூபாய், சில உயிர் காக்கும் பெரிய அறுவை சிகிச்சைகளுக்குப் போதுமானதாக இல்லை. இந்தத் திட்டத்தில் மருத்துவப் பரிசோதனைகளுக்கான கட்டணங்களை வழங்கவும் வழி இல்லை. Scan போன்ற அதிக செலவு ஏற்படும் பரிசோதனைகளுக்குக் கூட இந்தத் திட்டத்தில் கட்டணங்கள் வழங்க இயலாது. இதனால் ஏழை நோயாளிகள் மருத்துவப் பரிசோதனைகளுக்காகக் கடன் வாங்கித்தான் செலவழிக்கும் நிலை உள்ளது. மேலும், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற அறுவை சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் பிந்தைய பாதுகாப்பு மற்றும் தொடர் மருத்துவ சிகிச்சை வழங்க இந்தத் திட்டத்தில் வழிவகை இல்லை.

காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நோயாளிகள் அறுவை சிகிச்சை மேற்கொண்டாலும், அதில் சேர்க்கப்படாத இனங்களுக்கான கட்டணங்களைத் தனியார் மருத்துவமனைகள் பயனாளிகளிடம் இருந்தே பெற்றன. சில தனியார் மருத்துவமனைகள் நோயாளிகளிடம் பணம் வசூல் செய்தல் போன்ற முறைகேடுகளிலும் ஈடுபட்டன. அரசு மருத்துவமனைகளில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட வேண்டும். எனினும், இது வரை வழங்கப்பட்ட மொத்த காப்பீட்டுத் தொகையான 850 கோடி ரூபாயில், அரசு மருத்துவமனைகளுக்கு

வழங்கப்பட்ட தொகை வெறும் 10 கோடியே 49 இலட்ச ரூபாய்தான். அதாவது, 1.2 சதவீதத் தொகையே அரசு மருத்துவமனைகளுக்குச் சென்றுள்ளது. மொத்தத்தில், இந்தக் காப்பீட்டுத் திட்டம், தனியார் மருத்துவமனைகள் அதிகம் வளர்ச்சி அடையவே பயன்பட்டது. எனவேதான், இந்தத் திட்டத்தைக் கைவிட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக் கூடிய வகையில், ஒரு புதிய பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி அனைவரும் தங்களுக்குத் தேவையான மருத்துவ வசதி பெறுவதை உறுதி செய்யும்.

அடுத்து சமச்சீர் கல்வி பற்றி அரசின் கருத்துகளை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். சமச்சீர் பள்ளிக் கல்வி முறையினை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே எதிர்த்ததில்லை. 2010 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை சட்ட முன் வடிவு, 2010 குறித்து இப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் போது கொள்கை அளவிலே சமச்சீர் கல்வி முறையை ஏற்றுக் கொள்வதாகத்தான் தெரிவித்தோம். சமச்சீர் கல்விக்கு இந்த அரசு எதிராக இருப்பது போல சிலர் தவறாக சித்தரிக்க முயல்வது மக்களை திசை திருப்பும் முயற்சிதான். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சீரான, செம்மையான கல்வி பெற வேண்டும் என்பதும், தனியார் பள்ளிகளிலே வழங்கப்படும் உயர்தர கல்வி ஏனைய பிரிவினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதும் தான் எங்கள் கொள்கை.

மாணவர்களின் எதிர்காலத்திற்குப் பயன்படக் கூடிய சீரான, செம்மையான கல்விமுறை பாடத்திட்டத்தை வழங்காமல் பெயர் அளவிலே சமச்சீர் கல்வி என்று வழங்குவது தமிழ்நாட்டு மாணவர்களைப் பல ஆண்டுகள் பின் நோக்கி இழுத்துச் சென்று விடும் என்பதால்தான், தமிழ்நாட்டுச் சிறுவர், சிறுமியர் மேலுள்ள அன்பினாலும், அக்கறையினாலும்தான் நாங்கள் முந்தைய அரசால் கொண்டு வரப்பட்ட பாடப்புத்தகங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்று அதனை மாற்ற முடிவு செய்தோம்.

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தன்னுடைய கவிதை இருப்பதால் இந்த பாடத்திட்டத்தையே நாங்கள் எதிர்க்கிறோம் என்றும், வேண்டும் என்றால் அந்தக் கவிதையை

எடுத்துவிட்டு சமச்சீர் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இவ்வாறு கூறி இருப்பதன் மூலம் ஏதோ ஒரு சில பாடங்கள் இருப்பதால் தான் இந்த அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தையே மாற்றி அமைக்கிறது என்று கூறி மக்களைத் திசை திருப்ப பார்க்கின்றார்.

சமச்சீர் கல்வித் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை முந்தைய அரசால் நியமிக்கப்பட்ட டாக்டர் முத்துக்குமரன் குழு தெளிவாக எடுத்துரைத்துள்ளது. சமச்சீர் கல்வி என்பது, பல்வேறு வகை கல்வி முறைகளில் காணப்படும் குறைகள் களையப் பெற்று நிறைகளை அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரே சீராக வழங்குவது என்று அந்த அறிக்கையின் முன்னுரையிலேயே டாக்டர் முத்துக்குமரன் குழு குறிப்பிட்டுள்ளது. ஆனால், தற்போது முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் சமச்சீர் கல்வி என்பது அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவதற்குப் பதிலாக அனைவருக்கும் ஒரே பாடப் புத்தகங்கள் என்ற நிலையிலேயே நின்று விடுகிறது. இங்குள்ள பள்ளி சிறுவர், சிறுமியர் அறிவு வளர்ச்சி அடையவும், சிந்தனை மேம்படவும், ஏனையரோடு போட்டி போடும் தகுதியை வளர்த்துக் கொள்ளவும் தரம் வாய்ந்த கல்வி அறிவு பெறுவதே சமச்சீர் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு இல்லாமல், அனைவருக்கும் ஒரே பாடபுத்தகம் என்ற அளவிலேயே முந்தைய அரசின் சமச்சீர் கல்விக் கொள்கை நின்று போய் விட்டது தான் பெரும் தவறு.

சமச்சீர் கல்வி வெறும் ஒரே பாடப்புத்தகத்தால் ஏற்படுத்தப்படுவது அல்ல. சமமான தரம் உருவாக்குவதும் செயற்படுத்துவதும் பாடத் திட்டம் மட்டுமல்லாது பள்ளி வசதிகள், ஆசிரியர் எண்ணிக்கை, அவர்தம் திறமை, பாடநூல்கள் தேர்வு முறைகள், பள்ளி நிருவாகம், பள்ளிக் கல்வி நிருவாகம் ஆகிய பள்ளிக் கல்வியின் அங்கங்கள், அவற்றின் தொடர்பாக யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெரும் திட்டம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், கலைத் திட்டம், நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், உள்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர் மாணவர் விகிதம், இவற்றுள் ஏதாவது ஒன்று மட்டுமே சமமாக இருந்தால் மட்டும் சமச்சீர் கல்வியை உருவாக்க முடியாது என டாக்டர் முத்துக்குமரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை பல்வேறு சட்டங்கள் சில ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன என்று டாக்டர் முத்துக்குமரன் அறிக்கை தெரிவித்து, “முரண்பாடுகளைச் சரி செய்தும், தொகுத்தும், ஒரே சட்டமாக சட்டமன்றத்தில் இயற்றப்படுவதே தமிழகக் கல்வியின் வளர்ச்சிக்கும் உறுதித் தன்மைக்கும் உதவும். எனவே, அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்தும் ஒரு பொதுச் சட்டமாக தமிழ்நாடு கல்விச் சட்டம் என்ற தலைப்பில் ஒரு சட்டம் இயற்ற பரிந்துரைக்கப்படுகிறது” எனக் குறிப்பிட்டு, அச்சட்டத்தில், பள்ளிகள் தொடங்குதல், ஆசிரியர் தகுதி, உள்கட்டமைப்பு வசதி, பள்ளிக் குழுக்கள், கலைத் திட்டம், தேர்வுகள், மாணவர் ஒழுக்க விதிகள், ஆசிரியர்கள் நடத்தை விதிகள், நெறிகள் போன்ற பல அம்சங்களும் இடம் பெற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய ஒரு comprehensive, விரிவான சட்டம் இயற்றப்பட்டால்தான் சமச்சீர் கல்வி மூலம் சிறப்பான கல்வியை அனைவருக்கும் அளிக்க இயலும்.

சமச்சீர் கல்வி முறை வெற்றி பெற வேண்டும் எனில், டாக்டர் முத்துக்குமரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, சமச்சீர் கல்வி வாரியம் அமைக்கப்பட்டு அதன் கீழ், தேவைப்படும் கல்விக் குழுமங்களும் அமைக்கப்பட்டு அவை உயிர்ப்புடன் செயல்பட தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் முடியும். ஒரே மாதிரி புத்தகத்தை மட்டும் வைத்துக் கொண்டு அதுதான் சமச்சீர் கல்வி என்று கூறுவது எத்தகைய கேலிக்கூத்து என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் உணர வேண்டும்.

சமச்சீர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் முன் இத்திட்டம் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கும் வகையிலும் புதிய பாடத்திட்டத்தில் அமைந்த பாடங்களைக் கற்பிக்க வழிகாட்டும் வகையிலும் நூல்கள் எழுதி வெளியிடுவது இத்திட்டம் சிறப்பாக நிறைவேற மிக அவசியம்.

உயர்நீதிமன்றம் தனது உத்தரவில், பத்தி 61இல், ஆசிரியர்கள் தேர்வு முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

61. The ambitious effort undertaken on the part of the State to bring in social justice and to have quality education will all come to naught if the selection of teachers is not made properly. The selection and appointment of teachers

cannot be made just like selection and appointment of a clerk. A teacher must love teaching, she must love children. We come across horrible news items of physical violence committed by teachers on children. If the teacher imparts joy and inculcates confidence in the child, the child will willingly go to school. Therefore, definitely the State will have to look at amendments to the rules relating to recruitment of teachers if it seriously intends this Act to transform the lives of children across the State, whether they are poor, disabled, living in tribal areas, whether they are girl children, or children from downtrodden sections of society, or any child who does not have certain potential plus points whom the State wants to uplift and in order to attain a quality of excellence we hope therefore the State will address its attention in this regard also. Recently we read in the newspapers the findings of an NGO after a survey of schools in the country that our State has a very high percentage of student enrolment but the quality of teachers is low. This may be challenged as inaccurate but we insist that the State shall take steps to ensure that the teachers are of a high quality.

உயர்நீதிமன்றத்தின் இந்த அறிவுரை பற்றி முந்தைய தி.மு.க. அரசு கவலைப்படவே இல்லை. ஆசிரியர் தேர்வு பற்றி சரியான முடிவு எடுக்கப்படாமல் தரமான கல்வி வழங்குவது என்பது இயலாத காரியம் ஆகும்.

இந்தச் சட்டத்தின் மூலம் தற்போது நிறைவேற்றப்படும் சமச்சீர் கல்வி ஒரே விதமான பாடப் புத்தகங்கள் கொண்டு வருவதோடு நின்று விடுகிறது என்பதால்தான், இதை அவசரக் கோலத்தில் நடைமுறைப்படுத்த முடியாது என நாங்கள் கருதுகிறோம். இவ்வாறு அரை குறையாக நிறைவேற்றப்படும் சமச்சீர் கல்வி, சமமான கல்வியாகவும் இருக்காது! சீரான கல்வியாகவும் இருக்காது! என்பதால்தான் சமச்சீர் கல்வித் திட்டம் நிறைவேற்றப்படுவதை நாங்கள் தள்ளி வைத்து, அதற்காக ஒரு குழுவை அமைத்து,

அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நமது மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலம் அமையப்பெற அதற்கான கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று தீர்மானித்து, சமச்சீர் கல்வித் திட்டத்திற்கான நடைமுறைகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைக்க உள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சில புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

அறிவிப்பு–1

ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகளைப் பதனிடுவதை முக்கியப் பணியாக இந்த ஆலை கொண்டுள்ளது. ஒரு மாதத்தில் சுமார் 18 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது இந்த ஆலை. ஆலையிலிருந்து வெளியேற்றப்பட்ட சாயக்கழிவு நீரால் ஏற்பட்ட மாசுக்கு அபராதத் தொகை செலுத்த வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அபராதத் தொகையான, 1 கோடியே 11 இலட்சத்து 46 ஆயிரத்து 363–ஐ செலுத்தத் தவறியதால் 15.12.2010இல் ஆலையை மூடுவதற்கு அறிவிப்பு அனுப்பியது. அதனை ரத்து செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இதற்காக கண்காணிப்புக் குழு அமைத்து அதன் அறிவுரையின் பேரில் ஆலையைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உத்தரவின்படி, 23.2.2011 முதல் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை மூடப்பட்டது.

உயர்நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழு, மார்ச் மாதம் ஆலையை ஆய்வு செய்து தெரிவித்த அறிவுரைகளை ஆலை நடைமுறைப்படுத்தியது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மீதமுள்ள அபராதத் தொகையான 1 கோடியே 11 இலட்சத்து 46 ஆயிரத்து 363 ரூபாயை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்பதுடன், மேலும் சில நிபந்தனைகளை விதித்தது.

மூடப்பட்டுள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையைத் திறப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டதன் அடிப்படையில், அபராதத் தொகை முழுவதும் 30.5.2011இல் செலுத்தப்பட்டுவிட்டது. நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் முறையான ஆய்வுக்குப் பிறகு 1.6.2011இல் இந்த ஆலையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆலையை இன்று Video Conferencing முறை மூலம் நான் திறந்து வைக்க உள்ளேன்.

கடந்த ஆட்சியில் மூடப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையை இன்று திறப்பதன் மூலம் 300 தொழிலாளர்களும், அவர்தம் குடும்பத்தினரும் வாழ்வு பெறுவர். மேலும், பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச சீருடையை உரிய காலத்தில் வழங்கவும் இயலும்.

அறிவிப்பு–2

தீ விபத்தினால் முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு இரண்டாயிரம் ரூபாயும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ஆயிரம் ரூபாயும் தற்போது நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படும் போது முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ஐந்தாயிரம் ரூபாயும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயும் நிவாரண உதவித் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதே அடிப்படையில், தீ விபத்துகளினால் முழுவதும் சேதமடைந்த குடிசைகளுக்கு ஐந்தாயிரம் ரூபாயும், பகுதியாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இது உடனடியாக அமல்படுத்தப்படும்.

அறிவிப்பு–3

ஒவ்வொரு கிராமத்திலும் நில உரிமையாளர்களைக் காட்டும் பதிவேடுகள் சரியானதாகவும், தற்போது உள்ள நிலையைக் குறிப்பிடுவதாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு உண்மையான உரிமையாளர்கள் மற்றும் உண்மையான

அனுபவதாரர்களின் பெயர்கள் நில உரிமைப் பதிவேட்டில் பதியப் பெற்றிருந்தால்தான் நில உரிமைதாரர்கள் தங்களது உரிமையை நிலைநாட்ட இயலும். தற்போதுள்ள விதிமுறைகளின்படியும், மக்கள் சாசனம்–அதாவது–Citizen Charter–ன்படியும், பட்டா மாறுதலுக்கான விண்ணப்பத்தினை வட்டாட்சியர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும். நிலங்கள் உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்யப்பட வேண்டிய இனங்களில் 30 நாட்களிலும்; உட்பிரிவு செய்யப்பட தேவையற்ற இனங்களில் 15 நாட்களிலும் பதிவு மாறுதல் செய்யப்பட வேண்டும். ஆனால், தற்போது பல்வேறு காரணங்களினால் மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது.

பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எனவே, பட்டா மாறுதலுக்கான விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம் கொண்டு வரப்படும். பட்டா மாறுதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பொது மக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாத வகையில் அவ்வாறான மனுக்களை கிராம நிர்வாக அலுவலரிடம் VAO–விடம் சமர்ப்பிக்க வழிவகை செய்யப்படும். வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோர் ஒரு குழுவாகச் செயல்பட்டு, பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள். பட்டா மாறுதலுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் கணினியில் பதியப்பட்டு அதிகாரிகள் அளவில் நில நிருவாக ஆணையர் மட்டத்திலும், வருவாய்த் துறை அமைச்சர் அளவிலும் ஆய்வு செய்யப்படும். வருவாய் நிலை ஆணையில், அதாவது Revenue Standing Orderஇல், தக்க மாறுதல் செய்யப்பட்டு இது நடைமுறைப்படுத்தப்படும்.

இதைப் போன்றே, முதியோர் உதவித் தொகை உட்பட அரசின் மாதாந்திர ஓய்வூதியத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களும் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், அடங்கிய குழுவால் சரிபார்க்கப்பட்டு ஓய்வூதிய ஆணைகள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சுதந்திரம் அடைந்து விட்டதாகத் தமிழக மக்கள் அனைவருமே உணர்கிறார்கள். கடந்த 5 ஆண்டுக் காலமாக மக்களுடைய அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும் பறிக்கப்பட்டிருந்தன. கடந்த 5 ஆண்டுக் காலமாக பத்திரிகைகளும், ஊடகங்களும்கூட இந்த அடக்குமுறையை அனுபவித்தன. உண்மையான விவரங்கள்கூட வெளியிடுவதற்கு அனுமதி வழங்காத ஒரு நிலைமை இருந்தது. உண்மையை வெளியிட பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும் அனுமதி தேவையில்லை. அதுதான் ஜனநாயகம்; ஆனால், அப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை சூழ்நிலை நிலவியது. உதாரணத்திற்கு ஒருசிலவற்றை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

இதே சட்டமன்றப் பேரவையில் கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஒரு முறை நான் இங்கே பேசியபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளைக் குறிப்பிட்டேன். "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! இருட்டினில் நீதி மறையட்டுமே! தன்னாலே வெளிவரும் தயங்காதே! ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!" என்று நான் சொல்லிவிட்டு, அதன் பிறகு நான் வெளியேறி விட்டேன். நான் சென்ற பிறகு, அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி, இந்தப் பாடலைக் குறிப்பிட்டு, "ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே!" என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடியது தன்னைத்தான்—அதாவது, திரு. கருணாநிதியைத்தான் என்று குறிப்பிட்டு—அவர் என்னைச் சொல்லவில்லை—ஏனென்றால், ஒரு தலைவி இருக்கிறாள் என்று சொல்லவில்லை; ஒரு தலைவன் இருக்கிறான் என்று தான் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஜெயலலிதாவை அவர் குறிப்பிடவில்லை என்று அவர் சொன்னார். நான் வெளியே சென்ற பிறகுதான் இதைக் கேள்விப்பட்டேன். அதற்கு நான் பதிலளித்து ஒரு அறிக்கை வெளியிட்டேன். புரட்சித் தலைவர் என்னைப் பார்த்து, "திருவளர்செல்வியோ, நான் தேடிய தலைவியோ!" என்று பாடியிருக்கிறார். ஆகவே, அதில் என்னைத்தான் குறிப்பிடுகிறார். அவருடைய அரசியல் வாரிசு நான்தான் என்பதை அனைவருக்கும் அடையாளம் காட்டியிருக்கிறார் என்று நான் பதிலடி கொடுத்தேன்.

ஆனால், இது திரு. கருணாநிதிக்குப் பிடிக்கவில்லை. இப்படி புத்திசாலித்தனமாகச் சொன்னதற்கு உடனடியாக ஜெயலலிதா

பதிலடி கொடுத்து விட்டாரே என்று அனைத்துப் பத்திரிகைகளையும் மிரட்டி, இந்தச் செய்தியை வெளியிடக் கூடாது என்று கட்டாயப்படுத்தி, என்னுடைய அறிக்கை எந்தப் பத்திரிகையிலும் வெளியிடப்படவில்லை என்பதுதான் உண்மை. ஆக, இந்த அளவிற்கு அற்பத்தனமான காரியங்களில், அற்பத்தனமான சிந்தனையில் அந்தக் காலக்கட்டத்தில் முதலமைச்சரே செயல்பட்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன்.

கடந்த ஆண்டு நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, வரிசையாக பல பிரம்மாண்டமான பொதுக் கூட்டங்களை நான் நடத்தினேன். கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரம்மாண்டமானப் பொதுக்கூட்டம் திரண்டு விட்டது. அனைத்துப் பத்திரிகைகளும் அந்தக் கூட்டத்தைப் பற்றிப் பிரமாதமாகச் செய்திகளை வெளியிட்டன. உண்மையைச் சொன்னார்கள். 8 இலட்சம் பேருக்கு மேல், 9 இலட்சம் பேருக்கும் மேல் அங்கே கூடிவிட்டார்கள் என்ற உண்மையைச் சொன்னதால், திரு. கருணாநிதிக்குத் தாங்க முடியாத கோபம் வந்து விட்டது.

அடுத்து ஒன்றரை மாத காலத்திற்குள் திருச்சியிலே ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடத்தினேன். கோவையில் திரண்ட கூட்டத்தைவிட மூன்று மடங்கு அதிக கூட்டம் அங்கே திரண்டது. கோவையிலே ஒரு ஏழு இலட்சம் பேர் திரண்டார்கள் என்றால், திருச்சியிலே 21 இலட்சத்திற்குமேல் கூட்டம் கூடிவிட்டது என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால், அன்றைய காலக்கட்டத்தில் திரு. கருணாநிதி அனைத்துப் பத்திரிகைகளையும் மிரட்டி, கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மிரட்டியதால், ஒரு பத்திரிகைகூட திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தைப்பற்றி செய்தியே வெளியிடவில்லை. ஒருசில பத்திரிகைகளில் ஜெயலலிதா திருச்சிக்கு சென்றார், பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார், சென்னை திரும்பினார் என்று மட்டும் போட்டார்களே தவிர, சில பத்திரிகைகளில் செய்தியே வெளியிடவில்லை. எந்தப் பத்திரிகையிலும் உண்மையை வெளியிடவில்லை. இங்கே பிரம்மாண்டமான மக்கள் கூட்டம், மகத்தான மக்கள் கூட்டம் கூடியது என்ற செய்தியை வெளியிடவில்லை. அதையே இருட்டடிப்பு செய்துவிட்டார்கள். ஆகவே அந்த அளவிற்கு ஒரு பயம், ஒரு அச்ச உணர்வு, ஒரு அடக்குமுறை இருந்தது.

பத்திரிகைகள் ஏன் பயப்படவேண்டும் ? பத்திரிகை முதலாளிகள் முதலமைச்சரைக் கண்டு ஏன் பயப்படவேண்டும் என்று கேட்டால் அது அவர்களுக்குத்தான் தெரியும். என்ன காரணம் என்று அவர்களுக்குத்தான் தெரியும். அப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை அப்போது நிலவியது.

அதுமட்டுமல்ல, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரை, எனக்குச் சாதகமான, கழகத்திற்குச் சாதகமான எந்தச் செய்தியும் வெளியிடக்கூடாது என்று பத்திரிகைகளுக்கு ஒரு Standing Order போடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, சட்டமன்றத்திற்கு நான் எப்போது வந்தாலும், என்னைப் பேசவிடாமல், முதலமைச்சரும் சரி, அத்தனை தி.மு.க. அமைச்சர்களும் சரி, அடிக்கடி எழுந்து குறுக்கிடுவது மட்டுமல்ல, அவமானப்படுத்தி, கொச்சைப்படுத்தி, அசிங்கப்படுத்திப் பேசினார்கள்.

அதுமட்டுமல்ல அன்றைய சபாநாயகர் திரு. ஆவுடையப்பன் அவர்கள், நான் ஆரம்பத்தில் சட்டமன்றத்திற்கு வந்தபோது, அவருக்கு வணக்கம் தெரிவித்தபோது, மரபுப்படி பதில் வணக்கம் தெரிவித்தார். அதுகூட அன்றைய முதல்வருக்குப் பொறுக்கவில்லை. தனியாக அழைத்து திரு. ஆவுடையப்பன் அவர்களை வாங்கு, வாங்கு என்று வாங்கிவிட்டார் போலும். அதன்பிறகு நான் சட்டமன்றத்திற்கு வந்து வணக்கம் தெரிவித்தால்கூட, பதில் வணக்கம் கூடத் தெரிவிக்காமல் சபாநாயகர் முகத்தைத் திருப்பிக்கொள்வார். இப்படி ஒரு சூழ்நிலையை, ஒரு ஜனநாயக நாட்டில், தமிழ்நாட்டைத் தவிர, வேறு எந்த சட்டமன்றத்திலாவது கேள்விப்பட்டிருக்கிறோமா ?

இன்றைய தினம் நீங்கள் எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுகிறீர்கள், கண்ணியத்துடன் பழகுகிறீர்கள். ஆனால் அன்றைய நிலைமை என்ன ? அதை நீங்களே கண்கூடாகப் பார்த்திருக்கிறீர்கள். இதையெல்லாம் இன்றைக்கு எதற்காகச் சொல்கிறேன் என்றால், அனைவரும் வெறுப்படையக்கூடிய ஒரு சூழ்நிலைதான் கடந்த ஐந்து ஆண்டுகாலமாக இங்கு தமிழகத்தில் நிலவியது. சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன். அனைவரையும் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேன். நான் ஒரு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், எனக்கே இந்த நிலைமை என்றால், சாமான்ய மக்களின் நிலை என்ன ? அதனால்தான் மக்கள் இந்தக் கொடுங்கோல் குடும்ப ஆட்சி எப்போது ஒழியும் ? இதற்கு எப்போது நாம் வழிசெய்யலாம் ? என்று காத்திருந்தார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுக்காலத்தில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை, யாருக்கும் எந்தவிதமான சுதந்திரமும் இல்லை. மக்கள் வேறு எதை விரும்புகிறார்களோ இல்லையோ, எந்த நாட்டிலும் சரி, பொதுமக்கள் சுதந்திரத்தை விரும்புவார்கள். இந்தியா என்று மட்டுமல்ல எந்த நாட்டிலும் அதேதான். அதனால்தான் முசோலினி, ஹிட்லர், இடிஅமீன் போன்ற சர்வாதிகாரிகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குமேல் அவர்களுடைய நாட்டு மக்களாலேயே தூக்கியெறிப்பட்டார்கள். அதைப்போலவே, கொடுங்கோல் ஆட்சி நடத்திய சர்வாதிகாரி திரு. கருணாநிதியின் குடும்ப ஆட்சியை தமிழக மக்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து தூக்கியெறிந்துவிட்டார்கள்.

இனி தமிழ்நாட்டில் அத்தகைய ஒரு நிலைமை எந்தக் காலத்திலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழக மக்களுக்கு நான் அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில் தெரிவித்தவாறு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். அதே நேரத்தில், மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதுடன் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அதாவது, inclusive growth அமையும் வண்ணம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

மனிதவளம் மேம்பாடு அடையச் செய்யும் நடவடிக்கைகளை எனது அரசு முனைப்போடு செயல்படுத்தும். மனிதவள மேம்பாட்டில் முழு முதல் நடவடிக்கையாக பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982–லேயே கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அப்போது சத்துணவுத் திட்டத்தின் உயர்மட்டக் குழு உறுப்பினராக இருந்தவள் நான். எனவேதான், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய வழியில் அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடித்து அரசின் கொள்கைகளை வகுத்து வருகிறோம். அந்த அடிப்படையிலே தான் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாட நூல்கள் வழங்கும் திட்டம், +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டம் ஆகிய முன்னோடித் திட்டங்களை

நான் செயல்படுத்தினேன். அதேபோலத்தான், இப்போது +1, +2 பயிலும் மாணவ, மாணவியருக்கும், கல்லூரி மாணவ, மாணவியருக்கும் இலவச மடிக் கணினி வழங்கப் போகிறோம். மனிதவள மேம்பாட்டில் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டுள்ளோம்.

தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை துறைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், முதன்மைத் துறையான விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் எங்கள் அரசு எப்போதும் முன்னுரிமை அளிக்கும். இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எதிர் மறையாக உள்ள வேளாண் வளர்ச்சியைச் சரி செய்து, விரைவான வளர்ச்சிப் பாதையில் வேளாண் துறையைக் கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

2005ஆம் ஆண்டில் உழவர் பெருமக்களின் உன்னத வாழ்விற்காக அதாவது, கருவறை முதல் கல்லறை வரை பயன்படக் கூடிய வகையில் "தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினேன்.

அதற்குப் பின் வந்த தி.மு.க. அரசு, நான் தொடங்கிய அந்தத் திட்டத்தையே பெயர் மாற்றம் செய்து, விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம், 2006 என சட்டம் இயற்றி நல வாரியம் ஒன்றையும் அமைத்தது. இதன் மூலம் விவசாயிகளுக்கு முழுமையான நன்மை கிடைக்கப் பெறவில்லை. எனவே, விவசாயப் பெருமக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் முழுமையான பயன் அடையும் வகையில் பல புதிய அம்சங்களை உள்ளடக்கிய புதிய உழவர் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவோம்.

ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள், முந்தைய தி.மு.க. ஆட்சியால் ஏற்பட்ட நிருவாகச் சீர்கேடுகளை உடனடியாகக் களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், இல்லை எனில் மக்கள் கொந்தளிப்பார்கள் என்றும் கூட குறிப்பிட்டார்கள். இத்தகைய கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று வாரங்களுக்கு உள்ளாகவே பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்துள்ளது. சீரற்ற மின் விநியோகத்தைச் சீர்

படுத்துதல்; விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை; சட்டம்–ஒழுங்கை நிலை நாட்டுதல்; மணல் கொள்ளையைத் தடுத்தல்; மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் என பல உறுதியான நம்பிக்கைத் தரும் நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருவதை, அனைவரும் அறிவர். Breakneck speed என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அதைப் போன்ற வேகத்தில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், எங்களிடம் வேகம் மட்டும் அல்ல, விவேகமும் உண்டு. எனவே, முந்தைய தி.மு.க. ஆட்சியின் அவலங்களைக் கண்டு கொந்தளித்த மக்கள் தற்போது அமைதியாகவும், வளமான எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுடனும் உள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நான்கு நாட்களாக மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, ஆக்கப்பூர்வமான கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு, ஐயங்களுக்கு எனது பதிலுரையின் மூலம் நான் தெளிவான விளக்கங்களை அளித்துள்ளேன். என்னுடைய பதிலுரையின் மூலம் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மன நிறைவு அடைந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான், இந்த அரசினுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை, லட்சியத்தை, இலக்கினை அடைய இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் முழு ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, நான் அளித்த விளக்கங்களை ஏற்றுக் கொண்டு, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு தீர்மானத்தை ஏக மனதாக, ஒரு மனதாக நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாக அனைவரையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி
ஸ்ரீரங்கத்தில் 19.06.2011 அன்று நடைபெற்ற
அரசு விழாவில் ஆற்றிய உரை.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு ஒன்றே குறிக்கோள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! இந்த இனிய விழாவில் வரவேற்புரை ஆற்றிய திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன் அவர்களே!

முன்னிலை உரை ஆற்றிய மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலத் துறை அமைச்சர் திரு. சிவபதி அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட வருவாய் அலுவலர்

திருமதி. பேச்சியம்மாள் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளே!

வைணவத் திருத்தலங்களில் முதன்மையானதாகவும், மிகவும் புகழ் பெற்றதாகவும் விளங்குவதும், "திருவரங்க திருப்பதி", "பூலோக வைகுண்டம்" எனப் போற்றப்படும் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலையும்; பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும், திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலையும் தன்னகத்தே கொண்டுள்ளதுமான ஸ்ரீரங்கம் தொகுதி வாழ் மக்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஸ்ரீரங்கம் தொகுதியிலே வாக்கு சேகரிக்க நான் வந்தபோது, நீங்கள் அன்போடும், கனிவோடும் எனக்கு வரவேற்பு அளித்தமைக்கும்; அதற்கேற்றாற்போல், நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தலில் என்னை இந்தத் தொகுதியிலிருந்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தமைக்கும்; இந்த வெற்றியின் மூலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்கக் கூடிய வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்தமைக்கும், என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றி பெற்ற உடனேயே உங்களையெல்லாம் நேரில் சந்தித்து நன்றி நவில வேண்டும் என்று நான் விரும்பினாலும், புதிய அமைச்சரவை அமைப்பு, பின் பதவியேற்பு; சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு; சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்; ஆளுநர் உரை; சட்டமன்றக் கூட்டத் தொடர்; பாரதப் பிரதமருடனான சந்திப்பு எனப் பல்வேறு அலுவலகப் பணிகள் தொடர்ந்து இருந்ததன் காரணமாக,

என்னால் இதற்கு முன் வர இயலவில்லை என்பதை உங்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தேர்தலின் மூலம், பண பலத்தை முறியடித்து உங்களுடைய பலத்தை நிரூபித்து இருக்கிறீர்கள். தமிழக மக்களை விலை பேசி, அதன் மூலம் தமிழ்நாட்டையே விலைக்கு வாங்கி விடலாம் என்று நினைத்தவர்களின் கனவு தகர்த்தெறியப்பட்டுள்ளது. பணத்திற்கு அடிபணியாமல், தமிழகத்தில் ஜனநாயகம் தழைத்தோங்க நீங்கள் வழி செய்திருக்கிறீர்கள். இந்தத் தருணத்தில், ஒரு சிறிய கதையைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஒரு சீடன் தன்னுடைய குருவிடம், “மனிதனுடைய மதிப்பு எவ்வளவு ? என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்” என்று கேட்டான்.

அதற்கு குரு, தன்னிடம் உள்ள ஒரு வைரக் கல்லைக் கொடுத்து “இதைக் கடை வீதிக்கு எடுத்துச் சென்று, பல வியாபாரிகளிடம் காண்பித்து, இதனுடைய மதிப்பு என்ன என்பதை அறிந்து வா” என்றார். “எக்காரணத்தைக் கொண்டும் இதை விற்கக் கூடாது” என்றும் அறிவுறுத்தினார்.

சீடனும் கடை வீதிக்குச் சென்றான். ஒரு ஆரஞ்சுப் பழ வியாபாரியிடம் வைரக் கல்லைக் காண்பித்து, “இதை நான் விற்க விரும்புகிறேன். நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள் ?” என்று கேட்டான். “இரண்டு ஆரஞ்சுப் பழங்களைக் கொடுக்கிறேன்” என்றார் அந்தப் பழ வியாபாரி.

பின்னர், உருளைக்கிழங்கு வியாபாரியிடம், அந்த வைரக் கல்லை காண்பித்து, “இதை நான் விற்க விரும்புகிறேன். நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள் ?” என்று கேட்டான். “நான்கு கிலோ உருளைக்கிழங்கு தருகிறேன்” என்று அந்த வியாபாரி தெரிவித்தார்.

இதே போன்று, மளிகைக் கடை வியாபாரியிடம் சென்று கேட்டான். அவர் கொஞ்சம் அரிசியும், பருப்பும் தருவதாகக் கூறினார்.

தங்க நகை வியாபாரியோ ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகக் கூறினார்.

கடைசியாக, பெரிய வைர வியாபாரியிடம் சென்று அந்த வைரக் கல்லைக் காண்பித்தான். அவர் பரிசோதனை செய்து, “இது நல்ல வைரம். இதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம்” என்றார்.

சீடனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. தன் குருவிடம் சென்று, நடந்த எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறினான். அவர் புன்னகை செய்தபடியே, “ஒரு மனிதன் தன்னை இரண்டு ஆரஞ்சுப் பழங்களுக்கும் விற்றுக் கொள்ளலாம். நான்கு கிலோ உருளைக்கிழங்கிற்கும் விற்றுக் கொள்ளலாம். கொஞ்சம் அரிசி, பருப்புக்கும் விற்றுக் கொள்ளலாம். ஆயிரம் ரூபாய்க்கும் விற்றுக் கொள்ளலாம். ஆனால், மனிதன் கிடைத்தற்கரிய வைரம்” என்று கூறினார் குரு.

இதை நீங்கள் இந்தத் தேர்தலின் மூலம் நிரூபித்து இருக்கிறீர்கள். இதன் மூலம், மக்களின் சக்தியையும், விலைமதிப்பற்ற தன்மையையும், இந்த நாட்டிற்கு பறை சாற்றியிருக்கிறீர்கள். உங்களை விலை கொடுத்து வாங்கிவிடலாம் என நினைத்து, உங்களுடைய மதிப்பைக் குறைத்து எடை போட்டவர்களை அடையாளம் கண்டு, அவர்களை அப்புறப்படுத்தி இருக்கிறீர்கள். “யாருக்கும், எதற்கும் அடிமையாக மாட்டோம்; அடிமையாக்க நினைப்பவர்களை, அப்புறப்படுத்துவோம்” என்பதை நீங்கள் உங்கள் வாக்குகள் மூலம் உறுதி செய்துள்ளீர்கள். உங்களின் வாக்குகள் விலை மதிப்பற்றவை; நீங்கள் கிடைத்தற்கரிய வைரம் என்பது இந்தத் தேர்தலின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. உங்கள் கடமையைச் செவ்வனே செய்திருக்கிறீர்கள். இதற்காக மீண்டும் ஒரு முறை எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித உறவுகளை மேம்படுத்துவதில் நன்றி மனப்பான்மை மிகவும் முக்கியமானது. அதனால்தான் எனது நன்றியை எழுத்தினால் தெரிவித்தாலும் போதாது; நாவினால் சொன்னாலும் போதாது என்று கருதி, அதைத் திட்டங்கள் வடிவில் உங்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அரசு சார்பில் நடத்தப்படும் முதல் கூட்டம் இதுதான் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, ஏழை எளிய மக்களுக்கு நேரடியாகப் பயன் தரக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்துச் செயல்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில்தான், மக்கள் நலனை முதன்மைப்படுத்தி, தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் வண்ணம் பல முக்கியத் திட்டங்களுக்கு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே உத்தரவிட்டேன்.

ஏழை, எளிய மக்களுக்கு முழுமையான உணவுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசிக்கு மக்கள் எந்த விலையையும் கொடுக்க வேண்டியதில்லை என்று இலவசமாகவே அரிசியை வழங்க உத்தரவிட்டேன். இதன் மூலம், தமிழக மக்கள் உணவுப் பாதுகாப்பு என்பதை ஒரு உரிமையாகவே பெற்று விட்டனர்.

அதைப் போன்று, மகளிருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கும் திருமண உதவித் திட்டத்துடன், தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்க உத்தரவிட்டேன். ஒரு ஆண் கற்றறிந்தவனாக இருந்தால், அந்தக் கல்வி அவனுக்கு மட்டும்தான் பயன்படும். ஆனால், ஒரு பெண் படித்து, அதன் மூலம் கற்றறிந்தவளாக இருந்தால், அவள் மூலம் அந்தக் குடும்பமே கல்வி அறிவு பெற்றுவிடும். எனவே, இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையை 50 ஆயிரம் ரூபாய் ஆக உயர்த்தி வழங்கியதோடு, தாலிக்கான 4 கிராம் தங்கத்தையும் வழங்க உத்தரவிட்டேன்.

அதுபோல, அரசிடமிருந்து பெறப்படும் மாதாந்திர ஓய்வூதியத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியுள்ள, முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள், ஆகியோருக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டேன்.

மேலும், மீன் இனப்பெருக்கக் காலத்தில், மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள காலத்தில், மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 1,000 ரூபாயிலிருந்து, 2,000 ரூபாயாக இரட்டிப்பாக்கி உத்தரவிட்டேன்.

மனிதவள மேம்பாட்டிற்காக எனது அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையில்,

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கும்; அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவசமாக மடிக் கணினி வழங்கும் திட்டத்தை எனது அரசு செயல்படுத்த உள்ளது. இந்த ஆண்டு சுமார் 9 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

வறுமையை முழுமையாக அகற்றுவதை தன் தலையாய கொள்கையாக எனது அரசு கொண்டுள்ளது. உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதோ, பெரும் தொழிற்சாலைகள் நிறுவப்படுவதோ மட்டும், நாட்டிற்கு உகந்த வளர்ச்சி அல்ல என்பதே என்னுடைய தீர்க்கமான கருத்து ஆகும். எனவே தான், பொருளாதார வளர்ச்சி ஏழை, எளிய மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளேன்.

ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற, சில சலுகைகள் அவசியம் என்பதால் தான் கிராமப்புர ஏழைகள் பயன்பெறும் வகையில் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் என்ற புதுமையான திட்டத்தை எனது அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, கிராமப்புர ஏழை எளிய மக்களுக்கு, சுமார் 300 சதுர அடி அளவில், ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில், அரசே வீடு கட்டிக் கொடுக்கும். அதைப் போல, நகர்ப்புர ஏழைகளின் வீட்டு வசதிக்காக, ஒரு புதிய திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்த உள்ளது.

இந்த அடிப்படையில்தான், மகளிருக்கு மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டத்தை நான் செயல்படுத்த உள்ளேன். இந்தத் திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படும்.

நான் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு மாதம்தான் ஆகிறது. ஆட்சிப் பொறுப்பேற்றபின், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நிருவாக சூழ்நிலையைப் பார்த்தபோது எனக்குக் கடும் அதிர்ச்சிதான் ஏற்பட்டது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு அனைத்துத் துறைகளிலும் பல்வேறு குளறுபடிகளைச் செய்து, நிருவாகத்தையே சீரழித்துள்ளது. துறைதோறும் உள்ள குளறுபடிகளை நான்

சீர்படுத்தி, ஒழுங்குபடுத்தி வருகிறேன். இதுவே, ஒரு மாபெரும் சவாலாக அமைந்துள்ளது. இப்படிப்பட்ட, கடும் சவாலுக்கு மத்தியில் 190 கோடி ரூபாய்க்கும் அதிகமான திட்டங்களுடன் நான் இங்கு வந்துள்ளேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கருத்திலேயே, திட்டங்களிலேயே பிழை இருந்தது என்பதால் தான், அவர்களது திட்டங்கள் எல்லாம் மக்களுக்குப் பயன்படாமல் அவர்களுக்கே பயன்படும் திட்டங்களாக இருந்தன.

எங்கள் அரசு, தற்போது கொண்டு வந்துள்ள திட்டங்கள் அனைத்தும், மக்கள் நலனை முன்னிறுத்தியே கொண்டுவரப்பட்டுள்ள திட்டங்கள். தமிழக மக்களைத் தவிர, வேறு யாரும் இந்தத் திட்டங்களின் மூலம் பயன்பெற இயலாது. இந்தத் திட்டங்கள் மூலம், தமிழக மக்களின் வாழ்க்கை வளம் பெறும்; மனித வளம் மேம்படும்; மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

ஏழை, எளிய மக்களுக்கு ஒரு புறம் சலுகைகளை வழங்குவதும்; மறுபுறம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அவர்களே வாங்கிக் கொள்ளும் வகையில், அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் ஆகிய இரு வேறு நிலைகளில், பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

தேர்தல் சமயத்தில், நான் இங்குப் பிரச்சாரம் செய்ய வந்த போது, பக்தர்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள்; ஸ்ரீரங்கம் நகரம் மற்றும் மணிகண்டம், மணப்பாறை, அந்தநல்லூர் ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் சாலை வசதிகள்; பேருந்து வசதிகள்; குடிநீர் வசதிகள்; மருத்துவமனை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவேன் என நான் வாக்குறுதி அளித்திருந்தேன்.

எனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகத்தான், ஸ்ரீரங்கம் தொகுதிக்கு மட்டும் முதற்கட்டமாக, மொத்தம் 190 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மீதமுள்ள வாக்குறுதிகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதையும் உங்களுக்கு உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய திட்டங்கள்

1. பக்தர்களுக்கான தங்கும் விடுதி

ஸ்ரீரங்கம் தொகுதியில் நடைபெறும் இந்த அரசு விழாவில், என் அன்பிற்கினிய தொகுதி மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் சுவாமி திருக்கோயில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற, 108 வைணவத் திருத்தலங்களில் முக்கியத் திருத்தலமாக விளங்குகிறது. வெள்ளித்திருமுத்தம் கிராமத்தில், திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 330 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள ஸ்ரீரங்கம் திருக்கோயில் வைணவர்களுக்கு உகந்த திருத்தலமாக மட்டும் அல்லாது, தமிழ்நாட்டின் கலை மற்றும் பண்பாட்டின் கருவூலமாகவும் விளங்குகிறது.

ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு, தமிழகத்திலிருந்து மட்டுமல்லாது பிற மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளிலும் இருந்தும் கூட பக்தர்கள் வருகை புரிகின்றனர். அருள்மிகு ரங்கநாதரை தரிசனம் செய்யும் போது, இங்குள்ள சிற்பக் கலைகளைப் பற்றி ஆராய்ச்சியும் செய்கின்றனர். எனவே, இறைவன் எழுந்தருளியுள்ள இத்திருக்கோயில், ஆராய்ச்சிக் கூடமாகவும் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது. இத்திருக்கோயிலுக்கு, சாதாரணமாக, நாளொன்றுக்கு சுமார் 10,000 பேர் வருகை புரிகிறார்கள். சுமார் 2,000 பேர் சுவாமி தரிசனத்திற்காகவும், ஆராய்ச்சிக்காகவும் இங்கே தங்குகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்குப் போதுமான வசதிகள் ஸ்ரீரங்கம் நகரத்தில் இல்லை. எனவே, பக்தர்கள் வசதிக்காக, பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்றை அமைத்துத் தர வேண்டியது அவசியமானது ஆகும். எனவே, அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக, கொள்ளிடக் கரையில், பஞ்சக்கரை சாலையில் உள்ள 8 ஏக்கர் 60 சென்ட் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய எழில்மிகு பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்று கட்டப்படும். சுமார் 1,000 பக்தர்கள் தங்கும் வகையில், துயில் கூடம், அதாவது Dormitory; குடும்பத்துடன் தங்கும் தனி அறைகள்; உணவு விடுதி; பாதுகாப்புப் பெட்டகம்; குளியலறைகள்,

கழிப்பறைகள், வாகனங்கள் நிறுத்தும் இடம் என அனைத்து வசதிகளும் அடங்கிய வளாகமாக இது அமைக்கப்படும். இந்த வளாகம், 36 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். இவ்வாறு புதிதாகக் கட்டப்படும் பக்தர்கள் தங்கும் விடுதி, ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு மட்டுமல்லாது, திருவானைக்காவல், சமயபுரம் ஆகிய திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

2. பக்தர்களுக்கான மின்கல சீருந்து

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயில் சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில், நீண்டப் பிரகாரங்களுடன் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நீண்ட பிரகாரத்தைச் சுற்றி உள்ள சுவாமி சன்னதிகளுக்கு, தரிசனத்திற்காகச் செல்ல மிகவும் சிரமப்படுகின்றனர். வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள், எவ்வித சிரமமும் இன்றி சுவாமி தரிசனம் செய்ய வசதியாக, மின்கலன் மூலம் இயக்கப்படும் சீருந்துகள், அதாவது Battery operated vehicles இருந்தால் நலமாக இருக்கும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர். எனவே, திருக்கோயில் நிருவாகம் மூலம் 11 நபர்கள் அமரக் கூடிய மின்கலன் மூலம் இயக்கப்படும் சீருந்து ஒன்று பக்தர்களின் வசதிக்காக வாங்கப்பட்டுள்ளது. மேலும், 6 நபர்கள் அமரக் கூடிய, மின்கலன் மூலம் இயக்கப்படும் சீருந்து ஒன்றை நான் எனது சொந்தச் செலவில் ரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்குக் காணிக்கையாக வழங்கி உள்ளேன். இந்த இரண்டு சீருந்துகளும், வயதான மற்றும் மாற்றுத் திறனாளி பக்தர்கள் எளிதில் சுவாமி தரிசனம் செய்ய உதவிகரமாக இருக்கும்.

3. புதிய மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி

வேளாண் துறை வளர்ச்சி அடைந்தால்தான், வேளாண் பெருமக்கள் வாழ்க்கைத் தரம் உயரும். எனவே, எனது தலைமையிலான அரசு, வேளாண் உற்பத்திக்கு மிக முக்கியத்துவம் அளிக்க முடிவெடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தோட்டக்கலை வணிக நோக்கமாக மாற்றப்படுவதன் மூலம், விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும். தோட்டக்கலை மேம்பாட்டிற்கு, தோட்டக்கலை பயின்ற பட்டதாரிகள் மிகவும் இன்றியமையாதவர்கள் ஆவர். தற்போது தமிழ்நாடு வேளாண்மைப்

பல்கலைக்கழகத்தில், இரண்டு தோட்டக்கலைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 190 பேர் வருடந்தோறும் தோட்டக்கலையில் பட்டம் பெறுகின்றனர். எதிர்காலத்தில், தோட்டக்கலை வல்லுநர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணிகண்டம் ஒன்றியம், நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் தற்போதுள்ள வேளாண்மைக் கல்லூரிக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏற்படுத்தப்படும் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மகளிருக்காகவே ஏற்படுத்தப்படும். இந்தக் கல்லூரியில், 40 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். முதலாம் ஆண்டில், 10 கோடி ரூபாய் இதற்காக ஒப்பளிப்பு செய்யப்படும். நான்கு ஆண்டுகளில் 40 கோடி ரூபாய் செலவிடப்படும். இதற்கான அடிக்கல்லை இன்று நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

4. புதிய துணை மின் நிலையங்கள்

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் மின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து, எவ்வளவு நேரம் மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத ஒரு இருண்ட காலத்திற்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டனர். ஒவ்வொரு நாளும் 3 மணி நேரம் மின் தடை என முந்தைய தி.மு.க. அரசு அறிவித்தது. ஆனால், அறிவிக்கப்படாத மின் தடையாக மேலும் பல மணி நேரம் மின்தடை ஏற்பட்டு வந்தது. எனது அரசு பொறுப்பேற்ற ஒரு மாத காலத்திற்குள்ளாகவே, மின் நிலைமையைச் சீரமைக்கும் பல பணிகளை நான் மேற்கொண்டுள்ளேன். இதன் காரணமாக, சுமார் ஒன்றரை ஆண்டுகளாகப் பழுதடைந்த நிலையில் இருந்த வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையமும்; ஓராண்டுக் காலமாகப் பழுதடைந்த நிலையில் இருந்த குத்தாலம் எரிவாயு சுழலி மின்நிலையமும் சீர் செய்யப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், குறுகிய மற்றும் நீண்ட காலத்திட்டங்கள் மூலம், மின் தட்டுப்பாட்டை நீக்க எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான், ஜூலை 1ஆம் தேதி முதல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் தற்போது நடைமுறையில் உள்ள

3 மணி நேர மின் வெட்டு ஒரு மணி நேரம் குறைக்கப்படும் என நான் சட்டமன்றத்திலேயே அறிவித்தேன். குறைந்த மின் அழுத்தம் காரணமாக, ஸ்ரீரங்கம் பகுதியில் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இதனை நீக்கும் வகையில், சில புதிய மின் திட்டங்களுக்கு தற்போது நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தற்போது ஸ்ரீரங்கத்தில் இயங்கி வரும் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மூலம், மேலூர் மற்றும் ஸ்ரீரங்கத்தைச் சுற்றி உள்ள பகுதிகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து வழங்கப்படும் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், வீடுகள் மற்றும் காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மின் அழுத்தத்தை மேம்படுத்தும் வகையில், இந்தத் துணை மின் நிலையம் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும். இதற்கான செலவு மதிப்பீடு சுமார் 22 கோடி ரூபாய் ஆகும்.

அதேபோன்று, பெட்டவாய்த்தலையில் இயங்கி வரும் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும். இதற்கான செலவு மதிப்பீடு சுமார் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஆகும். இதன் மூலம், பெட்டவாய்த் தலையைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு வழங்கப்படும் மின் அழுத்தம் மேம்படுத்தப்படும்.

மேலும், திருவானைக்காவலில் உள்ள துணை மின் நிலையமும், 110/11 கிலோ வோல்ட் துணை மின்நிலையமாக மேம்படுத்தப்படும். இதற்கான செலவு மதிப்பீடு சுமார் 10 கோடி ரூபாய் ஆகும். இவற்றுக்கான அடிக்கற்களை நான் தற்போது நாட்டியுள்ளேன். இந்தப் பணிகள் முடிவடையும்போது, இப்பகுதிகளில் மின் அழுத்தம் மேம்படுத்தப்பட்டு, பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பயன் அடைவர்.

5. ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்

ஸ்ரீரங்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மக்களுக்குத் தரமான மருத்துவ வசதி வழங்கப்படும் வகையில், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை மேம்படுத்தப்படும். ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில், 2 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு, அதில் அதிநவீன பிரசவ வார்டு மற்றும்

பேறு கால நிலையம்; அறுவை அரங்கம்; 30 படுக்கைகள் கொண்ட பெண்கள் சிகிச்சைப் பிரிவு ஆகியவை இந்தப் புதிய கட்டடத்தில் அமைக்கப்படும். இந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்ட பின்னர், தற்போதுள்ள பிரசவ வார்டு இப்புதிய கட்டடத்திற்கு மாற்றப்படுவதால், அந்த இடத்தில் 30 படுக்கைகள் கொண்ட ஆண்கள் சிகிச்சைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் தற்போது இல்லை. அதிநவீன உபகரணங்கள் வாங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மருத்துவமனையில், இரண்டு டயாலிசிஸ் யூனிட்கள் ஏற்படுத்தப்படும். மேலும், அதிநவீன பரிசோதனை மையம் ஏற்படுத்தப்படும். மேலும், வெண்டிலேட்டர், INFUSION PUMP, MONITOR ஆகிய வசதிகள் மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய 5 சிறப்பு அறைகள் ஏற்படுத்தப்படும். இவைகளை ஏற்படுத்த 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் தற்போது சிறப்பு மருத்துவர் பணியிடங்கள் இல்லை. ஒரு காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர்; ஒரு கண் மருத்துவர்; ஒரு மனநோய் நல மருத்துவர் மற்றும் இரண்டு மகப்பேறு மருத்துவர்கள் இம்மருத்துவமனைக்கு நியமனம் செய்யப்படுவர். புதிய கட்டடம் கட்டப்பட்டதும், 3 முதன்மைக் குடிமை மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவர்.

மேலும், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் குளிர் சாதன வசதியுடன் கூடிய, அமரர் கிடங்கு ஒன்றும் 19 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்

அந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நாகமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் தற்போது இல்லை. இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 50 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்.

மணிகண்டம் ஒன்றியத்தில், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்ளனர். இந்த ஒன்றியத்தில் தற்போது இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இந்த ஒன்றியத்தில் சோமரசம்பேட்டையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட

வேண்டும் என்று இங்குள்ள மக்கள் எனக்குக் கோரிக்கை வைத்துள்ளனர். அதனை ஏற்று சோமரசம்பேட்டையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். மணப்பாறை ஒன்றியம் மரவனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்த இரு, ஆரம்ப சுகாதார நிலையங்களும், சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் பெட்டவாய்த்தலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படும் என நான் தேர்தல் நேரத்திலேயே வாக்குறுதி அளித்திருந்தேன். பெட்டவாய்த்தலை கிராமத்தில், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று சுமார் 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். இதற்கான அடிக்கல்லையும் தற்போது நான் நாட்டியுள்ளேன். இவையன்றி, மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள இனாம்குளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படும். இந்த மேம்படுத்தப்பட்ட, ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். இதற்கான அடிக்கல்லையும் தற்போது நான் நாட்டியுள்ளேன்.

6. காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்தல்

ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 146 குடியிருப்புகள்; அந்தநல்லூர் ஒன்றியத்தில் 22 குடியிருப்புகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 5 வழியோர குடியிருப்புகள் மற்றும் ஆலந்தூர் பகுதியில் உள்ள பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு எனது முந்தைய அரசால், 08.09.2005இல், 13 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள், 2007ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் துவங்கப்பட்டு 2010 மார்ச் மாதம் முடிவடைந்தது. இந்தத் திட்டத்தின் படி, 37 இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் தண்ணீர் வழங்க திட்டமிடப்பட்டாலும், தற்போது 18 இலட்சத்து 50 ஆயிரம்

லிட்டர் தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதனால், மணிகண்டம் ஒன்றியத்தில், 47 குடியிருப்புகளுக்கு மட்டும், நிர்ணயிக்கப்பட்ட அளவான, நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு, 40 லிட்டர் வீதம், முழுமையான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 99 குடியிருப்புகளில், 20 குடியிருப்புகளுக்கு 50 விழுக்காட்டுக்கு மேலும்; 79 குடியிருப்புகளுக்கு 20 லிட்டருக்கும் குறைவாகவே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் குறைவாக 99 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்படுவதற்கான முக்கியக் காரணம் நாளொன்றுக்கு 10 மணி நேரத்திற்கும் அதிகமாக குறைந்த மின் அழுத்தம்–Low Voltage–இருப்பதால்தான். எனவே, வடுகப்புதூரில் அமைந்துள்ள தரைமட்டத் தொட்டியில் இருந்து, நிர்ணயித்த அளவு குடிநீர் இந்தப் பகுதிகளுக்கு வழங்க இயலாமல் உள்ளது. இதனைச் சரி செய்து, காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கும் விதமாக, பகிர்மான மின் ஆக்கி–Distribution Transformer ஒன்றை அமைத்திட நான் ஆணையிட்டு உள்ளேன். இந்தப் புதிய Distribution Transformer, 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். மின்சார வாரியத்தால் இந்தப் பணி உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிக்குள் முடிக்கப்பட்டுவிடும். எதிர்வரும் சுதந்திரத் திருநாளான ஆகஸ்ட் 15ஆம் தேதி முதல் மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள 99 குடியிருப்புகளுக்கும், நிர்ணயிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு, நாளொன்றுக்கு, 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. தடுப்பணை கட்டும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமம் மற்றும் நகர மக்களுக்குத் தங்குதடையின்றி, பாதுகாப்பான குடிநீர் வழங்க இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. புதிய குடிநீர்த் திட்டங்கள் மட்டுமின்றி, செயல்பாடு குறைந்த பழைய திட்டங்களைச் சீர்படுத்தவும், எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திருச்சிராப்பள்ளி மாநகரக் குடிநீர்த் திட்டம் மற்றும் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கான குடிநீர்த் திட்டம் ஆகிய குடிநீர்த் திட்டங்களுக்கு, காவிரி ஆற்றுப் படுகையில் இருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் தண்ணீர் எடுக்கப்படுகிறது. கோடை மற்றும் வறண்ட காலங்களில் நிலத்தடி

நீர் மட்டம் குறைவதால், காவிரி ஆற்றுப் படுகையிலிருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் வழங்கப்படும் குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. மேலும், காவிரிப் படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, இந்தப் பகுதிகளில் குடிநீர் மற்றும் விவசாயம் ஆகியவற்றிற்குப் பிரச்சினை ஏற்படுகிறது. மழைக் காலங்களில் பெறப்படும் நீர் மற்றும் மேட்டூர் அணையிலிருந்து உபரியாக விடப்படும் நீர்வரத்தைத் தடுத்து சேமிப்பதன் மூலம், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருச்சிராப்பள்ளி மாநகரக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றிற்குத் தேவையான குடிநீர் வருடம் முழுவதும் கிடைக்க வழிவகை ஏற்படும். அதேபோன்று, காவிரிப் படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில், நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதால் அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயரவும்; நீரின் தன்மை மேம்படவும் வழிவகை ஏற்படும். இவற்றைக் கருத்தில் கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசம்பேட்டை கிராமம், முத்தரசநல்லூர் அருகே, காவிரி ஆற்றின் குறுக்கே, 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை ஒன்று கட்டப்படும். இதற்கான அடிக்கல்லை இன்று நான் நாட்டியுள்ளேன்.

8. பள்ளிகள் தரம் உயர்த்துதல்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியருக்கும், அவர்கள் இருப்பிடத்திற்கு அருகிலேயே, தரமான கல்வி வழங்கப்பட பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும் என்பது இவ்வரசின் கொள்கையாகும். ஸ்ரீரங்கம் பகுதிக்குட்பட்ட பல பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் என எனக்குக் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில், மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கே.பெரியப்பட்டி, காட்டுப்பட்டி; அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஸ்ரீரங்கம் தேவி நகராட்சித் தொடக்கப் பள்ளி; மேலகொண்டையம் பேட்டை நேருஜி நினைவுத் துவக்கப் பள்ளி ஆகிய நான்கு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக இந்த ஆண்டு தரம் உயர்த்தப்படும்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முத்தரசநல்லூர், சீராத்தோப்பு, உத்தமர்சீலி, பெட்டவாய்த்தலை, தேவஸ்தானம்

ஆகிய இடங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக, இந்த ஆண்டு, தரம் உயர்த்தப்படும். மணிகண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரியநாயகி சத்திரம், பெரியஆலம்பட்டி, தாயனூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். ஸ்ரீரங்கம் தொகுதியில் உள்ள மேலூர் அய்யனார், திருவானைக்காவல் ஆகிய இடங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும். அதேபோன்று, மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொப்பம்பட்டி மற்றும் சமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

மணிகண்டம் ஒன்றியம், பூங்குடி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும். இவ்வாறு, 17 பள்ளிகள் தரம் உயர்த்தப்படுவதால், சுமார் 2,000 மாணவ, மாணவியர் பயன் அடைவார்கள். பள்ளிகள் தரம் உயர்த்தப்படுவதால், 104 ஆசிரியர்கள் புதியதாக நியமனம் செய்யப்படுவார்கள். இவ்வாறு தரம் உயர்த்தப்படுவதற்கு, இக்கல்வி ஆண்டில், அரசுக்கு, 10 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

9. சாலைகள்—பாலங்கள்

i) சோமரசம்பேட்டை முதல் கோப்புப் பாலம் வரை உள்ள பகுதி, திருச்சி—குழுமணி—ஜீயர்புரம் சாலையில், கி.மீ 5/4 முதல் 6/8 வரை 1.4 கி.மீ. இடைவழித் தடமாக உள்ள சாலை, இருவழித் தடமாக அகலப்படுத்தி கரையில் தடுப்புச்சுவர் கட்டப்படும். 1 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

ii) மேலும், 6/8 முதல் 11/4, 4.6 கி.மீ வரை, ஒருவழித் தடமாக உள்ள இந்தச் சாலை இடைவழித் தடமாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்யப்படும். 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

iii) மணப்பாறை—குளித்தலை சாலையில், கி.மீ.4/6இல் பிரிந்து, சென்னை—திருச்சி—திண்டுக்கல் சாலையில் இணையும் சாலை, மரவனூர் முதல் கொட்டப்பட்டி செல்லும் சாலை ஆகும். இந்தச் சாலையில் காட்டாற்றின் குறுக்கே இடையப்பட்டி அருகே தரைமட்டப் பாலம் ஒன்று உள்ளது. இந்த இடத்தில்

மழைக் காலங்களில் இந்தச் சாலையைப் பயன்படுத்த சிறு பாலம் கட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. 50 இலட்சம் ரூபாய் செலவில் இந்த சிறு பாலப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும், ஊராட்சித் துறையின் மூலம், 21 கோடியே 53 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், பின்வரும் பாலங்கள் கட்டப்படும். அதற்கான அடிக்கற்களை நான் இன்று நாட்டியுள்ளேன்.

மணிகண்டம் ஒன்றியம், நாச்சிக்குறிச்சி நாடார் சத்திரம் சாலை, நடுத்தெருவில், 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலம்;

திருச்சி விராலிமலை, மதுரை சாலையிலிருந்து மாத்தூர் வரை செல்லும் சாலையில், 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாலம்;

மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், தேசிய நெடுஞ்சாலை 45 முதல் கண்ணுடையான்பட்டி செல்லும் சாலையில், 3 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், தேசிய நெடுஞ்சாலை முதல் சித்தா நத்தம் செல்லும் சாலையில், 10 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணப்பாறை ஒன்றியம் சமுத்திரம் ஊராட்சி நான்கு நகர் அருகே, 5 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், காந்திபுரம், பெட்டவாய்த்தலையிலிருந்து எல்லைக் கரைக்கு, உய்யகொண்டான் வாய்க்கால் இடத்தில், 40 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், தேசிய நெடுஞ்சாலை முதல் சமுத்திரம் செல்லும் சாலையில், 5 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், பேரூர்—மேக்குடி சாலையில், 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் இணைப்புப் பாலம் ;

அந்தநல்லூர் ஒன்றியம், புலிவலம் அய்யலாப்பேட்டை, உய்யகொண்டான் வாய்க்காலில் 4 கோடி ரூபாய் செலவில் பாலம்;

மணிகண்டம் ஒன்றியம் ஆவூர்–துறைக்குடி ஆவூரான் ஆற்றில், 90 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் நாச்சிக்குறிச்சி ஊராட்சியில் இனியனூர் செல்லும் சாலையில், உய்ய கொண்டான் வாய்க்காலின் குறுக்கே 80 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் அல்லித்துறை– தோகைமலை சாலை முதல் அரியாவூர் செல்லும் சாலையில் 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் ஆலம்பட்டிபுதூர் மேலூர் சாலையில், அரியாற்றின்குறுக்கே 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் அல்லித்துறை சாலையில் அரியாற்றின் குறுக்கே 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

மணப்பாறை ஊராட்சி ஒன்றியம் தேசிய நெடுஞ்சாலை முதல் கத்திக்காரன்பட்டி சின்னசமுத்திரம் செல்லும் சாலையில் 32 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் பாலம்;

மேலும், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் கடலூர்– மருதாடக்குறிச்சி சாலையில் 2 கோடி ரூபாய் செலவில் பாலம் ஆகியவற்றிற்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

10. பேருந்து வசதி

ஸ்ரீரங்கம் பகுதி, அந்தநல்லூர் ஒன்றியம், மணிகண்டம் ஒன்றியம், மணப்பாறை ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பேருந்து வசதிகள் கேட்டு, இங்குள்ள மக்கள் எனக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1. பெட்டவாய்த்தலையிலிருந்து சென்னைக்குப் பேருந்து வசதி ஏற்படுத்தும் விதமாக, திருச்சி–சென்னை வழித்தடம், பெட்டவாய்த்தலை வரை தட நீட்டிப்பு செய்யப்படும்.
2. மத்தியப் பேருந்து நிலையம், மணிகண்டம் வழியாக ஸ்ரீரங்கத்திலிருந்து, சூரக்குடிப்பட்டிக்கு புதிய வழித்தடம் மூலம் பேருந்து இயக்கப்படும்.

3. சோமரசம்பேட்டை, அல்லித்துறை வழியாக, சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து தாயனூருக்குக் கூடுதல் வழித்தடம் இயக்கப்படும்.

4. சோமரசம்பேட்டை, கொய்யாத்தோப்பு வழியாக, சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து, நெய்தலூர் காலனி வரை கூடுதல் வழித்தடம் இயக்கப்படும்.

5. டிவி கோவில், பொன்னுரங்கபுரம், பனையபுரம் வழியாக, சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து கல்லணை வரை;

6. டிவி கோவில், புதிய செக் போஸ்ட், பழைய செக் போஸ்ட், தாகூர் தெரு வழியாக, சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து கல்லணை வரை;

7. டிவி கோவில் வழியாக, ஸ்ரீரங்கம் முதல் கல்லணை வரை, ஒரு நகரப் பேருந்து மூலம் இயக்கப்படும்.

8. மரவனூர் முதல், திருச்சி மத்தியப் பேருந்து நிலையம் மற்றும் திருச்சி மத்தியப் பேருந்து நிலையம் முதல் மரவனூர்;

9. படுகளம் முதல் திருச்சி மத்தியப் பேருந்து நிலையம்; திருச்சி மத்தியப் பேருந்து நிலையம் முதல் படுகளம் வரை; கூடுதல் வழித்தடமாகப் பேருந்து இயக்கப்படும்.

10. மத்தியப் பேருந்து நிலையம் செங்குறிச்சி வழியாக சத்திரம் பேருந்து நிலையம், மேக்குடி வரை ;

11. தில்லை நகர், மத்தியப் பேருந்து நிலையம் வழியாக, சத்திரம் பேருந்து நிலையம் முதல் மேக்குடி வரை;

12. மத்தியப் பேருந்து நிலையம், கே.கே.நகர், முள்ளிப்பட்டி வழியாக சத்திரம் பேருந்து நிலையம், கொழுக்கட்டை குடி வரை, தட நீட்டிப்பு மூலம் பேருந்து இயக்கப்படும்.

13. தட மாற்றம் மூலம், கண்ணுடையாம்பட்டி முதல் திருச்சி மத்தியப் பேருந்து நிலையம் வரை பேருந்து இயக்கப்படும்.

அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் இந்த விழாவில் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இலவச வீட்டுமனைப் பட்டா; முதியோர் உதவித் தொகை; நலிந்தோர் நல உதவிகள்; மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு நல

உதவிகள்; சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி; திருமண உதவித் திட்டம்; இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல்; இலவச சலவைப் பெட்டி வழங்குதல்; வேளாண்மைத் துறை சார்பில், ரோட்டோவேட்டர்,

கைத் தெளிப்பான் வழங்குதல் ஆகிய நலத்திட்ட உதவிகள் இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. ஸ்ரீரங்கம் தொகுதியில் உள்ள 430 பயனாளிகளுக்கு, 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில், இந்த நலத் திட்ட உதவிகள் இன்று வழங்கப்படும். அதன் அடையாளமாக, 25 பயனாளிகளுக்கு இந்த மேடையில் நலத் திட்ட உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு, அமைச்சர் பெருமக்கள், அரசு அதிகாரிகள், இந்த விழாப் பந்தலிலேயே நலத் திட்ட உதவிகளை வழங்குவார்கள்.

உங்களின் அன்போடும், ஆதரவோடும், கல்விச் சீர்திருத்தம், பொருளாதாரச் சீர்திருத்தம், சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றை ஏற்படுத்தி, சமதர்மச் சமுதாயம் அமைக்கவும்; உங்களுடைய குறைகளைத் தீர்க்கவும் பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழ்நாட்டு மக்களின், நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, 'தமிழ்நாட்டிற்கு இணை தமிழ்நாடு' என்று அனைவரும் பாராட்டும் வகையில், இந்த மாநிலத்தின் பெருமையையும், சிறப்பையும் மேன்மைப்படுத்துவேன் என்று தெரிவித்து, மீண்டும் விரைவில் சந்திப்போம் என்ற வார்த்தைகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
***28.06.2011** அன்று தொழுநோயாளிகளுக்கு நியாய விலைக் கடையை காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்து ஆற்றிய உரை.*

தொழுநோயாளிகளுக்கு நியாயவிலைக்கடை

"இன்று நியாய விலைக்கடையைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சிறப்பு நியாயவிலைக் கடையினால் பயன்பெறவுள்ள பயனாளிகள் அனைவரும் இதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தக் கடை சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற என் விருப்பத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பெரியோர்களே, தாய்மார்களே, இந்தக் கடையினால் நீங்கள் நல்ல முறையில் பயனடைய வேண்டும். இந்த நியாயவிலைக் கடையின் செயல்பாட்டில் ஏதாவது குறைகள் இருப்பின் நீங்கள் உடனடியாக உங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்"

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
சென்னையில் 05.07.2011 அன்று நடைபெற்ற
இந்தியத் தொழில் கூட்டமைப்பின் தேசியக் குழுக் கூட்டத்தில்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

வளமான பாதையை நோக்கி தமிழகம்!

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இன்னும் 50 நாட்கள் கூட ஆகவில்லை. இருந்த போதிலும் தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள் தொழில் முனைவோருக்கு முக்கிய இடத்தைத் தந்துள்ளது.

வறுமையை ஒழிப்பதில் பிரேசில், சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் பொருளாதார ரீதியில் பெரிய சக்தியாக உருவாகக்கூடிய நிலைமை உருவாகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆனால், நம் நாட்டில் வறுமை முழுமையாக ஒழிக்கப்படவில்லை.

2001ஆம் ஆண்டு நான் ஆட்சிக்கு வந்த போது, எனது கனவான வறுமையை ஒழிப்பதற்கான 15 அம்சத்திட்டம் ஒன்றை கொண்டு வந்தேன். இதற்கான நடவடிக்கைகளை எடுத்தேன். இதன் விளைவாக வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தது.

2005–2006ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி நடந்த எம்.பி.ஐ. ஆய்வில் வறுமை ஒழிப்புத் திட்டத்தில் தமிழ்நாடு பெருமளவில் முன்னேற்றம் அடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா, குஜராத், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் வறுமை குறைந்துள்ளதாக அந்தப் புள்ளி விவரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை முழுமையாக ஒழிப்பதே எனது லட்சியம்.

2015ஆம் ஆண்டுக்குள் இதனைச் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இதற்குப் பொருளாதார வளர்ச்சியும், சிறந்த நிருவாகமும் அவசியம்.

தொழில்துறை பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் பெரும் சவால்களைச் சந்தித்து வருகிறது என்பதை எனது அரசு அறியும். எனவே, அந்தச் சவால்களை எல்லாம் முறியடித்து தொழில் அதிபர்களுக்கு அனைத்து உதவிகளையும் நாங்கள் செய்வோம்.

மின் பற்றாக்குறை காரணமாக தொழில் அதிபர்கள் மத்தியில் கவலை உள்ளது. இந்த நேரத்தில் நான், உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வது இதுதான். மின் பற்றாக்குறையைப் போக்க, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எனவே, விரைவில் மின் பற்றாக்குறை போக்கப்படும். மின் உற்பத்தியில் தமிழகம் மிகை மின் மாநிலமாக விரைவில் மாறும்.

இந்தியாவிலேயே தமிழகத்தைச் சமூகப் பொருளாதார வளர்ச்சியடைந்த முதல் மாநிலமாக்குவதே எங்கள் அரசின் நோக்கம். அதனை நிச்சயம் செய்து காட்டுவோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இங்கு மனித வளம் ஏராளமாக உள்ளது. எனவே, நவீன தொழிற்சாலைகளின் தேவைகளை நிவர்த்தி செய்ய போதுமான தொழில் வல்லுநர்கள் இருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் 1 இலட்சத்து 92 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள் வருகிறார்கள். இதற்குச் சமமாக பாலிடெக்னிக் மாணவர்களும் வெளிவருகிறார்கள். தமிழகம் தொழில் வல்லுநர்களைக் கொண்ட மாநிலமாக இருக்கிறது.

மோட்டார் வாகனங்கள் சம்பந்தப்பட்ட தொழில்களில் உலகிலேயே சென்னையை முதன்மை மையமாக ஏற்படுத்துவோம். மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்களைத் தயாரிப்பதிலும், ஏற்றுமதி செய்வதிலும் சென்னை முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. தொழில் துறையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை எல்லாம் ஏற்படுத்தி உலகிலேயே சென்னையை ஆட்டோமொபைல் உற்பத்தியில் முதல் மாநிலமாக்குவதுதான் எனது லட்சியம்.

எனது அரசு தொலைநோக்குத் திட்டம் 2025 என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது. இதன் மூலம் உங்களது எதிர்பார்ப்புகள் பூர்த்தி அடையும். இந்தத் திட்டத்தின் மூலம் மின்சாரம், துறைமுகம், கப்பல் கட்டும் தொழில் மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு அதிக முதலீடுகளைப் பெறுவதற்கான யுக்திகளை எனது அரசு மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டில் தொழில் அதிபர்கள் அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். தொழில் செய்து வளம் பெற வேண்டும் என்பது எல்லோரது விருப்பம். தமிழ்நாட்டில் முதலீடு செய்தால் நீங்கள் மேலும் வளம் பெறலாம். தமிழகத்தை வளமான பாதைக்குக் கொண்டு செல்ல அனைத்து ஒத்துழைப்புகளும் அரசு தரும்.

கழகம் ஏற்கெனவே 2 முறை ஆட்சியில் இருந்துள்ளது. அதாவது 1991, 2001ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தோம். அப்போது தொழில் துறை முன்னேற்றத்திற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று கண்டறிந்து திட்டங்களை வகுத்துக் கொடுத்தோம். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவில் பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கொண்டு வர முடிந்தது.

உதாரணத்திற்கு 1992ஆம் ஆண்டு எங்கள் அரசு கொண்டு வந்த தொழில் கொள்கையின் அடிப்படையில் ஆட்டோமொபைல் தொழிலில் ஒரு புரட்சி ஏற்பட்டது. ஃபோர்ட்,

ஹூண்டாய், பிஎம்டபிள்யூ போன்ற கார் தொழிற்சாலைகள் இங்கு வர ஆரம்பித்தன. இதன் காரணமாக ஏராளமான கார் தொழில் சம்பந்தப்பட்ட துணைத்தொழில்களும் ஏற்பட்டன. ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது. மீண்டும் கழக அரசு 2003ஆம் ஆண்டு தீர்க்க தரிசனத்துடன் தொழில் கொள்கை ஒன்றைப் பிரகடனப்படுத்தியது. அதன் அடிப்படையில் மின்னணுத் (எலக்ட்ரானிக்ஸ்) துறையில் ஒரு புரட்சி ஏற்பட அந்தக் கொள்கை வழி வகுத்தது.

நோக்கியா, பாக்ஸ்கான், பிளக்ஸ்ட்ரானிக் போன்ற எலக்ட்ரானிக் தொழில்கள் தமிழகத்தில் வந்து புரட்சியை ஏற்படுத்தின. நோக்கியா நிறுவனம் சென்னை அருகே செல்போன் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவியது. உலகிலேயே அதிக செல்போன் தயாரிக்கும் தொழிற்சாலையான நோக்கியா தொழிற்சாலை சென்னை அருகே அமைக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை நகரம் ஆட்டோமொபைல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் தயாரிப்பதில் இந்தியாவிலேயே முதலிடமாகத் திகழ்ந்தது.

நான் முதலமைச்சராக இருந்த போது 1992 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்ட தொழில் கொள்கை இந்த வெற்றிக்கு அடையாளமாக உள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தை கவனித்து வரும் மையம் (சிஎம்ஐஇ) நடத்திய ஒரு ஆய்வில் 2001–2003 ஆண்டுகளில் உற்பத்தித் துறையில் அதிக முதலீட்டை ஈர்க்கும் முதல் மாநிலமாகத் தமிழகம் இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு வரை இந்த நிலை இருந்தது. அதன்பின் சமீபகாலமாக முதலீட்டைப் பெறுவதில் கவனம் செலுத்தவில்லை. முதலீடு பெறுவதில் சற்று பின்தங்கிய மாநிலமாகி விட்டது. மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தபின் தொழில் துறையை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அனைத்து நடவடிக்கைகளையும் புதிய உத்வேகத்துடன் துவங்கி இருக்கிறோம்.

தேசியத் திட்டக்குழு 12–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை (2012–2017) வகுத்து வருகிறது. 11–ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சராசரி வளர்ச்சி விகிதம் 8.2 சதவீதமாக இருந்தது. இப்போது வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒட்டுமொத்த

வளர்ச்சி விகிதம் 9 சதவீதம் முதல் 9.5 சதவீதம் வரை இருக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 12ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 11 சதவீதம் முதல் 12 சதவீதம் வரை உற்பத்தித் துறையில் வளர்ச்சி இருக்க வேண்டும். எனவே, எங்களது அரசு இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது. மீண்டும் எல்லோரும் விரும்பும் வகையில் தொழில் துறையின் முதலீட்டை ஈர்ப்பதில் முதல் மாநிலமாகத் தமிழகம் திகழும்.

லார்ட் கேய்ன்ஸ் என்ற புகழ் பெற்ற பொருளாதார நிபுணர், “முதலீடு என்பது நம்பிக்கையின் அடிப்படையில் இருக்க வேண்டும்”, என்று கூறியிருக்கிறார். எங்கள் ஆட்சி மீண்டும் அமைந்தபின் தொழில் துறையில் புதிய ஆர்வத்தைப் பார்க்க முடிகிறது. இது உற்சாகப்படுத்தும் அறிகுறியாக உள்ளது. தமிழ்நாட்டின் மீது நீங்கள் நம்பிக்கை வையுங்கள். தொழில் முதலீட்டைச் செய்யுங்கள் என்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

* * *

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
புதுடில்லியில் 06.07.2011 அன்று நடைபெற்ற
மத்திய திட்டக் குழுவின் கூட்டத்தில் ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.*

மத்திய நிதிஉதவி அளவை அதிகரிக்க வேண்டும்

மூன்றாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்றதற்கு என்னை வாழ்த்தி, வரவேற்றுப் பேசிய டாக்டர் மாண்டேக்சிங் அலுவாலியா அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தின் 11ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டான 2011–2012ஆம் ஆண்டிற்குரிய தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்தை இறுதி செய்வது தொடர்பாக இன்று இங்கு நாம் விவாதிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன். இன்று நம்முடைய

கலந்துரையாடலில் நான் கலந்து கொள்வது ஒத்த பரிவுணர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இம்மாநிலத்தின் தலைமை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த எனக்கு மத்திய திட்டக் குழுவின் மரியாதைக்குரிய உறுப்பினர்களைச் சந்தித்து இத்தகைய குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இன்று போலவே, அன்றும், நம் தமிழகம் நிதிவகையில் நலிவுற்றிருந்தது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனத்திற்குச் செலுத்தாமல் நிலுவையாக வைக்கப்பட்டுள்ள ரூ.10 கோடிக்கும் மேற்பட்ட கடன் தொகையோடு கூட, இன்று நம் தமிழ்நாடு மாநிலத்தின் நிலுவைக்கடன் தொகை ரூ.1,01,541 கோடியாக உயர்ந்துள்ளது. மூன்று சதவீதத்திற்கும் குறைவான வருமானப் பற்றாக்குறை மற்றும் நிதிப்பற்றாக்குறை இல்லாத நிலையை எய்தவேண்டும் என்ற நம் இலக்கு எய்தப்பெறவில்லை.

புதிய அரசின் முக்கியக் கொள்கை

வேளாண்மை, தொழில், மற்றும் அடிப்படைக் கட்டமைப்புத் துறைகளில் கணிசமான முதலீடு செய்வதன் வாயிலாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, தெரிந்தெடுக்கப்பட்ட நம் புதிய அரசின் முக்கியக் கொள்கை ஆகும். இத்தகைய நடவடிக்கைகள், இதற்கு முன்னர் நான் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழ்நாடு எவ்வாறு தொழில் துறை முதலீடுகளை ஈர்த்து ஓர் உயரிய நிலைக்கு வந்ததோ, அதுபோலவே இந்நடவடிக்கைகளும், தமிழ்நாட்டின் முதலீடுகளை உயர்த்தும் என நான் உறுதி கூறுகிறேன். முக்கியத் துறைகளை உத்வேகத்துடன் செயல்படுத்தவும், நல்ல ஆளுமைத் திறனை மீண்டும் கொண்டு வரவும், இத்தகைய முதலீடுகள் உதவுவதோடு, 2012–2017ஆம் ஆண்டு வரையிலான 12ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் வாயிலாக, தமிழ்நாடு வெற்றிகரமாக முன்னேற ஓர் அடிப்படை அம்சமாகத் திகழும்.

இதற்கு முன்னர் நான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் என்னுடைய அரசின் செயல்பாடுகளையும் அதன் வாயிலாகத் தமிழ்நாட்டின் நிதி நிலையை உயர்த்தியதில் நாங்கள் எய்திய சாதனையையும் நீங்கள் (டாக்டர் அலுவாலியா) பாராட்டுவீர்கள் என்பதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை. மத்தியத் திட்டக் குழுவின் முனைப்பான, நிலையான ஆதரவை நாங்கள் தற்போது

எதிர்பார்ப்பதுடன் இனிவரும் காலத்தில் தமிழ்நாட்டின் வாய்ப்பு வளங்கள் செவ்வனே உயர மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என நான் விழைகிறேன்.

பதினோராம் திட்டக் காலத்தின் கடைசி நான்கு ஆண்டுகளில் வேளாண் துறையில் ஓர் நிலையற்ற வளர்ச்சியும், தயாரிப்புத் தொழிலில் ஒரு மெத்தனமும் காணப்பட்டது. அதிவிரைவாக வளர்ந்து வந்த சேவைத் துறைகள் மட்டுமே 2010–2011ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 11.30 சதவீத ஒட்டுமொத்த வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. திட்டக் காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் வேளாண் துறை பாதகமான வளர்ச்சியையே காட்டியது. இதனை அடுத்துவந்த ஆண்டுகளிலும் செய்யப்பட்ட வசூல் 4 சதவீதம் என்று இலக்கிடப்பட்ட குறைந்த அளவைக் கூட எட்ட இயலவில்லை. மேலும், வேளாண்மை மற்றும் தொழில் துறைகளின் மோசமான செயல்பாடுகளினால் மிகக் குறைந்த அளவில் வேலைவாய்ப்பு இருந்தது.

உணவுப் பொருள் விலை உயர்வால் மக்களின் நலன் பாதிக்கப்பட்டது

வேளாண்மைத் துறையில், 2006–2007ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிக உற்பத்தி தொடர்ந்து நீடிக்கவில்லை. ஒட்டுமொத்த மழைப்பொழிவு இயல்பாக இருந்தபோதிலும், இயல்புக்கு மாறுபட்ட தட்பவெப்ப நிலையின் காரணமாக, 2007–2008 மற்றும் 2008–2009 ஆகிய ஆண்டுகளில் உற்பத்தி குறைந்தது. தொழில்துறையில் வளர்ச்சி குறைந்ததால் மாநிலப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செயலாக்கத் திறனும் குறைந்தது. 2008–2009ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார மந்தநிலை விரைவாக வளர்ச்சி அடைந்தது. இந்தக் கால அளவில் பொருளாதார மந்தநிலை உச்சத்தை அடைந்தது. இது தொழில்துறையில் பாதகமான விளைவுக்கு வழிவகுத்தது. அடுத்த ஆண்டில் தொழில்துறை புத்துயிர் பெற்றது. அதன் விளைவாக மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு 8.96 சதவீதமாக உயர்ந்தது. 2010–2011ஆம் ஆண்டில் தொழில்துறையில் வளர்ச்சி குறைந்தது. ஆனால், சேவைத் துறையில் அதிக வளர்ச்சி ஏற்பட்டது. இது, மாநிலத்தின் பொருளாதாரத்தின் 11.3 சதவீத அளவுக்கு ஒட்டுமொத்த

வளர்ச்சிக்கு வழிவகுத்தது. பலவகையான உதவித்தொகைகளும் சமூகநலப் பயன்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பும் இந்தக் கால அளவில் குறிப்பிட்ட நிலையை எய்தின. இந்தக் கால அளவில் உணவுப்பொருட்களின் விலை உயர்வினால் மக்களின் நலன் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 2010–2011ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த பயிர்ச் சாகுபடிப் பரப்பு 20.3 சதவீதம் விரிவடையும் என்றும் உணவுப் பொருட்களின் உற்பத்தி 13.6 சதவீதம் உயரும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், இந்த நிலை ஏற்பட்டது. நுகர்வோர் உணவுப் பொருட்களுக்கு அதிக விலை கொடுத்தனர். உற்பத்தி குறைந்ததால், வேலைவாய்ப்புகளும் குறைந்தன.

மாசுமருவற்ற நோக்கம்

இவற்றின் விளைவாக, 11ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில், வேளாண்மை, எரிசக்தி, போக்குவரத்துத் துறை ஆகியவற்றுக்கான நிதியொதுக்கத்தின் பங்குகள் கடுமையாகக் குறைந்ததற்கு இவையே காரணங்கள் என்று தெரிவிக்கலாம். எனவே, என்னுடைய அரசு, முதலீட்டாளர்களின் கவனத்தை தமிழ்நாட்டின்பால் மீண்டும் ஈர்ப்பதற்கும், கிராமம் மற்றும் நகரத்தைச் சேர்ந்த ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்கும், மேன்மைக்கும் அடிப்படையாக இருக்கிற வசதிகளை மேம்படுத்துவதற்கும் இயலும் வகையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதி குறித்த உறுதிமொழிகளை அளிப்பதற்காக, வேளாண்மைத் துறையை மீண்டும் வலுப்படுத்தும் வகையில் இந்தக் குறுகிய காலத்தில், இந்தத் துறைகளில் கணிசமாக முதலீடு செய்யத் திட்டம் வகுத்துள்ளது. முக்கியமான அடிப்படைக் கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்காகவும், தமிழ்நாட்டை நாட்டிலேயே முன்னணி மாநிலமாக மேம்படுத்துகிற மாசுமருவற்ற நோக்கத்தை எய்தும் வகையில் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவும் வளர்ச்சிப் பாதையில் ஏற்படுகிற தடைகளைக் கண்டறிந்து அகற்றுவதற்காகவும் தமிழ்நாட்டுக்கான 2025ஆம் ஆண்டு தொலைநோக்குப் பார்வை ஆவணத்தையும் நான் தயாரிக்கத் தொடங்கியுள்ளேன்.

இந்த மதிப்பீட்டிற்கிணங்க, மாநிலம் முதன்மைத் துறைக்கு முன்னுரிமை அளித்துள்ளது. இது மாநிலத்திலுள்ள அனைத்துத் தொழிலாளர்களில் 63 சதவீதமாக அமைகிற பெரும்பாலான ஊரகத்

தொழிலாளர்களை ஈர்த்துக் கொண்டுள்ளது. வேளாண்மையில் நெல், பயறு வகைகள், கரும்பு மற்றும் பருத்திக்கான குறிப்பிட்ட பயிர் உத்தி ஒன்றைச் செயல்படுத்தவும் அதிக மதிப்புள்ள பயிர்களை சாகுபடி செய்வதில் ஊக்க உதவித்தொகை வாரியான மாற்றங்களைக் கொண்டுவரவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இதற்காக அரிதான நீரை சேமிப்பதற்காக நுண் பாசனம், துல்லியப் பண்ணை முறை, அரிசி தீவிர சாகுபடி ஏற்பாட்டு முறை போன்ற தொழில்நுட்ப உத்திகளுக்கு ஆதரவாக இருக்கும் பொருட்டு, அரிதான நீரை சேமிப்பதற்காகவும், துல்லியப் பண்ணை எந்திரமயமாக்குதல் ஆகியவற்றுக்காகவும் நுண் பாசனத்திற்காக நமது மாநிலம், பெருமளவில் முதலீடு செய்யும். நாங்கள், தரமான இடுபொருட்கள், சேமிப்புக் கிடங்கு, குளிர்பதனச் சேமிப்பு வசதிகள், அங்காடி வசதிகள் மற்றும் வேளாண் செய்முறை தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான செம்மையான இணைப்பு வசதிகளை ஏற்படுத்தி மேம்படுத்துவோம்.

நமது நாட்டில், இயல்பான பருவமழைக்கும் குறைவான பருவமழை இருக்கும் என்று வானிலை ஆராய்ச்சித் துறை அண்மையில் முன்மதிப்பீடு செய்து அறிவுறுத்தியுள்ளது. பருவமழையின் விளங்காப் போக்கினால் ஏற்படுகிற விளைவுகளைத் தணிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். என்னுடைய அரசு, தேவைக்கும் வளங்களுக்கும் இடையேயுள்ள பொருந்தாத நிலையைச் சரி செய்வதற்காக உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தக் கருதியுள்ளது. மேலும், விலை உயர்வு அதிகமாக இருக்கும் போதெல்லாம் தெரிவு செய்யப்பட்ட உணவுப்பொருட்களை அங்காடியிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிஉதவி அளிப்பதற்காக, “விலை நிலைப்படுத்தல் நிதி” ஒன்றை நான் அமைத்துள்ளேன்.

தமிழ்நாட்டில் நிலவிவரும் கடுமையான நீர்ப் பற்றாக்குறை, வேளாண் உற்பத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பாக வளைகுடா நதிநீர் கட்டமைப்பின் தேவையை நான் கண்டறிந்தேன். காவிரி நதியை அக்கினி ஆறு, தெற்கு வெள்ளாறு, பம்பா, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு ஆற்று வடிநிலங்களுடன் இணைக்க வேண்டும் என்பதை

முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். ஜூன் 13ஆம் நாள் மாண்புமிகு பிரதமர் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ரூ.4,000 கோடி அளவில் மதிப்பீடு செய்யப்பட்ட இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஆதரவைக் கோரியுள்ளேன்.

நவீன எரிசக்தி உற்பத்தியில் தமிழகம் முதன்மை வகிக்கிறது

உற்பத்திப் பிரிவில், வளர்ச்சிக்கென திட்டமிட்ட வேகத்தையும் சேவைகள் பிரிவில் வலுவான ஈடுகொடுக்கும் வளர்ச்சியையும் இந்த மாநிலம் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மின் பற்றாக்குறை தொழில் வளர்ச்சியை மிகவும் பாதித்துள்ளதால் கடந்த 5 ஆண்டுகளாக முதலீட்டாளர்கள் தமிழகத்தைப் புறக்கணித்து வருகின்றனர். அரசுக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களை உடனடியாகச் சீரமைப்பதற்கும் காற்றாலை மின் உற்பத்தியைப் பெருமளவில் பெருக்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறேன். குழாய்கள் அமைத்து அதன் மூலம் திட்டத்தை விரைவு படுத்துவதற்கும், செம்மையான மற்றும் கடுமையான கண்காணிப்புடன் கூடிய விநியோக முறையும் தேவைகளின் அதிகரிப்பை ஊக்குவிக்கவும், தொழிலகங்களுக்குத் தடையின்றி மின்சாரம் வழங்கவும், அனைத்து நுகர்வோர் பிரிவினருக்கும் தரமான மின் விநியோகம் செய்யவும், சரியான முறையைக் கடைப்பிடிக்கிறேன். தமிழ்நாடு எப்பொழுதுமே நவீன எரிசக்தி உற்பத்தியில் முதன்மை வகிக்கிறது. நவீன எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான கொள்கை ஒன்றை உருவாக்க விரும்புகிறோம். 45,000 கோடி ரூபாய் செலவில் 3,000 மெகாவாட் திறன் கொண்ட மின்சக்தியை உற்பத்தி செய்ய பத்து எரிசக்திப் பூங்காக்களை உருவாக்குவது இக்கொள்கையின் ஒரு பகுதியாகும். இது தொடர்பாக, தேசிய தூய்மை மின்சக்தி நிதியின் கீழ் உதவியைக் கோரியுள்ளேன்.

செவ்விய முறையில் திட்டமிடல், மின்சாரம், சாலைகள், நகர்ப்புர வசதிகள், இருமடங்கு ஆதரவுக் கொள்கையுடனான வீட்டுவசதிகள் ஆகியவற்றின் உள் கட்டமைப்பு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை பொருளாதார மேம்பாட்டிற்கு மிக முக்கியமானவையாகும்.

நகரங்களைச் சுற்றிலும், தொழிலகங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவற்றைப் பரவலாக்க

வேண்டுமெனில் ஊரகப்பகுதிகளில் அதற்கான உள் கட்டமைப்பு வசதி இருப்பது தேவையானதாகும். எனது அரசு, நகர்ப்புர மேம்பாட்டுக் குழு குறிக்கோள் ஒன்றை, அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றிற்காக உருவாக்கி நகர்ப்புரப் பகுதிகளுக்குச் சமமாக ஊரகப் பகுதிகளிலும் வசதிகளை உருவாக்கி வருகிறது. நாங்கள் சென்னையை உலகத்தரம் வாய்ந்த பெருநகரமாக உருவாக்க விரும்புகிறோம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, மாநகரத்தில் தரமான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவது, கடுமையாகப் பெருகிவரும் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க ரூ.16,650 கோடி மதிப்பீட்டு செலவில், மாநகர விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தையும், பெருநகர் இரயில் திட்டத்தையும், மோனோ இரயில் திட்டத்தையும் இணைத்து சென்னை வாழ் அனைத்து மக்களின் வசதிக்காக மெட்ரோ ரயில் திட்டத்தை அறிமுகப்படுத்த எனது அரசு முடிவு செய்கிறது. நடைமுறையில் இது பொதுமக்களின் போக்குவரத்து வசதியை 27 சதவீதத்திலிருந்து 46 சதவீதமாக அதிகரிக்கச் செய்யும். பெருமளவில் முதலீடு தேவைப்படும் இத்திட்டங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை பங்களிப்புடன் செயல்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. மத்திய அரசு இம் முயற்சிக்கான நிதி உதவியை அளிக்கும் என நம்புகிறோம்.

இத்தகைய முயற்சிகளுக்கு அடிப்படையாக, நம்முடைய மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன் வளர்ப்பினை நாம் கருதிப் பார்க்கிறோம். இந்தச் செயல் நோக்கத்திற்காக, நம்முடைய பல்கலைக்கழகங்களை உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களாக மாற்றுவதை நான் குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். நம்முடைய கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பானது, திறன் வளர்ப்பில் கவனம் செலுத்துவதுடன் தொழிற்சாலை மற்றும் பணிகள் உருவாக்கிய தேவையினை நிறை செய்வதற்கு, படித்த வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பினை மேம்படுத்துவதற்கும் கவனம் செலுத்தும். மடிக்கணினிகளை 68 இலட்சம் மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஐந்தாண்டுகளுக்கு ரூ.10,200 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்ட போதிலும்கூட, இதன் வாயிலாகக் கணினிப் பயன்பாட்டை மேம்படுத்துவது இத்தகைய கொள்கை நோக்கங்களை எய்துவதற்கு வழிவகுக்கும்

என நாம் கருதிப் பார்க்கிறோம். எனவே, தேசியக் கல்வி இயக்கத்தின் கீழ் ஆதரவு பெறுவதற்காக, முக்கியமான திட்டமாக இதனைச் சேர்த்து பரிந்துரைக்குமாறு மத்தியத் திட்டக் குழுவிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சமூகநலத் துறையில், மாநில அரசானது வயது முதிர்ந்தோர் மற்றும் ஏனைய வகையினைச் சேர்ந்தவர்களுக்கான உதவித் தொகையினை மாதம் ஒன்றுக்கு 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியுள்ளது. இதற்கு, தற்போது மத்திய அரசு 200 ரூபாய் மட்டுமே நிதியுதவி அளித்து வருகிறது. மிக முக்கியமாக, மூன்று வகையினருக்கு மட்டுமே மத்திய அரசு ஆதரவளித்து வருகிறது. உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஏழைகள், முதிர்கன்னிகளுக்கு என ஏனைய ஐந்து வகையினருக்குத் தொடர்ந்து ஆதரவு மறுக்கப்பட்டு வருகிறது. இதில் தமிழ்நாட்டின் அனுபவத்தினைக் கருதிப் பார்த்து உதவித் தொகையினை உயர்த்தி ஏனைய வகையினர்களுக்கும் அதனை நீட்டிப்பதற்குப் பரிந்துரைக்குமாறு நாங்கள் திட்டக் குழுவிடம் கேட்டுக் கொள்கிறோம்.

மாநிலத்தில், சுகாதாரத் துறையில் அதிவிரைவில் வளர்ச்சிகள் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இங்குச் செயலிலுள்ள தேசிய ஊரக சுகாதார இயக்கமும், உலக வங்கி நிதியுதவி பெற்ற சுகாதார ஏற்பாட்டு முறை திட்டப்பணியும், மாநிலத்தின் பல பகுதிகளில் நோய்த்தடுப்பு மற்றும் நோய் சிகிச்சைக்கான சுகாதாரப் பணிகளுக்கு வகை செய்துள்ளன. தேசிய நகர்ப்பகுதி சுகாதார அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் போது குறிப்பிடத்தக்க இடைவெளி நிரப்பப்படும். எனினும், தீவிர சிகிச்சை தேவைப்படுகிறது. நோயாளிகளும் மூன்றாம் நிலை நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறவர்களும் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தால் அவதியுறுகின்றனர். மேலும், சிகிச்சை வழங்குவதில் முக்கியப் பங்காற்றுகின்ற மாவட்ட மருத்துவமனைகளும் உயர்தர நோய்க்குறிஅறியும் கருவி இல்லாததால் முடமாக்கப்பட்டுள்ள இத்தகைய தேவைகளை நிறைவு செய்வதற்கு, அடுத்த இரண்டாண்டுகளுக்கு 2,300 கோடி ரூபாய் தேவைப்படும் என்று நாங்கள் மதிப்பிட்டுள்ளோம்.

பசுமைத் தமிழகத்தை உருவாக்குவதன் ஒரு முயற்சியாக, இம்மாநிலம், இந்திரா வீட்டுவசதித் திட்டத்தினை விரிவாக்கம் செய்துள்ளது. இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் உள்ள 210 சதுர அடி தரைபரப்புக் கொண்டு வீடு இட நெருக்கடியுடன் போதுமானதாக இல்லை என்று நம்முடைய தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, வீடு ஒன்றுக்கு ரூ.1.80 இலட்சம் செலவில் சூரியசக்தி மின் வழங்கல் சாதனத்துடன் கூடிய 300 சதுர அடி அளவு கொண்ட வீட்டிற்கு வகை செய்வதற்காக, சூரிய சக்தியூட்டப்பட்ட பசுமை இல்லம் திட்டத்தினைத் தொடங்குவதற்கு மாநிலம் உத்தேசித்துள்ளது. இந்திரா வீட்டுவசதித் திட்ட நிதிகளுக்குத் தேவைப்படும் மத்திய அரசின் ஆண்டு கூடுதல் பங்களிப்புத் தொகை 1,125 கோடி ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் அத்தகைய ஒரு இலட்சம் வீடுகளுக்கு சூரிய சக்தியளிப்பதற்காக சுமார் 300 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் மதிப்பிடப்படுகிறது. இத்திட்டத்தின் சாதக அம்சங்களைக் கருதிப் பார்க்குமாறு நான் மத்தியத் திட்டக் குழுவிடம் கேட்டுக் கொள்கிறேன். பசுமைத் திட்டங்களைத் தொடருவதில் இந்தியாவுக்கு உள்ள நெருக்கடியையும் நான் தெரிவிக்கிறேன்.

நம் மாநிலம் ஏறக்குறைய 16 திட்டங்களுக்கு வெளி நிதியுதவியை அணுகியுள்ளது. இதற்கான மூலதனச் செலவு, ரூ.1,933.39 கோடி எனக் கருதப்பட்டுள்ளது. சாலைகள், நகர்ப்பகுதி மேம்பாடு, சுகாதாரம், காடு வளர்ப்பு, பாசனம், குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும் அதிகாரமளித்தல் மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு இத்திட்டங்கள் பெருவாரியாக முக்கியத்துவம் அளிக்கின்றன. மாநிலத்திற்குச் சொந்தமான உள்நிதி ஆதாரங்கள் முக்கியத் திட்டங்களுக்கு செலவிடப்படும். இந்த ஆண்டுத் திட்டத்திற்கு 23,000 கோடி ரூபாய் வரையிலான நிதி ஆதாரங்களை நாம் கண்டறிய வேண்டியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் நாம் எய்திய வளர்ச்சி வீதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடான, பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திற்கு இலக்கிடப்பட்ட அளவு 9 சதவீதமாக இருக்க நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் நாம் எய்தியுள்ள ஒட்டுமொத்த வளர்ச்சி வீதம் 8 லிருந்து 8.5 சதவீதம் மட்டுமே ஆகும் எனத்

தெரிவிக்கிறது. இந்த ஆண்டுத் திட்டத்திற்காக ரூ.23,000 கோடி என வள ஆதாரங்களை அடையாளம் காண வலியுறுத்த வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளில் எய்திய சாதனை வளர்ச்சியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட போக்கு, மாநில அரசானது பதினோறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் தொடர்பாக 9 சதவிகித இலக்குக்கு மாறாக, 8 முதல் 8.5 வரையில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பை அடையக் கூடும் என்று தெரிவிக்கிறது.

மத்திய நிதியுதவி அளவை அதிகரிக்க வேண்டும்

திட்டத்திற்கான முக்கிய வள ஆதாரமான இயல்பான மைய உதவி இன்று இறுதி செய்யப்படவுள்ளது. அதில் 30 சதவிகிதமானது மானியமாகும். இந்த விவாதங்கள் நிலுவையில் உள்ள நிலையில் தற்காலிகமாகக் கடந்த ஆண்டு அளவான ரூபாய் 547.52 கோடியாகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆகையால், தேசிய மத்திய நிதியுதவி NCA இன் நிலையாக உள்ளது. நீண்ட காலத்திற்குப் பின்னர் அண்மையில் குறையவும் தொடங்கியுள்ளது. எனவே, தேசிய மத்திய நிதியுதவியின் பங்களிப்புத் தொகை, கடந்த ஆண்டு நிதியொதுக்கீட்டில் 9.1 சதவிகிதம் என்ற அளவில் வெகுவாகக் குறைந்துவிட்டது. இது, மேலும் குறையும் என்று தோன்றுகிறது. தேசிய மத்திய நிதியுதவி நிலையானதாக உள்ளது. மற்றும் அதனுடைய நீண்ட கால வரலாற்றில் இது பின்னர் குறைந்து கொண்டே வருகிறது. எனினும், சேவை வரிகள் உட்பட ஏறக்குறைய அனைத்து முக்கிய வருவாய் ஆதாரங்களும் மைய அரசால் வைத்து வரப்படுகின்றன. ஆகையால் மாநில அளவில் உள்ளூர் நிர்வாக அமைப்புகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு கடன்கள் வாங்குவது அவசியமாகிறது. நிதி இடர்ப்பாடு, மேம்பாட்டுத் தேவைகளுக்காக, மாநில அரசு முதலீடு செய்வதை ஏற்கும்படி செய்கிறது. நாங்கள் திட்ட ஆணையத்தை தற்போதைய 30 சதவிகித நிலையிலிருந்து 50 சதவிகித மானியத்துடன் ஆண்டுத் திட்ட நிதியொதுக்கீட்டைக் குறைந்தது 20 சதவிகித அளவுக்கு தேசிய மத்திய நிதியுதவி அளவை அதிகரிக்கச் செய்வதற்குப் பரிந்துரை செய்யுமாறு கோரியுள்ளோம். அதன் அடிப்படையில் திட்டக்குழு தேசிய மத்திய நிதியுதவியை மாற்றியமைப்பதற்கும், அதற்கிணங்க மாநிலங்களின் நிதி ஆதாரங்களின் நிலையை அதிகரிக்கவும் மற்றும் தலைசிறந்த

திட்டங்களை மேற்கொள்ளவும் நாங்கள் திட்டக் குழுவை வலியுறுத்த இயலும். தற்போதைய ஆண்டுத் திட்ட மதிப்பானது ரூ.23,000 கோடியாகும். அதற்கிணங்க, தேசிய மத்திய நிதியுதவியை நாங்கள் 4,600 கோடி ரூபாயாக உயர்த்துமாறு கோரியுள்ளோம்.

ஆண்டுத் திட்டம் கால அளவில் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் மாநிலங்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் திட்டங்கள் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் திறம்பட செயல்படுத்துவதற்கான அதனுடைய முக்கிய நிலை ஆகியவை குறித்த மேலோட்டமான கருத்தைத் தெரிவிக்க விழைகிறேன். என்னுடைய அரசு கருதியுள்ள திட்டங்களுக்கு மைய அரசிடமிருந்து கணிசமான நிதியுதவி தேவைப்படுகிறது. இது கடன் நிவாரணத்திற்கான சிறப்பு நிதியுதவி வகையில் தேவைப்படுகின்ற ரூ.1,00,000 கோடிக்கும் கூடுதலானதாகும். ஆகையால் நான் திட்டக் குழுவை சிறப்புத் திட்ட நிதியுதவிக்காகவும், கடன் தீர்ப்பதற்காகவும் எங்களுடைய கோரிக்கையைப் பரிந்துரை செய்யுமாறு திட்டக் குழுவைக் கோருகிறோம்.

மானிய வகையில் கூடுதல் மைய உதவி அளித்ததன் மூலம் கடந்த ஆண்டுகளில் அவர் காட்டிய கனிவான பரிசீலனைக்காகத் திட்டக் குழுவின் துணைத் தலைவரான டாக்டர் மாண்டேக்சிங் அலுவாலியா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். தற்பொழுது உள்ள மாநிலத்தின் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு நிதியுதவியைக் கணிசமாக அதிகரிப்பார் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டிற்கான வரைவுத் திட்டம் குறித்த என்னுடைய தொலைநோக்குப் பார்வையைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக திட்டக் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் மாண்டேக்சிங் அலுவாலியா அவர்களுக்கும் மற்றும் அவருடைய குழுவிற்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு கோருகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
18.07.2011 அன்று சென்னைத் தலைமைச் செயலகத்தில்,
விரைவு பட்டா மாறுதல் திட்டத்தினை திருச்சி மாவட்டம்,
ஸ்ரீரங்கம் வட்டத்தில் காணொலிக் காட்சி (Video Conferencing)
மூலமாகத் தொடங்கி வைத்தார்கள்.

விரைவாகப் பட்டா மாறுதல் பெறப் புதிய திட்டம்

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் 11.07.2011 மற்றும் 12.07.2011 ஆகிய தேதிகளில் பெறப்பட்ட பட்டா மாறுதலுக்கான மனுக்கள் மீது பட்டா மாறுதல் செய்து வழங்கப்படும் ஆணைகள் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது:— "அனைவருக்கும் வணக்கம். கடந்த மாதம் 10ஆம் தேதி சட்டமன்றப் பேரவையில், இந்தப் பட்டா மாறுதலுக்கான நடைமுறை எளிமையாக்கப்படும், எளிதாக்கப்படும் என்று அறிவித்து இன்று அதனைத் தொடங்கி வைப்பதில் உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்கு இத்தனை பேருக்கு பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் புதிய நடைமுறையைப் பொதுமக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என்று எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்."

✶ ✶ ✶

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் புதிய மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை 25.07.2011 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் (Video Conferencing) தொடங்கி வைத்துப் பேசியது.*

தோட்டக்கலை மேம்பாடு அடைய வேண்டும்!

“அனைவருக்கும் வணக்கம். ஸ்ரீரங்கம் தொகுதியில் பெண்களுக்கென்றே தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க கடந்த மாதம் 19ஆம் தேதி என்னால் அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று பெண்களுக்கான இந்தத் தோட்டக்கலைக் கல்லூரியையும், இந்நிலையத்தையும் துவக்கி வைப்பதில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தோட்டக்கலைக் கல்லூரியில் பயில உள்ள மாணவியர் அனைவரும் நல்ல முறையில் கல்வி பெற்று அவர்களுடைய எதிர்காலம்

சிறப்புடன் அமையவேண்டும் என்று எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் தோட்டக்கலை மேம்பாடு அடைய வேண்டும் என்ற எனது விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். செல்வி கவிநிலவு உள்பட இங்கே பயிலவுள்ள அனைத்து மாணவியரும் மிக நல்ல முறையில் கல்வி கற்று அவர்கள் வாழ்க்கையில் சிறப்பான ஒரு நிலையை அடைய வேண்டும் என்ற எனது நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்''.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.07.2011 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட விவசாய பயிற்சி மையங்கள் உள்ளிட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தும், 2 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்குக் குடியிருப்பு மற்றும் பல்வேறு துறைகளுக்கான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றியதாவது:–

''அனைவருக்கும் வணக்கம். இன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தும், கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியும், இன்று நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே உள்ள வசதிகளால் இங்குள்ள மாணவ, மாணவியரும், பணியாளர்களும், விவசாயிகளும், நல்ல முறையில் பயன்பெற்று அவர்கள் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும் என்ற எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இந்தப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் மிக ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும் என்ற எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்,

நன்றி, வணக்கம்.''

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **08.08.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக மக்கள் அனைவரும் சுகாதாரமான சுற்றுச்சூழலில் வசிப்பதை உறுதி செய்வது எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம் ஆகும். எனவேதான், மேதகு ஆளுநர் உரையில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும், கிராமப்புரங்களையும், நகர்புரங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 04.08.2011 அன்று, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011–2012ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில், "சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும், திடக் கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டம் தயாரித்து, கரிம சேமிப்புக்காகக் கிடைக்கப் பெறும் நிதியையும் பயன்படுத்தி, இத்திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் குறித்த ஒட்டுமொத்த நிலையை நேரடியாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, நான் 05.08.2011 அன்று ஹெலிகாப்டரில் சென்று வான் வழியாக ஆய்வு செய்தேன். அப்போது, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களையும் பார்வையிட்டேன். இந்த ஆய்வின் போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ஏராளமான குப்பைகள் கொட்டிக் கிடந்தது தெரிய வந்தது. மேலும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சில பகுதிகளில், குடியிருப்புகளைச் சுற்றி மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கியுள்ளதையும் கண்டறிந்தேன். மிகவும் அசுத்தமாக இருந்தது.

எனவே, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரமான சூழலை உடனடியாகப் பெறுவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும்; குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள அசுத்தமான நீரை அகற்றுவதற்குமான சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டம், அதாவது—Mass Cleaning Programme ஒன்று செயல்படுத்தப்படும். இந்தத் தூய்மைப்படுத்தும் பணிகள், மூன்றுமாத காலத்திற்குள் செய்து முடிக்கப்படும். இதனைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், 2011–2012ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு, விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 08.08.2011 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

காற்றாலை மூலம் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் மின் நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து, அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேர மின்தடை அமலில் இருந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு, சென்னை மாநகரத்தில் ஒரு மணி நேர மின் தடையும்; மாநிலத்தின் பிற பகுதிகளில் மூன்று மணி நேர மின் தடையும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்தது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

எனது தலைமையிலான, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், மின் நிர்வாகத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, சென்னை நீங்கலாக மாநிலத்தின் பிற இடங்களில் இருந்த மூன்று மணி நேர மின்தடை, 01.07.2011 முதல் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

உயர் அழுத்தத் தொழிற்சாலை மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்குத் தேவை மற்றும் பயனீட்டு அளவில் 20 விழுக்காடு மின் தடை அமலில் இருந்து வந்தது. உச்சக்கட்ட நுகர்வு நேரமான மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலத்தில், அனைத்து உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும்

மின் வாரியக் கட்டமைப்பிலிருந்து 10 விழுக்காட்டிற்கு மிகாமல் விளக்கு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக மின்சாரம் கடந்த 20.08.2010 முதல் வழங்கப்படுகிறது. அதாவது, மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான உச்சக்கட்ட நுகர்வு நேரத்தில், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 90 விழுக்காடு மின் தடை அமல்படுத்தப்பட்டு வந்தது. தற்போதும், உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்கு இந்த மின் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறையில் உள்ளன.

காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்தின் மொத்த உற்பத்தித் திறன் 6,007 மெகாவாட் ஆகும். ஆனால், காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் எப்போதும் ஒரே அளவில் கிடைப்பதில்லை. காற்று அதிகமாக உள்ள ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில், அதிலும், காற்று அதிகமாக வீசக் கூடிய நேரங்களில், காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் அதிக அளவில் இருக்கும். இவ்வாறு காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு, மின்சாரத் தேவை குறைவாக உள்ள இரவு நேரங்களில்தான் அதிகமாக கிடைக்கும். எனவே, பல நேரங்களில் இவ்வாறு கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்த இயலாமல் போய் விடுவது உண்டு. இதன் காரணமாக, காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்போர், அந்த மின்சாரத்தை, விற்க இயலாத நிலை ஒரு பக்கமும்; மின்சாரத் தேவை உள்ளோர் அதனைப் பெற இயலாத சூழ்நிலை ஒரு பக்கமும், நிலவுவது உண்டு. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சேமித்து வைக்க இயலாது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். எனவே, மின்சாரத் தேவை குறைவாக உள்ள நேரங்களில் கிடைக்கப் பெறும் அதிக அளவு மின்சாரத்தை, தேவை உள்ளவர்களுக்கு வழங்குவதுதான் சிறந்த மின் நிர்வாகம் ஆகும்.

ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் காற்றாலை மூலம் இரவு நேரங்களில் பெறப்படும் அதிக அளவு மின்சாரத்தை தற்போது பயன்படுத்த எனது தலைமையிலான அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி, காற்றாலை மூலம் இரவு நேரங்களில் பெறப்படும் சுமார் 100 மெகாவாட் மின்சாரம், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை 20 விழுக்காடு மின் தடையை விலக்கிக் கொண்டு வழங்கப்படும்.

காற்றாலை மூலம் இவ்வாறு பெறப்படும் மின்சாரம் முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இந்த மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிப்பவர்களுக்கு இது வழங்கப்படும். இந்தச் செயல் திட்டம் இன்று, அதாவது, 08.08.2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு சுமார் 100 மெகாவாட் அளவுக்கு நிவாரணம் கிடைப்பதுடன், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்கள் அந்த மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதன் மூலம் பயன்பெறுவர். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் மின் தேவை மற்றும் மின் பயனீட்டு அளவுக் கட்டணமாக சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **11.08.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பி இருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம் பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித்திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. நீடித்த வேளாண் வளர்ச்சியை அடைவதில் பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துதல் இன்றியமையாதது ஆகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி பாசனக் கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து அவைகளை பழைய நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடர் திட்டமாக, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன், 2,547 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 இலட்சத்து 24 ஆயிரத்து 607 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில், நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

தமிழகத்தில் உப வடிநில கட்டமைப்பு முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட 60 உப வடிநிலங்களின் 15 இலட்சத்து 24 ஆயிரத்து 607 ஏக்கர் பாசனப் பரப்பு அடங்கிய பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன் மூலம் பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், 4,848 ஏரிகள், 668 அணைக்கட்டுகள் மற்றும் 7,893 கிலோ மீட்டர் நீர்வழங்கு கால்வாய்களை புனரமைத்து சீர்படுத்துவதன் மூலம் ஏரிப் பாசன முறையை நவீன மயமாக்குதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில், நீர் மேலாண்மை மூலம் அதிக மகசூல் பெறத்தக்க வகையில் தேவையான நீரை மட்டுமே பயன்படுத்தி மீதமாகும் நீரை அதிக பாசனப் பகுதிகளுக்கு அளித்து வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், நீரைப் பயன்படுத்துவோர் மூலமாக நீர்ப்பாசனச் சங்கங்கள் அமைத்து

அவர்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் ஒரு அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகள், அதாவது–System and Non-System Tanks–மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை **31** கோடியே **19** இலட்சத்து **31** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனபடுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:–

- ❖ ஏரிகளின் கரைகளை இயந்திரங்களைக் கொண்டு பலப்படுத்துதல்
- ❖ பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்
- ❖ பழுதுபட்ட சிற்றணைகளை மறு கட்டமைப்பு செய்தல்
- ❖ நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாருதல்
- ❖ ஏரிகளின் எல்லைகளில் எல்லைக் கற்களை அமைத்தல்
- ❖ பாசனக் கால்வாய்களில் நீர் அளவீட்டு கட்டமைப்பு ஏற்படுத்துதல்
- ❖ இரண்டு ஏரிகளின் தெரிவு செய்யப்பட்ட வரத்துக் கால்வாய்களில் **600** மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல், அதாவது Lining அமைத்தல் மற்றும் மற்ற ஏரிகளின் கால்வாய்களில் **30** முதல் **50** மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல்

இதனால், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வட்டங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களிலுள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகளின் கீழ் உள்ள 45,597.10 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மற்றொரு அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கிளியாறு உப வடிநிலம் மற்றும் செய்யாறு உப வடிநிலத்தின் ஒரு பகுதியின் கீழ் உள்ள ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 84 கோடியே 88 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனபடுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யாறு—கிளியாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த, பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:—

- ❖ நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாரி மேம்படுத்துதல் மற்றும் 200 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம், அதாவது Model Section அமைத்தல்
- ❖ பழுதுபட்ட சிற்றணைகளைப் புனரமைத்தல்
- ❖ பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்
- ❖ பழுதுபட்ட மதகுகளைப் புனரமைத்தல்
- ❖ பாசன ஏரிகளின் மதகுகளுக்கு கீழ் உள்ள நீர்வழங்கு கால்வாய்களில் 35 மீட்டர் தூரத்திற்குத் தேவையான அக உறை அமைத்தல்
- ❖ எல்லா மதகுகளின் வெளிப்புறங்களிலும் நீர் அளவீட்டு அமைப்பு கட்டமைப்பை ஏற்படுத்துதல்

❖ தேவைப்படும் ஏரிகளின் மதகுகளின் இடது வலது புறங்களில் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அதன் கரைகளில் 500 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம் அமைத்தல்

❖ மதகுகளுக்கு திருகு அமைப்பு கொண்ட கதவுகள் அமைத்தல்

❖ ஏரிகளின் நீர் பரப்புப் பகுதிகளில் எல்லைக் கற்களை நடுதல்

மேற்கண்ட இந்தப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கம், மதுராந்தகம், சித்தாமூர், உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெம்பாக்கம், செய்யாறு, அன்னக்காவூர், வந்தவாசி, பெரணமல்லூர், தெள்ளாறு மற்றும் மேற்கு ஆரணி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 453 ஏரிகள் மற்றும் இரண்டு அணைக்கட்டுகளின் கீழுள்ள 91,081.25 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
11.08.2011 அன்று சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்து ஆற்றிய உரை.

இலங்கை அரசுக்கு மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை உள்நாட்டுப் போரின் போது, மனிதாபிமானமற்ற முறையில் ஈவு இரக்கமின்றி அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் மீது ராணுவத் தாக்குதல் நடத்தி அதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறந்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், இனப் படுகொலையை நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என அறிவிக்க இந்திய அரசு, ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்த வேண்டும் என்றும்; இது மட்டுமல்லாமல், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும்

முழு சம உரிமை கிடைக்கும் வரை அந்நாட்டின் மீது, பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 08.06.2011 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் அதனை விமர்சித்து இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர், திரு. கோத்தபய ராஜபக்ஷே Headlines Today தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்து இருப்பது இலங்கை அரசு தான் செய்த தவற்றை நியாயப்படுத்துவது போல் அமைந்துள்ளது.

இந்தத் தீர்மானத்தை நான் அரசியல் ஆதாயத்திற்காகக் கொண்டு வந்து நிறைவேற்றியதாக திரு. கோத்தபய ராஜபக்ஷே கூறியிருக்கிறார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த Marzuki Darusman; அமெரிக்காவைச் சேர்ந்த Steven Ratner; தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த Yasmin Sooka ஆகியோர் அடங்கிய, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் அமைக்கப்பட்ட மூன்று நபர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே ஒழிய, அரசியல் ஆதாயத்திற்காக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிங்களர், தமிழர் அல்லது இஸ்லாமியர் என்ற எந்தவித பாகுபாடுமின்றி அனைவரும் இலங்கையர் என்ற முறையில் தான் நடத்தப்படுகின்றனர் என்றும்; மற்றவர்களை விட தங்கள் நாட்டு குடிமக்கள் மீது தாங்கள் மிகுந்த அக்கறை கொண்டு இருப்பதாகவும் பேட்டி அளித்திருக்கிறார் திரு. கோத்தபய ராஜபக்ஷே. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல் ஆகும்.

இலங்கை ராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.க்கும் இடையேயான போரின் உச்சகட்டப் பகுதியான 2008ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான

காலத்தையும் அப்போது பல்வேறு திசைகளில் இருந்து வந்த துப்பாக்கிச் சூட்டில் சிக்கிக் கொண்ட பெரும்பாலான அப்பாவித் தமிழர்களின் நிலைமையையும் ஆழ்ந்த கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆய்வு செய்த ஐக்கிய நாடுகள் சபைக் குழு,

- ❖ இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட, குண்டு மழைக்கு விலக்களிக்கப்பட்ட பகுதியின் மீது இலங்கை ராணுவம் குண்டு மழை பொழிந்தது;

- ❖ மருத்துவமனைகள் மீது குண்டுமழை பொழிந்தது; மனிதாபிமானமற்ற முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது;

- ❖ இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதி வெளியே இருப்பவர்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது; என பல மனிதாபிமானமற்ற பன்னாட்டுப் போர் நெறிமுறைகளை மீறிய செயல்களை இலங்கை ராணுவம் நிகழ்த்தியுள்ளதாகக் கண்டறிந்துள்ளது.

இது மட்டுமல்லாமல், மிகப் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம் என்று இலங்கை அரசு அறிவித்த பின்னரும் அப்பாவி இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்த பகுதிகளில் குண்டுகளை வீசி பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இறப்பதற்குக் காரணமாக இலங்கை ராணுவம் இருந்தது என்றும் இந்த வல்லுநர் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருட்கள் மக்களைச் சென்றடையா வண்ணம் இலங்கை அரசு தடையை உருவாக்கியதாகவும் ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஊடகங்களால் வெளியிடப்பட்ட கோரமான வீடியோ காட்சிகளிலிருந்து, பெரும்பாலானோர் கொடிய முறையில் கொல்லப்பட்டிருப்பதும் தெளிவாகிறது.

அடுத்தபடியாக, இலங்கை கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு அறிவுரை கூறி இருக்கிறார் திரு. கோத்தபய ராஜபக்ஷே. கச்சத்தீவிற்கு இதுவரை வந்து கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மற்றும் புனிதப் பயணிகள் இதே காரணத்திற்காக வந்து செல்லும் போது, பயண ஆவணங்களையோ அல்லது நுழை விசையையோ பெற வேண்டும் என இலங்கை கோராது என்று இந்திய–இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் பொருட்டு, இந்திய மீனவர்கள் கச்சத்தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுதந்திரமாக மீன் பிடிக்கலாம்; மற்றும் வலைகளை உலர்த்துவதற்கு அந்தத் தீவைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அப்போதைய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணான வகையில் நடந்து கொண்டு விட்டு தமிழ்நாடு அரசிற்கு அறிவுரை கூறுவது, சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது.

மேலும், திரு. கோத்தபய ராஜபக்ஷே, வட இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தான் தற்போதைய முக்கியப் பணி என்றும்; போர்க் குற்றவாளிகள் என்று தற்போது கூறுவது பயனற்றது என்றும் பேட்டி அளித்து இருக்கிறார். இலங்கையில் நிலவும் உண்மை நிலவரம் என்னவென்றால், போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணவோ; பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்தோ எந்தவிதமான நடவடிக்கையும் இலங்கை அரசால் எடுக்கப்படவில்லை என்பது தான்.

இவருடைய இந்தப் பேட்டியிலிருந்தே இலங்கை ராணுவம் போர்க் குற்றம் புரிந்து இருக்கிறது; இலங்கை அரசு போர்க் குற்றம் புரிந்திருக்கிறது என்று மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையிலேயே இலங்கை ராணுவம் போர்க் குற்றம் செய்யவில்லை என்றால், இது தொடர்பான சர்வதேச விசாரணைக்குத் தயார் என இலங்கை அரசு அறிவித்து இருக்க வேண்டும். ஆனால், அதைச்

செய்யாமல் தேவையற்ற பேட்டிகளை அளித்து வருவது செய்த தவறை மூடி மறைக்கும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறதோ என்ற சந்தேகத்தை சர்வதேச நாடுகள் மத்தியில் தற்போது ஏற்படுத்தியுள்ளது.

“அனைத்துக் கட்சிக் கூட்டம்”, “சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்”; “தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்”, “மனிதச் சங்கிலி போராட்டம்”, “பிரதமருக்கு தந்தி”; “நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா என்ற அறிவிப்பு”; “ராஜினாமா கடிதங்களைத் தானே பெற்றுக் கொண்டது”; “இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு”, எனப் பல்வேறு வகையான கண்துடைப்பு நாடகங்களை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி நடத்திய போது வாய் திறக்காத திரு. கோத்தபய ராஜபக்ஷே, நான் கொண்டு வந்த தீர்மானத்தை விமர்சிக்கிறார் என்றால், அந்த அளவுக்கு இந்தத் தீர்மானத்தின் தாக்கம் இருந்திருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இலங்கை தமிழ் சகோதர, சகோதரிகளின் நெஞ்சைப் பிளக்கும் துயரங்களை அறிந்த சர்வதேச நாடுகள் போர்க்குற்றத்திற்கு இனப் படுகொலைக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருதுகின்ற சூழ்நிலையில்,

“போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும்; தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில்; அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்; மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக்

கொள்ளும் தீர்மானம்”அரசியல் ஆதாயத்திற்கு அப்பாற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீது மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததுதான், இது போன்றதொரு பேட்டியை அளிப்பதற்கான துணிச்சலை திரு.கோத்தபய ராஜபக்ஷேவுக்கு அளித்திருக்கிறது என்ற ஐயம் நடுநிலையாளர்களுக்கு, தமிழ் உணர்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் வரை; இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படும் வரை; சிங்களர்களுக்கு இணையான அந்தஸ்து அவர்களுக்குக் கிடைக்கும் வரை எனது தலைமையிலான அரசு ஓயாது என்பதையும்; தமிழர்களின் இந்த நியாயமான உரிமைகளை வென்றெடுக்கத் தேவையான ராஜதந்திர நடவடிக்கைகளை எனது அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு;

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேட்டி அளித்துள்ள இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர், திரு. கோத்தபய ராஜபக்ஷேவுக்கு இந்தியத் தூதர் மூலம் தனது கண்டனத்தை மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
12.08.2011 அன்று விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனித வளம்தான். மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும். அந்த வகையில்தான் எனது தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநிலத்தில் உள்ள 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில் அறிவியல் பிரிவு மட்டும்தான் இதுவரை துவக்கப்பட்டு வந்தது. மேலும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக

நிலை உயர்த்தப்படும் போது உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள்; மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படுவதுடன், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு வந்தன.

தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும் அறிவியல் பிரிவுடன் கலைப் பிரிவும் துவக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும்; ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், வணிகவியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுக்காக 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளில், கூடுதலாக 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், வரலாறு, பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களைப் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைப்பதுடன், இந்தப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் இது வழி வகுக்கும். மேலும், கடந்த பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் போது தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு வழங்கப்படாத நிலை இருந்து வந்தது. இந்த நிலையும் தற்போது மாற்றப்பட்டு, தமிழ் மொழிப் பாட ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுவதால் தமிழ் மொழிப் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்புப் பெற இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 44 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
12.08.2011 அன்று விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

உகந்த பயிர் மேலாண்மை கடைப்பிடிக்கும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தச் சட்டமன்றப் பேரவையில் 04.08.2011 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2011–2012ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில், ''முன்னோடி தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடித் திட்டம்; நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம்; துல்லிய பண்ணையம்; பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல்; பயறு வகைகள்; எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல்; பசுமைக் குடில்; துல்லிய பண்ணையம் முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல்; தோட்டக்கலைப் பயிர்களுக்கான அடர் நடவுமுறை போன்றவை தீவிரமாகப் பரவலாக்கப்படும்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், பி.டி. ரகப் பருத்தி பயிரிடுவதில் பலப் பிரச்சனைகள் இருப்பதால் இதனை அரசு ஊக்குவிக்கக் கூடாது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். விவசாயிகளும், அரசு அளவில் பி.டி. ரகப் பருத்தி பயிரிடுவதை ஊக்குவிக்கக் கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

2002ஆம் ஆண்டு மத்திய அரசு பி.டி. ரகப் பருத்தியினை விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக Genetic Engineering Approval Committee மூலம் அனுமதி அளித்து இன்று பல மாநிலங்களில் பரவலாகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பி.டி. பருத்தியின் மூலம் அதிக லாபம் பெற முடியும் என்பதால், லாப

நோக்கோடு தனியாரிடம் பி.டி. ரக விதைகளை வாங்கி தமிழக விவசாயிகளும் பயிரிட்டு வருகிறார்கள். எனவேதான், நிதிநிலை அறிக்கையில் பி.டி. ரகப் பருத்திச் சாகுபடி பரவலாக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி என்பதாலும்; விவசாயிகளுக்கு நிச்சயமான பலன் அளிக்கும் என்ற உறுதி இல்லாததாலும்; இதனை அரசளவில் பரவலாக்கக் கூடாது என்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கருத்தினை ஏற்று, பி.டி. பருத்தி சாகுபடியைப் பரவலாக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
15.08.2011 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில்
தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆற்றிய
சுதந்திரத் திருநாள் உரை.

தமிழக மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அல்லும் பகலும் அயராது தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பேன்!

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

அரசு அலுவலர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் எனது இனிய சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்திலிருந்து பாரதத் தாயின் மணிக்கொடியை ஏற்றி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன்.

ஆங்கிலேயரிடம் இருந்து நாம் விடுதலை பெற்று **64** ஆண்டுகள் முடிந்து விட்டன. **65–**ஆவது சுதந்திரத் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த இனிய வேளையில், வங்கக் கடலோரம் வீசும் மெல்லிய பூங்காற்றில் பட்டொளி வீசிப் பறக்கும் இந்த மணிக்கொடி, ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணியாம் இந்த சுதந்திரம் பற்றிய பல்வேறு உணர்வுகளை இத்தருணத்தில் நம்முள்ளே கிளர்ந்தெழச் செய்கிறது.

இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் இன்னுயிரைத் துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழகம். வன்முறைகளுக்கு இடம் கொடாமல், அஹிம்சை மூலமே அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்த தியாகச் செம்மல்கள் வலம் வந்த இடம் என்ற பெருமையும் பெற்றது நம் தமிழகம். நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தங்களின் சொந்த நலன்களைக் கிஞ்சித்தும் சிந்திக்காமல் நாட்டு விடுதலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்த அந்தத் தியாகச் செம்மல்களை நினைவு கூறும் திருநாள் இது.

அனைத்துத் தரப்பு மக்களும் சாதி, மத, இன வேறுபாடுகளைக் களைந்து, வறுமையில் வாடுவோர் வளம் பெற்று, அனைத்துத் தரப்பு மக்களும் அச்சமின்றி வாழ்வதுதான் உண்மையான சுதந்திரம்.

அந்த வகையில், இந்த சுதந்திரத் திருநாள், தமிழக மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கும் தன்னிகரில்லாத் திருநாள். தமிழக மக்களின் முகங்களில், ஊற்றெடுக்கும் மகிழ்ச்சியைக் காண்கின்ற திருநாள். 64 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயரிடமிருந்து நாம் பெற்ற சுதந்திரத்தை இன்று கொண்டாடி மகிழும் அதே வேளையில், தங்களைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக அடிமைப்படுத்தி இருந்த விலங்கு தற்போது தகர்த்தெறியப்பட்டுள்ளதைத் தமிழக மக்கள் உவகையுடன் கொண்டாடி வருகிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்த ஒரு துறையிலும் மக்களுக்குச் சுதந்திரம் இல்லை. தமிழக மக்களின் அன்றாட வாழ்க்கையே அச்ச உணர்வில்தான் கழிந்தது. எனவேதான், ஐந்து ஆண்டு காலக் கொடுங்கோல் குடும்ப ஆட்சி ஒழிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களாட்சி மலர்ந்தவுடன், மீண்டும் ஒரு சுதந்திரம் கிடைத்த உணர்வு தமிழக மக்களிடையே எழுந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழக மக்கள் சந்தித்த மிக முக்கியமான பிரச்சினை சட்டம்—ஒழுங்கு சீரழிவு. அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை அமளிக் காடாக மாற்றினார்கள் முந்தைய ஆட்சியாளர்கள். இதனைச் சீர்செய்யும் விதமாக சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டவும், நிருவாகத்தைச் செம்மையாக்கவும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் போதெல்லாம், காவலர்கள் தங்கள் பணிகளில் எத்தகைய குறுக்கீடும், இடையூறும் இல்லாமல் சுதந்திரமாகச் செயல்பட்டு, மக்களுக்கான தங்கள் கடமையை செவ்வனே செய்ய வழிவகை ஏற்படுகிறது. அப்போதெல்லாம் சமூக விரோதிகள் மீதும், தீவிரவாதிகள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. அதே போன்று, தற்போதும், சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டி, மக்கள் எவ்வித பயமும் இன்றி அமைதியாக தங்களது வாழ்க்கையை நடத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.

ஒரு மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு சிறப்பாக நிலைநாட்டப்பட வேண்டும் எனில், அந்த மாநிலத்தில் காவலர்கள் தங்கள் பணிகளில் எந்தவிதக் குறுக்கீடும் இன்றி, தங்கள் பணிகளை நியாயமாகவும், நேர்மையாகவும் செய்ய வேண்டும். கடந்த 5

ஆண்டுக் காலமாக சமூகவிரோதிகளைக் கண்டு காவலர்கள் அஞ்சிய துர்பாக்கியமான சூழ்நிலையைத் தலைகீழாக மாற்றி, சமூக விரோதிகள் காவலர்களைக் கண்டு அஞ்சும் சூழ்நிலையை நான் பொறுப்பேற்ற உடனேயே மீண்டும் உருவாக்கி உள்ளேன் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லோரும், எல்லாமும் பெற்று, வாழ்வில் வளம் பெறும் வகையிலான ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சி ஆகும். இவ்வாறான மக்களாட்சியில் தான், ஏழைகளும், வசதி படைத்தோருக்கு இணையான வசதிகளைப் பெற இயலும். எனவேதான், மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுள்ள இத்தருணத்தில், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் வாழ்வில் வளம் ஏற்படும் வகையில், பல்வேறு நலத் திட்டங்களை எனது அரசு வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளில் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னிறைவு பெறுவது ஒரு சிறந்த பொருளாதாரக் கோட்பாடாகும். அந்த வகையில், மக்களின் இன்றியமையாதத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், சில பொருட்களை, விலை இன்றி, எங்கள் அரசு வழங்கி வருகிறது. விலையின்றி இவ்வாறு வழங்குவதை "இலவசம்" என்று நாங்கள் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. ஏழை, எளியவர்களுக்கு இவ்வாறு பொருட்களை விலை இன்றி வழங்குவது மக்கள் நலன் பேணும் அரசின் கடமை ஆகும். எனவேதான், நான் ஆட்சிப் பொறுப்பேற்ற அன்றே, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியை, விலை ஏதுமின்றி வழங்க ஆணையிட்டேன்.

அதே போன்று, வாழ்வாதாரம் ஏதும் இன்றி, அன்றாட வாழ்க்கையை நடத்தவே இயலாமல் உள்ள முதியோர், உடல் ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்கான மாத உதவித் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்தேன்.

இந்த அடிப்படையில்தான், பெண்களின் வாழ்க்கை வசதிக்காக மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டத்தை பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம்

நாள் துவங்க உள்ளோம். ஆடம்பரத் தேவைகள் கூட அத்தியாவசியத் தேவைகளாக மாறிவிட்ட இன்றைய நவீன யுகத்தில், குடும்பத் தலைவிகளின் வேலைப் பளுவைக் குறைக்கும் வகையில், மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகியவை வழங்கப்பட உள்ளன. அதேபோன்றுதான், அன்றாட வாழ்விற்கு அத்தியாவசியமாக விளங்கும் மின் விசிறியையும் மகளிருக்கு வழங்க உள்ளோம்.

இதேபோன்று, தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை முன்னிட்டு, வேட்டி–சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை "இலவசம்" என்ற கண்ணோட்டத்தில் பார்க்காமல், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் திட்டமாகவும்; கைத்தறி மற்றும் விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் திட்டமாகவும் தான் பார்க்க வேண்டும்.

இவ்வாறு, மக்களின் அத்தியாவசியத் தேவைகளை அரசே வழங்கும் அதே நேரத்தில், இது ஒரு நிரந்தரத் தீர்வு என்று எனது அரசு கருதவில்லை. மக்கள் தங்களது அத்தியாவசியத் தேவைக்கு அரசை எப்போதும் சார்ந்து இராமல் தங்கள் சொந்தக் கால்களிலேயே நின்று, தங்களுக்குத் தேவையானதை தாங்களே வாங்கிக் கொள்ளும் அளவிற்கு அவர்களது பொருளாதார நிலை உயர வேண்டும் என்பதுதான் எனது தலைமையிலான அரசின் எண்ணம் ஆகும். ஏழைகள் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டுமெனில், ஏழை, எளிய மக்களைப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து, அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது மக்கள் அரசின் கடமை ஆகும். இந்த அடிப்படையில், ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை, எளிய குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் உன்னத நோக்கத்தோடு, வரும் ஐந்து ஆண்டுகளில் 7 இலட்சம் ஏழை, எளியோருக்கு தலா 4 ஆடுகள் வழங்கும் திட்டத்தை, அதாவது 28 இலட்சம் ஆடுகள் வழங்கும் திட்டத்தை எனது அரசு செயல்படுத்த உள்ளது. இந்த ஆடுகள் வழங்கும் திட்டமும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள் முதல் துவக்கப்பட உள்ளது. ஏழை, எளியவர்களின் வாழ்வில் ஏற்றத்தை உருவாக்கும் இன்னொரு மகத்தான திட்டம்தான் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தின்படி 5 ஆண்டுகளில், 60,000 கறவை மாடுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த

இரண்டு திட்டங்களிலும் வழங்கப்படும் ஆடுகள் மற்றும் கறவை மாடுகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பயனாளிகளுக்கே வழங்கப்பட்டு, ஏழை, எளியவர்களின் உரிமை நிலை நாட்டப்படும்.

நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போதெல்லாம், மகளிர் மேம்பாடு மற்றும் குழந்தைகளின் நலனுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் பல முன்னோடித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறேன். அந்த வகையில், என்னுடைய சிந்தனையில் உதித்த ஒரு சிறப்பான திட்டம்தான், 1992–இல் சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட "தொட்டில் குழந்தைத் திட்டம்'' ஆகும். இந்தியாவில் பல மாநிலங்களில் பெண் சிசுவதை நடந்து கொண்டிருந்தாலும், எனது தலைமையிலான தமிழக அரசு மட்டுமே முதன் முதலாக சிசுக் கொலையை முற்றிலும் ஒழித்திடவும், குழந்தைகளை இறப்பின் பிடியிலிருந்து காப்பாற்றவும் உறுதி பூண்டு, 1992ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் "தொட்டில் குழந்தைத் திட்டம்'' என்ற மகத்தான திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. 2001ஆம் ஆண்டு, நான் இரண்டாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, தொட்டில் குழந்தைத் திட்டம் மீண்டும் புத்துயிர் பெற்றது. பெண் சிசுக்கொலை நடைமுறையில் இருந்த, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய 4 மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு, குழந்தை வரவேற்பு மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2011ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பில், கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதத்தில் பெண் குழந்தை பிறப்பு விகிதம் கவனிக்கத் தக்க வகையில் இறங்கு முகமாக உள்ளதால், இந்நேர்வில் அரசின் தனிக் கவனம் தேவைப்படுவதை உணர்ந்து, கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள் தொடங்க எனது அரசு சமீபத்தில் ஆணைப் பிறப்பித்துள்ளது.

பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் என்னும் ஒரு முன்னோடியான திட்டத்தை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு பெண் குழந்தை மட்டும் உள்ள பெற்றோர் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொண்டால், அந்தப் பெண் குழந்தையின் பெயரில் வைக்கப்படும் வைப்புத் தொகை

22,200 ரூபாயில் இருந்து 50,000 ரூபாயாகவும்; இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ள பெற்றோர் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொண்டால், அந்தப் பெண் குழந்தைகளின் பெயரில் வைக்கப்படும் வைப்புத் தொகை தலா 15,200 ரூபாயில் இருந்து தலா 25,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அடுத்ததாக, தங்கத்தின் விலை விண்ணை எட்டும் அளவு ஏறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், மகளிரின் நலன் காக்கும் வகையில், பல்வேறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் பயன் பெறும் அனைத்துப் பயனாளிகளுக்கும் 25,000 ரூபாய் உதவித் தொகையுடன், திருமணத்திற்குத் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கக் காசு வழங்கவும்; கல்வியறிவு பெற்ற மகளிரை ஊக்குவிக்கும் வகையில், அந்தப் பயனாளிகள் பட்டம், பட்டயப்படிப்பு முடித்திருப்பின், அவர்களுக்கு வழங்கப்படும் 4 கிராம் தங்கக் காசுடன், திருமண உதவித் தொகையை 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். மேலும், மகளிருக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்துள்ள காரணத்தால்தான், ஆடுகள் வழங்கும் திட்டம் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழும், பெண்களையே பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கவும், மகளிரைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் முடிவெடுத்துள்ளோம்.

உண்மையான மக்கள் அரசு, சமூக நீதியை நிலை நாட்ட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டை வழங்குவதில் எனது தலைமையிலான அரசு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அளித்த பரிந்துரையை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் காக்கும் வகையில் 11.07.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில், பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு; மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினருக்கு 20 விழுக்காடு; ஆதிதிராவிட வகுப்பினருக்கு 18 விழுக்காடு; பழங்குடியினருக்கு 1 விழுக்காடு; ஆக மொத்தம், 69 விழுக்காடு இட ஒதுக்கீடு தொடர்ந்து கடைபிடிக்கப்பட

இந்த அரசாணை வகை செய்துள்ளதன் மூலம் சமூகநீதி நிலை நாட்டப்பட்டுள்ளது. மேலும், வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட இந்த அரசாணையில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், வாழ்வில் முன்னேற்றம் பெற்று அதன் மூலம் சமூக, பொருளாதார மேம்பாட்டினை அடையும் வகையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கிப் பயிலும் விடுதிகள், அவர்கள் செம்மையாகக் கற்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள 1,080 ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில், 83 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது. அதே போல், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மாணவ, மாணவியர் தங்கும் 148 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட இந்த ஆண்டு 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆதி திராவிட பள்ளி மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் மாத உணவுப் படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும்; கல்லூரி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாத உணவுப் படி 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதே போல், விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தற்போது அளிக்கப்படும் மாத உணவுப் படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும்; கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

21ஆம் நூற்றாண்டு அறிவுசார் மனித வளத்தை நம்பியே உள்ளதால், எனது தலைமையிலான அரசு அறிவுசார் மனித வள மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அறிவுசார் மனித வளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்கு தடையின்றித் தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். அந்த வகையில், மேனிலைப் பள்ளிகளில் இருந்து இடைநிற்றலைக் குறைக்கும் பொருட்டு,

பத்தாம் வகுப்பில் இருந்து பனிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஒரு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியருக்கு 1,500 ரூபாயும்; மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு 1,500 ரூபாயும்; மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு 2,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இந்தத் தொகை மாணவ, மாணவியர்களின் பெயரில் பொதுத் துறை நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கும் போது அந்த மொத்தத் தொகையான 5,000 ரூபாய் வட்டியுடன் அவர்களுக்கு வழங்கப்படும். இது மாணவ, மாணவியரின் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை ஊக்குவிப்பதுடன், கல்லூரிப் படிப்பைத் தொடரவும் வாய்ப்பாக அமையும். மேலும், அறிவுசார் மனித வளத்தை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, நமது அன்றாட வாழ்வில் நீக்கமற நிறைந்து விட்ட கணினி அறிவை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து +1, +2 மாணவ, மாணவியர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மடிக்கணினி வழங்கும் மகத்தான திட்டத்தை, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள் முதல் எனது தலைமையிலான அரசு துவங்க உள்ளது.

ஏழை, எளிய மக்களுக்குப் பயன் தரக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே நேரத்தில், தமிழகத்தில் பெருமளவில் முதலீடு செய்யும் வகையில், தொழில் முனைவோர்களை ஈர்ப்பதற்கான தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தும்.

பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைவரையும் சென்றடைய வேண்டுமெனில் வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சி சீராக அமைய வேண்டும். எனவே, முதன்மைத் துறையான விவசாயம், கால்நடைத் துறை, மீன்வளம் போன்றவற்றின் வளர்ச்சிக்காக எனது தலைமையிலான அரசு சிறப்பான திட்டங்களைத் தீட்டி உள்ளது.

அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே வறுமை ஒழிவது மாத்திரம் அல்லாமல், பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் என்ற உண்மையை எனது தலைமையிலான அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே தான், ஏழை, எளிய குடும்பங்களில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தி, அந்தக் குடும்பங்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன் அளிக்கக் கூடிய பல புதிய மக்கள்நலத் திட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

உங்கள் அன்பையும், ஆதரவினையும் பெற்றுள்ள நான், தமிழக மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உங்களுக்காகத் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

உங்கள் அனைவருக்கும் என் இனிய சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கி,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 17.08.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வன விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், மனிதர்கள், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வன விலங்குகளால் தாக்கப்படுவதால், மனித உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, வன விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துதல்; அவை விரும்பி உண்ணும் பயிர்களை வனப் பகுதிகளில் வளர்ப்பது; வனங்களின் எல்லைப் பகுதிகளில் தடைகளை உருவாக்குவது; மனித உயிர்களுக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடமைகளுக்கும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல் திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்று, 04.08.2011 அன்று இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. வன விலங்குகளால் மனித உயிரிழப்பு ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர் இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், பயிர்ச் சேதம், உடைமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில், வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகை இதுவரை ஏக்கருக்கு 15,000 ரூபாய் என்ற அளவில் இருந்து, ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படுவதுடன், சேதம் அடைந்த தென்னை மரங்களுக்கும், மரத்திற்கு 500 ரூபாய் என்ற அளவில் இழப்பீடு வழங்கப்படும். வன விலங்குகளால், ஓட்டு வீடுகள் / RCC வீடுகள் / கூரை வீடுகள், எந்த அளவுக்கு சேதம் அடைந்தாலும், இதுவரை 5,000 ரூபாய் மட்டும் இழப்பீடாக வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை இனி, முழுவதும் சேதம் அடைந்த ஓட்டு வீடு / RCC வீடுகளுக்கு 35,000 ரூபாயாகவும், கூரை வீடுகளுக்கு 10,000 ரூபாயாகவும் இனி உயர்த்தி வழங்கப்படும். பெருமளவில் பாதிப்புக்கு உள்ளான ஓட்டு வீடு / RCC வீடுகளுக்கு 5,000 ரூபாயும், கூரை வீடுகளுக்கு 2,000 ரூபாயும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு 1,500 ரூபாயும் இனி வழங்கப்படும். மேலும், வன விலங்குகளால் ஆடு, செம்மறியாடு, பன்றி போன்ற கால்நடைகள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை அனைத்துக்கும் 1000 ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இனி, அந்தத் தொகை, ஆட்டுக்கு 2,000 ரூபாய் என்ற அளவிலும், செம்மறி ஆட்டுக்கு 1,500 ரூபாய் என்ற அளவிலும், பன்றிக்கு 1,000 ரூபாய் என்ற அளவிலும் வழங்கப்படும். கோழி போன்ற வீட்டில் வளர்க்கப்படும் பறவை இனங்கள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை பறவைக்கு 30 ரூபாய் என்ற அளவில் இருந்த இழப்பீட்டுத் தொகை, இனி பறவைக்கு 100 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும். வன விலங்குகளால் உடைமைகளுக்கு இழப்பு ஏற்பட்டால், உண்மையான இழப்பின் அளவு அல்லது 100 ரூபாய், இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகை இழப்பீட்டுத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டது. இனி, வன விலங்குகளால் உடைமைகள் இழப்பு ஏற்பட்டால், 2,000 ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
***19.08.2011** அன்று விதி **110**–ன் கீழ்*
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

ஓமந்தூரரார் அரசினர் தோட்டத்தில் நவீன மருத்துவமனை உருவாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நோய் இன்னதெனக் கண்டறிந்து, பின் அது உண்டான காரணத்தை அறிந்து, அதன் பின் அந்நோயைத் தீர்ப்பதற்கான வழிமுறையைக் கையாண்டு, நோய் நீங்க மருத்துவம் செய்ய வேண்டும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளை எய்தும் நோக்குடன், “தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம்”– National Rural Health Mission; “தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம்” – Tamil Nadu Health System Project என்னும் இரண்டு மாபெரும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தகுதி வாய்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், நவீன உபகரணங்கள் ஆகியவற்றுடன் சுகாதாரமான சுற்றுச்சூழலைக் கொண்ட தரமான மருத்துவச் சேவையை தாராளமாக அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் விதமாக, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துதல்; உயிர் காக்கும் உபகரணங்களைத் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்தின் கீழ் 55 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்குதல்; உணவுப் பாதுகாப்பு–மருந்துக் கட்டுப்பாடு நிருவாகத்திற்கென தனியாக ஒரு ஆணையரகத்தை உருவாக்குவது; திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம், அதாவது, Super Speciality Centre mik¤jš; மக்கள் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகள் அளிக்கக் கூடிய “நடமாடும் மருத்துவமனை” என்னும் புதிய திட்டம் உட்பட பல்வேறு சிறப்புத் திட்டங்கள் எனது தலைமையிலான அரசின், 2011–2012ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள்.

இவை மட்டும் அல்லாமல், அனைவருக்கும் மருத்துவச் சேவையை நல்கும் வகையில், “முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்” தொடங்கப்படும் என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதன் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள், பல்வேறு நோய்களுக்கும், தரமான, உயரிய சிகிச்சையினை இலவசமாகப் பெறும் வகையில், பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை, அதாவது, Multi Super Speciality Hospital ஒன்றை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவமனை, சென்னை மாநகரத்தின் மையப் பகுதியான அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், முந்தைய தி.மு.க அரசால், புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காகக் கட்டப்பட்ட, **97,829** சதுர மீட்டர் தளப் பரப்பு கொண்ட பிளாக் 'A' கட்டடத்தில் அமைக்கப்படும். இந்தக் கட்டடம், சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத்தில் தற்போது உள்ள **36** துறைகளும் செயல்படுவதற்குப் போதுமானதல்ல என்பதாலும்; பயன்படுத்தக் கூடிய இடம் வெகுக் குறைவாக இருப்பதால், அலுவலகப் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் இந்தக் கட்டடம் இல்லை என்பதாலும்; இரு வேறு கட்டடங்களில் இருந்து தலைமைச் செயலகம் செயல்பட முடியாது என்பதாலும்; சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

தற்போது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டடம், ஏழை, எளிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், இந்தப் பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனையை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கட்டடத்தில் பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை அமையும் வகையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு, மருத்துவ வல்லுநர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு, உயர் தர மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான நவீன உபகரணங்கள் வாங்கப்பட்டு, இந்த மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவமனை, புது டெல்லியிலுள்ள AIIMS (All India Institute of Medical Sciences) மருத்துவமனைக்கு இணையான வசதிகளுடன் விளங்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மேலும், தற்போது கட்டப்பட்டு வரும் பிளாக் 'B' கட்டடங்களில் புதியதாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 22.08.2011 அன்று*
தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக
(Video conferencing) புதிதாக கட்டப்பட்டுள்ள மதுரை மாவட்ட
காவல்துறை அலுவலகம், காவல் நிலையங்கள், மகளிர் காவல்
நிலையங்கள், காவலர் குடியிருப்புகள், காவல் துறையின் பிற
பிரிவு அலுவலகங்கள் மற்றும் சிறைத்துறையினருக்கான
குடியிருப்புக் கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேசியது.

காவல் துறையினர் பொதுமக்களுக்கு உற்ற நண்பனாக இருந்து தங்கள் பணிகளை செவ்வனே ஆற்ற வேண்டும்

“**வ**ணக்கம். தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள மதுரை மாவட்ட காவல் அலுவலகக் கட்டடம், 21 புதிய காவல் நிலையக் கட்டடங்கள், துறையின் பிற அலுவலகக்

கட்டடங்கள், 8 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 480 காவலர் குடியிருப்புகள், சிறைத்துறையினருக்கான 67 குடியிருப்புகளைத் திறந்து வைத்ததில் உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தில் சிறந்த சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பராமரிப்பது எனது தலைமையில் அமைந்துள்ள அரசின் தலையாய கடமையாகும். அதன் ஓர் அங்கமாக இன்று புதியதாகக் கட்டப்பட்டுள்ள காவல் நிலையங்களும் பிற கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. காவல்துறையில் பணியாற்றுபவர்கள் மக்களுக்கு உற்ற நண்பராகவும், ஆலோசகராகவும் மற்றும் மனிதநேயம் மிக்கவராகவும் பணியாற்ற வேண்டும் என்று காவல்துறையினரை கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் பொதுவாக காவல் நிலையத்திற்குச் செல்லவே அச்சப்படுவார்கள். தமிழகத்து மகளிர் எந்தவிதமான அச்ச உணர்வுமின்றி, தயக்கமுமின்றி, காவல் நிலையங்களுக்குச் சென்று தங்களுக்குள்ள குறைகளை அங்கே எடுத்துக்கூறி அவற்றிற்கு நிவாரணம் தேடவேண்டும், பரிகாரம் தேடவேண்டும் என்பதற்காகவே முதலில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை 1992ஆம் ஆண்டு நான் தொடங்கிவைத்தேன். அதன் பின்னர் தமிழகமெங்கும் பல அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் துவக்கப்பட்டு நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. இன்றைய தினம் 8 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் கட்டடங்களைத் திறந்து வைத்ததில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

காவலர்களுக்கான குடியிருப்புகள் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டும், அப்போதுதான் அவர்கள் பணியில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட இயலும். இதனைக் கருத்தில் கொண்டு தற்பொழுது தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள 480 புதிய காவலர் குடியிருப்புகளை இன்று திறந்து வைத்ததில் நான் உள்ளபடியே உவகை கொள்கிறேன். காவல்துறையினருக்கு எனது தலைமையிலான அரசு பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறது.

காவல்துறையினர் பொதுமக்களுக்கு உற்ற நண்பனாக இருந்து தங்கள் பணிகளைச் செவ்வனே ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைத்துறையினரின் குடியிருப்புகள் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் கைதிகளைப் பாதுகாக்கும் பணியில் தங்களை முழு ஈடுபாட்டுடன் ஈடுபடுத்திக் கொள்ள முடியும். இதனைக் கருத்தில் கொண்டு தற்பொழுது கட்டப்பட்டுள்ள சிறைத்துறையினருக்கான 67 புதிய குடியிருப்புகளை இன்று திறந்து வைத்ததில் நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இத்தருணத்தில் சிறைத்துறையினர் தங்கள் பணிகளை சிறந்த முறையில் ஆற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 23.08.2011 அன்று சட்டமன்றப் பேரவையில் 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்க சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.*

தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் சித்திரை மாதம் தான்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் மொழி மீதும், தமிழர்கள் மீதும், தனக்கு மட்டுமே அக்கறை இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தைப் பொதுமக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியால் தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டம், 2008ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்தச் சட்டம், ஒரு சுய விளம்பரத்திற்காக இயற்றப்பட்டதே தவிர, இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு, எந்தவித நன்மையும் இல்லை. மாறாக, ஆண்டாண்டுக் காலமாக சித்திரை மாதப் பிறப்பை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடிக் கொண்டு இருக்கும் தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

ஒரு நாட்டிலே, ஒரு சட்டம் இயற்றப்படுகிறது என்றால், அந்தச் சட்டம், அந்த நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டும்; அல்லது, இது போன்ற சட்டம் தேவை என்று மக்கள் கோரிக்கை விடுத்திருக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், அந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். இவை எதுவுமே இல்லாமல், யாருக்கும் பயனளிக்காத ஒரு சட்டத்தை முந்தைய தி.மு.க. அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சட்டம் இயற்றப்பட்டதையடுத்து, உடனடியாக சென்னையில் திரு. கருணாநிதிக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. திரு. கருணாநிதியின் துதிபாடிகள் அனைவரும் அவரைப்

போற்றினர். இதைத் தவிர, வேறு யாருக்கும் எந்த வித நன்மையும் இந்தச் சட்டத்தினால் ஏற்படவில்லை. தமிழக மக்கள் மத்தியில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக, தமிழுக்கு மிகப் பெரிய சிறப்பினை செய்தது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்காக, இதுபோன்ற சட்டத்தினை திரு. கருணாநிதி இயற்றியுள்ளார் என்பதுதான் உண்மை.

தமிழர் காலக் கணிப்பு முறையின்படி, ஒரு ஆண்டுக்குரிய 12 மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாகும். இது சூரியனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. சூரியன், மேஷ ராசிக்குள் நுழைவதிலிருந்து, அந்த ராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதம் ஆகும். ஆண்டின் தொடக்கம் வசந்தமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், சித்திரை மாதத்தை ஆண்டுத் தொடக்கமாக நம் மூதாதையர்கள் கணக்கிட்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. பல்லாண்டுக் காலமாக, சித்திரை முதலாம் நாளையே புத்தாண்டாகத் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தொடங்குவது என்பது, வான நூலையும், பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே, பருவங்களின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு, இயற்கையை ஒட்டி, சித்திரை மாதத்தைத் தொடக்க மாதமாகக் கொண்டமைந்த ஆண்டுக் கணக்கீடுதான் பூர்விகத் தமிழ் மரபாக இருக்க முடியும். கோடைக் காலமே முதலாவது பருவம் என சீவக சிந்தாமணியில் வருணிக்கப்பட்டுள்ளது.

“சித்திரையே வா! நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்க வா!” என்று சொல்லும் மரபு இருக்கும் காரணத்தால், சித்திரை மாதமே தமிழ்ப் புத்தாண்டுக்கு உரிய, பொருத்தமான நாள் ஆகும் என தெய்வத்திரு மதுரை ஆதீனம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். சித்திரைத் திங்கள் முதல் நாளை ஆண்டின் துவக்க நாளாகக் கொண்டாடலாம் எனப் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பண்டைத் தமிழர் வானவியல் ஆதாரப்படி, தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் சித்திரை மாதம் தான்.

சங்க இலக்கியத்தின் மிகப் பழைய இலக்கியமான, பத்துப்பாட்டு இலக்கியத்தின் நெடுநல்வாடையில், சூரியன் மேஷத்தில் சஞ்சாரம் செய்து சுழற்சியைத் தொடங்கும் உண்மையை நக்கீரனார் தெளிவுபடுத்தி இருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1912ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப் பேரகராதியிலும் சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல்

திரு. வி. ராமலிங்கம் பிள்ளை அவர்களும், "சித்திரை மாதத்தில் புத்தாண்டு தெய்வம் திகழும் திருநாட்டில்" என்ற தனது வாழ்த்துப் பாடலின் மூலம் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் சித்திரை மாதம் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், பல்வேறு கல்வெட்டுகளும், எண்ணற்ற இலக்கியங்களும், சித்திரை மாதம் முதல் நாளன்று தமிழ்ப் புத்தாண்டு தொடங்குவதை உறுதிப்படுத்துகின்றன.

இந்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட போது, இதை வரவேற்று பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், திரு. என். நன்மாறன் அவர்கள், தமிழ்ப் புத்தாண்டை மாற்றி அமைத்ததற்கான காரணங்கள் இருந்தால் அதை தெளிவுபடுத்த வேண்டும் என்று கூறி இருக்கிறார். ஆனால், கடைசி வரையில் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

மேற்படிச் சட்டம் இயற்றப்படும் போது, அதற்கான நோக்கக் காரண விளக்க உரையில், தைத் திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால், தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து, நடைமுறைப்படுத்திட அரசு முடிவு செய்துள்ளதாகவும், அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு சட்டம் இயற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும், சித்திரைத் திங்கள் முதல் நாளையே கோடானு கோடி தமிழ் மக்கள் தமிழ்ப் புத்தாண்டு தினமாகக் கொண்டாடி வருகின்றனர். இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக மக்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. மக்கள் நம்பிக்கையை சட்டம் மூலம் மாற்றுவது சரியல்ல.

எனவே, தமிழக மக்களின் உணர்வுகளுக்கும் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், யாருக்கும் பயனளிக்காத, காலங்காலமாக போற்றிப் பாதுகாத்து வந்த மரபுகளை மீறுகின்ற, தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்ற, இந்தச் சட்டத்தினை ரத்து செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற எனது கருத்தினை இங்கே பதிவு செய்ய விழைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்,*
24.08.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்,
காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும்
மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீது
நடந்த விவாதத்திற்கு அளித்த பதிலுரை.

குற்றச் சம்பவங்களைத் தடுக்க தீவிரமான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த மாமன்றத்தில் இன்று நான் தாக்கல் செய்த காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்தார்கள். இந்த விவாதங்களுக்கு இப்போது எனது பதிலை அளிக்கிறேன்.

ஒரு மாநிலம் வளர்ச்சி பெற வேண்டும் எனில்; அந்த மாநிலத்தின் மக்கள் வளம் பெற வேண்டும் எனில்; மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும். மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. மனித வளம் மேம்பட்டால் அந்த மாநிலத்தில் வளர்ச்சி அதிகமாக இருக்கும். மாணவ மாணவியருக்குச் சிறப்பான கல்வி அளிப்பதாலும்; மக்களின் உடல் நலம் பேணிப் பாதுகாக்கப்படுவதாலும்; மனித வளம் மேம்பாடு அடையும். இவ்வாறான மனித வளம் மேம்படுவதற்கான பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களின் பயனால் ஏழை, எளிய மக்கள் இன்றியமையாதத் தேவைகளைப் பெறுவதோடு பொருளாதார வளர்ச்சியில் அவர்களும் பங்கு பெற இயலும்.

ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும் எனில், அங்கு அமைதியான சூழ்நிலை நிலவ வேண்டும். மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளால் பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படும் போது, அங்கே பொருளாதார வளர்ச்சிக்கு இடம் இருக்காது. அமைதி குன்றிய சூழ்நிலையில் தங்களைத் தற்காத்துக் கொள்வதிலேயே மக்கள் தங்களின் காலத்தையும், ஆற்றலையும் செலவிட நேர்வதால் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட இயலாது. எனவேதான், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனிதனின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியக் காரணியாக விளங்குவது அமைதியான சூழல்.

தனது உரிமைகளை, உடைமைகளை வேறு எவரும் பறித்துக் கொள்வார்கள் என்ற அச்ச உணர்வின்றி; தன்னுடைய வளர்ச்சிக்குத் தேவையானவற்றை சமூகச் சூழலில் பெறுவதற்காக மனிதனால் ஏற்படுத்தப்பட்டதே சட்டம் ஆகும். இந்தச் சட்டம் காலந்தோறும், இடந்தோறும் மாறுதலுக்கு உட்பட்டதாகும். ஒரு குறிப்பிட்ட சமுதாயம், தனது வளர்ச்சிக்கு அடிப்படையாக எவை எவை தேவை எனக் கருதுகின்றதோ, அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான சட்ட திட்டங்களை வகுத்துக் கொள்கிறது. அந்த சட்ட திட்டங்களை அந்தச் சமுதாயத்தில் உள்ள அனைவருமே மதித்து நடந்தால், அங்கே காவலருக்கோ, நீதிமன்றத்திற்கோ எந்த வித வேலையும் இல்லை. இத்தகைய ஒரு சூழ்நிலைதான்,

அயோத்தியில் நடைமுறையில் இருந்தது எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ராமாயணத்தில் குறிப்பிடுகிறார். அவர் அயோத்தியைப் பற்றி குறிப்பிடும் போது,

"..... ....

கள்வார் இலாமைப் பொருட் காவலும் இல்லை யாதும்

கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ."

என்று கூறுகிறார். அதாவது, அயோத்தி நகரில், களவு செய்பவர் எவரும் இல்லாமையால், பொருட்களைப் பாதுகாப்பு செய்வதற்காகக் காவல் புரிபவர் யாரும் இல்லை. அங்கு தானம் பெறுபவர்கள் எவரும் இல்லாததால், கொடை அளிப்பவர்களும் எவரும் இல்லை என்று கம்பர் குறிப்பிடுகிறார். அவ்வாறு சமூக சட்ட திட்டங்களை அனைவரும் மதித்து நடக்கக் கூடிய இடம் இப்போது எங்கேயும் இல்லாததால், சட்ட மீறல்களும், குற்றங்களும் நடைபெறுகின்றன. அதனைக் கண்காணித்து, குற்றங்களைத் தடுக்கவும், அவ்வாறு குற்றங்கள் நிகழாமல் தடுக்க இயலாத போது, குற்றம் புரிந்தவர்களை விரைந்து கண்டுபிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, தக்க தண்டனைப் பெற்றுத் தருவதும் காவலரின் கடமை ஆகிறது.

சட்ட திட்டத்தை மதிப்பவர்களுக்கு உற்ற நண்பனாகவும்; சட்டத்தையும், மற்றவர்களின் உரிமைகளையும் மீறுபவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடிய எதிரியாகவும் காவலர் விளங்க வேண்டும். அதாவது, காவலர் என்பவர் நாணயத்தின் இரு பக்கம் போன்றவர். சட்டப்படி நடப்பவருக்கு நண்பர் எனும் பக்கம் தெரிய வேண்டும். சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரி என்ற பக்கம்தான் தெரிய வேண்டும்.

ஒரு மாநிலத்தின் பொருளாதாரம் மேம்பட அந்த மாநிலம் தொழில் துறையிலும் மிகுந்த முன்னேற்றம் அடைவது அவசியம் ஆகும். தொழில் துறையில் மாநிலம் முன்னேற்றம் அடைய வேண்டும் எனில், அந்த மாநிலத்தில் உள்ள தொழில்முனைவோர் மட்டும் அல்லாமல், பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களும், பிற நாட்டினரும் விரும்பி வந்து தொழில் தொடங்கும் இடமாக அந்த மாநிலம் அமைய வேண்டும். தொழில் தொடங்க முன்வருவோர், தங்கள் தொழில் வளர்ச்சிக்காக, தடையற்ற மற்றும் தரமான மின்சாரம், சிறந்த சாலை வசதி, நவீன துறைமுக வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள்,

சிறப்பாகப் பணியாற்றக் கூடிய ஒழுக்கமான பணியாளர்கள்; நிலையான அரசு போன்ற பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டாலும்; சட்டம்—ஒழுங்கில் சீரான நிலைமையைத் தான் தொழில்முனைவோர் மிகவும் முக்கியமாகக் கருதுகிறார்கள். எனவே, பொதுமக்களின் அமைதியான வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல், மாநிலத்தில் தொழில் பெருக்கத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதிலும் சட்டம்—ஒழுங்கு முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்த அடிப்படையில்தான், நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் போதெல்லாம், சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், காவலர்கள் எவ்வித இடையூறும், அச்ச உணர்வும் இன்றி, தங்கள் பணிகளைச் செம்மையாகவும், நேர்மையாகவும் மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருவதற்கும்; மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறேன். அவ்வாறான ஒரு சூழ்நிலையை, நான் மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்ற உடனேயே ஏற்படுத்திக் கொடுத்த காரணத்தால்தான், முந்தைய தி.மு.க. ஆட்சியில், சமூக விரோதிகளைக் கண்டு காவலர்கள் அஞ்சி இருந்த நிலைமை மாறி; காவலர்களைக் கண்டு சமூக விரோதிகள் அஞ்சும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இன்று, சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உள்ளே இருக்க வேண்டியவர்கள் உள்ளே இருக்கிறார்கள். தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறி விட்டது. மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள். குழந்தைகள் கடத்தல் என்பது இல்லை. குழந்தைகள் பள்ளிகளுக்குச் சென்று விட்டு பத்திரமாகத் திரும்புகிறார்கள். பெண்கள், குழந்தைகள் என அனைவரும் சுதந்திரமாக உலா வருகிறார்கள்.

நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு, காவலர்கள் சமூக விரோதிகளைக் கண்டு அஞ்சாமல் இருப்பது மட்டும் அல்லாமல், தங்கள் பணிகளில் எந்த விதமான இடையூறோ; அல்லது எவரிடமிருந்தோ, அதாவது, உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்று எவரிடமிருந்தும் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் தங்கள் பணிகளை நியாயமாகவும், நேர்மையாகவும் மேற்கொண்டால்தான், சட்டத்தின் மாட்சிமை காக்கப்பட்டு; பொதுமக்களுக்கான நியாயம் வழங்கப்பட்டு; சட்டத்தின் மீதும், அரசின் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை வைப்பார்கள்.

எனவேதான், நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்கும் போதெல்லாம், காவலர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பதுடன், அவர்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் மட்டும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். ஆனால் முன்னாள் முதலமைச்சர் திரு கருணாநிதி, இந்த மாமன்றத்தில், ஒரு முறை பேசும் போது, “காவல் துறை என்பது ஒரு பொதுவான துறைதான். அது நாங்கள் ஆட்சியிலே இருந்தால் எங்களுக்குக் கட்டுப்பட்ட துறை. நீங்கள் ஆட்சியிலே இருந்தால் உங்களுக்குக் கட்டுப்பட்ட துறைதான்” என்று கூறி உள்ளார். காவல் துறை ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் சொற்படி எல்லாம் கேட்கின்ற துறை அல்ல. காவல் துறையைப் பொறுத்த மட்டில், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அரசியல் கட்சிக்கு ஏற்றவாறு கொள்கைகளோ, கோட்பாடுகளோ, நோக்கங்களோ மாறக் கூடியது அல்ல. எனவேதான், காவல் துறை என்பது ஆட்சி அதிகாரத்திலே இருப்பவர்களுக்குக் கட்டுப்பட்ட துறை அல்ல; அது, நீதிக்கும், நேர்மைக்கும், சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்ட துறை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையின் பணிகளில் குறுக்கீடு செய்ய யாருக்குமே அதிகாரம் இல்லை என்பதுதான் எனது திடமான கருத்து ஆகும். காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கின்ற முதலமைச்சர் கூட, அதன் செயல்பாடுகளில் தலையிட முடியாது. சட்டம்–ஒழுங்கு நிலை நாட்டப்பட வேண்டும் என்றோ; குற்றவாளிகள் விரைந்து கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றோ; குற்றவாளிகளுக்குத் தண்டனைப் பெற்றுத் தர வேண்டும் என்றோ; சட்டத்திற்கு உட்பட்ட முறையில்தான், அறிவுரை வழங்க இயலும். அவ்வாறு இல்லாமல், குற்றம் செய்தவரை காவல் துறையினர் கைது செய்யும் போது, அவ்வாறு கைது செய்யப்பட்டவரை விட்டுவிட வேண்டும் என்று காவல் துறை அதிகாரிகளுக்கோ, காவலருக்கோ உத்தரவு இடவோ, அறிவுரை வழங்கவோ எவராலும் முடியாது. அவ்வாறு ஒருவர் உத்தரவு வழங்கினால், அது காவல் துறையின் பணிகளில் தலையிட்டு, குறுக்கீடு செய்து, காவலர் தமது கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவிப்பதாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும். சமீபத்தில், ஒரு பேட்டியில், செய்தியாளர், “ஸ்விஸ் வங்கியில் உங்களுக்குப் பணம் இருக்கிறது என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட ஏதாவது பின்னணி இருப்பதாக நினைக்கிறீர்களா ?” என்று கேள்வி கேட்ட போது,

காவல் துறைக்குப் பொறுப்பு வகித்த முன்னாள் முதலமைச்சர் திரு கருணாநிதி கூறிய பதில் பின்வருமாறு: “தெரியவில்லை. இந்தப் பத்திரிகையின் ஆசிரியரோ அல்லது உரிமையாளரோ அல்லது இந்தப் பத்திரிகையிலே தொடர்புடைய ஒருவரை, கடந்த ஆறேழு மாதங்களுக்கு முன்பு, அதாவது நான் ஆட்சியிலே இருந்த போது—அவரை காவல் துறையினர் கைது செய்த போது—நான் உடனடியாகத் தலையிட்டு, பத்திரிகைக்காரர்களை எல்லாம் கைது செய்ய வேண்டாம் என்று நான் உத்தரவிட்டு அவரை விடுதலை செய்தேன். அவர் என்னிடம் அதற்காக நன்றி தெரிவித்துவிட்டுப் போனார். ஒரு வேளை அந்த நன்றியை இப்போது அவர் காட்டியிருக்கிறார் என்று கருதுகிறேன்” என்று கூறி உள்ளார். இது உண்மையாக இருக்குமானால், காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட நபரை வாய்மொழியாக விடுதலை செய்யுமாறு உத்தரவிடுவது, காவல் துறையின் நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்வதுதான். இதை என்ன என்று சொல்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் 5 முறை முதலமைச்சராக இருந்தவர். ஆனால், இன்று வரை சட்டத்தைப் பற்றி அவர் தெரிந்து கொள்ளவில்லை. காவல் துறையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன என்பதும் அவருக்குத் தெரியவில்லை. ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர் அதைப் பெருமையாகக் கருதிக் கொண்டு காவல் துறையினர் கைது செய்த ஒருவரை விட்டுவிடுங்கள் என்று நான் உத்தரவிட்டேன் என்று சொல்லுகிறார். ஆக, சட்டத்தைப் பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளாமல் இத்தனை ஆண்டுக் காலம் வெறும் மனோகரா பாணியில் வசனத்தைப் பேசிக் கொண்டு காலத்தை ஓட்டி இருக்கிறார் என்று தெரிகிறது.

காவல் துறையின் பணிகளில் குறுக்கீடுகள் பற்றி இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பேசினார்கள். இப்போது நானும் பேசிக் கொண்டு இருக்கிறேன். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காவல் துறையின் பணிகளில் யார்தான் குறுக்கிடுவது என்று ஒரு வரைமுறையே இல்லாமல் போய்விட்டது. அமைச்சர்கள் குறுக்கிடுவார்கள், அதிகாரிகள் குறுக்கிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், அதையெல்லாம் தாண்டி பல வினோதமான சம்பவங்கள் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்றிருக்கிறது.

ஒருமுறை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மத்திய சென்னைப் பகுதியில், நள்ளிரவு, இரண்டு மணி அளவில் ஒரு வாலிபர் குடித்துவிட்டு ரகளை செய்து கொண்டு இருந்தார். இதைப்பற்றிய புகார் கன்ட்ரோல் ரூமுக்கு சென்றது. கன்ட்ரோல் ரூமிலிருந்து அங்கே ரோந்துப் பணியிலிருந்த அந்த jurisdictionஇல் உள்ள பெண் எஸ்.ஐ.க்கு தகவல் கொடுக்கப்பட்டது. இப்படி ஒருவன் குடித்துவிட்டு அங்கே ரகளை செய்து கொண்டிருக்கிறான்; அவனை கைது செய்ய வேண்டும் என்று உத்தரவு போனது. உடனே அந்த பெண் எஸ்.ஐ. தனது கடமையைச் செய்து அந்த ரகளை செய்த வாலிபரைக் கைது செய்து ஜீப் வண்டியில் ஏற்றினார். உடனே ஒரு பெண் அங்கே வந்தார். அந்தப் பெண் எஸ்.ஐ.–ஐ கையைப் பிடித்து கீழே இறக்கி கன்னத்தில் பளார் என்று ஒரு அறை அறைந்தார். என்னடி நினைச்சிக்கிட்டு இருக்கே? என் பிள்ளையையாடி நீ கைது செய்யற? யாருடி நீ என்று கேட்டு தன் பையனைக் கையைப் பிடித்து, வண்டியை விட்டு இறக்கி அழைத்துக் கொண்டுப் போய்விட்டார். அந்தப் பெண் எஸ்.ஐ.–ஆல் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அப்படி பெண் எஸ்.ஐ.–ஐ கீழே இழுத்து, கன்னத்தில் அறைந்த அந்த பெண்மணி யார்? முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகள் செல்வியின் வீட்டு வேலைக்காரி. இந்த லட்சணத்தில் ஆட்சி நடைபெற்று இருக்கிறது. இந்த லட்சணத்தில் காவல் துறையினர் செயல்பட்டு இருக்கிறார்கள். அந்தப் பெண் எஸ்.ஐ., தான் பணிபுரியும் காவல் நிலையத்திற்குச் சென்று, தனக்கு மேல் இருக்கின்ற அதிகாரி, ஒரு ஆய்வாளரிடம், இன்ஸ்பெக்டரிடம் புகார் சொல்லியிருக்கிறார். இந்த மாதிரி என்ன அடிச்சிட்டாங்க, நடவடிக்கை எடுக்கணும் என்று அப்போது அந்த ஆய்வாளர், அவருக்கு ஒரு தகப்பனார் போல் இருந்து அறிவுரை கூறி இருக்கிறார். "நீ தொடர்ந்து காவல் துறை பணியில் இருக்கணுமா? இதைக் கண்டுக்காம அப்படியே வீட்டுக்குப் போய்விடு" என்று அறிவுரை வழங்கி இருக்கிறார்.

ஆக, அவ்வாறு, காவல் துறையினர் தங்கள் கடமைகளை செய்ய விடாமல், முந்தைய தி.மு.க. ஆட்சியில் பல்வேறு அதிகார மையங்களும் குறுக்கிட்டார்கள் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள்.

எனக்குத் தெரிந்தவரை முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் குடும்பத்திலேயே 365 அங்கத்தினர்கள்

இருக்கிறார்கள். அவர்கள்தான் குறுக்கிட்டார்கள் என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம். அவர்கள் வீட்டு வேலைக்காரர்கள் எல்லாம் காவல்துறை பணிகளில் குறுக்கிட்டு இருக்கிறார்கள்.

எனவேதான், முந்தைய தி.மு.க. அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு காவல் ஆணையம்–Tamil Nadu Police Commission தனது பல்வேறு பரிந்துரைகளில், பின்வரும் பரிந்துரையையும் அளித்திருந்தது:

"37.30 The Commission suggests that while politicians as champions of the cause of the public have a right to represent the public demanding justice some guidelines in the form of a Code of Conduct may be laid down. One of the important codes of conduct should be that politicians should take up any matter only with higher-ups viz. SDOs and above and should not visit Police Stations for any representations. In other words things will improve vastly if politicians of any rank desist from visiting the Police Station."

காவல் துறையின் நியாயமான நடவடிக்கைகளில் தலையிடுவதுதானே முந்தைய தி.மு.க. ஆட்சியின் வாடிக்கையான நிகழ்வாக இருந்தது ? எனவேதான், முன்னாள் முதலமைச்சர் திரு கருணாநிதியின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்ட அரசாணை எண்.11, வெளியீடு–8, உள் துறை, நாள் 06.01.2009இல், இந்தப் பரிந்துரைக்கு "Not agreed to, as it is neither practical nor enforceable" என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதாவது அரசியல்வாதிகள் காவல் நிலையங்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும், அதனை நடைமுறைப்படுத்த இயலாது என்றும் உத்தரவிட்டு, காவல் துறையின் நடவடிக்கைகளில் தி.மு.க. அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளைத் தடுக்க இயலாது என்று ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தையே இந்த அரசாணை மூலம் அளித்து உள்ளார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி ஆக இப்படி ஒரு அரசாணையை வெளியிடுவதே சட்டவிரோதமான செயல் என்று கூடத் தெரியாத ஒருவர் முதலமைச்சராக இத்தனை ஆண்டுக் காலம் தமிழ்நாட்டை ஆண்டிருக்கிறார்.

முந்தைய தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்கள் முதல் அடிமட்டத் தொண்டர்கள் வரை, சமூக விரோதக் கும்பல்களின் உதவியுடன், நிலம் மற்றும் சொத்துகளின் உரிமையாளர்களை மிரட்டி, அவர்களது சொத்துகளை அபகரித்தல்; பிரச்சினையுள்ள சொத்துகளில் தலையிடுதல்; நில உரிமையாளர்களைக் கடத்திச் சென்று மிரட்டி, அவர்களின் சொத்துகளை மிகக் குறைந்த விலைக்கு தங்கள் பெயரில் பதிவு செய்து கொள்ளுதல் ஆகியவற்றை அரங்கேற்றி வந்தனர். அது மட்டுமன்றி, போலியான ஆவணங்கள் தயார் செய்து, சொத்துகளில் அத்துமீறி நுழைந்து, உரிமையாளர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி அந்தச் சொத்துகளை தங்கள் பெயரில் பதிவு செய்து கொண்ட அவல நிலைகளும் அரங்கேறின. இவ்வாறு, அபகரிக்கப்பட்ட நிலங்கள், சொத்துகள் குறித்து முந்தைய தி.மு.க. ஆட்சியிலேயே புகார்கள் பெறப்பட்டிருந்தும், முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எனவேதான், எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் நில அபகரிப்பு குறித்து புகார்கள் காவல் துறையிடம் குவியத் தொடங்கின. மூன்றே மாதங்களில், 8,947–க்கும் அதிகமான புகார்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு புகார்கள் குவிந்து வருவதால், வழக்கமான பணிகளை மேற்கொள்ளும் காவல் துறைப் பிரிவுகளால் இந்தப் புகார்களைக் கையாள முடியாத அளவிற்கு வேலைப்பளு அதிகரித்துள்ளது. எனவேதான், நில அபகரிப்பு குறித்த புகார்களை விசாரித்து, விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், காவல் துறை தலைமையகத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நில அபகரிப்புப் புகார்களுக்கான சிறப்புப் பிரிவுகளை அமைக்க நான் ஆணையிட்டேன். இது மட்டும் அல்லாமல், நில அபகரிப்புக் குற்றங்களில் ஈடுபட்டவர்களின் மீது விரைந்து சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், 25 சிறப்பு நீதிமன்றங்களும், FAST TRACK COURTS, அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அரசு பதவியேற்ற பிறகு 8,947 புகார்கள் பெறப்பட்டுள்ளன. 462 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 419 நில ஆக்கிரமிப்பாளர்கள் கைது செய்யப்பட்டு, 415 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டு, நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற நில அபகரிப்புகள் குறித்து, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அப்போதே காவல் துறையிடம் புகார்களை அளித்தார்கள். ஆனால், அமைச்சர்களே இந்த அடாவடிச் செயல்களில் ஈடுபட்டால், காவல் துறை எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் ? கடந்த தி.மு.க. ஆட்சியில், நில அபகரிப்புச் செயல்களில் ஈடுபட்டவர்கள் அத்தனைப் பேருமே—தி.மு.க. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பரந்து விரிந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள், தி.மு.க. மத்திய—மாநில அமைச்சர்களின் உறவினர்கள். எனவே, காவல் துறையின் கைகள் கட்டப்பட்டு இருந்தன. அவர்களால் புகார்களின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை. ஆனால், எனது தலைமையிலான அரசு அமைந்தவுடன், காவலர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டு, காவலர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன், நில அபகரிப்பு பற்றிய புகார்கள் குறித்து, உடனடியாகத் தீவிர விசாரணை மேற்கொண்டு, சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதனால் முந்தைய தி.மு.க. ஆட்சியில் காவல் துறையைத் திட்டித் தீர்த்த பொதுமக்கள், இப்போது காவல் துறையையும், எனது தலைமையிலான அரசையும் மனதாரப் பாராட்டுகிறார்கள். இதில் அனைவரும் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால்—முந்தைய தி.மு.க. ஆட்சியிலும் இதே காவல் துறையினர்தான் இருந்தார்கள்—இன்றைய எனது தலைமையிலான ஆட்சியிலும், அதே காவல் துறையினர்தான் இருக்கிறார்கள். முதலமைச்சர் மாறியதால், எல்லாமே மாறி விட்டது. எனது தலைமையிலான ஆட்சியில், காவல் துறையினர் எடுத்த சீரிய நடவடிக்கையின் காரணமாக, உண்மையான உரிமையாளர்களிடம் சொத்துகள் ஒப்படைக்கப்பட்ட பல நிகழ்வுகள், மக்கள் மனதைக் குளிர வைத்துள்ளன. மக்கள் வயிற்றில் பால் வார்த்த அத்தகைய நிகழ்வுகள் பலவற்றை என்னால் இங்கே சுட்டிக்காட்ட முடியும். ஆனால் காலத்தின் அருமை கருதி, நான் புள்ளி விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை.

தி.மு.க.—வினராலும், அவர்களது கூட்டணி கட்சியினராலும் அபகரிக்கப்பட்ட சொத்துகள் மீட்கப்பட்டு, உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது மட்டுமின்றி, நில அபகரிப்புக்

குற்றம்புரிந்தவர்கள் கைது செய்யப்பட்டு, பலர் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு உள்ளனர்; சிறையில் உள்ளனர்; சிலர் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். நில அபகரிப்புக் குற்றம் புரிந்தவர்கள் மீது காவல் துறையினர் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு பொறுப்புணர்வுடன் காவல் துறையினர் எடுத்து வரும் சீரிய நடவடிக்கைகளால், தங்களது நிலத்தைத் திரும்பப் பெற்ற உரிமையாளர்கள், காவல் துறையை மனமுவந்து பாராட்டும் சூழ்நிலை தற்போது உருவாகி உள்ளது. இதற்கெல்லாம் முக்கியக் காரணம்–யார்? இன்றைய ஆட்சியின் தலைமைதான் இதற்கெல்லாம் காரணம் என்பதை நியாய உணர்வு படைத்த அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஏன் என்றால், கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒரு காவல் துறை, இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வேறு ஒரு காவல் துறை என்று காவல் துறை மாறுவதில்லை. அப்போது இருந்த அதே காவலர்கள்தான் இப்போது எனது ஆட்சியிலும் பணி புரிகிறார்கள். முந்தைய தி.மு.க. ஆட்சியில் நிகழ்ந்த அவலங்களுக்கு எல்லாம் அந்தத் தலைமைதான் காரணம். இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெறும் நல்லவைகளுக்கு எல்லாம் இந்தத் தலைமை தான் காரணம்.

காவலர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்யத் தூண்டுவது சரியான தலைமைதான். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி, Dwight D. Eisenhower தலைமைப் பண்பைப் பற்றி குறிப்பிட்டதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். “Leadership; is the art of getting someone else to do something you want done because he wants to do it”. காவலர் தனது கடமையை செய்யத்தான் விரும்புகிறார். அவ்வாறு செய்ய வைப்பது தலைமையின் திறமைதான். மேலும் மேலாண்மை குரு Peter Drucker மேலாண்மை பற்றியும் தலைமைப் பண்பு பற்றியும் கூறும் போது, “Management is doing things right; leadership is doing the right things” என்று குறிப்பிடுகிறார். மேலும் John Kenneth Galbraith என்னும் அமெரிக்கப் பொருளாதார வல்லுநர் தலைமைப் பண்பு பற்றிக் கூறுகையில்: “All of the great leaders, have had one characteristic in common: it was the willingness to confront unequivocally, the

major anxiety of their people in their time. This, and not much else, is the essence of leadership" என்று குறிப்பிடுகிறார். Galbraith கூற்றுப்படி, மக்களின் முக்கிய கவலைகளில் கவனம் செலுத்தும் தலைவராக நான் இருப்பதால்தான், மக்கள் நலனில் என்னால் அக்கறை செலுத்த முடிகிறது. ஆனால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி–மக்களைப் பற்றியே சிந்திக்கவில்லை. மக்களைப் பற்றி மறந்துவிட்டார். தன்னைச் சுற்றி துதிபாடிகளைச் சேர்த்துக் கொண்டு, பாராட்டு மழையில் நனைந்து, தன்னையே மறந்தார். காலையில் ஒரு சினிமா படம், பிற்பகலில் ஒரு சினிமா படம், மாலையில் ஒரு பாராட்டு விழா–இப்படியே காலத்தைப் போக்கி, 5 ஆண்டு ஆட்சிக் காலத்தையும் வீணடித்தார் திரு. கருணாநிதி. கூடவே தமிழ்நாட்டையும் சீரழித்தார்.

அடுத்தபடியாகக் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டம் குறித்து சில விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் தற்போது Modernization of Police Force என்னும் திட்டம் சர்வ சாதாரணமாக, taken for granted என்று சொல்வார்களே, அது போல வழக்கமான நடைமுறையாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் எல்லா மாநிலங்களிலும் இப்போது சர்வ சாதாரணமாகச் செயல்படுத்தப்படுவதற்கு முக்கியக் காரணம் இந்தத் திட்டத்தை முன்னோடியாகச் செயல்படுத்திய நான்தான் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991ஆம் ஆண்டுக்கு முன் இப்போது உள்ளது போல் பெருமளவில் Modernization of Police Force என்ற திட்டம் எதுவும் கிடையாது. 1991ஆம் ஆண்டு, நான் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது எல்.டி.டி.ஈ. ஆபத்து தமிழ்நாட்டில் தலைவிரித்து ஆடியது. சட்டம்–ஒழுங்கு என்பது ஒரு பெரும் பிரச்சினையாகவும், சவாலாகவும் இருந்தது. ராஜீவ் காந்தி கொலை நடந்து ஒரு மாதம்தான் ஆகி இருந்தது. அதற்கு முன்பு ஆட்சி செய்த தி.மு.க. அரசின் கையாலாகாத்தனத்தினாலும், தவறான கொள்கைகளாலும், பயங்கரவாதமும் தீவிரவாதமும் பெருகி இருந்தன. அவற்றை சமாளிக்கும் அளவுக்குக் காவலர் படை பலமோ, ஆயுத பலமோ தமிழ்நாடு அரசிடம் கிடையாது. நான் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது தமிழ்நாட்டில் 1,061 காவல் நிலையங்கள்தான் இருந்தன. இதில் மிகக் குறைவான காவல் நிலையங்களில்தான், 30 அல்லது

32 காவல் நிலையங்களில்தான் வாகனங்கள் இருந்தன. ஒரு சில காவல் நிலையங்களில் இரண்டு சக்கர வாகனங்கள், அதாவது Motor Cycles இருந்தன. மீதமுள்ள காவல் நிலையங்களுக்கு, குறிப்பாக, கிராமப் பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களுக்கு வாகனமே கிடையாது. அங்கு ஏட்டு சைக்கிளில்தான் வருவார். அப்போது அதுதான் இரு சக்கர வாகனம். புகார் ஏதேனும் பெறப்பட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், சம்பவ இடத்திற்குச் செல்ல வேண்டும் என்றால், புகார் கொடுத்தவர்களின் வண்டியிலேயே செல்லக் கூடிய நிலைமைதான் அப்போது இருந்தது. உயர் அலை தகவல் தொடர்பு, அதாவது High Frequency Network வசதி எல்லாம் அப்போது கிடையாது. அனைத்துக் காவல் நிலையங்களிலும் தொலைபேசி வசதி கூட முழுமையாக இல்லாமல் இருந்தது.

ஆயுதங்களைப் பொறுத்தவரையில், இரண்டாம் உலகப் போர் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த பழங்காலத்து Musket Rifle, .303 Rifle போன்றவைகளைத் தான் காவலர்கள் வைத்திருந்தார்கள். இவைகள் எல்லாம் மியூசியத்தில், அருங்காட்சியகத்தில் வைக்கக் கூடியவை. இந்த ஹைதர் அலி காலத்து ஆயுதங்களைத்தான் அப்போது காவலர்கள் வைத்து இருந்தார்கள். அதே சமயத்தில், அப்போது உலகத்தில் உள்ள அதிநவீன ஆயுதங்களை எல்.டி.டி.ஈ. வைத்திருந்தது. LTTE போன்ற உலகிலேயே பயங்கரமான தீவிரவாத, பயங்கரவாத அமைப்புகள் அதிநவீன ஆயுதங்களையும், தளவாடங்களையும் வைத்திருந்தன. அவற்றுக்கு ஈடு கொடுக்கக் கூடிய நிலையில் தமிழகக் காவல் துறை அன்றைக்கு இல்லை. இப்படிப்பட்ட காவல் துறையை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை, ஒரு நிர்ப்பந்தம், ஒரு கட்டாயம் எனக்கு அப்போது இருந்தது.

எனவே, நான் டெல்லிக்குச் சென்றேன். அப்போதைய பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்ம ராவ், மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ்.பி. சவான், மத்திய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்தேன். ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் LTTE–யினரால் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். நான் சட்டம்–ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். எதுவுமே இல்லாமல் நான் என்ன செய்ய முடியும்? எனவே, தமிழகத்தின் காவல் துறைக்கு வாகனங்கள், நவீன ஆயுதங்கள், தளவாடங்கள்

ஆகியவற்றை வாங்குவதற்கு நிதி கொடுங்கள் என்று கேட்டேன். 30 கோடி ரூபாய் அளவுக்குக் கேட்டேன். அவர்களும் ஏதோ ஓரளவிற்கு நிதி கொடுத்தார்கள். தமிழக அரசும் பெருமளவில் நிதி செலவிட்டது. எல்லா காவல் நிலையங்களுக்கும் நவீன வாகனங்கள் வழங்கப்பட்டன; அதி நவீன AK 47 ரக துப்பாக்கிகள், எம்.பி. 5 ரக துப்பாக்கிகள் ஆகியவை வாங்கி அளிக்கப்பட்டன. இந்த நவீன வகை ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு காவல் துறையினருக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. Digital Microwave Network மூலம், அனைத்துக் காவல் நிலையங்களையும் link செய்தல் உட்பட அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, தமிழகத்தின் காவல் துறை இந்தியாவிலேயே நம்பர் 1 காவல் துறை என்று போற்றப்படும் அளவிற்கு World's Best Police Force, Scotland Yard–க்கு இணையாக தமிழ்நாட்டுக் காவல் துறையை உருவாக்கினேன். Commando Training; வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் பிரிவு; அதாவது, Bomb Detection and Disposal Squad ஆகியவை உருவாக்கப்பட்டன. நவீனமயமாக்கப்பட்டு புதுப் பொலிவுடன் மிளிர்ந்த தமிழ்நாட்டுக் காவல் துறையைப் பார்த்த பிறகுதான், மற்ற எல்லா மாநிலங்களும் காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு மத்திய அரசிடம் நிதியுதவி கேட்க ஆரம்பித்தன. இவ்வாறு காவல் துறையை நவீன மயமாக்குவதில் என்னுடைய தலைமையிலான தமிழக அரசுதான் முன்னோடியாக விளங்கியது. எனவே, இந்தியாவிலேயே காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் முன்னோடி நான்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன்.

அதற்குப் பின்னர், நான் இரண்டாவது முறையாக, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, அதாவது, 2001ஆம் ஆண்டு முதல் காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் அதிக நிதியை இந்தியா முழுவதற்கும் மத்திய அரசு ஒதுக்கத் தொடங்கியது. இதன்படி, இத்திட்டத்திற்கு முதலில் மத்திய அரசு 50 விழுக்காடு மானியம் கொடுக்கும். அதற்கு ஈடாக மாநில அரசும் 50 விழுக்காடு நிதி ஒதுக்க வேண்டும். படிப்படியாக மாநில அரசின் பங்கு 40 விழுக்காடு என்றும், மத்திய அரசின் பங்கு 60 விழுக்காடு என்றும்; பின்னர் மாநில அரசின் பங்கு 25 விழுக்காடு, மத்திய அரசின் பங்கு 75 விழுக்காடு என்றும் மாற்றியமைக்கப்பட்டது. இப்போது எல்லா மாநிலங்களுக்கும் காவல்

துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதியுதவி கிடைக்கிறது என்றால் இதற்கு முன்னோடி நான்தான் என்பதை மீண்டும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட மகத்தான திட்டமான சத்துணவுத் திட்டத்தை இன்று அனைத்து மாநிலங்களும் செயல்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றமே ஆணையிட்டுள்ளது. அதே போன்று என்னால் கொண்டுவரப்பட்ட, +1, +2 மாணவ, மாணவியருக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டம் இன்று பல மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்திற்கு, மத்திய திட்டக் குழுவே, அனைத்து மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்குகிறது. இதே போன்றுதான், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டமும் இப்போது எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் ஆயிரத்தில் ஒருவன் திரைப்படத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகள் என் நினைவிற்கு வருகின்றன. "ஏன் என்ற கேள்வி இங்கு கேட்காமல் வாழ்க்கையில்லை" என்பதுதான் அந்தப் பாடல். ஆனால், வாழ்க்கையில் சிலருக்கு அந்த உரிமை இருப்பதில்லை. பொதுவாகச் சமுதாயத்தில் எல்லோருக்கும் என்ன நேர்ந்தாலும் ஏன் என்று கேட்கும் உரிமை இருக்கிறது. ஆனால், சிலருக்கு இல்லை. யாருக்கு இல்லை ? ராணுவப் படை வீரர்களுக்கு இல்லை; காவல் துறையில் பணிபுரிகின்ற காவலர்களுக்கு இல்லை. இதைப்பற்றி The Charge of the Light Brigade என்ற கவிதையில் Alfred Lord Tennyson எழுதியிருக்கிறார். இந்த வரிகளைப் படிக்கும் போதெல்லாம் என் கண்கள் பனித்துவிடும். Lord Tennyson கூறுகிறார்:

Theirs not to make reply,

Theirs not to reason why,

Theirs but to do and die.

அதாவது, ராணுவப் படை வீரர்களுக்கோ, காவலர்களுக்கோ, அவர்களுடைய மேலதிகாரி ஒரு கட்டளை இட்டுவிட்டால், Theirs not to make reply, அதாவது அவர்களுக்கு பதில் சொல்லக்கூடிய

உரிமை இல்லை. Theirs not to reason why, அவர்கள் ஏன் என்று கேட்கும் உரிமை இல்லை. Theirs but to do and die அந்தக் கட்டளையை ஏற்று செத்துமடிவதுதான் அவர்களுடைய கடமை என்பதுதான் இந்த வரிகளின் பொருளாகும். யோசித்துப் பாருங்கள். ராணுவப் படை வீரர்கள் இருக்கிறார்கள். போர் நடக்கும்போதுதான் அவர்களுக்கு மரணம் நிகழும் என்று சொல்வதற்கில்லை. எத்தனையோ ராணுவ வீரர்கள் பாகிஸ்தான் எல்லையில், தினந்தோறும் அங்கு ரோந்து புரிகிறார்கள். சைனாவுடன் இருக்கின்ற எல்லையிலும் தினந்தோறும் பணிபுரிகிறார்கள். திடீரென்று பாகிஸ்தான் தரப்பிலிருந்து துப்பாக்கிச் சூடு நடைபெறும். போர் பிரகடனப்படுத்தாவிட்டாலும், நம்முடைய வீரர்கள் செத்துமடிவார்கள். அதைப்போலவே சீனா எல்லையிலும் நடக்கிறது. ஆகவே, ஒரு ராணுவ வீரர் காலையில் தனது வீட்டைவிட்டுப் புறப்படும்போது, அல்லது தனது முகாமை விட்டுப் புறப்படும்போது மாலையில், இரவில் உயிருடன் வீடு திரும்புவாரா என்று அவருக்கே தெரியாது. அதைப்போலவே காவல் துறையை எடுத்துக் கொண்டீர்கள் என்றால், களப்பணி ஆற்றும் காவலர்களைப் பற்றிச் சொல்கிறேன். எத்தனையோ ஆபத்தான சூழ்நிலைகளில் அவர்கள் ஈடுபட வேண்டியுள்ளது. அவர்களுடைய மேலதிகாரி கட்டளை இடுவார். அங்கே காட்டுக்குள் ஒரு நக்சலைட் கும்பல் இருக்கிறது; ஒரு தீவிரவாதக் கும்பல் இருக்கிறது; நீ போய் அங்கே தாக்குதல் நடத்து, அவர்களைப் பிடி என்பார். அப்போது அந்த நக்சலைட் கும்பலிடம், அந்தத் தீவிரவாதக் கும்பலிடம் ஆயுதங்கள் இருக்கும். அந்தக் காவலர் சொன்னதைச் செய்ய வேண்டும். அந்தக் காவலர் ஒரு கணம் சிந்தித்து, ‘நான் அங்கே சென்றால் என்ன நேருமோ, நான் அங்கே சென்றால் என் உயிர் போய்விடுமோ, அப்படியானால் என் மனைவியை யார் காப்பாற்றுவார்கள் ? என் பிள்ளைக் குட்டிகளை யார் காப்பாற்றுவார்கள் ? என் வயதான தாய் தந்தையரை யார் காப்பாற்றுவார்கள் ?’ என்று ஒரு கணம் சிந்தித்தால் அவர் செல்ல முடியாது. அப்படிச் செல்லாவிட்டால், இந்தச் சமுதாயம் என்ன ஆகும் ? இந்த நாடு என்ன ஆகும் ? நாமெல்லாம் என்ன ஆவோம் ? அப்படிச் சொல்லக்கூடிய உரிமை காவலர்களுக்கு கிடையாது. ஆகவே, இந்தக் காவலர் நினைக்கலாம், சில முறை ராணுவ வீரர்கள் விடுமுறையில்

வீட்டிற்கு வருவார்கள். விடுமுறை கிடைப்பதே அரிதான ஒன்று. விடுமுறையில் இருக்கின்றபோது திடீரென்று மீண்டும் எல்லைக்கு வர வேண்டும் என்று அழைப்பு வரும். அப்போது காவலர் பதறுவார். அய்யோ என் மனைவிக்கு பிரசவ காலம் ஆயிற்றே, நான் பக்கத்தில் இல்லாவிட்டால் யார் கவனிப்பார்கள் ? அய்யோ என் தாய்க்கு உடல் நிலை சரியில்லையே, நான் இல்லை என்றால் யார் அவரை கவனிப்பார்கள் ? என்றெல்லாம் அவருக்கு மனதில் எண்ணங்கள் ஓடும். அவரும் மனிதர் தானே ? ஆனால் அவற்றையெல்லாம் அவர் வெளியே சொல்லிக் கொள்ள முடியாது. ஆகவேதான், காவல் துறையினர் என்றாலும், காவலர்கள் என்றாலும், ராணுவப் படை வீரர்கள் என்றாலும் அவர்களுக்கு நான் எப்போதுமே பரிவு காட்டுவேன், ஒரு தனி மரியாதை கொடுப்பேன்.

இங்கே பேசுகின்ற எத்தனையோ மாண்புமிகு உறுப்பினர்கள் சர்வசாதாரணமாக காவல் துறையினரைத் திட்டித் தீர்க்கிறார்கள்; குறை சொல்கிறார்கள். அவர்களுடைய பணியை நீங்கள் நினைத்துப் பாருங்கள். உயிருக்கு உத்தரவாதம் இல்லை. களப் பணியாற்றும் காவல் துறையினர் காலையில் வீட்டைவிட்டு புறப்பட்டால் இரவு நேரம் உயிரோடு வீடு திரும்புவார்கள் என்ற எந்த உத்தரவாதமும் இல்லை. எத்தனையோ ஆபத்தான சூழ்நிலைகளை அவர்கள் சந்திக்க வேண்டும். உயிர் மட்டும் அல்ல; உயிர் போனால் கூட பரவாயில்லை; ஒரு கை போகலாம்; ஒரு கால் போகலாம்; ஒரு கண் போகலாம். பின்னர் யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள் ? ஆகவே, ஒன்றை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ராணுவ வீரர்கள் ஆனாலும் சரி, காவலர்கள் ஆனாலும் சரி, அவர்கள் யாரும் விரும்பி இந்தப் பணியை ஏற்றுக்கொள்வதில்லை. குடும்பச் சூழ்நிலை காரணமாக, வேறுவழியின்றி, இந்தப் பணியை ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் பணியாற்றுவதே அவர்கள் செய்கின்ற தியாகம் என்று நான் கூறுவேன். ராணுவப் படை வீரர் பணியோ, காவலர் பணியோ, யார் மனமுவந்து விரும்பி ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் இந்தச் சமுதாயத்திற்காக, இந்த நாட்டிற்காக தியாகம் புரிகிறார்கள் என்றுதான் பொருள். ஆகவே, அவர்களுக்கு எவ்வளவு சலுகை செய்தாலும் அது தகும் என்று நான் கூறுவேன். ஆகவே, ஒன்றை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ராணுவ வீரர்களுக்கும்,

காவல் துறையினருக்கும் அனைவரும் மரியாதை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் முதன் முதலாக முதலமைச்சராக 1991–இல் பதவி ஏற்றபோது ஒன்றைக் கவனித்தேன். ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், கான்பிரன்ஸ் நடைபெறும். Collectors and District SPs Conference. இந்த நாமக்கல் கவிஞர் மாளிகைக் கட்டடத்தில் பத்தாவது மாடியில் நடைபெறும். அப்போதெல்லாம் இருந்த வழக்கம், அந்த மேடையில், முதலமைச்சர் உடன் அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும் அமர்ந்து இருப்பார். Home Secretary அமர்ந்து இருப்பார். மற்ற அதிகாரிகள் எல்லாம் கீழே அமர்ந்து இருப்பார்கள். காவல் துறை டி.ஜி.பி. கூட கீழேதான் அமர்ந்து இருப்பார். முதன் முதலாக டி.ஜி.பி.ஐ அழைத்து மேடையில் எனது பக்கத்தில் அமர வைத்த ஒரே முதலமைச்சர் நான்தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நினைத்துப் பாருங்கள். மற்றவர்களுக்கு எல்லாம் ஒரு choice இருக்கிறது. ஒரு சாதாரண பணியாளருக்குக் கூட ஒரு factory இல் பணிபுரிகின்ற ஒரு பணியாளருக்கு, ஒரு உத்தரவு இட்டு, நீ அங்கே செல் என்றால், இல்லை எனக்கு விருப்பமில்லை, நான் போகமாட்டேன் என்று சொல்லக்கூடிய உரிமை இருக்கிறது. ஆனால், காவலருக்கு அந்த உரிமை இல்லை. தான் போகின்ற இடம் ஆபத்தான இடம், அங்கே போனால் கை போகக்கூடும், கால் போகக்கூடும், கண் இழக்கக் கூடும், உயிர் போக நேரிடும் என்று தெரிந்து கூட அவர் செல்லத்தான் வேண்டி இருக்கிறது. ஆகவே, இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியே அவர்களுக்கு மறுக்கப்படுகின்ற உரிமை என்று நான் கூறுவேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இந்த நாட்டில் உள்ள எல்லா பிரஜைகளுக்கும் இந்த உரிமைகள் இருக்கின்றன. ஆனால், காவல் துறையினருக்கு இல்லை. ராணுவப் படையினருக்கு இல்லை. இதை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தீயணைப்புப் பணிகள்,

மீட்புப் பணிகள் ஆகியவற்றைத் திறம்பட செய்யும் துறையாக மட்டும் இல்லாமல், இடர்ப்பாட்டுக் காலங்களில் மக்களின் இன்னல்களைத் தீர்க்கின்ற துறையாகவும் தனது கடமையை செவ்வனே ஆற்றி வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு எனது அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது 2011–2012ஆம் ஆண்டில், காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் செயல்படுத்தப்பட உள்ள புதிய திட்டங்கள் குறித்த அறிவிப்புகளை வெளியிட விழைகிறேன்.

அதற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜான் ஜேக்கப் அவர்கள் தெரிவித்த சில கருத்துகளுக்கு நான் பதில் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 14.05.2011–க்குப் பிறகு 23 செயின் பறிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இவற்றில் 13 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 8 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 81 சவரன் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வழக்குகளையும் கண்டுபிடித்து, குற்றவாளிகளைக் கைது செய்ய 5 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில், சுற்றுலாப் பகுதிகளான கடற்கரைப் பகுதிகளில், காலை, மாலை நேரங்களில் ரோந்து காவலர்கள் அனுப்பப்பட்டு குற்றச் சம்பவங்களை தடுக்க தீவிரமான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **25.08.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதியினை விரிவுப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண்மையே பொருளாதாரத்தின் உயிர்நாடி ஆகும். தமிழகத்தில் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, வேளாண்மைத் தொழிலுக்கு புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதன் அடிப்படையில், இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை எனது அரசு நிர்ணயித்துள்ளது. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாது, வேளாண் பெருமக்கள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து, அவர்களின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் எனது அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள், உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களுக்கு ஈடாகத் தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளை பொருட்களின் விலை வீழ்ச்சி

அடையும் போது, விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக் கடன் பெற்றுக் கொள்வதுடன், விலை ஏற்றத்தின் போது விளை பொருட்களைக் கிடங்கில் இருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்பதால், விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் அதிக விலை கிடைக்கிறது.

நடப்பு ஆண்டில், 185 கோடி ரூபாய் அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், கூட்டுறவுத் துறையில் தற்போது உள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதாலும், மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுபடுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, NABARD வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று, மொத்தம் 105 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில், மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், 1 இலட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்குக் கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுவதால், விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 26 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **26.08.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிட முன்னுரிமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல்வி என்னும் வற்றாத செல்வம், தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. பொருளாதார வளர்ச்சி அடைவது மட்டும் அன்றி, வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகப் பெறுவதற்குக் கல்வி இன்றியமையாதது ஆகிறது. இத்தகைய பயன் மிக்க கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்குத் தரமாக அளிப்பதற்கும்; அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வசதியை அளிப்பதற்கும்; இவை மூலம் உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிடவும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும் வகையில், எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட உள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவது என்ற இவ்வரசின் நோக்கத்தின் ஒரு அங்கமாக, மேலும் 65 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும்; 710 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும்; ஆக மொத்தம் 775 பள்ளிகளை 419 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளைத் தரம் உயர்த்துவதினால் மட்டும் தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியாது. தேவைக்கேற்ப ஆசிரியர்களும் இருக்க வேண்டும் என்பதை எனது அரசு உணர்ந்துள்ளது. எனவே, நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கும், ஆசிரியர்–மாணவர் விகிதத்தின் அடிப்படையில் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவெடுத்து உள்ளது. அதன்படி, 9,735 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3,565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், ஆக மொத்தம் 13,300 ஆசிரியர் பணியிடங்களை, 315 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டிலேயே ஏற்படுத்த ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையான சீரான கல்வி என்பது பாடப் புத்தகத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்காமல் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதன் அடிப்படையில், உடற்கல்வி, ஓவியம், தொழிற்கல்வி ஆகியவற்றுக்காக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் இப்பள்ளிகளில் 6, 7 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன் அடைவர். இதற்கு, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 99 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

முனைவர் முத்துக்குமரன் குழு அளித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, சமச்சீர் கல்விக்கு மிகவும் இன்றியமையாதது அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகும். பொதுப் பாடத் திட்டம் மட்டும் சமச்சீர் கல்வி ஆகாது. இதனை நன்கு உணர்ந்த எனது அரசு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், இந்தக் கல்வி ஆண்டில், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள், சுகாதாரமான குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட உடனடி நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதை மிகவும் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கல்வி ஆண்டில் 1082 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இவை ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்துச் செயல்படுத்தும் 'அனைவருக்கும் கல்வித் திட்டம்' மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்' ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும்.

மேலும், நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு, 3,187 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள், முழுவதும் மாநில அரசின் நிதியில் இருந்து, 90 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், இந்தக் கல்வி ஆண்டு முதல் இரண்டு கட்டங்களில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடம் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள்; கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப் பெட்டி, அதாவது Geometry Box; கிராமப்புற மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக 119 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் பள்ளிக் கூடங்களில் அமையப் பெற வேண்டும் என்பது எனது திடமான எண்ணம் ஆகும். எனவே, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் துப்புரவாளர் மற்றும் இதர பணிகளுக்கான 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதன் காரணமாக, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், குழந்தைகளின் புத்தகச் சுமை குறைக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தகச் சுமையை தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச்

சுமையை குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது, Trimester pattern அறிமுகப்படுத்தப்படும். முழுக் கல்வியாண்டிற்குரிய பாடப் புத்தகங்கள் மூன்று பருவங்களுக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பருவ முடிவிலும் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன் கூடிய தேர்வுகள் நடத்தப்படும். இதன் மூலம் மாணவர்களின் கவலை, அச்சம், மன அழுத்தம் ஆகியவை பெரிதும் குறைக்கப்படுவதுடன், பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் புத்தகச் சுமையினால் ஏற்படும் இன்னல்கள் நீக்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் தவறாகக் கையாளக் கூடிய வாய்ப்பு உள்ளதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர்களது புகைப்படம் மற்றும் ரகசிய குறியீட்டுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. எனவே, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அவர்களின் புகைப்படத்துடன் கூடிய மறைமுகக் குறியீட்டுடன் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ, மாணவியர்களின் திறமையையும், ஆற்றலையும் வளப்படுத்துவதற்கு அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்துவது மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன், 7 முதல் 17 வயதுள்ள பள்ளி செல்லும் மாணவ, மாணவியருக்குச் சதுரங்க விளையாட்டு வரும் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். இந்த விளையாட்டினால் மாணவ, மாணவியரின் அறிவுத் திறன் வளர்வதுடன், கூர்மையாக சிந்திக்கும் ஆற்றலும் விரிவடையும்.

கணினி மூலம் கற்பது பள்ளிகளில் தற்போது இன்றியமையாததாக உள்ளது. மாணவ, மாணவியர்கள் தமது பாடப் புத்தகங்களுக்கு அப்பாற்பட்டு, பற்பல குறிப்புகளையும் பாடத்திற்கு ஏற்ற மேற்கோள்களையும் மற்றும் தேவையான தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு கணினி முக்கியமான ஒன்று என்பதனை உணர்ந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளேன்.

அதனைத் தொடர்ந்து, எல்லா வகுப்புகளிலும் படிக்கும் மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் விதத்திலும், தமிழகத்தில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர் / ஆசிரியைகளின் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் முறைகளை மேம்படுத்தும் வகையிலும் ICT@ Schools (Information and Communication Technology@ Schools), Tamil Nadu என்ற புதிய திட்டம் உருவாக்கப்படும். இத்திட்டத்தில் எல்லா வகுப்புகளுக்குமான பாடப் புத்தகங்களின் உட்பொருளைக் கணினிமயமாக மாற்றி மையக் கணினி மூலமாக வகுப்பறைகளில் வழங்க வழிவகை செய்யப்படும். எல்லா மாணவ, மாணவியர்களும் பயன் அடையும் பொருட்டு சிறந்த ஆசிரியர்களின் விரிவுரைகளின் தொகுப்புகள் கல்வி செயற்கை கோள் வாயிலாக வகுப்பறைகளுக்குச் சென்றடைய இத்திட்டத்தின் வாயிலாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை மூலம் எனது அரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பள்ளிகளில், மிகவும் உகந்த சூழலில், தரமான கல்வி கற்கும் நிலை உருவாகி, உண்மையான சமச்சீர் கல்வி கிடைக்க வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 26.08.2011 அன்று*
சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மத்தியப் பணிமனையில்
நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்
கழகங்களுக்கு 196 புதிய பேருந்துகளை வழங்கி
106 புதிய வழித் தடங்களைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் புதிய பேருந்துகள்

“அனைவருக்கும் வணக்கம். இன்று தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் புதிதாக 196 பேருந்துகளைத் துவக்கி வைத்ததில் உள்ளபடியே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பேருந்துகளை ஓட்டும் ஓட்டுநர்கள் பாதுகாப்பாக தங்கள் பணியினைச் செய்ய வேண்டும். தங்களுக்கும் அவர்களை நம்பிப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கும் எந்தவிதமான ஆபத்துமின்றி நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொண்டு உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.”

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.08.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

கைதிகள் மூவரின் தூக்குத் தண்டனை ரத்து தொடர்பான அரசின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991ஆம் ஆண்டு, மே மாதம் 21ஆம் நாள், முன்னாள் பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த போது படுகொலை செய்யப்பட்டார் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இது தொடர்பான வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று மேல் முறையீடு செய்ததில், உச்ச

நீதிமன்றம் நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு, ஆகிய நான்கு பேருக்கும் தூக்கு தண்டனையை உறுதி செய்தது. மேலும் 3 பேருக்கு தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. எஞ்சிய 19 பேரை விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இதனை 8.10.1999 அன்று உச்ச நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டது.

17.10.1999 அன்று மேற்கண்ட தூக்கு தண்டனைக் கைதிகள் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்குக் கருணை மனுக்களை சமர்ப்பித்தார்கள். 27.10.1999 அன்று மேதகு தமிழக ஆளுநர் இவர்களின் கருணை மனுக்களை நிராகரித்து ஆணையிட்டார்.

தூக்கு தண்டனைக் கைதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குகள் தொடுத்தனர். இந்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 25.11.1999 அன்று வழங்கிய தீர்ப்பில், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையை தள்ளுபடி செய்து, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை வழங்குமாறு அறிவுறுத்தியது.

இந்தப் பொருள் குறித்து 19.04.2000 அன்று அன்றைய முதலமைச்சர் திரு கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:–

“தூக்கு தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதை ஆகிவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும், மற்றவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது.”

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் 21.04.2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது

தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. இந்த மூன்று நபர்களும் மேதகு குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுக்களை தமிழ்நாடு அரசு 28.04.2000 நாளிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இதன் மீது மத்திய அரசின் உள்துறை, தனது 12.08.2011 நாளிட்ட கடிதத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தக் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்து, இதனை மேற்கண்ட கைதிகளுக்குத் தெரியப்படுத்துமாறு தெரிவித்து உள்ளது. இந்தக் கடிதத்தின் விவரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் தூக்கு தண்டனை விதிக்கப் பெற்ற மேற்படி பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரைத் தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று எனக்குக் கோரிக்கைகள் விடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. மேலும் பேரறிவாளனின் தாய் திருமதி அற்புதம் அம்மாள், எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தனது மகனை விடுவிக்குமாறு வேண்டி உள்ளார். தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய என்னிடம் கோருவதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றி உள்ளதாக தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. பாரதிராஜா கடிதம் எழுதி உள்ளார். மேலும் சிலர் இது பற்றி கடிதங்கள் எழுதி உள்ளனர்.

இதில் எல்லோரும் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், பேரறிவாளன் உள்ளிட்ட மூவரை மரண தண்டனையிலிருந்து தமிழக முதலமைச்சராகிய நான் காப்பாற்ற வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் 2000ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த இதே திரு. கருணாநிதிதான் தனது தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்களையும் நிராகரிக்கலாம் என்றும், மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்யலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளார். அன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் இந்தப் பரிந்துரையை அன்றைய ஆளுநரும் ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்து விட்டு, செய்வதையெல்லாம் செய்து விட்டு, இன்று ஒன்றும் தெரியாதது போல், அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று திரு கருணாநிதி அறிக்கை வெளியிடுகிறார் என்றால், இது இரட்டை வேடம் அல்லாமல், பித்தலாட்டம் அல்லாமல், கபட நாடகம் அல்லாமல், வேறு என்ன என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யும் அதிகாரம் எனக்கு இருப்பது போலவும், அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்ற முடியும் என்பது போலவும் பேசப்படுவது சட்டத்தின்படி சரியானது அல்ல. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் சட்டங்களைத் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இவ்வாறு எனக்கு அதிகாரம் இருப்பது போல சொல்லி வருகிறார்களா ? அல்லது சட்டங்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் முதலமைச்சருக்கு இத்தகைய அதிகாரம் இருப்பதாகக் கூறுகிறார்களா ? என்பது தெரியவில்லை.

எனவே, சட்ட நிலைமை என்ன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது எனது கடமை ஆகும் எனக் கருதுகிறேன்.

உச்ச நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோ தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் படி மன்னிப்பு அளிக்க முடியும். இவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க வேண்டும் எனக் கருதப்பட்டிருந்தால் 2000 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் அதற்கான முடிவு எடுத்திருக்க முடியும்; எடுத்திருக்க வேண்டும். அமைச்சரவையின் அறிவுரைப்படி மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு உள்ள இந்த நிலையில், தூக்கு தண்டனையை ரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ எந்த வித அதிகாரமும் தமிழக முதலமைச்சராகிய எனக்கு இல்லை

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என மாநில அரசு கோர முடியாது என 1991ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை வழங்கி உள்ளது. 05.03.1991 நாளிட்ட கடிதத்தில் மத்திய உள்துறை அமைச்சரகம் பின் வருமாறு தெரிவித்துள்ளது:–

"… …

2. The Government of India, on an examination of the matter, and after taking all relevant constitutional aspects into view, direct in terms of article 257(1) of the Constitution of India that in cases of death sentences where a petition for grant of pardon, etc., has earlier been rejected by the President of India in exercise of his powers under article 72 of the Constitution of India, it would not be open for the Government of a State to seek to exercise similar powers under article 161 in respect of the same case. However, if there is a change of circumstances or if any new material is available, the condemned person himself or any one on his behalf may make a fresh application to the President for reconsideration of the earlier order. Once the President has rejected a mercy petition, all future applications in this behalf should be addressed to and would be dealt with by the President of India."

அதாவது, இப்பொருள் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் பொருத்தமான தன்மைகளைக் கருத்தில் கொண்டு பரிசீலித்த மத்திய அரசு, மரண தண்டனை குறித்த நிகழ்வுகளில் அதன் தொடர்பான கருணை மனு இந்திய அரசமைப்புச் சட்டம் 72–ன் கீழ் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தின்படி குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருந்தால், அது தொடர்பாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 161–ன்படி உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை என்று அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு கூறு 257 (1)–ன்படி கட்டளையிடுகிறது.

இருப்பினும் சூழ்நிலைகள் மாறுபட்டிருந்தாலோ அல்லது புதியதாக ஏதாவது ஆதாரம் இருந்தாலோ, மரண தண்டனை பெற்ற நபரோ அல்லது அவர் சார்பாக வேறு ஒருவரோ, குடியரசுத் தலைவரின் முந்தைய உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு புதியதாக ஒரு மனுவினை குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பிக்கலாம். குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர், அது தொடர்பாக பின்னர் தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களும் குடியரசுத் தலைவருக்குதான் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; இது குறித்து நடவடிக்கையை குடியரசுத் தலைவர்தான் எடுப்பார்.

எனவே, பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் கருணை மனு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், இதனை மாற்றுவதற்கு எந்தவித அதிகாரமும் மாநில முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு இல்லை என்பதை வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையில் எனக்கு இதற்கான அதிகாரம் இருக்கிறது என்ற பிரச்சாரத்தை அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற தற்கொலை செய்து கொள்வதாக ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, மக்கள் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த செங்கொடி என்ற இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. உணர்ச்சி வயப்பட்டு, இது போன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் நான் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **30.08.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

குறைந்த செலவில் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி சேவை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேபிள் டிவி இணைப்பின் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பொதுமக்களிடமிருந்து அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதையும்; இதன் காரணமாக, இந்தத் தொழிலில் ஏகபோக நிலையை ஏற்படுத்தியவர்கள் அதிக லாபம் பெற்று வருகின்றனர் என்பதையும்; இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முந்தைய அரசால், 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கேபிள் டிவி நிறுவனம் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தனது ஒளிபரப்பை தொடங்கியது. இந்த நிறுவனம் 50 ஆயிரத்திற்கும் அதிகமான இணைப்புகளை வழங்கியது. பின்னர், முந்தைய ஆட்சியாளர்களின் சுயநலம் காரணமாக, அரசு கேபிள் டிவி நிறுவன இணைப்புகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து, 31.03.2011 அன்றைய நிலவரப்படி, 432 இணைப்புகளாகச் சுருங்கிவிட்டது. அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் டிவி நிறுவனம் அந்த அரசாலேயே முடக்கப்பட்டுவிட்டது.

எனவேதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், கேபிள் டிவி தொழிலில் உள்ள ஏகபோகத்தைத் தடுத்து அனைவருக்கும் தொழில் செய்ய வாய்ப்பு அளிக்கும் வகையிலும்; அனைத்து

மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவி இணைப்பு கொடுக்கும் வகையிலும்; நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம்.

இந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் புனரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு தீவிரமாக மேற்கொண்டது. இந்நிறுவனத்திற்கு ஒரு முழு நேரத் தலைவர் மற்றும் இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒரு நிர்வாக இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஏற்கெனவே தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் தலைமுனைகள் பராமரிப்பு செய்யப்பட்டன. மீதமுள்ள 27 மாவட்டங்களில் தனியார் வசம் உள்ள தலைமுனைகள் வாடகைக்கு பெறப்பட்டும்; புதிதாக அனலாக் தொழில்நுட்ப கேபிள் டிவி கட்டுப்பாட்டு அறைகள் நிறுவப்பட்டும்; அரசு கேபிள் டிவி புனரமைக்கப்பட்டது. மேலும், இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் கேபிள் டிவி சேவையைத் தொடங்கும் பொருட்டு, உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.க்களை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் சேர அழைப்பு விடுக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழகத்தில் உள்ள 34,344 கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.க்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இவர்களிடம் 1 கோடியே 45 இலட்சம் இணைப்புகள் உள்ளன. 31 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள ஒளிபரப்பு மையங்களை 24 மணி நேரமும் பராமரிக்கவும்; ஒளிபரப்பு சேவையை தங்கு தடையின்றி மக்களுக்கு வழங்கவும்; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி ஒளிபரப்பின் மூலம் கட்டணச் சேனல்கள் உள்பட 90 சேனல்களை ஒளிபரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. முதலில் இலவச சேனல்கள் ஒளிபரப்பு செய்யப்படும். கட்டணச் சேனல்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் கட்டணச் சேனல்களும் தமிழ் நாடு அரசு கேபிள் டிவி மூலம் வழங்கப்படும்.

02.09.2011 முதல் ஒளிபரப்புச் சேவைகள் தொடங்கப்பட்டு குறைந்த செலவில் நிறைவான சேவையைத் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக மக்களுக்கு வழங்கும் என்பதையும்; தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் சேர்ந்துள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் தொலைக்காட்சி சேவையை பெறும் சந்தாதாரர்களிடமிருந்து மாதச் சந்தாவாக 70 ரூபாய் மட்டுமே கேபிள் டிவி ஆப்பரேட்டர்களால் வசூலிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒளிபரப்பை வழங்கும் கேபிள் டிவிஆப்பரேட்டர்களிடமிருந்து கட்டணமாக ஒரு இணைப்பிற்கு 20 ரூபாய் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் வசூலிக்கப்படும்.

எனது தலைமையிலான தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகளின் மூலம் மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் டிவி இணைப்பைத் தமிழக மக்கள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கேபிள் இணைப்பு பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
02.09.2011 அன்று தலைமைச் செயலகத்தில்,
காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம்
அரசு கேபிள் டிவி நிறுவனத்தைத்
தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் குறைந்த கட்டணத்தில் ஒளிபரப்பு சேவை!

"அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி சேவையை இன்று தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கேபிள் டிவி இணைப்பின் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு அதன் காரணமாக பொதுமக்களிடமிருந்து அதிக அளவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஒரு குடும்பத்தினரே இந்தத் தொழிலில் ஏகபோகம் அனுபவித்து அதிக லாபம் பெற்று வருகின்றனர். எனவேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கேபிள் டிவி தொழிலில் உள்ள ஏகபோகத்தைத் தடுத்து அனைவருக்கும்

தொழில் செய்ய வாய்ப்பு வழங்கப்படும் என்றும், அனைத்து மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவி இணைப்புக் கொடுக்கப்படும் என்றும் தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தேன். இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இன்று முதல் ஒளிபரப்பு சேவைகள் தொடங்கப்பட்டு தமிழக அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக மக்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த சேவையை வழங்கவுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் தொலைக்காட்சி சேவையைப் பெறும் சந்தாதாரர்களிடமிருந்து மாதச்சந்தாவாக 70 ரூபாய் மட்டுமே கேபிள் டிவி ஆப்பரேட்டர்களால் வசூலிக்கப்படும். எனவே, கேபிள் இணைப்புப் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளின் மூலம் தமிழக மக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டிவி இணைப்பைப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொண்டு, அனைத்துக் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும், தமிழக மக்களுக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்.”

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
02.09.2011 அன்று தலைமைச் செயலகத்தில், பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டையினைப் பயன்படுத்திச் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் தொகையினை வங்கி மூலமாக வழங்கிடும் முன்னோடித் திட்டத்தினை காணொலிக் காட்சி மூலமாக (Video Conferencing) தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

பயோமெட்ரிக் ஸ்மார்ட் அட்டை மூலம் ஓய்வூதியத் தொகை!

“அனைவருக்கும் வணக்கம். தமிழக அரசு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஏழை எளிய ஆதரவற்ற முதியோருக்கு மாத ஓய்வூதியத் தொகை வழங்கும் திட்டத்தை Smart Card மூலமாக வழங்குகின்ற முன்னோடித் திட்டத்தைத் துவக்கி வைத்ததில் உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி இன்று அடைகிறேன்.

அரசு வழங்குகின்ற இந்த ஓய்வூதியத் தொகையைப் பெறுவதில் இதுவரை சில சிரமங்கள் இருந்து வந்தன. இன்று இந்தப் புதிய முன்னோடித் திட்டத்தின் மூலமாக அந்தச் சிரமங்கள் எல்லாம் நீக்கப்பட்டு, களையப்பட்டு பயனாளிகள் இருக்கின்ற இடத்திற்கே, பயனாளிகள் வசிக்கின்ற கிராமத்திற்கே சேவையாளர்கள் நேரில் சென்று பயனாளிகளுக்கு இந்த ஓய்வூதியத் தொகையை வழங்குகிறார்கள். இந்த Smart Card மூலமாக இந்த மாதமே பயனாளிகள் ஓய்வூதியத் தொகையைப் பெறலாம்.

எனவே, தமிழக அரசு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் அனைவருக்கும் இந்தப் புதிய திட்டம் பயன்தரும் என்றும், இந்த அரசு வழங்குகின்ற உதவித்தொகை உதவிகரமாக இருக்கும் என்றும் நம்புகிறேன். அனைவருக்கும் வங்கிச் சேவையாளர்களுக்கும், இந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

★ ★ ★

சென்னையில், 05.09.2011 அன்று நடைபெற்ற இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பின் (FICCI) தேசிய செயற்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.*

தமிழகத்தில் முதலீடு செய்யுங்கள்!

“தேசிய சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கவும், நாட்டின் மற்ற மாநிலங்களைவிட, தமிழகத்தை மிக வேகமாக முன்னேற்றம் அடையச் செய்யவும், எனது தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளது.

வறுமை என்பது மிகப்பெரும் சவாலாக இருக்கிறது. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மேலும் பல செயல்திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது பசுமைப்புரட்சி சாதனையை அடைய தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மின் உற்பத்திகளை அதிகரிக்க போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதன் காரணமாக வெகு விரைவில் தமிழகம் மின் மிகை மாநிலமாகத் திகழும். இந்தியாவிலேயே தமிழகத்தை மிகச் சிறந்த மாநிலமாக்க வேண்டும் என்ற எனது லட்சியத்தை செயல்படுத்த, தமிழகத்தில் முதலீடு செய்யுங்கள்” என்று தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்தார். ✶

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 06.09.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

சென்னையில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு மையம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்பு மிக்க செல்வம். கல்வியில் மேன்மை; விளையாட்டு மற்றும் போட்டிகளில் திறமை; சேவை மனப்பான்மைக்கு வித்திடும் வகையில் சமுதாயத் தேவைகள் குறித்த விழிப்புணர்வு, ஆகியவை ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்க உதவுகின்றன. விளையாட்டுப் போட்டிகள்; தேசிய மாணவர் படை; நாட்டுநலப் பணித் திட்டம்

மற்றும் சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை நற்பண்புகளை இளைஞர்களுக்குப் புகட்டி; அவர்களை நாளைய பொறுப்புள்ள குடிமக்களாக மலரச் செய்கிறது. குறிப்பாக, விளையாட்டு என்பது, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும்; நேர்மையாகச் செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன்; வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, விளையாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடனும்; இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்க்கும் நோக்கத்துடனும்; எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1992ஆம் ஆண்டு, இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையான, “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்”, Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது.

உலகத் தரம் வாய்ந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம்; ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம்; மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம்; நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம்; வேளச்சேரி நீச்சல் வளாகம் ஆகிய விளையாட்டு அரங்குகள் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். மேலும், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது ஆட்சிக் காலத்தில்தான் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த வகையில், தற்போது, விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு செயல்படுத்த இருக்கும் புதிய திட்டங்கள் குறித்து நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட, விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் 25

மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு; அவர்களுக்கு விளையாட்டில் உயர்தர நுணுக்கங்களுடன் கூடிய விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம், அதாவது, Centre of Excellence in Sports ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர்கள் இந்த மையத்தில் தங்கி சிறப்புப் பயிற்சி பெறுவர். இந்த மையத்தில் தங்கும் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுச் சீருடை; விளையாட்டு உபகரணங்கள்; நவீன உடற்பயிற்சிக் கூடம்; விஞ்ஞான ரீதியிலான பயிற்சி; வெளிநாடுகளில் போட்டிகளில் கலந்து கொள்ள உதவி மற்றும் பயிற்சி ஆகிய வசதிகள் செய்து தரப்படும். சென்னையில் உள்ள சிறந்த பள்ளிகளில் கல்வி பயிலவும், இந்த மாணவ, மாணவியர்களுக்கு அரசால் உதவி செய்யப்படும். இந்த மையம் அமைப்பதற்காக, அரசுக்கு, 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; ஆண்டு ஒன்றுக்கு, 70 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள, திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளைத் தயார் செய்வதற்கான ஒரு சிறப்புத் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்படும். இதன்படி ஐந்து விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவர்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் வெளிநாடுகளில் போட்டிகளில் பங்கேற்கவும்; விஞ்ஞான ரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும்; உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சிக் கருவிகள் வாங்கிடவும்; சத்தான உணவு பெற்றிடவும்; விளையாட்டு வீரர்களின் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் வகை செய்யும். ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள் / வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 2002ஆம்

ஆண்டு தொடங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க தற்போது எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கான ஊக்கத் தொகை 1 கோடி ரூபாயில் இருந்து 2 கோடி ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயில் இருந்து 1 கோடி ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 25 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 20 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 15 லட்சம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 20 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 1 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50,000 ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10,000 ரூபாயில் இருந்து 2 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், 9 விளையாட்டு விடுதிகளும்; விடுதிகளுடன் கூடிய 3 விளையாட்டுப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 860 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளை உருவாக்கும் வகையில், இந்த விளையாட்டு விடுதி மற்றும் பள்ளிகளில் சேர்க்கப்படும் வீரர்கள் / வீராங்கனைகளின் எண்ணிக்கை 860 லிருந்து 1,100 ஆக உயர்த்தப்படும். இதற்காக, அரசுக்கு, 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; 1 கோடியே 16 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 9 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு விடுதிகள் மூலம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தீவிர பயிற்சி அளிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விளையாட்டு விடுதி வீதம், 23 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகளை அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு விளையாட்டு விடுதியிலும் 60 மாணவ, மாணவியருக்கு உயர்தர பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் இதர வசதிகள் அனைத்தும் வழங்கப்படும். முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும். இதற்காக, அரசுக்கு, 3 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளால், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வகையில், தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளின் திறன் மேம்படும் என்ற நம்பிக்கையை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.09.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

இரயில்வே கடவுகளில் பாலங்கள், சாலைகள் மேம்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில், சாலைப் போக்குவரத்து போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும். மாநிலத்தின் தற்போதைய சாலை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்குமான அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை

உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு சாலை கட்டமைப்பின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், சென்னை முதல் தூத்துக்குடி வரை உள்ள கிழக்கு கடற்கரை சாலை, பல்வேறு கட்டங்களில், ஆசிய வங்கி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டது. தென் மாவட்டங்களில், குறிப்பாக தூத்துக்குடி, திருச்செந்தூர் மற்றும் கன்னியாகுமரியில் வசிக்கும் மக்கள் நீண்ட நாட்களாக இந்தச் சாலையை கன்னியாகுமரி வரை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்தச் சாலையினால் ஏற்படும் பயன்களைக் கருத்தில் கொண்டு, தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அஞ்சுகிராமம் வரையில் உள்ள 113 கிலோமீட்டர் சாலைப் பகுதி 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலைப் பணியின் கீழ், 9 புறவழிச் சாலைகள், 3 பெரிய பாலங்கள் மற்றும் 1 ரயில்வே மேம்பாலம் ஆகியவை அமைக்கப்படும்.

இதேபோன்று, சிவகங்கை மற்றும் எடப்பாடி நகரங்களில் போக்குவரத்து நெரிசலால் ஏற்படக் கூடிய பாதிப்பை பெருமளவில் குறைக்கும் வகையில், 10.60 கிலோ மீட்டர் நீளத்தில் சிவகங்கை புறவழிச் சாலையும்; 8.60 கிலோ மீட்டர் நீளத்தில் எடப்பாடி புறவழிச் சாலையும் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக, நடப்பாண்டில், சிவகங்கை நகரத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; எடப்பாடி நகரத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுவதால் தடையில்லாப் போக்குவரத்து உறுதி செய்யப்படுவதுடன், விபத்துகளும் தவிர்க்கப்படும். இதனால் பயண நேரமும் வெகுவாகக் குறையும். இதற்காக சாலைகளில் இருப்புப் பாதை குறுக்கிடும் சாலைகளில் ரயில்வே பணித் திட்டம் 2011–2012இன் கீழ், செலவு பகிர்வு அடிப்படையில், 740 கோடி ரூபாய் மதிப்பில், 23 புதிய ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் 9 மாவட்டங்களில்

மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 பணிகளும்; திருவள்ளூர் மாவட்டத்தில் 2 பணிகளும்; வேலூர் மாவட்டத்தில் 4 பணிகளும்; விழுப்புரம் மாவட்டத்தில் 3 பணிகளும்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 பணிகளும்; சேலம் மாவட்டத்தில் 3 பணிகளும்; ராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மாவட்டங்களில் தலா 1 பணியும் மேற்கொள்ளப்படும்.

பயண நேரத்தையும், தூரத்தையும் வெகுவாகக் குறைக்கும் நோக்குடன், இணைக்கப்படாத ஊர்களை இணைக்கும் வகையில், நபார்டு வங்கி நிதியுதவியுடன்,18 மாவட்டங்களில், 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 65 பாலங்கள், நடப்பாண்டில் கட்டப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், 8 புதிய பாலங்களும், 57 குறுகிய, பழுதடைந்த பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்களும் கட்டப்படும்.

7 நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகள், பல்வேறு வகையான போக்குவரத்திற்கு உட்படுவதால், விபத்துகள் அதிகரிப்பதுடன், நெரிசலும் கூடுகிறது. ஆகவே, இந்தச் சாலைகளின் பராமரிப்பிற்குத் தனி கவனம் செலுத்த வேண்டி உள்ளது. இதன் முதற்கட்டமாக, சோதனை முறையில், சென்னையில் உள்ள அண்ணா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை மற்றும் உள்வட்டச் சாலைகளை முழுமையாக, ஒருங்கிணைந்த முறையில் சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்த திட்டமிடும் பணி மேற்கொள்ளப்படும்.

பாதசாரிகள், இரு சக்கர வாகனங்கள், சிறு வாகனங்கள், பெரு வாகனங்கள் போன்ற அனைத்துவிதமான போக்குவரத்து, பல்வேறு போக்குவரத்துகளுக்கு இடையிலான மாறுதல்கள், வாகன நிறுத்த வசதிகள், பாதுகாப்பு அம்சங்கள், சாலைக் குறியீடு மற்றும் சமிக்ஞைகள்; பிற துறை சார்ந்த சேவைக் குழாய் வசதிகள்; மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்; சுற்றுப் புறத்தை பசுமையாக்குதலுக்கான வழிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இது திட்டமிடப்படும். இந்தத் திட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு, இச்சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
08.09.2011 அன்று விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரம் வெகு வேகமாக விரிவடைந்து வருகிறது. சென்னையில் வீட்டு மனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் விலை பெருமளவில் உயர்ந்து உள்ளது. எனவே, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தங்களுக்குச் சொந்தமாக வீடு ஒன்றை வாங்குவது என்பது கடினமானதாக உள்ளது. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, எல்லா தரப்பு மக்களுக்கும் வீடுகள் கிடைக்கும் வகையில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த உள்ளது.

அந்த வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ள புதிய வீட்டு வசதித் திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் உள்ள திருமழிசை அருகே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் 311.05 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்திற்கு முறையான அணுகு சாலை அமைப்பதற்குத் தேவைப்படும் 12.87 ஏக்கர் நிலம், நிலத்தின் உரிமையாளர்களிடம் உரிய கலந்தாலோசனை செய்து பெறப்பட உள்ளது. மேற்கண்ட நிலம் பெறப்பட்ட பின், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் 2160 கோடி ரூபாய் செலவில், 311.05 ஏக்கர் பரப்பளவில், செம்பரம்பாக்கம், குத்தாம்பாக்கம், பர்வதராஜபுரம், நரசிங்கபுரம் மற்றும் வெள்ளவேடு கிராமங்களை உள்ளடக்கிய "திருமழிசை துணைக்கோள் நகரம்", அதாவது Thirumazhisai Satellite Township அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணைக்கோள் நகரம், குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, சாலைகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், சமுதாயக் கூடம், பள்ளி, மருத்துவமனை, பேருந்து நிலையம், பூங்கா, விளையாட்டுத் திடல் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்டு அமைக்கப்படும்.

இந்த நகரத்தில் 12,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் எளிதில் வாங்கக் கூடிய விலையில் வழங்கப்படும்.

சென்னை அசோக் பில்லர் அருகில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 3.73 ஏக்கர் நிலப்பரப்பில், வாரியத்திற்குத் தேவையான மர உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப் பெற்று, பின்னாளில் அந்தத் தொழிற்சாலை பயன்பாடு இன்றி போனதால், இந்த இடம் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக எவ்வித பயன்பாட்டிற்கும் உட்படாமல் இருந்து வந்தது.

சென்னை மாநகரத்தில் வீட்டுத் தேவையைக் கருத்தில் கொண்டு, காலியாக உள்ள இந்த 3.73 ஏக்கர் நிலப் பரப்பில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 554 குடியிருப்புகள் கொண்ட பன்னடுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கூட்டமைப்பு கிராமத்தில் 5.6 ஏக்கர் காலி நிலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வசம் உள்ளது. இந்த நிலம், சென்னைப்

புறநகர் பேருந்து நிலையத்தை ஒட்டியும்; உள்வட்டச் சாலை முகப்பிலும் உள்ளது. தற்போது, இந்தக் காலி இடத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், பன்னடுக்கு வணிக வளாகம் ஒன்று கட்டப்படும். மேலும், 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1.44 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 120 குடியிருப்புகள் கட்டப்படும்.

2011ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பொன்விழா ஆண்டு ஆகும். பொன்விழா ஆண்டை முன்னிட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்டங்களின், மனை / வீடு / அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 3 விழுக்காடாக உயர்த்தி வழங்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம் சென்னை, நந்தனத்தில் 15.78 மனை நிலம் உள்ளது. நந்தனத்தில் அலுவலகக் கட்டடங்களுக்கான தேவை உள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம் தற்போது காலியாக உள்ள இடத்தில், சுமார் 100 கோடி ரூபாய் செலவில், பசுமைத் திட்ட அம்சங்களுடன், 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில், 17 மாடிகள் கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கட்டடத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*சென்னையில் 08.09.2011 அன்று நடைபெற்ற காவல் துறைக்கான 11–ஆவது அகில இந்திய துப்பாக்கிச் சுடும் போட்டியில் வெற்றவர்களுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*

தமிழகக் காவல்துறை உலக நாடுகளில் உள்ள காவல்துறைகளைவிடச் சிறந்ததாகத் திகழும்

நான் முதன் முறையாக கடந்த 1991ஆம் ஆண்டில் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, தமிழக போலீசாரிடம் பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் எதிர்த்துப் போராட போதிய ஆயுதங்கள் இல்லாததை உணர்ந்தேன். 2ஆம் உலகப் போரின்போது பயன்படுத்தப்பட்ட 303 ரக துப்பாக்கிகளை மட்டுமே போலீசார் பயன்படுத்தினர். இது போன்ற ஆயுதங்களை அருங்காட்சியகங்களில் கண்காட்சிக்காக மட்டுமே வைக்க முடியும்.

அதே நேரத்தில், பயங்கரவாதிகள் அதிநவீன துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினர். இதனால் நமது

போலீசார் செய்வதறியாத நிலையில் இருந்தனர். இந்தப் பின்னணியில்தான் நான் டெல்லி சென்று, அப்போதைய பிரதமர் பி.வி. நரசிம்மராவ், அப்போதைய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான், அப்போதைய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் ஆகியோரைச் சந்தித்து, தமிழக காவல்துறையை நவீனப்படுத்த 30 கோடி ரூபாய் நிதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

மத்திய அரசும் ஓரளவு நிதி வழங்கியது. நமது மாநில அரசும் கணிசமான நிதியை ஒதுக்கியது. இதன் மூலம், A.K. 47 ரகம் மற்றும் M.P. 5 போன்ற நவீன ஆயுதங்கள், நவீன வாகனங்கள், டிஜிட்டல் மைக்ரோ வேவ் தொலைத் தொடர்பு இணைப்பு முறை உள்ளிட்டவைகளை வாங்கி, தமிழகக் காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான வழிவகையை ஏற்படுத்தினேன். தமிழகக் காவல்துறை நவீனப்படுத்தப் பட்டதை அறிந்த மற்ற மாநிலங்களும் இந்த முறையைப் பின்பற்றி, தங்கள் மாநிலக் காவல் படையை நவீனமயமாக்க மத்திய அரசிடம் நிதி கோரினர்.

தற்போது, அனைத்து மாநிலங்களும் தங்கள் மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. அதிநவீன ஆயுதங்களை வழங்கி காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தை தேசியத் திட்டமாக ஏற்படுத்துவதற்கு நான் முன்னோடியாக இருந்ததைக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

தற்போது அளிக்கப்பட்டு வரும் உற்சாகத்தால், தமிழகக் காவல்துறை, உலக நாடுகளில் உள்ள காவல்துறைகளைவிட சிறந்த காவல்துறையாகத் திகழும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. காவல் பணிக்கே தமிழகக் காவல்துறை, ஒரு முன்னுதாரணமாகத் திகழும்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **10.09.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உண்டி கொடுத்து, உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலே உலகத்தின் உன்னதத் தொழில் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி !
முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழு மூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்துப் பிறர் வாழ
வழங்கும் குணமுடையோன் விவசாயி

என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியபடி, நீரிலே முத்தெடுக்காமல் நிலத்திலே முத்தெடுத்து ஊருக்கு உணவூட்டும் உன்னதத் தொழிலாளிதான் விவசாயி.

பயிர் வளர்த்து, உயிர் வளர்க்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெற எனது தலைமையிலான அரசு பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு / குறு விவசாயிகளுக்கும், வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கருவறை முதல் கல்லறை வரை பயன் அளிக்கக் கூடிய “தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டம், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 15.08.2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அதன் பின்னர், 2006ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, இந்தத் திட்டத்திற்கு

மாற்றாக, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் என்ற ஒரு சட்டத்தை இயற்றியது.

இந்த நிலையில், இந்தத் திட்டத்தின் கீழ், ஏதாவது ஒரு இனத்தின் கீழ் உதவித்தொகையின் அளவு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால் கூட, சட்டமன்றத்தைக் கூட்டி, இந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். இவ்வாறு, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததாக இருந்ததால், அந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்காக, 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டு, இதற்கான அரசு அறிவிக்கை 27.08.2011 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில், புதிய, விரிவுபடுத்தப்பட்ட, சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டம் "**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்**" என்று அழைக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ்,

(அ) 2.5 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் முதலியவற்றை உடமையாகக் கொண்டு, அந்த நிலத்தில் நேரடியாகப் பயிர் செய்யும், 18 வயது முதல் 65 வயதிற்கு உட்பட்ட குறு மற்றும் சிறு விவசாயிகள்; மற்றும்

(ஆ) விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 முதல் 65 வயது வரை உள்ள அனைத்து விவசாய குத்தகைதாரர்கள் / தொழிலாளர்கள்; மற்றும்

(இ) இவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் பயன் அடைவர்.

திட்ட வழிமுறைகள்

இத்திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத்தில், விவசாயத் தொழிலில் ஈடுபடும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் பண்பேறிய சிவப்பு வண்ணத்திலும், அதாவது Maroon வண்ணத்திலும், அவர்களைச் சார்ந்து வாழும் பிற குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிறத்திலும் அடையாள அட்டைகள் வழங்கப்படும். இவ்வாறு அடையாள அட்டை பெறுபவர்கள் அனைவரும் அரசின் திட்ட உதவிகளைப் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். இதுவரை குடும்பத் தலைவருக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப்பட்டு வந்த நிலை மாறி இந்தப் புதிய உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை வழங்கப்படுவதால், எவ்வித விடுபடுதலும் இன்றி, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் திட்ட உதவிகளைப் பெற வழிவகை ஏற்படும்.

கல்வி உதவி

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் கல்லூரிக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், இவர்கள் வேறு எந்தக் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றாலும், இந்தத் திட்டத்தின் கீழும் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு உயர்கல்வி படிப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்படும்:–

- ❖ தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI), பல்தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் (Polytechnic) மற்றும் இதர பட்டயப் படிப்புகளுக்கு 1,250 ரூபாய் முதல் 1,950 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.
- ❖ இளங்கலை பட்டப் படிப்புகளுக்கு 1,750 ரூபாய் முதல் 2,500 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.
- ❖ முதுகலை பட்டப் படிப்புகளுக்கு 2,250 ரூபாய் முதல் 3,750 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.
- ❖ சட்டம், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை அறிவியல் போன்ற தொழிற்கல்வி படிப்புகளுக்கு

இளங்கலையில் 2,250 ரூபாய் முதல் 4,750 ரூபாய் வரையிலும், முதுகலையில் 4,250 ரூபாய் முதல் 6,750 ரூபாய் வரையிலும் ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

2006ஆம் ஆண்டு, முந்தைய தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட சட்டத்தில், வேறு ஏதேனும் மத்திய அல்லது மாநில அரசு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெறப்பட்டால், இந்தத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற முடியாது என்ற நிலைமை தற்போது மாற்றப்பட்டு, வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெற்றாலும், இந்தத் திட்டத்திலும் கல்வி உதவித்தொகை பெற இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமண உதவி

சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதி உள்ளவர்கள் அத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவர். அவ்வாறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் உதவித் தொகை பெற இயலாதவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகையாக, ஆணுக்கு 8,000 ரூபாயும், பெண்ணுக்கு 10,000 ரூபாயும் வழங்கப்படும்.

மகப்பேறு உதவித்தொகை

இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினருக்குச் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையால் மகப்பேறு உதவிக்கென செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் இந்த உதவித்தொகை வழங்கப்படும். மகப்பேறு உதவித்தொகையினை எளிதாகப் பெறும் வகையில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் தேவையான சான்றிதழ்களை ஒருமுகப்படுத்தி வழங்க இத்திட்டத்தின் கீழ் வசதிகள் செய்து தரப்படும்.

முதியோர் ஓய்வூதியம்

60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியமாகப் பெறுவர்.

இயற்கை மரணம் மற்றும் விபத்து

முந்தைய தி.மு.க. அரசால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ், இயற்கை மரணம் மற்றும் விபத்து போன்ற நிகழ்வுகளில் குடும்பத் தலைவருக்குப் பாதிப்பு ஏற்பட்டால் மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டது. அது தற்போது மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்தில் கணவன் மற்றும் மனைவி இருவரும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இவர்கள் இருவருக்கும் தனித் தனியே அடையாள அட்டைகள் வழங்கப்படுவதால், இந்த இருவரில் யாருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் நிவாரணம் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் உறுப்பினரோ அல்லது அவரைச் சார்ந்தவரோ இறக்க நேரிட்டால், அந்தக் குடும்பத்திற்கு ஈமச் சடங்கிற்கான உதவித்தொகை உடனடியாக வழங்கப்படும். ஈமச் சடங்கு நிவாரணம் பெற இறப்புச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுவதுடன், குடும்பத் தலைவர் இறந்தால் மட்டுமே ஈமச் சடங்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற நிபந்தனையும் தற்போது மாற்றப்பட்டுள்ளது என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டச் செயலாக்கம்

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள **“முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்”** மாவட்ட அளவில் ஆட்சித் தலைவர்கள் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாகச் செயல்படுத்தப்படும். திட்டச் செயல்பாட்டினை மேற்பார்வை இடுவதற்கு அரசு அளவில் ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

“முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” என்ற இந்த விரிவுபடுத்தப்பட்ட புதிய திட்டம், தமிழக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மிகுந்த பயன் அளிக்கக்கூடிய திட்டமாக இருக்கும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **10.09.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

மருத்துவர்கள், மருத்துவப்பணியாளர்களை தேர்வு செய்ய தனி வாரியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்ற பழமொழியைக் கருத்தில் கொண்டு, இயன்ற வரை நோய் இல்லா வாழ்வை மக்கள் பெறுவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நோயை முற்றிலுமாகத் தவிர்ப்பது என்பது இயலாத ஒன்று ஆகும். எனவேதான், நோய் ஏற்படும்போது, அந்த நோயை நீக்குவதற்கான மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளித்து, அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு என்ற உயரிய இலக்குடன், சுகாதார சேவைகளை அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் நான் தற்போது எடுத்துரைக்க விழைகிறேன்.

தற்போது மாநிலத்தில் உள்ள 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 1,539 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் சுகாதார சேவை அளிக்கக் கூடிய வகையில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில், விரைவில் மாற்றி அமைக்கப்படும். தரம் உயர்த்தப்பட்ட 283 ஆரம்ப சுகாதார நிலையங்களில், முன்பே நிர்ணயம் செய்யப்பட்ட சிசேரியன் அறுவை சிகிச்சை, அதாவது, Elective Cesarean செய்வதற்கான

வசதிகள் உள்ளன. திடீரென்று, அவசரமாக சிசேரியன் அறுவை சிகிச்சை செய்யும் வசதி கிராமப்புரங்களில் இல்லை. இதனை நீக்கும் வகையில், முதற்கட்டமாக 42 தாய்–சேய் நல மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவசரகால சிசேரியன் அறுவை சிகிச்சை மற்றும் ரத்தம் செலுத்தும் வசதியுடன் 24 மணி நேரமும் இந்தத் தாய்–சேய் நல மையங்கள் செயல்படும். சுகாதார மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மையம் வீதம் இந்த 42 மையங்கள் அமைக்கப்படும்.

மேலும், தொலை தூரத்தில், எளிதில் சென்றடைய முடியாத நிலையில் உள்ள 31 துணை சுகாதார மையங்கள், முதல்நிலை தாய்–சேய் நல மையங்களாகத் தரம் உயர்த்தப்படும். முழு நேர சேவை அளிக்கும் வகையில், இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும், 3 செவிலியர்கள் பணி அமர்த்தப்படுவர். இவ்வாறு, 42 தாய்–சேய் நல மையங்களை அமைப்பதற்கும், 31 துணை சுகாதார மையங்களை தரம் உயர்த்துவதற்கும், 19 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

கிராமப்புரப் பெண்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்ட எனது அரசு, கிராமப்புரப் பெண்களின் நலனுக்காக புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. கிராமப்புரப் பெண்கள் இடையே ஆரோக்கியமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வகையில் பரிசோதனை மேற்கொள்ளவும், இந்தத் திட்டம் வழி வகுக்கும். 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனவும், சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனவும் மத்திய அரசால் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில், இந்த ஆண்டு, 12 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், மருத்துவ வசதி குறைவாக உள்ள 38 வட்டாரங்களில் உள்ள 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி மற்றும் அறுவை அரங்குகள் ஆகிய வசதிகளுடன், 39 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

இன்றைய நவீன யுகத்தில் அனைத்துத் துறைகளிலும் கணினியின் பயன்பாடு நீக்கமற நிறைந்துள்ளது. மருத்துவத் துறையிலும் கணினி பயன்பாடு மிகவும் இன்றியமையாதது ஆகும். நோயாளிகள் பல்வேறு துறைகளைச் சார்ந்த மருத்துவ வல்லுநர்களுடன் கணினி மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, நோய்கள் குறித்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு சிகிச்சை பெறும் வகையில், கணினி வழி உரையாடும் வசதியை நான் எனது முந்தைய ஆட்சி காலத்திலேயே ஏற்படுத்தினேன். தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு உயர் மருத்துவ ஆலோசனை கிடைக்கும் வகையில், 5 கோடி ரூபாய் செலவில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் Tele Medicine வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழக மக்கள் அனைவரும் நோயற்ற நல்வாழ்வு வாழ நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வரும் அதே நேரத்தில், இந்தத் திட்டங்களின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் எனில், துணை சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் ஓய்வு பெறுவதாலோ அல்லது பணியை விட்டு நீங்குவதாலோ ஏற்படும் காலி இடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணி இடங்கள் ஆகியவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். மக்கள் நல்வாழ்வுத் துறையில், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், மருத்துவமனை அடிப்படைப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் போன்ற பல்வேறு நிலைகளில் சுமார் 91,600 பணியிடங்கள் உள்ளன. இவற்றில், தற்போது 15,600–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்தகைய காலிப் பணியிடங்களுக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், ஏற்படப் போகும் காலிப் பணியிடங்களை முன் கூட்டியே கணக்கிட்டு, பணியாளர்களை விரைந்து தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறை இல்லாததுதான் அதற்கு முக்கியமான காரணம் ஆகும்.

இந்தக் குறைபாட்டை நீக்கும் வகையில், இந்தியாவிலேயே முதல் முறையாக, மருத்துவத் துறை பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கு என்று, "மருத்துவத் துறை பணியாளர் தேர்வு வாரியம்", அதாவது, Medical Services Recruitment Board என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் இந்திய ஆட்சிப் பணியில் உள்ள கூடுதல் செயலாளர் இந்தத் தேர்வு வாரியத்தின் தலைவராக இருப்பார். மருத்துவத் துறை இணை இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் உறுப்பினராகவும்; மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் உறுப்பினர்–செயலாளராகவும் இருப்பர். வாரியத்திற்குத் தேவையான இதரப் பணியாளர்களும் நியமிக்கப்படுவர். தேவைப்படும் பணியாளர்களைத் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இந்த மருத்துவத் துறை பணியாளர் வாரியம் தேர்வு செய்யும். தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவர்களையும் இந்த வாரியம் தேர்வு செய்யும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் தக்க திருத்தம் மேற்கொண்ட பின், மருத்துவர்களுக்கான நிரந்தரப் பணியிடங்களும், இந்தத் தேர்வு வாரியத்தின் மூலமே நிரப்பப்படும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களைத் தேர்வு செய்ய இது போன்ற தனி வாரியம் அமைக்கப்படுவதால், துணைச் சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை உள்ள மருத்துவமனைகளில் ஏற்படும் காலியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.09.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

சத்துணவு, அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம் நாடு எனும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே

– என்று குழந்தைகளைப் பற்றிப் பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடுமின்றி பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

தமிழகத்தில் உள்ள, 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோர் இடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிந்து, அதனை அகற்றி, ஊட்டச்சத்துக் குறைபாடு அற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் உள்ள அங்கன்வாடி மையங்கள் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2002ஆம் ஆண்டு எனது அரசால் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2003ஆம் ஆண்டு, ஊட்டச்சத்துக் குறைபாடு அற்ற தமிழகத்தை உருவாக்கும் வகையில், ஒரு புதிய கொள்கை வெளியிடப்பட்டது.

இதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்படுகின்றன.

- 6 மாதம் முதல் 36 மாதம் முடிய உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு இணை உணவு வழங்குதல்
- 2 வயது முதல் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு அளித்தல்
- முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கு மதிய உணவு அளித்தல்
- சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல்
- உயர் மருத்துவ சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல்
- பள்ளிசாரா முன்பருவக் கல்வி அளித்தல்
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்
- வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைக் கல்வி வழங்குதல்

ஆகியவைஇந்தத்திட்டத்தின்கீழ்செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்குச் செரிமானத் தன்மை–Amylase நிறைந்த இணை உணவு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில், பல்வேறு நிலையில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், புரதச் சத்து மிக்க, சத்தான, சூடான, மதிய உணவு அனைத்து மையங்களிலும் வருடத்தில் 365 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே, தமிழகத்தில் மட்டும்தான், ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு சமைக்கப்பட்ட சூடான, மதிய உணவு குழந்தைகள் மையத்தில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும்

தாய்மார்கள் மற்றும் ஒய்வூதியம் பெறும் முதியோர் உள்ளிட்ட 28 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெறும் குழந்தைகள் மையங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும்; மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும்; பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும்; எனது அரசு முடிவு செய்துள்ளது. அந்த வகையில், சொந்தக் கட்டடங்களில் செயல்படும் சிறிய பழுதுகளுடன் உள்ள 10,372 மையங்கள் மற்றும் பெரிய பழுதுகளுடன் உள்ள 7,449 மையங்கள், ஆக, பழுதுபட்டுள்ள மொத்தம் 17,821 மையங்களும் இந்த ஆண்டே 47 கோடியே, 61 இலட்சம் ரூபாய் செலவில் பழுது நீக்கி சீரமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு, ஆர்வமுடன் குழந்தைகள் வருவதற்கும்; விளையாட்டுச் சாதனங்கள் வாயிலாக முன்பருவக் கல்வி பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. இம்மையங்களில் கோடைக் காலத்தில் வெப்பத்தினாலும்; மழை மற்றும் குளிர்காலங்களில் போதிய வெளிச்சம் இன்மையாலும் குழந்தைகள் அவதியுறாமல் இருக்கும் வகையில், மின்விசிறி மற்றும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, மின்வசதி இல்லாத 45,345 குழந்தைகள் மையங்களில், 27 கோடியே, 21 இலட்சம் ரூபாய் செலவில், உட்புற மின் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன் மின் விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவை பொருத்தப்படும்.

சுற்றுச்சூழல் மாசு காரணமாகக் குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணவும்; குழந்தைகளிடம் இளம் வயதிலேயே கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும்; குழந்தைகள் மையங்களில் குழந்தை நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். இக்கழிப்பிடங்கள், குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் வடிவமைக்கப்படும். இதற்காக, இந்த ஆண்டு 23 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 29,727 குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி

மையங்களில் 28,596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும்.

இவ்வாறு, எனது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளாலும்; செயல்படுத்தி வரும் திட்டங்களாலும்; தாய், சேய் நலம் காப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.09.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதை சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.

தமிழ்ச் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்த பெருமக்களுக்குப் பெருமை சேர்ப்பதில் எனது அரசு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது.

1. சிந்தனைச் சிற்பி என்று மக்களால் போற்றப்படும் திரு சிங்காரவேலர் அவர்கள், மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18.02.1860இல் பிறந்து, கல்வி பல கற்று சிறந்த வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். அந்நியருக்கு எதிராக அண்ணல் காந்தியடிகள்

ஒத்துழையாமை போராட்டத்தைத் தொடங்கியபோது தனது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத் தீவிரமான விடுதலைப் போராட்டவீரராக மாறியவர். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டிற்கு தலைமையேற்று, தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்திற்கும், தான் பிறந்த மீனவ இனத்திற்கும் தனிப் பெருமை சேர்த்தவர். சிந்தனையாலும் செயலாலும் அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் பாடுபட்ட உழைப்பாளர் சிந்தனைச் சிற்பி திரு. சிங்காரவேலர் அவர்கள்.

2. சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்கள் **11.11.1911**இல் ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்து, தமிழையும் ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்று சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. ஜீவரத்தினம், தமிழர் நலனிலும், மீனவர் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு சமுதாய மாற்றத்தைக் காண கடுமையாக உழைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் அன்பையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தவர். பழமையை விடுத்துப் புதுமையை ஏற்று சமுதாய மாற்றத்தைக் காண உழைத்தவர்.

ஏழைத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட ஓய்வறியாத் தொண்டரும், சிந்தனைச் சிற்பியுமான திரு. சிங்காரவேலர் அவர்களுக்கும்; திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஆற்றல்மிகு பேச்சாளராகவும், மீனவ இனத்தின் தலைவராகவும் விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; அவர்தம் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள் அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளை மிகுந்த உவகையுடன் ஏற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும்; சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் அவர்களுக்கும்; சென்னை, பட்டினப்பாக்கத்தில் மணி மண்டபங்கள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழ் மொழியின் மீது தணியாத பற்று கொண்டு, பல தலைவர்கள் தமிழ்நாட்டிற்காகத் தியாகங்கள் பல செய்துள்ளனர். அதில் குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள் முக்கியமானவர் ஆவார்.

தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள், 05.01.1948இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவிதாங்கூர்–கொச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆனார். திருவிதாங்கூர்–கொச்சி அரசில் வனம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த திரு. சிதம்பரநாதன், திருவிதாங்கூர்–கொச்சி அரசில் அமைச்சர் பொறுப்பு வகித்த ஒரே தமிழர் ஆவார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டிருந்த மானிய வரியை இவர் நீக்கினார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது ஒன்றே திருவிதாங்கூர் தமிழர்களின் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு என்ற நிலையில், தன் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைக்கக் கோரி 04.07.1954இல் கண்டன நாளாக அறிவிக்கப்பட்டு, பொதுமக்களைச் சந்திக்க மூணாறு சென்றபோது, திரு. சிதம்பரநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு 6.7.1954இல் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார். திரு. சிதம்பரநான் அவர்கள், 1956 முதல் 1969 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

பல தியாகங்களைச் செய்த மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட மக்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தேன். அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் **12.09.2011** அன்று விதி **110**–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கைத்தறித் தொழில் கிராமப்புர மக்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 4 இலட்சம் கைத்தறி நெசவாளர்களின் நலன் காத்திட எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதே போன்று, விசைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 5 கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு சிட்டா நூல் தொடர்ந்து வழங்க ஏதுவாகவும்; கூட்டுறவு நூற்பாலைகள் தாங்கள் உற்பத்தி செய்யும் நூலை எளிதில் விற்பனை செய்யும் வகையிலும்; சிட்டா நூல் உற்பத்தி சட்டப்படி 40 விழுக்காடு நூல் சிட்டா நூலாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று இருந்தாலும்; அதற்கு அதிகமான அளவில் சிட்டா நூல் உற்பத்தி செய்து வருகின்றன.

மேலும், இந்நூற்பாலைகள் தொடர்ந்து செயல்படத் தேவையான காசுக் கடன் வசதி மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவை கிடைத்திடும் வகையிலான நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி ரகங்களைக் கொள்முதல்

செய்து நாடெங்கிலும் உள்ள துணி விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்வதோடு, அரசுத் திட்டங்களான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்; இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும்; கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பொங்கல் பண்டிகையின் போது இலவசமாக வேட்டி சேலை பெற்றிடும் வகையிலும்; இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டி சேலைகள் அனைத்தும், மாநிலத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்யத் தேவையான பருத்தி பாவு நூல், கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்தும்; கூட்டுறவு நூற்பாலைகளால் தயாரித்து அளிக்க முடியாத பாவு நூல் மற்றும் பாலியஸ்டர் ஊடை நூல் ஆகியவை வெளிச் சந்தையிலும் கொள்முதல் செய்யப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. வெளிச்சந்தையில் இவ்வாறு பாவு நூல் மற்றும் பாலியஸ்டர் நூல் கொள்முதல் செய்ய கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையரைத் தலைவராகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கும் குழு அரசால் நியமனம் செய்யப்படுகிறது. இக்குழுவிற்கு கோ–ஆப்டெக்ஸின் தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநர் அமைப்பாளராக, Convener ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கோ–ஆப்டெக்ஸின் புதிய நிபந்தனைகளால் "5 இலட்சம் நெசவாளர்கள் வேலை இழக்கும் அபாயம்" என சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளது. இச்செய்தியானது, கோ–ஆப்டெக்ஸின் தனி அலுவலர் / மேலாண்மை இயக்குநரின் 20.07.2011 நாளிட்ட சுற்றறிக்கையில், விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவச வேட்டி சேலை உற்பத்திக்குத் தேவையான நூலையோ அல்லது கூலியையோ முன்பணமாக

வழங்க முடியாது எனவும்; அவ்வாறு தேவையெனில், சங்கங்கள் வங்கியிடமிருந்து உத்தரவாதம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்ததனால், நெசவாளர்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியின் அடிப்படையில் வெளியாகி உள்ளது.

2012 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது வழங்கப்படும் இலவச வேட்டி, சேலைத் திட்டத்திற்குத் தேவையான வேட்டி, சேலைகள் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனைக் கணக்கில் கொண்டு உற்பத்தித் திட்டம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குக் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பெறப்படும் நூல் தவிர, கூடுதல் நூல் தேவைக்கான கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி 26.09.2011 அன்று திறக்கப்பட்டு அக்டோபர் முதல் வாரத்தில் உற்பத்திக்குத் தேவையான நூல் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுவிடும்.

மேலும், இலவச வேட்டி சேலைகள் தயாரிக்கத் தேவையான நூலை உற்பத்தி செய்து வழங்க கூட்டுறவு நூற்பாலைகளுக்கும்; வேட்டி சேலை தயாரித்து வழங்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவைப்படும் முன்பணம், கோ–ஆப்டெக்ஸ் மூலம் முன்பணமாக விடுவிக்கப்படுகிறது. வேட்டி சேலைகள் தயாரித்து வழங்கப்பட்ட பின், வழங்கப்பட்ட முன்பணம் ஈடு கட்டப்படும். விசைத்தறி மற்றும் கைத்தறி சங்கங்களுக்கு நடப்பு ஆண்டிற்கு தேவைப்படும் 256 கோடி ரூபாயை முன்பணமாக கோ–ஆப்டெக்ஸ் மூலம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த 256 கோடி ரூபாய் உடனே விடுவிக்கப்படும்.

எனவே, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில், விசைத்தறி நெசவாளர்கள் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்வதில் எந்தவித இடர்ப்பாடும் ஏற்பட வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.09.2011 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்களின் அறிக்கை.*

நாகப்பட்டினம் பகுதியில் மீன்வளப் பல்கலைக்கழகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. 591 கடல் மீனவ கிராமங்களில், சுமார் 9 லட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 6,200 மீன்பிடி விசைப் படகுகளும், 50,000 பாரம்பரியக் கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தி 4 லட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

மீன்வளத்துறையினை நவீனப்படுத்துவதற்கும்; கடல்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக ஆக்கிடவும்; எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீன்பதன அலகுகள் அமைத்தல்; மீன்பிடி விசைப் படகுகள் வாங்குதல்; ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பு உதவிகள் அளித்தல்; உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; மீனவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்; சிப்பம் கட்டுதல்; விற்பனை மற்றும் போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல் ஆகியவற்றிற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் துவங்கப்பட்டுள்ளன.

மீனவ நண்பன், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1977ஆம் ஆண்டு, இந்தியாவின் இரண்டாவது மீன்வளக் கல்லூரியைத் தூத்துக்குடியில் நிறுவினார்.

தமிழகத்தில் மீன்வளத்தை மேம்படுத்தவும்; மீன்வளத்தைப் பெருக்குவதில் நவீனத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும்; மீன்வளக் கல்வியை மேலும் ஊக்குவிப்பது அவசியம் ஆகிறது. மீன்வள மேம்பாட்டில் முன்னோடியாக உள்ள நாடுகளில், மீன்வளக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலும், நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில், கடந்த ஏப்ரல் மாதத்தில் மீன்வளம் மற்றும் பெருங்கடல் அறிவியல் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மீன்வளத்தைப் பெருக்குவதில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், அதற்குத் தேவையான கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த அடிப்படையில், மீன்வளத்திற்கென, "மீன்வளப் பல்கலைக்கழகம்" ஒன்றை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம் 188 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மீன்பிடித்தல், உலர் மீன் உற்பத்தி மற்றும் இறால் வளர்ப்பு ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். இம்மாவட்டத்தில் 9,000 மீன்பிடிக் கலன்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மீன்வளப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு நாகப்பட்டினம் மிகவும் உகந்த இடமாக உள்ளதால், இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் நிறுவப்படும்.

நாகப்பட்டினம் தாலுகாவில் பனங்குடி மற்றும் நாகூர் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

முதற்கட்டமாக,

1. தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

2. மீன்வளத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு

3. சென்னையில் உள்ள மீன்வளத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்

4. சென்னையில் உள்ள மீன்வளப் பணியாளர் பயிற்சி நிலையம்

5. தமிழ்நாடு கடல்சார் கழகம்

ஆகியவை இந்தப் புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்.

புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில்,

1) இறால் வளர்ப்பு

2) கெண்டை மீன் வளர்ப்பு

3) வண்ண மீன் வளர்ப்பு

4) மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் மதிப்பு கூட்டியப் பொருட்கள் உற்பத்தி

5) மீன்பிடி படகு மற்றும் இயந்திரப் பராமரிப்பு

6) கடலாள் பயிற்சி மற்றும் நீர்வழிப் பயிற்சி

ஆகிய பாடப்பிரிவுகளில் பட்டங்கள் மற்றும் பட்டயங்கள் வழங்கப்படும்.

தொழில்நுட்பப் பரிமாற்றம், விரிவாக்கக் கல்வி, மனித வளப் பயிற்சி மற்றும் மீன்வளப் பயன்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதில் இந்தப் பல்கலைக்கழகம் பெரும் பங்கு வகிக்கும். மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெறும் நபர்கள், உள்நாடு மற்றும் உலக அளவில் வேலை வாய்ப்புப் பெறவும் இது வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
15.09.2011 அன்று திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில்
சிறப்புத் திட்டங்களைத் தொடங்கிவைத்து ஆற்றிய விழாப் பேருரை.

ஏழை, எளிய மக்களைக் கைதூக்கிவிடும் இனிய திட்டங்கள்

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 103–ஆவது பிறந்த நாள்.

இதய தெய்வம் நமது அண்ணா தோன்றினார்–அவர் என்றும் வாழும் கொள்கை தீபம் ஏற்றினார் அந்த ஒளி காணலாம் சொன்ன வழி போகலாம் நாளை வரலாறு நமக்காக உருவாகலாம்

– என்று, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை அனுதினமும் கடைபிடித்து, நல்லாட்சி நடத்தி, ஏழை, எளிய

மக்களின் இதயத்தில் நீங்கா இடம் பெற்ற, பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில், ஏழை, எளிய மக்களின் வளமான வாழ்விற்காக, நித்தம் நித்தம் புத்தம் புது திட்டங்களைத் தீட்டும் உங்கள் அன்புச் சகோதரி ஆகிய நான் பல்வேறு புதிய திட்டங்களை இன்று இந்த விழாவில் தொடங்கி வைப்பதில் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாற்றத்தைத் தந்திட்ட தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தரும் வகையில், சீரிய முறையில் திட்டங்களைத் தீட்டி, சிறப்பான முறையில் செயல்படுத்துவது தான், உண்மையான, மக்கள் நலன் நாடும் அரசின் கடமை ஆகும்.

இந்த அடிப்படையில்தான், நான் மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே, மக்கள் நலன் பயக்கும் மகத்தான ஏழு திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டேன். மேலும், ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிட உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உறுதி பூண்டுள்ளேன்.

என் அன்பிற்கினிய தமிழக மக்களுக்கு நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வண்ணம், தினம் ஒரு திட்டத்தைத் தீட்டி செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். அந்த வகையில், உங்களுக்கு வாக்குறுதி அளித்தவாறு, மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம்; மாணவ, மாணவியர்கள் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் மடிக்கணினி வழங்கும் திட்டம்; மாணவ, மாணவியர்களின் வளமான எதிர்காலத்திற்காக கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்; கிராமப்புர ஏழை, எளிய மக்களின் வாழ்வில் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்கும் வகையில் ஆடுகள் வழங்கும் திட்டம்; வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில், பால் உற்பத்தியைப் பெருக்கவும், கிராமப்புர பொருளாதாரத்தை மேம்படுத்தவும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஆகிய முன்னோடித் திட்டங்களை இன்று இந்த இனிய விழாவில் தொடங்கிவைக்க உள்ளேன்.

இன்று, மக்களுக்குப் பயன்படும் வகையில் இவ்வாறு வழங்கப்படும் பொருட்களை, 'இலவசம்' என்று ஒரு சிலர் கொச்சைப்படுத்துகின்றனர். வாக்களித்த மக்களுக்கு, இவ்வாறு வழங்கப்படுகின்றது என்றும்; இவை இலவசங்கள் என்றும்; எனவே,

இவ்வாறு வழங்கப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்றும்; உச்ச நீதிமன்றத்திற்கே சென்று கூட வழக்குத் தொடுத்துள்ளனர். ஏழை, எளிய மக்கள் வாழ்வில் வளம் பெறவும்; எல்லோரும் எல்லாமும் பெற வேண்டியும்; மக்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்று, தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்பதற்கு வழி வகை செய்யும் இந்தத் திட்டங்களை எல்லாம் இலவசத் திட்டங்கள் என்று கொச்சைப்படுத்துவதைப் பொருளாதாரம் தெரிந்த எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

இன்று துவக்கி வைக்கப்படும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம், மக்கள் வாழ்வில் ஏற்றம் அளிக்கும் ஒரு உன்னதத் திட்டம் ஆகும். இது குடும்ப அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு 12,000 ஏழைப் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 5 ஆண்டுகளில் 60,000 பயனாளிகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட உள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் கலப்பின ஜெர்சி பசுக்கள் வழங்கப்படுவதால், அதிக பால் உற்பத்தித் திறன் ஏற்பட இது வழி வகை செய்கிறது. இவ்வாறாக, மாநிலத்தில் பால் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குவதால், இந்தத் திட்டம் வெண்மைப் புரட்சிக்கு வித்திடும் ஒரு உன்னதத் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ் 30 சதவீத பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருத்தல் வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால், ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள இந்தத் திட்டம் வழி வகை காண்கிறது.

‘சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசுமாடு
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு
பூப்போல வைத்து உன்னைக் காப்பது என் பாடு’

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியபடி, பயனாளிகள், இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் கறவைப் பசுக்களைப் பாதுகாத்து, அதன்மூலம் தங்கள் வாழ்வில் வளம் பெறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோன்றுதான், ஏழைகளின் வாழ்வில் ஏற்றத்தை உருவாக்கும் மற்றொரு திட்டம் ஆடுகள் வழங்கும் திட்டம் ஆகும். ஏழ்மையிலும் ஏழ்மையாக உள்ளவர்களே இந்தத்

திட்டத்தின் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தத் திட்டத்திலும் 30 சதவீத பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருப்பர். ஏழ்மையிலும் ஏழ்மை நிலையில் உள்ள பயனாளிகள் தங்கள் ஏழ்மை நிலையில் இருந்து விடுபட்டு, பொருளாதார சுதந்திரம் அடைந்திட இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது. இந்தத் திட்டத்தின் பயனாளிகள், ஒன்று, இரண்டு ஆண்டுகளிலேயே, தமது சொந்தக் கால்களில் நிற்கும் பொருளாதார வலிமையை இந்தத் திட்டம் பெற்றுத் தந்திடும்.

எனது அன்பிற்கு இனிய தமிழக மக்களே! இப்போது சொல்லுங்கள். இந்தத் திட்டங்கள் இலவசத் திட்டங்களா? அல்லது ஏழை, எளிய மக்களைக் கை தூக்கி விடும் இனிய திட்டங்களா?

இதற்கு முன்னால் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர், ஏழை, எளியவர்களின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல், மக்களின் ஓட்டுகளையே கருத்தில் கொண்டதால் தான் ‘ஏழைகள் இருக்கும் வரை இலவசங்கள் தொடரும்‘ என்று இறுமாப்புடன்; மனிதர்களைத் துச்சமென மதித்து; ஏழை, எளிய மக்களைக் கொச்சைப்படுத்தினார். அவர் தான் தற்போது என்னுடைய ஒவ்வொரு செயலுக்கும் குற்றம் கண்டுபிடிக்க முனைந்து, நாளும் ஒரு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். இந்த ஆண்டுக்கான ஒரு துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பத்தி சென்ற ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பின் ஈயடிச்சான் காப்பியாக உள்ளது என்று சொல்லி இருக்கிறார். நான் இது பற்றி அந்தத் துறை அமைச்சரிடம் கேட்டேன். அதற்கு அவர், 2005–2006ஆம் ஆண்டு எனது தலைமையிலான கழக ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பத்தியை அவர்கள் காப்பி அடித்து விட்டு, அது தங்களுடையது என்று Trade Mark–ஐக் குத்திக் கொண்டதாகத் தெரிவித்தார். அதே துறையின், 2005–2006ஆம் ஆண்டுக்கான கழக ஆட்சியின் கொள்கை விளக்கக் குறிப்பையும், 2006–2007ஆம் ஆண்டுக்கான மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் கொள்கை விளக்கக் குறிப்பையும் நான் பார்த்தேன். கழக ஆட்சியின் கொள்கை விளக்கக் குறிப்புகளில் உள்ள 33 பத்திகளை அப்படியே ஈயடிச்சான் காப்பியாக அடித்து விட்டிருக்கிறார்கள்.

இது மட்டுமல்லாமல், பாராட்டுப் பெற வேண்டித்தான், சட்டமன்றப் பேரவையில் 110–ஆவது விதியின் கீழ், நான் தினமும் ஒரு அறிவிப்பை வெளியிடுவதாக வேறு அவர் அங்கலாய்த்து உள்ளார். அவ்வாறு அங்கலாய்த்து உள்ளதன் மூலம், நான் செய்யும் அறிவிப்புகள் எல்லாம், மக்கள் நலன் பயக்கும், பாராட்டுப் பெறக்கூடிய அறிவிப்புகள் என்று தன்னை அறியாமலேயே தி.மு.க. தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார். இதைப் பார்க்கும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரிலே புதிதாக ஒரு பாலம் கட்டினார்கள். ஒரு விழா ஏற்பாடு செய்து, பாலத்தை அமைச்சர் திறந்து வைத்து, போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார்.

அந்தப் பாலத்தைக் கட்டிய அதிகாரிகளும், காண்டிராக்டரும், இந்தப் புதிய பாலத்தைப் பயன்படுத்தும் மக்களுக்கு ஒரு ஆச்சர்யத்தை அளிக்க விரும்பினார்கள். அதாவது, அந்தப் பாலத்தின் மேல் 100–ஆவதாக வரும் வாகனத்தை நிறுத்தி, பரிசுத் தொகையாக 10,000 ரூபாய் கொடுத்து, ஆச்சர்யப்படுத்துவது அவர்களது திட்டம்.

100–ஆவது வாகனமாக ஒரு கார் வந்தது. பாலம் முடிவில் நின்று கொண்டிருந்த அதிகாரிகள், அந்தக் காரை நிறுத்தி, காரை ஓட்டி வந்தவரிடம் 10,000 ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கினார்கள். அந்தக் காரை ஓட்டி வந்த நபர் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனார். அப்போது, அங்கிருந்த பத்திரிகையாளர்கள், அவரிடம், "இந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போறீங்க ?" என்று கேட்டனர். காரை ஓட்டி வந்த அந்த நபர் சிறிது தடுமாறி விட்டு, பின்னர், "முதல்ல ஒரு driving licence வாங்கணும்" என்று கூறினார். அதைக் கேட்ட எல்லோருக்கும் அதிர்ச்சி. "அப்படின்னா, இந்த ஆள் licence இல்லாமலா கார் ஓட்டிகிட்டு வராரு ?" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர். காருக்குள் இருந்த அவருடைய மனைவி நிலைமையை சமாளிக்கப் பார்த்து, வாயைத் திறந்தார். "அய்யா, அவர் சொல்றதை நம்பாதீங்க. அவர் குடி போதையிலே இருக்கும்போது இப்படித்தான் ஏதாவது உளறுவார்" என்று கூறினார். அங்கே இருந்தவர்களுக்கு மேலும் அதிர்ச்சி. "இந்த ஆள் குடிச்சிட்டு வேற வண்டி ஓட்டுகிறாரா ?" என்று திகைப்பு அடைந்தனர். காருக்குள் இருந்த அவருடைய தந்தை

இவற்றைக் கவனித்தார். அவருக்குக் காது சரியாகக் கேட்காது. காருக்கு வெளியே நிலைமை ஏதோ சரி இல்லை என்பதைப் புரிந்து கொண்டார். "இதுக்குத்தான் அப்பவே சொன்னேன்... திருட்டுக் காரை அதிகாரிகள் இருக்கிற இடத்துக்கிட்ட ஓட்டிக் கொண்டு போகாதே என்று! அதைக் கேட்கலை ... இப்போ மாட்டிக்கிட்டு முழிக்கிறான்" என்று கூறினார். "இது திருட்டுக் கார் வேறயா?" என்று அதிகாரிகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மயக்கமே வந்து விட்டது.

இப்படித்தான் ஒரு சிலர், வாயைக் கொடுத்து, வாங்கிக் கட்டிக்கொண்ட கதையாக, எனது ஒவ்வொரு திட்டத்தையும், செயலையும், குறை கூறி, அறிக்கை விட்டு, தி.மு.க. ஆட்சியிலே இருந்த போது, மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை என்பதை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மாநிலம் நிறைந்த பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், அங்கு மனிதவள மேம்பாட்டிற்கு, குறிப்பாக அறிவுசார் மனிதவள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவுசார் மனிதவள மேம்பாட்டில் முக்கிய அங்கம் வகிப்பது கல்வி அறிவுதான். எனவே, மாணவ, மாணவியர் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையிலும்; மேல்நிலைப் பள்ளிகளில் இடை நிற்றலைத் தடுக்கும் பொருட்டும்; அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், பத்தாம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியருக்கு 1,500 ரூபாயும்; மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு 1,500 ரூபாயும்; மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு 2,000 ரூபாயும், ஊக்கத் தொகையாக வழங்கும் திட்டத்தையும் இன்று தொடங்கி வைக்கிறேன். இதனால், பொருளாதாரத்தில் நலிந்த குடும்பத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடிப்பதுடன், கல்லூரிப் படிப்பைத் தொடரவும், இந்தத் திட்டம் மிகவும் பயன் தருவதாக அமையும்.

இதேபோன்றுதான், அறிவுசார் மாணவ சமுதாயத்தை உருவாக்கும் ஒரு புரட்சிகரமான, இந்தியாவிற்கே வழி காட்டும் முன்னோடித் திட்டம், மடிக்கணினி வழங்கும் திட்டம் ஆகும். மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினி அவர்களை ஒரு புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும் தலை

வாசலாக அமையும். தமிழ்நாட்டு மாணவ, மாணவியர் மற்ற எந்த மாநில மாணாக்கர்களையும் விட, கல்வியில் தேர்ந்து, அறிவில் சிறந்து விளங்கிட இந்தத் திட்டம் பயன் அளிக்கும்.

இல்லத்தரசிகளின் இன்னல் தீர்க்கும் இன்னொரு முத்தான திட்டம் தான், மகளிருக்கு மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம். இந்தத் திட்டத்தையும் இன்று நான் தொடங்கி வைக்கிறேன். இன்று நான் வழங்கும் மிக்ஸி மற்றும் கிரைண்டர், சமையல் அறையில் நாளும் உழன்று கொண்டிருக்கும் இல்லத்தரசிகளின் வேலைப் பளுவையும், நேரத்தையும் வெகுவாகக் குறைக்கும். இந்த அரிய நேரத்தை, ஆக்கபூர்வமான வழிகளில், அதாவது, குடும்பத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலோ; அல்லது தம் உள்ளத்தை செழுமைப்படுத்தும் நடவடிக்கைகளிலோ; அல்லது சமுதாயத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலோ இல்லத்தரசிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும். அது போலவே, வசதி பெற்றவர்கள் குளிர்சாதன வசதியை ஏற்படுத்திக் கொள்ளும் போது, அந்த வசதியைப் பெற இயலாத சாமானிய மக்கள் மின் விசிறி வசதியைப் பெறுவது நியாயமானதே ஆகும்.

உங்கள் அன்புச் சகோதரி ஆகிய எனது தலைமையிலான அரசு, பொருளாதார வளர்ச்சிக்கும், மனிதவள மேம்பாட்டிற்கும், தனி மனிதனின் அத்தியாவசியத் தேவைகளுக்கும் என பலப் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. நீங்கள் அனைவரும் இந்தத் திட்டங்களின் பயன்களைப் பெற்று, உங்கள் வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் என வாழ்த்தி,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

★ ★ ★

ஜப்பான் தொழில் வர்த்தக சபையின் தலைவர் தடாஷி ஒகாமுரா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர், சென்னை தலைமைச் செயலகத்தில் 22.09.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்கள். ஜப்பானியத் தொழில் அதிபர்கள் மத்தியில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.*

தமிழகத்தில் ஜப்பான் நாட்டின் நேரடி முதலீட்டை ஈர்க்க அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்

இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே வரலாற்று ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் தொடர்பு உண்டு. தொன்றுதொட்டு இருந்துவரும் இந்தத் தொடர்புகள் தற்போதும் தொடர்ந்து வலிமை பெற்று வருகின்றன. அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக ஜப்பானிய நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்க ஆர்வமாக உள்ளன.

இந்தியாவில் ஜப்பான் நிறுவனங்கள் தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டைக் கருதுகின்றன. முதலீட்டு வாய்ப்புகளை உணர்ந்து ஜப்பான் தொழில் வர்த்தகசபை தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருக்கிறது. இதனால் இரு தரப்பிலும் பொருளாதார உறவுகள் மேம்படும்.

இந்தியாவில் அதிக முதலீடு செய்யும் 6–ஆவது பெரிய நாடாக ஜப்பான் திகழ்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 5½ மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஜப்பான் நாட்டில் இருந்து இந்தியாவுக்கு நேரடி அன்னிய முதலீடுகள் வந்துள்ளன. தமிழ்நாட்டில் 248 ஜப்பானிய நிறுவனங்கள் தொழில் தொடங்கி இருக்கின்றன. இந்தியாவில் உள்ள ஜப்பான் நிறுவனங்களில் 30 சதவீதம் தமிழ்நாட்டில்தான் உள்ளன.

பொதுவாக ஜப்பான் நிறுவனங்கள் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யவே அதிகம் விரும்புகின்றனர். அந்த வகையில், தமிழ்நாடு உற்பத்தித் துறையில் முன்னணியில் உள்ளது. ஆட்டோமொபைல் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் அதிகளவில் இங்கு இருப்பதே அதற்குக் காரணம். சென்னையில் சாதாரண சைக்கிளில் தொடங்கி டாங்கிகள் வரை சகலப் பொருட்களும் தயாரிக்கப் படுகின்றன.

ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிப்பில் உலகின் பெரிய 4 கேந்திரங்களில் சென்னையும் ஒன்று. தமிழ்நாட்டில் ஜப்பானிய நிறுவனங்கள் செய்துள்ள மொத்த முதலீட்டில் 60 சதவீதம் ஆட்டோ உதிரி பாகங்கள் தயாரிப்பில்தான் செய்யப்பட்டு உள்ளன. ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க இங்குப் பல சாதகமான அம்சங்கள் இருக்கின்றன. ஜப்பானில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. ஜப்பானிய நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் குறைந்த சம்பளத்தில் கிடைப்பது, தொழில் அமைதி போன்றவை தமிழ்நாட்டை முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக மாற்றி உள்ளன.

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது, அந்த வகையில், உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யுமாறு ஜப்பான் தொழில் அதிபர்களுக்கு இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதேபோல் சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிப்புத் திட்டங்களிலும் ஜப்பான் முதலீடுகள் பெருமளவு வரவேற்கப்படுகின்றன.

கடலூர்–நாகப்பட்டினம் இடையே பெட்ரோலியம், ரசாயனம் பெட்ரோ கெமிக்கல்ஸ் முதலீட்டு மண்டலத்தை ஏற்படுத்த எனது

தலைமையிலான அரசு திட்டமிட்டு வருகிறது. இது கெமிக்கல் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் துறையின் முதலீடுகளை ஈர்க்க உருவாக்கப்படும் மிகப்பெரிய உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகும். மேலும், கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவற்றிலும் முதலீடுகள் செய்வதற்கு ஜப்பான் நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டில் 23 சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன. சிறிய துறைமுகங்களை மேம்படுத்தும் பணியில் தனியாரை ஈடுபடுத்தும் வகையில் புதிய கொள்கையை எனது தலைமையிலான அரசு அறிவித்துள்ளது. குளச்சல் உள்ளிட்ட சிறிய துறைமுகங்களை பெரிய துறைமுகங்களாக மாற்ற அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. எனது அரசு ஜப்பான் நாட்டை தமிழகத்தின் முக்கியமான பங்குதாரராகக் கருதுகிறது. தமிழகத்தில் ஜப்பானியத் தொழில் முதலீடுகளுக்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. உற்பத்தித் துறையிலும், உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் துறையிலும் ஜப்பான் நேரடி முதலீடுகளை ஈர்க்க தேவையான அனைத்து உதவிகளையும் எனது அரசு செய்து கொடுக்கும்.

எனவே, தமிழகத்தில் தொழில் தொடங்க ஜப்பானிய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,*
11.10.2011 அன்று நடைபெற்ற மாநிலத் திட்டக் குழுவின்
முதல் கூட்டத்திற்கு தலைமையேற்று ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கத் திட்டமிடுவோம்

மாநிலத் திட்டக் குழுவின் முதல் கூட்டத்திற்குத் தலைமையேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

துணைத்தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் அவரவர் துறைகளில் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றனர். கொள்கை உருவாக்குதல், திட்ட மேம்பாடு, திட்டப் பணியுத்திகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் புதுமையைக் கொண்டுவருவதற்கு அளிக்கின்ற தங்களின் பங்களிப்புகளையும் எண்ணக் கருத்துகளையும் கூர்ந்து கவனிப்பதற்கு மாநில அரசு முன்வந்துள்ளது.

உலகளாவிய நிதி நெருக்கடியின் எதிர் விளைவுகளில் ஏற்படுகின்ற சவால்களைச் சமாளித்து, தீர்வு கண்டறிவதில் இந்த மாநிலத்திற்கான தடைகளையும், இம்மாநிலம் சந்திக்கும் இடர்ப்பாடுகள் பற்றியும் அதற்கான சில வாய்ப்புகள் பற்றியும், இக்குழுவின் உறுப்பினர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

எனது அரசு, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பயனடையக்கூடிய வகையில் எல்லா நிலைகளிலும் நீடித்த பொருளாதார வளர்ச்சியில் சாதனை ஏற்படுத்த முனைந்துள்ளது.

பதினோறாவது திட்டக் காலத்தில் தமிழ்நாட்டின் சராசரியான வளர்ச்சி இலக்கு 9 விழுக்காடாகும். ஆனால், இந்த வளர்ச்சி வீதம் ஆரம்பக்கட்ட நிலையில், இரண்டாம் கட்ட நிலையில் உள்ள துறைகளில் ஏமாற்றம் தரக்கூடியதாக, தேசிய சராசரி நிலையைவிடக் குறைந்து காணப்பட்டது.

இதன் விளைவாகப் பதினோறாவது திட்டக் காலத்தின் முதல் நான்காண்டுகளில் ஒட்டுமொத்தமான வளர்ச்சி வீதத்தில் மாநிலப் பொருளாதாரத்தில் 7.8 சதவீதம் மட்டுமே எய்த இயலும்.

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி சேவைத்துறையின் மூலமாக மட்டுமே, உந்துசக்தியாக இருந்து வருகிறது. சேவைத்துறையின் வளர்ச்சியானது நீண்ட காலத்திற்கு நீடித்திருக்கும். ஆகவே, ஆரம்பக்கட்டத் துறைகளிலும், உற்பத்தித் துறைகளிலும், உயர்ந்த வளர்ச்சியை எய்துவதற்காக முக்கியமான பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

இனிவரும் ஆண்டுகளில், ஒட்டுமொத்த வளர்ச்சியில் 10 சதவிகிதத்திற்கு மேல், சாதனை ஏற்படுத்தும் வகையில், சேவைத்துறையில் உயரளவிலான நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடுகளில் உள்ள சிக்கலான முட்டுக்கட்டைகளையும் அகற்றியாக வேண்டும்.

ஆரம்பக்கட்டத் துறைகளில் ஒட்டுமொத்தமான எதிர்மறை வளர்ச்சி 0.51 சதவிகிதமாக பதினோறாவது திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் பதிவாகி உள்ளது.

ஆரம்பக்கட்டத் துறையைப் புனரமைப்பதில் பெருமளவில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. 2011–2012 ஆம் ஆண்டின் உணவு–தானிய உற்பத்தியை 115 இலட்சம் மெட்ரிக் டன் ஆக்க இந்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

உணவு தானிய உற்பத்தி கடந்த ஆண்டில் 85.35 இலட்சம் மெட்ரிக் டன் ஆகவே இருந்தது. வேளாண் உற்பத்தியானது மதிப்புக் கூட்டுவதன் மூலமாகவும், உற்பத்தித் திறன் இடைவெளியைச் சரிப்படுத்துவதன் மூலமாகவும் மேம்படுத்தப்படுகிறது.

ஐந்தாண்டுக் காலத்திற்குள் விவசாயிகளின் தனி மனித வருமானத்தை இருநூறிலிருந்து முந்நூறு சதவீத அளவிற்கு அதிகரிப்பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது. எனது அரசு, ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாட்டு முறையை உறுதிப்படுத்தும் வகையில், திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலமாகவும், கலப்புப் பண்ணை முறைக்கான ஊக்குவித்தலின் அடிப்படையில், பயிர் உற்பத்தித் தன்மையை அதிகரிப்பதற்கு, உயரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அதைத் தீவிரமாகப் பரவலாக்குதலின் மூலமாகவும் சாதனை ஏற்படுத்தக் கருதியுள்ளது.

குறிப்பாக, சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினரிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பணவீக்கப் போக்கின் காரணமாக, ஏற்பட்டுள்ள விரைவான வருவாய் வீழ்ச்சியைக் கருதிப் பார்த்து எனது அரசு போதுமான அளவிற்கு சமூகப் பாதுகாப்பு விலைக்கு வகை செய்துள்ளது.

பொருளாதாரத்தில் நலிவடைந்துள்ள பிரிவினரின் வாழ்வாதார நிலையை உயர்த்துவதற்கு உதவும் வகையில், எனது அரசு பல்வேறு பொருளாதார மற்றும் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இத்தகைய நோக்கத்தின் காரணமாக ஏழை, எளியோர் குறிப்பிட்ட கால அளவிற்குள் அவர்களின் சொந்த வருமானத்தைக் கொண்டு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆகவே, நமது தற்போதைய திட்டமிடுதல், பண்ணை முறையை அடிப்படையாகக் கொண்டும், திட்டமிடுதல், திட்ட மேம்பாடு, செயல்படுத்துதல் ஆகிய அணுகுமுறைகளின் அடிப்படையில் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்துவதும் ஆகும்.

தமிழ்நாடு கிராமப் பகுதி குடியிருப்பு மேம்பாடுத் திட்டம், இந்த நோக்கத்திற்கான உதாரணமாக விளங்குவதுடன் இத்திட்டம் நகர்ப்புரங்களில் உள்ள வசதிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதில், கிராமங்களின், அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என்றும் மாநிலத்தின் பெரும்பாலான மக்கள்தொகையைக் கொண்டுள்ள ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் என்றும் நான் எதிர்பார்க்கிறேன்.

ஏனைய குறிப்பிடத்தக்க முக்கியமான புதிய திட்டங்களான, சென்னை மாநகருக்கான மோனோ ரயில் திட்டம், திருமழிசையில் துணை நகரம் உருவாக்குதல், ஊரகப் பகுதிகளின் பசுமை வீட்டுத் திட்டம் கொண்டுவருதல், பள்ளி–கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், உயர்கல்விக்கான தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் மையங்களை உருவாக்குதல், மின் வளங்களைப் பெருக்குதல், போதுமான அளவுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியனவாகும்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கான இம்மாநிலத்தின் தேவைகளுக்கு, போதுமான திட்ட அணுகுமுறைகளுடன் கூடிய 12ஆவது திட்டத்திற்கான திட்டக் குறிப்பை வரைவதற்கு இத்திட்டக்குழு விழையும் என்று நான் நம்புகின்றேன். இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாகக் கொண்டுவருவதற்குத் திட்டமிடுவோம்.

★ ★ ★

*புதுடெல்லியில் **22.10.2011** அன்று நடைபெற்ற*
***56**ஆவது தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா***
அவர்களின் உரையை, அவரது சார்பில் கலந்துகொண்ட
மாண்புமிகு நிதியமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்
வாசித்தார். அந்த உரையின் தமிழாக்கம்.

மாநிலங்களுக்கான மத்திய அரசின் நிதியுதவி மானியம் 50 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும்

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

மாண்புமிகு மத்திய நிதிக்குழுவின் துணைத்தலைவர் அவர்களே!

மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு முதலமைச்சர்களே!

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்களே!

மற்றும்

மத்திய–மாநில அரசுகளின் முதுநிலை அதிகாரிகளே!

இந்த 56–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் 12–ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகுமுறை பற்றி விவாதித்து ஏற்பளிப்பதற்காகவே கூட்டப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன்.

இந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம், எத்தகைய இறுதி முடிவையும் உறுதியாக எய்துவதற்குப் பதிலாக வெறும் சம்பிரதாயமாகக் கூட்டப்படுகிறது என்ற எனது உணர்வுகளை முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். மத்திய அரசு காங்கிரஸ் அல்லாத அரசுகளைத் தண்டிக்கும் போக்கைக் கடைபிடிக்குமோ எனத் தோன்றுகிறது. காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களிலுள்ள மக்கள், காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்களில் வாழுகின்ற மக்களை விட முக்கியத்துவம் பெற்ற இந்தியக் குடிமக்களாக்கப்படுவதை மத்திய அரசு புரிந்து கொள்ளவில்லையோ என்று இந்த அரசுக்குத் தோன்றுகிறது. அந்த மக்களின் உள்ளபடியான தேவைகளையும் வேண்டுதல்களையும்கூட மத்திய அரசு நிறைவேற்றுவதில்லை. சிறப்பு உதவித் தொகைகளுக் காகவும், நிதி உதவிகளுக்காகவும் மீண்டும், மீண்டும் கோரிக்கைகள் வைத்தும், தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை. ஆனால், மேற்கு வங்காள அரசுக்கு மட்டும் நிதி அளிக்கப்படுவதற்குக் காரணம், மேற்கு வங்க அரசு, மத்திய அரசின் கூட்டணியில் இருப்பதே ஆகும். காங்கிரஸ் அல்லாத அரசுகளுக்கு மத்திய அரசு, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதற்கு இது ஒன்றே சாட்சியாகும்.

சமீப மாதங்களில் மத்திய அரசால், கொண்டுவரப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளிலும் ஜனநாயக விரோதப் போக்கும் எதேச்சதிகாரப் போக்குமே காணப்படுகின்றன. சமுதாயத்தில் ஏற்படுகின்ற வன்முறைகளைத் தடுக்கும் பொருட்டு திட்டமிட்ட சமுதாய வன்முறைகளைத் தடை செய்யும் (நீதி–இழப்பீடு வழங்க வகை செய்தல்) சட்ட முன் வடிவு–2011 மத்திய அரசால் கொண்டுவரப்பட்டதில் மாநில அரசுகள் ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டு எல்லா அதிகாரங்களையும் மத்திய அரசு எடுத்துக் கொண்டுள்ளது வெளிப்படையாகவே தெரிகிறது. இதனால் மாநில அரசுகள் எந்த அதிகாரமும் இல்லாமல், எல்லாவற்றுக்கும் மத்திய அரசையே நாட வேண்டியுள்ளது. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356ஆம் பிரிவைப்

பயன்படுத்துவதற்கு, இந்திய உச்ச நீதிமன்றம் பொம்மை தீர்ப்பின் அடிப்படையில் இந்திய அரசுக்கு வரம்புக்குட்பட்ட அதிகாரமே இருப்பதால், மாநில அரசுகளைக் கலைத்து விடுவார்களோ என்ற நிரந்தர அச்சுறுத்தலின் கீழ் வைத்திருத்தல் மத்திய அரசின் முயற்சியாகும்.

மாநில அரசுகளின் அச்சங்களைப் போக்காமலே பொது விற்பனை வரிச் சட்ட முன் வடிவைக் கொண்டு வர (GST Bill) முயன்றதால், தற்போது மாநில அரசுகளிடம் உள்ள மதிப்புக் கூட்டு வரி (VAT) விதிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு பறித்துக் கொள்ள முயற்சிக்கிறது. மதிப்புக் கூட்டு வரி (VAT) மாநிலங்களின் வருவாய் வாயில்களில் முக்கியமான அளவு கோலாக உள்ளது. இது தற்போது மிரட்டலுக்குள்ளாகியுள்ளது. பொது விற்பனை வரியைச் செயல்படுத்துவதில் பெருமளவில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். மத்திய விற்பனை வரி (CST) முறையை ஒழித்து விட்டு, மதிப்புக் கூட்டு வரியைச் செயல்படுத்துவதற்காக இழப்பீடு அளிப்பது எங்களுக்கு மிகவும் இடையூறாக இருப்பது அனுபவத்திலிருந்து தெரிகிறது. இதன் தற்போதைய வடிவத்தில் பொது விற்பனை வரியைக் கொண்டுவரக் கருதியுள்ளது, மாநிலங்களின் நிதி தன்னாட்சியில் ஏற்படுகின்ற தாக்குதல் ஆகும். இதை ஏற்பது கடினமாகும். தமிழக மீனவர்களின் உயிர்களை மத்திய அரசு அற்பமாகக் கருதுகிறது. தொழில் கல்விப் பாடப் பிரிவிற்கு, பொது நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வந்ததிலும், மத்திய அரசு, மாநில அரசுகளின் கருத்தைக் கேட்காமலும், உள்ளூர் நிலைமைகள் பற்றிக் கவலைப்படாமலும் செயல்பட்ட பிடிவாதப் போக்கு காணப்படுகிறது. இது, கல்வித்துறையில் மத்திய அரசு மேற்கொள்ளும் நிலையான குறுக்கீடு ஆகும்.

பாக் வளைகுடாவில் (Palk Bay) தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களால் தாக்கப்படுவது கூட, இந்தியாவின் மீது அவர்கள் வலுச் சண்டைக்கு வருவதாகவே பார்க்கப்படுகிறது.

இப்பிரச்சினை, தமிழ்நாடு என்பதாலேயே வெறுமனே மிகச் சிறு பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டு மீனவர்களின் உயிர்களை மதிப்பில்லாத அற்பமாக மத்திய அரசு பார்ப்பதால்தான், அதற்கு மத்திய அரசு வீரியமான நடவடிக்கை எடுக்கக் கோருவதில்லை.

இந்தப் பின்னணிகளின் காரணமாகவே, இந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதன் மூலம் பயனுள்ள நோக்கம் ஏதுவும் ஏற்படப் போவதில்லை என்று அஞ்சுகிறேன்.

திட்டக்குழுவின் ''விரைவான நீடித்த அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி'' அறிக்கையானது இந்தியப் பொருளாதார வளர்ச்சி எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுகிறது. ஆனால், இதில், தெளிவான கட்டளையும் உத்தியும் குறைவாகவே உள்ளது. 12–ஆவது திட்டத்தை நாம் தொடங்கும்போதே 11–ஆவது திட்டத்தைச் செயல்படுத்தத் தவறியதைக் கண்டறிவது அவசியமாகும். உலகப்பெரும் பொருளாதாரத்தில் இந்தியாவும் தோன்றப் போகும் நிலைக்காக நமது மக்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதிலுள்ள சிற்சில பிரச்சினைகளைப் போக்குவதற்கான முறையில் வடிவமைக்கப்பட்ட தகுந்த உத்திகளை உருவாக்க வேண்டும்.

உறுதியற்ற நிலையில் அபாயகரமாக உள்ள உலகப் பொருளாதார வரலாற்றின் விளிம்பைச் சந்திக்கும் நிலையில் உள்ளோம். அதே நேரத்தில் நல்ல சாத்தியக் கூறுகளும் நமக்கு உள்ளன. எஞ்சியுள்ள உலகப் பொருளாதார நிலையின் சக்தியானது, இந்த நடைமுறையின் ஒரு பகுதியாகக் கிழக்கு நோக்கி வர முடிவு செய்துள்ளது. இந்தியா மிகப் பெரிய பொருளாதார சக்தியாகத் தோன்ற வேண்டும். இந்தியாவின் நிலையான இலாவகமான பெரும் பொருளாதார மேலாண்மை ஒருங்கிணைக்கப்பட்டு, புதுமையான திட்டப் பணி உத்திகளை உறுதிப்படுத்தினால், இந்தியா, தர்க்க ரீதியான முடிவுகளின் போக்கை எய்துவதும், இந்தியா உயர்நிலை கொண்ட அதன் சரியான இடத்தை அடைந்துவிடும்.

எளிதான செயல் அல்ல

பதினொன்றாவது திட்டக் காலத்தின் போது, அடைந்த ஒட்டு மொத்தமான வளர்ச்சியானது திருப்தியளிப்பதாக இருந்தாலும் இந்தப் போக்கு, தமிழ்நாடு உள்ளிட்ட சில மாநிலங்களில் குறைந்துள்ளது. இத்திட்டக் காலத்தின் திட்ட இலக்கு 9% ஆக இருக்க, முதல் நான்கு ஆண்டுகளில் சராசரி வளர்ச்சி 8% மட்டுமே. அதுவும் பெருமளவில் 2010–2011ஆம் ஆண்டில் ஏற்பட்டதே. முதல் நான்கு ஆண்டுகளில் வேளாண்மை மற்றும் உற்பத்தித் துறைகளில் செயல்பாடுகள் மிகவும்

கவலையளிப்பதாகவே இருந்தது. ஆகவே, எனது அரசு 2011, மே மாதம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், இத் துறைகளில் வளர்ச்சியை விரைவுபடுத்த உயர் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. எதிர்பார்ப்புகள் மேம்பாடு அடைந்து வருவதால், மக்களின் எல்லா அபிலாஷைகளும் பூர்த்தியாகின்றன. எல்லாவற்றிலும் பெருமளவில் கவனம் செலுத்தி தீர்மானமாகப் பணியாற்றுவது அவசியமாகிறது.

ஆகவே, 12–ஆவது திட்டத்திற்கான இலக்குக்கு உட்பட்ட வளர்ச்சியை எய்த மிகவும் உறுதி கொண்டுள்ளோம். 12–ஆவது திட்டத்தில், குறிக்கோளை எய்த குறைந்தளவு 10% வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும் தற்போது சில நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. அதனால் அந்தக் குறிக்கோளை எய்துவது என்பது எளிதான செயல் அல்ல.

எரிபொருள் விலையை உயர்த்திவிட்டு பணவீக்கம் குறையும் என்று எப்படி எதிர்பார்ப்பது ?

மத்திய அரசின் கொள்கைகள்–நடவடிக்கைகள் மற்றும் எதிர்–உற்பத்தித்திறன் ஆகியவை பரிதாபமாக தோல்வியடைந்ததால்தான் விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக உணவு, எரிபொருள் விலை ஏற்றத்தால், மக்கள் சொல்லொண்ணாத் துயரம் அடைந்துள்ளனர். மத்திய அரசு இத்தகைய விலை ஏற்றத்தின் போக்கைக் கட்டுப்படுத்தத் தவறியது மட்டுமல்ல, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு (LPG) ஆகியவற்றின் விலைகள் அடிக்கடி மீண்டும் மீண்டும் உயர்ந்ததால் மக்கள் பெரும் சுமையைச் சுமக்க வேண்டியதாயிற்று. எடுத்துக்காட்டாக, 2004 முதல் 2011ஆம் ஆண்டு வரையில் டீசல் விலை, லிட்டர் ஒன்றுக்கு ரூ.29.30 முதல் ரூ.43.80 வரையில் 13 தடவையாக உயர்த்தப்பட்டது. இதே போன்று பெட்ரோல் விலை, லிட்டர் ஒன்றுக்கு ரூ.41.25 முதல் ரூ.67.22 வரையில் 19 தடவைகள் உயர்த்தப்பட்டது. அதே கால கட்டத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை ரூ.249.02 முதல் ரூ.404.04 வரையில் உயர்த்தப்பட்டது. எரிபொருள் விலையை பல தடவை உயர்த்தி விட்டு, பணவீக்கம் குறையும் என்று நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது ? விலைகளைக் கட்டுப்படுத்து வதற்காக விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வதற்கு, மாநிலங்களுக்கு ஆலோசனை வழங்க, மத்திய அரசு இன்னும் தவறவில்லை.

வறுமை நிலையைச் சரிப்படுத்த வேண்டும்

வளர்ச்சியானது, மோசமான சமூகப் பொருளாதாரக் கருத்து வேற்றுமைகளின் காரணமாக வெற்றியாளர்கள் சிலரையும், தோல்வியடைபவர்கள் பலரையும் உருவாக்குகிறது. தேசத்தின் சமூகத்தை நிர்மாணிக்க முழுப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டியுள்ளது. இந்த வளர்ச்சியானது, எல்லா மாநிலங்களையும் சமநிலைப் படுத்துவதுடன் மாநிலங்களுக்குள்ளேயே அடங்கியுள்ள வட்டாரங்கள், ஊரகம், நகரியம் மற்றும் வகுப்புகள், சமுதாயங்கள் ஆகியவற்றையும் சமநிலைப்படுத்த வேண்டும். இத்தகைய சமநிலையை தமிழ்நாட்டில் கொண்டு வரத் தொடர்ந்து கவனம் செலுத்தப்படுகிறது. வறுமையை ஒழிப்பதற்கு நேரடியான திட்டம் எதுவும் இல்லை என்று இத்தருணத்தில் எடுத்துக்காட்ட விழைகிறேன். குறிப்பாக நகர்ப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்க, மத்திய அரசு உணர்ச்சியற்ற தன்மையையே பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் உள்ள பிரச்சினைகளையும் குறுக்கீடுகளையும் விரிவான அளவில் எடுத்துக் கொண்டு வறுமை நிலையை சரிப்படுத்த வேண்டும்.

பதின்மூன்றாம் ''முக்கியத் திட்டங்கள்'' என்றழைக்கப்படும் இத்திட்டங்களுக்கு தடையற்ற ''வழக்கமான மத்திய நிதியுதவி'' என்ற வகையில், மாநிலங்களுக்கு முன்னரே பெருமளவில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்நிதி ஒதுக்கீடு ''மாநிலம் முன்னுரிமை அளிக்கும் திட்டங்களுக்கு'' செலவிடப்படுகிறது. சகோதர மனப்பான்மையுடன் விளங்க வேண்டிய மத்திய அரசு, ''முக்கியத் திட்டங்கள்'' என அழைக்கப்படும் திட்டங்களின் வாயிலாக, ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த தடையற்ற நிதிகளிலிருந்து, இத்திட்டங்களுக்கு நிதி வழங்கியுள்ளது. இப்போக்கு மாநில அரசை ஓர் நிதி கோரும் அமைப்பாகக் கருதுகின்ற பாங்கையே காட்டுகின்றது. என்னுடைய கருத்தின்படி, மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஓர் முக்கிய இயந்திரமாக மக்களுடன் ஒன்றிச் செயலாற்றுகின்ற இந்த அரசுக்கு, இத்தகைய ஏற்பாட்டு முறைகள் முற்றிலும் தவறானதாகவும், அரசியலமைப்புச் சட்டத்திற்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கும். மத்திய அரசு உண்மை நிலவரங்களை முற்றிலும் அறியாத நிலையில் உள்ளது. மற்றும் இத்தகைய கட்டுப்பாடுகளுடன் உருவாக்கப்படுகின்ற

இத்தகைய திட்டப் பணிகள் மக்களின் ஆவல்களை முனைப்பாகப் பூர்த்தி செய்யாது என்பதை இங்கு நான் தெரிவித்தே ஆக வேண்டும்.

வழிகாட்டிக் குறிப்புகளைத் திருத்தி அமைக்க வேண்டும்

மாநிலங்கள், அடிப்படை கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கு, தங்களுடைய சொந்த நிதி ஆதாரங்களை ஏற்கெனவே முதலீடு செய்திருந்தால், இத்தகைய திட்டங்கள் இம்மாநிலங்களுக்குச் சிறிய அளவில் ஆதரவு அளிப்பதாக அமையும். தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு அளித்துள்ளது. மற்றும் இராஜீவ் காந்தி கிராம கல்வி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் வரையறைகளின்படி சம்பந்தப்பட்ட குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு அளித்துள்ளது. எனவே, இத்திட்டங்களுக்கும் நிதி இல்லாமல் போய்விட்டது. இதுபோலவே, தற்போதுள்ள வழிகாட்டிக் குறிப்புகள் விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி அணுகி, மேற்கொண்டும், மேற்படி நீர்வளத்தைப் பெற மிக மிகக் குறைவான வாய்ப்புள்ள தமிழ்நாடு போன்ற தண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள மாநிலங்களை இத்திட்டத்தில் சேர்க்கவில்லை. பன்னிரெண்டாம் திட்டக் காலத்தில் தடையற்ற நிதி வழங்கும் நடைமுறையில் மீண்டும் புத்துயிர் அளிப்பது ஏற்புடையதாக இருக்கும். அவ்வாறு இல்லை எனில் உள்ளூர்த் தேவைகளையும், திறன் வேறுபாடுகளின் அடிப்படையிலும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு அதிக அளவு நீக்குப்போக்கான தன்மைகளை அனுமதிக்கின்ற வகையில், பரவலான முறையில் பகுதி வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யும் பொருட்டு, இத்திட்டங்களுக்குரிய வழிகாட்டிக் குறிப்புகளையாவது திருத்தி அமைக்க வேண்டும்.

அதிக அளவில் திட்டங்களை விரிவாக்கி, மக்கள் பேரளவில் பயன் பெற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் மாநிலங்களுக்கு எண்ணற்ற இடர்ப்பாடுகள் காணப் படுகின்றன. எனவே, இத்திட்டங்களிலுள்ள கண்டிப்பான செயல்பாட்டு வழிகாட்டிக் குறிப்புகள் இரண்டாவது பிரச்சினையாகத் திகழ்கிறது. மாநில அரசுத் திட்டங்களைப் போல் அல்லாமல், மத்திய அரசு “இராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா மற்றும் இந்திரா காந்தி மகப்பேறு காலப்

பயன் திட்டம்" போன்ற சிறு பகுதிகளை உள்ளடக்கிய குறைந்த அளவில் பயனளிக்கும் திட்டங்களையே மேற்கொண்டுள்ளது.

ஒரே மாதிரியான வழிகாட்டி முறைகளைப் பின்பற்ற வேண்டும்

இத்தகைய திட்டங்களுக்காக மத்திய அரசால் வழங்கப்படும் நிதியோடு, மாநில அரசின் நிதியையும் சேர்த்து அதிக அளவு பயனளிக்கும் விதத்தில் செயல்படுத்த இயலாத வகையில் மத்திய அரசு, வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கும் வளர்ந்துவரும் மாநிலங்களுக்கும் வித்தியாசமின்றி ஒரே அளவில் நிதி ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசு உண்மையிலேயே உதவ வேண்டும் என்று கருதுமானால், தேசியத் திட்டங்களின் கீழ் மாநிலங்களுக்கு நிதியுதவியை உயர்த்தித் தர வேண்டும். உதாரணமாக, என்னுடைய அரசு, தமிழ்நாட்டில், அண்மையில், மாதாந்திர சமூகப் பாதுகாப்பு உதவித் தொகையை ரூ.500லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தியுள்ளது. இதன்பொருட்டு, மத்திய அரசு, தேசிய சமூகப் பாதுகாப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கும் உதவித் தொகையை உயர்த்த வேண்டும். ஆனால், இது பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூ.200 என்ற அளவிலேயே உதவித் தொகையை வழங்கி வருகிறது.

பெரும்பாலான முக்கியத் திட்டங்களில் மத்திய அரசின் நிதிகள், மாநில மற்றும் மாவட்ட அளவில், எண்ணற்ற திட்டச் செயல்பாட்டு முகவரமைப்புகளுக்கும், அரசு அமைப்பு அல்லாத பிற அமைப்புகளின் வங்கிக் கணக்குகளிலும் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. இந்த நடைமுறை மாநில அரசுகளைப் புறக்கணிப்பதோடு, மத்திய அரசு அவ்வப்போது அறிவுறுத்தி வரும் "மக்களாட்சி முறையைப் பரவலாக்கும்" நடைமுறையை மீறுவதாகவும் உள்ளது. சிறப்பான நோக்கங்களைக் கொண்டுள்ள இத்தகைய திட்டங்களுக்கு, மத்திய அரசு நிதிகளை நேரடியாக விடுவிப்பது வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு ஏற்பாட்டு முறையிலுள்ள நிதிக்கட்டுப்பாட்டை, பதிலளிக்கும் பொறுப்பை நீக்கச் செய்வதோடு, கண்காணிப்பையும் நலிவடையச் செய்து, மாநில அரசுகளின் நிருவாகச் சுமையை அதிகரித்து விடுகிறது. மத்திய அரசு நிதிகளை மாநில அரசுகளுக்கு நேரடியாக விடுவித்து, மாநிலங்களின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து செலவு செய்ய அனுமதிப்பதே சரியான அணுகுமுறையாக இருக்கும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் செயல் திட்டத்திலும் (MGNREGA) சில இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. சொத்து உருவாக்கும் நிகரான திட்டங்களில் கவனம் செலுத்தாமல், ஊதியம் செலுத்தும் திட்டங்களை வலியுறுத்துகின்ற மேற்சொன்ன மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் செயல் திட்டத்தைக் காட்டிலும் நம் நாட்டில் சில பகுதிகளில், ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டிய அவசியம் அதிக அளவில் உள்ளது. கிராமத் தொழில்களை உருவாக்குவது, முதன்மையான பண்ணை சார்ந்த சொத்துகளை உருவாக்குவது மற்றும் வேளாண் பயிரிடும் காலத்தை (MGNREGA) செயல் திட்டத்தின் கீழ் திட்டம் செயல்படாத காலமாக அறிவித்தல் போன்ற புதுமையான ஏற்பாட்டு முறைகள், பயன்பாட்டுத் தரத்தை உயர்த்த அனுமதிப்பதாக அமையும்.

வளர்ந்து வரும் வீட்டுவசதித் தேவைகளுக்கேற்ப “இந்திரா காந்தி வீட்டுவசதித் திட்டத்தைச்” செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வீட்டின் தரைப் பரப்புப் பகுதி 207 சதுர அடி என்பது எவ்வாறு போதியதாக இல்லையோ, அதுபோலவே அதற்கான நிதியுதவியும் போதியதாக இல்லை. நிலையான சூரிய வெப்ப சக்தி அளிக்கும் வசதி கொண்ட சுற்றுச் சூழலை உருவாக்குகின்ற வகையில், தமிழ்நாட்டில், வீடு ஒன்றுக்கு ரூ.1.80 இலட்சம் செலவில், 350 சதுர அடி தரைப் பரப்புப் பகுதி கொண்ட பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை நாங்கள் செயல்படுத்தியுள்ளோம். நாங்கள் தற்போது தமிழ்நாட்டில், இந்திரா காந்தி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டி வருகிறோம். இத்திட்டம் வீடு ஒன்றுக்கு மாநில பங்குத் தொகையாக ரூ.66 ஆயிரத்து 250 செலவிடப்படுவதுடன், மத்திய அரசின் துணை நிதியுதவியாக ரூ.33,750 தொகையைப் பெற்று செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசு தன்னுடைய பங்குத் தொகையை உயர்த்துவதோடு, அதற்கான கோட்பாடுகளையும் உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும்.

வேளாண்மைத்துறை மேம்பாடு

வேளாண்மையில் கணிசமான அளவு மேம்பாடு இல்லை எனில், அது, பல்வேறு சிக்கல்களை உருவாக்கிவிடும். அதாவது, ஊரக வருமானம் குறைதல், கிராம, நகர்ப்புர வளர்ச்சிக்கிடையே

வெகுவான அளவு வேறுபாடு, தொடர்ச்சியான உணவுப் பொருள் விலை ஏற்றம், உணவுப் பாதுகாப்பு நலிந்து விடும் அபாயம் ஏற்படக் கூடும். நம்முடைய மக்கள் தொகையில், அதிக அளவு மக்களுக்குத் தொடர்ந்த வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய முதன்மைத் துறைக்கு உரிய முன்னுரிமை அளிக்கும் நோக்கம், மத்திய அரசுக்கு இல்லையோ என்ற ஐயம் என்னுள் ஏற்படுகிறது. மத்திய அரசின் தெளிவில்லாத கொள்கையினால் வேளாண் இடுபொருள்களின் விலை, அதிலும் குறிப்பாக DAP, பொட்டாஷ், யூரியா போன்ற உரங்களின் விலை விண்ணைத் தொட்டது. DAP, பொட்டாஷ் போன்ற வேளாண் இடுபொருள்கள் போதிய அளவுக்கு வழங்க வேண்டும் என்ற நம்முடைய தொடர் கோரிக்கை, செவி மடுக்காமலேயே போய்விட்டது. பயிர் உற்பத்திப் பெருக்கத்தில், இது பெரும் சிக்கல்களை உருவாக்கும். வேளாண் துறை மேம்பாடு வகையில் மத்திய அரசு கொண்டுள்ள இத்தகைய உணர்வற்ற போக்கு தொடர்ந்தால், அதன் தீவிரம் இதில் பிரதிபலித்து, 12ஆம் திட்டக் காலக் கொள்கைகள் எய்தப் பெறாமல் போய்விடுமோ என்ற அதிர்ச்சி எனக்கு ஏற்படுகிறது.

இயற்கையான நிதி ஆதாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள இச்சூழலில், வேளாண் துறையில் உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற முனைப்பான தொழில்நுட்ப அணுகுமுறை பற்றி, நிதி கோரிக்கை அறிக்கை குறிப்பிடுகிறது. அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் விவசாயிகளின் நபர் வாரி வருமானத்தை, இரண்டு மடங்கினைக் காட்டிலும் அதிகமாக ஆக்குவதற்கு முன் பணி நவீனத் தொழில்நுட்ப உத்தியை மேம்படுத்த நாங்கள் கருதியுள்ளோம். மேலும், தமிழ்நாடு, "முனைப்பான நெல் சாகுபடி ஏற்பாட்டு முறை (SRI), நீடித்த கரும்பு உற்பத்தி முயற்சிகள் (SSI), பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி முறை மற்றும் காய்கறிப் பயிர்களுக்கான துல்லிய சாகுபடி முறை மற்றும் அடர்த்தியாக வளரக் கூடிய தோட்டக்கலைப் பயிர்களை வளர்த்தல்" போன்ற தொழில்நுட்ப உத்தியின் அடிப்படையிலான திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்தும். அடுத்து வரும் ஐந்தாண்டுகளில், கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு 60,000 கறவை மாடுகள் வழங்குதல், கிராமங்களில் வசிக்கும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் சுமார் 7 இலட்சம் பேருக்கு, ஒவ்வொருவருக்கும் நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி

ஆடுகள் வழங்குவது உட்பட கலப்பின பயிர்ச் சாகுபடி முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. நவீனப் படுத்துதல், வேளாண் விற்பனையை ஒருங்கிணைத்தல், முனைப்பான பண்ணைப் பயிர்ச் சாகுபடி முறை, உணவுப் பதப்படுத்தும் செயல் முறைகளை மேம்படுத்துதல் மற்றும் நீடித்த வேளாண் உற்பத்திக்கும், அது தொடர்பான துறைகளிலும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு ஏனைய தொழில்களை மேம்படுத்துதல் போன்ற ஊரகப் பகுதிகளிலுள்ள பொருளாதார அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு பெருமளவில் நீடித்த வேளாண்மை மேம்பாட்டில் உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்தால், தமிழக அரசின் மேற்சொன்ன முயற்சிகளுக்கு மத்திய அரசு தாராளமான ஆதரவை அளிக்க வேண்டும்.

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அதிகரிக்கப்பட்ட திட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிதி வழங்கப்படும் முறையானது மாநில அரசின் முக்கியப் பாசன திட்டங்களுக்குக் குறைவான அளவில், வரையறுக்கப்பட்ட கூடுதல் நிதியுதவியைப் பெறும் மாநிலங்களின் நலனை வெகுவாகப் பாதிக்கிறது. நீக்குப்போக்குடன் கூடிய துறை வாரியான நிதி ஒதுக்கீடு முறையிலான தேசிய ஊரகச் சுகாதாரத் திட்டம் அல்லது செலவுப் பங்களிப்புத் தொகை செலுத்தும் பழைய மரபு சார்ந்த நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களையே நாங்கள் விரும்புகிறோம். ஏனெனில், அப்போதுதான், வேளாண்மைத் துறையில் மாநில அளவில் முக்கிய முன்னுரிமை அளிக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க இயலும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், வேளாண்மை மாநிலத்தின் பொருண்மையாகத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, பாசனத்திற்குப் பருவ மழையையே முற்றிலும் சார்ந்திருக்கிற தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை நிலவுகிற மாநிலத்தில், வேளாண்மையில் சாகுபடி மேம்பாட்டை எய்துவதற்காக, நீர் நிருவாகத்தில் முதலீடு செய்வது ஓர் முக்கிய அம்சமாகும். மகாநதி, காவிரி, குந்தாறு ஆகியவற்றை இணைக்கிற தீபகற்ப நதி நீர்க் கட்டமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துமாறு மத்திய அரசுக்கு விடுத்த கோரிக்கைகள் வெற்றி பெறாததைத் தொடர்ந்து மாநிலத்திற்குள் உள்ள ஆறுகளை மாநில அரசு

அதனுடைய சொந்த வரவு–செலவுத் திட்ட ஆதாரங்களிலிருந்து ரூபாய் 4,000 கோடி செலவில் இணைப்பதற்கான பணிகளை மேற்கொள்வதென்று முடிவு செய்துள்ளது. முற்றிலும் மத்திய அரசின் நிதியுதவிக்கு ஏற்றதாகயிருக்கிற இத்தகைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முயற்சி பற்றி நிதிக் கோரிக்கை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

மீனவர்கள் மீது தொடர் தாக்குதல்

மீன்வளத்துறை மற்றொரு முக்கியமான துறையாகும். நிதிக் கோரிக்கை அறிக்கையில் இது குறித்துப் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. கடலோர மாநிலங்களைப் பொறுத்த வரையில் கடல் சார்ந்த மீன்வளத் துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தமிழ்நாட்டில், மீன்பிடித் தொழில் நம்முடைய மீனவர்களின் வாழ்வாதாரப் போராட்டமாக ஆகியுள்ளது. நான், மத்திய அரசுக்குப் பலமுறை கோரிக்கைகள் அளித்த பின்னரும் கூட நமக்குக் கலக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். மத்திய அரசின் வேறுபட்ட போக்கு மற்றும் இத்தகைய தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காகப் பயனுள்ள நடவடிக்கைகளை அது எடுக்கத் தவறியது ஆகியவை நமக்குப் பெருமளவில் ஏமாற்றத்தையும், துயரத்தையும் அளிக்கிறது. உண்மையில் இத்தகைய தாக்குதல்கள், இந்திய நாட்டின் மீது வலுச் சண்டைபுரியும் செயல்களாக உள்ளன. மத்திய அரசு, இது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்காமலிருப்பது, அதனுடைய பொறுப்பைக் கை விடுவதாக அமைகிறது. மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், அடிப்படைக் கட்டமைப்பு வசதி இடர்ப்பாடுகளினால் உரிய அளவுக்குப் பயன்படுத்தப்படாத ஆழ்கடல் மீன் பிடிக்கும் தொழிலை மேம்படுத்துவதற்காகவும் பல தொகுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் மத்திய அரசின் ஆதரவைக் கோரினேன். புதிய மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுதல், தற்போதுள்ள துறைமுகங்களைச் சீரமைத்தல், இயந்திரப் படகுகள் மூலம் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலையும், ஆழ்கடல் டூனா மீன் பிடிக்கும் நீளமான நீராவிக் கப்பல்களையும் மேம்படுத்தல், நடுக்கடலில் மீன் பதப்படுத்தும் மையங்களை அமைத்தல் ஆகியவை அதில் அடங்கும். பொறுப்பற்ற தன்மை குறித்து நாங்கள் பெரிதும் கவலையடைந்துள்ளோம்.

இனி வருங்காலத்தில், இந்த நிலைமைகள் குறித்துச் சாதகமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தரமற்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதி, பொருளாதார நடவடிக்கையை மந்தமாக்குவதுடன் வளர்ச்சி இலக்கை எய்துவதற்கு மிகப் பெரிய தடையாகவும் உள்ளது. அடிப்படைக் கட்டமைப்பு வசதியை வகை செய்வது அரசின் முக்கியமான பொறுப்பாகும். நிதியுதவி அளித்தல் மற்றும் செயல்பாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, பல துறைகளில் நிதி ஆதாரங்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆகியவற்றை தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறுதல், பொதுமக்கள் தனியார் பங்கேற்பு ஆகியவை ஓர் முக்கியமான உத்தியாக இருக்கும். புதிய பொதுமக்கள்—தனியார் பங்கேற்பு வரைவுக் கொள்கைக் கட்டமைப்பு ஒன்றை, மத்திய அரசு சுற்றனுப்பியுள்ளது. அது பெரும்பாலும், கல்லூரிப் பாடநூல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி நகலாகவும், ஓரளவு செயல்பாட்டுக் கொள்கை ஆவணமாகவும் உள்ளது. தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வை ஆவணம் மூலம் துறை வாரியாக, மாநிலத்தின் தேவைகளைத் திட்டமிட்டு, அதன் பின்னர், பொருத்தமுடைமையைப் பொறுத்து, அரசுத் துறை அல்லது பொதுமக்கள் தனியார் பங்கேற்பின் அடிப்படையில் செயல்படுத்துவதற்காக, திட்டங்களைத் தெரிவு செய்வது என்பது என்னுடைய அரசின் அணுகு முறையாகும். பொதுமக்கள்—தனியார் பங்கேற்பிற்கான தெளிவான கொள்கைக் கட்டமைப்பு ஒன்றை, என்னுடைய மாநிலம் விரைவில் உருவாக்கும். பெரிதும் எதிர்பார்க்கிற அடிப்படைக் கட்டமைப்பு வசதி, கடன் நிதியம் விரைவில் செயல்படும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

மின்சக்தி உற்பத்தியில் முதலீடு

தரமான மின்சக்தியைப் போதிய அளவு வழங்குவதை உறுதி செய்வது ஓர் முக்கியமான சவாலாகும். வளர்ச்சிக்கு இடையூறு செய்யாமல் மின்சக்தித் தேவையை நிறைவு செய்வதற்கு, பெருமளவிலான மின்சக்தி செயல்திறனை, ஒரு உத்தியாக, நிதிக் கோரிக்கை அறிக்கை வலியுறுத்துகிறது. ஆனால், எரிசக்தி செயல்திறனை மேம்படுத்துகிற வகையில், எரிசக்திப் பயன்பாட்டு நிறுவனங்களில் செயல் திறமின்மையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைப் புறக்கணிக்கிறபோது, சீரான எரிசக்தி விலை

நிர்ணயக் கொள்கை மீது மட்டுமே கவனம் செலுத்தக் கூடாது. எரிசக்தியின் விலைகளை உயர்த்துவதற்கு வரையறைகள் உள்ளன. மின்சக்தி உற்பத்தியில் தொடர்ந்து முதலீடு செய்யப்பட வேண்டும். நவீன மாபெரும் மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் விரைவில் முடிக்கப்பட வேண்டியது அவசியமாகும். நிதிக் கோரிக்கை அறிக்கை உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி உட்பட நிலக்கரி இணைப்பு வசதிகள் தொடர்பான பிரச்சினைகளை விவாதிக்கிறது. இருப்பினும், தெளிவான மற்றும் நீடித்து பயனளிக்கிற தீர்வுகள் கண்டறியப்படவில்லை. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பல முக்கியமான திட்டங்கள், நிலக்கரி இணைப்பு வசதி இல்லாததால் இன்னும் நலிவுற்ற நிலையில் உள்ளன. மத்திய அரசு, இந்தப் பிரச்சினைக்கு உயர் முன்னுரிமை அளித்து, மனநிறைவளிக்கும் வகையில் தீர்வு செய்ய வேண்டும்.

தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் கடுமையான மின்சக்திப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றன. இது தொழில் வளர்ச்சியைப் பாதிக்கிறது. பல மத்திய மின் உற்பத்தி நிலையங்களும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மின் உற்பத்தி அளவை எட்டவில்லை. மத்திய அரசு, அண்மைக் காலத்தில் பயனுள்ள சிறப்பு வாய்ந்த முக்கிய மின் உற்பத்தித் திட்டம் எதையும் செயல்படுத்த முன் வரவில்லை. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களும் தொடங்கப் படாமலுள்ளன அல்லது காலதாமதமாகத் தொடங்கப் படுகின்றன. இந்தப் பிரச்சினைகளே மாநிலத்தின் மின் உற்பத்தி நிலையில் மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளன. மத்திய அரசு அடிக்கடி வாய்மொழியாக உறுதியை மட்டும் அளிக்கிறது என்பதை நாங்கள் அனுபவத்தில் கண்டுள்ளோம். மத்திய மின் உற்பத்தி நிலையங்களினால் ஏற்பட்டுள்ள மின் சக்திப் பற்றாக்குறையை அல்லது மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் காலதாமதமாகத் தொடங்கப்படுவதால் ஏற்படுகிற மின் சக்தி உற்பத்தி இழப்பை ஈடுசெய்வதற்கு, ஒதுக்கீடு செய்யப்படாத மத்திய மின்சக்தி தொகுப்பிலிருந்து, மின்சக்தியை, தனியாக ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்ட என்னுடைய கோரிக்கைக்கு மத்திய அரசிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. இதுதான் நிலவரம் என்றால், தொழில் துறையில் உயரளவு வளர்ச்சியை எய்துவோம் என்று நம்மால் எவ்வாறு கனவு காண

இயலும். இனிவரும் காலங்களிலாவது மத்திய அரசு, இதுபோன்ற நெருக்கடியான காலக்கட்டங்களில் உதவ முன் வரவேண்டும்.

தமிழ்நாடு அரசு, சூரிய வெப்ப சக்தி உற்பத்தியில் பெருமளவில் முதலீடுகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளது. ஆனால், தேசிய சூரிய வெப்ப சக்தி உற்பத்தியின் வள வாய்ப்பு மிகவும் கட்டுப்பாடான ஒன்றாகும். தேசிய அனல் மின் உற்பத்திக் கழகத்திடமிருந்து ஒதுக்கீடு செய்யப்படாத மின் சக்தியுடன் ஒருங்கிணைப்பதற்காக, தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதும் வரையறுக்கப்பட்ட ஒன்றாகும். மின் கட்டமைப்புடன் இணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு அதிக அளவில் ஊக்கத்தொகை வழங்கப்படவேண்டும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அதிகரிக்கும் அமைப்புகளுக்கு அதிக அளவில் நேரடி மூலதன மானியமும் குறைந்த வட்டியுடன் நீண்ட காலக் கடன்களும் வழங்க வேண்டும். அந்த அளவிற்கு, சூரிய வெப்ப மின் சக்தியை மேம்படுத்துகிற வகையில் 12ஆம் ஐந்தாண்டுத் திட்டம் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும்.

மத்திய அரசு நேர்மையாகச் செயல்படவில்லை

போக்குவரத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதியைக் கணிசமாக நிலையுயர்த்த வேண்டியது அவசியமாகும். அண்மைக் காலத்தில், இந்த வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ள முயற்சிகள், செயல்பாட்டுப் பிரச்சினைகளுடன் சேர்ந்து தொல்லை அளிக்கின்றன. சாலைப் போக்குவரத்துக் கட்டமைப்பு குறித்து புதுப்பிக்கப்பட்ட கவனம் செலுத்தி, சிறந்த முறையில் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும். தீபகற்ப இந்தியாவின் சரக்குப் போக்குவரத்துப் பெருவழிகளை அதிக இடவசதிக் கொண்டதாக விரிவுபடுத்த வேண்டியது உடனடித் தேவையாகும். ஆனால் நல்வாய்ப்பற்ற நிலையில், மத்திய அரசு நேர்மையாகச் செயல்படவில்லை. குறிப்பாக, காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்கள், இத்தகைய முக்கியமான திட்டங்களுக்கு நிதியொதுக்கீட்டைப் பெறுவதில், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகின்றன.

உரிய அளவு வளர்ச்சி அடையாத துறைமுக அடிப்படைக் கட்டமைப்பு வசதி குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். சென்னைத் துறைமுகத்தின் இட நெருக்கடி துறைமுகத்தை

நம்பியுள்ள ஏற்றுமதியாளர்களையும், ஏனைய தொழிற் பிரிவினர்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, மத்திய அரசு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எண்ணூர், தூத்துக்குடி துறைமுகங்களையும் குளச்சல், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் உட்பட ஏனைய சிறு துறைமுகங்களை மேலும் மேம்படுத்த மத்திய அரசின் நிதியுதவி வழங்கப்பட வேண்டும்.

நாடு, மேன்மேலும் நகர்மயமாகி வருவதால் தரமான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு வசதியை வழங்கு வதற்கான சவால்கள் மிகவும் தீவிரமடைந்துள்ளன. திட்ட உருவாக்கம், கருத்துருவாக்கம், நிதியுதவி மற்றும் செயல்பாடு ஆகிய இவையனைத்தும் சவால்களாகும். ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப் பகுதி புதுப்பிப்புத் திட்டத்திற்கு ஒரு மாதிரியாக அமைந்த தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதியம் உட்பட நவீன வழிகள் மூலம், தமிழ்நாடு இந்தச் சவால்களைச் சந்தித்துள்ளது. அதிகரிக்கப்பட்ட நிதியுதவியுடன், பெருமளவிலான தொழில்நுட்ப ஆதரவு, குறிப்பாக, கழிவுநீர் மற்றும் திடக்கழிவு நிருவாகத்திற்கான செயல்பாட்டுத் திறனை நிலை உயர்த்துதல் ஆகியவற்றையும் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்பகுதி புதுப்பிப்புத் திட்டம்–II வழங்க வேண்டும்.

தமிழ்நாடு, தமது மாநிலத்தில் அமைந்துள்ள மோட்டார் வாகனம் மற்றும் பொறியியல் துறைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகள் ஆகிய துறைகளிலுள்ள பல பன்னாட்டு போட்டியிடத்தக்க தொழில்களுடன், ஒரு வலுவான தயாரிப்பு மையமாகப் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. இருப்பினும் பதினோராம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்காண்டு காலங்களில் தயாரிப்புத் துறையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு அளவு 9.2 சதவீதமாக இருக்க, 4.4 சதவீத வளர்ச்சி மட்டுமே ஏற்பட்டது. தயாரிப்புத்துறை, நமது மாநிலத்தில் வேலை தேடுகிற இளைஞர்களுக்குத் தரமான வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்பதால் தயாரிப்புத் துறையில் தமிழ்நாடு மேம்பட்ட நிலையை மீட்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நான் தீர்மானித்துள்ளேன். நமது மாநிலத்தின் தென் பகுதியிலுள்ள மரபுசாரா பகுதிகளிலுள்ள தொழில் வளர்ச்சிப் பெருவழிகளை மேம்படுத்தல், தமிழ்நாடு அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு வாரியம் மூலம்

அடிப்படைக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தல், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கச் செய்தல் ஆகியவை நமது அணுகுமுறையில் அடங்கும். பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் இத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

மாநிலத்தில் சுற்றுச்சூழல் தொடர்புகள், தொழில் வளர்ச்சியைப் பாதித்துள்ளது. நாட்டிலேயே அதிகளவில் ஜவுளி ஏற்றுமதி செய்வதில் ஒன்றான திருப்பூர், சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவு நீரால் ஸ்தம்பித்துள்ளது. கழிவுநீர் வெளியேற்றப்படாததை உறுதி செய்வதற்கு இந்தப் பகுதியில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்புத் தளவாடங்களை தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்துவது அவசியமாகிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஈடு இணையற்ற முயற்சி ஒன்றினை நான் எடுத்துள்ளேன். பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்புத் தளவாடங்களை மேம்படுத்துவதற்கு வட்டியில்லாக் கடனாக ரூ.200 கோடி வழங்குவதாக உறுதியளித்துள்ளேன். சாயத் தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் அடிச்சுவடுகளைக் குறைப்பதற்காக மேலும் பரவலாக்கல் அடிப்படையில் சாயத்தொழிற்சாலையை வேறு இடத்தில் அமைக்கப்படுவதற்கு மேலும் நிதி தேவைப்படலாம்.

மதிப்புமிக்க மனிதவள ஆதாரங்கள் வீணாக்கப்படக்கூடாது

நிதிக் கோரிக்கை அறிக்கையானது அடுத்து வருகின்ற 20 முதல் 30 ஆண்டுகளின் வளர்ச்சியினை நிலைநிறுத்தக் கூடிய இந்தியாவின் "மக்கள்தொகை இயல்" குறித்து குறிப்பிடுகிறது. இது குறித்து மிகவும் நுணுக்கமாகக் கருதிப்பார்க்கப்பட வேண்டியிருக்கிறது என நான் எச்சரிக்கை செய்கிறேன். சிறு குடும்ப நெறிமுறை கொண்டுள்ள தமிழ்நாடு உட்பட நாட்டின் சில பகுதிகளில், மக்கள்தொகை இயல் வரையறுக்கப்படுகிறது. எனவே விலைமதிப்புமிக்க மனிதவள ஆதாரங்கள் வீணாக்கப்படாமல், அவற்றின் முழுத் திறனை வெளிப்படுத்துவதற்காக மேம்படுத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இந்த மக்கள்தொகை இயல், தன்னிறைவு அல்லாமல் அவசர நிலையைத் தூண்ட வேண்டும். இது தொடர்பாக, முந்தையத் திட்டக் காலத்தில் தயாரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிட்ட நம்முடைய பணியாளர் திறன்களை மேம்படுத்துவதற்குத் தவறிய

நம்முடைய செயலானது, வருங்காலத்திற்கான ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

உலகிலேயே எந்த அரசும் எடுக்காத முயற்சி

இது தொடர்பாக, எனது அரசின் அண்மைக்கால சில முயற்சிகள் குறித்துக் கருதிப் பார்க்கப்பட வேண்டியுள்ளது. XI, XIIஆம் வகுப்புகள் மற்றும் இளங்கலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச மடிக் கணினிகள் வழங்குகின்ற திட்டமானது, கணினி அறிவை மேம்படுத்துவதற்கும் மாணவர்கள் அவர்களுடைய பொருளாதாரப் பின்னணிக்கு சற்றும் தொடர்பில்லாமல் கணினி அறிவு பெற்று, அறிவுசார்ந்த சமுதாயத்தை உருவாக்குகின்ற திறன் பெற்றிருக்கின்றனர் என்பதை உறுதி செய்வதற்குமான பெருத்த முயற்சியாகும். மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குவது உலகிலேயே எந்த அரசும் எடுக்காத முயற்சியாகும். இந்தத் துணிச்சலான முயற்சியில் மாநில அரசுடன் கைகோர்த்து செலவுத் தொகையின் ஒரு பகுதியைப் பகிர்ந்து கொள்ளுமாறும் மத்திய அரசிடம் நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளேன்.

எனினும் புதுமையான முயற்சிக்கு ஆதரவு தருவதாகப் பேசுகின்ற மத்திய அரசு இது வரையிலும், இதற்கு செவிசாய்க்கவில்லை. இது ஆச்சரியமளிக்கவில்லை. ஏனெனில் தமிழ்நாட்டின் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் மத்திய அரசு செவிசாய்க்காதது வழக்கமானதாகும்.

திறன் வளர்ப்பில் அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. தேசிய திறன் வளர்ப்புத் திட்டத்தின் தொழில் பயிற்சி நிறுவனங்களில் தற்போதுள்ள கட்டமைப்பினை உரிய அளவிற்கு பயன்படுத்தப்படாததற்கு வழிகோலியதுடன், நிதியளிக்கின்ற தனியார் துறை முயற்சிகளில் அதிக கவனம் செலுத்துவதற்கு வழிகோலியுள்ளது. இவற்றுள் சில ஐயத்திற்கிடமானவை. பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பிற்கான வலுவான தொழில் இணைப்புகளுடன் சொந்த திறன் வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்குவதற்கு இது தமிழ்நாட்டைத் தூண்டியுள்ளது. தொழில் கல்வி பயிலுகின்ற மாணவர்கள், பள்ளிச் சார்ந்த கல்வியுடன் இணைந்து, "பணிபுரியும் போதே பயிலும்" திட்டங்களின் வாயிலாகத் தொழில்நுட்பப் பட்டப்

படிப்புகளைப் பெறுவதற்கான அவர்களுடைய ஆவலை நிறைவு செய்ய இயலும் என்பதை உறுதி செய்கின்ற நீக்குப்போக்கான தன்மையை நாங்கள் வலியுறுத்துகிறோம். மத்திய அரசானது, விரும்பிய முடிவினைப் பெறுவதற்கு அத்தகைய முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக, தேசிய திறன் வளர்ப்புத் திட்டத்தை மேலும் நடைமுறைப்படுத்துவதற்கு இது குறித்து மீண்டும் கவனம் செலுத்தவேண்டும்.

தமிழ்நாடு சுகாதாரத் துறையில், மொத்த மக்கள் பெருக்க வீதத்தில், 11–ஆவது திட்ட இலக்கை விஞ்சியுள்ளது. அதாவது இது இலக்கிடப்பட்ட 1.8 க்குப் பதிலாக 1.7 என்ற அளவினை எய்தியுள்ளது. ஆனால், குழந்தை இறப்பு வீதம், பேறுகால இறப்பு வீதம், குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு, மகளிரிடையே காணப்படும் இரும்புச் சத்துப் பற்றாக்குறை உள்ளிட்ட ஏனைய குறியீடுகளில் இலக்கிடப்பட்ட நிலைகளை நாங்கள் இன்னும் அடைய வேண்டியிருக்கின்றன. இதனால் 12–ஆவது திட்டத்தில் இருமடங்கு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மத்திய அரசின் சுகாதாரத்துறை திட்டத்தில் சில முக்கிய இடங்கள் புறக்கணிக்கப்பட்டது தொடர்பான சில முக்கிய கவனம் செலுத்த வேண்டிய சில பிரச்சினைகள் குறித்து நான் தெரிவிக்க விரும்புகிறேன். மூன்றாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு மருத்துவமனைகள், மாவட்டம்/துணை–மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், நகர்ப் பகுதி தொடக்க சுகாதார நிலையங்கள் ஆகியவற்றுக்கு மத்திய அரசின் முயற்சியின்கீழ் நிதியளிக்கப்படவில்லை. பன்னிரெண்டாவது திட்டம், இந்த அம்சம் குறித்துத் தீர்வு காணவேண்டும்.

நிதிக் கோரிக்கை குறித்த அறிக்கையானது சுகாதாரப் பராமரிப்பு குறித்து பொதுமக்களும் நிதியுதவி அளிப்பது குறித்த கவனத்தை ஈர்க்கிறது. எனினும், மத்திய அரசின் ஆதரவினைப் பெறுவதற்கான ஒரேயொரு மாதிரியாகத் திகழ்கின்ற ராஷ்ட்டிரீய ஸ்வஸ்திய பீமா திட்டத்துடன் மத்திய அரசின் அணுகுமுறையானது கடினமாக உள்ளது. பல மாநிலங்கள் சிறந்த முறையில் பயன் தரும் வகையில் திட்டங்களை வடிவமைத்துள்ளன. ஆனால், மத்திய அரசின் நிதியுதவி பெறப்படவில்லை. இத்தகைய தேவையற்ற ராஷ்ட்டிரீய ஸ்வஸ்திய பீமா களையப்பட்டு, அத்திட்டத்தைக் காட்டிலும் சிறப்பாக உள்ள திட்டங்களை உடைய மாநிலங்கள்

பிரிமீயத்திற்கான செலவுத் தொகை தொடர்பாக மத்திய நிதியுதவி பெறுவதற்குத் தகுதியுடையதாக்கப்பட வேண்டும்.

மாநிலத் திட்டங்களுக்கான ஆதரவு அதிகரிக்கப்பட வேண்டும்

நான் இப்போது பன்னிரெண்டாவது திட்டத்திற்கான ஆதாரங்கள் குறித்த பிரச்சினைக்கு வருகிறேன். திட்டத்தின் பெரும்பகுதி, மாநில அரசுகளால் நிதியளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டியிருக்கின்றன. நிதிக் கோரிக்கை அறிக்கையானது, இந்த அம்சம் குறித்துப் பூசி மெழுகுகிறது. இந்த அறிக்கையிலுள்ள சில கொள்கைக் கருத்துகள், ஆதாரங்களை உருவாக்குகின்ற மாநிலங்களின் திறன் குறித்து அக்கறை கொள்கிறது. அவசர கதியில் செயல்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் கட்டணம் முக்கியமான பிரச்சினையாகும். விற்பனைப் பொருட்கள் மீதான வரி மட்டுமே இன்னமும் மாநிலங்களின் வருவாய் ஆதாரமாக இருக்கின்றன. வரி விதிப்பு மற்றும் வரிவசூல் குறித்த மாநிலங்களின் கட்டுப்பாடானது, தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களின் வரவு செலவுத் திட்டங்களுக்கும் திட்டப் பணிகளுக்கும் நிதியளிப்பதற்குப் போதுமான ஆதாரங்களை அதிகரிப்பதற்கு வகை செய்கின்ற முக்கிய அம்சமாகும். இத்தகைய முக்கியமான வருவாய் ஆதாரம், தற்போது கருதப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செயல்பாட்டுக் காரணமாக அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.

மாநிலங்களின் திட்டச் செலவினத்திற்காக, அவற்றின் மத்திய நிதி ஆதாரமாக மொத்தத்தில் சிறிய அளவாக 18ரூ என விட்டு வைக்கப் பட்டது என நிதிக் கோரிக்கை அறிக்கையிலுள்ள ஆதாரக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இது மக்களுடன் மிகவும் நெருங்கியிருந்து வருகின்ற மாநிலங்கள் ஏற்க வேண்டியுள்ளன என்ற நிருவாகத் திற்காக நேரடிப் பொறுப்புகள் நிலையுடன் முற்றிலும் ஒத்திசைவாக இல்லை. பதினோராவது திட்டக் காலத்தில், இந்த ஆதாரங்கள் சில மத்திய அரசின் முக்கியத் திட்டங்களுக்காக முன்னரே காலியாக்கப்பட்டன. இந்த அணுகுமுறை சரியன்று. மாநிலத் திட்டங்களுக்கான ஆதரவு, கணிசமாக அதிகரிக்கப்பட்டு, தடையற்றதாக ஆக்கப்படவேண்டும்.

மாநிலங்களுக்கு மத்திய அரசின் மானியம் உயர்த்தப்பட வேண்டும்

மேலும், வழக்கமான மத்திய நிதியுதவிக்கான மானியம், பல ஆண்டுகளாக 30 சதவீதம் என நிலையாக இருந்து வந்துள்ளது. திட்ட ஒதுக்கீட்டின் மூலதன வருவாய் விகிதாச்சாரம் 70:30 என இருந்தபோது இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது. இந்தியாவிலேயே இயல்பிலேயே வருவாயாகத் திகழ்கின்ற சமூகம் தொடர்பான செலவினம் அதிகரித்து வருவதால் திட்டச் செலவினத்தின் கூறு மாற்றப்பட்டுள்ளது. எனவே, சிறப்பு வகைப்பாட்டின்கீழ் வராத மாநிலங்களுக்கான வழக்கமான மத்திய அரசின் நிதியுதவி மானியம், 50 சதவீதத்திற்கேனும் உயர்த்தப்பட வேண்டும்.

ஏனைய அலுவல் வெளி ஆதாரங்களிலிருந்து நிதி பெறுவதில் தடைகள் இருக்கும் என்பதற்கான குறியீடுகள் உள்ளன. திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கான வெளி ஆதார நிதியுதவி விகிதாச்சாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால், அத்தகைய நிதியுதவி தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருவதால் முக்கியத் துறைகளில் புதிய முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது முக்கியமானதாகும். எனவே, மாநிலங்களுக்கு அத்தகைய சலுகை நிதியுதவி தொடர்ந்து கிடைக்கப் பெறுவதை மத்திய அரசு உறுதி செய்யவேண்டும்.

பாமர மக்களிடமிருந்து மத்திய அரசு விலகிச் சென்றுவிட்டது

நடைமுறைத் தகவல்களை, நான் தெரிவிக்க வேண்டிய தருணமாகும். தேசப் பிரச்சினைகள் தொடர்பான முன்னேற்றம் குறித்த செய்முறையில் சம பங்குதாரர்களாக மாநில முதலமைச்சர்களுடன் விவாதிப்பதற்கான ஒரு மன்றமே தேசிய வளர்ச்சிக் குழு ஆகும். மத்திய அரசு மாநிலங்களை, பங்குதாரர்களாக அங்கீகரித்து, அவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளிப்பதாக நான் உறுதியாக அறியவில்லை. இத்தகைய கூட்டங்கள், சம்பிரதாயமாக இருப்பதுடன் பயன் ஏதும் அளிப்பதில்லை. ஏழைகளின் துயர் தணிப்பதற்கு மண்ணெண்ணெய் அளவினை முன்னர் வழங்கிய அதே அளவில் வழங்கல் அல்லது இடர்ப்பாடு நிலையைக் களைவதற்குக் கூடுதல் மின்தேவை போன்ற மாநிலங்களின் நியாயமான கோரிக்கைகளுக்குக் கூட, மத்திய அரசு செவிசாய்க்காத

போது, அத்தகைய கூட்டங்கள் மாநிலங்களையும் அங்குள்ள மக்களையும் ஏமாற்றவே செய்கின்றன. அதேபோன்று, மத்திய அரசு அதிகளவில் தலையிட்டு மாநிலங்களை பலவீனமாக்குவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் வாயிலாக மாநிலங்களை மாநகராட்சி நிலைக்குத் தரம் தாழ்த்துகிறது. மத்திய அரசானது நடப்பு நிலவரங்களுக்கு முற்றிலும் அப்பாற்பட்டு இருக்கிறது என்பதையும் பாமர மக்களிடமிருந்து விலகிச் சென்றுவிட்டது என்பதையும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகிறது. இறுதியில், மத்திய அரசு வழி தெரியாமல் திக்கற்று இருப்பதாகத் தெரிய வருகிறது. பொதுமக்களின் சினத்தை எதிர்நோக்கும் பொறுப்பு மாநில அரசுகளிடம் விடப்படுகிறது. இத்தகைய நம்பிக்கையற்ற சூழல் காலப்போக்கில் மாறும் என்றும் மக்களுக்குப் பெருமளவில் நம்முடைய கடமைகளையும், பொறுப்புகளையும் ஆற்றுவதற்கு நம்மால் இயலும் என்றும் நான் நம்புகிறேன்.

வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில்
03.11.2011 அன்று நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.



தொலைதூரப் பகுதி மக்களுக்கும் வீடு தேடிச் சென்று மருத்துவ சேவைகள் வழங்கும் நடமாடும் மருத்துவமனைத் திட்டம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துவதில் நான் பெருமை அடைகிறேன். இந்தப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் மூன்றாவது முறையாக நான் பங்கேற்கிறேன். நம்முடைய பேரன்பிற்குரிய புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் பெயரால் அழைக்கப்படுகிற இந்தப் பல்கலைக்கழகம், இந்தியாவில் இரண்டாவது பெரிய மருத்துவப் பல்கலைக்கழகமாக வளர்ச்சி அடைந்துள்ளது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பல்கலைக்கழகம் நமது மாநிலத்தின்

மருத்துவம் சார்ந்த மற்றும் துணை மருத்துவக் கல்வி ஆகியவற்றை முறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பு வாய்ந்ததாக இருப்பதும் பெருமைக்குரிய ஒன்றாகும். சிறந்த ஆரோக்கியம் என்பது சமுதாயத்தின் அனைத்துக் கட்ட வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காகும். ஆரோக்கியமான மக்கள்தான் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு உண்மையாகப் பங்காற்ற இயலும். நம் மாநிலம் தலைசிறந்த நல்வாழ்வுச் சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பொறுப்பேற்றுள்ளது. சமுதாயத்தின் ஒவ்வொரு அடுக்கிலும் உள்ள மக்களுக்கு, தரமான மருத்துவ வசதிகளை அளிப்பதே நம்முடைய முயற்சியாகும். நோய்த்தடுப்பு, சுகாதாரம் மற்றும் மக்களுக்கு வசதிகளை அளிப்பது ஆகியவை குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமான சுகாதாரக் குறியீடுகளின் அடிப்படையில், தமிழ்நாடு, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கிடையே முன்னோடியாகத் திகழ்கிறது. நம் மாநிலம், குறிப்பாக மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலனில் நாட்டின் எஞ்சியுள்ள பகுதிக்கு ஒரு சிறந்த பொதுச் சுகாதார மாதிரியாக விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது. நமது மாநிலத்தில் 99.8 சதவீத மகப்பேறு, தகுதியும் பயிற்சியும் பெற்ற பணியாளர்கள் மூலம் மருத்துவமனைகளில் நடைபெறுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர மகப்பேறு மருத்துவச் சேவை, ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஒரு ஆரம்ப சுகாதார மையத்தை நவீன வசதியுடன் கூடிய முப்பது படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக நிலை உயர்த்துதல், அரசு மருத்துவமனைகளில் அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தை கவனிப்புப் பராமரிப்பு சேவைகள் ஆகியவற்றை வழங்குதல் போன்ற 2001–2006 வரையிலான கால அளவில் என்னுடைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு கொள்கை முயற்சிகள், தாய்சேய் நலம் பேணும் மகப்பேறு துணைத் திட்டம் குறித்து ஆய்வு செய்தல் ஆகியவை இந்தத் துறையில், தமிழ்நாட்டின் தொடர்ச்சியான சிறந்த செயல்பாட்டிற்குப் பொறுப்பு வாய்ந்தவையாக உள்ளன.

நம் மாநிலத்தில் தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று, மருத்துவ சிகிச்சையை அளிப்பதற்காக என்னுடைய அரசு “நடமாடும் மருத்துவமனைத்

திட்டம்" என்ற புதிய திட்டத்தைத் தொடங்க உள்ளது. தற்போதுள்ள 385 பணியாளர்கள் மற்றும் ஆய்வுக்கூட வசதிகளுடன் இத்திட்டம் வலுப்படுத்தப்படும். குறிப்பிட்ட சுற்றுப்பயணத் திட்டத்தின் அடிப்படையில் மருத்துவக் குழுக்கள் தொலைதூர கிராமங்களைப் பார்வையிடும்.

மகப்பேறு உதவித் தொகை ரூ.12,000 ஆக உயர்வு

நம் மாநிலம் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் உரிமை வழங்குவதில் எப்போதுமே முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் பெண்களின் நலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிற பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நலத்திட்டத்தின் கீழ், ஏழை, எளிய பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேறு உதவித்தொகை தற்போது இரண்டு குழந்தைப் பேறுகள் வரையில் ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம், தாய்மார்களின் நலனை உறுதி செய்வதற்கு உதவுவதோடு மட்டுமின்றி, பிறந்த குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து வழங்கவும் வகை செய்கிறது. மாதவிலக்கு காலத்தில் சுகாதார முறையை மேம்படுத்துவதன் மூலம் பெண்களிடையே கருவகப் பாதை நோய்த்தொற்று ஏற்படுவதைக் குறைப்பதற்கான புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வளரிளம் பெண்களுக்கு இலவசமாக உள் ஒற்று ஆடை (Sanitary napkins) வழங்கப்பட்டு வருகின்றன.

சிறிய நகர்ப்பகுதி சுகாதாரத்தின் அவசரத் தேவையை உணர்ந்த என்னுடைய அரசு, குடிசைப்பகுதி மக்களும், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மக்களும் பயனடைவதற்காக, இந்தப் பகுதிகளில் 75 புதிய நகர்ப்பகுதி தொடக்கச் சுகாதார மையங்களைத் தொடங்கியதன் மூலம் தொடக்கச் சுகாதாரத்தை வலுப்படுத்துவதென்று முடிவெடுக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக ஏழைகளும் கீழ்நிலையிலுள்ள நடுத்தர மக்களும் அவர்களின் சுகாதார நலத் தேவைகளுக்காக அரசு மருத்துவமனைகளையே சார்ந்து உள்ளனர். பொதுமக்களுக்கு

அளிக்கப்படுகின்ற மருத்துவச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு வட்ட மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தமிழ்நாடு சுகாதார நலத் திட்டங்களுக்கு உலக வங்கி நிதி உதவி பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இத்தகைய நிதியின் இரண்டாம் நிலை நிதியை, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் நோய் கண்டறியும் பிரிவுகளையும் மருந்து மருத்துவத்திற் காகவும், உயிர் காக்கும் தளவாடம் வாங்குவதற்காகவும், பயன்படுத்திக் கொள்ளப்படும். மேலும், பொது–தனியார் துறையின் கூட்டமைப்புடன் அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய கணினி உதவியுடன் ஆய்வுக்கூட வசதிகள் படிப்படியாக ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

என் அரசு, குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற ஏழை மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சையைப் பகுதிவாரியாக அளிப்பதற்கு முன்வந்துள்ளது. சேலத்தில் உள்ள மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காயங்களுக்கான நவீன சிகிச்சைப் பிரிவுடன், தனிச் சிறப்பு சிகிச்சை மருத்துவமனை (Super Speciality Hospital) ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற தனிச் சிறப்பு சிகிச்சை மருத்துவமனை, மதுரையில் உள்ள அரசு ராஜாஜி மருத்துவமனையிலும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, திருச்சி, அண்ணல் காந்தி அரசு மருத்துவமனை ரூபாய் 100 கோடி செலவில், தனிச் சிறப்பு மருத்துவ சிகிச்சை மையமாக நிலை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மையம், பாராட்டத்தக்க அளவிற்கு, தமிழ்நாட்டில் சுகாதார நலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இவை அனைத்திற்கும் மேலாக, என் அரசு, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள “A” தொகுதி கட்டடத்தை, பல்நோக்கு தனிச் சிறப்பு மருத்துவமனையாகவும், “B” தொகுதி கட்டடத்தை, புதிய மருத்துவக் கல்லூரியாகவும் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது. கொண்டுவரப்படவுள்ள இந்தப் பல்நோக்கு தனிச்சிறப்பு சிகிச்சை

மருத்துவமனை கட்டடத்தில் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டு தனிச்சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு, அனைத்து நவீன வசதிகளும் கொண்ட மருத்துவத் தளவாடங்கள் வாங்கப்பட்ட பின்னர், அந்த மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இந்த மருத்துவமனை புதுடில்லியில் உள்ள அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கு (AIIMS) இணையான அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும். இத்துடன் பொதுமக்களுக்கு மேற்கொண்டு சேவை புரியும் வகையில் இந்த அரசு "முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்புறுதித் திட்டம்" எனப்படும் புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளது. இத்திட்டம் விரைவில் தொடங்கி வைக்கப்படும்.

இப்புதிய திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் ரூபாய் அளிக்கும் வகையிலும், மொத்தம் நான்கு ஆண்டு காலத்திற்கு அதாவது, ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு இலட்சம் ரூபாய் கிடைக்கும் வகையில் காப்பீடு செய்யப்படும். கண்டறியப்பட்ட நடைமுறைகளுக்காக ஒரு இலட்சம் ரூபாய் என்ற உச்சவரம்பு 1.5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக பயணச் செலவு உட்பட மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்ட பின்னர் 5 நாட்கள் வரையிலான மருந்துகளுக்காகும் செலவும், நோய் கண்டறிவதற்கான பரிசோதனைகளை நடத்துவதற்கான செலவும் அளிக்கப்படும். இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளையும் ஈடுபடுத்தும் நோக்கத்திற்கான முயற்சியும் மேற்கொள்ளப்படும்.

இந்தியாவில் உள்ள முதன்மைப் பல்கலைக்கழகங்களில் ஒன்று

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் என் அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளது. மக்கள் அனைவருக்கும் தரமான சுகாதார நல வசதிகள் செய்து கொடுப்பதில், நாட்டிலேயே உயர்ந்த நிலையை தமிழ்நாடு அடைவதற்கு தமிழ்நாட்டை இத்திட்டம் முன்னெடுத்துச் செல்லும் என்பது உறுதி.

எனினும் இம் மாநிலத்தில், நன்கு பயிற்சி பெற்ற மருத்துவர்களும், துணை மருத்துவப் பணியாளர்களும் போதுமான அளவுக்கு நியமிக்கப்படவில்லையாயின், இத்தகைய நடவடிக்கைகள் உரிய பலனைத் தராது. தமிழ்நாடு மருத்துவ, பல் மருத்துவ மற்றும் சுகாதாரக் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளதெனில் அதற்குப் பொது மற்றும் தனியார் துறைகள் அளித்துள்ள சிறப்பான உள் கட்டமைப்பு வசதிகளுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். இள மருத்துவம் மற்றும் முதுகலை மருத்துவம், மருத்துவப் பட்டயப்படிப்பில், நல்ல நம்பகமான மற்றும் ஒளிவுமறைவற்ற மதிப்பீடுகள் செய்யப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தரத்திற்கேற்ற மதிப்பெண் இடுவதற்கும், தேர்வுகளைப் பகுப்பாய்வு செய்யும் கணினிச் செயற்பாடுகளை இந்தப் பல்கலைக்கழகம் கையாளப் போவதை அறிந்து நான் மகிழ்வடைகிறேன். சுகாதாரப் பேணுகைக்கு வேண்டி மருத்துவ நிலைப்பாடுகள் அதிகரித்துக் கொண்டு வருவதால், சமூகத்தில் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், துணை சிறப்பு மருத்துவர்கள், மிகச் சிறப்பு மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர்.

தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள துறையில் சிறப்பான பயிற்சி பெறுவதற்கென மருத்துவப் பட்டதாரிகள் வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நம் மாநிலம் மற்றும் நாட்டிற்கும் இத்தகைய சிறப்புப் பயிற்சியைப் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில், மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைகளில் துணை மற்றும் மிகச் சிறப்பு மருத்துவப் படிப்புகளில் ஆதாரவூதியத் திட்டம் அளித்து, இந்தியாவில் உள்ள முதன்மைப் பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் திகழ்வது பாராட்டத்தக்கதாகவும், ஊக்கமளிப்பதாகவும் உள்ளது.

உன்னதமான தொண்டு ஏழைகள் வரை சேரட்டும்

அறிவியலில் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டுள்ள பெயர் பெற்ற மருத்துவர்களுக்கும் சம்பளம் பெறாத வாழ்நாள் சாதனை விருது பெற்றவர்களுக்கும் எனது அன்பார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் பரிசு வென்றவர்கள் மட்டுமின்றி, அனைத்துப் பட்டதாரிகளையும் பாராட்டுவதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். மக்கள் தொண்டே மகேசன் சேவை. இப்பல்கலைக்கழகப் பட்டதாரிகளை, மக்களுக்கு—குறிப்பாக நம் மாநிலத்திலுள்ள ஊரக மக்களுக்குத் தன்னலமற்ற சேவை அளித்து, அவர்களுடைய உன்னதமான தொண்டு சாதி, மதம், வகுப்பு பேதமின்றி ஏழைகள் வரை சென்று சேர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். புதிய பட்டதாரிகள் தாங்கள் கற்ற கல்வியை ஏழை மற்றும் தேவைப்பட்டவர்களின் துயரத்தைக் குறைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் தமிழ்நாட்டை முதலாவது சுகாதார மாநிலமாக உருவாக்கும் நோக்கத்தை எய்தும் பொருட்டு, இங்கு அமர்ந்துள்ள அனைத்து மருத்துவப் பட்டதாரிகள் மற்றும் ஒட்டுமொத்த மருத்துவக் குழுவின் மனமார்ந்த ஆதரவை நான் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

நன்றி.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
13.11.2011 அன்று தலைமைச் செயலகத்தில்,
மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள்
மாநாட்டினைத் தொடங்கி வைத்து ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.

தமிழகத்திலுள்ள எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்பதே எனது கனவு

இன்று நடைபெறுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் கலந்துரையாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வரும் ஆண்டுகளில், இந்த அரசு மக்கள் சேவையில் தனது பணியை வரையறுப்பதற்கும் அரசின் நிலைப்பாட்டை விளக்குவதற்கும் எடுக்கப்படும் முயற்சியே இம்மாநாடு ஆகும். மக்களுடைய இலட்சியங்களை நிறைவேற்று வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கத் தேவையான யுக்திகளைப் பற்றி இம்மாநாடு விவாதிக்கும். ஒவ்வொரு முறையும் நான் அரசுப் பொறுப்பை ஏற்கும்போது நிருவாகத்தைச் சீர்படுத்தவும் சமூகப் பொருளாதார மற்றும் நிதி ஒழுக்கத்தை நிலைநாட்டவும் முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவே எனது அரசின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.

எனது அரசு தூய்மையான, வெளிப்படையான, திறமையான மற்றும் பொறுப்பான நிருவாகம் செய்யத் தீர்மானித்து அதையே செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டு மக்கள் என் மீது நம்பிக்கை கொண்டு அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக என்னை மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளனர். நான் அளித்த பல்வேறு தேர்தல் வாக்குறுதிகள் பல திட்டங்களாகவும், திட்டப் பணிகளாகவும் செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதே எனது கனவாகும். ஏழைகளும், ஒடுக்கப்பட்ட மக்களும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் வாழ்வதற்கு தேவையான உதவிகள் கிடைக்கப் பெறுவதை இந்த அரசு உறுதிப்படுத்தும்.

இந்த மாநாட்டின் முதன்மையான நோக்கமே சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையைத் திறமையாகப் பராமரித்தல். பொதுமக்கள் சேவைகளைத் திறம்படவும் விரைவாகவும் அளித்தல்–பொருளாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துதல், வளர்ச்சிப் பாதையில் இம்மாநிலத்தை விரைவாக செலுத்துதல் ஆகியவை ஆகும்.

நாங்கள் சமூக விரோதிகளையும், ரௌடிகளையும் ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். நில அபகரிப்பாளர்கள் மீது விரைவான, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக பொதுமக்களுக்கு அரசின் மீதும் காவல் துறையின் மீதும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து நிலங்கள் மற்றும்

சொத்துகளை அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் சட்டப்படி மேற்கொள்ளப்படும்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு காவல்துறை பாராட்டத்தக்க வகையில் சிறந்து பணியாற்றி வந்தது. எனது அரசு பதவி ஏற்றுக் கொண்ட பின்னர் காவல் துறையினர் எந்த பயமும் இன்றி எல்லா பிரச்சினைகளையும் சுதந்திரமாகக் கையாளுவதற்கு நான் அனுமதி அளித்துள்ளேன்.

வளர்ந்து வரும் பயங்கரவாதமும், நக்சல்வாதமும் நமது சமுதாயத்திற்குப் பல வகையிலும் மிரட்டலாகவே இருந்து வருகின்றன. தீவிரவாதத்தைத் திறமையாக ஒடுக்குவதிலும் சமுதாயத்தைப் பிரித்தாளும் போக்கு வளர்வதைத் தடுப்பதிலும் நான் எப்போதும் உறுதி பூண்டுள்ளேன். சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்றும் நிருவாகப் பொறுப்பை வகிப்பவர்கள் என்ற முறையில் காவல்துறையினர் தமிழகத்தில் அமைதியான சூழ்நிலையை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் என நான் நம்புகிறேன்.

இம்மாநிலத்தை வளர்ச்சிப்பாதையில் விரைவுபடுத்த முதல் தேவை அழிவு சக்திகளைக் கட்டுப்படுத்துவதே ஆகும். நமது புலனாய்வு அமைப்புகளை வலுப்படுத்தி தீவிரவாதத்தையும் மதவாதத்தையும் விழிப்புடன் கண்காணிக்க வேண்டும். சட்டத்தை அமலாக்கும்போது சிறு சம்பவங்களைக் கூட நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. அத்தகைய சிறு சம்பவங்கள் கூட வகுப்பு அல்லது சாதிப் பிரச்சினைகளை உருவாக்கலாம். அத்தகைய சிக்கலான பிரச்சினைகளைக் கையாளுவதில் உங்களுடைய சாதுரியத்தைப் பயன்படுத்தி மிகவும் விழிப்புடன் செயல்படுவீர்கள் என நம்புகிறேன்.

காவல்துறையினர் அவர்களுடைய கடமைகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவர்களுடைய தொழில்நுட்பத் திறமையையும், தொழில் ரீதியான போட்டி மனப்பான்மையையும் மேம்படுத்துவதற்கான தேவையைப் புறக்கணித்துவிட இயலாது. காவல் துறையினருக்கு முறையாக குறித்த காலத்திற்கு ஒரு முறை பயிற்சி அளிக்கப்பட்டு நவீன ஆயுதங்கள் அளிக்கப்பெறுவதுடன் அவர்கள் விரைவாகச் செயல்படுவதற்காகத் தகவல் தொடர்பு

வசதிகளும், நிருவாக வசதிகளும் அளிக்கப்படும். முன்னர் இருந்ததைப் போல, இதற்கு நான் உயர் முன்னுரிமை வழங்குகிறேன்.

நல்ல ஆட்சிக்குத் திறமையான நிருவாகம் அடிப்படை என்பதைச் சொல்லத் தேவையில்லை. நல்ல ஆட்சி என்னும் குறிக்கோளை எய்துவதற்கு ஊழல் என்பது பெருந்தடையாக உள்ளது. மாவட்டத் தலைவர்கள் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு நிருவாக அமைப்பைத் தூய்மைப்படுத்தி, சேவையை வழங்கும் பெரிய பொறுப்பு உள்ளது. ஊழல் அற்ற சேவையை மக்கள் எதிர்பார்க்கின்றனர். மாவட்ட அதிகாரிகள் அரசின் அனைத்துப் பணிகளுக்கும் அச்சாணியாக உள்ளனர். அவர்களின் திறமை அல்லது செயலற்றத் தன்மை அரசின் மீது பிரதிபலிக்கும். மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு இணையாக மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த அரசு கவனம் செலுத்தவுள்ள பல்வேறு பிரச்சினைகளை இன்றைய விவாதப் பொருண்மைகள் விரிவாக விளக்கியுள்ளது. அவற்றில் ஒரு சில இனங்களை மட்டும் இங்கு எடுத்துக்காட்டிவிட்டு ஏனையவற்றை உங்களின் விரிவான விவாதங்களுக்கு விடுகிறேன். வேளாண்மை, உள்ளாட்சி நிருவாகம், சுகாதாரம், கல்வி, நலத்திட்டங்கள், குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய துறைகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். வறுமை ஒழித்தல், அடிப்படைக் கட்டமைப்பில் நகர்ப்புர—கிராமப்புர வேறுபாட்டையும், வருமான இடைவெளியையும் களைதல், ஆண்—பெண் சமத்துவத்தைப் பேணுதல், திறன் மேம்பாடு, வேலை வாய்ப்பைப் பெருக்குதல் ஆகிய முக்கியப் பிரச்சினைகளுக்கு இந்த அரசு முழுமையான கவனம் செலுத்தும்.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிய போதிலும் வேளாண்மைத் துறைக்காக கோடிக்கணக்கில் செலவிட்ட போதிலும் உழவர்களின் வருமானத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடு எதுவும் ஏற்படவில்லை. மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் வேளாண்மை சார்ந்துள்ள மக்கள் தொகையின் சதவீதத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் இன்னும் குறைவாகவே உள்ளது. ஆகவே, எனது அரசு முதன்மையாக வேளாண் துறைக்கு உயர்

முன்னுரிமை அளித்துள்ளது. மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் வேளாண்மைத் துறையின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. அறிவியல் பூர்வமான வேளாண் பொருளாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுதல், உற்பத்தியைப் பெருக்குதல், தண்ணீர்ப் பயன்பாட்டை நல்ல முறையில் பரவலாக்குதல், பண்ணை முறையைப் பயன்படுத்துதல், அறுவடைக்குப் பிந்திய கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வேளாண்மை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை வேளாண்மைத் துறைக்கு இணையாக ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பிரிவுகளில் இந்த அரசால் எடுக்கப்படும் முயற்சிகளால் இரண்டாவது பசுமைப் புரட்சி உறுதியாக ஏற்படுத்தப்படும். இந்த முயற்சியில் மாவட்ட ஆட்சியர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும். ஐந்து ஆண்டுகளில் நமது உழவர்கள் வருமானத்தை மூன்று மடங்காகப் பெருக்குவதற்கான நமது குறிக்கோளை எய்துவதற்கு உழவர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி இத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதில் நீங்கள் உங்களை அர்ப்பணித்துக் கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

நமது முன்னோடித் திட்டமான ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆடுகள், கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஊரகப் பகுதிகளில் கலப்புப் பண்ணைத் திட்டத்துடன் வலுப்படுத்தப்படுவதன் மூலமாக ஊரக மக்களுக்கு நிலையான வருமானம் கிடைப்பது உறுதி செய்யப்படும். மீன்வளத் துறையைப் பொறுத்தவரையில் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த ஆட்சித் தலைவர்கள் ஆழ்கடல் மீன்பிடித்தலை மேம்படுத்துதல், மீன்பிடித் துறைமுகம் கட்டுதல், மீன் பதப்படுத்தப்படும் இடங்கள் முதலியவற்றை அமைத்தல் போன்ற கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காகத் தொடங்கும் திட்டங்களை முழு ஈடுபாட்டுடன் கண்காணிக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் மிகவும் கவலை தருவதாக உள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையான உணவுப் பாதுகாப்பிற்கு வகைசெய்வதற்காக முழுமையான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. விலையேற்றத்தின் பாதிப்பிலிருந்து ஏழைகளையும், ஒடுக்கப்பட்டவர்களையும் பாதுகாக்கும் வகையில் மானிய விலையில் அரிசி, பருப்பு, சமையல்

எண்ணெய் விநியோகிக்கப்படுகின்றன. மாநில அரசு இம்மானியத் திட்டத்தை அதிக பொருள் செலவில் செயல்படுத்தி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தின் உன்னதத் தன்மையைப் புரிந்துகொண்டு அப்பயன்கள் பயனாளிகளைச் சென்றடையும் வகையில் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். திருட்டுகளும், சேதாரங்களும் கடுமையாகத் தடுக்கப்பட வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் வேறு இடங்களுக்குச் செல்லாமல் தடுப்பதையும், போலிக் குடும்ப அட்டைகள் குறித்தக் காலத்திற்குள் படிப்படியாக ஒழிக்கப்படுவதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

கல்வியும், குடும்ப நலமும் சமுதாயக் கட்டமைப்பின் முக்கியத் தேவைகளாக உள்ளன. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற சிறந்த மாநில மற்றும் நமது மாநிலத்திலுள்ள பிற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்த்து உயர்நிலைச் செயல்பாட்டைக் கொண்டு வரவேண்டும். அவர்கள் சுகாதார நலப்பணிகளைத் திறமையாக மேம்படுத்துவதற்கு வேறு இடங்களில் பின்பற்றப்படுகின்ற சிறந்த நடைமுறைகளைக் கொண்டுவர வேண்டும். மாவட்ட நிருவாகம் இதற்கு பொறுப்பேற்று சிறந்த சேவையைப்புரிய முன்வருமானால் அனைவருக்கும் சுகாதாரம் அளிப்பது இயலக்கூடியதே. புற்று நோய், நீரிழிவு நோய், நெஞ்சக நோய்கள் போன்ற நோய்கள் மிகவும் அச்சமூட்டுகின்ற வகையில் அதிகரித்து வருகின்றன. புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் விரைவில் தொடங்கப்படும். அதுவரையில் முந்தைய சுகாதாரத் திட்டங்கள் மூலம் கோரப்படும் மருத்துவ வசதிகள் துறைகளின் மூலம் தொடர்ந்து வழங்கப்படும். அரசு மருத்துவமனைகளைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதையும் மருத்துவர்களும் ஏனைய சுகாதாரப் பணியாளர்களும் தன்னலமற்ற சேவை புரிவதையும் உறுதிப்படுத்துவதே நமது பொதுவான நோக்கமாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்பதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். ஆகவே எனது அரசு, மேல்நிலைப் பள்ளி நிலைகளில் படிப்பைப் பாதியில் விடுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு பல்வேறு புதுமையான திட்டங்களை உருவாக்கியுள்ளது. வசதியான குழந்தைகளுக்குக் கிடைக்கப்பெறும் வசதிகள் ஊரக மற்றும் நகர்ப்புர ஏழைக் குழந்தைகளுக்குக் கிடைக்காமல் போய்விடக் கூடாது என்பதற்காக இந்த அரசு கல்விச் சாதனங்களையும் மடிக்கணினிகளையும்

வழங்குகிறது. இது மாநிலம் முழுவதிலும் உள்ள இளைஞர்களிடையே சமநிலையை ஏற்படுத்துகிறது.

மக்களுடைய எதிர்பார்ப்புகளே இந்த அரசின் உந்துசக்தியாகச் செயல்படுகிறது. கழிப்பறை வசதிகள், குடிநீர், விடுதிக் கட்டடங்கள், பள்ளிகளின் நிலைமை ஆகிய பல்வேறு வசதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையாக ஆய்வு செய்து குழந்தைகளுக்கு ஏற்ற சூழ்நிலையில் அவை நல்ல நிலையில் உருவாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாணவ விடுதிகள் கட்டுவதற்காக இசைவளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இத்தகையப் பணிகள் உரிய காலத்தில் முடிக்கப்படுவதையும் அவை தரமாக உள்ளதையும் உறுதிப்படுத்த வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கட்டுமானத்திற்கு ஏற்ற நிலங்களைக் கண்டறிந்து ஒப்படைக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

உள்ளாட்சி அமைப்பிற்கான தேர்தல் நடைமுறைகள் முடிவடைந்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவி ஏற்றுள்ளனர். இத்தகைய பிரதிநிதிகள் மக்களுக்குப் பொறுப்பானவர்களாகவும், நிருவாகத்திற்கும் மக்களுக்கும் இடையில் இணைப்புப் பாலமாகவும் செயலாற்ற வேண்டும் என்பதை நினைவூட்டுகின்றேன். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட அதிகாரிகளும் உள்ளாட்சி அமைப்புகளில் ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். தரம் குறையாமல் உரிய காலத்தில் உள்ளாட்சிகளில் பணிகள் நிறைவேற்ற உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான திட்டப் பணிகளைக் கண்டறிந்து அவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வழிகாட்ட வேண்டும். குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, சாலை வசதிகள், இணைப்புச் சாலைகள் ஆகியவற்றில் உள்ளாட்சி நிருவாகம் கவனம் செலுத்த வேண்டும். குப்பைகளையும் அனைத்து வகையான கழிவுகளையும் கொட்டி வைக்கும் இடமாக கிராமங்கள் மாறி சுற்றுப்புறச் சுகாதார சீர்கேட்டை உருவாக்குகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் உறுதியான நடவடிக்கைகளும் முயற்சிகளும் இந்தக் கிராமங்களும், நகரங்களும், தூய்மையடையப் பேருதவியாக இருக்க வேண்டும்.

இயற்கைச் சீற்றங்களின் அழிவுகளுக்கு உடனடி நடவடிக்கை எடுத்து திறமையான பேரிடர் மேலாண்மை மூலமாக மக்களின் இடர்பாடுகளைக் களைய வேண்டும். தற்போது நாம் பருவ மழைக் காலத்தில் உள்ளோம். அவசரக் கால நிலைமைகளைச் சமாளிப்பதற்கு மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளச் சீர்கேடுகளைக் களைவதற்காக எடுக்கப்பட்ட நிவாரணம் மற்றும் தற்காலிக சீரமைப்புப் பணிகளைப் பாராட்டுகையில், நிரந்தர சீரமைப்புப் பணிகளை பருவமழை முடிந்த பின்னர் நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் தகுதியுள்ளோர் அனைவரையும் சேர்ப்பதில் மிகவும் கவனமாகப் பணியாற்ற வேண்டும். திருமண நிதியுதவித் திட்டம், முதியோர் ஒய்வூதியத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் பயனாளிகளைத் தேர்வு செய்வதில் எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பொறுத்தே இத்திட்டங்களின் வெற்றியும், பயன்களும் விநியோகமும் அமையும்.

இந்தக் கூட்டத்திற்கான பொருண்மை சட்டம், ஒழுங்கு பராமரித்தல், வளர்ச்சித் திட்டங்களைக் குறிப்பிட்டக் கால அளவில் முடித்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. சில முக்கியமான கருத்துகளை மட்டுமே நான் எடுத்துக் காட்டியுள்ளேன். ஆக்கப்பூர்வமான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலமாக இத்திட்டங்கள் செயல்பட இங்கு நடைபெறவுள்ள விவாதங்கள் உதவும் என நம்புகிறேன். அதிகாரிகள் தங்கள் கருத்துகளைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுகிறேன். நீங்கள் அனைவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சிறப்பாகப் பணியாற்ற வேண்டும். நல்லாட்சிக்கு இலக்கணமாக–மற்ற மாநிலங்களுக்கு உதாரணமாகத் திகழும் வகையில், எனது தலைமையிலான நிருவாகத்தில் நீங்களும் ஓர் அங்கமாக விளங்கிச் சிறப்பாகப் பணிபுரிய வேண்டும். மற்ற மாநிலங்கள் வியந்து பாராட்டி பின்பற்ற விரும்பும் ஒரு முன்மாதிரி மாநில நிருவாகமாக நமது நிருவாகம் விளங்கவேண்டும்.

வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
14.11.2011 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய ஆங்கில நிறைவுரையின் தமிழாக்கம்.

எனது எதிர்பார்ப்புகளுக்கும் இணையாக உயர்ந்து மக்களின் விருப்பங்களை நிறைவேற்றிடுக

மாவட்டத் தலைமை அதிகாரிகளுடன் இரண்டு நாட்களாக உரையாடியதில் உங்கள் பணியின் தன்மையைப் புரிந்து கொண்டேன்.

நான் அரசு அலுவலர்களின் பணிகளை 1991ஆம் ஆண்டிலிருந்தே கவனித்து வருகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் மக்கள் சேவை என்பது நேர்மை, மனசாட்சிப்படி நடத்தல், கருணை ஆகிய அடிப்படையில் சிறந்த பயிற்சிக்குப் பின் வழங்கும் சேவையேயாகும். நலிவடைந்த நிறுவனங்களை சிறப்பு ஆற்றலால் பணியாற்றி உயர்த்திக் காட்டிய வல்லுநர்களை நான் பார்த்திருக்கிறேன். அரசு அலுவலர்கள் ஆட்சியின் இரும்பு வார்ப்படமாக—நெடிய பாரம்பரியத்தின் பெட்டகமாகத் திகழ்பவர்கள். இந்த உறுதியான கட்டமைப்பு, சுமூகமான அரசாங்க மாற்றங்களைச் சாத்தியமாக்கியது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, ஒரு தொடர்ச்சியை ஏற்படுத்துகிறது. நல்லாட்சியின் அடையாளமே உறுதியான ஒருங்கிணைந்த கட்டமைப்புப் பணியாகும்.

எனது ஆட்சியிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசாட்சியை இயக்குபவர்கள் என்பதை நான் உணர்கிறேன். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். அரசாட்சியின் நடைமுறைகள் தற்போது

சிக்கலான நிலையில் உள்ளன. மக்களின் விருப்பங்கள் அதிகமாக உள்ளன. அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். எனது எதிர்பார்ப்புகளுக்கு இணையாக உயர்வீர்கள் என நம்புகிறேன். எனது அரசு முன்னுரிமை அளிப்பது வேளாண்மைத் துறைக்கே. அனைத்து இடு பொருள்களும் பருவநிலைக்கு ஏற்பவே அமையும். எடுத்துக்காட்டாக தேவைகள் முடிந்த பின்னர் உரங்களை விநியோகிப்பது வீணாகும். நீங்கள் பிரச்சினைகளின் தொகுப்பை அறிவுப்பூர்வமாகப் பகுப்பாய்வு செய்து வைத்திருக்க வேண்டும். வேளாண் வளர்ச்சியானது மக்கள் இடம் பெயர்வதைத் தடுப்பதோடல்லாமல் அவர்களுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி, நிறைவான கிராமங்களை உருவாக்கும்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் வளர்ச்சியே எனது தனிப்பட்ட விருப்பமாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் போதுமான அளவு கல்வி கற்கும் வாய்ப்பு, உடல் ஆரோக்கியம், அழகான குழந்தைப் பருவம் ஆகியவற்றை அளித்தாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் மதிப்புள்ளவர்களாக மாற்றி அவர்களைச் சமுதாயத்தின் சொத்தாக்க வேண்டும்.

பள்ளிகள் மற்றும் மாணவ இல்லங்களின் சூழ்நிலைகளையும், வழங்கப்படும் உணவுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகவும் அக்கறையுடன் கவனிக்க வேண்டும். பல்வேறு துறைகளிலும் எண்ணற்ற பயனுள்ள திட்டங்கள் உள்ளன. திட்டங்களினால் பயன்பெறும் மக்களைப்பற்றியும் திட்டங்களின் நோக்கங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். அவர்கள் துறைகளுக்கிடையே பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும். பன்முக சேவை மூலமாகப் பணியைச் சிறப்பாக செய்ய வேண்டும். தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் நிருவாகத்தைப் பாதித்துவிடக்கூடாது. ஆண்டிற்கு ஆயிரக்கணக்கான கோடிகள் செலவு செய்தும் இன்னும் சாதனைக் குறியீடுகளை அடைய முடியவில்லை.

பெண்கள் சிறப்பு இலக்குக் குழுவாக இருக்கவேண்டும். மகளிர் சுகாதாரம், தூய்மை, கல்வி மற்றும் வருவாய்ப் பெருக்கத் திட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்தவேண்டும்.

பெண்களும், சிறார்களும் தாக்குதலுக்கு ஆளாகக்கூடியவர்கள் என்பதை நினைவில் கொள்ளவும். அவர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் நாம் கவனக்குறைவாக இருக்கக் கூடாது.

பொது விநியோகக் கடைகளில் பொருள்கள் பெருமளவில் இருப்பதை உறுதி செய்து எல்லாருக்கும் எல்லாப் பொருள்களும் சமமாக வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

பல ஊரக வளர்ச்சித் திட்டங்கள் வாராந்திர அடிப்படையில் கண்காணிக்கப்பட வேண்டும். பெண்களின் சுகாதாரம் மற்றும் தரமான வாழ்வினை உறுதிசெய்ய பெண்களுக்கான துப்புரவு வளாகங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும். பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. பெண்கள் அன்றாடம் கடுமையாக வேலை செய்ய வேண்டிய அவலத்தைத் தடுப்பதற்காகவே அவர்களுக்கு மிக்சி, கிரைண்டர் போன்ற பொருள்களும் வழங்கப்படுகின்றன. அவரவர் இல்லத்தில் குடிநீர் கிடைக்கச் செய்யாவிட்டாலும், பெண்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலாவது குடிநீர் வசதி செய்து தருவது மிக மிக அவசியமாகும். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் நீண்ட தொலைவிலும் குடிநீர் இணைப்புகளை அளித்து வருகிறது. இதனைக் கண்காணிப்பதும் அவசியமாகும்.

மாவட்ட ஆட்சியர்கள் சட்டம் ஒழுங்கைப் பராமரித்து, மேம்பாட்டுத்திட்டங்களைக்கண்காணிப்பதோடு,நீதித்துறைசார்ந்த அலுவல்களுக்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

அரசு நிலங்கள் குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அரசின் சொத்துதான் மனசாட்சியற்ற சில நபர்களால் முதலில் சுரண்டப்படுகிறது என்பது வேதனையாகும். கோயில் நிலங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்கள், மத்திய அரசின் புறம்போக்கு நிலங்கள் என அனைத்து வகையான நிலங்களையும் இதனை உரியவாறு கண்காணிப்பது மிக மிக அவசியமாகும்.

தொடர்ச்சியான கண்காணிப்பு, சமூக விரோதச் சிந்தனைகளை முறியடித்துவிடும்; கவனிப்பாரற்ற நிலங்கள்,

குடிசைப்பகுதி உருவாவதற்கு காரணமாக இருப்பதோடு மட்டுமின்றி, வளர்ச்சித் திட்டங்களைப் பின்னடையச் செய்துவிடும்.

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்பதே என் நோக்கமாகும். இக்குறிக்கோள் மிகப்பெரியது என்றாலும் இதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

மனித மேம்பாட்டுக் குறிக்கோள்கள் முழு உணர்வுடன் எய்தப்பெறவேண்டும். சுற்றுச்சூழலிலும், நாம் கவனம் செலுத்துவது அவசியமாகும். நவீனப்படுத்துதல், வெளிப்படையான நிருவாகம் ஆகியவை பல தடைகளை நீக்கும். வடிநிலப்பகுதிகளில் உள்ள மாவட்ட ஆட்சியர்கள் புதுப்புதுத் திட்டங்களைக் கொண்டு வருவதோடு அறுவடைக்குப் பிந்தைய காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், உணவு தானிய சேதாரங்கள், திருட்டு மற்றும் ஏனைய பல வகையில் அழிந்துவிடுவதைச் சமாளித்தல் போன்ற நடவடிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

கடலோர மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர்கள், மீன்வளத்துறை தொடர்பான திட்டங்களை நன்கறிந்திருப்பது அவசியமாகும். சென்னையிலும், அதன் சுற்றுப் பகுதிகளிலும் உள்ள மாவட்ட ஆட்சியர்கள் குப்பை கொட்டி வைக்கும் இடம், உவர் நீரால் ஏற்படும் தூய்மைக்கேடு, நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பது போன்ற குறிப்பிட்ட துறைகளில் கவனம் செலுத்தி சுற்றுச்சூழலைப் பேணிக்காப்பது மிக அவசியமாகும்.

மாதமொருமுறை மாவட்ட ஆட்சியர் குழுக்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக உரையாட வேண்டுமென நான் திட்டமிட்டுள்ளேன்.

மாவட்ட ஆட்சியர்கள், சத்துணவு மையங்கள், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மாணவர் இல்லங்கள், துப்புரவு வளாகங்கள், கிராமப்புரச் சாலைகள், பொது விநியோக முறைக் கடைகள் மற்றும் நான் எதை எதைப் பார்வையிடவேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவற்றையும் நான் பார்வையிட விழைகிறேன்.

மாவட்ட ஆட்சியர்களின் எண்ணங்கள், கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை நான் மதிக்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வேண்டுகோள்களை ஏற்று சில அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

1. மேட்டுப்பாளையம் சாலை, திருச்சி சாலை, அவினாசி சாலை, பொள்ளாச்சி சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலை ஆகியவற்றைத் தரம் உயர்த்தும் பணி மேற்கொள்ளப்படும்.

2. உக்கடம், ஆத்துப்பாலம் மற்றும் மேற்கு வட்டச்சாலை ஆகியவற்றில் மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

3. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் தற்போதைய ஏற்பாட்டு முறையான அடையாள வில்லை முறையின்படி, ஒருநாள் மட்டும் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுவதற்குப் பதிலாக, ஆழ்கடலில், பல நாட்களுக்கு மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

4. அரியலூர் மாவட்டத்தில் பெருமளவில் சேதமடைந்த 42 கி.மீ. சாலையில் சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

5. மாவட்டங்களில், அதிக வாகனப் போக்குவரத்து நிறைந்த பெருவழிகளில் சாலைகளின் வடிவமைப்பு ஆராயப்படும்.

6. ஈரோட்டில், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அருகில், மேம்பாலம் ஒன்றைக் கட்டுகிற பணி மேற்கொள்ளப்படும்.

7. ஈரோடு மாவட்டத்தில் இந்தியக் கிறித்தவ சபை மாதா கோயில் அருகில் உள்ள சாலையை அகலப்படுத்துகிற பணி மேற்கொள்ளப்படும்.

8. காரமடை வழியாக, உதகமண்டலத்திற்கு, புதிய வழித்தடம் ஒன்றைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆராயப்படும்.

9. தூத்துக்குடி மாவட்டத்தில், சாலைகளில், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, சரக்குவண்டி முனையம் ஒன்று அமைக்கப்படும்.

10. பெரியகுளத்திலிருந்து கொடைக்கானல் சாலை வரையிலான சாலையை அகலப்படுத்துவதற்கும், மீண்டும் சாலை அமைப்பதற்குமான சாத்தியக் கூறு ஆராயப்படும்.

11. மீன்வளத்துறை தொடர்பான வாழ்க்கைத் தொழில் பயிற்சியை அளிப்பதற்காக, நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டு வருகிற மீன்வளப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் ஒன்று திருவள்ளூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

12. நிருவாகச் செயல்திறனையும், சேவை வழங்கலையும் மேம்படுத்துவதற்காக, பொன்னேரி வருவாய்க் கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும். அம்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு, அம்பத்தூர், மாதவரம் ஆகிய வட்டங்கள் அடங்கிய புதிய கோட்டம் ஒன்று உருவாக்கப்படும்.

13. சிவகாசி அரசு மருத்துவமனையில், தீக் காயங்கள் சிகிச்சைப் பிரிவு தரம் உயர்த்தப்படும்.

14. திருவண்ணாமலையில் மகா தீபம் பண்டிகையை நடத்துவதற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறையிடமிருந்து பெறப்படுகின்ற நிதிப் பங்களிப்புத் தொகையானது, தற்போதைய அளவான 50 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்த்தப்படும்.

15. சித்ரா பவுர்ணமி, சமயப் பண்டிகையாக அறிவிக்கப்படும்.

16. வேலூர் மாவட்டத்தில் கிறித்துவ மருத்துவக் கல்லூரி சந்திப்பில், மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதிக்கப்படும்.

17. வேலூருக்கான உள் வட்டச் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

18. சிவகாசியில் பட்டாசுத் தயாரிப்புத் தொழிற் சாலையில் பணிபுரிகின்ற பணியாளருக்குப் பயிற்சியளிப்பதற்காக பயிற்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

19. நாமக்கல்லின் புறநகர்ப் பகுதியில் தனியார்–பொதுத்துறைப் பங்கேற்பு (PPP) முறையில், பேருந்து வண்டியின் அடிச்சட்டம் பிரிவு ஒன்றினை அமைக்கும் பணி மேற்கொள்ளப் படும்.

20. ஆழ்கடல் பகுதிகளில் நம்முடைய மீனவர்கள் காணவில்லை எனத் தெரியவரும்போது, தீவிரமாகத் தேடுதல் வேட்டைக்கும், மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் தேவை அடிப்படையில் ஹெலிகாப்டர்கள் வாடகைக்கு எடுக்கப்படும்.

21. தேடுதல் வேட்டைக்கும், மீட்பு நடவடிக்கைகளுக்கும் கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடற்படை காவல் துறையினருக்கு அதிநவீன உயர் வேகப் படகுகள் வழங்கப்படும்.

22. தூத்துக்குடி மாநகரத்திற்குக் கூடுதல் தண்ணீர் வழங்கலுக்கு வகை செய்யப்படும்.

23. தூத்துக்குடியில், ஒருங்கிணைந்த பேருந்து நிறுத்தம் ஒன்று அமைக்கப்படும்.

24. தூத்துக்குடியில் வி.வி.டி. சந்திப்பில் மேம்பாலம் ஒன்று கட்டப்படும்.

25. சுயஉதவிக் குழுக்களுக்கு, பிளாஸ்டிக் கழிவினைப் பிரித்தும், பிளாஸ்டிக் கலந்த தார்ச்சாலைகள் அமைப்பதற்காக அவற்றைச் சிறு உருண்டைகளாகத் தயாரிப்பதற்கும் பயிற்சியளிக்கப்படும்.

26. அனைத்து மாவட்டங்களிலும், பள்ளி ஆசிரியர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) வருகைப் பதிவு ஏற்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்படும்.

27. கடலூர் மாவட்டத்திற்கான பெருந்திட்ட வளாகத்திற்கு அனுமதிக்கப்படுகிறது.

28. புதிய அரசு மாணவர் இல்லங்களில், சூரிய வெப்ப சக்தி ஏற்பாட்டு முறைகளுக்கு வகை செய்யப்படும்.

29. ஜுன் மாதத்தில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கு முன்னர், வாய்க்கால்களில் தூரெடுப்பதற்கு ஏதுவாக, இதுவரையில், மே மாதத்தில் நிருவாக அனுமதி அளிக்கப்பட்டதற்குப் பதிலாக, ஒவ்வோராண்டும் ஜனவரி மாதத்தில் நிருவாக அனுமதி அளிக்கப்படும்.

30. கால்வாய்களில் நீர்வரத்தை அதிகரிப்பதற்காக, திருவாரூர் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த தூர்வாரும் நடவடிக்கைகளும், நீர்ப்பூங்கோரைகளை நீக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

31. THAI–திட்டத்தின் கீழ், வாதல் மலைக்கு, 12 கி.மீ. நீள இணைப்புச் சாலைக்கு வகை செய்யப்படும். சுற்றுலாத் துறை இதனை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும்.

32. கிருஷ்ணகிரி தோட்டக்கலை உழவர்களுக்கு உதவும் பொருட்டு, சத்துணவு மையங்களில், மாம்பழச்சாறு வழங்குவதற்காக, அதிகளவில் மாம்பழங்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்துவது குறித்து ஆவின் நிறுவனம் ஆய்வு செய்யும்.

33. அரியலூர் மாவட்டத்தில், மருதையாற்றின் குறுக்கே மேம்பாலம் (High level Bridge) கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

34. மேட்டூர் அணையை மூடிய பிறகு, உடனடியாக ஜனவரியில், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவற்றின் அனைத்துப் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும். இதனால், ஜுன் திங்களில் மேட்டூர் அணை திறப்பதற்கு முன்னர், அவை நல்ல நிலையில் இருக்கும்.

35. சிறு வெங்காய விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, தேசியத் தோட்டக்கலை இயக்கத்தில், சிறு வெங்காயத்தைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

36. கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம், பெரம்பலூர் ஒழுங்கு முறை அங்காடி வலுப்படுத்தப்படும்.

37. திருவள்ளூரில், மாவட்ட மருத்துவமனை, விபத்தில் ஏற்படும் பெரும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தரம் உயர்த்தப்படும். இதனால், தற்போது செய்யப்பட்டு வருவதைப்போன்று விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை, 60 கி.மீ. தொலைவில் உள்ள ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இருக்காது.

38. மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெறுவதற்காக வரையறுக்கப்பட்ட குறைந்தளவு வயது வரம்பு 45 ஆகும். இது 18 வயதாகக் குறைக்கப்படும்.

39. அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியருக்கான நேர்முக உதவியாளர் (சட்டம் சம்பந்தப்பட்ட விஷயங்கள்) பதவி ஏற்படுத்தப்படும்.

40. மக்களுக்குச் சிறந்த சேவை வழங்கும் பொருட்டு, அனைத்துக் கிராம நிருவாக அதிகாரிகளுக்கும் பிரிண்டர்களுடன் கூடிய மடிக்கணினி வழங்கப்படும்.

41. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோரம்பள்ளம் ஏரி தூர் வாரப்பட்டு, கரைகள் வலுப்படுத்தப்படும்.

42. கன்னியாகுமரி மாவட்டத்தில் சில வருவாய் கிராமங்கள் மிகவும் பெரியளவில் உள்ளதால், இந்த கிராமங்கள் மறுசீரமைக்கப்படும்.

43. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்புக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, பொதுப்பணித் துறை ஆய்வு மேற்கொள்ளும்.

மாவட்ட ஆட்சியர்களின் பல்வேறு வேண்டுகோள்கள் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விரைவாக ஆணைகள் வெளியிடப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்டச் செயலாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த இரண்டு தினங்களாக உங்களுடன் கலந்துரையாடிய பின்னர், நிருவாகத்திற்கு நான் எதிர் பார்க்கும் விரைவான, திறமையான ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

அரசின் நலத்திட்ட உதவிகளைச் செம்மையான முறையில் வழங்குவதும், சட்டம்—ஒழுங்கைப் பராமரிப்பதும் உங்கள் பணியின் வெற்றிக்குச் சான்றாகும்.

உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள்.

நன்றி!

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
14.11.2011 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற
மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும்
காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாட்டைத் தொடங்கிவைத்து
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

தமிழகக் காவல்துறை மீது மக்கள்
வைத்துள்ள அசைக்கமுடியாத
நம்பிக்கையை உறுதி செய்வோம்!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு உள்துறைச் செயலாளர் அவர்களே, காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே, முதுநிலை காவல்துறை அதிகாரிகளே, காவல்துறை ஆணையாளர்களே, காவல்துறை கண்காணிப்பாளர்களே... இந்தக் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் உரையாற்றுவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இது உங்களுக்கும், எனக்கும் இடையிலான ஒரு கலந்துரையாடல் ஆகும். முந்தைய என்னுடைய ஆட்சிக் காலத்திலும் நீங்கள் என்னுடன் இணைந்து பணியாற்றியுள்ளீர்கள்.

காவல்துறையின் பெரும்பாலான அதிகாரிகள் குறித்து நான் நன்கறிவேன். இதற்கு முன்னர் நான் உங்களிடம் என்ன எதிர்பார்த்தேனோ, அதையே தொடர்ந்து எதிர்பார்க்கிறேன்.

காவல்துறை என்பது மாநிலத்தினுடைய அதிகாரத்தின் கண்கூடாகத் தெரிகிற ஓர் அடையாளம் ஆகும். காவல்துறையினர் மீது பாமர மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைப்பதை உறுதி செய்வது நமது அனைவரின் ஒருமித்த முயற்சியாகும்.

நம் மாநில மக்களுக்கு, பாதுகாப்பான, அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தருவது முதன்மையான கடமையாகும்.

பெரும்பாலான இல்லங்களில் மீண்டும் அமைதி திரும்பும் வகையில், நில அபகரிப்புப் புகார்களுக்கு எதிரான ஒப்பற்ற உங்களுடைய செயற்பாட்டை நான் பாராட்டியே ஆக வேண்டும். இதுவரை ஏற்பட்ட சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை தொடர்புடைய சம்பவங்கள் மிகத் திறமையாகக் கையாளப்பட்டுள்ளன. எல்.கே.அத்வானி அவர்களின் பயணத்தின்போது திருமங்கலம் அருகே வைக்கப்பட்டிருந்த நவீன குழாய் வெடிகுண்டுகளைத் தக்க நேரத்தில் கண்டறிந்ததன் மூலம் பேராபத்துத் தடுக்கப்பட்டுள்ளது குறித்து எனக்கு ஏற்பட்ட மன நிம்மதியை உங்களுக்குத் தெரிவித்தாக வேண்டும்.

பின்வருவன குறித்து உங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று விழைகிறேன்.

கடும் குற்றச்செயல் புரிவோரும், சமூக விரோதிகளும் இன்னும் பெருமளவில் இருந்து வருகின்றனர். இந்த அச்சுறுத்தலை நாம் தடுத்தாக வேண்டும்.

உயிருக்கும், உடைமைகளுக்கும் பேராபத்து உருவாகி வருவதை அடியோடு ஒடுக்கவும், ஒழிக்கவும் வேண்டும். வயதான பெண்களைக் கொலை செய்வது, குழந்தைகளைக் கடத்திச் செல்வது முதலிய சம்பவங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். மகளிர் தொடர்பான குற்றங்கள் அறவே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

சங்கிலிப் பறிப்பு, வணிக நிறுவனங்களை உடைத்துக் கொள்ளையடிக்கும் சம்பவங்கள், ஏனைய துணிகர கொள்ளைச் சம்பவங்கள் சென்னை மாநகரில் பெருமளவில் நடைபெறுகின்றன. பேராசையின் காரணமாக இத்தகைய சம்பவங்கள் சமுதாயத்தின் ஒரு பக்கத்தில் நடைபெற்று வருகிற நிலையில், உறுதியான, திறமையான விழிப்புப் பணியுடன் கூடிய நடவடிக்கை மூலம் இத்தகைய செயல்களைத் தடுப்பது காவல்துறையின் கடமையாகும்.

சாலை விபத்துகளின்போது ஏற்படுகின்ற பெரும்பாலான மரணம் குறித்து நான் மிகுந்த கவலையடைகிறேன். இத்தகைய துயரத்தை ஏற்படுத்தக் கூடிய விபத்துக்களை உறுதியாகக் குறைக்க முடியும். மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்கள் மீதும், அதிவேகமாக வாகனம் ஓட்டுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கள்ளச்சாராயமும், போலி மது விநியோகமும் குறைந்துள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். உளவுத் தகவல்களைச் சேகரித்தல், திடீர் சோதனை நடத்துதல், குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் உள்ளூர் காவல்துறை, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, வருவாய் துறையினர் ஆகியோருக் கிடையே பெரிதும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது அவசியமாகும்.

காவல்துறையினரின் நவீனமான நடைமுறைகளைக் காட்டிலும் மிகவும் நுட்பமான முறையில் குற்றவாளிகள் குற்றங்களைச் செய்து வருகின்றனர். அத்தகைய குற்றங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறையினருக்கு, தொடர்ச்சியான நவீனப் பயிற்சியும், நுண்ணறிவும் தேவைப்படுகிறது. இதை நிறைவேற்றும் வகையில் காவல்துறையினருக்குப் பயிற்சியும், புத்தாக்கப்பயிற்சியும் அளிப்பதற்கு ஒருமித்த முயற்சிகளை மேற்கொள்வது காலத்தின் அவசியமாகும்.

சமுதாயத்திற்கு எதிராக ஏற்படுகின்ற வன்முறைச் செயல்களைக் கண்டறிந்து, குற்றங்களைத் திறன்பட்ட முறையில் தடுக்கும் வகையில் சட்டம்–ஒழுங்கை செவ்விய முறையில் பராமரிப்பதில் உங்களுடைய முழுமையான ஒத்துழைப்பினை நல்குவீர்கள் என்று நான் நம்புகிறேன். எனக்காகவும், நமது மாநிலத்திற்காகவும் நான் வகுத்துள்ள நோக்கங்களுடன் உங்களுடைய நோக்கங்கள் ஒத்திசைவாக இருக்குமென்று நான் நம்புகிறேன். சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிப்பதிலும் மற்றும் தொடர்புடைய காவல் பணியிலும் முதலிடத்தை அடைவதற்காக, மாநில அரசிற்கு உதவி செய்வதில் தமிழ்நாடு காவல்துறை தனித்தன்மை பெற்றுள்ளதாக நம்புகிறேன்.

காவல் துறையினருக்கான நலத்திட்டங்களுக்கு நான் ஒருபோதும் கட்டுப்பாடு விதித்ததில்லை. உங்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். கணினி வழிக் குற்றங்கள் முதற்கொண்டு நாகரீகமான போர்வையில் செய்யப்படுகிற குற்றங்கள், சட்டத்திற்குப் புறம்பான பிற நடவடிக்கைகள் உட்பட பல பிரச்சினைகள் நம்முன் இருந்தாலும், கால அவகாசம் கருதி அரசின் முன்னுரிமைத் திட்டங்களை மட்டுமே இங்கு தெரிவித்துள்ளேன். உங்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதுடன் உங்களுடைய பணிகளைச் செம்மையான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்றும் நான் விழைகிறேன்.

வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
14.11.2011 அன்று காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
ஆற்றிய ஆங்கில நிறைவுரையின் தமிழாக்கம்.

பாதுகாப்பான அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தருவதே முதன்மையான கடமை

நிருவாகம் மற்றும் மேம்பாடு தொடர்பாக அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதே எப்போதும் என்னுடைய நோக்கமாகும். இந்த நோக்கத்தை எய்துவதற்குப் பொது ஒழுங்கைப் பராமரிப்பது மிகவும் அவசியமாகிறது. மக்கள் அமைதியான சூழ்நிலையில் வாழ்வது மிக அவசியமாகும்.

நான் முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, என்னுடைய பதவிக்காலத்தில் பாதுகாப்பு மற்றும் அமைதியான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதற்கு நான் முக்கியத்துவம் அளிக்கக் கருதுகிறேன். ரவுடிகளின் செயல்பாடுகளை ஒடுக்குவதும், சமூக விரோதக் குற்றங்களை, தேச விரோத சக்திகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதும் அவசியமாகும். மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக்

கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் அளித்துள்ள குறிப்புகளிலிருந்து தடுப்புக்காவல் சட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதோடு, பாதுகாப்பு நடவடிக்கைகளும் திறமையான முறையில் கையாளப்பட்டு வருவதை நான் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இம்முயற்சியில் நில அபகரிப்பாளர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையும் ஒன்றாகும். நில அபகரிப்பாளர்கள் பலர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்நிலங்களின் உரிமையாளர்களுக்கு நிலங்களைத் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருப்பதை அறிந்து நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகையச் செயல்பாடுகள் தொடர்பான வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் முழுமையான ஆதாரத்துடனும், உறுதியான சாட்சியத்துடனும் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதை நான் இங்குக் குறிப்பிட விழைகிறேன். இத்தகைய வழக்குகளில் கிடைக்கப் பெறும் இறுதியான வெற்றி, வழக்கு விசாரணையில் வெற்றியை அளிப்பதோடு உறுதியான பயனையும் அளிக்கும்.

நில அபகரிப்பு வழக்குகள் தொடர்பான செயல்முறைகளில், இந்த வழக்கில், போலியான மற்றும் ஆள்மாறாட்டம் அல்லது பொய்யான ஆவணங்கள் தயாரிப்பதன் வாயிலாக நிலம் கையகப்படுத்துவது ஆகிய நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பதிவுத்துறைக்கு குறிப்பிட்டு ஆய்வு செய்வதோடு அத்தகைய ஆவணங்கள் மற்றும் போலியான உரிமைப் பத்திரங்களை ரத்து செய்ய வேண்டும்.

இந்த இரு நாட்களில், இளஞ்சிறார் காவல் படையிலிருந்து (Boys Club) பாதுகாப்புப் பிரச்சினை வரையிலான பொருண்மைகளில் நாம் கலந்தாய்வு செய்துள்ளோம். மாவட்ட ஆட்சியர்களும், காவல் துறை அதிகாரிகளும் தங்களுடைய கருத்துகளை எடுத்துரைத்ததோடு, சட்டம்–ஒழுங்கு தொடர்பான பயனுள்ள பல்வேறு கருத்துகளையும் தெரிவித்துள்ளனர்.

பொது ஒழுங்குப் பராமரிப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பை முனைப்பாகச் செயல்படுத்துவதற்கு சில கருத்துகளை வலியுறுத்திக் கூற நான் விழைகிறேன். சமுதாய மற்றும் சாதிக் கலவரங்கள்,

இயல்பான வாழ்க்கை முறையைத் தகர்ப்பதோடு, பெருமளவில் சமுதாயத்தைப் பாதித்துவிடும். எனவே, பதட்டம் நிறைந்த பகுதிகளில் அதிகாரிகள் உன்னிப்பான கவனம் செலுத்துவதோடு, பதற்றத்திற்கான காரணங்களையும் கண்டறிய வேண்டும். ஒரு பிரச்சினை தொடங்குவதற்கு முன்னரே, அதனை ஒன்றும் அல்லாமல் அற்றுப்போகச் செய்துவிட வேண்டும். அமைதிக்காக ஒரு நாள் செலவிடுவது பத்து நாட்களுக்குரிய உழைப்பைச் சேமித்ததாக அமையும்.

இடதுசாரி தீவிரவாதிகளிடமிருந்தும், மத அடிப்படைவாதிகளிடமிருந்தும் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மிரட்டல் உள்ளது. பயங்கரவாதிகளின் வன்முறையை நம்மால் இணக்கமாக எடுத்துக் கொள்ள இயலாது. குறிப்பாக மாநிலத்தின் காடுகளிலும் மலைப்பகுதிகளிலும் இயங்கும் இடதுசாரி பயங்கரவாதிகளின் நடமாட்டம் பற்றி உரிய கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கெனவே, வன்முறைகளும் சமுதாய மோதல்களும் ஏற்பட்டதைக் கவனத்தில் கொண்டு, மத அடிப்படைவாத தனி நபர்கள் மற்றும் குழுக்கள் ஆகியவையின் மீது கவனம் செலுத்த வேண்டும். வெடி மருந்துக் கடைகளை பெயர் அளவில் ஆய்வு செய்யாமல், வெடிமருந்துப் பொருட்கள் உரியவர்களுக்கு அல்லாமல் ஆபத்தை விளைவிக்கக் கூடியவர்களுக்கு விற்பதைக் கண்காணித்து ஆய்வு செய்ய வேண்டும். ஏதாவது வெடிப் பொருட்கள் கைப்பற்றப்படுமேயானால் அப்பொருளை வைத்திருப்பவர் மீது வழக்குத் தொடர்வதோடு நிறுத்திவிடாமல் கள்ளத்தனமாக அவற்றை அனுப்பிய உரிமைதாரரைக் கண்டறிவதற்கும் அதற்கான மூல ஆதாரத்தைக் கண்டறியவும் முயற்சி எடுக்க வேண்டும்.

சாலைப் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானதாகும். கடந்த பத்து ஆண்டுகளில் சாலை விபத்துகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 விழுக்காடு அதிகரித் துள்ளது. நான் 2003ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைச் சுற்றுக்காவல் திட்டம் ஒன்றை வகுத்திருந்தேன். சாலை விபத்துகளில் சிக்குபவர்களைக் காப்பாற்றுவதற்காக ஒருங்கிணைந்த அவசரகால விபத்து நிவாரண மையங்களைத் தொடங்கியிருந்தேன். சாலை

விபத்துகளைக் குறைப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். நெடுஞ்சாலை சுற்றுக்காவலை அதிகரிக்குமாறு பல அதிகாரிகள் கேட்டுள்ளனர். இத்தகைய சுற்றுக் காவல்கள் திறம்பட்டதாகவும், விபத்துகளைப் பெருமளவு குறைப்பதற்காகவும், உயிர்களைப் பாதுகாப்பதற்காகவும் செயல்படுவதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டும். கள்ளச்சாராயம் குறைந்துள்ளது என்பதைக் கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது எனினும் தெளிந்த சாராவி அவ்வப்போது கடத்தப்படுவது கண்டறியப்படுகின்றன. அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குக் கடத்தப்படுவதை உன்னிப்பாகக் கவனிப்பது அவசியமாகும்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலனில் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். இவர்கள் மீதான குற்றங்கள் குறித்து விவாதித்தது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. கூடுதலான மகளிர் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு சில கோரிக்கைகள் வந்துள்ளன. நலிவடைந்த பிரிவினரைப் பாதுகாக்கும் ஒரு அங்கமாகவே கருதி நீங்கள் மகளிர் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களைத் திறம்படக் கையாள வேண்டும். நடமாடும் ஆலோசனை மையங்கள் மீண்டும் திறம்படச் செயல்படுத்த வேண்டும்.

காவலர் நலம் குறித்து நான் எப்போதும் கவனம் செலுத்தி வந்திருக்கிறேன். இந்த ஆண்டு மே மாதத்தில் நான் பதவி ஏற்றுக் கொண்ட பின்னர் பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்துள்ளேன். அவற்றுள் காப்பீட்டுத் தொகையை ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தியது, மாவட்ட ஆயுதப்படை மற்றும் சிறப்புக் காவல் படையினருக்கான மருந்தகங்களுடன் புற நோயாளிகளின் சிகிச்சைப் பிரிவுகளை உருவாக்கியது, இரயில்வே காவலர்களுக்கான இரவுப் பணிப் படியை உயர்த்தியது, இடர் நீக்குப் படியை உயர்த்தியது, சென்னை மாநகரின் காவலர்களுக்கான உணவுப் படியை உயர்த்தியது ஆகியன சிலவாகும்.

காவல்துறை திறம்படவும், சிறப்பாகவும் செயல்படுவதற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் நான் முனைப்புடன் இருக்கிறேன். நவீன, செம்மையான மற்றும் திறமை வாய்ந்த காவல்துறையை உருவாக்குவதற்கு நான் அனைத்து

முயற்சிகளையும் மேற்கொள்வேன். கண்ணியம், சட்டத்தைப் பின்பற்றுதல், கடமைப் பற்றுறுதி ஆகியவற்றை உங்களுடைய தரப்பிலிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

தேவையற்ற முறையில் கட்டாயப்படுத்துதல் அல்லது காவலில் இருக்கும்போது கைதிகள் மரணமடைதல் ஆகியவை எவ்வாறேனும் தடுக்கப்பட வேண்டும். ஊழல் செய்வதை ஏற்றுக் கொள்ள இயலாது. அதிகாரிகளின் நடத்தை தூய்மையானதாக இருக்க வேண்டும்.

பொதுமக்களின் சார்பிலான நிருவாகத்திற்குக் கண்கூடாகத் தெரிகிற அடையாளமாகக் காவல்துறையின் நற்பெயருடன் அரசின் நற்பெயர் இணைந்துள்ளது. தமிழ்நாடு காவல்துறை சாதனையில் அதிக உயரங்களைத் தொடும் என்றும், ஏனைய காவல்துறையினருக்கு ஓர் முன்னோடியாக அமையும் என்றும் நான் நம்புகிறேன்.

முனைப்புடன் காவல்துறை மேம்பட முத்தான அறிவிப்புகள் 34

1. தற்போது குற்றங்களினால் பாதிக்கப்பட்டு புகார் அளிப்பவர்களுக்கு, குறிப்பாக, பெண்களுக்குக் காவல் நிலையங்களில் அமர்வதற்கு இருக்கை அளிப்பதில்லை என்றும், அவர்கள் காவல் நிலையங்களில் நிற்க வைக்கப்படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. எனவே, 1 கோடி ரூபாய் செலவில், நமது மாநிலத்திலுள்ள 1,492 காவல் நிலையங்களுக்கும் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 10 பாலிவினைல் நாற்காலிகள் வீதம் வழங்கப்படும். காவல் நிலையங்களுக்கு வருகிற நபர்களுக்கு நாற்காலி வசதி செய்து கொடுப்பதற்கு நமது நாட்டிலேயே முதன் முதலாக முயற்சி மேற்கொண்டது என்னுடைய அரசுதான் என்று கூறிக்கொள்ள விழைகிறேன்.

2. உருவாக்குதல், இயக்குதல், மாற்றுதல் என்ற முறையின் கீழ், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் பங்கேற்புடன், சென்னை மாநகரின் போக்குவரத்து நிருவாகத்தைப் பன்னாட்டுத் தரத்திற்கு இணையாக தரம் உயர்த்து வதற்காக சென்னை மாநகருக்கான ஒருங்கிணைந்த போக்குவரத்து நிருவாக ஏற்பாட்டு முறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

3. சாலைப் போக்குவரத்து விபத்துகள் அதிகரித்து வருவதையும் அதன் விளைவாக மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் கருத்தில் கொண்டு, 10க்கும் மேற்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், அவரவர் மாவட்டங்களில் நெடுஞ்சாலை ரோந்துக் காவல்படைப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டனர். திருத்தியமைக்கப்பட்ட வரையறைகளின் அடிப்படையில் பற்றாக்குறைகளை விரிவாக ஆராய்ந்த பின்னர் கூடுதலாக ரோந்துக் காவல்படைப் பிரிவுகளை அனுமதிப்பது என்று, நான் தீர்மானித்துள்ளேன். மேலும், பழைய ரோந்துக் காவல்படையின் வண்டிகளுக்கும், சாதனங்களுக்கும் பதிலாகப் புதியவை மாற்றித்தரப்படும்.

4. கரூர், நாகப்பட்டினம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகள் அமைக்கப்படும்.

5. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையிலும் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

6. மாநில எல்லையிலுள்ள சோதனைச்சாவடிகளில் குடிநீர் வழங்கல், மின்சக்தி போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு வகை செய்யப்படும். காலப் போக்கில், தகவல் தொழில்நுட்பப் பொறியமைப்பு உள்ளிட்ட அதிநவீன சாதனங்களுடன், ஒருங்கிணைந்த சோதனைச்சாவடிகள் ஏற்படுத்தப்படும்.

7. தஞ்சாவூர், திருப்பூர், அரியலூர் ஆகிய ஊர்களில் மாவட்டக் காவல்துறை அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

8. அரியலூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சி, திருப்பூர் ஆகிய ஊர்களில் ஆயுத சேமக் காவல் படை வளாகங்கள் கட்டப்படும்.

9. புதிதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மாவட்டத்திற்கென ஆயுத சேமப்படை இல்லாததால், அதன் தேவைகளுக்குப் பெரம்பலூர் மாவட்ட ஆயுத சேமப்படையைச் சார்ந்திருக்க

வேண்டியுள்ளது. அரியலூர் மாவட்டத்திற்கென மூன்று படைப் பிரிவுகள் அனுமதிக்கப்படும். அரியலூர் மாவட்டத்திற்கு, ஆயுத சேமப்படையின் நான்கு படைப்பிரிவுகள் இருக்கும் வகையில் பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து ஒரு படைப் பிரிவு அளிக்கப்படும்.

10. திருப்பூர், அளவிலும் மக்கள் தொகையிலும் வளர்ந்து வருவதாலும், தொழிலாளர் இடம் பெயர்தல், போக்குவரத்து நெரிசல் போன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாலும், காவல்துறையின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு ஆணையரகத் திற்கான தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, திருப்பூரில் காவல்துறை ஆணையரகம் அமைப்பதற்குத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

11. தற்போது, கோயம்புத்தூர் மாநகரத்தில், குற்றம், போக்குவரத்து இரண்டிற்கும் ஒரே துணை ஆணையாளர் பொறுப்பு வகித்து வருகிறார். போக்குவரத்து நிருவாகத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக கோயம்புத்தூர் மாநகரத்திற்கான போக்குவரத்துத் துணை ஆணையாளர் பதவியிடத்திற்கு அனுமதியளிக்கப்படும்.

12. பெரம்பலூர் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் சோழவரம், கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்படுகிறது.

13. குற்றத் தடுப்பு நடவடிக்கையாக, அனைத்து வணிக நிறுவனங்களிலும் பெருமளவில் மக்கள் கூடுகின்ற இடங்களிலும் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது. வணிக நிறுவனங்கள் உரிமம் பெறுவதற்கு, கண்காணிப்புக் கேமராக்கள் அவசியம் பொருத்தப்படுவது கட்டாயம் என்ற விதிமுறை நகராட்சி/ ஊராட்சி விதிமுறைகளில் உருவாக்கப்படும்.

14. கமுதி மற்றும் திருவண்ணாமலைப் பகுதிகளில் அடிக்கடி பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்ற காவல் துறைப் பணியாளருக்கென, ஒவ்வொன்றிலும் 500 பணியாளர்

தங்கும் வகையில், காவலர் குடியிருப்புகள் கட்டப்படும். இந்த இடங்களில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனியாகக் காவலர் முகாம் குடியிருப்புகள் கட்டப்படும்.

15. சென்னை மாநகரத்தில் தவறு நடக்கின்ற அந்த இடத்திலேயே அபராதம் வசூலிக்கின்ற மின்செலுத்துச் சீட்டு ஏற்பாட்டு முறை (E-Chalan System) வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவதாகக் கண்டறியப் பட்டுள்ளது. இது ஏனைய ஐந்து ஆணையரகத்திலும் அறிமுகப்படுத்தப்படும். இது காஞ்சிபுரம் மாவட்டத்திலும், சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

16. பாதுகாப்புக் கூட்டங்கள், ஆய்வு அல்லது நீதிமன்றத்திற்குச் செல்லும் காவல்துறை அதிகாரிகள் தங்குவதற்காக விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலையில் காவல்துறை விருந்தினர் இல்லங்கள் கட்டப்படும்.

17. தேனியில் நக்சலைட்டுகளை ஒடுக்கும் தனிப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

18. பயிற்சி கால அளவு முந்தைய 7 மாத கால அளவுக்கே மீண்டும் கொண்டுவரப்படும்.

19. அனைத்து இளஞ்சிறார் காவல்படைகளுக்கான ஒதுக்கீடு (Boys Club) ஆண்டொன்றிற்கு ரூ.66,000லிருந்து ரூ.75,000 ஆக உயர்த்தப்படும்.

20. இளஞ்சிறார் காவல்படை உறுப்பினர்கள், கற்கும் திறன்களுக்காக, பள்ளி நேரத்திற்குப் பின்னர் மாநகராட்சி/ அரசுப் பள்ளிக் கட்டடங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவர்.

21. அரியலூர், திருப்பூர், தருமபுரி மாவட்டங்களுக்கு இளஞ்சிறார் காவல்படை அமைக்க அனுமதியளிக்கப் படும்.

22. சாலை விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்குப் பாதிக்கப்பட்டோர் உதவி நிதியிலிருந்து தற்போது வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகை ரூ.25,000லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தப்படும். அதேபோன்று படுகாயமடைந்தவர்களுக்கு

வழங்கப்பட்டுவந்த தொகை ரூ.15,000லிருந்து ரூ.30,000 ஆக அதிகரிக்கப்படும்.

23. அனைத்துக் காவல் நிலையங்களுக்கும், துப்புரவுப் பணியாளர் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படாத காவல்துறையைச் சேர்ந்த கட்டடங்களுக்கும் துப்புரவுப் பணியாளர் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

24. பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவோரிடமிருந்து மீட்கப்பட்டவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைப் பிழைப்பிற்காகவும் புது வாழ்விற்காகவும் நிதியுதவி ரூ.10,000 வழங்கப்படும்.

25. கிராமக் கண்காணிப்புக் குழுக்களை முறையாகச் செயல்படுத்துவதற்காக ரூ.2 கோடி ஒப்புதல் அளிக்கப்படும். இது, இவர்கள் ஒவ்வொரு மாதமும் சந்தித்து கலந்துரையாட உதவும்.

26. தற்போது காவல்துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு, தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து ரூ.20,000 வரையில் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இனிமேல், இத்தொகையை ரூ.25,000 ஆக அதிகரித்து மாணவர் இல்லக் கட்டணமும் உள்ளடக்கி வழங்கப்படும்.

27. மத்திய மண்டல காவல்துறைத் தலைவர் மற்றும் அரியலூர் காவல் துறைக் கண்காணிப்பாளருக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்புதலளிக்கப்படுகிறது.

28. அனைத்து மாவட்டக் காவல்துறை அலுவலகங்கள், மாநகர் காவல்துறை அலுவலகங்கள் மற்றும் காவல்துறை தலைமை இயக்குனர் அலுவலகத்திற்கு ரூ.5 கோடி மதிப்பில் 1,000 கணினிகள் வழங்கப்படும்.

29. திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் குற்றப் புலனாய்வுத் துறையின் பிரிவிற்கு (CBCID) ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

30. குற்றப்புலனாய்வுப் பிரிவுக்காக ஒரு அறிவியல் சார்ந்த அலுவலர் பதவிக்கும், அறிவியல் உதவியாளர் தரம்–1 பதவிக்கும் ஒப்புதலளிக்கப்படும்.

31. காவல்துறைப் பணியாளர்களுக்கான துப்பாக்கிச் சுடும் பயிற்சியில் அவர்களுக்கு வழங்கப்படும் குண்டுகளின் எண்ணிக்கை 50 குண்டுகளாக உயர்த்தப்படும். துப்பாக்கிச் சுடும் பயிற்சி தற்போது ஆண்டுக்கு ஒரு முறை என்றிருப்பதற்குப் பதிலாக ஆண்டுக்கு இரு முறை பயிற்சி அளிக்கப்படும்.

32. கமாண்டோ பயிற்சியாளர்கள் தங்குவதற்கு இருப்பிட வசதி செய்யப்படும்.

33. வெடிகுண்டை செயலிழக்கச் செய்யும் பணியாளர்களுக்கு கமாண்டோ பணியாளர்களுக்கு இணையான ஊதியத்துடனும், இன்னல்படி மற்றும் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

34. தோராயமாக ரூ.25 இலட்சம் செலவில், வெடிகுண்டு மாதிரி அறை–வகுப்பறை கட்டப்படும்.

இயன்றவரை உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவு செய்வதற்கு நான் முயற்சி செய்துள்ளேன். ஏதேனும் கோரிக்கைகள் நிறைவேறாமல் இருந்தால் அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன அல்லது அடுத்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யப்படும் போது நிறைவேற்றப்படும் என்று பொருள்படும்.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.12.2011 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை குறித்த தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை.

முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாடு தமக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பாக, கேரள அரசு அம்மாநில மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி வரும் சூழ்நிலையில், கேரள அரசின் உண்மையற்ற பிரச்சாரத்தின் அடிப்படையில், தமிழக உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதை நாம் அனைவரும் ஒன்றுபட்டுத் தெரிவிக்கும் வகையில் இன்று இந்த சட்டமன்ற சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணை முற்றிலும் பாதுகாப்பான அணை என்பதை முதற்கண் தெரிவித்துக் கொண்டு அது குறித்த சில விவரங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முல்லைப் பெரியாறு அணை புவிஈர்ப்பு விசையின் அடிப்படையில், 1886–லிருந்து 1895 வரையிலான ஆண்டுகளில், சுண்ணாம்பு சுர்க்கி கலவையால் கருங்கல்லில் கட்டப்பட்டதாகும். பொதுவாகவே, புவி ஈர்ப்பு விசையின் அடிப்படையில் கட்டப்படும் அணைகள் நீர் அழுத்தம்; அலைகளால் ஏற்படும் அழுத்தம்; நில அதிர்வுகளினால் ஏற்படும் விசை போன்றவற்றைத் தனது பளுவினால் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தவை. எனவேதான்,

புவிஈர்ப்பு அடிப்படையில் கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை இன்றளவும் உறுதியாகவும், வலிமை மிக்கதாகவும் விளங்குகிறது.

"பெரியாறு திட்டத்தின்" கீழ், சென்னை மாகாணத்திற்குத் தண்ணீரைத் திருப்பும் வகையில் திருவாங்கூர் மகாராஜாவுக்கும், சென்னை மாகாணத்திற்கும் இடையே 01.01.1886 முதல் 999 ஆண்டுகளுக்கான பெரியாறு குத்தகை உடன்படிக்கை, 29.10.1886 அன்று ஏற்பட்டது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு, 5 ரூபாய் ஆண்டு வாடகை என்ற அடிப்படையில், சுமார் 8,000 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. இந்த அணையின் நீர் மூலம், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள சுமார் 2.23 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், 29.5.1970 அன்று கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே இரண்டு துணை ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அதாவது,

1) 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை இக்குத்தகை வாடகை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், ஒரு ஏக்கருக்கான, ஆண்டுக் குத்தகை வாடகையை 5 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர்த்துதல், மற்றும் மீன்பிடி உரிமையைக் கேரளாவிற்கு விட்டுக் கொடுத்தல் ஆகியவை அடங்கிய ஓர் ஒப்பந்தமும்;

2) மின் உற்பத்தித்திறனுக்கு ஏற்ப கட்டணம் செலுத்துவதன் அடிப்படையில், புனல் மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளத் தமிழ்நாட்டை அனுமதிப்பது என்கிற மற்றொரு ஒப்பந்தமும் ஏற்பட்டன.

இந்த இரண்டு ஒப்பந்தங்களும், 1886ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அசல் உடன்படிக்கையின் உரிமையாளர் என்ற முறையில் ஏற்படுத்தப்பட்டன.

இது போன்ற அணைகள் வலுப்படுத்தப்பட்டதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுகள் உலக அளவில் உள்ளன. 1911ஆம் ஆண்டு, அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாநிலத்தில் கட்டப்பட்ட ரூஸ்வெல்ட் அணை வலுப்படுத்தப்பட்டு, அதனுடைய கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில்

கட்டப்பட்ட ஜோக்ஸ் அணை வலுப்படுத்தப்பட்டு 1952ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. இதே போன்று, இங்கிலாந்து நாட்டில் உள்ள மேல் கிளன்டோவல் என்ற புவி ஈர்ப்பு விசை கொண்ட அணையும் வலுப்படுத்தப்பட்டது.

இதே போன்று, முல்லைப் பெரியாறு அணையிலும், மத்திய நீர் ஆணையத் தலைவரின் பரிந்துரைகளின் அடிப்படையில், 1980 முதல் 1994 வரை வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பழைய அணையில், அணையின் முன் மற்றும் பின் பக்கப் பகுதிகள் சுண்ணாம்பு சுர்க்கி கலவையால் கருங்கற்கள், அதாவது, stone masonry with lime surkhi mortar கொண்டு கட்டப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், அணையின் மையப் பகுதி சுண்ணாம்பு சுர்க்கி திண்காரையால், அதாவது, lime surkhi concrete-ஆல் கட்டப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட முல்லைப் பெரியாறு அணை, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில், எவ்வாறு வலுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்கிக் கூறுவது எனது கடமை என்றே கருதுகிறேன்.

குறுகிய காலத் திட்டமாக, அணையின் எடையை அதிகரிக்கும் பொருட்டு, 21 அடி அகலத்திற்கு, மூன்று அடி பருமன் கொண்ட ஆர்.சி.சி. கட்டுமானப் பணி அணையின் முழு நீளத்திற்கு அதன் மேல் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக, அணையின் எடை ஒரு மீட்டருக்கு 35 டன் அதிகரித்துள்ளது. அதாவது, அதன் கட்டமைப்புடன் மொத்தம் 12,000 டன் எடை கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நடுத்தர கால நடவடிக்கையாக, இறுக்கு விசை தொழில்நுட்பத்தின் அடிப்படையில், அணையின் அடித்தளத்துடன் எஃகு கம்பிகள் இழுத்துக் கட்டப்பட்டுள்ளன. அணையின் முன் பகுதியிலிருந்து 5 அடி தொலைவில், அணையின் மேற்பரப்பிலிருந்து, அடித்தளப் பாறையில் 30 அடி வரை, 9 அடி இடைவெளியில், 4 அங்குலம் குறுக்களவில், துளைகள் அணையின் முழு நீளத்திற்கும் போடப்பட்டுள்ளன. இந்த துளைகளுக்குள், 7 மி.மீ. பருமன் கொண்ட மிக வலுவான 34 எஃகு கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன. அஸ்திவாரத்தில் உள்ள கருங்கல் பாறைகளுடன், இந்தக் கம்பிகள் உறுதியாக பொருத்தப்பட்டுள்ளன. முதலில் 20 அடி ஆழத்திற்கு திண்காரைக் கட்டுகள், அதாவது, Concrete போடப்பட்ட

பிறகு கம்பிகள் செலுத்தப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. 120 டன் சக்தி கொண்ட இக்கம்பிகள், மேற்பரப்பிலிருந்து இழுத்துக் கட்டப்பட்டுள்ளன. இந்த நிலையில், துளையை அடைக்கும் வகையில், சிமிட்டிக் கலவை போடப்பட்டு மேற்பரப்பு மூடப்பட்டது. இதன் காரணமாக, அஸ்திவாரப் பாறைகளுடன் 120 டன் விசை கொண்டு, அணையை வலுவாக இறுக்குக் கம்பிகள் பிடித்துக் கொள்ளும். நில அதிர்வு உட்பட பல்வேறு விசைகளைத் தாங்கிக் கொள்ளும் வகையில், அணையின் முழு நீளத்திற்கும், 9 அடி இடைவெளியில், 95 கம்பிகள் செலுத்தப்பட்டு சிமிட்டிக் கலவை போடப்பட்டு இருக்கிறது.

நீண்ட கால நடவடிக்கையாக, அணையின் பின்புறத்தில் 10 அடி ஆழம், 32 அடி அகலத்திற்கு, தரை மட்டத்திலிருந்து 145 அடி உயரத்திற்கு ஆர்.சி.சி. கட்டுமானம் அணையின் தலைப் பகுதியுடன் இணையும் வகையில், மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தற்போதுள்ள அணை மற்றும் புதிய கட்டுமானம் ஆகியவை ஒரே அணை போல் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. மத்திய நீர் ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, கட்டுமானத்தை வலுப்படுத்தும் அதே சமயத்தில், புதிய கட்டுமானத்தில் 10 அடி மற்றும், 45 அடி உயரத்திற்கு இரண்டு வடிகால் மாடங்கள், அதாவது Drainage Galleries அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், அணையிலிருந்து கசியும் நீர் அன்றாடம் கணக்கிடப்படுகிறது.

அணை பாதுகாப்பாக, வலுவாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், ஓரளவு நீர்க் கசிவு அணையிலிருந்து வெளியேறுவது அவசியம் என்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

மேலும், அணையின் நீர்மட்டம் அதன் முழுக் கொள்ளளவான, 152 அடிக்கும் மேலாக உயர்கையில், அணையைப் பாதுகாக்கும் பொருட்டு உபரி நீர், ஏற்கெனவே உள்ள 36 x 16 அடி கொண்ட 10 மதகுகள் வழியாக வெளியேற்றப்படும். இதன் மூலம், ஒரு வினாடிக்கு 86,000 கன அடி நீரை வெளியேற்ற முடியும். இது மட்டுமல்லாமல், மத்திய நீர் ஆணையத்தின் ஆலோசனையின் பேரில், கூடுதலாக வினாடிக்கு 36,000 கன அடி நீரை

வெளியேற்றும் திறன் கொண்ட 40 x 16 அடி அளவுள்ள மூன்று மதகுகள் கட்டப்பட்டுள்ளன. எனவே, தற்போது அணையிலிருந்து தோராயமாக வினாடிக்கு 1,22,000 கன அடி உபரி நீரை வெளியேற்ற முடியும்.

இதிலிருந்து, அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்பதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு எடுத்துள்ளது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

இந்தச் சூழ்நிலையில், முல்லைப் பெரியாறு தொடர்பாக, ஏற்கெனவே நிலுவையில் இருந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகள் எடுத்துரைத்த வாதங்களின் அடிப்படையிலும்; வல்லுநர்கள் அளித்த அறிக்கையின் அடிப்படையிலும்; முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தைத் தற்போதுள்ள 136 அடியிலிருந்து 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும்; அணையை வலுப்படுத்துவதற்கான எஞ்சிய பணிகளைத் தமிழ்நாடு மேற்கொள்ளலாம் என்றும்; மத்திய நீர் ஆணையம் திருப்தியடையும் வகையில், அணை பலப்படுத்தப்படுவதற்கான எஞ்சிய பணிகள் முடிவடைந்த பிறகு, அணையின் நீர்மட்டத்தை 152 அடி அளவுக்கு உயர்த்தப்பட அனுமதிப்பதற்கு முன்னர், தனிப்பட்ட வல்லுநர்கள் அணையின் பாதுகாப்புக் குறித்து ஆய்வு செய்வார்கள் என்றும்; உச்சநீதிமன்றம் 27.02.2006 அன்று தீர்ப்பளித்தது. இந்த ஆணையில், அணை பாதுகாப்பாக உள்ளது குறித்து உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளவற்றை இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக அமையும் என கருதுகிறேன்.

"… Regarding the issue as to the safety of the dam on water level being raised to 142 ft. from the present level of 136 ft., the various reports have examined the safety angle in depth including the view point of earthquake resistance. The apprehensions have been found to be baseless. …"

அதாவது, "தற்போதுள்ள 136 அடியிலிருந்து 142 அடி வரை அணையின் நீர் மட்டத்தை உயர்த்தும் போது, அணையின் பாதுகாப்பைப் பொறுத்த வரையில், நில நடுக்கத்தினை எதிர்க்கும் சக்தி உட்பட அனைத்துப் பாதுகாப்புக் கோணங்களையும் பல்வேறு அறிக்கைகள், ஆழமாக ஆராய்ந்துள்ளன. இதன்படி, முல்லைப்

பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற கவலை, ஐயப்பாடு ஆகிய அனைத்தும் ஆதாரமற்றவை ...'' என்று உச்சநீதிமன்றம் கருத்துத் தெரிவித்து இருக்கிறது.

உச்சநீதிமன்றம் மேலும் தனது தீர்ப்பில், "...The experts having reported about the safety of the dam and the Kerala Government having adopted an obstructionist approach, cannot now be permitted to take shelter under the plea that these are disputed questions of fact. There is no report to suggest that the safety of the dam would be jeopardized if the water level is raised from the present to 142 ft. ..."

அதாவது, "அணை பாதுகாப்பாக உள்ளது என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ள நிலையில், இவைகள் எல்லாம் சர்ச்சைக்குரிய விஷயங்கள் என்ற சாக்குப் போக்கை வைத்து, அதற்குத் தடை ஏற்படுத்தும் விதமான அணுகுமுறையைக் கேரள அரசு கடைபிடிப்பதை அனுமதிக்க முடியாது. அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தினால், அணையின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் என்று எந்த அறிக்கையும் சுட்டிக்காட்டவில்லை ..." என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த ஆணையை முடக்கும் வகையில், "கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006", கேரள சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு இந்தத் திருத்தச் சட்டம் 18.3.2006 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்டம் 136 அடியாக நிர்ணயிக்கப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம், அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று கூறி, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த சிவில் வழக்கு இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இவ்வழக்கில், கேரள அரசின் 2006ஆம் ஆண்டைய சட்டத் திருத்தம் செல்லத்தக்கதா என்பது உட்பட சட்ட மற்றும் அரசமைப்பு ரீதியான அம்சங்களைத் தவிர, ஏனைய நிலைகளைப் பரிசீலிக்கும் பொருட்டு உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் தலைமையில், அதிகாரம் படைத்த குழு, அதாவது Empowered Committee ஒன்றை உச்ச நீதிமன்றம் 18.02.2010 அன்று நியமித்தது. தமிழ்நாடும், கேரளாவும் தங்கள் மாநிலங்களின்

சார்பாக இரண்டு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர்களை நியமித்தன.

தற்போது, இந்த அதிகாரம் படைத்த குழு, முல்லைப் பெரியாறு அணைப் பகுதி மற்றும் பரிசோதனைக் கூடங்களில் பல்வேறு ஆய்வு மற்றும் சோதனைகளை மேற்கொள்வதற்காக மத்திய நீர் ஆணையம், (Central Water Commission); மத்திய நீர் மற்றும் மின்சார ஆராய்ச்சி நிலையம் (Central Water and Power Research Station); இந்தியப் புவியியல் அளவைத் துறை (Geological Survey of India); பாபா அணு ஆராய்ச்சி மையம் (Bhabha Atomic Research Centre) மற்றும் மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருள்கள் ஆராய்ச்சி நிலையம் (Central Soil and Material Research Station) போன்ற அமைப்புகளின் சேவைகளைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. இந்தக் குழு தனது அறிக்கையை 2012ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உச்ச நீதிமன்றத்தின் முன் அளிக்க இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், அரசியல் ஆதாயத்திற்காக, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற புரளியைக் கிளப்பி, கேரள மக்களைப் பீதியடையச் செய்யும் வகையில், விஷமப் பிரசாரத்தை, கேரள அரசு மேற்கொண்டு வருவது மிகவும் வருந்தத்தக்கது.

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்று உண்மைக்கு மாறான பிரசாரம் செய்யும் கேரள அரசைக் கண்டிக்கும் வகையிலும், தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்பதை நிலை நிறுத்தும் வகையிலும், பின்வரும் தீர்மானத்தினை இன்று இப்பேரவையில் நான் முன்மொழிய விழைகிறேன்.

தீர்மானம்

“தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகளின் வாதங்களையும், வல்லுநர்களின் அறிக்கைகளையும் ஆராய்ந்து, அதன் அடிப்படையில், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானது என்பதால், அதன் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாகவும்; எஞ்சிய பலப்படுத்தும் நடவடிக்கைகள் முடிக்கப்பட்ட பின், 152 அடியாகவும் உயர்த்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் 27.02.2006 அன்று தீர்ப்பளித்த பிறகு, அந்த ஆணையை, இந்த நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை, முற்றிலும் அவமதிக்கும் வகையில், “கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்,

2006'', என்ற சட்டத்தை இயற்றி அந்தச் சட்டத்திற்கு எதிரான மனு, உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற உண்மைக்கு மாறான பிரச்சாரம் மூலம், கேரள மக்களிடையே பீதியைக் கிளப்பிவிட்டு, புதிய அணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையைக் கேரள அரசு, வலியுறுத்தும் அதே நேரத்தில்; முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 120 அடியாகக் குறைக்க வேண்டும் என்று 09.12.2011 அன்று கேரள சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் இயற்றியுள்ள கேரள அரசு வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது எனினும், அரசமைப்புச் சட்டத்தின்படி, ஏற்படுத்தப்பட்ட கேரள சட்டமன்றத்தைக் கண்டிப்பது சரியான அணுகுமுறையாக இருக்காது என்பதால், அந்தத் தீர்மானத்தின் மீது தமிழக மக்களின் வருத்தத்தினைத் தெரிவிப்பது என்றும்;

"முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக, கேரள அரசு உண்மைக்கு மாறான பிரசாரத்தை மேற்கொண்டு இருப்பதையொட்டி, தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் பதற்றமான சூழ்நிலை நிலவுவதால், முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்கும் பொருட்டு மத்தியத் தொழிற் பாதுகாப்புப் படையை, அதாவது, Central Industrial Security Force–ஐ அந்தப் பகுதிக்கு உடனடியாக மத்திய அரசு அனுப்ப வேண்டும்'' என்றும்;

உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக, 2006ஆம் ஆண்டு, கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்;

அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசு, தமிழகத்திற்குத் தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றும்;

எந்தச் சூழ்நிலையிலும், தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது.''

இந்தத் தீர்மானத்தின் மீது, அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் கருத்துகள் தெரிவிக்கப்பட்ட பின்னர், மேலும் எனது கருத்துகளை நான் எடுத்துரைக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

★ ★ ★

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.12.2011 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் முல்லைப் பெரியாறு அணை குறித்த தீர்மானத்தின் மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசிய பிறகு ஆற்றிய பதிலுரை.*

முல்லைப் பெரியாறு அணை புது அணையைப் போல் மிகவும் பாதுகாப்பாக உள்ளது!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறீர்கள். தமிழக மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு அணை விஷயத்தில், அரசியலுக்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் ஒற்றுமையாக இருப்பது இங்கே நிலை நிறுத்தப்பட்டு இருக்கிறது. இதற்காக, எனது மனமார்ந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்ற தீர்ப்பை 27.02.2006 அன்று உச்சநீதிமன்றம் வழங்கியதிலிருந்து உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடுவதையே கேரள அரசு குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தத் தீர்ப்பு வெளிவந்தவுடன், அந்தத் தீர்ப்பினை முடக்கும் வகையில், கேரள அரசு ஒரு சட்டத்தினை இயற்றியது. இதனையடுத்து, முல்லைப் பெரியாறு பகுதியில், ரிக்டர் அளவுகோலில் 2.1 அளவுக்கு நில நடுக்கம் ஏற்பட்டதாகப் பத்திரிகைகளில் 18.08.2006 அன்று செய்தி வெளியானது. இதனையடுத்து, 29.11.2006 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், புதிய அணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையைக் கேரள அரசு

முன் வைத்தது. இவற்றின் உச்சகட்டமாக, தற்போது அணை உடைந்து, பல கிராமங்கள் நீரில் மூழ்கிவிடும் என்ற உண்மைக்கு மாறான பிரச்சாரத்தைக் கேரள அரசு பரப்பி வருகிறது. இந்தத் தருணத்தில், ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அணையின் பாதுகாப்பு குறித்து 1979ஆம் ஆண்டு கேரளா ஐயப்பாட்டினை எழுப்பிய போது, அப்போதைய மத்திய நீர் ஆணையத்தின் தலைவர் டாக்டர் கே.சி. தாமஸ் அவர்கள் ஆய்வு நடத்தி, அணை மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்று தெரிவித்து, அணையை மேலும் வலுப்படுத்தும் வகையில், நவீன தரத்திற்கேற்ப சில மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்ற ஆலோசனையையும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வலுப்படுத்தும் பணிகளை, நான் என்னுடைய துவக்க உரையில் உங்களுக்குச் சுட்டிக்காட்டினேன். இதற்குப் பின்னர், புது அணைக்கு இணையாக முல்லைப் பெரியாறு அணை விளங்குகிறது. 27.11.2011 அன்று டாக்டர் கே.சி. தாமஸ் தன்னுடைய பத்திரிகைச் செய்தியில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 152 அடிக்கு உயர்த்தப்பட்டாலும், அதில் உள்ள 13 வடிகால்கள் அதிகபட்ச வெள்ளப்பெருக்கைக் கையாளும் திறன் கொண்டவை என்றும்; அணை உடைந்து இடுக்கி அணை மூழ்கிவிடும் என்று சொல்வது சாத்தியமற்றது என்றும் கூறியுள்ளார். இது மட்டுமல்லாமல், 1730ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம், உதய்பூரில் கட்டப்பட்ட ஜெய்சமந்த் என்ற அணை இன்னமும் நல்ல நிலையில்தான் உள்ளது என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார். எனவே, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற வாதத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

இதே போன்று, முல்லைப் பெரியாறு அணை நில நடுக்கம் நிகழக்கூடிய இடத்தில் அமைந்துள்ளது என்ற ஒரு வதந்தி அண்மைக் காலமாக, கேரள அரசினால் பரப்பப்பட்டு, அதன் காரணமாக, தேவையில்லாத குழப்பமும், பீதியும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. முல்லைப் பெரியாறு அணை மண்டலம்–3இல், அதாவது Seizmic Zone III–இல் தான் வருகிறது. இணைய தளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் எளிதில் இறக்கம் செய்யக்கூடிய, பூகம்பம் தொடர்பான, இந்திய வரை படத்தைப் பார்த்தே இதனைத்

தெரிந்து கொள்ளலாம். மூன்றாவது மண்டலத்தில் ஏற்படக்கூடிய நில அசைவுகள், வெகு அரிதாகத்தான் நிலநடுக்கத்தை அளக்கும் அளவையில் மூன்று புள்ளிகளைத் தாண்டுகிறது. 2 முதல் 2.9 வரையிலான நில அசைவுகள் நில நடுக்கத்தை அளக்கும் அளவுகோலில், அதாவது Richter Scale–இல், பதிவு செய்யப்படுகிறதே ஒழிய, அவை உணரப்படுவதில்லை. இது போன்ற நில அசைவுகள் உலகம் முழுவதும் ஒவ்வொரு நிமிடமும் ஏற்படுகின்றன. இவையெல்லாம், வானிலை ஆராய்ச்சித் துறை தெரிவிக்கும் புள்ளி விவரங்கள். நில நடுக்கத்தை அளக்கும் அளவையில், Richter Scale–இல் பதிவாகும் 3 முதல் 3.9 வரையிலான நில அசைவுகள், "பெரும்பாலும் உணரப்படும்; ஆனால், சேதத்தை ஏற்படுத்தாது". இந்த நில அதிர்வுகள் அதிக தூரம் பரவினாலும் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. உண்மை நிலை இவ்வாறு இருக்கையில், நில நடுக்கத்தின் காரணமாக முல்லைப் பெரியாறு அணைக்குச் சேதம் ஏற்படும் என்று எண்ணுவதற்கு எந்தவித அடிப்படை ஆதாரமும் கிடையாது.

கேரள முதலமைச்சர் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், கடந்த நான்கு மாதங்களில், 22 நில அதிர்வுகள் ஏற்பட்டதாகக் கூறி இருந்தார். இது முற்றிலும் உண்மைக்கு மாறான தகவல் என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். இந்திய வானியல் ஆராய்ச்சித் துறையின் புள்ளி விவரத்தின்படி, கடந்த நான்கு மாதங்களில் நான்கு நில அதிர்வுகள் மட்டுமே ஏற்பட்டுள்ளன. இந்த நில அதிர்வுகளும், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியிலிருந்து வெகு தூரத்தில் ஏற்பட்டுள்ளவை என்பதும்; இதன் காரணமாக, அணையிலிருந்து வெளியேறும் நீர்க்கசிவில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த உண்மை நிலையை, கடிதம் மூலம் கேரள முதலமைச்சருக்கு நான் சுட்டிக்காட்டி உள்ளேன்.

முல்லைப் பெரியாறு அணை, நில நடுக்கம் காரணமாக உடைந்து, அந்தப் பகுதி நீரில் மூழ்கிவிடும் என்ற கேரள தரப்பின் வாதத்தில், எள்ளளவும் உண்மை இல்லை. ஏனெனில், இந்தப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புகள் முல்லைப் பெரியாறு அணையில் வெள்ள நீர்மட்டத்தை விட அதிகமான உயரத்தில் தான் அமைந்துள்ளன. கேரளாவின் இடுக்கி நீர்த்தேக்கம், வினாடிக்கு

4,00,000 கன அடி அளவு வெள்ளப் பெருக்கினை ஏற்றுக் கொள்ளும் வகையில், வடிவமைக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றம் தனது 27.02.2006ஆம் தேதிய ஆணையில், "அதிக அளவில் மழை பெய்த போதிலும், இடுக்கி நீர்த் தேக்கம் அதன் முழுக் கொள்ளளவை எட்டவில்லை. அதன் முழுக் கொள்ளளவு 70.5 டி.எம்.சி. அடி ஆக இருந்த போதிலும்; அதில் இதுவரை 57.365 டி.எம்.சி. அடி வரை தான் நீர் நிரம்பியுள்ளது. மிகவும் மோசமான நிலை ஏற்படும் என்று எடுத்துக் கொண்டாலும், இடுக்கி நீர்த் தேக்கம் 11 டி.எம்.சி. அடிக்கும் மேலான நீரை உள்வாங்கிக் கொள்ளும் என்பது தெரிய வருகிறது" என்று கருத்துத் தெரிவித்துள்ளது.

இது மட்டுமல்லாமல், கேரள உயர்நீதிமன்றம் முன்பு நடைபெற்ற ஒரு பொது நல வழக்கு விசாரணையில், முல்லைப் பெரியாறு அணைக்கு ஏதாவது நேரிட்டாலும், அந்த நீரினை இடுக்கி, குலமாவு, மற்றும் செருதோணி அணைகள் பெற்றுக் கொள்ளும் என்று கேரள அரசின் தலைமை வழக்குரைஞர் கேரள உயர்நீதிமன்றத்தின் முன்பு தெரிவித்து இருக்கிறார். இதிலிருந்து, முல்லைப் பெரியாறு அணை உடைந்து, அப்பகுதிகள் நீரில் மூழ்கி, 35 இலட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கேரள அரசின் வாதம் உண்மைக்கு மாறானது என கேரள அரசினாலேயே நிரூபிக்கப்பட்டுள்ளது.

இடுக்கி நீர்த் தேக்கத்தின் மூலம், 780 மெகாவாட் புனல் மின்சாரம் தயாரிக்க கேரள அரசு திட்டமிட்டது. ஆனால், அதற்குத் தேவையான நீர் கிடைக்கப் பெறாத காரணத்தால், திட்டமிட்டபடி புனல் மின்சாரம் தயாரிக்க இயலவில்லை. முல்லைப் பெரியாறு அணை இல்லை என்றால், அந்த நீர் முழுவதும் இடுக்கி நீர்த்தேக்கத்தைச் சென்றடையும். அதன் மூலம், கூடுதலான புனல் மின்சாரம் தயாரிக்க இயலும் என்பதால் தான், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற தவறான விஷமப் பிரச்சாரத்தைக் கேரள அரசு மேற்கொண்டுள்ளதோ என்ற ஐயப்பாடு தற்போது மேலோங்கி நிற்கிறது.

இது மட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடுக்கி நீர்த் தேக்கத்திற்கு உபரி நீர் செல்லும் போது, அதன் வேகம் சுமாராக வினாடிக்கு 3 அடி வீதம் தான் இருக்கும். முல்லைப் பெரியாறு அணையின்

நீர்மட்டம் 136 அடியாக இருக்கும் போது, அதன் நீர்ப்பரப்பு 4,678 ஏக்கராகும். 155 அடி வரை நீர் தேக்கப்பட்டால், அதன் நீர்ப்பரப்பு 8,591 ஏக்கராகும். நீண்ட காலமாக அணையில் 136 அடிக்கு மேல் நீர் தேக்கப்படாததால், அந்த நீர்ப்பரப்புப் பகுதிகள் கேரளாவைச் சேர்ந்த நில அபகரிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்குக் குத்தகைக்கு விடப்பட்ட பகுதிகளில் விடுதிகள் மற்றும் பிற கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகிறது. எனவே, முல்லைப் பெரியாறு அணையைச் செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று கூறுவதற்கு, இதுவும் ஒரு காரணமாக இருக்கும் என ஒரு சிலர் கருதுகின்றனர்.

உச்ச நீதிமன்றத்தில், தற்போது நடைபெற்று வரும் வழக்கில், 22.07.2008 அன்று சுற்றுச்சூழல் ஆய்வாளர் திரு. த்ருபஜோதி கோஷ் அவர்கள் தயாரித்த அறிக்கையை, கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த அறிக்கையில், 1979ஆம் ஆண்டு முதல் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், தற்காலிகமாக 136 அடியளவிற்குக் குறைக்கப்பட்டதன் காரணமாக, நீர்ப்பரப்பு குறைந்துவிட்டது என்றும்; 136 அடி முதல் 152 அடி வரை உள்ள நீர்ப்பரப்புப் பகுதியில், 21 ஆண்டுகளாக வீடுகள், பேருந்து நிலையம் ஆகியவை கட்டப்பட்டதாகவும்; விவசாயம், Eco Development போன்ற நடவடிக்கைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழக அரசுக்குக் குத்தகைக்கு விடப்பட்ட நீர்பிடிப்புப் பகுதிகளில், பல்வேறு வகையான ஆக்கிரமிப்புகள் உள்ளன என்பதை, கேரள அரசே ஏற்றுக் கொண்டுள்ளது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

முல்லைப் பெரியாறு அணை வாயிலாகத் தற்போது தமிழகம் பெற்று வரும் தண்ணீரை, தான் கட்டவுள்ள புதிய அணையின் வாயிலாகத் தரும் என்ற கூற்றை, அண்மைக்காலமாக, கேரள அரசு தெரிவித்து வருகிறது. இந்தக் கூற்றில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதையும்; இது ஒரு ஏமாற்று வேலை என்பதையும்; இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விழைகிறேன். உண்மை நிலை என்னவென்றால், உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரம் படைத்த குழுவிற்கு, அதாவது, Empowered Committee–க்கு சமர்ப்பித்துள்ள விரிவான திட்ட அறிக்கையில், புதிய அணையின் முழு நீர்மட்ட அளவு 136 அடி என்றும்; அணையிலிருந்து சுற்றுப்புறச்

சூழல் பயன்பாட்டிற்காக 1.1 டி.எம்.சி. அடி நீரை வெளியேற்றும் வகையில் மதகு அமைக்கப்படும் என்றும் கேரள அரசு தெரிவித்து உள்ளது. இதிலிருந்தே, முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் குறைக்கப்பட்டு விடும் என்பது தெளிவாகிறது. எனவே, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்ற வாதம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைத் தராமல் இருப்பதற்கான ஒரு நடவடிக்கையே தவிர வேறு ஒன்றும் இல்லை.

எனவே, முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்பதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. கேரள மக்களிடையே ஒரு வித அச்ச உணர்வு மற்றும் பீதி ஏற்படுத்தப்பட்டு வருவது துரதிருஷ்டவசமானது. முல்லைப் பெரியாறு அணை புது அணையைப் போன்று முழுவதும் பாதுகாப்பாக உள்ளதால், தன்னல அக்கறை கொண்டோரின் சதிச் செயலைப் புரிந்து கொண்டு, முல்லைப் பெரியாறு அணை புது அணையைப் போல் மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்பதையும்; எனவே, அது இந்தப் பகுதியில் உள்ள மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தலாக எள்ளளவும் இல்லை என்பதையும் கேரள மக்கள்உணர வேண்டும்.

இரு மாநிலங்களின் நீண்ட கால உறவு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. எனவே, இரு மாநிலங்களின் நலனைக் கருதி, எந்த ஒரு பிரிவினை சக்திகளுக்கும் இடம் தரமால் இருக்க வேண்டும் என தமிழ்நாடு மற்றும் கேரள மக்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வகையில், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான புள்ளி விவரங்களையும்; தமிழகத்தின் பக்கம் உள்ள நியாயத்தையும் எடுத்துரைத்து, அதன் மூலம், நமது உரிமையை நிலைநாட்ட முடியும் எனத் தமிழக அரசு உறுதியாக நம்புகிறது. எனவே, இந்தப் பிரச்சினையை, விஞ்ஞான ரீதியாகவும், தர்க்கபூர்வமான முறையிலும் கையாள, இந்த அரசுக்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். கேரள எல்லைக்குச் செல்ல முற்படுவது, மாநில எல்லையில் போராட்டங்களை மேற்கொள்வது போன்றவை நமது

வலுவான வாதங்களுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதையும்; நமக்கே இது பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதையும் உணர்ந்து; இது போன்ற போராட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், தமிழகம் மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே 1886 மற்றும், 1970இல் ஏற்பட்ட ஒப்பந்தங்களுக்கு மதிப்பளித்து நடக்கவும்; உச்சநீதிமன்றத்தின் 27.02.2006 தீர்ப்பை மதித்து 2006ஆம் ஆண்டு கேரள நீர்ப்பாசனத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவும்; இது குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் முன்பும்; உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட அதிகாரம் படைத்த குழுவின் முன்பும் நிலுவையில் இருக்கும் போது, அரசியல் ஆதாயத்திற்காக, அணை உடைந்துவிடும் என்ற பீதியைக் கேரள மக்களிடையே கிளப்பிவிட்டு, அதன் மூலம், புதிய அணைப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்றும்; கேரள அரசை அறிவுறுத்துமாறு 23.11.2011 நாளிட்ட எனது கடிதத்தின் மூலம் பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டிருந்தேன். கடிதம் எழுதி 20 நாட்களுக்கு மேலாகியும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மத்திய அரசு மவுனம் சாதிப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இதே போன்று, முல்லைப் பெரியாறு பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மத்தியத் தொழிற் பாதுகாப்புப் படையினரை அனுப்ப வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரைக் கேட்டிருந்தேன். அதற்கும் தன்னுடைய மவுனத்தையே பதிலாக அளித்துள்ளார் பாரதப் பிரதமர். முல்லைப் பெரியாறு பகுதிக்கு, உடனடியாக மத்தியத் தொழிற் பாதுகாப்புப் படையினரை அனுப்பி வைக்குமாறு பாரதப் பிரதமரை இந்த அவையின் வாயிலாக மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், கேரள அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையிலும்; பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மத்தியத் தொழிற் பாதுகாப்புப் படைகளை அனுப்ப வலியுறுத்தியும்; தமிழகத்திற்கு உள்ள உரிமையை நிலைநாட்டும் வகையிலுமான தீர்மானத்தை இந்த மாமன்றத்தின் முன்பு வைத்துள்ளோம். தமிழ்நாடு அரசின் சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக

நிறைவேற்றித் தருமாறு இந்த மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முடிவிற்கு விடப்பட்டது.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 21.12.2011 அன்று "Connect 2011" எனப்படும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பான, 11ஆவது ஆண்டு மாநாடு மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்து ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

நாட்டிலேயே தகவல் தொழில்நுட்பத் திறன்மிக்க மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது

உங்கள் அனைவருக்கும் மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக, மிகச் சிறப்பாக ஊக்கமளிக்கின்ற வகையில் உரையாற்றியதற்காக திரு.எஸ். இராமதுரை அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு, பல துறைகளில் உலகளாவிய தலைமைப் பண்பு வகிப்பதற்குரிய அனைத்து வளங்களையும் பெற்றுள்ளது என்றும், சென்னை மாநகரம் உலகளாவிய மாநகரமாவதற்குத் தேவைப்படுகிற அனைத்து இயற்பண்புகளையும் பெற்றுள்ளது என்றும் நம்மிடையே மிகத்

தெளிவாக விளக்கியுள்ளார். இந்த இலக்குகளை அடைவதற்காகப் பின்பற்றுவதற்குரிய வழியையும் அவர் நமக்குத் தெரிவித்துள்ளார். நாம் அவருடைய சிறப்பான கருத்துகள் அனைத்தையும் செயல்படுத்த இயலுகின்ற வகையில் அவருடைய உரையின் நகல் ஒன்றை நமக்கு அனுப்பி வைக்குமாறு நான் அவரை கேட்டுக் கொள்கிறேன்.

2001ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'கனெக்ட்டின்' முதற்பதிப்பை நான் தொடங்கி வைத்தேன் என்பதை நினைவு கூறுகிறேன். இந்த நிகழ்ச்சியில் 2002 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் நான் கலந்து கொண்டேன். இது இந்த நிகழ்ச்சிக்கும், தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பத் தொழில் மேம்பாட்டிற்கும் என்னுடைய அரசு அளிக்கிற முக்கியத்துவத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது.

தமிழ்நாடு அரசும், இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பும் ஒன்றாக இணைந்து ஆண்டுதோறும் நடத்துகிற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 'கனெக்ட்', தமிழ்நாடு அரசு மற்றும் இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பின் முக்கியமான நிகழ்வுகளுள் ஒன்றாகும். இது உலகம் முழுவதிலும் உள்ளவர்கள் கலந்து கொள்ளும் வகையில் ஈர்த்து வருகிற ஆண்டு மாநாடு—தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் வெளிப்பாட்டிற்கான ஒரு முக்கியமான நிகழ்வாகும்.

'கனெக்ட் 2011'—ன் மூலக் கருத்து, "புதுமையிலும், தொழில் முனைவோர் தோன்றுதலிலும்—தமிழகம் வழிகாட்டுகிறது" என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தற்போதைய நிலையில் மிகவும் பொருத்தமாக உள்ள இந்த மூலக் கருத்தைத் தெரிவு செய்ததற்காக இதன் அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன்.

தொழில்நுட்ப ரீதியான புரட்சிகள் சில சமயங்களில் நாடுகளுக்கு எதிர்பாராத வாய்ப்புகளை ஏற்படுத்துவதுண்டு. பொருளாதார வளர்ச்சியில் வளர்ந்து வருகிற நாடுகளிடையே மெதுவாக வளர்ந்துவரும் நாடாகிய இந்தியா இந்த எதிர்பாராத வாய்ப்பைத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியாலும், மென்பொருள் தயாரிப்பதற்கு உகந்த இடமாகத் திகழ்வதாலும் இத்தகையதோர் வாய்ப்பைப் பெற்றுள்ளது. மென்பொருள் துறையில் இந்தியாவிற்குக் கிடைத்துள்ள வெற்றி, வளர்ந்து வருகிற நாடுகள் முன்மாதிரியாக

எடுத்துக் கொள்ளுமா அல்லது வளர்ச்சியடைந்த நாடுகளில் மென்பொருள் தொழிலுக்கு ஒரு சவாலாக அமையுமா என்ற ஊகத்திற்கு வழி வகுத்துள்ளது.

இன்று, தகவல் தொழில்நுட்பத்துறையில் இந்தியாவின் மேம்பட்ட செயல்திறனை உலகம் முழுவதும் பாராட்டுகிறது. காலனி ஆதிக்கத்தால் ஏற்பட்ட நாட்டின் வரலாற்றுக் குறைபாடுகள் மற்றும் இயலாமைகளை வெல்வதற்கு தகவல் தொழில்நுட்பம் வழிவகை செய்துள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளோடு சேர்வதற்குத் தகவல் தொழில்நுட்பம் வாய்ப்பளித்துள்ளது. “வசதி படைத்தவர்கள் மற்றும் வசதியற்றவர்கள்” என்ற நிலையில் உள்ள இவ்வுலகில் வடக்கு–தெற்கு வேறுபாட்டை நிரப்புவதற்கு இது மிகப் பெரிய சமன்பாட்டாளராகக் கருதப்படுகிறது.

21ஆம் நூற்றாண்டு அறிவுசார் நூற்றாண்டாக இருக்கும் என்று பரவலாகக் கூறப்படுகிறது. புகழ்பெற்ற மேலாண்மை குருவான பீட்டர் எப்ட்ரக்கர், “இன்று அறிவு ஆற்றலைப் பெற்றுள்ளது. அறிவு, வாய்ப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான வழியைக் கட்டுப்படுத்துகிறது” என்று குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சியடைந்த உலகம் முழுவதிலும் நாம் மனித ஆற்றலிலிருந்து அறிவாற்றலுக்கு மாறியுள்ளோம். நாம் நம் உடல் தசைப் பயன்பாட்டிலிருந்து மூளையின் பயன்பாட்டிற்கு மாறியுள்ளோம். அறிவைப் பயன்படுத்தும்போது சக்தியாக மாறுகிறது. அறிவுசார் மூலதனம் என்பது உற்பத்தியின் அனைத்துக் கூறுகளிலும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும். நாம் இதைக் கூறும்போது நாம் எந்த அர்த்தத்தில் சொல்கிறோம் ? தற்போது உலகில் ஒரு நாட்டின் இடத்தை உண்மையில் தீர்மானிப்பது படைபலமோ அல்லது பொருளாதார வலிமையோ அல்ல. அதை அறிவாற்றல் தான் தீர்மானிக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது, என்பதையே நான் நம்புகிறேன். அறிவாற்றல் ஒரு நாட்டின் பொருளாதார நிலையில் பிரதிபலிக்க வேண்டும். தகவல் தொழில்நுட்பம் என்பது மனிதனின் அறிவாற்றலுக்குச் சமமான ஒன்று. இதுதான் இந்தியாவை முதல் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. உண்மையில் **21**ஆம் நூற்றாண்டு நமதே.

நான் என்னுடைய உரையைத் தொடர்வதற்கு முன்னர் இந்தியாவை, உலக வரைபடத்தில் உயர்ந்த இடத்தில் கொண்டு

வருவதற்கும் உலகின் அறிவாற்றல் மிக்க நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவதற்கும் பணியாற்றிய நம்முடைய தகவல் தொழில்நுட்பத் தொழிலுக்கும், தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரே நாளில் எய்திய சாதனை அல்ல. தனி நபர்கள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பத் தொழில் நிறுவனங்கள் ஆகியவை பல்லாண்டுகளாக மேற்கொண்ட முதலீடு, முயற்சி மற்றும் கடினமான உழைப்பு ஆகியவற்றின் விளைவேயாகும்.

இந்தியா பொருளாதார சக்தியாகக் குறிப்பாக தகவல் தொழில்நுட்பச் சக்தியாக வளர்ந்து வருவதை உலகில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவரும் கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் கட்டுரைகள் ஆகிய அனைத்திலும் இது குறித்து பேசப்படுகிறது.

இந்தியப் பொருளாதார வளர்ச்சி என்பது பன்முகங்களைக் கொண்டது. இந்தியாவால் முடியுமா என்ற ஐயப்பாட்டைத் தகவல் தொழில்நுட்பம் தகர்த்துள்ளது. உலகத்தரமுள்ள பொருட்களை உருவாக்குதலிலும், உலக முன்னணி நிறுவனங்களுடன் சரி சமமாக நின்று போட்டியிட இயலும் என்ற பெயரே இன்று உலக அளவில் உள்ள முதலீட்டாளர்களின் மனதில் இந்தியா இடம் பெற்றுள்ளது.

இந்தியாவில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உலக அளவில் போட்டியிடத்தக்க அளவிற்குச் சாதனை படைத்துள்ளன. தகவல் தொழல்நுட்ப வளர்ச்சியின் காரணமாக நமது ஏற்றுமதிப் பொருள்களின் பங்கு அதிகரித்துள்ளது. இந்தியா பொருளாதார வகையில், உலகத்தோடு மேலும் அதிக அளவில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்தியப் பொருளாதாரத்தில் மிகவும் ஆற்றல் வாய்ந்த துறையாகச் சேவைத்துறை உள்ளது. இத்துறை பிற துறைகளைவிட மிகவும் விரைவான வளர்ச்சியடையும் துறையாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இந்தியப் பொருளாதாரத்திற்கு ஏற்பளிக்கக்கூடிய பல்வேறு பருவ நிலைகளால், பாதிக்கப்படாமல் உள்ளது. இத்தகைய நிலை, நமது வணிக வளர்ச்சிக்கு மிக முக்கியமான பங்காற்றி வருகிறது. ஏ.டி.கார்னி அவர்களின் உலகளாவிய சேவை இடங்கள் அட்டவணை 2011–இன் படி 50 நாடுகளில் 7.01 புள்ளிகளுடன் இந்தியா முதல் இடத்தை வகிக்கிறது. இதனைத் தொடர்ந்து 6.49 புள்ளிகளுடன் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா “நிதி வகையில் ஈர்க்கக்கூடிய” தன்மையிலும், மக்களின் திறமைகள் மற்றும் எளிதாக கிடைக்கக் கூடிய தன்மை ஆகிய இரண்டு வகையிலும் இந்தியா தலை சிறந்து விளங்குவதாக ஏ.டி. கார்னி தெரிவித்துள்ளார்.

ஆசியா–பசிபிக் நாடுகளிலேயே தகவல் தொழில்நுட்பப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில், இந்தியா வேகமாக வளர்ந்து வருவதாகவும், மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப சந்தையாக விளங்குவதாகவும் ஐடிசி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனா தயாரிப்புத் துறையில் சிறந்து விளங்கினாலும், இந்தியா தகவல் தொழில்நுட்பத் துறையில் சீனாவை முந்திச் செல்கிறது. மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களில் வெளியாட்களை ஈடுபடுத்துவதில் இந்தியாவுக்குப் போட்டியாகச் சீனா வருவதற்கு பல வருடங்கள் ஆகும் என்று மெக்கன்சியின் ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது. தகவல் தொழில்நுட்பத்தின் மிகச்சிறந்த செயல்பாட்டினால் உலக அரங்கில் நமக்கு மிகப்பெரிய பெருமை சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தியத் தகவல் தொழில்நுட்பத்தினால் உலக வரைபடத்தில் இந்தியாவுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. தகவல்

தொழில்நுட்பத் தொழிலின் வெற்றியால் இந்தியா தற்போது ஒரு சக்தி வாய்ந்த நாடாக உருவெடுத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, இந்தியத் தகவல் தொழில்நுட்பமும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் உள்ளது. தகவல் தொழில்நுட்பத் தொழில் மட்டும் இந்தியாவை உலக வரைபடத்தில் ஒரு அறிவுசார்ந்த பொருளாதாரமாகவும், வெளியாட்களைக் கொண்டு பணியாற்றும் முக்கிய மையமாகவும் இடம்பெறச் செய்துள்ளது.

வணிகச் செயல்முறைகளில், பணிகளை வெளியாட்களிடம் ஒப்படைத்து வேலை வாங்குவதில், ஒரு மிகப்பெரிய பகுதி அளவு சார்ந்த கொள்கையிலிருந்து மதிப்பு சார்ந்த கொள்கைக்கு மாறி தகவல் விவரங்கள் அளித்தல், சட்ட ஆலோசனைக்கு உதவுதல் போன்ற தளங்களுக்கு விரிவுபடுத்திக் கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயல்முறைகளுக்கு வெளியாட்களைப் பணியமர்த்துதல் மூலமாக 2011ஆம் நிதியாண்டில் இந்தியாவுக்கு 88.1 பில்லியன் அமெரிக்க டாலர் வருமானமாகக் கிட்டியுள்ளது. அடுத்த பத்து ஆண்டுக்கான, கொள்கையான பல்வேறு தளங்களுக்கு விரிவுபடுத்துதல், மாற்றிக் கொள்ளுதல், புதிதாகக் கண்டுபிடித்தல் மற்றும் சேர்த்துக் கொள்ளுதல் ஆகிய கொள்கைகளோடு முன்னேறிக் கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையால் 2.5 மில்லியன் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மொத்த அளவில் 1998இல் 4 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்த தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயல்முறைகளுக்கு வெளியாட்களைப் பணியமர்த்துதல் துறை 2011இல் 26 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

நாஸ்காம்க்—அமைப்புக்காக மெக்கென்சி தயாரித்து மே மாதம் 2009இல் வெளியிட்ட “பார்வை 2020 : வணிகத்தை மாற்று, இந்தியாவை மாற்று” என்ற அறிக்கையில், 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியத் தொழில்துறைகளின் ஏற்றுமதியால் 175 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வருவாய் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு வணிகத்தின் மூலம் 50 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் கிடைக்கும். பிரேசில், ரஷ்யா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற புதிய நாடுகளும் பெரிய

அளவில் தங்கள் வணிகச் செயல்முறைகளுக்கு வெளியாட்களைத் தெரிவு செய்ய விரும்புவதால், மேற்கூறிய இரண்டு வருவாயையும் சேர்த்தால், சுமார் **225** பில்லியன் அமெரிக்க டாலர் வருவாயாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பமும் வணிகச் செயல்முறைகளில் வெளியாட்களைப் பணியமர்த்துதல் முறையும் பெரும் பங்கு வகிக்கிறது. இத்துறை இந்தியப் பொருளாதாரத்தின் சக்தியாக இருப்பதோடு அல்லாமல், பல்வேறு சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான வேலைவாய்ப்பையும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும் மக்களின் வாழ்க்கைக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பெரும் பங்கு ஆற்றி வருகிறது. மொத்தமாகச் சொல்லவேண்டுமானால் இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறை இந்தியப் பொருளாதாரத்தின் ஒளிவிளக்காக இருந்து வளர்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் வழிவகுக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த இடத்தை எட்டியுள்ளது. சென்னை ‘ஒரு காபி அருந்தும் பழைமையான நகரம்’, என்ற கருத்து மாறி இன்று உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுடன் இந்தியாவின் “சான் ஜோஸ்” என்று அழைக்கப்படும் வகையில் நவீனமயமாக மாறியுள்ளது.

சென்னை, ‘ஒரு பழைமை வாய்ந்த நகரம்’, என்ற கருத்திலிருந்து இன்று தொலைதூரம் வந்துவிட்டது. ‘இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் தலைநகரம்’, என்று கூறுகின்ற வகையில் வாரம் ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டு வருகிறது. மிகப் பெரிய நிறுவனங்கள் தங்களுடைய கிளைகளைச் சென்னையில் திறந்துள்ளன. மற்ற நிறுவனங்களும் சென்னையில் வணிகத்தைத் தொடங்க விரும்புகின்றன.

நவீன தொழில்நுட்பத் தேவைகளை எதிர்கொள்வதற்குரிய பெருமளவில் மனிதவள ஆற்றல் கொண்ட தலைநகரமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. இம்மாநிலத்தில் ஆண்டுதோறும் ஏறக்குறைய **1,92,000** பொறியியல் பட்டதாரிகளும், அதற்கு நிகராகப் பலதொழில்நுட்ப மாணவர்களும் கல்லூரியிலிருந்து வெளிவருகின்றனர். அவர்கள் அறிவுசார் தொழிற்சாலைகள் மற்றும் பணிகளை அமைப்பதற்காக மிகப் பெரியளவில் வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது. குறிப்பாக, **500** பொறியியல்

கல்லூரிகளை உள்ளடக்கிய, உலகின் மிகப் பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் உருவான பின்னர், நாட்டிலேயே “தொழில்நுட்பத் திறன்மிக்க மாநிலம்” ஆக தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியாவின் பொறியாளர்களில் 25 விழுக்காடு பொறியாளர்களையும், உலக அளவிலான பொறியியல் பட்டதாரிகளில் 10 சதவீதம் பொறியாளர்களையும் அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது என்பதை நான் அறிவேன். அமைதியான தொழிலக உறவுகளுடனும், குறைந்த ஊதியத்துடனும் பயிற்சி பெற்ற மனிதவள ஆற்றல் அதிக எண்ணிக்கையில் உள்ளதால் தமிழ்நாட்டை மிகவும் விரும்பும் முதலீட்டு இலக்காக உருவாக்கியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்துறை, தமிழ்நாட்டை நவீனப் பொருளாதாரமாக மாற்றியுள்ளது. இது தெற்கு ஆசியா மட்டுமின்றி, உலகுக்கு, இந்தியாவின் கிழக்கு நுழைவாயிலாக உருவாக்கியுள்ளது. ITES பிரிவில், சில குறிப்பிட்டவற்றில் வங்கி, நிதிநிறுவன சேவைகள் மற்றும் காப்பீட்டுத்துறை, சுகாதாரத் திட்ட மேலாண்மை, கணினி வழி வடிவமைப்பு (CAD) கணினிவழிப் பொறியியல் ஆகியவற்றில் உலகுக்கு வழிகாட்டியாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

2010–2011ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் உள்ள STPI பிரிவுகளில் இருந்து மென்பொருள் ஏற்றுமதி ரூ.42,100 கோடியை எட்டியுள்ளது. தகவல் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலப் பிரிவுகளில் உள்ள ஏற்றுமதியையும், நாம் சேர்த்துக் கணக்கிடுவோமேயானால், ரூ.50,000 கோடிக்கும் அதிகமாக மதிப்பிடப்பட வேண்டியிருக்கும். நம் நாட்டில் சில காலத்திற்கு முன்னர் தகவல் தொழில்நுட்பப் புரட்சி தோன்றியிருந்தாலும் அது சென்னையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயல்முறைகளில் வெளியாட்களைப் பணியமர்த்தும் முறையால் மேலும் ஒரு புரட்சியை உருவாக்கியதுடன், இந்தியாவின் ஊரக வாழ்வாதாரத்தைத் தன்னிறைவாக்கியுள்ளது. சென்னை மட்டுமின்றி, தமிழ்நாட்டிலுள்ள ஏனைய இரண்டாம் நிலை நகரங்களிலும், ஏற்றுமதித் திறன் மேம்பட்டுள்ளது அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மென்பொருள் ஏற்றுமதியில் மதிப்புக்கூட்டப்படும் பொருண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மென்பொருள் ஏற்றுமதியில் 49 விழுக்காடு அமைப்பு முறை மற்றும் பயன்பாட்டு மென்பொருளும், 12 விழுக்காடு வணிகச் செயல்முறைகளில் வெளியாட்களைப் பணியமர்த்தும் முறையும் உள்ளது.

இது, தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மதிப்புக் கூட்டப்பட்டுள்ள நிலையையும் முதிர்ச்சியையும் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. இது தமிழ்நாட்டின் சகாப்தமாகும். தகவல் தொழில்நுட்ப முதலீட்டாளர்களின் விருப்ப இலக்காகத் தமிழ்நாடு மற்றும் சென்னை உருவாகியுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் அயல்நாட்டுத் துணை நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் 210 உட்பட, மென்பொருள் மற்றும் ITES ஏற்றுமதியாளர்கள் 1,800–க்கும் மேற்பட்டோர் உள்ளனர். உலக வங்கியின் துணை அலுவலகம், வாஷிங்டன்னுக்கு அடுத்தபடியாக வெளியே சென்னையில் மட்டுமே உள்ளது. இவை நீங்கலாக ஸ்டேன்சார்ட், சிட்டி பேங்க், ஏ.பி.என்.அம்ரோ வங்கி முதலியன போன்ற பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான மையமாகச் சென்னை விளங்குகிறது. இவை அனைத்தும், ஆசிய பசிபிக் மண்டலங்களுக்கான வணிகத் தொழிலைச் சென்னையில் பெருமளவில் மேற்கொள்கின்றன.

தகவல் தொழில்நுட்பத்தின் முதுகெலும்பாகக் கருதப்படும் நம்பத்தகுந்த தகவல் தொடர்பு கட்டமைப்பினைத் தமிழ்நாடு அளிக்கிறது. இரண்டு நீர்மூழ்கிக் கம்பி வடங்களுக்கான இருப்பிடமாகச் சென்னை திகழ்கிறது. இது, உலகின் இதர பகுதிகளுடன் சென்னையை இணைக்கிறது. தற்போது எந்த இந்திய மாநகரத்திடமும் இல்லாத அளவிற்கு, தகவல் தொடர்புத் துறையில் கணினி அலைவரிசையின் மொத்த அளவான ஒரு நொடிக்கு 13.52 டெராபைட்ஸ் கொண்டிருக்கிறது.

மின் தயார்நிலை மற்றும் மின் ஆளுமை ஆகியவற்றில் தமிழ்நாடு "தலைமை" மாநிலமாகத் திகழ்கிறது. பயனுள்ள நிருவாகத்தில் செயல்பாடுகள் ஊக்குவிப்பதற்கும், மனிதவளத்தை மேம்படுத்துவதற்கும் பயனுள்ள கருவியாக இன்று தகவல் தொழில்நுட்பம் அறியப்படுகிறது. இந்திய மனங்களில், சுண்டெலிக்கு ஒரு சிறப்பு இடம் உள்ளது. தடைகள் அனைத்தையும்

தகர்த்தெறியும் விநாயகப் பெருமானின் வாகனமாக இது கருதப்படுகிறது. இன்றும், நிருவாக அரங்கில் அதிகரித்து வருகின்ற கல்வியறிவு பெற்ற ஜனாடாவின் (Janata) கைகளில், அதன் பென்டியம், செறிவூட்டப்பட்ட அவதாரமாக இருந்து வருகிறது. டிஜிட்டல் பொருளாதார சகாப்தமானது, சிறந்த நிருவாகத்திற்கான கோட்பாட்டினை வகுப்பதால், பெரிய அளவில் முக்கியத்துவம் அளிப்பதற்கு வகை செய்கிறது.

இன்று தமிழ்நாடு, முதலீட்டாளர்கள் விரும்பி முதலீடு செய்கிற இடமாக உருவெடுத்துள்ளது. பல்வேறு தனிப்பட்ட ஆய்வுகள், மாநிலத்தின் முதலீட்டு நிலையினை உயர்த்தி மதிப்பிட்டுள்ளது. எனவே, இந்தியாவில் பெருமளவில் அன்னிய முதலீடுகள் ஈர்ப்பதில் முதல் மூன்று இடங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருந்து வருகிறது. எனவே, முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டின் உடனடி மற்றும் நடுத்தர கால வாய்ப்புகளிலும், நீண்ட கால, எதிர்கால வளவாய்ப்புகளிலும் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர் என்பதை அறிந்து உற்சாகமேற்படுகிறது. இந்த நம்பிக்கைச் சூழலை நிலைப்படுத்துவதற்கு மாநில அரசு முயற்சிகள் எடுக்கும். இத்தருணத்தில், தமிழ்நாடு மீது நம்பிக்கை வைக்குமாறு நான் அழைப்பு விடுக்கிறேன். சிறந்த நிருவாகத்தில் மக்களின் நம்பிக்கையையும், சமுதாயத்தை நேர்மையுடன் நியாயமான வகையில் மேம்படுத்துவதற்கும் தமிழக அரசு உறுதிபூண்டிருக்கிறது.

“என்ன செய்து முடித்தீர்கள் என்பதை வைத்து வெற்றி தீர்மானிக்கப்படுவதில்லை, ஆனால், நீங்கள் எதிர்கொண்ட எதிர்ப்புகளாலும், சமாளிக்க முடியாத அளவில் திணறடித்த நிகழ்வுகளையும் எதிர்த்து நீங்கள் மேற்கொண்ட போராட்டத்தைக் கொண்டும், அது தீர்மானிக்கப்படுகிறது” என்று ஒரிசன் ஸ்வெட் மார்டன் கூறியுள்ளார். தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிபெற்ற ஒரு முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என்னுடைய குறிக்கோள் அல்லது கனவாகும். அதனைச் செயல்படுத்துகின்ற போது கனவுகள் உண்மையாகும். முறையாகத் திட்டமிடப்பட்டால் அதுவே பாதி இலக்கை அடைந்தது போல் ஆகும். கனவினை நிகழ்த்திக் காட்டுவது தலைமையின் பண்பாகும். சாத்தியமற்றவைக்கும் சாத்தியமானவைக்கும் இடையே உள்ள வேறுபாடு மனிதன் எடுக்கும் முடிவில் அமைந்திருக்கிறது” என டாமி லாசொர்டா கூறியுள்ளார்.

இந்தக் கனவினை எய்துவதற்கு, பல புதிய மற்றும் நவீன அம்சங்களைத் தோற்றுவிக்கக் கூடிய புதிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் பணிகள் குறித்த கொள்கையைக் கொண்டுவருவதற்கு என்னுடைய அரசு முடிவெடுத்துள்ளது. இது, தமிழ்நாட்டை முதல் இடத்திற்குக் கொண்டு செல்லும். சுகாதாரமான உற்பத்திச் சூழலுக்கு ஏற்ற வகையில் பணியாற்றுவதற்கும் முதலீட்டாளருக்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்குகின்ற வகையில் என்னுடைய அரசு ஒரு தொழில் கொள்கையை உருவாக்குவதற்கும் உறுதி எடுத்துள்ளது. மிகுதியான வளங்களையும் வாய்ப்புகளையும் பெருமளவில் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாட்டில் முதலீடு செய்திட வருமாறு நான் அழைப்பு விடுக்கிறேன். இந்தியாவில் புதிய வளர்ச்சிமிக்க மாநிலமாக, வலுவான மற்றும் துடிப்பான தமிழ்நாட்டை உருவாக்குவது என்ற எனது அரசின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டில் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன. இந்த அரசு ஆதரவாகவும், வகை செய்பவராகவும் செயல்படுவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. நாங்கள் முதலீட்டாளர்களிடம் சரியான மனப்பான்மையோடு இருக்கும் மாநிலமாக இருப்போம். தமிழ்நாடு என்பது வழங்குகின்ற மாநிலமாக இருக்கிறது. பழைய மற்றும் புதிய பொருளாதாரத்தில் வளர்ச்சியுடன் உற்பத்தியிலும், செல்வத்தைப் பெருக்குவதிலும் பங்கேற்கக்கூடிய பங்கேற்பாளர்கள் எங்களுக்குத் தேவைப்படுகின்றனர்.

2011ஆம் ஆண்டு 'கனெக்ட்' கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.

* * *

*கடலூர் மாவட்டத்தில் "தானே" புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 04.01.2012 அன்று தமது திருக்கரங்களால் நிவாரண உதவிகளை வழங்கி அங்கு திரண்டிருந்த மக்களிடையே ஆற்றிய உரை.*

எதற்கும் கவலைப்பட வேண்டாம் உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய உங்கள் அரசு இருக்கிறது

"**வ**ணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புகளே, அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘தானே’ புயலால் இம்மாவட்டத்து மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து உடனடியாக மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் செய்வதற்கு அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டிருக்கிறோம். மக்களுக்குத் தேவையான குடிநீர், மின்சார வசதி, வீடுகள், சாலை வசதி அனைத்தையும் செய்து கொடுக்க **850** கோடி ரூபாய் அளவுக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆகவே, மக்கள் பயிரை இழந்திருந்தாலும் அல்லது தங்கள் படகுகளை இழந்திருந்தாலும், குடியிருந்த வீடுகளை இழந்திருந்தாலும், எதற்கும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கும், உங்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் இந்த அரசு இருக்கிறது. நீங்கள் தேர்ந்தெடுத்த அரசு இருக்கிறது. இது உங்களுடைய அரசு. ஆகவே, உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும்.

நீங்கள் தைரியமாக இருங்கள் என்று உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கெல்லாம் விரைவிலேயே மிக ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அனைவருக்கும் எனது புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

மேதகு தமிழக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள் 04.02.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய பதிலுரை.*

மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் தோய்வின்றி ஆற்றுவோம். மக்கள் நலத்திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவோம்!!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்று வரை நடைபெற்ற விவாதத்திற்கு எனது பதிலை அளிக்க விழைகிறேன்.

ஆளுநர் உரையின் மீதான இந்த விவாதத்தில் 37 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப் பெற்றது சட்டமன்றம். மக்களின் ஆசைகள் மற்றும் விருப்பங்களை சட்டமன்றத்தில் எடுத்துக் கூறுபவர்களாக இருப்பவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள். மக்களின் தேவைகள் என்ன? நாட்டின் தேவைகள் என்ன? நாட்டின் வளர்ச்சி என்பது எவ்வாறு

அமையப்பெற வேண்டும் ? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இவைகளையெல்லாம் எவ்வாறு நிறைவேற்றி வருகிறது ? என்பதை எல்லாம் ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது தான் சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசின் திட்டங்களை சாதனைகளைப் பாராட்டி வரவேற்றுப் பேசி இருக்கிறார்கள். சிலர் அரசுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்கள். சிலர் இதை குறை கூறுவதற்கு ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு பேசி இருக்கிறார்கள். சில பெரிய மனிதர்கள் அவைக்கு வந்து பேசும் வாய்ப்பு இருந்தும், அதை பயன்படுத்திக் கொள்ளாமல், அவைக்கு வெளியிலே இருந்து, ஆளுநர் உரையில் தெரிவித்த கருத்துகளுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் சில விமர்சனங்களைச் செய்து இருக்கிறார்கள். சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இடித்துரைத்து, முரட்டுச் சொற்களைப் பயன்படுத்திப் பேசி இருக்கிறார்கள்.

“இனிய சொற்கள் இருக்கக் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது பழம் இருக்கக் காயை உண்பது போல்” என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப வாதங்களை எடுத்து வைத்திருக்கலாம். கருத்துக்குக் கருத்து, வாதத்திற்கு வாதம், புள்ளி விவரத்திற்குப் புள்ளி விவரம், சொல்லுக்குச் சொல் என்ற அடிப்படையில் அவர்கள் உரையாற்றி இருப்பார்களேயானால் உள்ளபடியே அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். அப்படிச் செய்யாமல் உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் சில உறுப்பினர்கள் பேசி இருப்பது உண்மையிலேயே வேதனை அளிக்கும் செயல் என்பதை மட்டும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் கடமைகளை திறம்பட நிறைவேற்றுபவர்கள் யார் ? மக்களின் எண்ணங்களை வடிவமைக்கக்கூடிய அரசு எது ? மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய ஆட்சி எது ? என்பதை எல்லாம் ஆராய்ந்து, அதன் அடிப்படையில் ஒரு கட்சியை மக்கள் ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கின்றனர். எனவேதான் மக்கள் யார் தமக்கு நன்மை செய்வார்கள் என்று எண்ணுகிறார்களோ, அவர்களையே மக்கள் மன்றத்திலும், ஆட்சி மன்றத்திலும் சேவை செய்ய பணிக்கின்றனர். சட்டமன்றத்தின் பின்னாலும்,

ஜனநாயகத்தின் பின்னாலும், இருப்பவர்கள் மக்கள்தான். வாக்குச் சாவடியில் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு முன்னர் பல முறை சிந்தித்து, அந்தச் சிந்தனையின் பயனாகத்தான் வாக்களிக்கின்றனர்.

நான் இந்தச் சட்டமன்றத்திலே கடந்த ஆண்டு தெரிவித்ததைப் போல, முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் மக்கள் பட்ட வேதனைகள் சொல்லி மாளாது. சட்டம் ஒழுங்கு சீரழிவு, விண்ணை முட்டும் விலைவாசி, மணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனை என்று எண்ணற்ற கொள்ளைகள்; ரேஷன் பொருட்கள் கடத்தல்; நில அபகரிப்பு என பல்வேறு பிரச்சினைகள் மக்களை வாட்டின. பல்வேறு துறைகளும் ஒரு குடும்பத்தின் பிடியிலே சிக்கித் தவித்து, எவரும் சுதந்திரமாக எந்த ஒரு தொழிலையும் செய்ய இயலாத நிலை இருந்தது.

இவற்றையெல்லாம் சிந்தித்து, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தனி நபர் வருவாய்ப் பெருக்கத்திற்கு, இல்லாதோர் எவரும் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலை ஏற்படுவதற்கு, தமிழக மக்கள் எனது தலைமையை நம்பி வாக்களித்தார்கள். அவ்வாறு மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் வகையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும்; பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும்; உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களையும்; தனி நபர் வருவாய்ப் பெருக்கத் திட்டங்களையும்; சமூக மூலதனத்தைப் பெருக்கும் திட்டங்களையும்; மனித வள மேம்பாட்டுத் திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழக மக்கள் இவ்வாறு ஏற்றம் பெறுவதைப் பொறுக்க முடியாமல், தங்களுக்கு வாக்களிக்காத மக்களை சிலர் நித்தமும் நிந்தித்தே வருகிறார்கள். வாக்களித்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவ்வாறு தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு ஆற்றக்கூடிய முதற்கடமை சட்டமன்றக் கூட்டங்களிலே கலந்து கொண்டு விவாதங்களில் பங்கேற்று; ஆட்சியாளர்களின் கருத்துகளுக்கு மாற்றுக் கருத்துகள் இருப்பின், அந்த மாற்றுக் கருத்துகளை எடுத்துக்கூறி; மக்களுக்கான திட்டங்களை இன்னும் செம்மையாகச் செயல்படுத்துவது எப்படி என்பதை எடுத்துக் கூறுவதே ஆகும். ஆனால், சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும், கூட்ட நடவடிக்கைகளில் கலந்து

கொள்ளாத ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர் "இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற தோல்வி எங்களுக்கல்ல உங்களுக்கு! நீங்கள் தேடிக் கொண்ட தோல்வி! நீங்களே வரவழைத்துக்கொண்ட தோல்வி! தோற்றது கழகமல்ல தோற்றது வாக்காளர்களாகிய நீங்கள்" என்று தமிழக மக்களையும், தமிழக வாக்காளர்களையும், இந்த சட்டமன்றத்தையும் கொச்சைப்படுத்திப் பேசியுள்ளார். இது ஜனநாயக அமைப்பையும், இந்திய அரசமைப்புச் சட்டத்தையும் கொச்சைப்படுத்தும் பேச்சாகும். "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்ற பேரறிஞர் அண்ணாவின் பிறந்த ஊரான காஞ்சிபுரத்திலே, மக்களைக் கொச்சைப்படுத்தி இவ்வாறு பேசியுள்ளது அண்ணாவின் மீது எத்தகைய மரியாதையை இவர் வைத்துள்ளார் என்பதையே காண்பிக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு வருகிற வழியெல்லாம் முழக்கங்கள் இருந்தனவாம்! அலங்காரங்கள் இருந்தனவாம்! இப்படித்தான் அந்தக் கூட்டத்திலே அந்தக் கட்சியின் தலைவர் கூறியுள்ளார். அவர் ஆட்சி அதிகாரத்திலே இருந்தபோது மக்கள் நலனை சிந்திக்க எங்கே நேரம் இருந்தது? நாளும் ஒரு பாராட்டு விழா! பொழுதும் ஒரு நன்றி அறிவிப்பு விழா! இவ்வாறுதான் அவர் மக்கள் தொண்டாற்றினார். யார் இவரிடம் நன்றி பாராட்டி நன்றிக் கூட்டங்கள் நடத்தினார்கள்? யாருக்கெல்லாம் இவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி சலுகைகளை வழங்கினாரோ; யாரெல்லாம் இவரது சலுகைகளை எதிர்பார்த்து இருந்தார்களோ; அவர்கள்தான் இவருக்குப் பாராட்டு விழாவும் நன்றி விழாவும் நடத்தினார்கள்.

சமீபத்தில், வீட்டுவசதி வாரிய வாடகை வீட்டை ஒதுக்கியதற்கு அப்போது நன்றி கூறிவிட்டு, தன்னைக் குற்றம் சாட்டி இப்போது பேசுவது நன்றி மறந்த செயல் என்று ஒரு அரசியல் பிரமுகரைப் பற்றி இவர் குறை கூறியுள்ளார்.

அதற்குப் பதில் அளித்துள்ள அந்த அரசியல் பிரமுகர் இவர் சலுகைகளை எவ்வாறு வழங்கினார் என்பதை நாடே அறியும் வண்ணம் எடுத்துக் கூறியுள்ளார். வாடகைக்கு வழங்கிய வீட்டிலிருந்து தன்னை வெளியேற்றி வீதியில் நிறுத்த முனைந்ததுதான் அந்தத் தலைவரின் பெருந்தன்மை என்று கூறியுள்ளார். மேலும் முல்லைப் பெரியாறு, காவிரி நீர்ப் பிரச்சினை ஆகியவற்றில் காட்டாத தீவிரத்தை, வாடகைதாரரை வெளியேற்றும் வழக்கில் காட்டியதாகவும்; கூடுதல் தலைமை வழக்கறிஞரை

இந்த வழக்கில் முதலிலிருந்தே அரசுத் தரப்பில் ஆஜராகி வாதிடச் செய்ததாகவும்; உயர் நீதிமன்றம் அந்த அரசியல் பிரமுகருக்கு ஆதரவாக வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து அது இன்றும் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்து, இவரின் பெருந்தன்மையை பட்டவர்த்தனப் படுத்தியுள்ளார்.

காஞ்சிபுரம் கூட்டத்திற்கு வரும் வழியெல்லாம் இருந்த அலங்காரங்களையும், முழக்கங்களையும் பார்த்தவுடன் இவருக்குப் பழைய பாராட்டு விழாக்கள் நினைவிற்கு வந்துவிட்டது போலும்! எனவே தான், தான் முதலமைச்சராக இல்லையே என்ற ஆற்றாமையால் உந்தப்பட்டு, என் மீதுள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, தனக்கு வாக்களிக்காத மக்களிடம் அவரது கட்சியின் தோல்வி, மக்களுடைய தோல்வி என்றும்; அவர்களே தேடிக்கொண்ட தோல்வி என்றும் அங்கலாய்த்து இருக்கிறார். இதுதான் ஜனநாயகத்தின் மீது இவர் கொண்டுள்ள மதிப்பு.

மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தருகின்ற அரசு தான் இது என்பதை உணர்ந்துள்ள காரணத்தால்தான் தமிழக மக்கள், சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல்களிலும், எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெருவாரியான வெற்றியைத் தந்திருக்கிறார்கள். ஏற்றம் தரும் அரசு இது; அவர்கள் கூறுவது போல் ஏமாற்றம் தரும் அரசு அல்ல என்பதால்தான் தங்களது நம்பிக்கையை மீண்டும் வெளிப்படுத்தி உள்ளார்கள். இடைச் செருகல்களால் இந்த அரசின் நல்ல திட்டங்களை மக்களிடமிருந்து மறைக்கவோ, மக்களை ஏமாற்றவோ முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்லாட்சி நடத்தும் எனது தலைமையிலான அரசுக்கு நற்சான்று அளித்த தமிழக மக்களின் வாழ்வு இன்னும் ஏற்றம் பெற, பல்வேறு திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் வளர்ச்சியாக இருக்க வேண்டும். பணக்காரர்கள், கல்வி அறிவில் நன்கு தேர்ச்சி பெற்றோர், வாழ்வில் வசதிகள் பல பெற்றோர் ஆகியோர் மட்டும் வாழ்வில் மேலும் முன்னேற்றம் பெற வழிவகை செய்யும் வளர்ச்சி **உண்மையான வளர்ச்சி**

அல்ல. அத்தகைய பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் நாடு முன்னேறலாம். ஆனால், முன்னேற்றம் காண வேண்டிய மக்கள் முன்னேற முடியாது. அடித்தட்டு மக்களின் உயர்வே உண்மையான பொருளாதார வளர்ச்சியாகும். இதனை உணர்ந்துள்ள எனது அரசு, ஏழை மக்கள் உடனடியாகப் பயன்பெறும் வண்ணம், எந்தவித விலையும் கொடுக்காமல், பெறக்கூடிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இந்தத் திட்டங்கள் மக்கள் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையிலும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்கு வழிவகை செய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. ஏழை, எளியோர், உழவர், நெசவாளர், தொழிலாளர், மீனவர், மகளிர் மற்றும் மாணவர் உட்பட அனைத்துப் பிரிவினரது வாழ்க்கைத் தரம் உயர நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

சமூகப் பாதுகாப்பிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் அதே நேரத்தில் மனித வளர்ச்சிக் குறியீடுகள் நமது மாநிலத்தில் உயர வேண்டும் என்ற அடிப்படையில், பல விலையில்லா திட்டங்களையும் எனது அரசு நிறைவேற்றி வருகிறது.

ஏழை, எளிய மக்கள் கண்ணியமான வாழ்வு வாழ, அரசு அவர்களுக்குச் சலுகைகள் வழங்க வேண்டியது அவசியம் என்றாலும் கூட; அரசின் சலுகைகளை மட்டுமே எப்போதும் சார்ந்தில்லாமல், வாழ்வில் வளம் பெற மக்கள் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டும் என்பதும்; அதற்கான பொருளாதார வளத்தை அவர்கள் பெற வேண்டும் என்பதும்; இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். அதன் அடிப்படையில், குடும்ப அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழகத்திலே மீண்டும் ஒரு வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தினால், அதன் மூலம் தமிழகம் வளம் பெறுவதோடு மட்டுமல்லாமல், கிராமப்புரங்களிலே வசிக்கும் ஏழை, எளிய மக்களின் பொருளாதார நிலையும் மேம்படும் என்பதால் கலப்பின ஜெர்சி பசுக்கள் வழங்கும் ஒரு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத கிராமங்களில் உள்ள ஏழைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் பசுக்கள் வழங்கப்படுகின்றன. பயனாளிகளே அரசு அலுவலர்களுடன் சென்று, பசுக்களைத் தேர்வு செய்வதற்கான

வழிவகையும் செய்யப்பட்டு, அவ்வாறு வாங்கப்படும் பசுக்கள் காப்பீடும் செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு 12,000 பேர்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கத் திட்டமிட்டதில், இதுவரை 7,887 பேருக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோருக்கு இந்த நிதியாண்டு முடிவதற்குள் பசுக்கள் வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 7 இலட்சம் குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு 4 ஆடுகள் வீதம் வழங்கி, அதன்மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டத்தையும் இந்த அரசு துவக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்படி, இந்த ஆண்டு ஒரு இலட்சம் பேருக்குத் தலா 4 ஆடுகள் வழங்கத் திட்டமிட்டதில், இதுவரை 60,765 பயனாளிகளுக்குத் தலா நான்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ளோருக்கு இந்த நிதியாண்டின் இறுதிக்குள் ஆடுகள் வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராஜன், அரசுத் துறையிலே பணியாற்றக்கூடிய கடைநிலை ஊழியர்களுக்கு இணையான சம்பளமாவது இதர தொழிலாளர்களுக்கும் வழங்குவதற்கான சட்டம் இயற்றினால், அது வறுமையைக் குறைக்க உதவும் என்று கூறினார். இது எவ்வாறு வறுமையைக் குறைக்க உதவும் என்பது தெரியவில்லை.

ஆனால், விலையின்றி வழங்கப்படும் கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் திட்டத்தின் மூலம் பயனாளிகள் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு, தங்களது சொந்தக் கால்களிலேயே நிற்க முடியும். இதன் மூலம் வறுமை குறைக்கப்படும் என்பதுதான் எங்களது திடமான நம்பிக்கை.

நான் இப்போது சுட்டிக் காட்டியதைப் போல, சமுதாயத்தில் பிறரைச் சார்ந்து வாழ்பவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும், சமுதாயத்தில் தாமும் ஓர் அங்கம் என்ற எண்ணத்துடன் தலை நிமிர்ந்து வாழ வகை செய்யும் வண்ணம் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூக மூலதனத்திற்காகவும்; மனித வள மேம்பாட்டிற்காகவும்; ஏழை

எளிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும்; பல்வேறு விலையில்லாத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த விலையில்லாத் திட்டங்கள் அனைத்தையும் இது போன்ற உன்னத குறிக்கோள்களுடன்தான் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில், இது போன்ற சமூக மூலதனம் மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்காக திட்டங்களைத் தீட்டாமல்; சொந்தக் குடும்ப மேம்பாட்டிற்கான இலவசத் திட்டங்கள் தீட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக, 3,687 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவசமாக வழங்கப்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் 4,000 கோடி ரூபாய் அளவுக்குச் சொந்தக் குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். அதாவது, கேபிள் டிவி இணைப்பு மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு, பொது மக்களிடமிருந்து அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாகத் தான், முந்தைய அரசால் 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கேபிள் டிவி நிறுவனம், அவர்களாலேயே முடக்கி வைக்கப்பட்டது. கேபிள் டிவி தொழிலில் இருந்த இந்த ஏகபோகத்தைத் தடுத்து பொதுமக்கள் குறைந்த கட்டணத்தில் சேனல்கள் பார்க்கும் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதால் தான், அரசு கேபிள் டிவி நிறுவனத்தைப் புனரமைத்து; அதற்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. இந்தத் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 02.09.2011 அன்று தனது சேவையை முழு அளவில் துவங்கியது. இதன் மூலம் 70 ரூபாய் என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் தொலைக்காட்சி சேவை மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் இணைப்புப் பெற்றுள்ள ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் மாதந்தோறும் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படுகிறது. அதாவது 90 முதல் 95 சேனல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் தமிழக மக்களுக்கு 150 கோடி ரூபாய் அளவுக்கு சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழ்நாட்டில் நிலவும் சட்டம்–ஒழுங்கு குறித்து தவறான கருத்துகள் இங்கே எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களால் எடுத்து

வைக்கப்பட்டன. இந்த அரசைப் பொறுத்தவரையில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ரவுடிகள்; கொலை, கொள்ளை மற்றும் சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, 2011ஆம் ஆண்டில் முதல் ஐந்து மாதங்களில் 193 நபர்கள் மட்டுமே குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். அதே சமயத்தில், இந்த அரசு பொறுப்பேற்ற பின் அதாவது, 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையுள்ள ஏழு மாதங்களில் 1,397 நபர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இதன் காரணமாக, கொடும் குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. கொலைகளில் மிகவும் கொடூரமான ஆதாயக் கொலைகள் 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2011ஆம் ஆண்டு 19.6 விழுக்காடு குறைந்துள்ளது. இந்த அரசு எடுத்து வரும் கடுமையான நடவடிக்கைகளின் விளைவாக, முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் சீரழிந்திருந்த சட்டம் ஒழுங்கு தற்போது சீரடைந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, மாநிலத்தில் உறவுகளுக்குள் ஏற்படும் தகராறு; தனிப்பட்ட விரோதம்; கொடுக்கல் வாங்கல் போன்றவற்றின் காரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்று வரும் கொலைகளை வைத்து, மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு பராமரிப்பையே குறை கூறுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

நில அபகரிப்புப் புகார்களைப் பொறுத்தவரையில், இந்த அரசால் அமைக்கப்பட்ட நில அபகரிப்புத் தடுப்பு சிறப்புப் பிரிவுகளில் இதுவரை 27,268 புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீது விசாரணை நடத்தப்பட்டு, குற்ற நிகழ்வுகள் உள்ளதாகத் தெரிய வந்த நிகழ்வுகள் குறித்து இதுவரை 1,056 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,022 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகளில் இதுவரை 696 கோடி ரூபாய் மதிப்புள்ள 1,256.5 ஏக்கர் நிலமும்; 4,35,333 சதுர அடி வீட்டு மனையும்; உண்மையான நில உரிமையாளர்கள் மனம் குளிரும் வகையில் நில அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. எனது அரசின் இந்த நடவடிக்கை காரணமாக, பொதுமக்கள் நில ஆக்கிரமிப்புக் கும்பல்களின் பிடியிலிருந்து விடுபட்டு; தங்கள் சொத்துகள் உரிய

பாதுகாப்புடன் உள்ளன என்ற உணர்வோடு நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழகத்தின் வங்காள விரிகுடாப் பகுதியில் 25.12.2011 அன்று உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், 26.12.2011 அன்று வலுவடைந்து புயலாக உருவெடுத்தது. “தானே” என்று பெயரிடப்பட்ட இந்தப் புயல் 30.12.2011 அன்று காலை 6.30 மணியளவில் கடலூர் கரையைக் கடந்து, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வரலாறு காணாத அளவிற்கு சேதத்தை ஏற்படுத்தியதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். மணிக்கு 140 கிலோமீட்டர் என்ற அளவில் கடும் சீற்றத்துடன் கடலூர் கரையைக் கடந்த இந்தத் “தானே” புயல், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கட்டமைப்புகளையும், பயிர்களையும், வீடுகளையும், படகுகளையும் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கியது. மக்களின் உடைமைகளையும், வாழ்வாதாரங்களையும் இந்தப் புயல் சூறையாடிச் சென்றுவிட்டது. மக்களின் பொருளாதாரத்தை, அதிலும் குறிப்பாக, பலா, முந்திரி போன்ற நீண்டகாலப் பயிர்களின் மூலம் வாழ்வாதாரம் பெற்றுவந்த மக்களின் பொருளாதாரத்தை, பல ஆண்டுகளுக்குப் பின் தள்ளி விட்டது. இந்தப் புயல் ஆயிரக்கணக்கான மரங்களைச் சாய்த்ததோடு மட்டுமல்லாமல், மின் கட்டமைப்புகளையும் உருக்குலைத்துவிட்டது. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 5.77 இலட்சம் குடிசைகள் மற்றும் வீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்துவிட்டன. 1,29,000 எக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் அழிந்துவிட்டன. 35,141 எக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த முந்திரி மற்றும் பலாத் தோப்புகள் நாசமடைந்துவிட்டன.

“தானே” புயல் தமிழ்நாட்டைத் தாக்கும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்த உடனேயே, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்த அரசு துரிதமாக மேற்கொண்டது. தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த சுமார் 6,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று தங்க வைக்கப்பட்டு; அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர். மிகக் கடுமையான புயல் காற்று வீசும் என்பதால், புயல் கரையைக்

கடந்த நாளுக்கு முந்தைய நாளான 29.12.2011 அன்று இரவு முதல் கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மின் இணைப்பு முழுவதுமாகத் துண்டிக்கப்பட்டது. அரசு இயந்திரம் முழுவதுமாக முடுக்கிவிடப்பட்டு, அரசு அதிகாரிகளும், பணியாளர்களும் விழிப்புடன் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் தணிப்புப் படையைச் சார்ந்த நான்கு குழுக்கள் கடலூர், நாகப்பட்டினம், சென்னை, திருவள்ளூர் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவ்வாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாகத்தான் மனித உயிரிழப்புகள் பெருமளவில் தவிர்க்கப்பட்டன. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியைப் போன்ற ஒரு பேரிடர் இந்தப் புயல் காரணமாக ஏற்பட்ட போதிலும், அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகவே பெருமளவு உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புயல் காரணமாக 51 உயிரிழப்புகள் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்பட்டன.

140 கிலோ மீட்டர் வேகத்துடன் கடலூர் கடற்கரையை நேரடியாகத் தாக்கி கடந்துள்ள இதற்கு இணையான அதிவேகப்

புயல் (Very severe cyclonic storm), இதற்கு முன்னர் தமிழ்நாட்டில் 1977ஆம் ஆண்டு நாகப்பட்டினம் அருகிலும்; 1963ஆம் ஆண்டு கடலூர் அருகிலும் கரையைக் கடந்துள்ளது. பெரும் புயல் என்பதாலேயே கடும் சேதத்தை இது ஏற்படுத்திவிட்டது.

இந்தப் புயல் காரணமாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 5,77,584 குடிசைகள் மற்றும் ஓட்டு வீடுகள் முழுமையாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 277 கால்நடைகள் இறந்துவிட்டன. மாநில அளவில் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களில் 1,47,601 எக்டேர் நெற்பயிர்களும்; 12,326 எக்டேர் கரும்புப் பயிர்களும்; 34,096 எக்டேர் முந்திரிப் பயிர்களும்; 39,939 எக்டேர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த வாழை, பயறு, பருத்தி, எண்ணெய் வகைகள் மற்றும் பலா மரங்கள் ஆகியவை அழிந்துவிட்டன. கட்டுமரங்கள், வள்ளம், FRP படகுகள், விசைப் படகுகள் ஆகிய 5,854 மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளன. இது மட்டுமல்லாமல் 6,110 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

புயல் கரையைக் கடந்த சில மணி நேரங்களிலேயே, புயலினால் ஏற்பட்ட பாதிப்புகள் முழு அளவில் தெரிய வருவதற்கு முன்னரேயே, மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து நான் ஆய்வு மேற்கொண்டேன். உடனடி நிவாரணப் பணிகளுக்காகவும்; அடிப்படை கட்டமைப்பு வசதிகளை சீரமைக்கவும்; 150 கோடி ரூபாயை அன்றே அதாவது, 30.12.2011 அன்றே விடுவிக்கவும் நான் ஆணையிட்டேன். பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் அனுப்பி வைத்தேன். மேலும், நிவாரணப் பணிகளை முழு மூச்சில் மேற்கொள்வதற்காக 6 மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள்; 11 துணை ஆட்சியர்கள்; மற்றும் 4 வளர்ச்சித் திட்ட அதிகாரிகள்; 100 வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர்கள் கடலூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் "தானே" புயல் தாக்குதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பு நிவாரண உதவிகளை வழங்கவும்; அடிப்படைக் கட்டமைப்புகளை சீர்செய்யவும்; கூடுதலாக 700 கோடி ரூபாய் 03.01.2012 அன்றே ஒதுக்கப்பட்டது. ஆக மொத்தம், இந்த அரசால் 850 கோடி ரூபாய் உடனடியாக விடுவிக்கப்பட்டது.

பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 1,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை; 10 கிலோ அரிசி; ஒரு வேட்டி ஒரு சேலை; ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. பகுதியாகப் பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளுக்கு 2,500 ரூபாயும்; முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடிசைகளுக்கு 5,000 ரூபாயும்; ஓடுகளை இழந்த வீடுகளுக்கு 5,000 ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையின்படி சேதமடைந்த குடிசைகளுக்கு 2,000 ரூபாய் தான் வழங்கப்பட வேண்டும் என்று இருந்தாலும், கூடுதல் நிவாரணத் தொகையை நாங்கள் வழங்கி உள்ளோம்.

நெல் மற்றும் நீர்ப்பாசனம் பெறும் பயிர்களுக்கு எக்டேருக்கு 4,000 ரூபாயும்; பலா, முந்திரி போன்ற நிரந்தரப் பயிர்களுக்கு எக்டேருக்கு 6,000 ரூபாயும் நிவாரணமாக வழங்கிட மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றாலும்; நெற்பயிருக்கு எக்டேர் ஒன்றுக்கு 10,000 ரூபாயும்; மற்ற நீர்ப்பாசனப் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 7,500 ரூபாயும் நிவாரணமாக எனது அரசு வழங்கியுள்ளது. பலா, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 9,000 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கி உள்ளோம்.

இதே போன்று, சேதமடைந்த பாரம்பரிய மீன்பிடிப் படகுகளுக்கு 7,500 ரூபாயும்; பகுதி சேதமடைந்த படகுகளுக்கு 2,500 ரூபாயும் வழங்க மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீனவர் நலனைக் கருத்தில் கொண்டு, முழுவதும் சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டுமரங்களுக்கு 32,000 ரூபாயும்; பகுதி சேதமடைந்த வலைகளுடன் கூடிய கட்டுமரங்களுக்கு 10,000 ரூபாயும்; முழுவதும் சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு 75,000 ரூபாயும்; பகுதி சேதமடைந்த FRP படகுகள் மற்றும் வலைகளுக்கு 20,000 ரூபாயும்; முழுவதும் சேதமடைந்த விசைப் படகுகளுக்கு 5 இலட்சம் ரூபாயும்; பகுதி சேதமடைந்த விசைப் படகுகளுக்கு 3 இலட்சம் ரூபாயும்; வலைகள் மட்டுமே சேதமடைந்த இனங்களுக்கு 10,000 ரூபாயும்; சேதமடைந்த என்ஜின்களுக்கு 5,000 ரூபாயும் எனது அரசு வழங்கியுள்ளது.

இதே போன்று மாடு இறப்புக்கு 20,000 ரூபாயும்; ஆடு இறப்புக்கு 2,000 ரூபாயும்; கோழி இறப்புக்கு 100 ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கி உள்ளோம்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உயிரிழந்த 51 நபர்களின் குடும்பங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 1 கோடியே 2 இலட்சம் ரூபாயும்; கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 5,77,584 சேதமடைந்த குடிசைகள் மற்றும் ஓட்டு வீடுகளுக்கு, பகுதி சேதமடைந்த குடிசை வீடு ஒன்றுக்கு 2,500/– ரூபாய் என்ற வீதத்திலும்; முழுவதும் சேதமடைந்த குடிசை வீடு ஒன்றுக்கு 5,000/– ரூபாய் என்ற வீதத்திலும்; சேதமடைந்த ஓட்டு வீடு ஒன்றுக்கு 5,000/– ரூபாய் என்ற வீதத்திலும் 158 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, பாதிக்கப்பட்ட கிராமங்களில் சேதமடையாத குடிசைகள் மற்றும் ஓட்டு வீடுகளில் வசிக்கும் குடும்பங்களின் உடைமைகள் இழப்புக்கு, நிவாரணமாக குடும்பம் ஒன்றுக்கு 2,000/– ரூபாய் என்ற வீதத்தில் 1,59,902 குடும்பங்களுக்கு 31 கோடியே 98 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது.

கால்நடை கோழியினங்கள் இறப்புக்கு நிவாரணமாக 19 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாயும்; மாநிலம் முழுவதும் பயிர் பாதிப்பிற்காக 3,67,324 விவசாயிகளுக்கு 215 கோடி ரூபாய் நிவாரண உதவித் தொகையாகவும்; வள்ளம் படகுகள் வலைகள் பாதிப்புகளுக்கு 11 கோடியே 89 இலட்சம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கி உள்ளோம்.

30.12.2011 அன்று “தானே” புயல் கடலூர் கரையைக் கடந்த போது மரங்கள் விழுந்ததன் காரணமாக, கடலூர் மாவட்டத்தில் 1,458 இடங்களில் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. 90 JCB இயந்திரங்கள், 3 கிரேன்கள், லாரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி 1,000 பணியாளர்கள் சாலையில் விழுந்த மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக, 31.12.2011 அன்றே அனைத்துச் சாலைகளிலும் போக்குவரத்து சீர் செய்யப்பட்டது.

புயல் பாதிப்பால் மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான பால் கிடைப்பதில் இருந்த பற்றாக்குறை உடனடியாகத் தீர்க்கப்பட்டது. ஆவின் நிறுவனம் மூலம் கடலூர் மாவட்டத்தில், சாதாரணமாக நாளொன்றுக்கு 20,500 லிட்டர் பால் விநியோகம்

செய்யப்படுகிறது. எஞ்சிய பால் தேவை தனியார் பால் நிறுவனங்களால் நிறைவு செய்யப்பட்டு வந்தது. தனியார் பால் நிறுவனங்கள் தாங்கள் விநியோகம் செய்யும் பால் அளவைக் குறைத்ததால், அதனை ஈடு செய்யும் பொருட்டு ஆவின் நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் 35,000 லிட்டர் பால் விநியோகத்தை மேற்கொண்டது. 2,500 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 குளிரூட்டும் வசதி செய்யப்பட்ட வாகனங்கள் சென்னையிலிருந்து கடலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சில்லறை அளவில் பால் விநியோகம் செய்வதற்காக, 9,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நடமாடும் பால் டேங்கரும் சென்னையிலிருந்து கடலூருக்கு அனுப்பப்பட்டு, பால் தேவை நிறைவு செய்யப்பட்டது.

“தானே” புயல் கடலூர் மாவட்டத்தை முற்றிலும் புரட்டிப் போட்டுவிட்ட காரணத்தால், குடிநீர் விநியோகம், மின் விநியோகம் ஆகியவை முழுவதுமாகப் பாதிக்கப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் உள்ள 6 நகராட்சிகளில் உள்ள 174 வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டதுடன்; குடிநீர் விநியோக சீரமைப்புகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அதன் காரணமாக 122 வார்டுகளில் குடிநீர் விநியோகம் 02.01.2012 அன்று சீரமைக்கப்பட்டு, வழக்கம் போல் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. 57 லாரிகள் மூலம் மீதமுள்ள வார்டுகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது. அதே போன்று, 16 பேரூராட்சிகளிலும், ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி குடிநீர் வழங்கப்பட்டது. கிராமப் பகுதிகளில் உள்ள 11 கூட்டுக் குடிநீர் திட்டங்களில், 5 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு மின்வசதி சீரமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது. மேலும் 300–க்கும் மேற்பட்ட ஜெனரேட்டர்கள் வாடகைக்கு பெறப்பட்டு 100–க்கும் மேற்பட்ட தண்ணீர் லாரிகள் மூலமாக ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் தடையின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதைக் கண்காணிக்க ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் தலைமையில், 8 அதிகாரிகள் ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கப்படுவதைக் கண்காணித்தனர். இதே போன்று, விழுப்புரம் மாவட்டத்திலும் ஜெனரேட்டர்கள் மூலமும் லாரிகள் மூலமும் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் புயல் பாதித்த தினம் முதலே மேற்கொள்ளப்பட்டன. புயல் வெள்ள பாதிப்புகள்

ஏற்படும் சமயத்தில், சாதாரணமாகக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவது இல்லை. எனவே தான், புயல் வெள்ள பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் தொற்றுநோய் ஏற்படுவது சாதாரண நிகழ்வாக எப்போதும் இருந்து வந்துள்ளது. இந்த அரசின் மிகப் பெரும் முயற்சியால், புயல் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டதால், இந்த மாவட்டங்களில் எவ்வித தொற்று நோயும் ஏற்படவில்லை என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளிலும் குடிநீர் பாதிப்புகள் விரைந்து சீர் செய்யப்பட்டு, தற்போது இயல்பாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! "தானே" புயலால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் மின் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றியும்; அரசு மேற்கொண்ட சீரமைப்புப் பணிகள் பற்றியும் இம்மாமன்றத்தில் சற்று விரிவாக எடுத்துக் கூறுவது எனது கடமையாகும்.

"தானே" புயலால் கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் முழுவதுமாக மின் துண்டிப்பு ஏற்பட்டது. இம்மாவட்டத்தில் உள்ள 47 துணை மின் நிலையங்களும் பாதிக்கப்பட்டதால், மாவட்டத்தில் மின் விநியோகம் முற்றிலும் துண்டிக்கப்பட்டது. கடலூரில் அமைந்துள்ள 230 கி.வோ துணை மின் நிலைய கட்டுமானங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்நிலையத்தை அடைவதற்கான வழித்தடம் முழுவதிலும் ஏராளமான மரங்கள், சுமார் 6 கி.மீ. தூரம் சாய்ந்து விழுந்து, பாதை அடைப்பட்டிருந்தது. கடலூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மின் விநியோகத்தைச் சீரமைக்க 35 உயர் மின்னழுத்த கோபுரங்கள், 60,000 மின் கம்பங்கள் மற்றும் 4,500 மின் மாற்றிகள் மாற்றப்பட வேண்டியிருந்தன.

இப்புயலினால் மிக அதிக உயர் மின்னழுத்த கோபுரங்கள்; துணை மின் நிலைய உபகரணங்கள்; மின் மாற்றிகள்; மின் கட்டமைப்பு; மின் கம்பங்கள்; மின் கம்பிகள் மற்றும் இதர மின் தளவாடப் பொருட்கள் சேதம் அடைந்தன.

சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஒரு மேலாண்மை இயக்குநர்; இரண்டு வாரிய உறுப்பினர்கள்; மூன்று தலைமைப் பொறியாளர்கள் மற்றும் 14 மேற்பார்வைப் பொறியாளர்கள் / செயற் பொறியாளர்கள் தலைமையில் 1,000 பணியாளர்கள் அடங்கிய குழு 31.12.2011 முதலே பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பிற மாவட்டங்களிலிருந்து, தளவாடப் பொருட்கள், லாரிகள் மற்றும் உபகரணங்கள் உடனடியாக அனுப்பப்பட்டன. மின் தளவாடப் பொருட்கள் தேவையினைத் தொடர்ந்து அவசர கொள்முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

230 கி.வோ. துணை மின் நிலையங்களுக்குச் செல்லும் வழித் தடங்கள் தடைபட்ட போதும், மீட்புப்பணிப் பொறியாளர்களும், பணியாட்களும் அவ்விடங்களுக்கு நடந்தே சென்று 230 கி.வோ கடலூர் துணை மின் நிலையத்திற்கு மின் விநியோகத்தை 24 மணி நேரத்தில் போர்க்கால அடிப்படையில் சீரமைத்தனர். நெய்வேலி அனல்மின்நிலைய நிலக்கரிச் சுரங்கத்துக்கு மின் விநியோகம் செய்யும் மின் தடத்தில், இரண்டு 230 கி.வோ கோபுரங்கள் விழுந்ததால், நெய்வேலி அனல்மின்நிலையத்தில் மின் உற்பத்தி பாதிப்படைந்தது. இப்பணி 72 மணி நேரத்தில் சரி செய்யப்பட்டது. சாதாரணமாக இப்பணியை முடிக்க 10 நாட்கள் தேவைப்படும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் 06.01.2012 முதல் 14.01.2012 வரை, 10,000 பணியாளர்களை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கடலூர் மற்றும் விழுப்புரம் பகுதிகளின் மின் சீரமைப்புப் பணிக்கு ஈடுபடுத்தியது.

தற்போதும், கடலூர் மின் பகிர்மான வட்டத்தில் 236 பொறியாளர்களுடன் 4,100 பணி ஆட்களும்; விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் 26 பொறியாளர்களுடன் 840 பணியாட்களும் இரவு பகலாக விவசாய மின் சீரமைப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

“தானே” புயலால் மொத்தம் 33 உயர் மின்னழுத்த கோபுரங்கள் மற்றும் 7 உயர் மின்னழுத்த மின் பாதைகள் பாதிப்படைந்திருந்தன. பாதிப்படைந்த 7 உயர் மின்னழுத்த பாதை மீட்புப் பணிகள் உடனடியாகத் துவக்கப்பட்டு, போர்க்கால அடிப்படையில் மிக அதிக பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்தி,

இரவு பகலாக பணியினைச் செய்து, சுமார் 5 மாதங்களில் முடியக் கூடிய பணி 14 தினங்களுக்குள் முடிக்கப்பட்டது. பாதிப்படைந்த 7 உயர் மின்னழுத்த பாதைகளும், படிப்படியாக சீர்செய்யப்பட்டு, 13.01.2012–க்குள் துணை மின் நிலையங்கள் இயங்கத் தேவையான உயர் அழுத்த மின்சாரம் கொடுக்கப்பட்டு, தாழ்வழுத்த மின் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

"தானே" புயலால் மின் விநியோகம் முற்றிலுமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில், மின் விநியோகத்தை சீரமைக்க 4,500 மின் மாற்றிகளும்; 3,266 கி.மீ. உயரழுத்த மின் பாதைகளும்; 5,888 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகளும் புதிதாக நிறுவ வேண்டி இருந்தது. தமிழ்நாடு மின் விநியோக செயல் தர விதிமுறைகளின்படி, ஒரு மின் மாற்றியை புதிதாக அமைத்து, அதற்குரிய தாழ்வழுத்த மற்றும் உயரழுத்த மின் பாதைகளையும் அமைத்து, மின் இணைப்பு வழங்க மூன்று மாதங்களாகும்.

மேலே கூறப்பட்ட அனைத்து மின் மாற்றிகளையும் மற்றும் மின் பாதைகளையும் சரிசெய்ய, 6,000 பணியாளர்கள் சுமார் 100 நாட்கள் பணி செய்ய வேண்டியிருக்கும். ஆனால் மின்வாரியம் போர்க்கால அடிப்படையில் மிக அதிகப் பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்தி, இரவு பகலாக பணியினைச் செய்து 15 நாட்களில் இது சரிசெய்யப்பட்டுள்ளது.

மாநிலத்திலுள்ள சுமார் 120–க்கும் மேற்பட்ட மின் கம்பம் தயாரிக்கும் இடங்களில் இருந்து சுமார் 29,000 மின் கம்பங்கள், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அது மட்டுமல்லாமல் ஆந்திரா, கேரளா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து 41,000 மின் கம்பங்கள் வாங்கப்பட்டன.

சிதம்பரம், பண்ருட்டி, விருத்தாசலம் மற்றும் குறிஞ்சிப்பாடி கோட்டத்தில் உள்ள அனைத்து அத்தியாவசிய மின் இணைப்புகளுக்கும் மின்சாரம் முழுவதுமாக வழங்கப்பட்டு விட்டது. கடலூர் மற்றும் நெல்லிக்குப்பம் கோட்டத்தில் முறையே 95.23 சதவீதம் மற்றும் 97.90 சதவீதம் அத்தியாவசிய இணைப்புகளுக்கும் மின்சாரம் பொங்கல் பண்டிகைக்கு முன்பே வழங்கப்பட்டு விட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் 100 விழுக்காடு, அதாவது 8 இலட்சத்து 44 ஆயிரத்து 124 வீட்டு மின் இணைப்புகளுக்கும்; மற்றும்

கடலூர் மாவட்டத்தில் 6 இலட்சத்து 91 ஆயிரத்து 847 வீட்டு மின் இணைப்புகளுக்கும்; அதாவது 97.53 விழுக்காடு அளவுக்கு, மின் விநியோகம் சீர்செய்யப்பட்டு மின்சாரம் பொங்கல் பண்டிகைக்கு முன்பே வழங்கப்பட்டு விட்டது. தற்போது அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. மேற்கண்ட மறுசீரமைப்புப் பணிகளை குறித்த காலத்திற்கு முன்பே மேற்கொள்ள பணியில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்குக் கூடுதல் ஊதியம் அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தெரு விளக்குப் பணிகளும் கிட்டத்தட்ட முழுவதுமாக சீரமைக்கப்பட்டுவிட்டன. ஊராட்சிகளில் இப்பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

கடலூர் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள 69,783 விவசாய மின் இணைப்புகளில் 67,100 விவசாய இணைப்புகளுக்கு மின் விநியோகம் சரிசெய்யப்பட்டு விட்டது. விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள 1,73,641 விவசாய மின் இணைப்புகளில் 1,71,700 விவசாய இணைப்புகளுக்கு மின் விநியோகம் சரிசெய்யப்பட்டு விட்டது.

கடலூர் மின் பகிர்மான வட்டத்தில் 27.01.2012 அன்று மின் தேவை ஏறக்குறைய 263.97 மெகாவாட் எனவும்; மின் பயனீட்டளவு 4.82 மில்லியன் யூனிட் எனவும் பதிவாகியுள்ளது. இதே நாளில் போன வருடத்தில் மின் தேவை 241.44 மெகாவாட்டாகவும்; மின் பயனீட்டளவு 4.39 மில்லியன் யூனிட்டாகவும் இருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின் விநியோகம் சீரமைக்கப்பட்டு விட்டது என்பதை இது தெளிவாக எடுத்துக்காட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் அடித்து ஏற்படுத்திய மின் கட்டமைப்புச் சேதங்களை, புயல் வேகத்தில் செயல்பட்டு மூன்று மாதங்களில் செய்ய வேண்டிய பணிகளை பதினைந்தே நாட்களில் செய்து முடித்தும்; 6 மாதங்களில் செய்ய வேண்டிய பணிகளை ஒரு மாதத்தில் செய்து முடித்தும், சாதனை படைத்துவிட்ட தமிழ்நாடு மின் வாரியத் தலைவருக்கும், தமிழக மின் துறைப் பணியாளர்களுக்கும் இந்த அரசின் சார்பில் எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பயிர்ச் சேதங்களுக்காக நிவாரண உதவித் தொகைகள்

வழங்கப்பட்டுள்ளன என்றாலும், பலா, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களின் மூலம் வருவாய் ஈட்டி வந்த விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தையே முற்றிலும் இழந்துள்ள நிலையில், தற்போது வழங்கப்பட்ட பயிர்ச் சேத நிவாரண உதவிகள் மூலம் மட்டுமே அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தைத் திரும்பப் பெற இயலாது என்பதை இந்த அரசு அறியும். எனவே, இந்த விவசாயிகளுக்கு ஒரு சிறப்பு நிவாரணத் தொகுப்பு உதவியை **11.01.2012** அன்று நான் அறிவித்தேன். அதன்படி புயலால் முற்றிலும் சேதமடைந்த, பலா, முந்திரி மற்றும் தென்னை ஆகிய தோட்டக்கலைப் பயிர்களை மீண்டும் பயிர் செய்வதற்கு விலை ஏதுமின்றி மரக்கன்றுகள் வழங்கப்படும். அந்த மரக்கன்றுகளைப் பராமரிப்பதற்கான பராமரிப்புச் செலவுகளையும், விவசாயப் பணிகளுக்கான செலவுகளையும், ஓராண்டுக் காலத்திற்கு அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும்; விவசாய வேலையாட்களுக்கான செலவுகள் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என்றும்; தங்கள் சொந்த நிலங்களில் நில மேம்பாடு, குழி எடுத்தல் போன்ற விவசாயப் பணிகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் இந்தத் திட்டத்தின்படி ஊதியம் வழங்கப்படும் என்றும்; இந்த விவசாயிகள் உளுந்து, பாசிப் பயறு, சிறு தானியங்கள் மற்றும் வேர்க்கடலை போன்ற ஊடுபயிர்களைச் சாகுபடி செய்து வருமானம் ஈட்டும் வகையில் இவற்றைப் பயிரிடுவதற்கான சான்று விதைகள்; உயிர் உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறுதளை (Mini Kit) விலை ஏதுமின்றி ஓராண்டுக் காலத்திற்கு வழங்கப்படும் என்றும் நான் அறிவித்து இருந்தேன். மேலும் நெல்; பயறு வகைகள்; எண்ணெய் வித்துகள் போன்ற பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு சான்று விதைகள்; உயிர் உரங்கள்; மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை அடங்கிய சிறுதளை (Mini Kit) ஒன்று விலை ஏதுமின்றி வழங்கப்படும் என்றும் அறிவித்து இருந்தேன்.

பலா, முந்திரி போன்ற தோட்டக்கலைப் பயிர்களை முற்றிலும் இழந்துள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரணத் தொகுப்பு மட்டும் உரிய வாழ்வாதாரத்தைத் திரும்பப் பெற்றுத் தர இயலாது என்பதால், மேற்குறிப்பிட்ட விலையில்லா சிறுதளையையும் உள்ளடக்கிய விரிவான ஒரு நிவாரணத் தொகுப்பினை வழங்க

நான் முடிவு செய்துள்ளேன். இந்தச் சிறப்பு நிவாரணத் தொகுப்பு உதவியை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டுப் பயிருக்கான சிறப்புத் தொகுப்புத் திட்டம்

வேளாண் பயிர்கள்

❖ 54,490 ஏக்கர் பரப்பிற்குத் தேவையான 54,490 நெல் சிறுதளைகள் (Mini Kits) வழங்கப்படும். 20 கிலோ விதை நெல்; இரண்டு பொட்டலம் உயிர் உரங்கள்; மற்றும் 500 மில்லி தாவரப் பூச்சிக் கொல்லி கொண்டவையாக இந்த சிறுதளைகள் இருக்கும்.

❖ 6,250 ஏக்கர் பரப்பிற்குத் தேவையான 6,250 மக்காச்சோள சிறுதளைகள் விழுப்புரம் மாவட்டத்தில் வழங்கப்படும். இச்சிறுதளை 6 கிலோ வீரிய ஒட்டு விதை மற்றும் இரண்டு பொட்டலங்கள் உயிர் உரங்கள் உள்ளதாக இருக்கும்.

❖ 3,83,660 ஏக்கர் பரப்பிற்குத் தேவையான 3,83,660 பயறு வகை சிறுதளைகள் வழங்கப்படும். 8 கிலோ விதையுடன் இரண்டு பொட்டலங்கள் உயிர் உரங்கள் இந்த சிறுதளையில் அடங்கும்.

❖ 3,175 ஏக்கர் பரப்பிற்குத் தேவையான 3,175 மணிலா சிறுதளைகள் வழங்கப்படும். 80 கிலோ விதைகள்; நான்கு பொட்டலங்கள் உயிர் உரங்களுடன் 500 மில்லி தாவரப் பூச்சிக் கொல்லி இந்த சிறுதளைகளில் இருக்கும். இச்சிறுதளைகள் 34 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

தோட்டக்கலைப் பயிர்கள்

❖ இந்த ஆண்டு மார்ச் மாதம் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக, பிப்ரவரி மாதத்தில், ஏக்கர் ஒன்றிற்கு 1,540 ரூபாய் மதிப்புள்ள உயர் மகசூல் தரக்கூடிய வீரிய ரகக் காய்கறி விதைகள்; உயிர் உரங்கள் மற்றும் தாவரப் பூச்சிக் கொல்லிகள் அடங்கிய சிறுதளைகள் வழங்கப்படும்.

நீண்ட காலப் பயிர்களுக்கான சிறப்புத் தொகுப்புத் திட்டம்

தென்னை

- “தானே” புயல் காரணமாக கடலூர் மாவட்டத்தில் 1,284 ஹெக்டேரிலும்; விழுப்புரம் மாவட்டத்தில் 578 ஹெக்டேரிலும்; ஆக மொத்தம் 1,832 ஹெக்டேர் பரப்பில் இருந்த தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன.
- முறிந்த மற்றும் சேதாரத்திற்குள்ளான தென்னை மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மரம் ஒன்றிற்கு 500 ரூபாய் வீதம் தென்னை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென 16 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும். மேலும் 100 சங்கிலி ரம்பங்கள் (Chain Saws) வாடகையின்றி விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
- தென்னை மரங்களை இழந்த விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக ஊடுபயிர் பயிரிடும் வகையில், ஊடுபயிருக்கான சிறுதளைகள் வழங்கப்படும். தென்னங்கன்றுகளை மீண்டும் நடுவதற்காக அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளிலிருந்து 3,20,600 தென்னங்கன்றுகள் 80 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.
- மீண்டும் நடப்பட்ட தென்னை மரங்களுக்குத் தேவையான யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், உயிர் உரங்கள் மற்றும் தென்னை நுண்ணூட்டக் கலவை ஆகியவை வழங்கப்படும். இதற்காக 5 ஆண்டுகளில் ஒரு ஹெக்டேருக்கு 73,859 ரூபாய் செலவிடப்படும். இதற்கான மொத்தச் செலவு 13 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஆகும். இதன் காரணமாக 7,083 தென்னை விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தைத் திரும்பப் பெற இயலும்.

முந்திரி மற்றும் பிற தோட்டக்கலை நீண்ட காலப் பயிர்கள், விழுந்த மரங்களை வெட்டி அகற்றுதல் மற்றும் அதற்குத் தேவையான இயந்திரங்கள் வழங்குதல்

- முந்திரி மற்றும் பலாத் தோப்புகள் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள், விழுந்த மரங்களை அகற்றிட தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணிகள்

மேற்கொள்ளப்படும். இதற்காக, சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு, ஏற்படும் 6,000 ரூபாய் செலவினம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இதற்கென ஏற்படும் செலவு 54 கோடியே 78 இலட்சம் ரூபாய் ஆகும். இந்த மரங்களை வெட்டுவதற்குத் தேவையான சங்கிலி ரம்பக் கருவிகள் வேளாண்மைப்பொறியியல் துறை மூலம் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படும். இதற்கு 3 கோடி ரூபாய் செலவு ஏற்படும். இவ்வாறு வெட்டப்பட்ட மரங்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்குத் தேவையான உதவிகளை அரசு மேற்கொள்ளும்.

- ❖ மரங்கள் வெட்டி எடுக்கப்பட்ட பின், அடிக்கட்டையையும் அகற்றிய பின்னரே அத்தோட்டங்களில் உழவுப் பணியும், ஊடுபயிர்ச் சாகுபடியும் மேற்கொள்ள இயலும் என்பதால்; அடிக்கட்டை அகற்றும் பணி இயந்திர உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 136 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

உழவு

- ❖ 91,293 ஏக்கர் பரப்பளவில் பாதிப்புக்குள்ளான நிலங்களில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் உழவுப் பணிகள் மேற்கொள்ளப்படும். விசை உழுவைகள், அதாவது Power Tiller–கள் மூலம் இப்பணி மேற்கொள்ளப்படும். இதற்காக அரசுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

குழி எடுத்தல் மற்றும் கன்று நடுதல்

- ❖ ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மூலமாக மரக்கன்றுகளை நடத் தேவையான குழிகளை எடுத்தல் மற்றும் நடவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், இதற்கென 31 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படும்.

சாகுபடிக்கான உதவி

- ❖ 1,20,103 ஏக்கர் பரப்பளவில் மறு சாகுபடி செய்யத் தேவையான உதவிகள் வழங்கப்படும். 70 இலட்சம் ஒட்டு முந்திரிக்

கன்றுகள் மற்றும் இதர மரக் கன்றுகள் வழங்கப்படும். உயிர் உரம் மற்றும் தாவரப் பூச்சிக் கொல்லி மருந்துகளும் வழங்கப்படும். இதற்கென முதல் வருடத்தில் 47 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

நீர்ப்பாசன வசதிகள்

- ❖ வளர்ந்த முந்திரி, பலா போன்ற மரப் பயிர்களுக்கு மழை நீரே போதுமானது. தனியே நீர்ப்பாசன வசதி ஏதும் தேவையில்லை. எனினும், புதிதாக நடவு மேற்கொள்ளப்படும் முந்திரி, பலா போன்ற நீண்டகால மரப் பயிர்களுக்கு, பாசன வசதி செய்து கொடுப்பது அவசியம். எனவே, 25 ஏக்கர் பரப்புக்கு ஒன்று என்ற வீதத்தில் ஆழ்துளை சமுதாயக் கிணறு அமைக்க வழிவகை செய்யப்படும். இந்த ஆழ்துளை சமுதாயக் கிணறுகள் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியமும்; இதர விவசாயிகளுக்கு 25 விழுக்காடு மானியமும் வழங்கப்படும். இதற்காக ஆகும் செலவினம் 27 கோடி ரூபாய் ஆகும். இதுவன்றி மின் இணைப்பு முன் பணம்; மின் கம்பம் ஊன்றுவதற்கான செலவு ஏதுமின்றி தமிழ்நாடு மின் வாரியம், முன்னுரிமையின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு மின் இணைப்பு வழங்கும்.
- ❖ நீர்ப்பாசன ஆதாரம் ஏதுமில்லாத விவசாயிகளுக்கு, கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதற்கான செலவினம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மூலம் 4 மாதங்களுக்கு மேற்கொள்ளப்படும். இதற்கான செலவினம் 62 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஆகும்.
- ❖ முந்திரிக் கன்றுகள் மறு நடவு செய்யும் இடங்களில், நீராதாரம் உள்ள இடங்களில், நுண்ணீர்ப் பாசன வசதி ஏற்படுத்த இயலும். சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன வசதி 9 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தித் தரப்படும்.
- ❖ முந்திரி, பலா, மா போன்ற பாதிக்கப்பட்ட நீண்டகாலப் பயிர்கள் மீண்டும் பயிர் செய்வதற்கான உதவிகள் செய்யப்படுகின்றன. எனினும், அவை பலன் தர சில ஆண்டுகள் ஆகும் என்பதால்; அதுவரை விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் ஏற்படும் வகையில், உடனடியாக இரு

பருவங்களுக்கு ஊடுபயிர் பயிரிடுவதற்கான உதவிகள் வழங்கப்படும். இதன் அடிப்படையில், சுமார் 91,000 ஏக்கர் பரப்பளவில் ஊடுபயிர் பயிரிடுவதற்கான சிறுதளைகள் 13 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பில் வேளாண்மைத் துறை மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

❖ புதிதாக நடவு செய்யப்பட்ட கன்றுகளுக்கு, இரண்டாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரை பராமரித்தலுக்கான செலவையும் அரசே ஏற்கும். பழுது கன்றுகளை நீக்கி, புதிய கன்றுகளை நடவு செய்தல்; ஆண்டுதோறும் உரங்கள், உயிர் உரங்கள், தாவரப் பூச்சிக்கொல்லிகள் மற்றும் இடைவெளி சாகுபடிப் பணிகளான களையெடுத்தல், செடிகளைச் சுற்றி தூர்வாருதல்; தேவையில்லாத கிளைகளை நீக்கி செடிகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல்; தேவையான தண்ணீர் பாய்ச்சுதல் ஆகியவை 334 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

❖ தற்போது நான் அறிவித்த இந்தச் சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ், வேளாண் பயிர்களுக்கு 65 கோடியே 22 இலட்சம் ரூபாயும்; தோட்டக் கலைப் பயிர்களுக்கு 724 கோடியே 96 இலட்சம் ரூபாயும்; ஆக மொத்தம் 790 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் இந்தச் சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

❖ விவசாயிகளுக்காக நான் தற்போது விவரித்த மறுசீரமைப்பு சிறப்புத் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்துவதற்காக, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, கூடுதல் ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலரைத் தலைவராகக் கொண்ட, ஒரு திட்ட மேலாண்மை மையம் அதாவது, Project Management Unit கடலூரில் ஏற்படுத்தப்படும். இந்தத் திட்ட மேலாண்மை மையத்திற்குத் தேவையான களப் பணியாளர்களும் பணியமர்த்தப்படுவார்கள்.

❖ “தானே” புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் “புயல் பாதித்த மாவட்டங்கள்”

என அறிவிக்கப்படும். இதன் மூலம் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் நிலவரி முழுவதுமாக ரத்து செய்யப்படும். மேலும், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று நிலுவையில் உள்ள 440 கோடியே 11 இலட்சம் ரூபாய் அளவிலான விவசாயிகளின் குறுகியகாலக் கடன் மத்தியகாலக் கடனாகவும்; மத்தியகாலக் கடன் நீண்டகாலக் கடனாகவும் மாற்றப்பட்டு, விவசாயிகளுக்குப் புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும். இந்த நடவடிக்கையின் மூலம் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழகத்தைத் தாக்கிய "தானே" புயலின் தீவிரம் மற்றும் அதனால் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். இத்தகைய பாதிப்புகளை முழுவதும் சீர் செய்ய வேண்டுமென்றால், நிச்சயம் ஆறு மாத காலமாவது தேவை. ஆனால், எனது அரசு எடுத்த பெரு முயற்சியின் காரணமாக, பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரது இடைவிடாத உழைப்பினால், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன. இதற்கு முன் சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட புயலுடன் தற்போதைய புயலை ஒரு சிறு ஒப்பீடு செய்தால் "தானே" புயலின் தாக்கம் எத்தகையது என்பதும் இந்த அரசின் துரித நடவடிக்கையும் இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவாக விளங்கும் என்று நம்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் 29.11.2000 அன்று கடலூருக்கு அருகில் 115 கிலோ மீட்டர் வேகத்தில் புயல் கரையைக் கடந்தது. அந்தப் புயலில் சுமார் 9,200 எக்டேர் பயிர்கள்தான் சேதமடைந்தன. 24 மின் மாற்றிகளும்; 4,329 மின் கம்பங்களும் தான் சேதமடைந்தன. இந்தச் சேதங்கள் மார்ச் 2001இல் தான் முழுமையாகச் சீரமைக்கப்பட்டன. இதே போன்று, மீண்டும் தி.மு.க. ஆட்சியில் 27.11.2008இல் காரைக்காலுக்கு வடக்கே, மணிக்கு 85 கிலோமீட்டர் வேகத்தில், "நிஷா" என்னும் புயல் கரையைக் கடந்தது. இந்தப் புயலில் 11,600 மின் கம்பங்கள்தான் சேதமடைந்தன. இந்த மின் கம்பங்களும், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, தருமபுரி, வேலூர் என பரவலாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள்

ஆகும். இவை 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தான் சீர் செய்யப்பட்டன. இவற்றுடன் ஒப்பிடும் போது, "தானே" புயலின் பாதிப்பு மிகவும் கடுமையானது ஆகும். இந்தப் புயல் கடலூர், விழுப்புரம் என்ற இரண்டு மாவட்டங்களில் ஒட்டுமொத்த கட்டமைப்புச் சேதங்களை ஏற்படுத்திவிட்டது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, மாவட்டம் முழுமைக்கும், புதிதாக மின் இணைப்புக் கொடுக்கப்படுவதைப் போன்ற ஒரு பெரும் பணி போர்க்கால அடிப்படையில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய ஒரு மிகப் பிரம்மாண்டப் பணி மிகக் குறுகிய காலத்தில் செய்யப்பட்டுள்ளது. அதாவது ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும் என்றால் "we have created a record"-ஒரு புதிய சாதனையைப் படைத்திருக்கிறோம். அரசின் இந்தப் பணிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் பாராட்டுவீர்கள் என நான் நம்புகிறேன்.

இந்தப் புயலின் தாக்கம் மிகக் கடுமையானது என்பதை அரசியல் தலைவர்களும் உணர்ந்துள்ளார்கள் என்றே நான் நம்புகிறேன். எனவேதான், கடலூர் மாவட்டத்திற்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர், அங்கே மின் அமைப்புகளைச் சீரமைக்க ஆறு மாத காலமாவது ஆகும் என்று கூறியுள்ளார். அதே போன்று, கடலூர் மாவட்டத்திற்கு சென்ற முன்னாள் முதலமைச்சரும் "இந்த மாதிரியான காரியங்களில், இந்த மாதிரியான நேரங்களில், எந்த அரசாக இருந்தாலும், அந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சியின் பணி என்று கருதுபவன் நான். எனவே, அந்தப் பணியை முறையாகச் செய்திருக்கிறேன்" என்று கூறி அரசின் நிவாரணப் பணிகளுக்கு மறைமுகமாக நற்சான்றிதழ் வழங்கிவிட்டு, பின்னர் சில நாட்கள் கழித்து, "அரசின் சார்பில் 850 கோடி ரூபாய் நிவாரணத்திற்காக முதலமைச்சர் ஒதுக்கியதாக அறிவித்து அனைத்து ஏடுகளும் கொட்டை எழுத்துகளில் வெளியிட்டுவிட்டன; மத்திய அரசிடம் 5,000 கோடி ரூபாய் தமிழகத்தின் சார்பில் நிதி உதவி கேட்டுவிட்டார்கள். இது தான் புயல் மழை நிவாரணப் பணி! இப்படியெல்லாம் அறிவித்துவிட்டால் மட்டுமே அது நிவாரணப் பணி நிறைவேறியதாக ஆகிவிடுமா? சர்க்கரை என்று எழுதிக் காட்டினால் நாவில் இனிப்பு வந்துவிடுமா?" என்று கூறியுள்ளார். எனது அரசு புயல் நிவாரணத்திற்காகப் பணம் வழங்கியதோடு மட்டுமல்லாமல், நிவாரணப் பணிகளை எவ்வாறு விரைந்து மேற்கொண்டது என்பதையும் இங்கே விரிவாக

எடுத்துக் கூறியுள்ளேன். அதற்காகத்தான் 2000 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் வீசிய புயல்கள் குறித்தும் ஒப்பிட்டுள்ளேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், 27.11.2008 அன்று "நிஷா" புயல் தாக்கத்தின் போது கடலூர் மற்றும் விழுப்பரம் மாவட்டங்களில் மிகவும் கால தாமதமாகவே பயிர் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, 02.03.2009 அன்று தான் பயிர் இழப்பீட்டுத் தொகைக்கான கடைசித் தவணை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. அதாவது மூன்று மாதங்கள் கழித்தே பயிர் இழப்பீட்டுத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்னும் மிக கால தாமதமாகத்தான் பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்திற்கு, பயிர்ச்சேத நிவாரண தொகையான 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் அரசால் 26.02.2010 அன்று, அதாவது 14 மாதங்களுக்குப் பின்னரே வழங்கப்பட்டது. இதில், ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் 06.08.2010 அன்றும்; 92 இலட்சம் ரூபாய் 17.09.2010 அன்றும்தான் மாவட்ட நிருவாகத்தால் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தெரிந்த மக்கள், எந்த அரசு துன்பப்படும் மக்களுக்காக விரைந்து பணிகளைச் செய்கிறது என்பதை நன்கு அறிவார்கள்.

இந்த அரசைப் பழிக்கும் உண்மைக்கு மாறான அறிக்கைகள் அரசின் நற்பணிகளை மறைத்துவிடாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தனது பாடலில் கூறியுள்ளபடி

"பொய்மை எப்போதும் ஓங்குவதும் இல்லை

உண்மை எப்பொழுதும் தூங்குவதும் இல்லை

என் மனதை நான் அறிவேன்

என் உறவை நான் அறிவேன்"

என்பதை இங்கு நினைவூட்ட விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தில் நிலவும் மின் நிலைமை குறித்த தங்களது

கவலைகளை எடுத்துரைத்தனர். மின்வெட்டு தீர்க்கப்படும் என மக்களுக்குத் தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தும், அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் தங்களது கருத்துகளைத் தெரிவித்தனர். எனவே, தமிழ்நாட்டின் மின் நிலைமை தொடர்பான விளக்கங்களை அளிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

2006ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்ற போது, தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத்தான் இருந்தது. பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினையடுத்து, 2007ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் ஏற்பட்ட மின் பற்றாக்குறை; 2008ஆம் ஆண்டு மிகவும் அதிகரித்து; நாங்கள் மீண்டும் 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை அத்தகைய நிலைமை தொடர்ந்து இருந்தது. 2008ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் மின் தேவை 10,909 மெகாவாட் என்று இருந்த போது, நமக்குக் கிடைக்கப்பெற்ற மின்சாரத்தின் அளவு 9,459 மெகாவாட் ஆகும். இந்த 9,459 மெகாவாட் மின்சாரத்தில், வெளிச் சந்தையிலிருந்து பெறப்பட்ட 1,200 மெகாவாட் மின்சாரமும் அடங்கும். அதாவது 1,450 மெகாவாட் என்ற அளவில் மின் பற்றாக்குறை இருந்தது.

இதனையடுத்து, 01.11.2008 முதல் மிக அதிகமான மின் கட்டுப்பாட்டு முறைகளை, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு கொண்டு வந்தது. இதன்படி, உயர் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 40 விழுக்காடு மின்வெட்டும்; குறைவழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 20 விழுக்காடு மின்வெட்டும்; சென்னைப் பெருநகரில் 1½ மணி நேர மின்வெட்டும்; மாநிலத்தின் பிற பகுதிகளில் 2 மணி நேர மின்வெட்டும்; மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தும் தருணங்களில் சென்னையைத் தவிர்த்து பிற இடங்களில் 1 மணி நேர மின் வெட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இது தவிர அறிவிக்கப்படாத மின்வெட்டும் பல மணி நேரம் இருந்தது. மேலும், விவசாயப் பயனீட்டாளர்களுக்கு 10 மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் செய்யப்படும் என்ற கட்டுப்பாட்டையும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு விதித்தது. இது மட்டுமல்லாமல், உயர் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலான

காலத்திற்கு 5 விழுக்காட்டிற்குள் மின்சாரம் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் விதிக்கப்பட்டது. பின்னர் இந்தக் கட்டுப்பாடுகள் சிறிதளவு தளர்வு செய்யப்பட்டன.

எனது தலைமையிலான அரசு பதவியேற்ற உடன், பழுதடைந்த நிலையில் இருந்த மின் நிலையங்களை உடனடியாகச் சரி செய்ய போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனவரி 2010 முதல் பழுதடைந்த நிலையில் இருந்த ''வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம்'', கடந்த ஜுன் மாதம் எனது அரசால் இயக்கி வைக்கப்பட்டது. இதே போன்று, பழுதடைந்திருந்த குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையம், கடந்த ஜுன் மாதம் இந்த அரசால் சரி செய்யப்பட்டது. இது தவிர, எனது அரசின் திறமையான நிருவாக நடவடிக்கை காரணமாக, தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டது.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கூடுதலாக நிறுவப்பட்ட மின் நிறுவு திறன் வெறும் 206 மெகாவாட் மட்டுமே. ஆனால் 2001 முதல் 2006 வரையிலான எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2518 மெகாவாட் மின் நிறுவு திறன் கூடுதலாக நிறுவப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சியில் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தாமல் இருந்ததுதான், இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கும் மின் பற்றாக்குறைக்கு முக்கியக் காரணமாகும். ஆனால், இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களோ தங்கள் ஆட்சிக் காலத்தில் பல புதிய மின் திட்டங்கள் தீட்டப்பட்டதாகத் தெரிவித்தார்கள்.

மின் திட்டங்கள் தீட்டப்படுவது ஒரு புறம் இருக்கட்டும். எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை, கடந்த ஐந்து ஆண்டுகளில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செயல்படுத்தியிருந்தாலே தமிழகம் மின் பற்றாக்குறையைச் சந்தித்து இருக்காது.

உதாரணமாக, வட சென்னை அருகில், வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.07.2002 அன்று எனது முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ, 19.06.2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் ஒதுக்கீடு பெறவும்; அனுமதிகளைப் பெற ஆய்வுகள் நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வட சென்னை அனல் மின் நிலையத்தில், 500 மெகாவாட் அனல் மின் நிலையத்தை நிறுவ 12.12.2005–அன்று அரசு ஒப்புதல் வழங்கப்பட்டது. 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைத்திடுவதற்கான கருத்துருவும் அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு, முதற்கட்டப் பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் 08.09.2005 அன்று துவக்கியது. **இவை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருந்தாலே 3,000 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைத்திருக்கும்.**

புதிய மின் திட்டங்களைத் தங்களது ஆட்சிக் காலத்தில் துவக்கியதாக தி.மு.க. உறுப்பினர்கள் கூறியுள்ளார்கள். கடலூர் பவர் கம்பெனி என்னும் நிறுவனத்திற்கு 1,320 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க அனுமதி அளித்து; அதிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த நிறுவனத்துடன் 28.09.2006 அன்று ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டது. ஆனால், தி.மு.க. ஆட்சி முடியும் வரை இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதுதான் மின் உற்பத்தியில் முந்தைய தி.மு.க. அரசு செலுத்திய அக்கறை.

தற்போது எனது அரசு பதவியேற்ற பின், தமிழக மின் நிலைமையைச் சீர் செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். தற்போது பணிகள் நடைபெற்று வரும் மின் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்ற எனது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை விரிவாக்க மின் திட்டம் யூனிட்–1 விரைவில் பலனுக்கு வரும் வகையில் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், எதிர்பாராதவிதமாக ஹரித்வாரில் உள்ள பாரத் மிகு மின் நிறுவனத்திலிருந்து மின்னாக்கி ஸ்டேட்டர், அதாவது Generator

Stator, எடுத்து வரும் வழியில் மத்தியப் பிரதேசத்தில் பாலம் இடிந்து Stator ஆற்றில் விழுந்துவிட்டது. இதன் விளைவாக, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் 7 மாத காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு ஜுன் மாதம் செயல்பாட்டிற்கு வரும்.

500 மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் கூட்டு முயற்சி மின் திட்டம்–I, தேசிய அனல் மின் கழகம் (NTPC) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும் திட்டம் ஆகும். இதன் மூலம், தமிழகத்திற்கு 375 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இந்தத் திட்டம் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரியாகக் கண்காணிக்கத் தவறியதால் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது, எங்களது அரசு பொறுப்பேற்றவுடன், இந்தத் திட்டத்தின் நிறுவுப் பணிகளைத் தீவிரமாகக் கண்காணித்து வந்ததன் பயனாக, இந்த ஆண்டு மார்ச் மாதம் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரவுள்ளது.

இதே போன்று தேசிய அனல் மின் கழகம் (NTPC) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும் 500 மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் கூட்டு முயற்சி மின் திட்டம்–II, 2011ஆம் ஆண்டு மார்ச் மாதமே செயல்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும். ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் அக்கறையின்மை காரணமாக, குறித்த காலத்தில் இந்தத் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. அந்தப் பணிகளையும், தற்போது நாங்கள் துரிதப்படுத்தி வருகிறோம். இந்த யூனிட்–II, இந்த ஆண்டு ஜுன் மாதம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும், 500 மொகாவாட் மின் திறன் கொண்ட மூன்றாவது யூனிட், அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

600 மொகாவாட் மின் திறன் கொண்ட, மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மூன்றாவது நிலை கடந்த செப்டம்பர் மாதமே செயல்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்திற்கான பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்றதால், குறிப்பிட்ட காலத்திற்குள், இந்தத் திட்டத்தை செயல்பாட்டிற்குக் கொண்டு வர முடியவில்லை. நாங்கள் எடுத்து

வரும் துரித நடவடிக்கை காரணமாக, இந்தத் திட்டம் இந்த ஆண்டு மார்ச் மாதம் செயல்பாட்டிற்கு வரும்.

600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் நிலையத்தின் திட்டம் யூனிட் –II, இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் செயல்பாட்டிற்கு வரும். அதாவது, **இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 1,950 மெகாவாட் மின்சாரமும்; அக்டோபர் மாதத்தில் மேலும் 600 மெகாவாட் மின்சாரமும் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ளோம்.**

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அனல் மின் நிலையங்கள் முறையாகப் பராமரிக்கப்பட்டு, சிறப்பாகக் கண்காணிக்கப்படுவதால் அவை மீண்டும் திறம்பட செயல்படத் துவங்கியுள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் கடந்த ஆண்டு உற்பத்தித்திறன் 82.05 விழுக்காடுதான். தற்போது இதன் உற்பத்தித் திறன் 90.36 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று, மேட்டூர் அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 86.88 விழுக்காட்டிலிருந்து 93.19 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று, வடசென்னை அனல் மின் நிலைய உற்பத்தித் திறனும் 81.41 விழுக்காட்டிலிருந்து 92.43 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறந்த நிருவாக நடவடிக்கைகளினால் உற்பத்தித் திறன் இவ்வாறு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, இந்த மூன்று அனல் மின் நிலையங்களிலிருந்தும் 1,836 மில்லியன் யூனிட்டுகள் அளவுக்கு மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 642 கோடி ரூபாய் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர, வெளிச் சந்தைகளிலிருந்து குறைந்த விலைக்கு மின்சாரம் பெறப்படுவதன் மூலம் 1,020 கோடி ரூபாய் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழகத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்; தற்போதுள்ள மின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு, வெளிச் சந்தையிலிருந்து தேவையான மின்சாரத்தைக் கொள்முதல் செய்யலாமே என்ற வினா பலர் மனதிலும் எழக்கூடும்.

வெளிச் சந்தைகளிலிருந்து போதிய மின்சாரத்தைப் பெறுவதில் பல்வேறு தடைகள் உள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தற்போதைய ஒட்டுமொத்தக் கடன் சுமை 50,000 கோடி ரூபாய்க்கு மேல் உள்ளது. மின்சாரம் விற்பனை செய்தவர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை 11,500 கோடி ரூபாய் ஆகும். கடந்த சில ஆண்டுகளாக மின்சார வாரியம் புதியதாகக் கடனைப் பெற்று, அதிலிருந்து பழைய கடனுக்கான தவணைத் தொகையையும், வட்டியையும் செலுத்தி வருகிறது. 2010–2011ஆம் ஆண்டு 21,385 கோடியே 70 இலட்சம் ரூபாய் கடன் பெற்று, 15,000 கோடி ரூபாய்க்கு மேல் கடனுக்கான தவணைத் தொகையையும், வட்டியையும் செலுத்தியுள்ளது. இவ்வாறான கடன் சுமையில் மின்சார வாரியம் உள்ளதாலும்; மின்சாரம் விற்பனை செய்தவர்களுக்குப் பணம் வழங்காததாலும்; தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்சாரம் வழங்க மின் உற்பத்தியாளர்களும், மின் வணிகர்களும் தயக்கம் காட்டுகின்றனர். இதன் காரணமாக, மின் உற்பத்தியாளர்கள் அதிக விலை கோருகின்றனர். இது மட்டுமல்லாமல், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது மின்வெட்டு நடைமுறையில் உள்ளது. உதாரணமாக, ஐதராபாத் நகரில் 3 மணி நேர மின் வெட்டும், ஆந்திரப் பிரதேசத்தின் பிற பகுதிகளில் 7 மணி நேர மின்வெட்டும்; கர்நாடக மாநிலத்தின் நகர்ப் பகுதிகளில் 2 மணி நேர மின்வெட்டும், ஊரகப் பகுதிகளில் 6 மணி நேர மின்வெட்டும் நடைமுறையில் உள்ளன. மின் உற்பத்தியாளர்கள் மின்சாரத்திற்கான விலையை உயர்த்துவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையிலும் வெளிச் சந்தையிலிருந்து அதிக விலை கொடுத்தாவது மின்சாரம் வாங்கி மின்வெட்டை நீக்கலாம் என்றாலும்; அந்த மின்சாரத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு வழிவகை இல்லாத சூழ்நிலை உள்ளது. இந்தியாவின் தென் பிராந்தியத்திற்கும், நாட்டின் இதர பிராந்தியங்களுக்கும் இடையே ஒருங்கிணைந்த மின் கட்டமைப்பு வசதிகள் இல்லை. தென் பிராந்தியங்களுக்குத் தேவையான மின் தொடரை மத்திய அரசு உருவாக்கவில்லை. எனவே மின் கடத்தும் மின் தொடர் அமைப்பில், அதாவது, Transmission Corridor–இல் மின் தொடர் நெருக்கடி உள்ளதன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து தேவையான மின்சாரம் பெற இயலவில்லை. உதாரணமாக,

குஜராத் மாநிலத்திலிருந்து யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் 20 காசு என்ற விலையில் 500 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்கான ஒரு ஒப்பந்தம் தற்போது நடைமுறையில் உள்ளது. ஆனாலும், மின் தொடர் நெருக்கடி காரணமாக, தற்போது 235 மெகாவாட் அளவிற்கே மின்சாரம் பெற இயலுகிறது.

வெளிச் சந்தைகளிலிருந்து மின்சாரம் பெறுவதில் மிகுந்த இடர்பாடுகள் உள்ள சூழ்நிலையில், நமது மாநிலத்தில் துவக்கப்பட்டுள்ள மின் திட்டங்களை விரைந்து செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதுதான் மின் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதால்தான், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நடப்பு நிதியாண்டில் 6,455 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான், நான் ஏற்கெனவே தெரிவித்தபடி இந்த ஜூன் மாதத்திலேயே 1,950 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் கிடைக்கப் பெறும்.

நான் இதுவரை விரிவாக எடுத்துக் கூறிய காரணங்களால் தான் மின் பற்றாக்குறையை இன்னமும் சீராக்க இயலவில்லை. இந்த மின் பற்றாக்குறை நடப்பாண்டு ஜூன் மாதம் முதல் படிப்படியாக குறைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு, அதாவது 2013 மத்தியில், மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்து ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் சிலர் கூறினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் பகுதியில் உள்ள மக்களின் அச்சத்தைத் தீர்க்கும் வகையில், மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழுவின் இறுதிக் கூட்டம் 31.01.2012 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்; கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக ஆளுநர் உரையில் எதையும் தெரிவிப்பது சரியாக அமையாது என்ற காரணத்தால் தான், ஆளுநர் உரையில் இது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளத்தில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அணுமின் நிலையங்கள் அமைப்பதற்கு 1988ஆம் ஆண்டு இந்தியா மற்றும் சோவியத் ரஷ்யா இடையே

ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது என்பதையும்; 2001ஆம் ஆண்டு இந்திய அணுமின் கழகத்தால், அதாவது Nuclear Power Corporation of India Ltd. என்ற நிறுவனத்தால், பணிகள் துவக்கப்பட்டு; 95 விழுக்காடு பணிகள் முடிவடைந்த நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் முதல் அந்தப் பகுதி மக்கள் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த அச்சம் காரணமாக போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய எந்த ஒரு திட்டச் செயல்பாட்டினையும் எனது அரசு ஊக்குவிக்காது என்பதால், இந்த அணுமின் நிலையத்தால் பாதிப்பு ஏற்படும் என்ற அந்தப் பகுதி மக்களின் அச்சத்தை நீக்கிய பின்னரே, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும்; அதுவரை இந்தத் திட்டத்தின் பணிகளை நிறுத்தி வைக்குமாறும் நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டதுடன், தமிழக அமைச்சரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் அடிப்படையில், மத்திய அரசு கூடங்குளம் மக்களின் அச்சத்தைப் போக்குவதற்காக, 15 பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த, கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்புக் குழு சார்பாக மூன்று பேர் நியமிக்கப்பட்டனர். மாநில அரசின் சார்பாக, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும்; திருநெல்வேலி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் அந்தக் குழுவில் இடம் பெற்றனர். இந்தக் குழுவின் கூட்டம் 08.11.2011, 18.11.2011, 15.12.2011 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில், மைய அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் அணுமின் நிலைய எதிர்ப்புக் குழுவினரால் பல்வேறு வினாக்கள் எழுப்பப்பட்டன. அவர்களால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கான பதில் அறிக்கையை வல்லுநர் குழு அளித்ததோடு மட்டுமல்லாமல், கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பானதுதான் என்பது குறித்த 77 பக்க அறிக்கையையும் அளித்தது.

இந்த நிலையில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் இறுதிக் கூட்டம் 31.01.2012 அன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அணுமின் நிலைய எதிர்ப்புக் குழுவின் சார்பாக, மூன்று பிரதிநிதிகளில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டுள்ளார்.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, மேலும் ஒரு அறிக்கையை அளித்ததுடன், இந்தக் குழுவின் பணி முடிவுற்றதாக அறிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், கூடங்குளம் அணுமின் நிலையப் பாதுகாப்பு குறித்தும்; அப்பகுதி மக்களிடையே இது குறித்து தற்போது நிலவி வரும் எண்ணங்கள் மற்றும் அச்ச உணர்வுகள் குறித்தும் அறிந்து; மாநில அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாநில அரசால் ஒரு வல்லுநர் குழு உடனடியாக நியமிக்கப்படும். இந்தக் குழு தனது அறிக்கையை அரசுக்கு விரைந்து அளிக்கும். இந்த வல்லுநர் குழு அறிக்கையின் அடிப்படையில், மாநில அரசு மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மக்கள் இந்த அரசு மீது வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக, மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை இந்த அரசு தொய்வின்றி ஆற்றும்; மக்கள் நலத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு; மக்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் இந்த அரசுக்கு இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

என்னுடைய இந்தப் பதிலுரையின் மூலம், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு பதில் கிடைத்திருக்கும் என்று நான் நம்புகிறேன். எனது விளக்கங்களை, இந்தப் பதிலுரையை ஏற்றுக் கொண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுத்துள்ள திருத்தங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு, தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
12.02.2012 அன்று சென்னை, மணலியில் பிறழ்நிலை நீராவி டர்பைன் ஜெனரேட்டர் உற்பத்தி ஆலையைத் தொடங்கி வைத்து ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

உலகத்திலேயே சிறந்த ஆட்டோ மொபைல் தொழில் கேந்திரமாக சென்னை உருவெடுத்து வருகிறது!

தோஷிபா ஜே.எஸ்.டபிள்யு. டர்பைன் அன்ட் ஜெனரேட்டர் தொழிற்சாலையின் திறப்பு விழாவில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தோஷிபா ஜே.எஸ்.டபிள்யு., இதுவரை சுமார் ரூ.650 கோடியை முதலீடு செய்துள்ளது. 370 பேர் நேர்முகமாக வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இந்தத் தொழிற்சாலை 1,000 மெகாவாட் வரை திறன் கொண்ட சூப்பர் கிரிட்டிகல் டர்பைன்கள் மற்றும் ஜெனரேட்டர்களை உற்பத்தி செய்யக்கூடிய திறன் பெற்றது.

இவை, அனல் மின்சார நிலையங்களில் நிலக்கரிப் பயன்பாட்டைக் குறைக்க உதவும். தற்போது இந்தியாவில் சூப்பர் கிரிட்டிகல் டர்பைன்களுக்குத் தேவையுள்ளது. அந்தப் பற்றாக்குறையைப் போக்க இந்தத் தொழிற்சாலை உதவும். மின்சார உற்பத்தியைப் பெருக்க உறுதுணையாக அமையும். இப்பின்னணியில் தோஷிபா ஜே.எஸ்.டபிள்யுவின் பணி முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பில், இந்தத் தொழிற்சாலை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு மைல் கல்லாகும். இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே வரலாற்று ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் பன்னெடுங்காலத் தொடர்பு உள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர நல்லெண்ணமும், நட்புறவும், மரியாதையும் உள்ளன. இது இன்று வரை தொடர்ந்து நீடித்து வருகிறது; வலுவடைந்து வருகிறது. இரண்டு நாடுகளும் சுதந்திரம், ஜனநாயகம், சட்டத்தின் மாட்சி ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளன.

இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே சீனா வாயிலாகக் கலாச்சாரப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. இந்தியத்துறவி போதிசேனர் கி.பி.736–இல் ஜப்பானுக்குச் சென்று புத்த மதத்தைப் பரப்பியுள்ளார். அங்கு புத்தரின் பிரம்மாண்டான சிலையும் எழுப்பப்பட்டுள்ளது.

ஜப்பானும் இந்தியாவும் “ஜப்பான்–இந்தியா–21ஆம் நூற்றாண்டில் உலகளாவிய பங்குதாரர்கள்” என்ற அடிப்படையில் செயல்பட ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

ஏ.டி.கெர்னே வெளிநாட்டு நேரடி முதலீடு சார்ந்த நம்பிக்கைக் குறியீட்டு எண் 2012–ன்படி, சீனாவுக்கு அடுத்தபடியாக 2ஆவது நிலையில் இந்தியாதான் நேரடி அன்னிய முதலீட்டை அதிகளவில் ஈர்க்கக்கூடிய ஆற்றலுடன் திகழ்கிறது.

ஜப்பானியக் கம்பெனிகளுக்கு இந்தியா விசாலமான சந்தையாக உள்ளது. சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியாதான் ஜப்பானுடன் அதிகளவில் வர்த்தகம் நடத்தும் என்பது இன்னும் 3 ஆண்டுகளில் நனவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்தியாவும், ஜப்பானும் விரிவாக பொருளாதாரக் கூட்டமைப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளன. இது மிகவும் விரிந்து பரந்தது. 90 சதவீத வர்த்தகம், சேவை, முதலீடு, அறிவுசார் சொத்துரிமை போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

இதன் அடிப்படையில், இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் இடையிலான பொருளாதார உறவு பன்மடங்கு அதிகரிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் ஜப்பானின் முதலீட்டை ஈர்ப்பதில் முதலிடத்தில் உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. இது குறித்து, ஜப்பான் அரசின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை தமிழக அரசுடன் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு குறித்து ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், ‘ஜெட்ரோ’(ஜப்பானிய வெளி வர்த்தக அமைப்பு) தமிழக அரசின் வழிகாட்டிப் பிரிவுடன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் தேதி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

ஜெட்ரோ தவிர ஹிரோஷிமா பிரிபக்சர், மிசிகோ வங்கி ஆகியவையும் தமிழக அரசின் வழிகாட்டிப் பிரிவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இதே போல, வேறு சில அமைப்புகளும் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளன. ஜப்பானுக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பு வலுவடைந்து வருகிறது என்பதை இந்நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

தற்போது, இந்தியாவில் முதலீடு செய்துள்ள வெளிநாடுகளில் 5ஆவது இடத்தில் ஜப்பான் உள்ளது. இந்தியாவில், ஜப்பான் சுமார் ரூ.35,000 கோடி அளவுக்கு 2000ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2011 செப்டம்பர் வரையிலான காலக்கட்டத்தில் முதலீடு செய்துள்ளது.

இந்தியாவில் செய்யப்பட்டுள்ள மொத்த வெளிநாட்டு முதலீட்டில் ஜப்பானின் பங்கு 4.8 சதவீதமாகும். சமீபகாலமாக ஜப்பானின் நேரடி அன்னிய முதலீட்டை ஈர்ப்பதில் தமிழகம் முதன்மை பெற்றுள்ளது.

இந்தியாவில், 1,422 ஜப்பானியக் கம்பெனிகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 286 ஜப்பானிய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. சென்னையில் உள்ள ஜப்பானிய நிறுவனங்களின் பங்கு 20.11 சதவீதமாகும்.

பல ஜப்பான் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வந்துள்ளன. இது தொடர்பாக விரைவில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன. தமிழகத்தில் ஜப்பானிய முதலீடு அதிகரித்து வருவது மகிழ்ச்சிகரமானதாகும். உலகத்திலேயே சிறந்த ஆட்டோ மொபைல் தொழில் கேந்திரமாக சென்னை உருவெடுத்து வருகிறது.

ஜப்பானில் திறன்மிக்க தொழிலாளிகளுக்கு கடும் தேவை உள்ளது. சென்னையைப் பொறுத்த வரை திறன்மிக்க தொழிலாளர்கள் ஏராளமாக உள்ளனர். சர்வதேச அளவில் ஒப்பிடும்போது அவர்கள் பெறுகின்ற ஊதியமும் குறைவுதான்.

எனவே, குறைந்த செலவில் தரமான பொருட்களை உற்பத்தி செய்வது சாத்தியமாகிறது. தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த முனைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நோக்கியா, நிசான், டேம்லர், உலக வங்கி, போர்டு, ஹுண்டாய், செயிண்ட் கோபைன், ஸ்டென்சார்ட், சான்சா உள்ளிட்ட பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பாகவும், ஜப்பானிய நிறுவனங்களுடன் தமிழக அரசு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. தொழில் பூங்காக்கள், சென்னை–பெங்களூரு அதிநவீன நெடுஞ்சாலை, கடல் நீரைக் குடிநீராக்குதல் உள்ளிட்ட பல பணிகளை உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம்.

எண்ணூர் துறைமுகத்திற்குப் பொருட்களை கொண்டு செல்ல தாமதமாகிறது என்பதை நான் அறிவேன். குறிப்பாக தோஷிபா, நிசான் நிறுவனங்கள் பாதிப்புக்கு இலக்காகியுள்ளன. துறைமுகத்திற்கு விரைவாக செல்லத்தக்க வகையில் சாலை வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் காலதாமதம் தவிர்க்கப்படும்.

ஜப்பானை எனது அரசு மிக முக்கியமான பங்குதாரராகக் கருதுகிறது. ஜப்பானுக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையே வலுவான, வளமான ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ளது. ஜப்பானில் இருந்து நேரடி அன்னிய முதலீட்டை ஈர்க்க எனது அரசு தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும். அபரிமிதமான வாய்ப்புள்ள தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு ஜப்பானிய முதலீட்டாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதியில்
13.02.2012 அன்று நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*

மக்கள் நலம் ஒன்றே
எங்கள் குறிக்கோள்!

தமிழகத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள திருச்சி மாவட்டத்திற்குட்பட்ட, சரித்திரப் புகழ் வாய்ந்த ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு, எனது அருமை தொகுதி மக்களாகிய உங்களை எல்லாம் கண்டு, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, உங்களோடு உரையாடும் வாய்ப்பினைப் பெற்றுள்ளதில் உள்ளபடியே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் உங்களை எல்லாம் சந்தித்து, உங்களிடம் வாக்குகளை சேகரித்த போது, பல்வேறு வாக்குறுதிகளை நான் உங்களிடம் தெரிவித்திருந்தேன். என்னுடைய வாக்குறுதிகளை நம்பி, கடந்த சட்டமன்றத் தேர்தலில்,

என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தீர்கள். இதனையடுத்து, மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், கடந்த ஆண்டு ஜூன் மாதம் இங்கு வந்து உங்களையெல்லாம் சந்தித்து நன்றி தெரிவித்ததோடு, நான் அளித்த தேர்தல் வாக்குறுதிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில்,

190 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சென்றேன். மீண்டும், தற்போது இரண்டாம் முறையாக உங்களை எல்லாம் சந்தித்து, மொத்தம் 240 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்குவதில் நான் மன நிறைவு அடைகிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஏழை எளிய மக்களின் நலனுக்காகப் பாடுபடும் அரசு. மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் அரசு. மக்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படும் போதெல்லாம் ஓடோடிச் சென்று அவர்களின் துயர் துடைக்கும் அரசு.

அந்த வகையில் தான், அண்மையில் வீசிய "தானே" புயல் காரணமாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் முழுவதுமாகப் புரட்டிப் போடப்பட்டு, அந்த மக்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாக இருந்த நேரத்தில், அவர்களின் உற்ற நண்பனாக இந்த அரசு பல்வேறு உதவிகளை உடனடியாகச் செய்தது. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவிகளுக்காகவும், சேதமடைந்த கட்டமைப்புகளின் உடனடி சீரமைப்பிற்காகவும், 850 கோடி ரூபாயை உடனடியாக நான் வழங்கினேன். நிவாரண நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையிலே எடுத்து, புயல் பாதிக்கப்பட்ட இடங்கள் மிகக் குறுகிய கால அளவிலேயே இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு எடுத்தது. இதனால், புயலின் தாக்கத்திலிருந்து அப்பகுதி மக்கள் மீண்டனர். மேலும், வீடுகளை இழந்த மக்களுக்கு1,000 கோடி ரூபாய் செலவில் 1 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. புயல் வேகத்தில் செயல்பட்ட

எனது அரசு, புயல் பாதிப்பைத் தணித்ததோடு மட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் தெரிவித்தபடி, அனைவரும் அசந்து போகும் அளவுக்கு 790 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 5 ஆண்டுகளுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை எனது பதிலுரையில் அறிவித்தேன். அந்த மறுவாழ்வுத் திட்டத்தினை அனைத்துத் தரப்பு மக்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும் பாராட்டி வரவேற்றுள்ளன.

ஆனால், அதனை விமர்சிக்கும் வகையில், ‘‘அசந்து தான் போனார்கள்’’ என்ற தலைப்பில் ‘‘அசடு’’ வழியும் ஓர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார் ‘‘ஊழல் மூலம் உலகத்தையே அசர வைத்த’’ ஒரு கட்சியின் தலைவர். இதைப் பார்க்கும் போது, ஒரு நிகழ்ச்சி எனது நினைவிற்கு வருகிறது.

பெருஞ்செல்வந்தரான பட்டினத்தார், தன்னுடைய சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு துறவறம் பூண்டவர். கௌதம புத்தருக்கு இணையாக தமிழகத்திலே கருதப்படுகின்றவர். இவர் ஒரு நாள் நடந்த களைப்பால், மேல் சட்டை போடாமல் வயலில் படுத்துக் கொண்டிருந்தார். அறுவடை நடந்திருந்த வயல் அது. குச்சி குச்சியாய்ப் பூமியில் இருந்து கிளம்பி அறுபடாதிருந்த வைக்கோல், அவர் உடம்பை குத்திக் கொண்டிருந்தது. அதைச் சட்டை செய்யாமல், வரப்பு மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தார்.

அந்த வழியாகப் போன இரண்டு பேரில் ஒருவர், ''யாரோ மகான்'' என்று கூறி அவரை வணங்கி, வரப்பிலிருந்து இறங்கி நடந்தார். மற்றொருவர், ''ஆமாம், ஆமாம். இவர் பெரிய சாமியாராக்கும்! தலையணை வைச்சுத் தூங்குற சுகம் மாதிரி வரப்பு மேல தலை வைச்சு தூங்குகிறார் பாரு! ஆசை பிடித்தவர்'' எனத் தூற்றினார். அவர்கள் அங்கிருந்து போனதும் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார், ''நமக்கு இது தோன்றவில்லையே'' என்று வருத்தப்பட்டு, வரப்பிலிருந்து தலையைக் கீழே வைத்துப் படுத்தார்.

சற்று நேரத்தில், அந்த இருவரும் அதே வழியாகத் திரும்பி வந்தனர். வரப்பிலிருந்து தலையை இறக்கிக் கீழே வைத்திருந்த பட்டினத்தாரைப் பார்த்து, முதல் நபர் ''பார்த்தியா, நீ சொன்னதைக் கேட்டு உடனே அவர் கீழே இறங்கிப் படுத்துவிட்டார். இப்பவாவது ஒத்துக்கொள் இவர் மகான் தானே ?'' என்றார். மற்றவரோ, ''இவனெல்லாம் ஒரு சாமியாரா ? தன்னைப் பற்றி, யார் யார், என்னென்ன பேசுகிறார்கள் என்று ஒட்டுக் கேட்கிறார்'' என்று கேலி செய்தார். பட்டினத்தாருக்கே தலை சுற்றியது.

தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், அரசின் நல்ல திட்டங்களை, பாராட்ட மனமில்லாமல், வரப்பில் நடந்து சென்றவரைப் போன்று விமர்சிக்க வேண்டும் என்கிற வெறியுடன், குறை கூற வேண்டும் என்ற ஒரே நோக்குடன் விமர்சிக்கும் விமர்சனங்களை புறந்தள்ளுவதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை.

யார் போற்றினாலும், தூற்றினாலும், என் கடன் பணி செய்து கிடப்பதே. தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழக மக்களின் வளர்ச்சிதான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்.

என்னைப் பொறுத்த வரையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது, ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் வளர்ச்சியாக இருக்க வேண்டும். எனவேதான், எனது அரசு, ஏழை மக்கள் உடனடியாகப் பயன்பெறும் வண்ணம், எந்தவித விலையும் கொடுக்காமல் பெறக்கூடிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

அதே சமயத்தில், ஏழை எளியோர் அரசின் சலுகைகளை மட்டுமே எப்போதும் சார்ந்தில்லாமல், தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்கும் வகையிலான பொருளாதார வளத்தை

அவர்கள் பெற வேண்டும் என்பது இந்த அரசின் முக்கியக் குறிக்கோளாகும். அதன் அடிப்படையில், குடும்ப அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களான, விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டமும் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம், இவ்வாறு மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உடனடியாகத் தீர்க்க வழிவகை செய்வதுடன்; தங்களின் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் தீட்டப்பட்ட திட்டங்களாகும்.

ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட திட்டங்கள் எல்லாம் உங்கள் வருவாயைப் பெருக்குவதற்கு பதிலாக, அவர்களின் குடும்ப வருவாயைப் பெருக்கும் திட்டங்களாக அமைந்தன. இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம் அவர்களின் குடும்பத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வருவாய் கிடைக்கும் வகையிலேயே அமைந்தது. அதாவது, அரசு செலவில் அவர்கள் தங்கள் குடும்ப வருமானத்தை பன்மடங்கு பெருக்கிக் கொண்டனர். இந்த இலவசத் திட்டத்தை நினைக்கும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் இருந்த ஒரு பெரிய குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன. குளத்திலிருந்து தண்ணீர் வெளியே செல்வதற்காக அமைக்கப்பட்ட மதகின் பக்கத்தில் இருந்து கொண்டு, ஒரு கொக்கு, மீன்கள் ஏமாந்த நேரத்தில் யாருக்கும் தெரியாமல் மீன்களைப் பிடித்துத் தின்று வந்தது. ஒரு நாள், இந்தக் கொக்கு மிகுந்த துயரமுடன் இருப்பது போல் குளத்தின் கரையில் வந்து அமர்ந்து கொண்டது.

இவ்வாறு சோகமாக இருந்த அந்தக் கொக்கிடம், ஒரு நண்டு வந்து கொக்கின் துயரம் என்னவென்று கேட்டது. "ஒன்றுமில்லை. இந்தக் குளத்தினை குத்தகை எடுத்தவர், தண்ணீரை இறைத்துவிட்டு, இந்த மீன்களைப் பிடித்துச் சென்று விடுவாராம். இதனால் மீன்களின் கதி என்னவாகுமோ ? என்ற கவலையில்தான் நான் சோகமாக உள்ளேன்" எனக் கூறியது அந்தக் கொக்கு. இதனை உண்மை என்று நம்பிய நண்டு, இதை குளத்திலுள்ள மீன்களிடத்தில் கூறியது. இதனால் கவலையடைந்த

மீன்கள், இனி என்ன செய்யலாம் என அந்தக் கொக்கிடம் சென்று ஆலோசனை கேட்டன. அதற்கு அந்தக் கொக்கு, “நான் சிரமம் பார்க்காமல், கொஞ்சம் தொலைவில் உள்ள குளத்திற்கு மீன்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று, சேர்த்து விடுகிறேன். மீன்கள் கவலையின்றி வாழலாம்” எனக் கூறியது. இதனை நம்பிய மீன்கள், இந்த திட்டத்திற்கு இணங்கியது. கொக்கு, மீன்களை ஒவ்வொன்றாக, கொஞ்சம் தொலைவில் உள்ள குளத்திற்கு எடுத்துச் செல்வது போல் சென்று, குளத்தின் அருகில் உள்ள பாறையின் மீது வைத்துத் தின்றுவிட்டு, மீண்டும் பறந்து வந்து, அடுத்த மீனை தூக்கிச் சென்றது. இவ்விதமாக கொக்கிற்கு, எவ்வித சிரமமும் இல்லாமல், தினமும் நல்ல விருந்து கிடைத்தது. ஒரு நாள் நண்டு, தன்னையும் அந்தக் குளத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனக் கேட்டது. இதற்கும் கொக்கு சம்மதித்தது. நண்டு, கொக்கின் கழுத்தில் மாலை போன்று தொங்கிக் கொண்டது. கொக்கு பறக்க ஆரம்பித்தது. தாழ்வாக பறந்துச் சென்ற கொக்கின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த நண்டு, கொஞ்சம் தொலைவிலுள்ள பாறையை பார்த்தது. பாறையில் ஆங்காங்கே, மீன்களின் முட்கள் நிறைய கிடப்பதைப் பார்த்து, கொக்கு அந்த மீன்களைத் தின்று விட்டது என்பதை உணர்ந்தது. இனிமேல் கொக்கினை உயிருடன் விட்டு வைக்கக் கூடாது என்று எண்ணிய நண்டு, தனது கொடுக்குகளினால் கொக்கின் கழுத்தினைப் பிடித்து, இறுக்க ஆரம்பித்ததும், கொக்கு துடி துடிக்க ஆரம்பித்தது. பறக்க முடியாமல் கீழே விழுந்த கொக்கின் கழுத்தை இறுக்கி கொன்று விட்டது நண்டு. இறந்த கொக்கின் தலையை துண்டித்து இழுத்துக் கொண்டு பழைய குளத்திற்கு வந்தது. கொக்கின் தலையுடன் வந்த நண்டை பார்த்து, மீன்கள் என்னவென்று கேட்டன. அதற்கு நண்டு, கொக்கு மீன்களைக் கொன்று தின்று விட்டதைக் கூறியது. நல்லகாலம், கொக்கிடமிருந்து தப்பித்து விட்டோம் என மகிழ்ந்து, மீன்கள் நண்டிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டன. இந்தக் கொக்கைப் போன்ற சுயநலம் கொண்டதாகத்தான், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் செயல்பாடு இருந்தது. ஆனால், எனது தலைமையிலான அரசு மக்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இன்று நடைபெறும் இந்த இனிய விழாவில், 7 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட மணப்பாறை அரசு

மருத்துவமனைக் கட்டடம்; பள்ளி வகுப்பறைகள்; குடிநீர் வசதிகள்; ஆய்வகங்கள்; பிற்படுத்தப்பட்டோர் விடுதிக் கட்டடம்; கூட்டுறவுத் துறை வங்கிக் கட்டடம்; கிராமச் சந்தை மற்றும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கட்டப்பட்ட பாலங்கள்; சமுதாயக் கூடங்கள்; பள்ளிக் கட்டடங்கள்; சாலைகள் ஆகியவற்றை மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டக் கல்விக்கு எனத் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்ற பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றது. இந்தச் சட்டப் பல்கலைக்கழகத்துடன், 7 அரசு சட்டக் கல்லூரிகளும், ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இணைக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில், சீர்மிகு சட்டப் பள்ளி– School of Excellence–2002ஆம் ஆண்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. எனினும், தமிழக சட்டக் கல்வியின் தரத்தை, சர்வதேச சட்டப் பள்ளிகளின் தரங்களுக்கு இணையாக அமையச் செய்யும் வகையில், நமது மாநிலத்தில் தேசிய நிலையிலான சட்டப் பள்ளி ஒன்று தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீரங்கம் வட்டத்தில், தேசிய சட்டப் பள்ளி ஒன்றை நிறுவுவதற்கான சட்டம் சட்டமன்றத்தில் இயற்றப்பட்டது.

ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில், சுமார் 25 ஏக்கர் நிலப் பரப்பில், சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அமையவிருக்கும் இந்த தேசிய சட்டப் பள்ளிக்கான அடிக்கல்லை இன்று நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஏழை, எளிய மாணவ – மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடந்த ஜூலை மாதம் துவங்கப்பட்டது. இனாம்குளத்தூர், அரசினர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வரும் இந்தக் கல்லூரிக்கு, நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான இடத்தில் 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சொந்தக் கட்டடம் கட்ட இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், அதிக அளவில் சாகுபடியாகும் வாழையின் தரத்தை நீண்ட காலம் பாதுகாக்கும்

வகையில், அந்தநல்லூர் ஒன்றியம், திருசெந்துறை கிராமத்தில், 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில், குளிர்பதனக் கிட்டங்கியுடன் கூடிய வாழை வணிக வளாகம் அமைக்க நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க உதவும் கால்நடைகளை நல்ல முறையில் பராமரிக்க ஏதுவாக, அந்தநல்லூர், குழுமணி, நவலூர் குட்டப்பட்டு மற்றும், பெட்டவாய்த்தலை ஆகிய கிராமங்களில் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில், புதிதாக கால்நடை மருத்துவமனைக் கட்டடங்கள் கட்ட இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப் பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதற்கு ஏதுவாக, பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், அந்தநல்லூர் ஒன்றியத்தில் 18 குடியிருப்புகளிலும்; மணப்பாறை ஒன்றியத்தில் 22 குடியிருப்புகளிலும்; மணிகண்டம் ஒன்றியத்தில் 7 குடியிருப்புகளிலும்; ஆக மொத்தம் 47 குடியிருப்புகளில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனி மின்விசைத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இதுவன்றி, ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி உள்ள 40 இடங்களில், அங்குள்ள கூடுதல் தேவையைக் கருத்தில் கொண்டு, 2 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் தனி மின்விசைத் திட்டத்திற்கான அடிக்கல்லையும் இன்று நான் நாட்டியுள்ளேன்.

இதே போன்று, புதிதாக குடியிருப்புகள் உருவாகியுள்ள 114 இடங்களில், 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் சிறு மின்விசைத் திட்டம் ஏற்படுத்தவும் இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். மணப்பாறை ஒன்றியத்தில், 64 குடியிருப்புகளும்; மணிகண்டம் ஒன்றியத்தில், 50 குடியிருப்புகளும் இதன் மூலம் பயன் பெறும். இது தவிர, போதுமான குடிநீர் வசதி இல்லாத இடங்களில், 42 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பில், குடிநீர்க் குழாயினை நீட்டிப்பதற்கான திட்டத்திற்கும், இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இந்தக் குடிநீர் திட்டங்கள் அனைத்தும் வரும் கோடைக் காலத்திற்கு முன்பாக நிறைவேற்றப்பட்டுவிடும்.

திருச்சிராப்பள்ளி மற்றும் ஸ்ரீரங்கம் பகுதிகளில் வசிக்கும், 432 குடிசைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், ஸ்ரீரங்கம் வட்டம், வெள்ளித் திருமுத்தம் என்ற இடத்தில், 24 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான அடிக்கல்லை இன்று நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீரங்கத்தில், தமிழை வளர்க்கும் விதமான கலை அரங்கம் ஏதுமில்லை என்பதால், ஸ்ரீரங்கம் சிங்கபெருமாள் கோயில் வளாகத்தில், 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள நவீன கலை அரங்கத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதரை தரிசிப்பதற்காக, அம்மா மண்டபம் படித்துறையில் நீராடி, ராஜ கோபுரம் வரை பாத யாத்திரையாக வரும் பக்தர்களுக்கு, மழை மற்றும் வெயில் காலங்களில் ஏற்படும் சிரமத்தை நீக்கும் வகையில், அம்மா மண்டபம் முதல் ராஜ கோபுரம் வரை 1 கோடி ரூபாய் செலவில், மேற்கூரையுடனான நடைபாதை அமைப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, முக்கொம்பு சுற்றுலாத் தலத்தை 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகளுக்கான அடிக்கல்லை இன்று நாட்டியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவையன்றி, 10 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் கட்டப்பட உள்ள பாலங்கள், சாலைகள், அங்கன்வாடி மையங்கள், சமையல் கூடங்கள், நியாய விலைக் கடைகள், சமுதாயக் கூடங்கள், பள்ளி கழிவறைகள், பால் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், ஆகியவற்றிற்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலூர், வெள்ளத் திருமுத்தம், கொண்டயம் பேட்டை, திம்மராய சமுத்திரம் ஆகிய பகுதிகளில் 1927ஆம் ஆண்டு முதல் குடியிருந்து வரும் 1,810 நபர்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருந்து வந்தது. இவர்களுக்கு உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்க நான் உத்தரவிட்டிருந்தேன். இதன் அடிப்படையில், இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை இன்று வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கும் திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் 18.65 ஏக்கர் நிலப்பரப்பில், நீண்ட பிரகாரங்களுடன் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி நீண்டப் பிரகாரத்தைச் சுற்றி சுவாமி தரிசனம் செய்ய வசதியாக, 6 நபர்கள் அமரக்கூடிய மின்கலன் மூலம் இயக்கப்படும் சீருந்து அதாவது Battery operated vehicle திருக்கோயில் நிருவாகம் மூலம் வாங்கப்பட்டுள்ளது. இதனை இன்று முதல் இயக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பகுதியில் உள்ள மாணவ – மாணவியர் மற்றும் பொது மக்கள் கூடுதல் போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், 6 புதிய நகர வழித்தடங்களிலும், ஒரு புறநகர வழித்தடத்திலும் பேருந்துகள் இன்று முதல் இயக்கப்படும். இதனைத் தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி மற்றும் தங்கக் காசு; வீட்டுமனைப் பட்டா; முதியோர் ஓய்வூதிய உதவித் தொகை; முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகள்; விலையில்லா வேட்டி–சேலை; விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்; விலையில்லா சைக்கிள்; பள்ளி மாணவ–மாணவியருக்கான ஊக்கத் தொகை; விலையில்லா மடிக்கணினி; விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகள்; மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள்; விலையில்லா தையல் இயந்திரம்; மாற்றுத் திறனாளிகளுக்கான இரு சக்கர நாற்காலி; பசுமை வீடுகள்; சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி; பொருளாதாரக் கடன்; ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக்கான ஊக்கத் தொகை என, 71 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அரசின் நலத் திட்ட உதவிகளை 1,02,364 பயனாளிகளுக்கு வழங்குவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இதன் அடையாளமாக, 25 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு, அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அந்தந்தப் பகுதிகளுக்கு நேரில் சென்று வழங்குவார்கள்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறும் பயனாளிகள் தங்கள் வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் என்று வாழ்த்தி, இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
சென்னை, ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 15.02.2012 அன்று நடைபெற்ற பயிற்சி உதவி ஆய்வாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை.

தமிழக காவல்துறையை உலகின் தலைசிறந்த காவல்துறையாக ஆக்க வேண்டும் என்னும் எனது இலட்சியத்தை நிறைவேற்றுக!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தரம் வாய்ந்த, இந்தத் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெறும் பயிற்சி உதவி ஆய்வாளர்களின்

பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் முதன் முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்தே, தமிழகக் காவல் துறை தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாமல் தனிச் சிறப்புப் பெற்றுத் திகழ வேண்டும் என்பதும்; அவ்வாறு தமிழகக் காவல் துறை திகழ்வதற்கு ஏதுவாக, உலகத் தரம் வாய்ந்த காவல் உயர் பயிற்சியகம் தமிழ்நாட்டில் நிறுவப்பட வேண்டும் என்பதும் எனது கனவாக இருந்தது. அதன் அடிப்படையில், தமிழகக் காவல் துறை மிகச் சிறந்த காவல் துறையாக விளங்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் போதெல்லாம் தொடர்ந்து எடுத்து வந்துள்ளேன்.

2004 ஆம் ஆண்டு என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட உலகத் தரம் வாய்ந்த, இந்தக் காவல் உயர் பயிற்சியகம், காவல் துறை அலுவலர்களுக்குச் சிறப்பான பயிற்சி அளிப்பது எனக்கு மெத்த மகிழ்ச்சியினை அளிக்கிறது. முதன் முறையாக, ஒரே நேரத்தில் 1,061 உதவி ஆய்வாளர்கள், தங்களது பயிற்சியினை இன்று நிறைவு செய்திருக்கிறார்கள் என்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியினை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்தப் பயிற்சியில், 307 பெண் உதவி ஆய்வாளர்கள் ஆண்களுக்கு இணையாக, தங்களது பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர் என்பதை அறியும்போது, “ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்”, என்ற பாரதியாரின் வாக்கு மெய்ப்பிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன்.

ஒரு மாநிலம் வளர்ச்சிப் பெற்றதற்கான அறிகுறி, அதன் மக்கள் வளமுடன் வாழ்வதே ஆகும். மக்கள் வாழ்வில் வளம் பெற மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி பெற வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்குப் பல காரணிகள் உள்ளன. மக்களின் மனித வள மேம்பாடு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்; மாநிலத்தின் சமூக மூலதனம் மேம்படுவது பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும். எனவே தான், எனது தலைமையிலான அரசு, சமூக மூலதனத்திற்கான பல்வேறு திட்டங்களையும்; மனித வள மேம்பாட்டிற்கான திட்டங்களையும்; தனிமனிதப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

சமூகப் பொருளாதார வளர்ச்சியும், தனிமனித மேம்பாடும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைச் சார்ந்தே இருக்கும் என்பதால்; பொருளாதார வளர்ச்சிக் காரணிகளான தொழில் வளர்ச்சி மேம்பாடு, கட்டமைப்பு மேம்பாடு ஆகியவையும் சிறப்புற அமைய வேண்டும். இதற்கான திட்டங்களையும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தனி மனித மேம்பாடும் நிலைத்திட இன்றியமையாததாக விளங்குவது அமைதி. அத்தகைய அமைதிச் சூழலை ஏற்படுத்துவதில், காவல் துறை முக்கியப் பங்காற்றுகிறது. எனவேதான், நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும்போதெல்லாம், சட்டம்–ஒழுங்கை நிலை நாட்டுவதற்கும்; காவலர்கள் எவ்வித அச்ச உணர்வும், இடையூறும் இன்றி தங்கள் பணிகளை நேர்மையாகவும், திறமையாகவும், செம்மையாகவும், சட்டப்படியும் ஆற்றிட ஏதுவான சூழ்நிலையை நான் ஏற்படுத்தித் தருகிறேன்.

காவலர்கள் பணியாற்றுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டும், அவர்கள் தங்கள் பணியினைத் திறம்பட ஆற்றிட இயலாது. காவலர்கள், தங்களது கடமையைத் திறம்பட ஆற்றுவதற்குப் பயிற்சி மிகவும் அவசியம் ஆகும்.

“பயிற்சிதான் மனிதனைப் பக்குவப்படுத்தும்”. எந்தத் துறையாக இருந்தாலும், அதில் பயிற்சி பெற்றால் தான் ஒருவர் தன்னுடைய பணியைத் திறமையாகவும், செம்மையாகவும் செய்ய இயலும். “Excellence is an art won by training and habituation” என்றார் அரிஸ்டாட்டில். அதாவது, “உயர் திறமை” என்னும் கலையை, பயிற்சி மற்றும் வழக்கத்தின் மூலமே, தன்வயப்படுத்த முடியும் என்று கூறியிருக்கிறார். இதன் அடிப்படையில், இந்தத் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் காவல் துறை அதிகாரிகளுக்குச் சிறந்த பயிற்சியை அளித்து வருகிறது.

இந்தப் பயிற்சியகம், தனித்தன்மை வாய்ந்த சுற்றுச்சூழல் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் கூடியுள்ளதோடு மட்டுமல்லாமல், திறமையான பயிற்சியாளர்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இந்தப் பயிற்சியகம், பல்வேறு புது உத்திகளை உள்ளடக்கிய பாடத் திட்டத்தை உருவாக்கி, அவற்றைப் பயிற்சி பெறுபவர்களுக்கு அளித்து வருகிறது. சிறார்களுக்கு எதிரான குற்றங்கள் முதல் கணினிசார் குற்றங்கள் வரை பல்வேறு குற்ற

நிகழ்வுகளைக் கையாளுவதற்கான பயிற்சிகளை, இப் பயிற்சியகம் அளித்து வருகிறது. சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் வைரக் கல் எவ்வாறு பட்டை தீட்டப்பட்டு, அணிகலனாக அணிவதற்கு ஏற்ற ஒளி வீசும் வைரமாக உருப் பெறுகிறதோ; அது போல, வீரம், சாந்தம், கருணை, நுண்ணறிவு ஆகியவற்றை நீங்கள் பெறும் வகையில், இங்கே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் மூலம், களப்பணி ஆற்றும் திறன்; ஆழ்ந்த தொழில்முறை தலைமைப் பண்பு; பகுத்தறியும் திறன்; மென் கணினித் திறன் ஆகியவற்றை நீங்கள் நன்கு பெற்று இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். இது மட்டுமல்லாமல், கணினி சார் பயிற்சி; கணினி சார் குற்றங்களைக் கையாளுவது; கமாண்டோ பயிற்சி; வனப்பகுதியில் முகாமிட்டு கடமையாற்றும் திறன்; ஆயுதங்களைக் கையாளுதல்; குறி பார்த்துச் சுடுதல்; நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தல்; பொதுமக்களின் உணர்வுகளை ஆய்ந்தறிதல்; பண்புடன் நடந்து கொள்ளும் திறன் என மாறுபட்ட கோணங்களில் நீங்கள் பயிற்சி பெற்று இருப்பீர்கள். இந்தப் பயிற்சியின் மூலம், சட்டம் ஒழுங்கை எப்படிப் பராமரிக்க வேண்டும்; பொதுமக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் நீங்கள் முழுமையாகக் கற்றிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

மனிதனை விலங்கினின்று வேறுபடுத்திக் காட்டுவது ஒழுக்கமே ஆகும். "ஒழுக்கம் விழுப்பம் தரும்"; "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை"; என்னும் ஆன்றோர் வாக்குகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. ஒழுக்கம் என்பது எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும், தூய்மையாக நடந்து கொள்வதாகும். இவ்வொழுக்கமே, மனிதனை மனிதனாகவும், தெய்வமாகவும் உயர்த்தும் வன்மை பெற்றிருத்தலால், இது உயிரைக் காட்டிலும் உயர்வானது. ஒழுக்கம் ஒருவனுக்கு மிகப் பெரிய சிறப்பைத் தருவதால், ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் மேலானது என்றார் வள்ளுவப் பெருந்தகை. உடலைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உடை, உணவு, உடற்பயிற்சி ஆகியவை இன்றியமையாதவையாக விளங்குகின்றன. இதைப் போல, அகம் தூய்மையாக விளங்க ஒழுக்கம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். அக ஒழுக்கம், புற ஒழுக்கம் இரண்டுமே ஒரு மனிதனுக்கு, நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை ஆகும். ஒழுக்கமே உயிர், ஒழுக்கமே உண்மைச் செல்வம். ஒழுக்கத்தினால் ஒருவன் அடைவது மேன்மை. "ஒழுக்கம் தவறினால் எய்தாப்பழியே மிஞ்சும்".

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒழுக்கம், காவல் துறையினருக்கு இன்றியமையாதது. "ஒழுக்கம் இருந்தால் தான், விருப்பு வெறுப்பின்றி; வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி; சட்டத்தின் மாட்சிமையை நிலைநிறுத்தும் வண்ணம், காவல் துறையினர் தங்கள் கடமையை ஆற்ற முடியும். அவ்வாறு கடமை ஆற்றும்போதுதான், காவலர்கள் தங்கள் பணியினைச் செவ்வனே செய்கிறார்கள் என்று மக்களே காவல் துறையினரின் பணிகளைப் பாராட்டுவார்கள்".

சட்டம்–ஒழுங்கு பராமரிக்கும் பணியினை நீங்கள் மேற்கொள்ளும் போது, சட்டம் மனித சேவைக்காக உருவாக்கப்பட்டதுதான் என்பதை நீங்கள் மனதிலே கொள்ள வேண்டும். மனிதநேயத்தை மறந்து சட்டப்படி நடப்பது என்பது சரியாக இருக்காது. இதை, ஆபிரகாம் லிங்கன், அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த சமயத்தில், நடந்த ஒரு நிகழ்வு மூலம் நான் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

'வில்லியம் ஸ்காட்' என்கிற கடமை தவறாத இராணுவ வீரன், அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றி வந்தான். அவனுடன் பணிபுரியும் நண்பனுக்கு ஒரு நாள் உடல் நலம் சரியில்லை. ஆனால்,

அவனுக்கு அன்று பகல் நேரத்தில், காவல் காக்க வேண்டிய பணி. அவனுக்காக இரக்கப்பட்ட ஸ்காட், தன் நண்பனுக்குப் பதிலாக, தானே காவல் காக்கும் பணியைச் செய்வதாகச் சொல்லி, அந்தப் பணியை மேற்கொண்டான்.

அன்று இரவும் ஸ்காட்டே பணிபுரிய வேண்டும் என்கிற விஷயம் தெரிய வந்தது. தொடர்ந்து கண் விழித்தால், தூக்கம் வந்துவிடும்; பின்னர் கடமையைச் சரிவர செய்ய முடியாது என்று நினைத்து, இரவுப் பணிக்கு வேறு யாரையாவது அமர்த்துமாறு தனது மேலதிகாரியிடத்தில் தெரிவித்தான். கண்டிப்புக்குப் பெயர் போன மேல் அதிகாரி, அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

வேறு வழியில்லாமல், இரவு நேரக் காவல் பணியையும் ஸ்காட் ஏற்றுக் கொண்டான். ஒரு கட்டத்தில், அவனையும் அறியாமல், அவனுடைய கண் சொக்க ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் மேற்பார்வையிட வந்த அதிகாரி, ஸ்காட் தூங்குவதாக, மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்துவிட்டார்.

நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியினை மேற்கொள்ளும் போது, தூங்கும் வீரர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுவது வழக்கம். அதன்படி, 24 மணி நேரத்தில் ஸ்காட்டை சுட்டுக் கொல்லும்படி உத்தரவு வந்துவிட்டது. ஆனால், இந்த மரண தண்டனையை ரத்து செய்யக்கூடிய அதிகாரம், அமெரிக்க ஜனாதிபதிக்குத்தான் உண்டு. உண்மையான ராணுவ வீரனான ஸ்காட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆப்ரகாம் லிங்கனிடம் முறையிடப்பட்டது. பின்னர் அதற்கான உத்தரவு அன்று இரவே பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர், வாஷிங்டனிலிருந்து புறப்பட்டு வீரர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று ஸ்காட்டை ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் பார்த்தார். ஸ்காட்டின் தோளில் கை போட்டு, “நீ நாளைக்குச் சாகப் போவதில்லை, நாட்டைக் காக்கப் போகிறாய்” என்று கூறினார். மேலும், “வாஷிங்டனிலிருந்து இங்கு வந்து, போனதற்கான செலவை நீ தான் திருப்பிக் கொடுக்க வேண்டும்” என்று ஸ்காட்டிடம் சொன்னார்.

“என் வங்கிக் கணக்கில் கொஞ்சம் பணம் இருக்கிறது. நிலத்தை அடமானம் வைத்துக் கொஞ்சம் கடன் வாங்குவேன். சம்பளத் தேதி வரைக்கும் பொறுத்து இருங்கள், சம்பளத்தையும்

சேர்த்து மொத்தச் செலவையும் கொடுத்து விடுகிறேன்'' என்று, ஸ்காட் ஜனாதிபதியிடம் கூறினார்.

உடனே, ஜனாதிபதி லிங்கன், "உன்னுடைய வங்கிச் சேமிப்பும், கடனும் என்னுடைய செலவைச் சரிக்கட்டாது. உன்னுடைய கடமைகளை நாட்டிற்கு ஒழுங்காகச் செய்தால் தான் செலவைச் சரிக்கட்ட முடியும்'' என்று ஸ்காட்டிடம் கூறினார். ஸ்காட்டும் அப்படியே செய்வதாக உறுதிமொழி அளித்தார்.

மனித வாழ்வு சிறப்புற மேம்படுவதற்காக ஏற்படுத்தப்பட்டவைதான் சட்டங்கள். சட்டத்தை செயல்படுத்தும் போது, மனிதநேயத்துடன் அதனைச் செயல்படுத்த வேண்டும்.

அதே நேரம், தகுதி இல்லாதவர்களிடத்தில் அபரிமிதமான கருணை இருக்கக் கூடாது.

மிகக் கொடூரமான குற்றவாளிகளையும் மன்னித்து, விடுவித்து விடும் மனப்பாங்கு ஒரு காவல் துறை அதிகாரியிடம் இருந்தது. கொடுங் குற்றங்களை புரிந்த குற்றவாளிகள் மீதும் வழக்குப் பதிவு செய்யாமல், அவர்கள் திருந்த வாய்ப்பளிப்பது தான் அகிம்சை என்று அவர் நினைத்து இருந்தார். பல கொள்ளைகளை நிகழ்த்திய கடும் குற்றவாளி ஒருவன் அவர் முன் நிறுத்தப்பட்டான். அதற்கான தகுந்த ஆதாரங்களும் காட்டப்பட்டன. இருப்பினும், அந்தக் குற்றவாளிக்கும் கருணை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில், குற்றவாளிக்கு அறிவுரை வழங்கி, அவனை அனுப்பிவிட்டார். ஒரு நாள் அத்திருடன், அந்தக் காவல்துறை அதிகாரியின் வீட்டிற்கே திருடச் சென்றான். நகைகளையும், பொருட்களையும் திருடும் போது, அதிகாரியின் மனைவி அங்கு ஏற்பட்ட சத்தத்தால் விழித்துக் கொண்டுவிட்டார். அதைப் பார்த்த குற்றவாளி, சற்றும் தயங்காமல், அதிகாரியின் மனைவியையே கொன்றுவிட்டு தப்பித்துவிட்டான்.

எனவே, தகுதியானவர்களிடம்தான் கருணை காட்ட வேண்டும். காவல் துறையில் பணிபுரியும் நீங்கள், சட்டத்தை நிலைநாட்டுவதில், மனித நேயத்துடன் பணிபுரியும் அதே நேரத்தில், மென்மையான அணுகுமுறை பயன்பெறாத இடத்தில் கடினமான அணுகுமுறையைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், அந்தக் கடினமும் தேவையான அளவுக்கு உட்பட்டே இருக்க வேண்டும்.

இந்தப் பயிற்சியகத்தின் மூலம், மனித நேயத்துடன் கூடிய அணுகுமுறையை நீங்கள் நிச்சயம் பெற்று இருப்பீர்கள். இன்றைய மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்ப, நீங்கள் அனைவரும் கடமை உணர்ச்சியுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்ற வேண்டும். சட்டத்தை மதிக்கும் மக்களிடத்தில் நண்பனாகவும், இனிமையாகவும் பழக வேண்டும். அவர்களின் மதிப்பு மற்றும் மரியாதையைப் பெறும் வகையில், உங்களுடைய நடத்தை விளங்க வேண்டும். அதே சமயத்தில், வன்முறையாளர்கள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோர் அஞ்சும் வகையில் அவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

இது போன்ற, பணி ஏற்பதற்கு முன் உள்ள பயிற்சிகளும், பணியிடைப் பயிற்சிகளும், காவலர்கள் அறிவுத் திறனில் சிறந்து விளங்கி, தங்கள் பணிகளை செம்மையுறச் செய்வதற்கு ஏதுவாக அமையும் என்றாலும்; காவல்துறை பணி சிறப்புடன் விளங்கக் காவல்துறை நவீனமயமாக்குதல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.1991ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்தான், தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்கும் பல்வேறு நடவடிக்கைகள் துவங்கப்பட்டன. தமிழகக் காவல் துறைக்கு நவீன ஆயுதங்கள், தளவாடங்கள், வாகனங்கள், தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள், அதிரடிப் படைப் பயிற்சி; வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு போன்ற புதிய பிரிவுகளை ஏற்படுத்துதல் என, பல்வேறு நவீனமயமாக்கல் நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன். இத்தகைய நடவடிக்கைகள் தான், காவல் துறைக்குப் புதிய மாற்றத்தையும், அதன் காரணமாக சீர்மிகு ஏற்றத்தையும், அளித்து வருகிறது.

இன்றைக்கு நீங்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ள இந்த மிகச் சிறந்த அணிவகுப்பானது, உங்களது திறமை, மேன்மையான நோக்கம், உடல் மற்றும் மனத்திடம், ஆகியவற்றின் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. விடா முயற்சி; பணியின்பால் கடமையுணர்ச்சி; கண்ணியம்; நேர்மை ஆகிய நற்பண்புகளைக் கடைபிடிப்போம் என்று நீங்கள் இன்றைய தினம் எடுத்துள்ள உறுதிமொழியைக் கடைபிடித்து; தமிழ்நாடு காவல்துறையின் திறமையை மேலும் உயர்த்த நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்; உங்களது பணிக்காலத்தில், சீருடையின் கௌரவத்திற்கும்,

புகழுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்; தமிழகக் காவல்துறையை உலகத்தின் தலை சிறந்த காவல் துறையாக்க வேண்டும் என்ற எனது இலட்சியத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு;

கடமைப் பற்றோடு களமிறங்கிப் பணியாற்றவல்ல சீர்மிகு ஆற்றலைப் பயிற்சி உதவி ஆய்வாளர்களுக்கு அளித்த, இந்தப் பயிற்சியகத்தைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும், அலுவலர்களையும் மனதாரப் பாராட்டி;

“கடமை இருந்தால் வீரனாகலாம்;
பொறுமையிருந்தால் மனிதனாகலாம்”

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கேற்ப உங்கள் பணி அமைய வேண்டும் என்று தெரிவித்து, உங்கள் எதிர்காலம் சிறந்து விளங்க, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

சென்னை, தாஜ் கோரமண்டல் ஓட்டலில், 22.03.2012 அன்று
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
“2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கான
தொலைநோக்குப் பார்வை” என்ற ஆவணத்தை
வெளியிட்டு ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்குவதே எனது குறிக்கோள்!

இந்த விழாவில் கலந்து கொண்டு “2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கான தொலைநோக்குப் பார்வை” என்ற ஆவணத்தை இன்று வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய இந்த விழா தமிழ்நாட்டின் பொருளாதார வரலாற்றில் முக்கியமான ஒரு மைல்கல் ஆகும் என்று கருதுகிறேன். எனது அரசு 2011ஆம் ஆண்டைக் கடக்கின்றபோது, தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கும் குறிக்கோளை நான் எடுத்துக் கொண்டேன். அமெரிக்கா குறித்து மிகப்பெரிய கனவைக் கொண்டிருந்த ‘மார்ட்டின் லூதர் கிங்கை’ போல

தமிழ்நாட்டுக்கான, கனவை நான் கொண்டிருக்கிறேன். அந்த எனது கனவில், தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களில் வேலை இல்லாதவர்களே இருக்கக் கூடாது. வறுமைநிலை முற்றிலுமாக ஒழிக்கப்படும். ஒவ்வொரு குடிமக்களும், சுகாதாரம், கல்வி, குடிநீர் வழங்கல், துப்புரவு போன்றவற்றிற்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களும், பாதுகாப்பு, அமைதி, வள வாழ்வு ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும் என்பனவே எனது கனவாகும். தமிழ்நாடு சமூகப் பொருளாதார குறியீடுகள் அனைத்திலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கவும், புதிய இரண்டாயிரம் ஆண்டில் பொருளாதார நிலைக்கான அறிவுத்திறன் பெறுவதும் எனது கனவாகும். இந்த 2023ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வை ஓர் கண்ணோட்டம் என்ற இந்த ஆவணம் எனது கனவாகும். இதில், சில குறிக்கோள்களைப் புகுத்தியுள்ளேன். சிறந்த தலைவர்கள், குறிக்கோள்கள் பற்றிய கண்ணோட்டம் ஒன்றை உருவாக்கி அதைத் தெளிவுப்படுத்துவதுடன் உணர்வுப்பூர்வமாக அந்தக் கண்ணோட்டத்திற்கு உரியவர்கள் ஆகிறார்கள். அந்தத் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றி முடிப்பதற்காக இடையறாமல் உழைக்கிறார்கள். அத்தகைய கண்ணோட்டம் உங்களுக்கு ஒரு உந்து சக்தியை உருவாக்கி உங்களின் சொந்தப் பணியைச் சிறப்பாக்க உதவும். அந்தத் தொலைநோக்குப் பார்வையின் குறிக்கோள் ஒன்றை உங்களில் ஏற்படுத்தும். அமெரிக்காவின் 28ஆவது ஜனாதிபதியான வுட்ரோ வில்சன் என்பவர் ஒரு முறை தெரிவித்தது யாதெனில்,

“நீங்கள் இங்கு வெறுமனே வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. மிகப்பெரிய தொலைநோக்குப் பார்வை, நேர்த்தியான நம்பிக்கை ஒளி, சாதனை ஆகிய பல குறிக்கோள்களுடன் உலகில் வாழுவதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள். இந்த உலகத்தை சிறப்பாக்குவதற்காகவே இங்கு வசிக்கிறீர்கள். நீங்கள் இங்கு வாழ்வதன் நோக்கத்தை மறந்திருப்பீர்களேயானால் நீங்களாகவே உங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள்”

தலைவர்கள், தொலைநோக்குப் பார்வையின் மிகப்பெரிய கண்ணோட்டத்திற்கான ரசவாதம் ஒன்றை வரவழைத்துக் கொள்ள வேண்டும். தலைவர் என்பவர் எதிர்காலக் கண்ணோட்டத்தை

உண்மை நிலையிலிருந்து உருவாக்குவதற்கான திறமையைக் கொண்டிருக்கிறார். எதிர்காலக் கண்ணோட்டமே இல்லையென்றால் நம்பிக்கையே இல்லை என்றாகிவிடும்.

தமிழ்நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வருவதன் மூலமாக அனைத்து மக்களும் பயனடையும் வகையில் பாதுகாப்புடன் கூடிய மிகுந்த வளர்ச்சிக்கான உந்து சக்தியை உருவாக்குவதே எனது எதிர்கால தொலைநோக்குப் பார்வையாகும்.

தமிழ்நாடு ஒட்டுமொத்த வளர்ச்சியில் சாதனை படைப்பதற்காக திட்ட உத்தியாகவே இத்தருவாயில் முதல் முறையாக தமிழ்நாட்டின் "தொலைநோக்குப் பார்வை" என்ற இந்த ஆவணத்தைத் தயாரித்துள்ளோம். இந்த ஆவணத்தின் குறிக்கோள்களும் கருப்பொருள்களும் உணர்வுப் பூர்வமான வெளிப்பாடுகளாகத் தெளிவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இது, மிகவும் திட்டமிடப்பட்ட ஏற்பாட்டு முறையில் சாதாரண குடிமக்களின் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தைக் கொண்டு வரும்.

அடுத்தப் பத்தாண்டுகளில் சாதனை படைக்கக் கூடிய சில குறிக்கோள்களுடன் கூடிய வளர்ச்சி இலக்குகளை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வை என்ற குறிக்கோளின் மூலமாக தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னேற்றமடைந்த மாநிலமாகவும், சாதனை படைக்கும் மாநிலமாகவும் உருவாகும். தமிழ்நாட்டு மக்கள் வறுமையின்றி அனைத்து அடிப்படை வசதிகளையும் அனுபவித்து வாழும் நவீன சமுதாய மக்களாக வாழ்வதுடன் உலக மக்களைப் போல நல்லிணக்க சூழ்நிலையில் இசைவிணக்கத்துடன் வாழும் நிலை வரும். 2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வை என்ற ஆவணத்தின் கருத்து துணிகரமான முயற்சியால் மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற முனைகிறது. எனது அரசு, உந்துசக்தியாக செயல்பட்டு உலகில் முன்னேறிய மண்டலங்களின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டை முன்னேற்றுவதுடன் இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு மிக உயர்ந்த மாநிலமாகத் திகழச் செய்யும்.

இந்த உலகம் பொருளாதார சக்தியின் மிகப் பெரிய உண்மைத் தன்மையின் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. தொழில்

வளர்ச்சிப் பெற்ற நாடுகளெல்லாம் பின்வாங்கும் நிலைகளினால் மதிப்பிழந்து வருகின்றன. அங்காடிப் பொருளாதாரம் தோன்றுவதால் வட்டாரங்கள் ஆதாயமடைகின்றன. இந்தியா இத்தகைய ஆதாய நிலையில் உள்ளது. இந்தியாவிலேயே முன்னேறக்கூடிய மாநிலமாகத் திகழ வேண்டுமென்றால் நாம் ஆதாயத்தின் பக்கம் நிற்க வேண்டும். பிரெஞ்சு நாட்டின் பிரசித்தி பெற்ற எழுத்தாளர், கட்டுரையாளர், நாடக ஆசிரியர், கவிஞரான விக்டர் ஹியூகோ என்பவர், சொன்னதை நான் சுட்டிக்காட்டுகிறேன். "ஒருவருக்கு நேரம் மட்டும் வந்து விட்டால், அவருடைய கொள்கையை உலகில் உள்ள எந்த சக்தியாலும் நிறுத்த முடியாது" அத்தகைய எண்ணம் ஒன்று ஏற்படுவதன் மூலம் தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவில் பொருளாதார ஆற்றல் ஏற்படக்கூடிய நெருக்கடியில் தமிழ்நாடு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப் பதினோரு ஆண்டுகளில் தமிழ்நாடு, அதன் ஆற்றலின் மூலமாகவும் ஒப்பிடத்தக்க வாய்ப்புகளின் மூலமாகவும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (GSDP) 11 சதவித வளர்ச்சியை அல்லது ஆண்டொன்றுக்கு அதற்கும் அதிகமான வளர்ச்சியை இந்தியாவின் மொத்த உற்பத்தி மதிப்பில் 20 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியடைய திட்டமிடப்படும். அடுத்த 11 ஆண்டுகளில் 15 சதவீத மக்கள் தொகை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய காலகட்டத்தில் தனி மனித வருமானம் 6 பங்குக்கு மேல் அதிகரிக்கக்கூடும். ஆசியாவிலுள்ள பல்வேறு நாடுகளில் குறிப்பாக, தாய்லாந்து, மலேசியா, சீனா ஆகிய நாடுகளின் வளர்ச்சி வீதம் 1980–லிருந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டொன்றுக்கு 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகும். இந்த உண்மையைக் கருதிப் பார்க்கையில் ஆசியாவிலுள்ள பல்வேறு நாடுகளிலும் இந்தியாவின் சில மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, நிலையான உயர் வளர்ச்சியாகும். தமிழ்நாட்டின் ஆர்வமான நிலையைப் பொறுத்தவரையில் அதன் பொருளாதார வளர்ச்சியானது அடுத்து வரும் 11 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 11 சதவீதமாக உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக 2005–2006ஆம் ஆண்டின் நிலையைக் கருதிப் பார்ப்போமானால் அதன் வளர்ச்சி விகிதம் 13.95 சதவீதமாகவும், பதிவு செய்யப்பட்ட உற்பத்தித் துறையைப் பொறுத்தவரையில் அனைத்து வகையிலான உயர் வளர்ச்சி விகிதம் 15.10 சதவீதமாகவும் இருந்தது.

இந்த வளர்ச்சி வேகம், அடுத்து வந்த ஆண்டுகளில் குறைந்த போதிலும், நாம், உயர் வளர்ச்சிப் பாதையை சீரமைக்க இயலாது என்று நம்புவதற்குக் காரணம் இல்லை. உயர் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் நபர்வாரி வருமானத்திற்கு இணையாக தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம், 2023ஆம் ஆண்டில், இன்றைய விலையின் 6 மடங்காக ரூபாய் 4,50,000 அல்லது 10,000 அமெரிக்க டாலராக உயரும் என்று நான் நம்புகிறேன்.

தொலைநோக்குப் பார்வை 2023, உயர்வீத பொருளாதார வளர்ச்சியுடன், மாநிலம் முழுவதிலும் வருமானத்தில் சமநிலை இல்லாதிருப்பதையும் குறைக்க விழைகிறது. கணிசமான ஆதாரங்களை, குறைந்த வருமானத் தொகுதியினருக்கு ஒதுக்கீடு செய்வதன் மூலமாகவும், தமிழ்நாடு, வறுமையற்ற மாநிலமாகத் திகழ்வதை உறுதி செய்வதன் மூலமாகவும் தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023, உள்ளடக்கிய வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கிறது. 2023ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் பின்தங்கிய நிலையில் எவரும் இல்லை என்ற நிலையைக் கொண்டு வருவதற்கு, தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023 தீர்மானித்துள்ளது.

நமது குடிமக்கள் அனைவருக்கும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதும், 2023ஆம் ஆண்டு முடிவதற்குள் அனைவருக்கும் பாதுகாப்பான சுகாதார வசதியை அளிப்பதும் என்னுடைய நோக்கமாகும். திறந்த வெளியில் மலஜலம் கழித்தல், நமது மாநிலத்தில் அறவே ஒழிக்கப்படும். ஏழைமக்களுக்கு, கட்டுப்படியாகிற விலையில், 25 இலட்சம் வீடுகளைக் கட்டுவதன் மூலம், தமிழ்நாட்டை, குடிசைகளற்ற மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதும், அனைவருக்கும் இடைநிலைக்கல்வி கற்பித்தல், கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி (தொழிற்கல்வி உட்பட) பயில வகை செய்தல் ஆகியவையும் என்னுடைய நோக்கமாகும். உயர் வேக நெடுஞ்சாலைகள், பாதுகாப்பான பல வழி நெடுஞ்சாலைகள் ஆகியவற்றின் மூலம் மாநிலம் மாறுபட்ட குறிக்கோள்களுடன் செயல்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களும் 2023ஆம் ஆண்டு முடிவதற்குள் உயர் தரமுள்ள சாலைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தொழில் அல்லது வணிக நிறுவனமும் நிலையான

தரமுள்ள தடையற்ற மின்சாரத்தை பெற வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும். நமது மாநிலத்தின் நீண்டகால மின்சக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அடுத்த 10 ஆண்டுகளில், 20,000 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறனை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய நோக்கமாகும்.

தொலைநோக்குப் பார்வை 2023 வெற்றிபெறுவதற்கு ஒரே இன்றியமையாத ஆதாரமாக இருப்பது பயிற்சி பெற்ற அறிவும், திறமை வாய்ந்த பணியாளர்கள் தமிழ்நாட்டில் கிடைப்பதுவேயாகும். அடுத்த 11 ஆண்டுகளில் 20 மில்லியன் நபர்களுக்குப் பயிற்சியளித்து, திறமைமிக்கவர்களாக உருவாக்குவதற்கு, தொலைநோக்குப் பார்வை 2023 வகை செய்கிறது. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட உயர் சிறப்பு வாய்ந்த நிறுவனங்களை, பல்வேறு துறைகளில் சிறப்பு வாய்ந்த மையங்களாக உருவாக்க வேண்டிய அவசியத்தை நான் உணர்கிறேன். இவை உலகம் முழுவதிலும் உள்ள சிறப்புத்திறன் பெற்றவர்களைக் கவர்ந்திழுக்கும். உணவுப் பாதுகாப்பு மற்றும் இரண்டாவது பசுமைப் புரட்சி, நம்முடைய ஒட்டுமொத்த வளர்ச்சி உத்தியின் ஓர் இன்றியமையாத பகுதியாக அமைகிறது. 2000–2005 வரையிலான கால அளவில், 8–10 சதவீத வளர்ச்சியை எய்திய பின்னர், வேளாண்மைத் துறை , 2007–2008 மற்றும் 2008–2009

ஆகிய கால அளவில் எதிர்மறையான வளர்ச்சியைக் கண்டது. அறிவியல் பூர்வமான வேளாண் முறைகளைப் புகுத்தி கணிசமான வேளாண் உற்பத்தி வளர்ச்சியைப் பெறுவதும், ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்கி அதனைத் தொடர்ந்து கடைபிடிக்க ஆதரவு அளிப்பதும் எனது தொலைநோக்குப் பார்வையாகும்.

பொருளாதார வளர்ச்சிக்குக் கருவாகவும், கருவியாகவும் அமையத்தக்கவகையில் தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த பத்து நகரங்களை (முக்கியமாக உள்கட்டமைப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் தரம் உயர்த்தப்பட வேண்டிய அளவில் ஏற்கெனவே உள்ள நகரங்கள்) உருவாக்கி, வட்டார அளவிலும், மாநில அளவிலும், சரிநிகரான வளர்ச்சியை ஏற்படுத்த தொலைநோக்குப் பார்வை 2023 எதிர்நோக்குகிறது.

இத்தகைய முயற்சிகளுக்குக் கணிசமான முதலீடுகள் மிகத் தேவையாகவுள்ளது. ஒட்டுமொத்த முதலீடு தேவையென்ற வகையில் நாங்கள் ரூ.15 இலட்சம் கோடி தொகையை சுட்டிக்காட்டியுள்ளோம். இத்தேவைகளை மாநில அரசால் மட்டுமே ஈடு செய்ய இயலாது என்பதை நானறிவேன். பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பெற்ற அரசு சாரா அமைப்புகளின் மூலம் கட்டமைப்பு வசதிக்கான கணிசமான நிதியைப் பெற வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் சார்பாக அரசு, கட்டமைப்புப் பணிகளைக் கொணரும் முக்கியப் பங்கை ஆற்றும். கட்டமைப்புத் துறையில் தனியார் முதலீடு செய்யவும், பங்காற்றவும், துணை நிற்கும் பொது தனியார் பங்களிப்பு முறையில், அரசு ஒரு மாற்று முகவராகச் செயலாற்றி 2023ஆம் ஆண்டின் தொலைநோக்குப் பார்வைக்கு ஈடான கட்டமைப்புத் திட்டங்களை உருவாக்கி, அவற்றை ஒழுங்குமுறைப் படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்தக் கண்காணிப்பு போன்ற முக்கியமான பணிகளிலும் கவனம் செலுத்தும்.

கட்டமைப்பு உருவாக்கத்தில் தனியார் பங்களிப்பைக் கவர்வதற்கு 2023 தொலைநோக்குப் பார்வையில் முக்கியமானவைகளில் ஒன்றான முதலீடுகளுக்கேற்ற சூழ்நிலையை மேம்படுத்த வேண்டும். குறைவில்லா முதலீடுகள் என்ற வகையில் இந்தியாவில் தமிழ்நாடு நல்ல இடம் பிடித்துள்ள நிலையில், 2023 தொலை நோக்குப் பார்வையானது ஆசியாவில் முதலீடுகளுக்கு உகந்ததாக கூறப்படும் முதல் மூன்று இடங்களில்

ஒன்றாகவும், இந்தியாவில் முதலீடு செய்வதற்கு மனங்கவரும் மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்க எண்ணுகிறது. ஆசியாவின் மூன்று தலைமையிடங்களில் ஒன்றாக உருவாகுவது என்பது, பன்னாட்டு நிதிக் கழகம் எளிமையாகத் தொழில் செய்வது என்பதைப் பற்றி நடத்திய ஆய்வில் உலக அளவில் 8, 17, 18 என்ற தரத்தில் வகைப்படுத்தப்பட்ட தென் கொரிய, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளுக்கு ஈடான தகுதியைப் பெறுவதாகும். அனைத்துப் பொறுப்பாளர்களின் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் சம வாய்ப்புகளுக்கு வகைசெய்கின்ற பொறுப்பான மற்றும் ஒளிவுமறைவற்ற நிருவாகத்தை என்னுடைய அரசு பேணி வருகிறது. திட்டமிடல், முனைப்பாக முறைப்படுத்துதல் மற்றும் ஊக்கமளித்தல் குறித்து அரசு கவனம் செலுத்தும். சேவை வழங்குவதில் தனியார் துறைக்குப் பெருமளவில் வரவேற்பளிக்கப்படும். என்னுடைய அரசு, முனைப்பான மின் ஆளுகைக் கொள்கையுடன், அரசாங்கத்தில் செய்தி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஆதாரங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும். தொலைநோக்குப் பார்வை 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு உயர்ந்த குறிக்கோளுடைய முனைப்பான விவர அறிக்கையாகும். இது பொருளாதார வளம், சமூக முன்னேற்றம், உள்ளடங்கல் தன்மை, பண்பாட்டு வகைகள், சுற்றுச்சூழலின் நீடித்த நிலை ஆகியவற்றின் பன்முக பரிமாணங்களுடன் தனது வளவாய்ப்பினைத் தமிழகம் தெளிவாக உணர்ந்து அவற்றை எய்துவதற்கு தமிழ்நாட்டை முன்னோக்கிச்

செலுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இவையனைத்தும் பெரியளவிலான இலக்குகள். இவை ஊக்கமளிப்பதாகவும், சவாலானதாகவும் கருதப்பட்டன. ஆனால், தடையற்ற விடா முயற்சியுடன் ஒத்துழைப்பையும் சேர்த்து இந்த இலக்குகளை நாம் அடைவோம் என நான் உறுதியாக நம்புகிறேன்.

தலைவர்கள், எதிர்காலத்திற்கான தொலைநோக்குப் பார்வையை ஏற்படுத்தி, அவற்றை அடைவதற்கான உத்தியை வகுப்பர். அவர்கள் மாற்றத்திற்கும் வழிவகுப்பர். அவர்கள், மற்றவர்கள் சரியான பாதையில் செல்வதற்கு ஊக்கமளிப்பதுடன், மற்றவர்களுடன் சேர்ந்து அர்ப்பணித்தனர். இங்கிலாந்து தத்துவ எழுத்தாளரும், கவிஞருமான ஜேம்ஸ் ஆலன் “ As a Man Thinketh” என்ற அவருடைய சிறந்த படைப்பில் தெரிவித்ததை நான் இங்கு குறிப்பிடுகிறேன். “கனவு உன்னதமான கனவுகள், நீங்கள் கனவு காண்கின்றபோது, நீங்கள் அதுவாகவே ஆவீர்கள். ஒரு நாள் நீங்கள் என்னவாக இருப்பீர்கள் என்பதை உங்களுடைய தொலைநோக்குப் பார்வை உறுதிப்படுத்தும். நீங்கள், கடைசியில் எவ்வாறு இருப்பீர்கள் என்பதை உங்களுடைய குறிக்கோள் முன்கூட்டியே தெரிவிக்கிறது.”

இத்தருணத்தில் 2023ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை ஆவணத்தில் எடுத்துரைக்கப்பட்ட என்னுடைய நீண்ட நாள் கனவை அல்லது தொலைநோக்குப் பார்வையை நான் அடையும் வரையில் நான் ஓய்வு கொள்ளமாட்டேன் என்று தமிழக மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். என்னுடைய தொலைநோக்குப் பார்வையை எய்துவதிலும், உண்மையாகச் செய்வதிலும் பங்குகொள்ள வருமாறு உங்கள் அனைவரையும் நான் அன்புடன் அழைக்கிறேன். நான் இந்த தொலைநோக்குப் பார்வை குறித்து உங்களிடம் பகிர்ந்து கொண்டு, அதனை எய்துகின்ற வழியில் என்னுடன் ஒரு நடை பயில உங்கள் அனைவரையும் நான் அழைக்கிறேன். நம் மக்கள், மிகவும் மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கை பெறுவதற்கு, உறுதியான, துடிப்பான, வளமான தமிழகத்தை நாம் உருவாக்குவோம்.

நன்றி.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
28.03.2012 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழக காவல்துறையினருக்கு குறைந்த விலையில் அனைத்துப் பொருட்களையும் வழங்கும் சிறப்பு அங்காடிகளை காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்து ஆற்றிய உரை.

சமூக விரோதிகளிடமிருந்து மக்களைக் காக்கும் காவல்துறை

அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாட்டு மக்கள் அச்சமின்றி வாழ, இரவு பகல் பாராது காவல்துறையினர் கடுமையாகப் பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தை வன்முறையற்ற அமைதிப் பூங்காவாக மாற்ற வேண்டும் என்ற எனது முயற்சிக்கு காவல்துறையினர் உறுதுணையாக நிற்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இதுவரை இந்த சிறப்பு அங்காடிகள் சலுகை என்பது ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு மட்டும் தான் இருந்தது, இப்பொழுதுதான் முதன்முறையாக தமிழ்நாட்டில்

காவல்துறையினர் குறைந்த விலையில் அனைத்துப் பொருட்களையும் பெறக்கூடிய சிறப்பு அங்காடிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ராணுவப்படையினர் அயல்நாட்டு எதிரிகளிடமிருந்து நம் நாட்டைக் காக்கிறார்கள், நாட்டு மக்களை காப்பாற்றுகிறார்கள். மாநிலக் காவல்துறையினரோ, சமூக விரோதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றுகிறார்கள். எனது தலைமையிலான அரசு காவல்துறையினருக்குப் பலவிதமான சலுகைகளை வழங்கி வருகிறது. இன்று இந்த சிறப்பு அங்காடிகளைத் திறந்து வைத்ததில் நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறப்பு அங்காடிகளில் தற்பொழுது பணிபுரியும் காவல்துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் மற்றும் ஒய்வுபெற்ற காவல்துறையினரும், அவர்களது குடும்பத்தினரும், இறந்துபோன காவல்துறையினரின் குடும்பத்தினரும் பயன்பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, காவல்துறையினர் இந்த சிறப்பு அங்காடிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும், மகிழ்வோடு வாழ வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
28.03.2012 அன்று தலைமைச் செயலகத்தில், 1 கோடியே
1 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் 26 மாவட்ட ஆயுதப்படை
வளாகங்கள் மற்றும் 10 தமிழ்நாடு சிறப்புக் காவல்படை வளாகங்கள்
ஆகியவற்றில் காவல்துறையினருக்கான மருத்துவ சேவை
மையங்களைக் காணொலிக் காட்சி (Video Conferencing)
மூலமாக திறந்து வைத்து ஆற்றிய உரை.

சிறப்புக் காவல் மற்றும் ஆயுதப் படையினருக்கு மருத்துவ மையங்கள்

அனைவருக்கும் வணக்கம். காவல்துறையில் பணிபுரிபவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினர்களுக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்கெனவே மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் ஆயுதப்படை பிரிவினருக்கும், அவர்களது குடும்பத்தினர்களுக்கும் மருத்துவ சிகிச்சை தேவை என்றால் இதுவரை அவர்கள்

வெகுதூரம் சென்று சிகிச்சை பெறவேண்டிய கட்டாயம் இருந்ததால் சிரமப்பட்டு வந்தார்கள். ஆகவே, அந்த சிரமத்தை நீக்கவே இப்போது நீங்கள் பணிபுரிகின்ற தலைமையிடங்களிலேயே மருத்துவ சேவை மையங்களையும், மருந்தகங்களையும் இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். காவல்துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் இந்த மருத்துவ சேவை மையங்களையும், மருந்தகங்களையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நன்றி, வணக்கம்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.03.2012 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

மின்வெட்டைக் குறைத்திட புதிய மின் திட்டங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012–2013ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் மின் பற்றாக்குறையை நீக்குவதற்காக புதிய மின் திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்றும், ஏற்கெனவே சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை பற்றியும் தங்கள் கருத்துகளை இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்தார்கள். புதிய மின் திட்டங்களை அறிவிப்பது மட்டுமின்றி, அவற்றை காலத்தே செயல்படுத்தி அவற்றின் பயன் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை முன்னின்று எனது அரசு எப்போதும் எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2001 லிருந்து 2006ஆம் ஆண்டு வரை எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் மின் வெட்டு நிலையே இல்லாமல் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்தது என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். 2001 லிருந்து 2006ஆம் ஆண்டு வரையில் 2,518 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. எனவேதான், அப்போது மின் பிரச்சினை ஏதும் இருந்ததில்லை. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்தில் கூடுதலாக நிறுவப்பட்ட மின்நிறுவு திறன்

வெறும் 206 மெகாவாட் மட்டுமே. அதன் காரணமாகத்தான் தமிழகம் இன்றைக்கும் மின் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது.

2011–2012ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 800 மெகாவாட் உடன்குடி விரிவுத் திட்டம், 1,600 மெகாவாட் உப்பூர் அனல்மின் திட்டம், தற்போதுள்ள எண்ணூர் அனல்மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய திட்டம், 800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் என 3,800 மெகாவாட் அளவுக்குப் புதிய மின் திட்டங்களை அறிவித்திருந்தோம்.

660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல்மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அனல்மின் திட்டம் Super Critical என்னும் தொழில்நுட்பத்துடன் கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்தின் மூலம், குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற இயலும். குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதன் காரணமாக சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் இந்த அனல் மின் திட்டம், 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

இதுவரை தமிழ்நாட்டில், புனல், அனல், அணு, எரிவாயு சுழலி ஆகியவை மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புனல் மின்நிலையம் மூலம் இதற்கு மேல் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது கடினம். அதைப் போன்று, அனல் மின் நிலையத்திற்கு மத்திய அரசால் போதுமான அளவு நிலக்கரி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கே நிலக்கரி ஒதுக்கீட்டை மத்திய அரசு சரிவர செய்யவில்லை. எனவே, மாற்று எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டியது, தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். மின் உற்பத்திக்கு Liquefied Natural Gas, அதாவது திரவ இயற்கை எரிவாயு ஒரு மாற்று எரிபொருளாக அமையும். மேலும், LNGஐ எரிபொருளாகக் கொண்ட மின்நிலையம் மிகக் குறைந்த கால அளவில் உருவாக்க இயலும். ஆனால்,

அதற்கு LNG Terminal, அதாவது எல்.என்.ஜி. முனையம் தேவை. எல்.என்.ஜி. முனையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் எனது முன்னிலையில் 22.03.2012 அன்று ஏற்படுத்தப்பட்டது. எனவே, அந்த முனையம் அமைக்கப்பட்டவுடன் கிடைக்கப் பெறும் திரவ இயற்கை எரிவாயுவை பயன்படுத்தி, 500 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி வழியாக கொச்சி முதல் பெங்களூருக்கு திரவ இயற்கை எரிவாயு எடுத்துச் செல்லும் குழாய் அமைக்கும் பணிகளை GAIL நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி, 500 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆராயும்.

2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மின் திட்டங்களின் நிலைமை பற்றியும் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டது. எனவே, அது பற்றியும் இங்கே எடுத்துக் கூறுவது எனது கடமை என கருதுகிறேன்.

800 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி விரிவாக்க அனல்மின் திட்டம் துவங்கப்படுவதற்கான முதல் நடவடிக்கையாக, சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2015–2016 நிதியாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

1600 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல்மின் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட வரைபடம் ஆகியவை இறுதி செய்யப்பட்டுவிட்டன. கடலோர பகுதி ஒழுங்குமுறை, அதாவது, Coastal Regulation Zone விதிகளின் அடிப்படையில் திட்ட எல்லைகளை வரையறுக்க 28.01.2012 அன்று அண்ணா பல்கலைக்கழகத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதற்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளது. மத்திய சுற்றுச்சூழல்

தாக்க மதிப்பீட்டின் ஆய்வுக்கான குறிப்பு விதிமுறைகள், அதாவது Terms of Reference ஒப்புதலுக்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும்.

40 ஆண்டு பழமை வாய்ந்த எண்ணூர் அனல்மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய அனல் மின் நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப் பட்டிருந்தது. எனினும், Super Critical தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற முடியும் என்றும், இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. எனவே, 600 மெகாவாட் திறன் கொண்ட இந்த அனல்மின் நிலையத்தை, Super Critical தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 660 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையமாக மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அனல்மின் திட்டமும் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலை அனல் மின் திட்டத்தைப் பொறுத்த வரை, கடலோரப் பகுதி ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி அனல்மின் திட்ட எல்லைகளை வரையறுப்பதற்கான பணி அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான அறிக்கையும் பெறப்பட்டுவிட்டது. மேலும், சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட விவர அறிக்கையினைத் தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டுவிட்டார். இந்த அனல் மின் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

வட சென்னை அருகில் வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.07.2002 அன்று எனது முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. அதற்கான ஆரம்பக் கட்ட பணிகளும் எனது அரசால் துவங்கப்பட்டன. பின்னர் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு இதனை விரைந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், இன்னமும் வல்லூர்

அனல் மின் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. எனது அரசு பொறுப்பேற்றபோது மந்த கதியில் நடைபெற்று வந்த பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்த ஆண்டு ஜூன் மாதம், முதல் அலகு உற்பத்தியைத் துவங்கும். இரண்டாம் அலகு இந்த ஆண்டு நவம்பர் மாதமும், மூன்றாம் அலகு அடுத்த ஆண்டு ஜூன் மாதமும் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

அதேபோன்று, தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.6.2003 அன்று எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்திற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளும் முந்தைய எனது அரசாலேயே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இந்த அனல்மின் திட்டத்தின் பணிகளை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரியாக கண்காணிக்கத் தவறியதால், இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் அலகு 2013ஆம் ஆண்டு ஜூன் மாதமும், இரண்டாம் அலகு 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமும் செயல்பாட்டிற்கு வரும். எனது அரசால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய மின்சாரத்தின் அளவு 750 மெகாவாட் ஆகும். ஆனால், இத்திட்டம் பற்றி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, மத்திய அரசிடம் சரியாக எடுத்துக்கூறாத காரணத்தால், இது ஒரு மத்திய அரசின் திட்டம் என கருதப்பட்டு, காட்கில் ஃபார்முலா அடிப்படையில் 387 மெகாவாட் என குறைக்கப்பட்டுவிட்டது.

இவையன்றி, ஒவ்வொன்றும் 600 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை நிலை – 2 மின் நிலையம், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு யூனிட்டும், டிசம்பர் மாதத்தில் மற்றொரு யூனிட்டும் மின் உற்பத்தியை தொடங்கும். 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் மூன்றாம் நிலை அனல் மின் நிலையம் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, அதன் முழுத் திறனும் செப்டம்பர் மாதத்திற்குள் கிடைக்கப் பெறும்.

கூடங்குளம் அணுமின் நிலையம் தனது உற்பத்தியை இன்னும் இரண்டு மாதங்களில் துவக்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான் தற்போது விவரித்துள்ளவாறு எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய மின் திட்டங்களை தொடங்கியுள்ளதுடன், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின் திட்டப் பணிகளையும் முடுக்கி விட்டுள்ளது. எனவே, வரும் ஜூன் மாதம் முதல் மின்வெட்டு படிப்படியாக குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அ.இ.அதிமுக அரசு, 2011ஆம் ஆண்டு மே மாதம் தான் பொறுப்பேற்றது. அதன் பின்னர், இந்த அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவை ஆளுநர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும், கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர் செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி தான் நிறைவடைந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்ததற்கும், நடப்பு ஆண்டு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கும் உள்ள இடைவெளி ஆறு மாத காலம்தான். சாதாரணமாக, ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கும் இடையே ஓராண்டு இடைவெளி இருக்கும். எனவே, கடந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டதா என்று எழுப்பப்படும் கேள்விகள் நியாயமானவை அல்ல என்பதை நியாய உணர்வு உள்ளவர்கள் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

★ ★ ★

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 03.04.2012 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.740 கோடி மானியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் பயணிக்கும் வகையில், பொது நலன் பாதுகாக்கப்படுவதையும்; சமூக நலன் உச்ச நிலைக்குக் கொண்டு செல்லப்படுவதையும்; லாபத்தை குறிக்கோளாகக் கொள்ளாமல், மக்களுக்கான சேவை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றுபவைதான் பொதுத்துறை நிறுவனங்கள். இந்த

நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரத்தைத்தங்கு தடையின்றி அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் தமிழ்நாடு மின்சார வாரியம்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமளிக்காத வகையில்; இன்னும் சொல்லப் போனால், உபரி மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு அளிக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடு நன்றாக இருந்தது. தமிழ்நாட்டில் உள்ள அனல்மின் நிலையங்களான தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வட சென்னை அனல்மின் நிலையங்கள் அவற்றின் செம்மையான செயல்பாடுகளுக்காக 2001–2002 முதல் 2005–2006 வரை பல்வேறு விருதுகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுவந்தன. காற்றாலை மின் உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னிலை வகித்து வந்தது. இது மட்டுமல்லாமல், 2,518 மெகாவாட் அளவுக்கு மின் நிறுவு திறன் அதிகரிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிருவாகமும் சீராக இருந்தது.

ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆண்டொன்றுக்கு சராசரியாக 8,000 கோடி ரூபாய்க்கு மேல், வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே நிகர இடைவெளி ஏற்பட்டது. இதன் விளைவாக, 31.03.2012 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொடர் இழப்பு 50,000 கோடி ரூபாயையும்; வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் 45,000 கோடி ரூபாயையும் தாண்டியுள்ளது. இது தவிர, தனியார் மின் உற்பத்தியாளர் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை 11,000 கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு மின்சார வாரியம் அளவுக்கு மீறிய கடன்சுமைக்கு ஆளாகி; வாங்கிய கடனையும் வட்டியையும் திரும்பச் செலுத்துவதற்கே கடன் வாங்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில், அதாவது debt-trap நிலையில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், மதிப்பீட்டு நிறுவனங்கள் மின்சார வாரியத்தின் மதிப்பை குறைத்துவிட்டதால், வெளிச்சந்தையில் இருந்தும் கடன் பெற வழியில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடன் அளிக்கக் கூடாது என பாரத ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் கடந்த 2011ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட எனது தலைமையிலான அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, பல ஆண்டு இடைவெளிக்குப்பின் அனல்மின் நிலையங்கள் புதிய சாதனைகளை ஏற்படுத்தும் விதமாக மிகச் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. இதேபோன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் இழப்பு அதாவது Transmission and Distribution loss விகிதமும், குறைக்கப்பட்டுள்ளது. அகில இந்திய, சராசரி மின் இழப்பான, 27 விழுக்காட்டினை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் மின் இழப்பு, 18 விழுக்காடு, என்ற அளவிலேயே உள்ளது.

நிதி உதவியைப் பொறுத்த வரையில், 2011–2012ஆம் ஆண்டுக்கான மானியத் தொகையாக 2,058.19 கோடி ரூபாயைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியதுடன்; பங்கு மூலதனமாக 4,100 கோடி ரூபாயையும்; ways and means advance ஆக 1,455.16 கோடி ரூபாயையும்; ஆக மொத்தம் ஒரே ஆண்டில் இதுவரை வழங்கப்படாத அளவுக்கு 7913.45 கோடி ரூபாயை எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது. 2012–2013ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக 3,068.78 கோடி ரூபாயும்; புதிய மின் திட்டங்களுக்கான பங்கு மூலதன உதவியாக 1,500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, மின்சார சேமிப்பை ஊக்குவிக்கவும்; மின்சாரத்தைக் கொண்டு செல்வதிலும், விநியோகிப்பதிலும் ஏற்படும் இழப்புகளை மேலும் குறைக்கவும்; மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்தவும்; மின் திருட்டைக் கட்டுப்படுத்தவும்; சூரிய ஒளி மின்சக்தி திட்டங்கள்; காற்றாலை திட்டங்கள்; பயோமாஸ் மின் திட்டங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை விரைந்து செயல்பாட்டிற்கு கொண்டு வரவும்; புதிய திட்டங்களை மாநில அரசு மூலமாகவோ அல்லது கூட்டு முயற்சிகள் மூலமாகவோ தொடங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்துவதாக இருந்த 1,600 மெகாவாட் உடன்குடி உயர் அழுத்த நிலை அனல்மின் திட்டம் நான்கு ஆண்டுகளாகத் தொடங்கப்படாத நிலையில்

இருந்ததால், அத்திட்டத்தை 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசின் திட்டமாகவே செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில், உற்பத்திச் செலவு மற்றும் விநியோக வருவாய்க்கு இடையே உள்ள இடைவெளியை ஈடு செய்யும் வகையில், 9,741 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஏற்படும் வகையில், தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தை மாற்றக் கோரி தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பத்தின் மீது நுகர்வோரின் கருத்துகளைக் கோரி சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 'கருத்துக் கேட்பு' கூட்டங்களையும்; மாநில ஆலோசனைக் குழு, அதாவது, 'State Advisory Committee' கூட்டத்தையும் நடத்தி, பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும், ஆலோசனைகளையும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பெற்றது.

இதனையடுத்து, மின் கட்டண, விகித மாற்றம் குறித்த, தனது ஆணையை, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30.03.2012 அன்று வெளியிட்டது. இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, 7,874 கோடி ரூபாய், கூடுதல் வருவாய் கிடைக்கும்.

இருப்பினும், இந்தக் கட்டண உயர்வில், 1,118.44 கோடி ரூபாயை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்க எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இதன் அடிப்படையில், தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய மொத்த மானியத் தொகை ஆண்டொன்றிற்கு 3,554.16 கோடி ரூபாய் ஆகும்.

தமிழக அரசின் இது போன்ற மக்கள் நலம் காக்கும் நடவடிக்கையின் மூலம், ஏழை, எளிய மக்கள் அடையும் பயன்களை நான் இங்கே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

1. குடிசைகளுக்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 50 பைசா என்று கணக்கிடப்பட்டு, மாதம் ஒன்றுக்கு கட்டணம் 60 ரூபாய் என்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளது. இதனை

தமிழக அரசே முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இதன் மூலம், 14 இலட்சம் நுகர்வோர் பயன் பெறுவர்.

2. விவசாயத்திற்கான மின் கட்டணத்தை குதிரைத் திறன் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு 250/– ரூபாயிலிருந்து 1,750/– ரூபாயாக மாற்றித் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும். இதன் மூலம் விவசாயிகள் மின் கட்டணம் ஏதும் செலுத்தாமலேயே மின்சாரத்தைத் தொடர்ந்து பெற்று வருவார்கள்.

3. இரு மாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 60 பைசாவில், 1 ரூபாய் 50 பைசாவைத் தமிழக அரசு மானியமாக அளிக்கும் என ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 10 பைசா மட்டுமே.

4. இதே போன்று, இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 80 பைசாவில், 1 ரூபாயைத் தமிழக அரசு மானியமாக வழங்க ஒப்புக் கொண்டுள்ளதால்; பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 80 பைசா மட்டுமே.

5. இரு மாதங்களில் 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு, 201 முதல் 500 யூனிட்டுகளுக்கான மின் கட்டணத்தில், யூனிட் ஒன்றுக்கு 50 காசு மானியத்தைத் தமிழக அரசு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

6. வழிபாட்டுத் தலங்கள், விசைத் தறிகள் ஆகியவற்றிற்கான மானியங்களும் தொடர்ந்து அளிக்கப்படும்.

7. இவையன்றி, 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு அரசு தனியே மானியம்

வழங்கவில்லை என்றாலும், மின் உற்பத்திச் செலவை விடக் குறைவான கட்டணமே அவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட இந்தக் கட்டண உயர்விற்கு பின்னரும், வெளி மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் மின் கட்டணம் குறைவாகவே உள்ளது.

உதாரணமாக கர்நாடகாவில் இரண்டு மாதங்களில் 100 யூனிட் வரை உபயோகிப்பவர்கள் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 59 காசும்; ஆந்திராவில் 2 ரூபாய் 3 காசும்; கேரளாவில் 1 ரூபாய் 30 காசும்; மேற்கு வங்காளத்தில் 3 ரூபாய் 55 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 55 காசும்; உத்திரபிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால், இந்தக் கட்டண மாற்றத்திற்குப் பிறகும் தமிழ்நாட்டில் 100 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 காசு மட்டுமே.

இதே போன்று, இரண்டு மாதங்களில் 200 யூனிட்கள் வரை உபயோகிப்பவர்களை ஒப்பிடும் போது; ஆந்திராவில் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 81 காசும்; கர்நாடகாவில் 2 ரூபாய் 92 காசும்; மேற்கு வங்காளத்தில் 4 ரூபாய் 4 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 85 காசும்; உத்திரபிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால் தமிழகத்தில் புதிய கட்டண விகிதப்படி, 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 காசு மட்டுமே.

எனினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டணங்கள் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது என்றும்; எனவே கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்றும், பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள கட்டணங்களைக் குறைக்க தமிழக அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றாலும், ஏழை, எளிய

மக்களின் சுமையை மேலும் குறைக்கும் வண்ணம், வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறைக்கவும்; அதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கூடுதல் மானியம் வழங்கி, அந்தச் சுமையை தமிழக அரசே ஏற்றுக் கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி,

1. இரு மாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 பைசாவில் இருந்து 1 ரூபாயாகக் குறைக்கப்படும்.

2. இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 பைசாவில் இருந்து 1 ரூபாய் 50 பைசாவாகக் குறைக்கப்படும்.

3. இரு மாதங்களில் 500 யூனிட் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம், முதல் 200 யூனிட்டுகளுக்கு 3 ரூபாயிலிருந்து 2 ரூபாய் என்றும்; 201 யூனிட் முதல் 500 யூனிட் வரையிலான கட்டணம் 3 ரூபாய் 50 பைசாவிலிருந்து 3 ரூபாய் என்றும் குறைக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த மக்கள் நலன் காக்கும் நடவடிக்கை மூலம், 740 கோடி ரூபாய் மானியத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது தலைமையிலான அரசு கூடுதலாக வழங்கும். இதனையடுத்து, இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகை மிக உயர் அளவான 4,294.16 கோடி ரூபாயாக இருக்கும் என்பதையும், இதன் மூலம் 1 கோடியே 50 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 04.04.2012 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்களின் அறிக்கை.*

சங்ககிரியில் மாவீரர் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடுதலைப் போராட்ட வீரர்களையும்; தன்னலமற்ற மக்கள் சேவை புரிந்தவர்களையும்; சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க பாடுபட்டவர்களையும்; மக்களின் உரிமைகளை மீட்க போராட்டங்களை நடத்தியவர்களையும் கௌரவிக்கும் விதத்தில் அவர்களுக்கு மணிமண்டபங்கள் அமைப்பதிலும்; திருவுருவச் சிலைகள் அமைப்பதிலும்; அரசு கட்டடங்களுக்கு அவர்களது பெயர்களை வைப்பதிலும்; முன்னோடியாக விளங்குவது எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னால் அது மிகையாகாது.

பரம்பரை பரம்பரையாய் அடிமைத் தளையில் சிக்குண்ட நம் இந்திய நாடு, தற்போது, உரிமை பெற்ற நாடாக விளங்குகிறது. இச்சுதந்திரத்தைப் பெற இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தியாகச் சீலர்கள், கிளர்ந்து எழுந்து; தங்கள் வாழ்வைத் துச்சமென மதித்து; அன்னை பாரதத்தின் அடிமைத் தளையைத் தகர்த்தெறிய பாடுபட்டனர். இத்தகைய விடுதலைப் போரில், தமிழகத்திலும் பல தலைவர்கள் தோன்றி தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இந்த விடுதலைப் போராட்டத்தில், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஆர்ப்பரித்து, ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கியவர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள்.

மாவீரர் தீரன் சின்னமலை

சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் நடுவே வாழ்ந்து, தனக்கென ஒரு பாதை அமைத்து, ஆங்கிலேயருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

எனது ஆட்சிக் காலத்தில், சென்னை, அண்ணா சாலையில், தீரன் சின்னமலை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டதோடு; இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணிக்கு 1 இலட்சம் ரூபாய் நன்கொடையையும் நான் அளித்தேன். 1995ஆம் ஆண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில், காங்கேயத்தில், நினைவு விழா நடத்தப்பட்டு; அவ்விழாவில் அவரது வாரிசுகள், கௌரவிக்கப்பட்டனர். எனது ஆட்சிக் காலத்தில்தான், கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கரூரைத் தலைநகராகக் கொண்டு தீரன் சின்னமலை மாவட்டம் உருவாக்கப்பட்டது. தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த இடமான ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில்,

அவரது நினைவு நாளான, ஆடி மாதம் 18ஆம் நாளினை அரசு விழாவாக அனுசரிக்க 2003ஆம் ஆண்டு நான் உத்தரவிட்டேன். தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 30 இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் மணிமண்டபம் என்னால் 2006ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

தியாகி தீரன் சின்னமலையை போரின் மூலம் வெல்ல முடியாது என்ற நிலைக்கு வந்த ஆங்கிலேயர், சூழ்ச்சி மூலம் அவரைக் கைது செய்து; சங்ககிரி கோட்டைக்கு அழைத்துச் சென்று தூக்கிலிட்டனர். மாவீரர் தீரன் சின்னமலையை தூக்கிலிட்ட இடமான, சங்ககிரியில், அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று, சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர், திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் 30 மார்ச், 2012, அன்று இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்தார்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக, நன்மைக்காகப் பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக் காட்டி வரும் அரசு எங்கள் அரசு. இந்த உணர்வின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு அவர் தூக்கிலிடப்பட்ட இடமான, சங்ககிரியில், நினைவுச் சின்னம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த முடிவை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனதார வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்து, இந்த நினைவுச் சின்னம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 09.04.2012 அன்று விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அரசால் தீட்டப்படும் திட்டங்களைச் செயல்படுத்து வதிலும்; நலத்திட்ட உதவிகளை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும்; அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொதுச் சேவையை நடைமுறைப் படுத்துவதிலும் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள்.

இதேபோன்று, எதிர்காலத் தூண்களாக விளங்கும் மாணவ மாணவியரை நல்லவர்களாகவும்; வல்லவர்களாகவும்; சிந்தனையாளர்களாகவும்; செயல் வீரர்களாகவும்; புகழ் மிக்கவர்களாகவும் ஆக்கும் சிறந்த செல்வமாம் கல்விச் செல்வத்தை போதிக்கும் உன்னதமான, தன்னலமற்ற பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாப் பணியை ஆற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை எனது தலைமையிலான அரசு நன்கு உணர்ந்துள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், 01.01.2012 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கான அகவிலைப் படியை, அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 7 சதவீதம் மத்திய அரசு உயர்த்தியது போல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும்,

ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் 01.01.2012 முதல் அகவிலைப்படியை 7 சதவீதம் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.01.2012 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள்; ஆசிரியர்கள்; வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள்; அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள்; ஊராட்சி உதவியாளர்; எழுத்தர்; மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வு மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,383.49 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✶ ✶ ✶

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 10.04.2012 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழா

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற மகாகவி பாரதியின் குறிக்கோள் நிறைவேற, பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மை அடைவதும் மிக மிக அவசியமாகும்.

இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான பல்நோக்குத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகின்றது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெரிய நகரங்கள் மட்டுமின்றி சிறிய நகரங்களிலும் வளர்ந்து வருவதால், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் வேறு வேலை தேடி நகரங்களுக்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். இதன் விளைவாக ஏற்படும் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கலை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. இதன்படி, வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கும் மானியமாக 20 இலட்சம் ரூபாய் வீதம் 400 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு 80 கோடி ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்முதல் செய்யப்படும் வேளாண் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம்,

விவசாயிகள், குறைந்த வேலையாட்களைக் கொண்டு, இயந்திரங்கள் மூலம் அதிக சிரமமின்றி விவசாயப் பணிகளை விரைவாக செய்ய இயலும். மேலும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதனால் குறைந்த நிலப்பரப்பில் அதிக அளவு உணவு உற்பத்தி கிடைக்க வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் நுண்ணீர் பாசனம் அமைத்துப் பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் எனது தலைமையிலான அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவு பொருட்களை, விலை வீழ்ச்சியடையும் காலங்களில் சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும் காலங்களில் விற்பனை செய்ய ஏதுவாக விவசாயக் கிடங்குகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அதிக அளவு உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு விருது வழங்குவதற்கும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இரண்டாம் பசுமை புரட்சிக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கும் புதுப்புது ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளை சென்று அடைவதில் ஏற்படும் காலதாமதத்தை களையும் வண்ணம், பல்வேறு விவசாய உத்திகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பண்ணை சார் பயிர் மேலாண்மை மென்பொருளை வேளாண்மைத் துறை வடிவமைத்துள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நுட்பங்களை விவசாய பெருமக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், உழவர் பெருவிழா எனும் விழிப்புணர்வு முகாம்களை கிராம அளவில் நடத்த எனது அரசு முடிவு செய்துள்ளது. இந்த விழிப்புணர்வு முகாம்கள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல், விதைச்சான்று, கால்நடைப் பராமரிப்புத் துறை, மீன்வளம் மற்றும் பால்வளம் போன்ற துறை அலுவலர்கள்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களைச் சார்ந்த விஞ்ஞானிகள்; தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த சேவை வங்கியின் பிரதிநிதிகள் மூலம் “நடமாடும் விரிவாக்க மையம்” என்ற அணுகுமுறை மூலம் நடத்தப்படும்.

குறிப்பிட்ட கிராமச் சூழ்நிலைக்கு மிகவும் பொருந்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இலாபகரமான பயிர் ரகம், தொழில்நுட்பங்கள், கால்நடை வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, மீன்வளம் முதலான இனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணை முறையினைப் பின்பற்றி, பண்ணை உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் எடுத்துரைப்பதற்காக இவ்வலுவலர்கள் இதர இடுபொருட்கள் விநியோகிப்பாளர்களுடன் இணைந்து ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் சென்று, ஒரு நாள் முழுவதும் விவசாயிகளுடன் கலந்துரையாடுவார்கள். அந்தந்தக் கிராமங்களில் ஏற்படும் பண்ணை அளவிலான களப் பிரச்சனைகளுக்கு இந்த முகாம்களில் தீர்வு காணப்படும்.

தெருக்கூத்துகள், நாடகங்கள், கிராமிய பாடல்கள் மற்றும் நடனம் மூலமாக விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளும்

வகையில், தகவல்கள் இந்த முகாம்களில் அளிக்கப்படும். மேலும், பல்வேறு செயல் விளக்கங்கள், சிறு கண்காட்சிகள், வல்லுநர்கள் மற்றும் இடுபொருட்கள் விநியோகிப்பாளர்களுடனான கலந்துரையாடல்கள் ஆகியவையும் இந்த முகாம்களில் இடம் பெறும். இம்முகாம்களில், விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு, விவசாயிகள் தொழில்நுட்ப வழிகாட்டி, வேளாண் இடுபொருட்கள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

அனைத்துத் துறைகளின் பணிகள், திட்டப் பலன்கள் மற்றும் அலுவலர்களின் முயற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பச் செய்திகள் மற்றும் திட்டப் பலன்கள் விவசாயிகளின் சொந்த கிராமத்திலேயே கிடைக்கச் செய்யும் வகையில் நடத்தப்படும் இந்த உழவர் பெருவிழா, எதிர் வரும் தமிழ்ப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 13, 2012 அன்று தொடங்கி, தமிழகத்தில் உள்ள 16,564 வருவாய் கிராமங்களிலும் நடத்தப்படும். இந்த முகாம்களில் கலந்து கொள்ளும் விவசாய பெருங்குடி மக்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்படும். நவீன வேளாண்மையில் உள்ள சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு, அவர்களை வேளாண் வல்லுநர்களாக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை விரைவில் ஏற்படுத்த இந்த உழவர் பெருவிழா வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.04.2012 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகளுக்கு ரூ.50 கோடி

இந்தியாவிலேயே விரைந்து நகர்மயம் ஆகி வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. நகரங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் வலு சேர்க்கும் இயந்திரங்கள் ஆகும். அதே நேரத்தில், நகர்ப்புரங்களில் மக்கள் தொகை பெருகிவருவதன் காரணமாக, அடிப்படை வசதிகளின் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இதனை நிறைவு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், சென்னை மற்றும் அதனைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளுக்காகச் "சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்" மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்குக் கூடுதல் நிதி வழங்கும் "ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்" என்ற இரண்டு மாபெரும் புதிய திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது.

இதன்படி 2011–2012ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்விரு திட்டங்களின் கீழ் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால், மற்றும் சுகாதாரப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்களின் மேம்பாடு, வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பணிகள் நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் ஒருங்கிணைத்து

செயல்படுத்தப்படுகின்றன. இதேபோல, 2012–2013 ஆம் ஆண்டிற்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகரம் தமிழ்நாட்டின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றாகும். இது வரலாற்று பராம்பரியமும், சிறப்பும் கொண்ட ஒரு நகரம் ஆகும். புதுக்கோட்டை மாவட்டம் 1974ஆம் ஆண்டு புதிய மாவட்டமாக மலர்ந்தது. ஆனால், அதற்கு 62 ஆண்டுகளுக்கு முன்னரே புதுக்கோட்டை நகராட்சி உருவாக்கப்பட்டது. 1912ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகளை இந்த ஆண்டு நிறைவு செய்திருக்கிறது.

10.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தோற்றுவிக்கப் பட்ட இந்நகராட்சி தற்போது புதுக்கோட்டை ஊராட்சிப் பகுதி முழுவதுமாக இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு 21.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உயர்ந்துள்ளது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, 42 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள புதுக்கோட்டை நகராட்சியில் தற்போது 180 கி.மீ. நீளமுள்ள சாலைகள், 6,355 தெரு விளக்குகள், 2 பூங்காக்கள், ஒரு பேருந்து நிலையம், 43 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பிற அலுவலகக் கட்டடங்கள், 10 நீர்த் தேக்கத் தொட்டிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

இந்நகரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்திட எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 7.2.2006இல் ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–3–ன்கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 30.06.2012இல் நிறைவு பெற்று பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் சாலை அமைத்தல், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர்ப் பணிகள் முதலான பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2011–2012ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் கட்டமைப்பு வசதிகளுக்காக 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகள் நிறைவு செய்யும் இந்த ஆண்டில், நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என புதுக்கோட்டை நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும், நூற்றாண்டு விழா காணும் இத்தருணத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி உதவி கோரி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

புதுக்கோட்டை நகராட்சி நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளது என்பது பெருமைக்குரிய வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இதனை நினைவுகூரும் வகையில், புதுக்கோட்டை நகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பு உதவித் தொகையாக 50 கோடி ரூபாய் வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளதையொட்டி, நூற்றாண்டு விழா நினைவுத் தூண் மற்றும் நூற்றாண்டு விழா வளைவுகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

13.04.2012 அன்று சென்னை பல்கலைக்கழக
நூற்றாண்டு விழா மண்டபத்தில்,
தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற தமிழ்ப்புத்தாண்டு விழாவில்
கலந்துகொண்டு, தமிழறிஞர்களுக்குப் பரிசுகள் வழங்கி,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*

உழைப்பால் உயரும் தமிழரின் வாழ்வெல்லாம் வசந்த காலமாய் ஒளிரட்டும்

“**தா**யிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை”; “தாய்மொழியிற் சிறந்த தெய்வமுமில்லை” என்பதற்கேற்ப, சித்திரைத் திருநாளாம் தமிழ்ப் புத்தாண்டை கொண்டாடும் வண்ணம் நடைபெறும் இந்த அரசு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்ப் புத்தாண்டினை முன்னிட்டு, இன்று காலையிலிருந்து கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்திய தமிழ் அறிஞர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன்தோன்றிய மூத்த தமிழ்", என்னும் பழமையுடைய, இலக்கிய வளம் நிறைந்த தமிழ் மொழியைப் பேசுபவர்கள் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். இதற்கான அடிப்படைக் காரணங்கள் பல உள்ளன.

சித்திரை மாதம் புத்தாண்டின் தொடக்கம் என்பது வான நூலையும், பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டது.

பூமி, சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் காலம் ஓர் ஆண்டு ஆகும். சூரியன் பூமத்திய ரேகையில் நேராகப் பிரகாசிக்கும் மாதம் ஆண்டின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. சூரியன், முதல் ராசியான மேஷ ராசிக்குள் நுழைவதிலிருந்து, அந்த ராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதம் ஆகும். சித்திரையில் தொடங்கி பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அம்மாதத்தின் பௌர்ணமி அன்று வரும் நட்சத்திரத்தின் பெயரே அம்மாதத்தின் பெயராகும். உதாரணமாக, சித்திரை மாதம் பௌர்ணமி அன்று சித்திரை நட்சத்திரம் வருவதால், அந்த மாதத்தின் பெயர் சித்திரை ஆகும். இதே போன்று, வைகாசி மாதம் பௌர்ணமி அன்று விசாகம் நட்சத்திரம் வருவதால், அந்த மாதத்தின் பெயர் வைகாசி ஆகும். இப்படி ஒவ்வொரு மாதத்திற்கும் இந்த அடிப்படையிலேயே பெயர்கள் வைக்கப்பட்டன.

"சித்திரையே வா! நம் வாழ்வில், நல் முத்திரை பதிக்க வா!" என்று சொல்லும் மரபு இருக்கும் காரணத்தால், சித்திரை மாதமே தமிழ்ப் புத்தாண்டுக்கு உரிய பொருத்தமான நாள் ஆகும் என தெய்வத்திரு மதுரை ஆதினம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சோழர் கல்வெட்டுகளிலும், கொங்கு பாண்டியர் கல்வெட்டுகளிலும், 60 ஆண்டுகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

அகத்தியர் பன்னிராயிரத்தில், பங்குனி மாதம் கடை மாதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

“திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக” என்று நக்கீரர் கூறியிருக்கிறார். இந்தப் பாடலில் வரும் ஆடு தலைக்கு மேஷ ராசி என்று பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்ற நூலில் விளக்கம் கொடுத்துள்ளார் முனைவர் மா. ராசமாணிக்கனார்.

புஷ்ப விதி என்னும் நூலில், சித்திரை முதல் மாதம் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார் கமலை ஞானப் பிரகாசர்.

நாமக்கல் கவிஞர் திரு. வி. ராமலிங்கம் பிள்ளை அவர்களும், “சித்திரை மாதத்தில் புத்தாண்டு தெய்வம் திகழும் திருநாட்டில்” என்ற தனது வாழ்த்துப் பாடலின் மூலம், தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் சித்திரை மாதம் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1912ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப் பேரகராதியிலும், சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கோடைக் காலமே முதலாவது பருவம் என சீவக சிந்தாமணியில், வருணிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லப் போனால், தமிழ்ப் புத்தாண்டு தை மாதம் முதல் நாள் என்று திடீரென அறிவித்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியே, சித்திரை முதல் நாளில் கொண்டாடப்படும் தமிழ்ப் புத்தாண்டிற்குப் பல முறை வாழ்த்து தெரிவித்து இருக்கிறார். 1990ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல் துறை குறித்த ஒரு வினாவிற்கு பதில் அளிக்கும் போது, “சில காவல் அலுவலகங்கள் சித்திரை முதல் நாள் அமையவிருக்கின்றன” என்று பதில் அளித்து இருக்கிறார். கைதிகளின் தண்டனைக் காலத்தை குறைப்பது குறித்து 1990ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிக்கை அளிக்கும் போது, “தமிழ்ப் புத்தாண்டு அன்று அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்” என்று தெரிவித்துள்ளார். அதாவது, சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்பதை திரு கருணாநிதியே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

1935ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றக் கூட்டத்தில், “திருவள்ளுவர் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு

முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறிஸ்து பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்" என மறைமலை அடிகளார் கூறியதாக ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி வெளியிடப்பட்ட மலரில் சிறுவை நச்சினார்க்கினியன் அவர்கள் கூறியிருக்கிறார்.

மறைமலை அடிகளார் தை மாதம் பற்றியோ, தமிழ்ப் புத்தாண்டைப் பற்றியோ குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. இந்தக் கூட்டத்தில், திரு.வி.க. உட்பட மிகப் பெரிய தமிழ்ச் சான்றோர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் எடுத்த முடிவு, திருவள்ளுவர் தினம் வைகாசி அனுஷம் என்பது தான். உண்மை நிலை இவ்வாறிருக்க, "தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்த எல்லாத் தமிழ் அறிஞர்களும், ஒப்புக் கொண்டுள்ள உண்மை" என்று பொத்தாம் பொதுவாகக் கூறித் தமிழர்களின் மனம் புண்படும் வகையில், தை மாதம் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகச் சட்டத்தின் மூலம் மாற்றி அமைத்தார் திரு. கருணாநிதி. யார் கேட்டது இந்தச் சட்டத்தை ? இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு என்ன பயன் ? இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்தினாரா திரு. கருணாநிதி ? இந்தச் சட்ட முன்வடிவு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், திரு. என். நன்மாறன், இந்த மாற்றத்திற்கான காரணங்கள் இருந்தால் அதனை தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டாரே ! தெளிவுபடுத்தினாரா திரு. கருணாநிதி ? இல்லையே !

இதிலிருந்தே, காரண நோக்கமின்றி, விளம்பர மோகத்தின் அடிப்படையில், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பது தெளிவாகிறது.

இந்தச் சட்டம் இயற்றிய ஒரு சில நாட்களில், வள்ளுவர் கோட்டத்தில், மிகப் பெரிய பாராட்டு விழா திரு. கருணாநிதிக்கு நடத்தப்பட்டது.

விளம்பரத்திற்காக எடுக்கப்படும் இது போன்ற நடவடிக்கைகளை நினைக்கும் போது, தமிழ்ப் புத்தாண்டை மாற்ற எடுத்த நடவடிக்கை தமிழை வளர்க்கவோ, தமிழுக்குச் சிறப்பு சேர்க்கவோ எடுத்த நடவடிக்கை என எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இது போன்ற விளம்பர உத்திகள்

வியாபாரத்திற்குத்தான் உகந்ததே தவிர, தமிழ் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. விளம்பரத்திற்காக எடுக்கப்படும் இது போன்ற நடவடிக்கைகளை நினைக்கும் போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு சிற்றூரில் கோபாலன் என்பவர் மளிகைக் கடை நடத்தி வந்தார். அவர் தனது வியாபாரத்தை நேர்மையுடன் நடத்தி வந்தார். தன் கடையில் பொருட்களை வாங்க வருவோர் விலையைக் குறைத்துக் கேட்டால், அந்தப் பொருட்கள் என்ன விலைக்கு வாங்கப்பட்டன என்பதையும்; தனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதையும் அவர் தெரிவித்து விடுவார். வியாபார நுணுக்கம் தெரியாததால் கடையில் எதிர்பார்த்த லாபம் அவருக்குக் கிட்டவில்லை.

எனவே, பக்கத்து ஊரில் வியாபார நுணுக்கம் தெரிந்து அதிக லாபம் ஈட்டும் அம்பலம் என்பவரை அணுகி, வியாபார நுணுக்கங்களைத் தன் மகன் கண்ணனுக்குக் கற்றுத் தருமாறு கேட்டார் கோபாலன். அம்பலமும், அவனுக்கு வியாபார நுணுக்கங்களைக் கற்றுத் தருவதாகக் கூறினார். இதன்படி, தன் மகன் கண்ணனை அம்பலம் கடைக்கு அனுப்பி வைத்தார் கோபாலன்.

வியாபார ரகசியத்தைக் கற்றுக் கொள்ள வந்த கண்ணனிடம், “என்னுடைய ஒவ்வொரு செயலையும் உற்றுப் பார். எதையும் மற்றவர் முன் கேட்காதே. யாரும் இல்லாத போது கேள்”, என்று அறிவுரை வழங்கினார் அம்பலம்.

சற்று நேரத்தில் அம்பலத்தின் கடைக்கு ஒரு வாடிக்கையாளர் வந்தார். அவர் கண்ணனிடம், “உயர் ரக புளியின் மாதிரியைக் காட்டு” என்றார். உடனே கண்ணன், உயர் ரக புளியின் மாதிரியைக் காட்டினான். வாடிக்கையாளரின் முகம் மாறியது. “இதைவிட நல்ல புளி இருக்கிறதா ? விலை அதிகமாக இருந்தாலும், பரவாயில்லை” என்று கேட்டார் வாடிக்கையாளர். அதற்குக் கண்ணன், “இது தான் மிகவும் உயர் ரக புளி. இதைவிட உயர் ரகம் வேறு இல்லை” என்றான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்பலம், கண்ணனிடம் “இவர் இந்த ஊரில் மிகப் பெரிய மனிதர். இவருக்கு எப்பொழுதும்

மிக உயர்ந்த ரக பொருட்கள் தான் பிடிக்கும். விலையைப் பற்றி அவருக்கு கவலை இல்லை'' என்று கடிந்து கொண்டு, ''அந்த எவர்சில்வர் டிரம்மில் உள்ள புளியை அவருக்கு எடுத்துக் காட்டு'' என்று கூறினார்.

கண்ணன் குழப்பத்துடனே உள்ளே சென்று, எவர்சில்வர் டிரம்மில் இருந்த புளியை எடுத்துக் காட்டினான். இதைப் பார்த்ததும், அந்த வாடிக்கையாளரின் முகம் தாமரை போல் மலர்ந்தது. பின்னர், அவர் தனக்கு தேவையான புளியை வாங்கிச் சென்றார்.

வாடிக்கையாளர் சென்றதும், கண்ணன் அம்பலத்திடம், ''இரண்டு புளியும் ஒரே ரகம்; ஒரே விலைதான். வேறு, வேறு டிரம்களில் இருந்தன அவ்வளவு தானே ?'' என்று கேட்டான். அதற்கு அம்பலம், ''நல்ல புளி என்பதை வாடிக்கையாளர் மனதில் நான் பதிய வைத்தேன். இது தான் வியாபார தந்திரம்'' என்று கூறினார்.

இந்த வியாபாரி செய்தது வியாபாரத் தந்திரம். அரசியலில், இது போல் தந்திரம் செய்பவர்கள் தமிழுக்குத் தொண்டு செய்வது போல் காட்டிக் கொள்கின்றனர்.

திரு. கருணாநிதி சொல்வதைப் போல், தமிழ் அறிஞர்கள் எல்லாம் தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாக இருக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருப்பார்களேயானால், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனேயே, அதனை நிறைவேற்றியிருப்பார். ஏன் ?திரு. கருணாநிதியே கூட 2008–க்கு முன்பு இதை நிறைவேற்றவில்லையே!

தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்று தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட சட்டத்தை தமிழக மக்கள் விரும்பவில்லை.

எனவேதான், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு பொதுமக்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், வானியல் வல்லுநர்கள், தமிழ் அறிஞர்கள், ஆகியோர் விடுத்த வேண்டுகோள்களைக் கருத்தில் கொண்டும்; சித்திரைத் திங்கள் முதல் நாளையே கோடானுக் கோடி தமிழ் மக்கள் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டும்; தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும்

வண்ணம் இருந்த 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு விளம்புகைச் சட்டத்தினை நீக்கம் செய்தேன்.

தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்பும் வகையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் மதுரையிலும்; எனது ஆட்சிக் காலத்தில் தஞ்சையிலும்; உலகத் தமிழ் மாநாடுகள், நடத்தப்பட்டன. தமிழ் மொழிக்கென தஞ்சையில், தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ஆட்சிக் காலத்தில்தான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான் அரசவைக் கவிஞர் பதவி உருவாக்கப்பட்டு, தமிழ் மொழியை சிறப்பித்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர். எனது ஆட்சிக் காலத்தில், புது டெல்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவ 50 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

தமிழ் மொழியின் சிறப்பினை மேலும் வெளிப்படுத்தும் வகையிலும்; தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுபவர்களை ஊக்குவிக்கும் வகையிலும்; கல்வெட்டுகள், அகழாய்வுகள், ஓலைச் சுவடிகள், அரிய கையெழுத்துப் படிகள், கிடைத்தற்கரிய நூல்கள், முதலியவற்றை வெளிக் கொணர்ந்தும்; தமிழுக்கு வளம் சேர்க்கும் வகையில், பதிப்புப் பணிகளை மேற்கொள்ளும் அறிஞர் ஒருவருக்கு சங்க கால இலக்கியங்களை தமிழ் மக்களுக்காக அளித்த, "தமிழ்த் தாத்தா" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. உ.வே.சா. அவர்கள் பெயரில் ஒரு விருதும்; தற்காலத்தில் பழந்தமிழ், தொன்மை, வரலாறு, நாகரிகம் ஆகியவை புலப்படும் வகையில், தமிழுக்கு உயிரூட்டும் படைப்புகளைப் புனைந்து வழங்கும் அறிஞர் ஒருவருக்கு, சங்க இலக்கியத்தில் தனக்கென ஒரு தனித்துவத்தை அமைத்து, அதிக அளவு பாடல்களைப் பாடிய இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த "குறிஞ்சிக் கபிலர்" என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் கபிலர் பெயரில், ஒரு விருதும்; தமிழ் மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றை வளர்க்கும் பணியில் ஈடுபடும் அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த்தாய் விருதும், இந்த ஆண்டு முதல் உருவாக்கப் பட்டுள்ளன. இந்த விருதுகளுக்காகத் தெரிந்தெடுக்கப் பட்டவர்களுக்கு இன்று பரிசுகளை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அதே போன்று, சிறந்த பெண்மணிக்கு ஆண்டுதோறும் ‘ஔவையார் விருது’ வழங்கப்படும் என்று உலக மகளிர் தினத்தன்று நான் அறிவித்தேன். இந்த விருதை இன்று வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இனி ஒவ்வொரு ஆண்டும், இவ்விருது உலக மகளிர் தினத்தன்று வழங்கப்படும். மேலும், இந்த விழாவில் சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள்; அவற்றைப் பதிப்பித்த பதிப்பகத்தார்; திருக்குறள் ஒப்புவிப்புப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ–மாணவியர் ஆகியோருக்குப் பரிசுகளை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சித்திரைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடும் பழமை வாய்ந்த, பாரம்பரியம் மிக்க மரபினை மீட்டெடுத்த பிறகு நடைபெறும் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு விழா, சீரும் சிறப்புமாக நடைபெற உறுதுணையாக இருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்; அரசு அதிகாரிகளுக்கும்; கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளை சிறப்புடன் நடத்திக் கொடுத்த தமிழ் அறிஞர்களுக்கும்; இங்குக் குழுமியுள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு;

உழைப்பால் உயரும் தமிழரின் வாழ்வெல்லாம் வசந்த காலமாய் ஒளிரட்டும்; தமிழினம் அனைத்திலும் வெற்றி வாகை சூடட்டும் என்று வாழ்த்தி; மீண்டும் ஒரு முறை என் இனிய சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

உள்நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பாக புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு மாண்புமிகு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம். (16.04.2012)*

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது

இந்திய அரசமைப்பில் மாநில அரசு பட்டியலின் கீழ் உள்ள முதல் நிலைப்பட்டியலில் பொது அமைதி மற்றும் காவல்துறை வருகின்றன. நமது நாட்டிற்கான நிதியொதுக்கம் பற்றியும் மத்திய—மாநில அரசுகள் செயல்பாடுகள் பற்றியும் இந்திய

அரசியலமைப்புத் தெளிவாக விவரித்துள்ளது. அதற்கிணங்கவே இந்தியப் பாராளுமன்றம் மாநில சட்டமன்றப் பேரவைகள் ஆகிய சட்டம் இயற்றும் அமைப்புகள் இத்தகையச் செயல்பாடுகளை சுலபமாக நிறைவேற்றுகின்றன. இத்தகையச் சூழ்நிலையில் உள்நாட்டுப் பாதுகாப்பு என்பது புரிந்துகொள்ளத்தக்கதும் உணர்ந்து பாராட்டத்தக்கதுமாக இருக்க வேண்டும்.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கான இந்த மாநாடு மிகப்பல பிரச்சினைகள் பற்றி தெளிவாக்குவதற்காக நடத்தப்படுகிறது. அவற்றுள், குற்றவியல் மற்றும் கணினி வழிக் குற்றங்களைக் (CCTNS) கண்டறிவதற்கான ஏற்பாட்டுமுறை பற்றி துப்பறிதல், காவல்துறையை நவீனப்படுத்துதல், எல்லைப் பாதுகாப்பு மேலாண்மை, கடலோரப் பாதுகாப்பு, இந்தியக் கள்ள நோட்டுகளின் விநியோகத்தைத் தடுத்தல், புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துதல், குற்றவியல் புலனாய்வைத் தனியாகப் பிரித்தல் மற்றும் சட்டம்—ஒழுங்கு ஆகியனவும் அடங்கும்.

எனது தலைமையின் கீழான அரசு தமிழ்நாடு காவல் துறைத் திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்துவதில் தலைசிறந்த நிலையில் உள்ளது. அதே நேரத்தில் இம்மாநாட்டில் இந்த நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்சினைகள் பற்றியும் அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் பற்றியும் விளக்கமளிப்பது அவசியமானது என்று நான் கருதுகிறேன். உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரிப்பதில் எய்தப்பட்ட விளைவுகள் இந்த நிகழ்ச்சி நிரல் குறிப்புகளில் வெறுமனே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களைவிடக் கவனம் செலுத்தப்பட வேண்டியது மிகவும் அதிகமாக இருக்க வேண்டும்.

பொது அமைதியைப் பாதுகாப்பதன் அவசியம்

உள்நாட்டுப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் தொடர்ந்து விவரிக்க வேண்டிய மிகப் பெரிய பிரச்சினைகள் பற்றி தற்போது நான் தெரிவிக்க உள்ளேன். பொது அமைதியைப் பராமரிப்பது என்பது உள்நாட்டுப் பாதுகாப்பின் முதன்மையான சோதனைக் கட்டமாக உள்ளது. மக்கள் அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலைகளை

ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மாநிலம் அமைதிப் பூங்காவாக விளங்கும். எனது ஆட்சிக் காலமான கடந்த 11 மாதங்களில் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுகின்ற எத்தகைய ஒரு நிகழ்வுகளும் தமிழ்நாட்டில் நடைபெறவில்லை என்பதை இங்குப் பெருமையோடு கம்பீரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டில் ஏனையப் பல மாநிலங்களில் ஜாதி சண்டைகளும் மோதல்களும் அச்சுறுத்திய போதிலும் அவைத் தமிழ்நாட்டில் ஏற்படவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் நலப் பணிகளும் தேவைப்படுகின்ற பாதுகாப்புகளும் ஏழைகளைச் சென்றடைய வேண்டும் என்ற அரசின் செயற்பாட்டினால் இடதுசாரி தீவிரவாத இயக்கம் இம்மாநிலத்தில் கால்பதிக்க இயலவில்லை.

கடத்தலை இரும்புக்கரம் கொண்டு தடுக்க நடவடிக்கை

காவல்துறையின் தொடர் கண்காணிப்புப் பணிகளாலும், தொழிலாளர் போராட்டம் ஏதுமில்லாத நிலையிலும், தமிழக மாநிலம் முதலீட்டாளர்களுக்குச் சுமூகமான நிலையை ஏற்படுத்தித் தருவதுடன், வேலைவாய்ப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஆண்களும், பெண்களும் பங்கேற்கச் சம வாய்ப்பு அளித்து வருகிறது. சட்டம்–ஒழுங்கிற்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற நிலை குறித்து அரசு எச்சரிக்கை அளிப்பதோடு, முறையான வகையில் திட்டமிடல் மற்றும் உளவுத் தகவல் சேகரிப்பின் வாயிலாகப் பொதுமக்கள் அமைதியான ஒரு சூழ்நிலையில் வாழ்வதை உறுதி செய்யும் வகையில் குண்டுவெடிப்புச் சம்பவங்களை முன்கூட்டியே எதிர்பார்த்து அதனைத் தடுப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் உரிய நேரத்தில் எடுக்கப்படுகின்றன. இன்றியமையாப் பொருட்கள் கடத்தப்படுவது இரும்புக்கரம் கொண்டு தடுக்கப்படுகிறது மற்றும் சட்டச் செயல்பாடுகளில் வருகின்ற தலையீடுகளை இந்த அரசு ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய மக்களின் உத்தரவுகளின் பேரிலும், அவர்களது தேவைகளின் அடிப்படையிலும், காவல்துறையின் செயல்பாடுகளை முறைப்படுத்தி மதிப்பீடு

செய்கிறது. மாறிவருகின்ற சமூகப் பொருளாதார நிலைக்கேற்ப மாநிலத்தில், குற்றங்களின் தன்மையும் மாறி வருகிறது.

குற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு, குறிப்பிடத்தக்க வகையில் திறன்களையும், அடிப்படை பயிற்சியையும் அளித்து இவற்றை எதிர்கொள்ள அனைத்து வகையிலும் நாம் தயார் நிலையில் இருப்பது அவசியமாகிறது. உதாரணமாக, கணினி வழிக் குற்றங்கள் (Cyber Crime) கள்ள நோட்டு அச்சடித்தல் போன்ற குற்றங்கள் வாலாயமான காவல் பணியின் கீழ் வருவதில்லை. திறன் வளர்ப்பு மற்றும் தரமான செயல்திறன்களை வளர்ப்பதற்கு, அதிகளவில் தொகையைச் செலவிட வேண்டியது தவிர்க்க இயலாததாகும். இத்தகையத் தருணத்தில் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் தொகை தொடர்ந்து குறைந்து வருவது வருத்தம் அளிக்கிறது.

மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய் குறைந்து கொண்டே வருகிறது

இத்தகைய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து தூண்டுவிசையாக செயல்பட வேண்டிய அரசே, நிதி இடர்பாடுகளால் ஒரு வரையறைக்கு உட்பட்டு செயல்பட வேண்டியதாகிறது. இதுபோன்று ஒவ்வொரு நிலையிலும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய் குறைந்து கொண்டே வருவதால், இதற்கும் நாங்கள் பழகி வருகிறோம். உலகத்தரத்திற்கு இணையாக மாநகராட்சிகளின் நிலையை உயர்த்துவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு, மாநில அரசுகள் மத்திய அரசின் நிதி உதவியை வெகுவாக சார்ந்திருப்பதால், இத்தகைய முயற்சிகள் மாநில அளவில் தொடர்ந்து குறைந்துவருவதோடு, தற்போதுள்ள கூட்டமைப்பு நடைமுறைகளைக் கேலிக்குரியதாக்கிவிடுகிறது. இத்தகையப் போக்கு பதட்டத்தை உண்டாக்குவதுடன், நடைமுறைகளில் உள்ள சிக்கல்கள் மாநிலத்திற்கு அல்லது தேசிய அளவிலான வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் அவர்களுக்குரிய பாரம்பரிய சமூகம் மற்றும் சமூகப் பொருளாதார கூறுகள் வேறுபடுவதால், நம் நாட்டில் காவல் பணிகள் ஒரே சீராக இருப்பதில்லை.

சட்டம்–ஒழுங்கு சீர்குலையும் வகையில், தீய சக்திகளால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் தொடர்பான அறைகூவல்களை எதிர்கொள்வதற்கு, வலுவான, திறமையான, அனைத்து வசதிகளும் கொண்ட கட்டுப்பாடான காவல்படையே ஓர் விடையாக அமையும்.

மாநில அரசுகளின் பலதரப்பட்ட அலுவல்களையும் நிதி ஆதாரங்களையும் திரட்டுவதற்கான அவற்றின் வள வாய்ப்புகள் குறைவாக இருப்பதையும் கருத்திற்கொண்டு காவல் துறையை வலுப்படுத்துவதற்கும், நவீன மயமாக்குவதற்கும், தாராளமாக நிதியுதவி வழங்க, மத்திய அரசு முன்வரவேண்டும். நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கான வளவாய்ப்புகளை, மத்திய அரசு ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்வதால், மாநில அரசுகள், அவற்றின் தேவைகளை நிறைவு செய்வதில் இடர்பாடுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இத்தகையப் பின்னணியில் காவல்துறையை நவீனமயமாக்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள், ஆண்டுக்காண்டு குறைக்கப்பட்டு வருவது கண்டனத்திற்கு உரியதாகும். எடுத்துக்காட்டாக 2007–2008ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் காவல்துறையை நவீனமயமாக்குவதற்கான மத்திய அரசின் பங்குத் தொகை, ரூ.75.75 கோடியாக இருந்தது. இது, 2011–2012ஆம் ஆண்டில் ரூ.42.27 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு, மாறாக என்னுடைய அரசு, காவல்துறையை நவீனமயமாக்குவதற்கு கடந்த நிதியாண்டிலேயே ரூ.357 கோடி அனுமதித்துள்ளது. “ஏர் பிடிக்கும் உழவர்களே, போரிடுகிற படைக்கு வீரர்களை வழங்குபவர்கள்” என்று தமிழில் ஒரு முதுமொழி உண்டு. அதுபோன்று, வலுவான மாநில அரசுகள் நிதி வகையிலும், நிருவாக முறையிலும் இல்லையெனில் பயங்கரவாதத்திற்கு எதிராக ஒருபோதும் வெற்றி பெற இயலாது.

ஒருங்கிணைந்துச் செயல்பட்டால் பயங்கரவாதத்தை முறியடிக்க இயலும்

அண்மைக்காலத்தில் நடைபெற்ற மூன்று பயங்கரவாத நிகழ்வுகள் பற்றிய குறிப்பு, நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருப்பதை

நான் கண்டேன். இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான உறுதி வாய்ந்த மனிதரான சர்தார் பட்டேல் போன்றவர்களால் உற்சாகமும், ஊக்கமும் அடைந்த நமது காவல்படை வீறு கொண்டெழுந்தது. உளவுத் தகவல் அமைப்பு மற்றும் பிற துணை நிறுவனங்களிடமிருந்து மாநில காவல் துறைக்கு உத்தரவிடுகிற உரிமையை, நியாயமின்றி தானாக எடுத்துக்கொள்கிற அமைப்பை ஏற்படுத்த முனைவதற்குப் பதிலாக, நாம் ஒன்றாக கைகோர்த்து, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பும், ஆதரவும் அளித்து, ஒருங்கிணைந்து செயல்பட்டால், பயங்கரவாதத்தை நம்மால் முற்றிலும் முறியடிக்க இயலும்.

காவல்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், மாநில காவல்துறை அல்லது உளவுத் தகவல் அமைப்பு அல்லது மத்திய உளவுத் தகவல் அமைப்பு ஆகியவற்றில் பணியாற்றினாலும், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நியமிக்கப்பட்டு, தேசிய காவல் பயிற்சிக் கழகத்தில் ஒரே மாதிரியான பயிற்சியைப் பெறுகின்றனர். குறிப்பாக, காவல்துறை மாநில அரசின் பொருண்மையாக இருக்கிற போது, பொதுவான அமைப்புகள் மூலம் மாநிலங்களை அச்சுறுத்துவது மற்றும் அடிபணியச் செய்வது ஏற்கத்தக்கதல்ல.

வேறுவகையில் கூற வேண்டுமானால், நாட்டின் நலனுக்குப் பாதகமான முறையில் அளவுக்கு மீறி தலையீடு செய்து மாநிலங்களின் வலுவைக் குறைப்பதற்கு, மத்திய அரசு, மறைமுகமான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மத்திய அரசின் கண்காணிப்புடன் சரி நிகரான ஆணைக்குழு உருவாக்குதல் அல்லது இரயில்வே பாதுகாப்புப் படை, தேசிய தீவிரவாத எதிர்ப்பு மையம் போன்றவற்றில் எதிர்பார்க்கப்பட்டது போல் அரசியல் குழுக்களை அமைத்து, மாநில காவல் துறையின் அதிகாரங்களைப் பல்வேறு பதில் நடவடிக்கைகள் மூலம் வசப்படுத்துவது போன்ற மாநில அரசின் அதிகாரங்களைக் கையகப்படுத்தும் வகையிலான பெருமுயற்சிகள் மாநில பட்டியலில் காவல் துறைக்கு முதன்மையிடம் அளிக்கும் இந்திய அரசியலமைப்பின் விதித்துறைகளின் மீறல்கள் என்றுதான் கூறமுடியும்.

கடல்வழியாகத் தமிழ்நாட்டிற்குள் கடத்தலைத் தடுப்பது மற்றும் சமூக விரோத சக்திகள் திரளாக நுழைவதை கண்டுபிடிப்பது ஆகிய நோக்கத்திற்காகத் தமிழ்நாட்டில் 1994ஆம் ஆண்டு கடலோரப் பாதுகாப்புக் குழு முதன்முதலாக என்னால் அமைக்கப்பட்டது. கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின் நிலை–I இன் கீழான கடலோரக் காவல் நிலையங்கள், புறக்காவல் நிலையங்கள், தணிக்கைச் சாவடிகள் போன்றவற்றிற்குத் தனித்தனி அலகாகக் கொண்ட கட்டட அமைப்பு மாநிலத்தில் எனது ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டது. நிலை–II இன் கீழ் 30 கடலோரக் காவல் நிலையங்கள், 20 படகுகள், 12 தோணித்துறைகள், 30 நான்குச் சக்கர வாகனங்கள் மற்றும் 60 இரண்டு சக்கர வாகனங்களுக்கான ஒப்புகை அண்மையில் அளிக்கப்பட்டுள்ளது. 30 கடலோரக் காவல் நிலையங்கள் அமைவுறு இடங்கள் இனங்காணப்பட்டு அவற்றில் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

மேலும் நான் அனைத்து நிலப்பகுதிகளிலும் செல்லும் 12 மோட்டார் வண்டிகள் மற்றும் அனைத்து நிலப்பகுதிகளிலும் செல்லும் 12 ஜீப்புகளுக்குமான ஒப்புதல் அளித்துள்ளேன்.

மாநிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் யாதொருவர் மூலம் தெரியப்படுத்தாமல் சட்டமுன் வடிவு நிறைவேற்றப்படுவது அல்லது அறிவிக்கைகள் வெளியிடுவதன் மூலமாக வழக்கொழியச் செய்யப்படும் விதத்திலான ஒரு பாங்கு உருவானது குறித்து நான் அச்சம் அடைகிறேன்.

மத்திய அரசின் கண்காணிப்பு முறை குறித்து மாநிலங்களுடன் கலந்தாய்வு செய்யாத மற்றும் மாநிலங்களை நம்பிக்கையின் பாத்திரமாகக் கொள்ளாத ஒன்று என்று நம்ப வைக்கும் வகையில் கருத்துரை கூறலாம்.

மாநில அரசுகள் திகைப்பு

இதுபோன்று தமிழ்நாட்டில் வங்காள விரிகுடாக் கடலோரத்தில் கடற்படையும் அமெரிக்க நாட்டின் அணு ஆயுதம்

தாங்கிய போர்க்கப்பல்களும் மேற்கொண்டிருக்கும் கடற்படை நடைமுறைகள் மாநில அரசின் மீது நம்பிக்கையில்லாமல் இந்திய அரசால் எடுக்கப்பட்ட ஒருமுகமான முடிவாகும். இதுகுறித்து எனது அதிகாரிகளால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. இவ்வாறு பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படாமல் எடுக்கப்படும் கூட்டு இராணுவ நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதியை கிளப்பும் என்று நீங்கள் ஏற்றுக் கொள்வது போல் மாநில அரசும் ஒன்றும் செய்வதறியாமல் திகைப்பில் உள்ளது. இது மட்டுமல்ல, மேலும் அவமதிக்கும் வகையில், அமெரிக்கத் தூதரும், சென்னையைச் சேர்ந்த இந்தியக் கடற்படை அதிகாரிகளும், அரசமைப்புக்கு பின் தலைமைப் பதவியிலுள்ள என்னைச் சந்திப்பதற்கு, மத்திய அரசு அனுமதிக்கவில்லை. மத்திய அரசு அரசமைப்பு நடைமுறையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்குப் போதிய மரியாதை அளிப்பதில்லை என்பது தெரிய வருகிறது. இனிவரும் காலங்களில், மத்திய அரசால் அத்தகைய முக்கியமான முடிவுகள் எடுக்கப்படும் போதெல்லாம், மாநில அரசுகளுடன் முன்னரே கலந்தாலோசிக்கின்ற கொள்கையை மத்திய அரசு பின்பற்றும் என நான் நம்புகிறேன். இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கொள்கையின்படி முன்னரே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இது என்பதில் ஐயமில்லை. இருந்தபோதிலும், இது குறித்து, தெரிவிக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது மிகையானதா ?

குறித்த காலத்திற்குள் திட்டம் நிறைவேற்றம்

குற்றவியல் மற்றும் கணினி வழிக் குற்றங்களைக் கண்டறிவதற்கான ஏற்பாட்டு முறை தொடர்பாக, திட்டத்தை முடிப்பதற்கு வரையறுக்கப்பட்ட கால அட்டவணையைப் பின்பற்றுவதற்கான அவசியம் குறித்து மாநில அமைச்சரிடமிருந்து சமீபத்தில் தகவல் ஒன்று பெறப்பட்டது. எனது மாநிலம், குறித்த கால அளவிற்கு முன்னதாகவே திட்டத்தை நிறைவேற்றும் என்பதைக் கூற விழைகிறேன். நாங்கள், திட்ட ஒருங்கிணைப்பாளரை இறுதி செய்து, 04.11.2011 அன்றிலிருந்து திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

கட்டமைப்பு அணைப்பு நிலை பற்றிய சாத்தியமான ஆய்வு முடிக்கப்பட்டுள்ளதுடன், குடிமக்களின் வலைதள முகவரியுடன், இணையத்தை கையாளுகின்ற பதிப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு, சிலை திருட்டு தடுப்புப் பிரிவு போன்ற காவல்படையின் சிறப்புப் பிரிவுகளுக்கு நீட்டிக்கப்பட்டு வருகின்ற, குற்றவியல் மற்றும் கணினி வழிக் குற்றங்களைக் கண்டறிவதற்கான ஏற்பாட்டு முறையை, மத்திய அரசு ஏற்காததைக் கண்டறிந்த பின்னர், மாநில அரசு இந்தச் செயல் நோக்கத்திற்காக, அதன் சொந்த நிதியிலிருந்து ரூ.9.96 கோடி வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது.

காவல்துறை சீர்திருத்தங்கள் குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டவாறாக, சட்டம்–ஒழுங்கு காவல் துறையின் பிரிவிலிருந்து குற்றப் புலனாய்வைத் தனியே பிரிப்பது உண்மையில் சரியான வழியாகும். குற்றப் புலனாய்வில், விரைவாகத் துப்பறிதல், சிறப்புக் கவனம் செலுத்துதல், நல்ல பயிற்சித் திறன் ஆகியவற்றுக்கு உறுதி செய்வது அவசியமானதாகும். மாநிலம், தொடர்புடைய பிரச்சினைகளை ஆராய்ந்து, அது குறித்த உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் எனினும், மாறிவருகின்ற கட்டமைப்புகளுக்குப் பொதுமக்கள் பழக்கப்பட வேண்டுமென்பதால், அத்தகைய பெருமளவிலான மாற்றங்களைப் படிப்படியாகவே செயல்படுத்த இயலும் என்பதை எச்சரித்துக் கூற விரும்புகிறேன்.

காவல் பிரிவுகளுக்குத் தனிப் பயிற்சி

காவல்துறையின் புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்காகத் தேவை குறித்த இரண்டு விதமான கருத்துகளுக்கு இடமில்லை. தற்போது முறையான காவல் பிரிவிடமிருந்து மாநிலப் புலனாய்வுப் பிரிவுக்குப் படைகள் பெறப்பட்டு, அவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பதவி உயர்வு வழங்கும் நேரத்தில், இருக்கக்கூடிய காலிப்பணியிடங்கள், அவர்களுடைய செயல்பாடு ஆகியவற்றைச் சார்ந்து, அவர்கள் விரும்புகின்ற வரையில், இப்பிரிவில்

அவர்கள் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வார்கள். ஏனைய பிரிவுகளில் பணிபுரிவோர், தங்களுடைய தொகுதியை / குழுவைச் சேர்ந்தவர்களுடனும், உள்ளூர் காவல் துறையினர் தங்களுடைய பதவி மூப்பு அடிப்படையிலும் அவர்கள் பதவி உயர்வு பெறுகின்றனர். அர்ப்பணிப்புடன் கூடிய நிரந்தரப் படைப்பிரிவு உருவாக்கப்படுமாயின், தனி நியமனம், பயிற்சி, பதவி உயர்வு, அவர்களுக்கும் உள்ளூர் காவல் படையினருக்குமிடையே ஒருங்கிணைப்பு இல்லாமை முதலிய பணி சார்ந்த பிரச்சினைகளின் சிக்கல்களை ஏற்படுத்தும். மேலும், காவல் படையின் வெவ்வேறு பிரிவுகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் படைவீரர்கள், ஏனைய படைப்பிரிவுகளில் இருந்து அவர்கள் பெற்ற சிறந்த அனுபவத்தின் காரணமாக, தகவல் சேகரிப்பதிலும், புலனாய்வு மேற்கொள்வதிலும் அவர்கள் சிறந்த பங்காற்றுகின்றனர். காவல் துறையினரிடையே மிகச் சிறந்த பிரிவு என்பதைத் தக்க வைத்துக் கொள்வதற்கு, புலனாய்வுப் பிரிவுப் பணியாளர்களுக்கு குறிப்பிடத்தக்க ஊக்கத் தொகை வழங்குவது கட்டாயமாகும். தற்போது, தமிழ்நாட்டில், புலனாய்வுப் பிரிவுப் பணியாளர்களில், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் பதவி வரைக்கும், அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதம் சிறப்பு ஊதியமாகவும், ஊக்கத் தொகையாகவும் வழங்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இம்முறை நன்கு செயல்பட்டு வருகிறது. உளவுப் பிரிவுக்கு வழங்கப்படும் சிறப்பு ஊக்கத் தொகைக்கான செலவை மத்திய அரசு ஈடுசெய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக் காவல்துறையானது, எந்தவொரு நிகழ்வையும், சந்திக்கத் தயாராக உள்ளதுடன், பிரச்சினைகளை நம்பிக்கையுடனும், சுறுசுறுப்புடனும் தீர்வு செய்கிறது. 2011–2012ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சினைகளில் எடுக்கப்பட்ட சுமூகமான தீர்வு இதற்குச் சான்றாகும். கூடங்குளமோ அல்லது முல்லைப்பெரியாறு அணைப்பகுதியோ, பல்வேறு எதிர்ப்புகளையும் சாதுரியமாகவும், வெற்றிகரமாகவும் கையாளப்பட்டு, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். சட்ட ஒழுங்கிற்கு எவ்வித இடையூறுமின்றி, இரத்தம் சிந்தாமல்

வெற்றிகரமாக கூடங்குளம் அணுமின் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு–கேரளா எல்லையோரங் களில் சட்டத்திற்குப் புறம்பான சில அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள் வெற்றிகரமாக ஒழித்துக்கட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, சென்னை, மதுரை, திருச்சி போன்ற மாநகரங்களில் நில அபகரிப்புக் கொள்ளையர்களால், நில அபகரிப்பு, சுரண்டல் போன்ற பொதுமக்களுக்கு அளித்து வந்த பரவலாகக் காணப்பட்ட தொல்லைகள் தற்போது பழங்கதை ஆகிவிட்டது. நாங்கள், பல்வேறு மாவட்டங்களிலிருந்து 34,703 நில அபகரிப்புப் புகார்கள் பெறப்பட்டு, இதுவரையில் ரூ.758.04 கோடி மதிப்புள்ள நிலங்களை மீட்டெடுத்துள்ளோம். நில அபகரிப்பு வழக்குகளுக்கென 25 சிறப்பு நீதி மன்றங்களுக்கும் நாங்கள் அனுமதியளித்துள்ளோம்.

கடந்த பதினோரு மாதங்களில், காவல் துறை இவ்வாறு நல்ல முறையில் செயல்பட்டு, அதன் விளைவாக பெறப்பட்ட பலன்கள் குறித்து அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. இன்று, தமிழ்நாடு அதன் மக்களுக்கு நிலைத் தன்மை, அமைதி, சட்டம்–ஒழுங்கிற்கான சூழலை உறுதி செய்வதுடன், தொலைதூர மக்களையும் வரவேற்கிறது.

ஒவ்வொரு முறையும் எனது தலைநகரப் பயணத்தின்போதும், தமிழ்நாட்டுக்குத் தேவையான நிதியுதவியைக் குறித்த மிகுந்த நம்பிக்கையுடனேயே நான் வருகிறேன். ஆனால், இதில் இதுநாள்வரை எங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இருப்பினும், இந்நிலையில் மாற்றம் ஏற்படும் என நம்புகிறேன். இம்மாநாடு அனைத்து விதத்திலும் வெற்றிகரமாக முடிவடையவும், இந்நாளில், சில பயனுள்ள முடிவுகள் எடுக்கவும் நான் வாழ்த்துகிறேன்.

நன்றி, வணக்கம் !

★ ★ ★

*மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஒரகடத்தில், நிறுவப்பட்டுள்ள டெய்ம்லர் இந்திய நிறுவனத்தின் வர்த்தக வாகனங்கள் உற்பத்தி தொழிற்சாலையினை தொடங்கிவைத்து ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம். (18.04.2012)*

அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குவதே எனது குறிக்கோள்

டெய்ம்லர் வர்த்தக வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடக்க விழாவில் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தனது தொழிற்சாலையை சென்னையில் தொடங்க முடிவெடுத்ததற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலையில் இதுவரை ரூ.2,500 கோடி முதலீடு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த முதலீட்டை மேலும் அதிகரிக்க ஏதுவாக எனது அரசு டெய்ம்லர் நிறுவனத்துக்குப் பல்வேறு சலுகைகளை அளித்துள்ளது.

டெய்ம்லர் நிறுவனம் இப்போது ரூ.4,000 கோடியை இந்த ஆலையில் முதலீடு செய்ய உறுதி அளித்துள்ளது.

ஏற்கெனவே 3,000 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக இருந்த திட்டத்தை ரூ.4,000 கோடி அளவுக்கு உயர்த்தி முதலீடு செய்வதாக உறுதி அளித்துள்ளது.

இந்தப் பாரத பென்ஸ் நிறுவனம் மிகப்பெரும் வெற்றி பெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மோட்டார் வாகனத்துறையில் புதிய கண்டுபிடிப்புகள் வந்துள்ளது போல உலகத்தின் வளர்ச்சிக்காகப் பல கண்டுபிடிப்புகள் வந்துள்ளன.

பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் ஒருமுறை, "உங்கள் தொழிலை நீங்கள் சரியாகச் செய்யுங்கள், இல்லையேல் அத்தொழிலே உங்களை நீக்கிவிடும்" என்று கூறினார். இது டெய்ம்லர் நிறுவனத்துக்கு வெகு சரியாகப் பொருந்துகிறது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக குதிரை வண்டியில் பயணம் செய்வது வழக்கமாக இருந்த நேரத்தில், காட்லிப் டெய்ம்லர் மற்றும் கால் பென்ஸ் நிறுவனம் புரட்சிகரமான திட்டங்களுடன் இந்தத் துறையில் இறங்கி எதிர்காலப் போக்குவரத்து வசதிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

19ஆம் நூற்றாண்டில் மோட்டார் வாகன உற்பத்தித் துறையில் இந்த நிறுவனம் முன்னோடியாகத் திகழ்ந்தது. அவர்கள் உலகத்தை மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கு அறிமுகம் செய்தார்கள் என அறிகிறேன்.

சிறிய வாய்ப்புகள்தான் பெரிய தொழில் முயற்சிகளுக்குத் தொடக்கமாக இருக்கும். தற்போது உலக அளவில் உள்ள 500 மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்களில் டெய்ம்லர் 24ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. டெய்ம்லர் நிறுவனமானது இந்தியாவின் டெட்ராய்ட்—ஆக சென்னை நகரை உருவாக்கிப் பெருமை சேர்க்கிறது.

சீனா, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக ஆறாவதாக இந்தியா உலக அளவில் மோட்டார் வாகன வர்த்தக வளர்ச்சியில் 2ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2011ஆம் ஆண்டில் சீனா உட்பட மற்ற நாடுகளை மோட்டார் வாகன விற்பனையில் இந்தியா மிஞ்சி விட்டது.

கனரக மற்றும் பேருந்து வாகனச் சந்தைத் துறையில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் உலகில் அதிகமாக வர்த்தகம் செய்யும் நாடாக இந்தியா வளர்ந்துள்ளது.

அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக மோட்டார் வாகன உற்பத்தித் துறையில் இந்தியா 3–ஆவது இடத்தைப் பிடிக்கும் என இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த உலக நிதி ஆலோசனை அமைப்பான ராக்சில்ட் ஆய்வு செய்து கூறியுள்ளது.

பெருகிவரும் இந்திய நடுத்தர வர்க்கத்து மக்களின் பொருளாதார நிலை, அதிகரித்து வரும் தொழில் உற்பத்தி ஆகியவற்றால் வருகிற 2020–இல் இந்தியா தலைசிறந்த ஐந்து மோட்டார் வாகனச் சந்தை கொண்ட நாடுகளில் ஒன்றாக வளரும்.

ஆசியாவின் தலைசிறந்த மோட்டார் வாகனத் தலைநகராக இந்தியாவுக்குள் சென்னை நகரம் உருவாகி வருகிறது.

பாரம்பரியமாகவே தமிழ்நாடு மோட்டார் வாகன உற்பத்தி மாநிலமாக அறியப்படுகிறது.

1840ஆம் ஆண்டிலேயே சிம்சன் நிறுவனமானது இந்தியாவில் மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னிலை பெற்றிருந்தது. இந்த நிறுவனமானது இரயில்பெட்டிகள், கார்கள், டீசல் இன்ஜின்கள், நீராவியால் இயங்கும் பயணிகள் பேருந்துகளைத் தயாரித்து வந்தது.

1948–இல் அசோக் லேலண்ட் நிறுவனம் ஆஸ்டின் கார்களைப் பொருத்தும் பணி செய்யத் தொடங்கப்பட்டது.

1955ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இணைப்புப் பெட்டித் தொழிற் சாலை தொடங்கப்பட்டது.

1960ஆம் ஆண்டு டிவிஎஸ் குழுமம் தொடங்கப்பட்டு பல்வேறு வாகன பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இவை தமிழ்நாட்டில் முதல் வாகனப் புரட்சியை ஏற்படுத்தியதன் அடையாளமாகும்.

1991ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொருளாதார தாராளமயத்துக்குப்பின் தமிழகம் தொழில் மயமாக்கப்பட்டது.

இந்தியாவில் மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரித்து ஏற்றுமதி செய்யும் மிகப்பெரும் மையமாக சென்னை உருவெடுத்து வருகிறது.

ஃபோர்ட், ஹூண்டாய், பி.எம்.டபிள்யு, ரினால்ட், நிஸான் மிட்சுபிஸ்சி, எச்.எம். என்கிற 6 கார் உற்பத்தித் தொழிற் சாலைகளுடன் உலகின் மிகப் பெரிய 10 மோட்டார் வாகன உற்பத்தி மையங்களில் சென்னையும் ஒன்றாகத் திகழ்கிறது.

ஆண்டுக்கு 1.3 மில்லியன் கார்கள் மற்றும் 3 இலட்சத்து 60 ஆயிரம் வர்த்தக வாகனங்கள் தயாரிக்கும் திறன் சென்னைக்கு உள்ளது. ஒரு நிமிடத்துக்கு 3 கார்களும், 75 வினாடிக்கு ஒரு வர்த்தக வாகனமும் தயாரிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மிகப்பெரிய வாகன உதிரி பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக் கொண்டது.

இந்தியாவில் உற்பத்தியாகும் மோட்டார் வாகன உதிரிபாகங்களில் 35 சதவீதத்தை உற்பத்தி செய்யும் திறன் பெற்று இருந்தது.

கடந்த 2011ஆம் ஆண்டு எனது அரசு பதவி ஏற்ற பின் தொழில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

எங்கள் அரசானது வெகுவிரைவில் வாகனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவிருக்கிறது.

மனித சக்தி, அருமையான துறைமுக வசதி, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், அத்தனைக்கும் மேலாகத் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை அரசின் உதவிகள் காரணமான தமிழ்நாடு வாகன உற்பத்தித்துறையின் தாயகமாக விளங்குகிறது.

வாகன உற்பத்தி மற்றும் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தியில் உலகத்திலேயே தமிழகத்தை முதலிடத்துக்குக் கொண்டு வருவது எனது இலட்சியமாகும்.

சமீபத்தில் எனது அரசு, 'தமிழ்நாடு 2023 தொலைநோக்குத் திட்டத்தை' அறிவித்தது. தமிழகத்தை விரைவான வளர்ச்சிப்

பாதையில் கொண்டு சென்று, மாநில மக்கள் அனைவருக்கும், விரைவான பொருளாதார வளர்ச்சியில் பலன்களைக் கிடைக்கச் செய்வதுதான் எனது இலட்சியமாகும்.

தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைய வைத்து, நாட்டின் முதன்மை மாநிலமாக மாற்றுவதை எனது குறிக்கோளாகக் கொண்டுள்ளேன்.

சில விமர்சகர்கள் இதைச் சாதிக்க முடியுமா? என எப்போதுமே சந்தேகம் எழுப்புகின்றனர். தலைவர்கள் சாதித்துக் காட்டுகின்றனர். மன உறுதிமிக்க தலைவர்கள், நினைத்ததை நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுகின்றனர். எனது கூற்றை சந்தேகிப்பவர்களை, எனது வெற்றியின் மூலம் என் மீது நம்பிக்கை கொள்ள வைக்கின்றேன். வெற்றிதான் தலைசிறந்த பதிலடி. எதிர்மறைக் கண்ணோட்டம் கொண்ட ஒருவர், ஒவ்வொரு வாய்ப்பிலும் தடையைக் காண்கிறார். நம்பிக்கை மனோபாவம் கொண்ட ஒருவர், ஒவ்வொரு தடையிலும் வாய்ப்பைக் காண்கிறார்.

பெரும்பாலானோர் தங்கள் இலக்குகளைத் தெளிவாக வரையறுத்துக் கொள்ளத் தவறியதால்தான், அவர்களால் அவற்றை எட்ட முடியவில்லை. அவை, எட்டக்கூடியதுதான் என்பதை அவர்கள் தீவிரமாகச் சிந்திப்பதும் இல்லை. வெற்றியாளர்களால், தாங்கள் எந்த இலக்கை நோக்கிப் பயணம் தொடர்கிறோம் என்பதை உங்களிடம் சொல்ல முடியும். தாங்கள், பயணத் திட்டத்தை எப்படி வகுத்துக் கொண்டுள்ளோம், தங்களின் சாகச அனுபவங்களை யாருடன் பகிர்ந்து கொள்ளப் போகிறோம் என்பதையெல்லாம் வெற்றியாளர்களால் சொல்ல முடியும். வெற்றியை சாதிப்போரால்தான் சரித்திரம் படைக்கப்படுகிறது. ஒரே நாளில் கிடைத்துவிடுவதில்லை வெற்றி. விடா முயற்சியிலும், கடும் உழைப்பிலும் கனிவதுதான் வெற்றி. வெற்றியை ஒருமுறை சுவைத்தவர்கள், மீண்டும் மீண்டும் அதனைச் சுவைக்க விரும்புவார்கள். சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் என அத்தனையும் ஒன்றிணைந்த ஒரு கலைதான் வெற்றி. அதிர்ஷ்டத்தால் வெற்றியடைந்துவிட முடியாது. கடும் உழைப்பு மட்டுமே வெற்றியைத் தரும். அரிஸ்டாட்டில் கூறியதுபோன்று, ‘தோல்வியடைய பல வழிகள் உள்ளன. ஆனால், வெற்றி பெற ஒரே ஒரு வழிதான் உள்ளது’.

‘எது சரியான செயலோ அதனை உரிய வழியில் சரியான நேரத்தில் செய்ய வேண்டும்’ என்று அர்னால்ட் கிளாஸ்கோ வெற்றிக்கு ஒரு எளிமையான வழியைச் சொல்கிறார்.

எனது இலக்கு நோக்கி, என்னை வழிநடத்திச் செல்லும் ரகசியம் குறித்து உங்களிடம் கூற விரும்புகிறேன். எனது மன உறுதியில்தான், எனது வலிமை குடிகொண்டுள்ளது. துணிவும், விடாமுயற்சியும் என்னகத்தே இரண்டறக் கலந்துள்ளன. என்னைக் காக்கும் இந்தக் கேடயங்கள், எனது இன்னல்களை அடியோடு அகற்றுகின்றன. தடைகளைத் தகர்க்கின்றன. இந்த ரகசியம், எனக்குப் பலன் தருகிறது என்பது உண்மை. சவால்கள் இல்லாத வெற்றியோ, தகர்க்கப்பட வேண்டிய தடைகளோ, எட்ட வேண்டிய இலக்குகளோ இல்லாத வாழ்க்கையில் மனநிறைவு அடைவதில்லை. மனிதகுலத்தின் வெற்றி தானாக நிகழ்ந்துவிடுவதும் அல்ல. தவிர்க்க முடியாததும் அல்ல. இலக்கை நோக்கிய பயணத்தின் ஒவ்வொரு அடியும், தியாகம், துயரம் மற்றும் போராட்டம் நிறைந்ததே. மனித குலத்தை உயர்த்தும் கண்ணியமான, முக்கியமான பணியை நிறைவேற்ற மிகக்கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது.

எனது தொலைநோக்கை நனவாக்க, எனது அரசு பல்வேறு புதுமைத்திட்டங்களைத்தொடங்கியுள்ளது.எனதுதொலைநோக்கை நிஜமாக்குவதற்கான, கொள்கைச் சீர்திருத்தங்களுக்கு எனது அரசு தற்போது இறுதி வடிவம் கொடுத்து வருகிறது. புதிய ‘தொழிற்கொள்கை–2012’ உற்பத்தித் துறை வளர்ச்சியை 14 சதவீதமாக உயர்த்தும். எனது அரசு, விரைவில், மோட்டார் வாகனம் மற்றும் உதிரிபாகங்கள் தொழில், உயிரித் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி மற்றும் சூரிய மின்சக்தி உற்பத்தி ஆகிய துறைகளுக்கென்ற பிரத்யேக கொள்கைகளை அறிவிக்க உள்ளது. நமது நாட்டில் தொழிற்துறை வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதில் எனது அரசு உறுதி கொண்டுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். உள்கட்டமைப்புப் பற்றாக்குறை போன்ற பல சவால்களை நமது தொழிற்துறை எதிர்கொண்டுள்ளது என்பதை எனது அரசு அறிந்துள்ளது. இந்த உள்கட்டமைப்பு சவால்களை சமாளிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதுதான்

‘தொலைநோக்கு 2023’ திட்டத்தின் தலையாய குறிக்கோள். 2023ஆம் ஆண்டுக்குள் 2 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவுக்கு 6 மற்றும் 8 வழி விரைவுச் சாலைகளையும், 5 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைநோக்கு 4 வழி நெடுஞ்சாலைகளையும் அமைக்க எனது அரசு திட்டமிட்டுள்ளது. நீண்டகால அடிப்படையில் தமிழகத்தில் மின்சக்தித் தேவையை உறுதிப்படுத்த அடுத்த 10 ஆண்டுகளில் 20 ஆயிரம் மெகாவாட் கூடுதல் மின்உற்பத்தி செய்யவும் இலட்சியத் திட்டம் வகுத்துள்ளேன்.

கார்ல்மார்க்ஸ் கூறியுள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன். ‘சிந்தனைகள், மனித மனங்களை நிரப்பும்போது அவை சமூகத்தின் ஆக்கச் சக்தியாக மாறுகின்றன’.

தமிழகத்தை உலகளவில் உற்பத்தி மையமாக மாற்றும் தொலைநோக்குடன் நான் செயல்பட்டு வருகிறேன். இந்த இலட்சியத்தை நிறைவேற்றும் முனைப்பில், எனது அரசு ஏற்கெனவே ஈடுபட்டுள்ளது. சிறந்த ஆட்சி நிருவாகம் மூலம் இந்தத் தொலைநோக்கு நிறைவேறும் என்பதில் எனது அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இந்திய மாநிலங்களில் ஒரு புதிய வளர்ச்சியின் முன்மாதிரியான தமிழகத்தை மாற்றுவதில் எனது அரசு உறுதிபூண்டுள்ளது. தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைய வைத்து, இந்திய மாநிலங்களிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் எனது தொலைநோக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இணைந்து செயல்பட உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 19.04.2012 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

11 இடங்களில் புதிதாக இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகம் வீறு பெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும். ஒரு நாடு உயர் நிலையடைய, உயர் கல்வி, தொழிற் கல்வி இரண்டும் இன்றியமையாதவை.

மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி அடைந்தால் மட்டுமே, புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை வளர்ச்சி பெறும். உயர்நிலைக் கல்வியால்தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர்கல்வியே. இத்தகைய உயர்கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற்கல்வியின் வளர்ச்சிக்கும் எனது அரசு பல முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

பள்ளி படிப்பிற்குப் பிறகு, குறிப்பாக, கிராமப்புற மாணவ, மாணவியர்கள், தங்கள் கல்வியினை நிறுத்திவிடாமல் தொடர்ந்து உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், எனது அரசு பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கான கல்லூரிகளைத் தமிழகத்தின் பல மாவட்டங்களில் துவக்கி வருகிறது. அந்த வகையில், 2011–2012ஆம் ஆண்டில், 11 பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, இந்த ஆண்டிலும் தமிழகத்தில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றைத் துவக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், செங்கிப்பட்டியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி; மற்றும் தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டம், செட்டிக்கரை ஊராட்சியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி என இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம்; புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை; விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம்; ஈரோடு மாவட்டம் பெருந்துறை; அரியலூர் மாவட்டம் அரியலூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஆகிய 7 இடங்களில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அதாவது Polytechnic Colleges துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சேலம் மாவட்டம் எடப்பாடி; கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி; திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்; ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி; மதுரை மாவட்டம் திருமங்கலம்; திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர்; ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி; திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர்; விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை; நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணம் ஆகிய 11 இடங்களில் புதிதாகப் பல்கலைக்கழக உறுப்பு, இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய நகரங்களில், அரசு கல்லூரிகள் துவக்கப்படுவதால் மாவட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ மாணவியரின் உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி கனவுகள் நிச்சயமாக நிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல், இதன் மூலம் கிடைக்கும் உயர் வேலை வாய்ப்புகளினால் அவர்களது வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
19.04.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
சித்திரை முதல் நாளை
தமிழ்ப் புத்தாண்டு என்பது குறித்து அளித்த விளக்கவுரை.

சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாக மக்கள் கொண்டாடி வருகின்றனர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

13.04.2012 அன்று நடைபெற்ற சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விழாவில் கலந்து கொண்டு, சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்பதற்கான காரணங்கள் எவை என நான் எடுத்துக் கூறியது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதைக் கண்டு, பொறுத்துக் கொள்ள முடியாத திரு. கருணாநிதி, வீண் விதண்டா வாதங்களை தனது கட்டுரையில் எடுத்து வைத்துள்ளார்.

சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுக்கு உரிய பொருத்தமான நாள் ஆகும் என மதுரை ஆதீனம் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நான் சுட்டிக் காட்டியதற்கு, “இது என்ன ஆதாரமா ?” என்று வினவியிருக்கிறார் திரு. கருணாநிதி. நான் மதுரை ஆதினம் என்பவரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னது ஆதாரம் இல்லையென்றால், பெயர் குறிப்பிடப்படாமல், “ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும், ஒப்புக்கொண்டுள்ள உண்மை” என்று கூறி, ஒரு சட்டத்தை திரு. கருணாநிதி இயற்றியது ஆதாரத்தின் அடிப்படையிலா ?

தி.மு.க. ஆட்சியில் சென்னையிலும், கோவையிலும் நடந்த உலகத் தமிழ் மாநாடு, தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அல்லவா ? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் திரு. கருணாநிதி. 1968ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இது தமிழ்மொழியைப் பரப்புவதற்கு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், 2010ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மாநாடு உலகத் தமிழ் மாநாடுகளின் வரிசையில் இடம்பெறாத, கருணாநிதியின் சுய விளம்பரத்திற்காக நடத்தப்பட்ட, தன்னல, தம்பட்ட மாநாடு. திரு. கருணாநிதி குடும்பத்தினர் மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த “தலைசிறந்த” தமிழ் அறிஞர்கள் முன்வரிசையில் அமர்ந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தனர். உண்மையான தமிழ் அறிஞர்கள் பின் வரிசைக்குத் தள்ளப்பட்டனர்.

திரு. கருணாநிதி தன்னுடைய கட்டுரையிலே, சித்திரையில் தொடங்கி, பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அம்மாதத்தின் பௌர்ணமியன்று வரும், நட்சத்திரத்தின் பெயரே அம்மாதத்தின் பெயராகும் என்று நான் கூறியதைச் சுட்டிக்காட்டி, சித்திரை, கார்த்திகை தவிர மற்ற பெயர்களில் மாதப் பெயர்கள் இல்லையே என்று கேட்டிருக்கிறார்.

சித்திரை மாதம் பௌர்ணமியன்று சித்திரை நட்சத்திரம் வருகிறது என்றும்; கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று கார்த்திகை நட்சத்திரம் வருகிறது என்பதை திரு. கருணாநிதியே ஒப்புக் கொண்டுவிட்டதால், பிற மாதங்களை இங்கே விளக்கிக் கூற விரும்புகிறேன். வைகாசி மாதம் பௌர்ணமியன்று விசாகம்

நட்சத்திரம் வருகிறது. அதாவது, வைசாகம் நட்சத்திரம் திரிந்து, விசாகம் என்று அழைக்கப்படுகிறது. ஆனி மாதம் பௌர்ணமியன்று, அனுஷம் நட்சத்திரம் வருகிறது. அதாவது, அனுஷம் நட்சத்திரம் மருவி, ஆனி என்றழைக்கப்படுகிறது. ஆடி மாதம் பௌர்ணமியன்று பூராடம் நட்சத்திரம் வருகிறது. பூராடம்—பூராடி என திரிந்து, ஆடி மாதம் என்றழைக்கப்படுகிறது. ஆவணி மாதம் பௌர்ணமியன்று திருவோணம் நட்சத்திரம் வருகிறது. அதாவது திருவோணம் அல்லது சிரவணம் நட்சத்திரம், சிராவணியாக திரிந்து, ஆவணி மாதம் என அழைக்கப்படுகிறது. புரட்டாசி மாதம் பௌர்ணமி தினத்தன்று பூரட்டாதி நட்சத்திரம் வருகிறது. பூரட்டாதி நட்சத்திரம் திரிந்து, புரட்டாசி என்றழைக்கப்படுகிறது. ஐப்பசி மாதம், அஸ்வினி நட்சத்திரம் வருகிறது. அஸ்வினி நட்சத்திரம், ஆஸ்விஜம் என்றழைக்கப்படுகிறது. அது திரிந்து ஐப்பசி என்றழைக்கப்படுகிறது. மார்கழி மாதத்தில், மிருகசீர்ஷம் நட்சத்திரம் வருகிறது. மிருகசீர்ஷம் நட்சத்திரம், மார்கசீர்ஷம் என்றும் அழைக்கப்படுகிறது. இது திரிந்து மார்கழி என்றழைக்கப்படுகிறது. தை மாதம் பௌர்ணமி அன்று, பூசம் நட்சத்திரம் வருகிறது. இதற்கு தைஷ்யம் என்று மற்றொரு பெயரும் உண்டு. இதுவே தை ஆனது. மாசி மாதம் பௌர்ணமியன்று மகம் நட்சத்திரம் வருகிறது. மகம் நட்சத்திரத்தை மாக, அதாவது மாசி, என்றும் அழைப்பார்கள். இதுவே மாசி என்றழைக்கப்படுகிறது. பங்குனி மாதம் பௌர்ணமியன்று உத்திரம் நட்சத்திரம் வருகிறது. இதை உத்திரப் பல்குனி என்றும் அழைப்பார்கள். இதுவே பங்குனி மாதம் என்று அழைக்கப்படுகிறது. எப்படி சென்னப்பட்டினம் என்பது காலப்போக்கில் சென்னை என்று மருவியதோ, சைலம் என்பது சேலம் என்று எவ்வாறு மருவியதோ; அதுபோல்தான் இவையும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

தை முதல்நாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்க வேண்டும் என்று மறைமலை அடிகள் கூறவில்லை என்பதை எடுத்துக்காட்ட திரு. கருணாநிதியின் கருத்தை ஒட்டிய, சிறுவை நச்சினார்க்கினியன் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்ட மலரில், “திருவள்ளுவனார் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்துப் பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்” என்று 1935ஆம் ஆண்டு, சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர்

தினத்தில் மறைமலையடிகளார் பேசியதாகக் கூறியிருப்பதை மேற்கோள் காட்டினேனே தவிர, அந்தப் பக்கத்திற்கு முன் பக்கத்தில் சிறுவை நச்சினார்க்கினியன் தெரிவித்துள்ள கருத்தைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. தை முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று மறைமலை அடிகளார் சொல்லவில்லை என்பதற்காகத்தான் மேற்படி கட்டுரையை நான் மேற்கோள் காட்டினேன்.

"வாழ்வியற் களஞ்சியம்", என்ற நூலைக் குறிப்பிட்டு, ஆகம விதியின்படி தை முதல்நாள்தான் புத்தாண்டு என்று கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. "தை பிறந்தால் வழி பிறக்கும்", என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறதே தவிர, "தை பிறந்தால் புத்தாண்டு பிறக்கும்" என்று குறிப்பிடப்படவில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி என்ற நூலினை மேற்கோள் காட்டி, அந்த நூலில் தமிழாண்டின் தொடக்க மாதம் தை என்று குறிப்பிட்டிருப்பதாக கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. அந்த நூலில் **113**–வது பக்கத்தில் "இச்செய்தி, தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது" என்று இருப்பதை தனக்கு வசதியாகத் திரு.கருணாநிதி மறைத்துவிட்டார். அந்தச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியில் தைமாதம்தான் தமிழ் ஆண்டின் தொடக்க மாதம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் இதனை அடுத்து, தை–ஒரு திங்கள்; The tamil month, January – February என்று ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது ?

தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்று அறிவித்து, நடைமுறைப்படுத்திடக் கழக அரசு முடிவு செய்துள்ளது என்று **23.1.2008** அன்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டதாகத் திரு. கருணாநிதி கூறியிருக்கிறார். ஆளுநர் உரையில் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே, திரு. கருணாநிதியின் மகள் கனிமொழியால் நடத்தப்பட்ட சென்னை சங்கமம் விழாவில் திரு. கருணாநிதி, "சங்கமம் போற்றுதும் என்று போற்றிப் பாடி, இது ஆண்டுதோறும் நடக்க வேண்டும்; பொங்கல் திருநாளை நினைவூட்டும் வகையில் தொடர்ந்து நடக்க வேண்டும். தமிழரின் புத்தாண்டு தை முதல்நாள் என்று **500** புலவர்கள் கூடிக் கண்டுபிடித்து அறிவித்து இருக்கிறார்கள். அதை அதிகாரப் பூர்வமாக அறிவிக்கும் நாள் விரைவில் வரும்" என்று கூறியுள்ளார். எனவே, சென்னை சங்கமம் விழாவில் தான், இது முதன் முதலாக

அறிவிக்கப்பட்டது. ஒரு வேளை, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டால்தான் ஆண்டுதோறும் சென்னை சங்கமம் விழா நடத்தப்பட்டு, அதற்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும் என்று திரு. கருணாநிதி எண்ணினார் போலும்!

“தமிழர் திருநாள்” என்னும் தலைப்பில் திரு. மு.வ. அவர்களால் 1960ஆம் ஆண்டு கலைமகள் பொங்கல் மலரில் எழுதப்பட்ட கட்டுரையில், தைத் திருநாளை இயற்கைக்கு நன்றி செலுத்தும் திருவிழா என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறாரே தவிர, அதைத் தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடவில்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2008ஆம் ஆண்டு, ஆளுநர் உரையில், “திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால் தைத் திங்கள் முதல் நாளையே, தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என அறிவித்து, நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே திரு. கருணாநிதி, திருவள்ளுவர் நாளை பொது விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்று 1963ஆம் ஆண்டு தி.மு.க. சார்பில் கொண்டு வரப்பட்ட தனி நபர் தீர்மானத்தின் மீது இந்தச் சட்டப் பேரவையில் உரையாற்றிய போது, “... மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை தினமாக விட்டு வருகிறோம். ஒரு திங்களில் ஒரு இரண்டாம் சனிக்கிழமையைக் கூட, திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் கொண்டாட, விடுமுறை தினம் என்று அறிவிக்கலாம். இரண்டாம் சனிக்கிழமையன்று என அமையாது திங்கள் கிழமை அல்லது செவ்வாய்கிழமை என்று வருமானால், அந்தத் திங்களில் இரண்டாம் சனிக்கிழமையை வேலை நாளாகக் கொண்டுவிட்டு, திருவள்ளுவருடைய நினைவு நாள் என்று குறிக்கப்பட்ட தினம் என்று வருகிறதோ அன்றைக்கு விடுமுறை அளிக்க அரசாங்கம் முன் வரலாம். திருவள்ளுவருடைய தினத்தை நவம்பர் மாதம் கொண்டாடுவது என்றால் நவம்பர் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை விடுவதற்குப் பதிலாக, அந்தத் திங்களில் திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் குறித்த தினத்திற்கு விடுமுறை அளிக்கும்படியாக

இந்தத் தீர்மானத்தின் மூலம் அமைத்துக் கொள்ளலாம்” என்று பேசியிருக்கிறார். ஏன் அப்போது இப்படிப் பேசினார் திரு. கருணாநிதி? அப்பொழுதே திருவள்ளுவர் தை மாதத்தில் தான் பிறந்தார் என்று கூறி, அந்த நாளை விடுமுறை நாளாக அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கலாமே!

2008ஆம் ஆண்டு, சென்னை சங்கமம் விழாவில் உரையாற்றும் போது, தைத்திங்கள் முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டு என விரைவில் அறிவிக்கப்படும் என

திரு. கருணாநிதி அறிவித்ததைத் தொடர்ந்து, 17.1.2008 அன்று, அன்றைய தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவ்வாறு அறிவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள கருத்துருவில், 2004ஆம் ஆண்டு அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில், சித்திரை முதல் நாளுக்குப் பதிலாக, தைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவிக்கக் கருதினால், இப்பொருண்மையைத் தமிழ் வளர்ச்சி மன்றத்தில் வைத்து, ஆய்வு செய்து முடிவு செய்வது ஏற்புடையதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியிருந்தார். இவ்வாறான கடிதம், இது ஆய்வு செய்து முடிவு செய்யப்பட வேண்டிய பொருள் என்று அமைந்துவிடும் என்பதால், அரசின் அறிவுரை காரணமாகவோ என்னவோ இந்த வாசகங்கள் அடிக்கப்பட்டு, திருத்திய கடிதம்தான் அரசுக்கு அனுப்பப்பட்டது. முறையாக ஆய்வு எதையும் செய்யாமல் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக, அந்தச் சட்டத்தை இயற்றினார் திரு. கருணாநிதி. ஆனால், அந்தச் சட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்கள் தொடர்ந்து சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றனர் என்பது தான் உண்மை.

தை முதல்நாளை, தமிழ்ப் புத்தாண்டு என திரு. கருணாநிதி அறிவித்து சட்டம் இயற்றியது முறையற்ற, மரபு மீறிய, மக்கள் மனதைப் புண்படுத்துகின்ற செயல் என்பதையும் திரு. கருணாநிதியால் மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்தச் சட்டத்தை நான் ரத்து செய்தேனே தவிர எதையும் மக்கள் மீது திணிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 20.04.2012 அன்று
விதி 110–ன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை.*

தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை பெற்றால் தான் எச்செல்வத்தையும் பெற முடியும்” என்பதன் அடிப்படையில், மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நகர்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, அவசர மகப்பேறு, அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல், புதிய மருத்துவ நிலையங்களை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுதவிர, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகள், 150 வட்ட மருத்துவமனைகள் மற்றும் 15 வட்டம் சாரா மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு நிறுவப்பட்டு பல் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பல் பராமரிப்பின் அவசியத்தை கிராம மக்களுக்கு

உணர்த்தும் வகையில், 22 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 208 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், 2,000–க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனையான சென்னையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பில் பல் மருத்துவக் கல்லூரிக்கான ஒரு புதிய அடுக்குமாடி கட்டடம் என்னால் கடந்த மாதம் 3ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநில மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டும், பல் மருத்துவக் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும், தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், இதனை ஒப்புயர்வு மையமாக, அதாவது Centre of Excellence in Dentistry ஆக தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி ***ஜெ ஜெயலலிதா*** *அவர்கள்*
24.04.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஆற்றிய பதிலுரை.

புதிய எழுச்சியுடன் தமிழகக் காவல்துறை செயல்படுகிறது!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

“மண்ணுக்கு மரம் காவல்”, “மரத்துக்கு இலை காவல்”, “பயிருக்கு வேலி காவல்”, “உடலுக்கு உயிர் காவல்”, “கண்ணுக்கு இமை காவல்”, “கடலுக்கு கரை காவல்” என்பதைப் போல் மக்களுக்கு காவலாக விளங்கும் காவல் துறை மற்றும் “காப்பதே எமது கடமை” என்ற உணர்வுடன் செயல்படும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய இரு பெரும் மானியக்

கோரிக்கைகளின் மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை இங்கே எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

இந்த மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் அவரவர் சார்ந்துள்ள கட்சிகளின் நிலைப்பாட்டை ஒட்டியே தங்களது கருத்துகளை அமைத்துக் கொண்டுள்ளளர்கள். சில உறுப்பினர்கள் காவல் துறை சமூகத்திற்கு பயனளிக்கும் வகையில் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் என்ற வகையிலே பேசினார்கள்.

சில உறுப்பினர்களின் பேச்சுகளுக்கிடையே கட்சிக் கண்ணோட்டங்கள் குறுக்கிட்டன. சில உறுப்பினர்கள் அரசின் செயல்பாடுகளை பாராட்டிப் பேசினார்கள். சில உறுப்பினர்கள் குறை சொல்வது தான் எங்கள் பணி என்ற அடிப்படையில், இந்த அரசின் மீது பல குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! உடலில் எத்தனையோ உறுப்புகள் இருக்கின்றன. ஆனால் இந்த உறுப்புகளிலேயே மிகவும் தலைசிறந்தது நாக்கு. அதாவது சாமர்த்தியமாக, சாதுரியமாக, திறமையாகச் செயல்படுவதில் நாக்குக்கு இணை வேறு எதுவுமே இல்லை என்று என்னால் சொல்ல முடியும். நாக்கின் நிலைமையை நீங்கள் எண்ணிப் பாருங்கள். வாயின் நடுவிலே உள்ள நாக்கைச் சுற்றி 32 பற்கள் உள்ளன. எந்த மனிதப் பிறவியாக இருந்தாலும் 32 பற்கள் இருக்கும்.

இந்த 32 பற்களும் அந்த நாக்கை கடித்து, குதறி, கிழித்துத் தள்ளக்கூடிய கூர்மை வாய்ந்தவை. ஆனால் இந்த சாதுரியமான, சாமர்த்தியமான நாக்கு, ஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயே இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) திறமையாகச் செயல்பட்டு வெற்றிகரமாகக் காலத்தை ஓட்டுகிறது. நீங்கள் போர் வீரர்களை எடுத்துக்கொண்டாலும்கூட, போர் காலங்களில்தான் அவர்கள் சண்டை போடுவார்கள், போரிடுவார்கள். மற்ற நேரங்களில் அவர்கள் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள முடியும். போர் இல்லாத நேரங்களில், ஒரு நாட்டில் அமைதி நிலவும் நேரங்களில் அந்தப் போர் வீரர்களுக்கு ஓய்வும் கிடைக்கும். ஆனால் இந்த மனித நாக்கிற்கு மட்டும் அப்படிப்பட்ட ஒரு ஓய்வே கிடையாது, ஒரு சநடநைக என்பதே கிடையாது. அது பிறந்தது முதல் இறக்கும்வரை ஆயுட்காலம் முழுவதும் அந்த 32

பற்களுக்கு இடையிலேயேயிருந்து செயல்பட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தினம் தினம் தப்பித்தோம், பிழைத்தோம் என்ற நிலையில் வாழ்கின்ற நாக்கு எத்தனை எத்தனை பணிகளைச் செய்கிறது ? கண்டிப்பாகப் பேச வேண்டிய நேரங்களில் கண்டிப்புடன் பேசுகிறது, கட்டளை இட வேண்டிய நேரங்களில் கட்டளையிடுகிறது, கனிவாகப் பேசவேண்டிய நேரத்தில் தேன்மழை போன்ற சொற்களைப் பொழிகிறது, சிலரை மிரட்ட வேண்டிய நேரத்தில் அதையும் செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சுவையான, சத்தான உணவை இந்த உடலுக்கு வழங்குகிறது. பலவிதமான கடமைகளை, காரியங்களை இந்த நாக்கு திறமையாக செயலாற்றுகிறது. இவ்வளவையும் இந்த எதிரிகளுக்கு நடுவிலேயே அது செய்கின்றது. ஆனால் அது அப்படியே தப்பித்து, தப்பித்து, தப்பித்து வெற்றிகரமாக தனது பணியை முடிக்கிறது. அதைப்போலதான் என் நிலைமையும். (மேசையைத் தட்டும் ஒலி) என் நிலைமையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். தமிழ்நாட்டிலுள்ள பிற எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் அந்த எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும், ஜெயலலிதா எப்போது தவறு செய்வார், எப்போது ஒரு பிழை செய்வார், எப்போது ஒரு தவறான செயலைச் செய்வார் என்று பூதக் கண்ணாடி வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பத்திரிகையாளர்களும், பத்திரிகைகளும், தொலைக் காட்சிகளும் ஜெயலலிதா ஏதாவது தவறு செய்ய மாட்டாரா, இதை மிகைப்படுத்தி இதை வைத்தே பத்திரிகைகளை விற்றுவிடலாம், தொலைக்காட்சி டி.ஆர்.பி. ரேட்டிங்ஸை உயர்த்திக்கொள்ளலாம் என்று அவர்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டெல்லியிலோ மத்திய அரசு, ஓஹோ! ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிட்டாரா ? இனி தமிழ்நாட்டை வாழ விடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜெயலலிதா விடுக்கும் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாட்டிற்கு தேவையான உதவிகளைச் செய்துவிட்டால், இனி ஜெயலலிதா அசைக்க முடியாத சக்தியாக உயர்ந்துவிடுவார், வளர்ந்துவிடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மத்திய அரசிலிருந்து என்னென்ன உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன ? ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிட்டாரா ? உடனே மண்ணெண்ணெய் allocation–ஐ cut செய், இருக்கின்றதை 50 சதவிகிதமாகக் குறைத்துவிடு என்றவொரு உத்தரவு போகிறது. தமிழ்நாடு எத்தனை முறை கேட்டாலும், தமிழ்நாடு முதலமைச்சர்

எத்தனை முறை கேட்டாலும், நிதி உதவி வழங்காதே என்று நிதி அமைச்சருக்கு கட்டளை போகிறது. தமிழ்நாட்டு மக்கள் இருளில் தவித்தாலும், என்ன கஷ்டம் வந்தாலும் தமிழக முதலமைச்சர் கேட்டுக்கொண்டால், தமிழகத்திற்கு கூடுதல் மின்சாரத்தை வழங்காதே என இப்படிப் பல உத்தரவுகள். ஆக, தமிழ்நாட்டை வாழ விடக்கூடாது, தமிழகம் தலைநிமிர்ந்து விடக்கூடாது, எழுந்துவிடக்கூடாது என்பதற்காகவே மத்திய அரசு பல அடக்குமுறைகளை ஏவுகிறது. இத்தனைக்கும் மத்தியில், வெற்றிகரமாக ஆட்சியை நடத்திக்கொண்டு மண்ணெண்ணெய் போதுமான அளவில் இல்லாவிட்டாலும், மின்சாரம் போதுமான அளவு இல்லாவிட்டாலும், போதுமான நிதி உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்காவிட்டாலும், நம்மால் இயன்ற ஆதாரங்களை திரட்டிக்கொண்டு, வெற்றிகரமாக ஆட்சியை நடத்திவருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, சுற்றி எதிரிகள். இங்கே மாநிலத்திலும் எதிரிகள்; ஊடகங்களிலேயும் எதிரிகள்; மத்திய நடுவண் அரசிலும் எதிரிகள்; இத்தனையும் மீறி வெற்றிகரமாக இந்த ஆட்சியை நடத்திக்கொண்டு பல சாதனைகளை சாதித்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சில சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றத்திற்கு வரும்போதே நிறைய பழைய காகிதங்களை, ஆவணங்களை எடுத்துக்கொண்டு வருவார்கள். அவர்கள் எங்களை மடக்குகிறார்களாம். (சிரிப்பு) அதனால், அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலமைச்சரானாலும் சரி, மாண்புமிகு அமைச்சர்களானாலும் சரி, இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைதான் எங்கள் கையில் இருக்கும். தற்பொழுது இங்கே அவையில் வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள்தான் எங்கள் கையில் இருக்கும். ஆனால், சிலர் வருகின்றபோதே அதற்கு முன்னர் இங்கே அறிவிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பைக் கையில் எடுத்துக்கொண்டு, அன்றைக்கு அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இப்படி சொல்லப்பட்டிருக்கிறதே, இன்றைக்கு இப்படி சொல்லியிருக்கிறீர்களே, கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இப்படி சொன்னார்களே, இப்போது இப்படி சொல்லியிருக்கிறீர்களே என்று கேட்டால், எங்களிடம் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைதான் கையில் இருக்கும். ஆகவே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, அதற்கு முந்தைய

ஆண்டு நிதிநிலை அறிக்கை, அதற்கு முன்பு வெளியிடப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள், இப்படி எல்லாவற்றையும் எடுத்தக்கொண்டு வரவேண்டுமென்றால் ஒரு வண்டி நிறைய கொள்கை விளக்கக் குறிப்புகள்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எந்த அரசும் செயல்பட முடியாது. ஆகவே, இத்தனை எதிர்ப்புகளையும் மிறி, தடைக் கற்களை படிக்கற்களாக்கி, சோதனைகளை சாதனைகளாக்கி நாங்கள் வெற்றிமீது வெற்றி சாதித்துக்கொண்டே வருகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் என்னுடைய நிலைமையை மனித நாக்குடன் நான் ஒப்பிட்டுப் பேசினேன்.

"வாழ்க வசவாளர்" என்ற பேரறிஞர் அண்ணாவின் வாய்மொழிக்கு இணங்க, வசை பாடியவர்களுக்கும்; நல்ல ஆலோசனைகளை எடுத்துக் கூறியவர்களுக்கும்; ஆக்கப்பூர்வமான கருத்துகளை பறைசாற்றியவர்களுக்கும்; எங்கள் அரசின் செயல்பாடுகளை பாராட்டியவர்களுக்கும்; கட்சிப் பாகுபாடின்றி எனது மனமார்ந்த நன்றியினை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை மானியத்தின் மீது 71 வெட்டுத் தீர்மானங்களும்; தீயணைப்புத் துறை மானியத்தின் மீது 43 வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல் நடுவுநிலைமையுடன் செயல்படக் கூடிய நல்லாட்சி தமிழ்நாட்டிலே நடைபெற்று வருகிறது. எங்களது அரசைப் பொறுத்தவரையில், குறைகள் குறைக்கப்பட வேண்டும்; நிறைகள் நீட்டிக்கப்பட வேண்டும் என்பது தான் எங்களது குறிக்கோள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல குறைகளை சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். குறைகளே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அந்தக் குறைகள் மிகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, பார்த்திபனூர் பாலமுருகன் தற்கொலை பற்றியும், 1987–ல் நியமனம் செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்கள் பதவி உயர்வு பற்றியும் குறிப்பிட்டார். அவைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1987–ல் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்கள் 938 பேர். இவர்களில் 312 பேர் துணை காவல் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு பெற்றுவிட்டனர். 1987–ல் நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களில் பதவி உயர்வு பெறாமல் இருப்பவர்கள், அவர்களுடைய முதுநிலைக்கு ஏற்ப, காலியிடங்கள் ஏற்படும்போது பதவி உயர்வு பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூரைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது மகள் காஞ்சனாதேவியை, அதே ஊரைச் சேர்ந்த சேது என்பவரின் மகன் பாலமுருகன் கேலி செய்ததாக, 10.04.2012 அன்று பார்த்திபனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததையடுத்து, மனு ரசீது எண். 65/12 வழங்கப்பட்டது.

மேற்படி மனு தொடர்பாக பாலமுருகன் மற்றும் தந்தை சேது ஆகியோரை காவல் துறையினர் விசாரித்தனர். பிறகு, இருதரப்பினரும் சமாதானமாக எழுதி கொடுத்ததையடுத்து, காவல் துறையினர் பாலமுருகனை எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

பின்னர், வீட்டிற்கு சென்ற பின் இச்சம்பவம் குறித்து சேது தனது மகன் பாலமுருகனை கண்டித்துள்ளார். இதனையடுத்து, 11.04.2012 அன்று இரவு பாலமுருகன் மதுவில் விஷம் கலந்து குடித்துள்ளார். இதனையடுத்து, பாலமுருகனுக்கு பரமக்குடியில் உள்ள அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் பார்த்திபனூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்ட பாலமுருகன், சிகிச்சை பலனின்றி 12.04.2012 இரவு மரணமடைந்துள்ளார். இது தொடர்பாக, பாலமுருகனின் சகோதரர் ரமேஷ்குமார் அளித்த புகாரின் அடிப்படையில், காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 174–ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பாலமுருகன் அவரது தந்தை சேது கண்டித்ததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டுள்ளாரே தவிர, காவல் துறையினர்

விசாரித்ததற்கும், பாலமுருகனின் தற்கொலைக்கும் தொடர்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசும்போது, சிறப்பு உதவி ஆய்வாளருக்கும், உதவி ஆய்வாளருக்குரிய சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

உதவி ஆய்வாளர் என்ற பதவிக்கு காலிப் பணியிடங்கள் இருந்தால்தான், தலைமைக் காவலர்கள் பதவி உயர்வு செய்யப்படுகிறார்கள். அவ்வாறு, காலிப் பணியிடங்கள் இல்லாமல், குறிப்பிட்ட ஆண்டு பணிக் காலம் முடிந்ததும், தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களும், உதவி ஆய்வாளர்கள் அணியும் அதே சீருடையைத் தான் அணிகிறார்கள்.

அதே போன்று, அமைச்சுப் பணியாளர் காலி இடங்கள் நிரப்பிட வேண்டும் என்றும், காவல் துணை கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அமைச்சுப் பணியாளர் காலி பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் மூலம் விரைவில் நிரப்பப்படும். மேலும், காவல் துணை கண்காணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவியில் 8 பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் விரைவில் நிரப்பப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள், சிவகங்கை மாவட்டத்தில் நில அபகரிப்பு சிறப்புப் பிரிவு இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார். சிவகங்கை மாவட்டத்தில், நில அபகரிப்பு தடுப்புப் பிரிவில் இதுவரை 392 புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் 333 புகார்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 11 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 6 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். காவல் துறை கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் இவ்வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், பல்வேறு அதிகார மையங்கள் செயல்பட்டு ஒன்றுக்கொன்று முரணான உத்தரவுகளை பிறப்பித்து வந்ததால், யாருடைய உத்தரவை செயல்படுத்துவது என்று தெரியாமல் பெருத்த பாதிப்புக்கு காவல் துறையினர் ஆளாயினர்.

இதன் காரணமாக சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதற்கு பதிலாக சட்ட விரோதிகளின் ஆட்சி தான் நடைபெற்றது. ரவுடிகளின் ஆதிக்கம் கொடிகட்டி பறந்தது. உள்ளாட்சி தேர்தல் நடைபெற்ற விதம்; சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கு இடையே மோதல் நடைபெற்ற போது காவல் துறையினர் வேடிக்கை பார்த்தது; சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் புகுந்து அங்குள்ள வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும், பொதுமக்களையும் காவல் துறையினர் தாக்கியது; சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது, முதலமைச்சர், மத்திய–மாநில அமைச்சர்கள், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள், காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு முன்பே ரவுடிகள் வன்முறை வெறியாட்டம் நடத்தியது என பல்வேறு சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ரவுடிகளின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டு இருந்தன.

இப்படி இருந்த காவல் துறையை, மக்களின் நண்பனாகவும், வன்முறையாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் விளங்கும் வகையில் நான் மாற்றி அமைத்துள்ளேன். இதன் காரணமாக, அமளிக் காடாக விளங்கிய தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறி வருகிறது. குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து, குற்றங்களை கண்டுபிடித்தலின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பிற மாநில காவல் துறையினரை ஒப்பிடுகையில், நமது மாநில காவல் துறையினர் திறம்பட பணிபுரிந்து வருகின்றனர்.

தி.மு.க.–வினர் தங்கள் கட்சியினர் மீதும், முன்னாள் தி.மு.க அமைச்சர்கள் மீதும் உண்மைக்கு மாறாக நில அபகரிப்பு வழக்குகள் போடப்படுகின்றன என்ற தவறான குற்றச்சாட்டுக்களை இந்த சட்டப் பேரவையிலும், அவைக்கு வெளியிலேயும் தெரிவித்து வருகின்றனர். இதில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் போது, சட்ட விரோத கும்பல்கள் நிலம் மற்றும் சொத்துக்களின் உரிமையாளர்களை மிரட்டியும்; அவர்களைக் கடத்திச் சென்றும்; அவர்களது சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு பதிவு செய்வதையும்;

போலியான ஆவணங்களை தயார் செய்து பொதுமக்களின் சொத்துக்களை தங்கள் பெயரில் பதிவு செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தன. இதனால் பாதிக்கப்பட்டோர் புகார் அளிப்பதற்கு கூட அஞ்சினர். அதையும் மீறி அளிக்கப்பட்ட புகார்களில் பெரும்பான்மையானவை உதாசீனப்படுத்தப்பட்டன. இது போன்ற அடாவடிச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், எனது தலைமையிலான அஇஅதிமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, நில அபகரிப்பு புகார்களின் மீது சட்டத்திற்கு உட்பட்டு, நேர்மையான முறையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நில அபகரிப்பு குறித்து துணிச்சலுடன் காவல் துறையினரிடம் புகார் தர முன் வந்தனர்.

உண்மையில் சொல்லப் போனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி காலத்திலேயே நில அபகரிப்பு புகார்கள் காவல் துறையில் கொடுக்கப்பட்டுள்ளன. காவல் துறை நடவடிக்கை எடுக்காத இனங்களில், சிலர் உயர் நீதிமன்றத்திலேயே வழக்கு தொடர்ந்த நிகழ்வுகளும் உள்ளன.

2006–லிருந்து 2011ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்திலேயே, நில அபகரிப்பு, மோசடி மற்றும் போலி பத்திரங்கள் குறித்து 6615 புகார்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இவற்றில் பூர்வாங்க விசாரணைக்குப் பின் 1,887 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் 375 வழக்குகளில் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன. சென்னை காவல் துறையில் மத்திய காவல் பிரிவில் நில ஆக்கிரமிப்பு மற்றும் மோசடி குறித்து விசாரிக்க உதவி ஆணையாளர் தலைமையில் தனிப் பிரிவு ஒன்றும் இருந்தது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதிகார மையங்களில் இருந்தவர்களின் ஆதரவோடு, எவ்வித அச்சமுமின்றி நடைபெற்று வந்த நில அபகரிப்பு மோசடிகள் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அச்சத்தின் காரணமாக புகார் கொடுக்க முன் வரவில்லை. புகார் அளித்தவர்களின் புகார்கள் மீதும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 375 இனங்களில் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு இருந்தாலும், எதிரிகளை கைது செய்வதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் சொத்துக்களை மீட்பதற்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, வேண்டுமென்றே நில அபகரிப்பு புகார்கள் தொடர்பான வழக்குகள் போடப்படுகின்றன என்பது முற்றிலும் தவறானது. எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்ட பாரபட்சமற்ற நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் அதிக அளவில் புகார் கொடுக்கின்றனர் என்பதும்; அவ்வாறு கொடுக்கப்படும் புகார்கள் காரணமாக நிலங்களை இழந்தவர்கள் தங்கள் நிலத்தை மீளப் பெற்று வருகின்றனர் என்பதும் தான் உண்மை. இதனை காணும் போது, நில அபகரிப்பாளர்களால் நிலத்தை இழந்தவர்கள் அதிக அளவில் புகார்களை கொடுத்து வருகின்றனர் என்பது தான் உண்மை நிலை.

தி.மு.க.வைச் சேர்ந்த முக்கியமானவர்கள் மீது நில அபகரிப்பு வழக்குகள் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக போடப்படுகின்றன என்ற ஒரு உண்மைக்கு மாறான குற்றச்சாட்டை தி.மு.க.வினர் அடிக்கடி சொல்லி வருகின்றனர். அவ்வாறு கூறுவதன் மூலம், நில அபகரிப்பு பழியிலிருந்து தப்பி விடலாம் என்று நினைக்கின்றனர். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிக்கு ஏற்ப, நில அபகரிப்பு குறித்த ஒரே ஒரு புகார் பற்றி இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! 29.11.2011 அன்று சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடம் திரு.என். சேஷாத்ரி குமார் என்பவர் ஒரு புகார் கொடுத்திருந்தார். அந்தப் புகாரில், தனது குடும்பத்திற்கு சொந்தமாக இருந்த 6 கிரவுண்ட் நிலத்தை திரு. மு.க. ஸ்டாலின் வாங்கி அங்கு குடியேறியதாகவும், அதன் பின்னர் அந்த வீட்டிற்கு அடுத்து உள்ள தனது வீட்டை விற்க கட்டாயப்படுத்தி, திரு. ராஜா சங்கர், திரு. ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட சிலர் தனது வீட்டை திரு. மு.க. ஸ்டாலினுக்கு கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதாகவும்; அவர்களின் மிரட்டலுக்கு பயந்து, தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் 16.07.2010 அன்று புகார் செய்ததாகவும்; ஆனால் காவல் துறையினர் அதனை வாங்க மறுத்துவிட்டதாகவும்; அதன் பிறகு திரு. பி. வேணுகோபால் ரெட்டி பெயரில் 5½ கோடி ரூபாய்க்கு வரைவோலை கொடுத்து தனது வீட்டை கிரயம் செய்து கொண்டார்கள் என்றும், தற்போது இந்த வீடு திரு. உதயநிதி ஸ்டாலின் பெயரில் 20 ஆயிரம் ரூபாய் வாடகைக்கு ஒப்பந்தம் போடப்பட்டு திரு. மு.க. ஸ்டாலினின் மகள் செந்தாமரை

அதில் குடியிருந்து வருகிறார் என்றும் புகார் கூறியுள்ளார். மேலும், தனக்கு கொலை மிரட்டல் விடுத்து வரும் திரு. வேணுகோபால் ரெட்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ராஜாசங்கர், திரு. ஸ்ரீனிவாசன் உள்ளிட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தன் வீட்டை மீட்டு தருமாறும் தனது புகாரில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் புகாரின் அடிப்படையில், காவல் துறையினர் திரு. வேணுகோபால் ரெட்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ராஜா சங்கர், மற்றும் திரு. ஸ்ரீனிவாஸ் ஆகியோர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்தனர். உடனே திரு. மு.க. ஸ்டாலின் தன்னை நிரபராதி என்று காட்டிக் கொள்ளும் பொருட்டு, ஆவேசமாக காவல் துறை தலைமை இயக்குநரை சந்திக்கச் சென்று, தன்னை உடனே கைது செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

துணை முதலமைச்சராய் இருந்து காவல் துறை சம்பந்தப்பட்ட சில கோப்புகளை கவனித்தவர் திரு. மு.க. ஸ்டாலின்; காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது இரு முறை பதில் அளித்தவர் திரு. ஸ்டாலின். அப்படிப்பட்ட திரு. ஸ்டாலினுக்கு எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்ட ஒரு புகாரின் பேரில் தேவைப்பட்டால், புலன் விசாரணை அதிகாரி தான் கைது செய்வார் என்பது தெரியாதா ? நிச்சயம் தெரியும். ஆனாலும், தனது வீராப்பினை காட்டுவதற்காக, தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக, பொதுமக்களை ஏமாற்றுவதற்காக, காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு சென்று உள்ளார். மேலும், நீதிமன்றத்தின் மூலமாக வழக்கை சந்திப்பதாக சவாலும் விடுத்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ! இந்த வழக்கை, திரு. ஸ்டாலின், நீதிமன்றத்தின் மூலமாக சந்தித்து தான் நிரபராதி என்பதை நிருபித்தாரா என்றால் இல்லை.

இந்தச் சூழ்நிலையில், மேற்படி சொத்து சட்டப்படி வாங்கப்பட்டது என்றும், இதில் எந்த விதமான நில அபகரிப்பும் இல்லை என்றும் தெரிவித்து, காவல் துறையினரால் தொடுக்கப்பட்ட இந்த குற்ற வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு திரு. வேணுகோபால் ரெட்டி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தொடுத்தார்.

இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது, மேற்படி சொத்தை வாங்கிய திரு. வேணுகோபால் ரெட்டிக்கும்; மேற்படி

சொத்தை விற்ற திரு. சேஷாத்ரி குமாருக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, மேற்படி சொத்தை வாங்கிய திரு. வேணுகோபால் ரெட்டி, விற்பனையாளர் திரு. சேஷாத்ரி குமாருக்கு வரைவோலை மூலம் 1 கோடியே 75 லட்சம் ரூபாயை கொடுத்துள்ளார். இதனைப் பெற்றுக் கொண்ட புகார்தாரர் திரு. சேஷாத்ரி குமார், திரு. வேணுகோபால் ரெட்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. ராஜா சங்கர், மற்றும் திரு. ஸ்ரீனிவாஸ் உள்ளிட்டவர்களுக்கு எதிரான புகாரினை தொடர விருப்பமில்லை என்று தெரிவித்து, அந்த வழக்கினை முடித்து விடுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், காவல் துறையால் மேற்கொள்ளப்பட்ட வழக்கினை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறையினரால் போடப்பட்ட வழக்கில் ஆதாரம் இல்லை என்று சொல்லி உயர் நீதிமன்றம் வழக்கினை தள்ளுபடி செய்யவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே புகார்தாரரும், குற்றம் சுமத்தப்பட்ட முதல் நபரும் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டதை அடுத்து, அதன் மூலம் புகார்தாரருக்கு 1 கோடியே 75 லட்சம் ரூபாய் கூடுதலாக கிடைத்துள்ளதை அடிப்படையாக வைத்துத் தான் இந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்தப் புகாருக்கு உள்ளானவர்கள், மேற்படி இடத்திற்கு 1 கோடியே 75 லட்சம் ரூபாய் குறைவாக கொடுத்து நிலத்தை எடுத்துக் கொண்டார்கள் என்பது தானே இதிலிருந்து தெரிய வருகிறது ? இதை நில அபகரிப்பு என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்லி அழைப்பது ?

இதிலே கவனிக்க வேண்டிய மற்றுமொரு அம்சம் என்னவென்றால், சென்னையின் மிக முக்கியப் பகுதியான தேனாம்பேட்டையில், 2½ கிரவுண்டு நிலம் மற்றும் 4,432 சதுர அடி கொண்ட கட்டடத்தை வெறும் 20,000 ரூபாய்க்கு வாடகை ஒப்பந்தம் செய்திருக்கிறார் திரு. உதயநிதி ஸ்டாலின். இதற்கு முன்பு இருந்த வாடகைதாரர் 1 லட்சத்து இருபதாயிரம் ரூபாய் வாடகை அளித்து இருக்கிறார். ஆனால், தற்போது வெறும் 20,000 ரூபாய் மட்டுமே அளிக்கப்படுகிறது. திரு. வேணுகோபால் ரெட்டி

ஏன் இவ்வளவு குறைந்த வாடகைக்கு இந்த வீட்டை அளித்தார் என்று திரு. மு.க. ஸ்டாலின் தான் விளக்க வேண்டும்!

காவல் துறையினர் தி.மு.க. வினர் மீது மட்டும் வழக்குகள் பதிவு செய்கிறார்கள் என்று சொன்னால், பதிவு செய்யப்பட்ட 1,225 வழக்குகளில் சம்பந்தப்பட்ட அனைவரும் தி.மு.க.வினரா என்றால் நிச்சயமாக இல்லை. தவறு செய்த அனைவர் மீதும் தான் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த அரசு அமைந்ததிலிருந்து 12.04.2012 வரை, 34,703 நில அபகரிப்பு புகார்கள் பெறப்பட்டுள்ளன. பூர்வாங்க விசாரணைக்குப் பின் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,225. புலன் விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 74. ஆக்கிரமிப்பாளர்கள் இடமிருந்து மீட்கப்பட்ட சொத்துக்கள் 1,317.15 ஏக்கர் மற்றும் 4.44 லட்சம் சதுர அடி மனைகள். மீட்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு சுமார் 758.04 கோடி ரூபாய் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தி.மு.க.வினர் தான் கைது செய்யப்படுகிறார்கள் என்றும் குற்றம் சாட்டுகின்றனர். குண்டர் சட்டத்தின் கீழ், சிறையில் அடைக்கப்பட்ட 2053 பேரும் தி.மு.க.வினரா ? இதில் தி.மு.க.வினரும் இருக்கலாம்.

தி.மு.க.வில் குண்டர்கள் இருக்கிறார்கள் என்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியே கூறியிருக்கிறார்.

3.02.2012 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில் பேசிய திரு. கருணாநிதி, "தி.மு. கழகத்தின் பொதுக்குழு சீரோடும், சிறப்போடும் அமைதியாக நடைபெறுகிறதே என்பதை ஒற்றர்கள் மூலமாக கேள்விப்பட்டு அவர்களை விட்டே சிலரைத் தூண்டி விட்டு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பேச்சில் எந்தத் தவறும் இல்லாத சூழ்நிலையில் அவர் தி.மு. கழகத்திலே உள்ள தொண்டர்களுக்கு, பிரமுகர்களுக்கு விடுத்த வேண்டுகோளை தவறாகத் திரித்து அவர் மீது மோதுவது போல; இங்கே தம்பி ஸ்டாலினுக்கு ஆதரவாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டு ஒரு பிளவை கழகத்திலே ஏற்படுத்த சில குண்டர்கள் முயற்சித்ததை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது" என்று கூறியிருக்கிறார். அதாவது, தி.மு.க.வில் குண்டர்கள்

இருக்கிறார்கள் என்று அந்தக் கட்சியின் தலைவரே ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ஒரே ஒரு குண்டர் தடுப்பு கைது குறித்து இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில் உள்ள கருங்கடல் கிராமத்தைச் சார்ந்த டேனியல் என்பவர் 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் சாத்தான்குளம் தாலுகா பகுதியில் பல இடங்களில் ஆள் மாறாட்டம் செய்து, போலி ஆவணங்கள் தயாரித்து, 5 கோடி ரூபாய் மதிப்புள்ள 500 ஏக்கர் நிலத்தை பல நபர்களிடமிருந்து அபகரித்துள்ளார். இது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட குற்றப் பிரிவில் 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு டேனியல் கைது செய்யப்பட்டார். இவர் 28.02.2012 அன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இவர் என்ன தி.மு.க.வைச் சேர்ந்தவரா ?

காவல் துறையைப் பொறுத்தவரையில், சட்டம்–ஒழுங்கை நன்கு பராமரிக்கும் வகையில், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் வகையில், யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது விருப்பு வெறுப்பின்றி சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இங்கே பேசிய சில உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமையை குறை கூறி பேசியுள்ளனர். கொலை, கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து எனது விளக்கங்களை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

பொதுவாக வழக்குகளின் எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப கூடி வருவது வாடிக்கை தான். இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ், IPC–யின் கீழ், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2001இல் 1,55,422 ஆக இருந்தது, 2011இல் 1,92,879ஆக உயர்ந்துள்ளது. தேசிய குற்ற ஆவணங்கள் கூடம், National Crime Records Bureau தயாரித்து வெளியிட்டுள்ள" இந்தியாவில் குற்றங்கள்–2010", Crime in India–2010 என்ற தொகுப்பில் உள்ள விவரங்களைப் பார்த்தாலும், அகில இந்திய அளவில் குற்றங்கள் கூடி வருவது தெரிய வரும்.

குற்றங்களிலேயே கொடிய குற்றமாக கருதப்படும் கொலைக் குற்றங்கள் 2002–லிருந்து ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வந்து 2006ஆம் ஆண்டுக்கு பிறகு ஆண்டுதோறும் கூடிக் கொண்டே வந்திருக்கிறது.

2002இல்	1605 கொலைக் குற்றங்கள்;
2003இல்	1473
2004இல்	1389
2005இல்	1365
2006இல்	1273

2006இல் 1273. இதுவரையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி.

ஒவ்வொரு ஆண்டும் கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்திருக்கிறது. அதன் பின்னர், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி அமைந்தது. அதன் பிறகு, 2007 இல் 1,521 கொலைகள். கவனியுங்கள். 2006இல் 1273 ஆக இருந்தது. 2007இல் 1,521 ஆகிவிட்டது. 2008இல் 1,634. 2009இல் 1,644. 2010இல் 1,715 கொலைக் குற்றங்கள்.

2006 உடன் ஒப்பிடும் போது 2010இல் கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை 35 சதவீதம் உயர்ந்துள்ளது. எனது முந்தைய ஆட்சியில் குறைந்து கொண்டே வந்த கொலைக் குற்றங்கள்; அதற்கு பின் வந்த திமுக ஆட்சியில் கூடிக் கொண்டே வந்துள்ளன. 2011ஆம் ஆண்டிலும் இந்த எண்ணிக்கை உயர்ந்திருந்தாலும், இந்த உயர்வு 1.8 சதவீதம் தான் என்பதும்; அதற்கு முந்தைய ஆண்டின் உயர்வான 4.3 சதவீதத்திற்கு இது மிகவும் குறைவானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான கொலைகள், குடும்பப் பிரச்சனை, வாய்த் தகராறு, முன் விரோதம், கள்ளத் தொடர்பு, பணம் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றின் காரணமாகவே நிகழ்கின்றன. இச்சம்பவங்கள் திடீரென்று அல்லது கோபம் காரணமாக நிகழ்பவை. திட்டமிட்டு செய்யப்பட்ட கொலைகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவே இவை அனைத்தையும் காவல்துறை தடுக்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. ஆனால், பணத்திற்கும் நகைகளுக்காகவும் செய்யப்படும் ஆதாயக் கொலைகள் மீது

காவல்துறை மிகவும் கவனம் செலுத்த வேண்டும். ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 2006இல் 89 ஆக இருந்து, ஆண்டுதோறும் கூடி 2010இல் 153 ஆக உயர்ந்துள்ளது. இது, 2011இல் 123 ஆக குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது, ஆதாயக் கொலைகள் ஏறத்தாழ 20 சதவீதம் 2011இல் குறைந்திருக்கிறது.

வாகன வசதிகள் பெருகி உள்ள நிலையில் வெகு தொலைவிலிருந்து குற்றவாளிகள் இங்கு வந்து குற்றங்களை செய்து விட்டு தப்பித்து விடுவது தற்போது நடைபெற்று வருகிறது. திருப்பூரில் நடந்த கன்னக்களவு வழக்கில் மேற்கு வங்கத்திலிருந்து வந்த குற்றவாளிகளைத் தேடி திருப்பூர் காவல்துறையினர் வங்காள தேச எல்லைக்குச் சென்று, இரண்டு குற்றவாளிகளை பிடித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

முந்தைய தி.மு.க. ஆட்சியின் போது நடைபெற்ற கொலை வழக்குகளும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. உதாரணத்திற்கு சில வழக்குகளை குறிப்பிட விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துக்குமார் என்பவரை கடந்த 15.02.2011 அன்று அடையாளம் தெரியாத நபர்கள் கொலை செய்தனர். பின்னர், இவ்வழக்கு 21.06.2011 அன்று புதுக்கோட்டை மாவட்ட குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, சுரேஷ் உள்ளிட்ட 7 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தருமபுரி மாவட்டம், இந்தூர் காவல் நிலைய சரகம், பள்ளப்பட்டியில் முருகன் என்பவர் 16.04.2009 அன்று இரவு கொலை செய்யப்பட்ட வழக்கில், புலன் விசாரணைக்கு பின்பு, 30.11.2009 அன்று கண்டுபிடிக்க முடியாத வழக்காக முடிக்கப்பட்ட வழக்கு, மீண்டும் 11.08.2011 அன்று இவ்வழக்கில் மறு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணையில், நல்லம்பள்ளி பாமக ஒன்றிய செயலாளர் பெரியசாமி மற்றும் மூவர் முருகனைக் கொலை செய்து அருகில் உள்ள கிணற்றில் வீசி விட்டு சென்றதும் தெரிய வந்து, நான்கு எதிரிகள் கைது செய்யப்பட்டு, வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய சரகம், ஆத்திப்பட்டியில், 01.04.2008 அன்று, அடையாளம் தெரியாத நபர்கள், மதிமுக உறுப்பினர் முருகன் என்பவரை கொலை செய்தது தொடர்பாக, 02.04.2008 அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கு 02.04.2009 அன்று மாநில குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, விசாரணையில் இருந்து வந்த வழக்கில், 18.04.2012 அன்று அருப்புக்கோட்டை ஒன்றிய திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் அழகு ராமானுஜம், அவரது கூட்டாளிகளுடன் சேர்ந்து கொலை செய்தது கண்டுபிடிக்கப்பட்டு, அழகு ராமானுஜம் கைது செய்யப்பட்டார்.

சென்ற ஆட்சியில் செல்வாக்கு படைத்தவர்களின் ஆதரவுடன் கொலை செய்து; அதை வாகன விபத்தாக மாற்றிய சம்பவங்களில் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம், அவனியாபுரம் காவல் நிலைய சரகம், வில்லாபுரத்தைச் சேர்ந்த பாண்டியராஜன் என்பவரை அக்கிராமத்தைச் சேர்ந்த எஸ்.ஆர்.கோபி மற்றும் 15 பேர் 16.4.2009 அன்று நாடாளுமன்ற தேர்தலின் போது, தனக்குச் சொந்தமான இடத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் அலுவலகம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததால் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக அவரை கொலை செய்துவிட்டு; அவனியாபுரம் ஈச்சனோடை சாலையில் பாண்டியராஜன் விபத்தில் இறந்தது போல் ஜோடித்து சடலத்தை அச்சாலையில் வீசி விட்டு எஸ்.ஆர் கோபிக்கு சொந்தமான ஸ்கார்பியோ வாகனத்தை சடலத்தின் மீது ஏற்றி சென்றுள்ளனர். இது தொடர்பாக அவனியாபுரம் காவல் நிலையத்தில் வாகன விபத்து மரணம் என வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர் 30.07.2011 அன்று, அவ்வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு எதிரிகள் எஸ்.ஆர்.கோபி மற்றும் சுரேஷ் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

திமுக ஆட்சியில் செல்வாக்கு பெற்றவர்களின் ஆதரவுடன், காவல் துறையின் கைகள் கட்டப்பட்ட நிலையில் குற்றங்கள் நிறைவேறின. ஆனால், இப்போது குற்றவாளிகள் ஆதரவற்ற அநாதைகள். குற்றம் செய்பவர்களும் அவர்களை தூண்டுபவர்களும், ஊக்குவிப்பவர்களும், இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறை பணி செம்மையாக நடைபெற, வழக்கமான பணிகளை, வழக்கமான முறையில் மேற்கொண்டால் போதாது. காலத்திற்கேற்ப நவீன யுக்திகளை கடைபிடித்து, புதிது புதிதாக ஏற்படும் சவால்களை சமாளிக்கும் திறன் கொண்டதாக காவல் துறை விளங்கினால் தான் காவல் துறையினர் தமது பணியினை செம்மையாக நிறைவேற்ற இயலும். எனவே தான், நான் முதலமைச்சராக பொறுப்பேற்கும் போதெல்லாம் காவல் துறையில் பல புதிய முன் முயற்சிகளை எடுத்து வருகிறேன். இந்த முன் முயற்சிகளில் சில, காவல் துறையினர் தம் பணித் திறனை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளன; ஒரு சில பொதுமக்களுக்கு நேரடியாக பயனளிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன; மற்றும் சில காவல் துறையினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக அமைந்துள்ளன. இதன் மூலம், காவல் துறையினர் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்கள் பணியை செய்ய இயலுவதால், அதன் பலன் பொதுமக்களுக்கு கிடைக்கிறது. இவ்வாறு எடுக்கப்பட்ட முன்முயற்சிகளில் ஒரு சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

காவல் பணிக்கு உரிய நேரத்தில் ஆட்களை தேர்வு செய்வது இன்றியமையாதது ஆகும். அவ்வாறு நடைபெறும் தேர்வு வெளிப்படையாகவும், நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் என்ற ஒரு வாரியத்தை 1991ஆம் ஆண்டு நான் ஏற்படுத்தினேன்.

காவலர்களுக்கான குடியிருப்பை கட்ட தனி வீட்டு வசதி வாரியம் தேவை என்பதை கருத்தில் கொண்டு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1981ஆம் ஆண்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்தினார். 1989ஆம் ஆண்டு அப்போதைய தி.மு.க. அரசு இதனை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைத்துவிட்டது. இதனால், காவலர்களுக்கான குடியிருப்புகளை கட்டுவதில் தொய்வு ஏற்பட்டது. காவலர் குடியிருப்புகள் மற்றும் காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை கட்டுவதற்கு தனியே ஒரு அமைப்பு இருக்க வேண்டும் என்பதால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தை நான் 1991ஆம் ஆண்டு மீண்டும் ஏற்படுத்தினேன். காவலர்கள் அனைவருக்கும் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் எனது அரசு செயல்பட்டு வருகிறது.

காவல் துறையின் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதை உறுதி செய்யும் வகையிலும், மகளிராலேயே நிர்வகிக்கப்படும் அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற ஒரு புதிய திட்டத்தை 1992ஆம் ஆண்டு நான் தொடங்கி வைத்தேன். மகளிர் பாதுகாப்பில் ஒரு மைல் கல்லாக விளங்கும் இந்தத் திட்டம் இதர மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

கடல் வழியே தமிழ்நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், கடலோர பாதுகாப்பை ஏற்படுத்தும் பொருட்டும், கடலோரக் காவல் படை என்ற ஒரு புதிய அமைப்பினை 1994ஆம் ஆண்டு நான் துவக்கி வைத்தேன்.

குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், விபத்துகளில் சிக்குண்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டும், நெடுஞ்சாலை ரோந்துப் படை 1994ஆம் ஆண்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்டது.

காவல் துறையின் திறமையை மேம்படுத்த தகவல் பரிமாற்றம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், ‘அனலாக்’ என்ற பழைய தொழில்நுட்பத்தில் செயல்பட்டு வந்த உயர் நுண்ணலை வலை பின்னல் அமைப்பினை லக்கமாக, அதாவது டிஜிட்டலாக மாற்ற இந்தியாவிலேயே முதன் முதலாக 1992ஆம் ஆண்டு நான் நடவடிக்கை எடுத்தேன். இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் காவல் துறையின் பயன்பாட்டிற்கென நுண்ணலைத் தகவல் தொடர்பு வசதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

காவல் நிலையங்களுக்கு செல்லும் பொதுமக்கள் அமருவதற்கு வசதியாக இந்தியாவிலேயே முதன் முறையாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 10 நாற்காலிகள் வாங்குவதற்கு கடந்த ஆண்டு நான் அனுமதி வழங்கினேன்.

காவல் துறை அலுவலர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்கும் வகையில், உலகத் தரம் வாய்ந்த காவல் உயர் பயிற்சியகம் ஊனமாஞ்சேரியில் நிறுவிட 2004ஆம் ஆண்டு நான் அடிக்கல் நாட்டினேன். மத்திய காவல் படைகளுக்குத் தான் இது போன்ற உயர் பயிற்சியகம் உள்ளது. மாநில காவல் துறைக்கு உலகத் தரத்தில் இவ்வாறான பயிற்சியகம் ஏற்படுத்தப்பட்டது தமிழ்நாட்டில் மட்டும் தான்.

இந்தியாவிலேயே முதன் முறையாக, காவல் துறையினர் குறைந்த விலையில் பொருட்களை பெறும் வகையில், பல்பொருள் அங்காடிகள், அதாவது ஊயவேநநளே சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் என்னால் திறந்து வைக்கப்பட்டன.

காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்த்தியது; காவலர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு படிகளை உயர்த்தியது; உதவித் தொகைகளை உயர்த்தியது; காவல் துறையினரின் குழந்தைகளுக்கான பரிசுத் தொகைத் திட்டம் துவங்கப்பட்டது; காவலர்கள், காலத்தே பதவி உயர்வு பெறுவதை உறுதி செய்தல்; சிறப்புக் காவல் படை அணித் தலைமையிடங்கள் மற்றும் ஆயுதப்படை தலைமையிடங்களில் மருத்துவச் சேவை மையங்கள் துவக்கப்பட்டது என காவலர் நலன்களுக்காக பல்வேறு நடவடிக்கைகளையும் நான் தொடர்ந்து எடுத்து வருகிறேன்.

காவல் துறையினர் தற்போது தமது பணிகளை சிறப்பாக செயலாற்றுகின்றனர் என்றால், அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. காவலர் சிறப்பாக செயல் புரிவதற்கு ஒரு உந்துதல் அவசியம் ஆகும். அத்தகைய உந்துதலை தலைமைப் பண்பு மிக்க தலைவரால் தான் வழங்க முடியும். இந்தத் தருணத்தில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு. ஹாரி எஸ். ட்ரூமென் கூறியதை இங்கு நினைவு கூர விரும்புகிறேன். “Men make history and not the other way around. In periods where there is no leadership, Society stands still. Progress occurs when courageous, skillful leaders seize the opportunity to change things for the better”. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்ததும் இதே காவல் துறை தான். தற்போது எனது தலைமையின் கீழ் இயங்கி வருவதும் இதே காவல் துறை தான். ஆனால், சிறப்பாக செயல்பட வேண்டும், சட்டம்–ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டும், சட்டத்தை மதிப்பவர்களுக்கு நண்பனாகவும், சட்டத்தை மீறுபவர்களுக்கு பகைவனாகவும் செயல்பட வேண்டும் என்ற புதிய எழுச்சியுடன் காவல் துறை செயல்பட்டு வருவதற்கு காரணம் அவர்கள் எனது தலைமையின்கீழ் பணிபுரிவதால் தான். எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் ஸ்காட்லாண்ட் யார்டு காவல் துறைக்கு இணையாக புகழப்பட்டு பின்னர் வீழ்ச்சியடைந்த காவல் துறை, மீண்டும் அந்தப் புகழை விரைவில் மீட்டெடுக்கும் என்பதனையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! காவல் துறையைப் போன்றே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியும் மகத்தானது. தீ விபத்து ஏற்படும் காலங்களிலும்; இயற்கை இடர்பாடு ஏற்படும் காலங்களிலும்; தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணி மகத்தானது ஆகும். இத்தருணங்களில், உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை இத்துறை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தீ விபத்து ஏற்படும் போது, விரைந்து சென்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதால், இத்துறைக்குத் தேவையான பல நவீன வசதிகளை எனது அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் வீரதீர செயல்களை அங்கீகரிப்பதில் எனது அரசு எப்போதும் முன் நிற்கிறது. அந்த அடிப்படையில் தான், கடந்த குடியரசு தின விழாவில், சென்னை எழிலகம் வளாகத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில், உயிரை துச்சமென மதித்து கடமையாற்றி படுகாயமடைந்த கோட்ட தீயணைப்பு அலுவலர் திருமதி பிரியா, மற்றும் நிலைய தீயணைப்பு அலுவலர் திரு. முருகன் ஆகியோருக்கும், இந்த தீ விபத்தில் இறந்த முன்னணி தீயணைப்பாளர் திரு. அன்பழகனுக்கும் அண்ணா வீரதீர பதக்கத்தினை நான் வழங்கி சிறப்பித்தேன். தமிழகக் காவல் துறையை போன்றே தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை முன்னணித் துறையாக விளங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு தொடர்ந்து எடுக்கும்.

இப்போது இந்த ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான அறிவிப்புகள் 2012–2013.

1. காவல் துறையில் புதிய ஆள் சேர்க்கை

New Recruitments to the Police Force

காவல் துறையில் தற்போது **1,12,363** பணியிடங்கள் உள்ளன. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப காவல் துறை பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையிலும்; காவல் துறையின்

செயல்பாடு மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும்; சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் காவல் துறையினர் அதிக அக்கறை செலுத்தும் வகையிலும்; மாநிலத்திலுள்ள 1,498 காவல் நிலையங்களுக்கென 19,620 கூடுதல் பணியிடங்கள் நான்கு ஆண்டு காலத்தில் தோற்றுவிக்கப்படும். இவ்வாறு புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதாலும், காலிப் பணியிடங்களை நிரப்புவதாலும் மொத்தம் 30,000 பணியாளர்கள் காவல் துறைக்கென தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 4 ஆண்டு காலத்தில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2. காவல் துறையினருக்கான பயிற்சி கட்டமைப்புகளை வலுப்படுத்தல்

Provision of facilities to augment training infrastructure in every district for setting up of Police Training Schools

சென்னை அசோக் நகரில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரி உட்பட தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, வேலூர், கோயம்புத்தூர், ஆவடி, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தற்போது எட்டு நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இந்தப் பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 3000 காவலர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்க முடியும்.

கடந்த 21.03.2012 அன்று 12,165 காவலர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களை தேர்ந்தெடுக்க தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. எனவே, 2012–2013ஆம் ஆண்டில் குறைந்த பட்சம் 15000 காவலர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய தேவை உள்ளது. காவல் துறையில் ஒவ்வொரு ஆண்டும் ஆள் சேர்க்கை அதிகம் அமையப் போவதால், வரும் ஆண்டுகளிலும் பயிற்சிக்கான இந்தத் தேவை தொடரும். ஆகவே, ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் ஒரு காவலர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படும். இதற்கென இந்த ஆண்டில் 30 கோடி ரூபாய் செலவிடப்படும்.

3. காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க 1000 கோடி ரூபாய் திட்டம்

Rs.1000 crores package for development of infrastructure in Police Department

என்னுடைய அரசு, காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2011–2012ஆம் ஆண்டிலேயே முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்தது. அதனை ஒரு அளவு கோலாக வைத்துக் கொண்டு அதற்கும் மேலாக, காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்க, வரும் நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 1,000 கோடி ரூபாய் செலவிடப்படும். அதன் தொடக்கமாக இந்த நிதியாண்டில் சென்ற ஆண்டில் உள்கட்டமைப்பு வசதிகளுக்கென வழங்கப்பட்ட நிதி ஆதாரங்களைக் காட்டிலும் கூடுதலாக 250 கோடி ரூபாய் வழங்கப்படும். அரசின் இந்த நடவடிக்கையினால் தொலை நோக்குப் பார்வையுடன் காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்க முடியும்.

4. காவல் துறையினருக்கான சீருடைப் படியை உயர்த்தி வழங்குதல்

Enhancement of Uniform Allowance for Police Personnel

காவல் துறையினருக்கு வழங்கப்படும் சீருடைப் படி மாதமொன்றுக்கு 200/– ரூபாயிலிருந்து 250/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

5. சென்னை மாநகர காவல் ஆணையரகத்திற்கு ரோந்துப் பணிகளுக்கென 100 வாகனங்கள் வழங்குதல்

Sanction of 100 Patrol Vehicles for Chennai City Police Commissionerate

சென்னை மாநகரில் ரோந்துப் பணிகளை துரிதப்படுத்த 100 வாகனங்கள் 7 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். இது குற்ற நிகழ்வுகளைக் குறைக்க உதவும். இந்த வாகனங்கள் அனைத்தும், காவல் நிலையங்களுடன் நேரடியாக உடனடி தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் நவீன தகவல் தொடர்பு (communication) வசதிகள் பொருத்தப் பட்டவையாக இருக்கும்.

6. லக்க அடிப்படையில் இயங்கும் காவல் வானொலி தொடர்புத் திட்டத்தை சென்னை மற்றும் திருச்சி மாநகர காவல் ஆணையரகங்களுக்கு அனுமதித்தல்

Sanction of Digital Based Police Radio System for Chennai and Trichy Commissionerates

காவல் துறையில் தற்போது இயங்கி வரும் கம்பியில்லா தொலை தொடர்பு வசதிகளுக்கான digital based micro wave link 1992–ல் தான் முதன்முதலாக தமிழ்நாட்டில் சென்னைக்கும் மதுரைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. அந்த வழியில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி அடங்கிய லக்க (Digital) அடிப்படையில் இயங்கும் வானொலி தொடர்புத் திட்டம், சென்னை மற்றும் திருச்சி மாநகர காவல் ஆணையரகங்களுக்காக 30 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் அனுமதிக்கப்படும்.

7. காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்

Construction of Police Stations

இந்த அரசு பதவியேற்ற பொழுது 190 காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. அவற்றுள் 2011–2012இல் 22 காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு 9 கோடியே 25 லட்சம் ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 60 காவல் நிலையங்களுக்கு 35 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

8. காவல் துறை வாகனங்களின் பராமரிப்பை மேம்படுத்த காவல்துறை போக்குவரத்து நிறுவனத்தை ஏற்படுத்துதல்

Setting up of a Police Transport Corporation for proper maintenance of Vehicles of the Police Department

காவல் துறையில் 13,000–க்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன. சென்னை மற்றும் திருச்சியில் மட்டும் தற்பொழுது துறையின் வாகனங்களைப் பராமரிக்க காவல் வாகனப் பட்டறைகள் அமைந்துள்ளன. பிற இடங்களில் பராமரிப்புப் பணிகள், இயக்கூர்திகள் பராமரிப்புப் பணிகள் துறை மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, அவசரத் தேவைகள் எழும் சமயங்களில், காவல் துறை வாகனங்களை உடனடியாக பழுது

பார்க்க முடியவில்லை. காவல் துறையின் வாகனங்களைச் செம்மையான முறையில் தனி கவனத்துடன் திட்டமிட்டுப் பராமரிப்பதற்கென, ஒரு காவல் துறை போக்குவரத்து நிறுவனம் ஏற்படுத்தப்படும்.

9. மாநில முதன்மைக் காவல் கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்துதல்

Establishment of a State Police Master Control Room

அவசர காலங்களில் காவல் துறை உடனடியாக தலையிட்டு உதவுவதற்கு ஏதுவாக, காவல் கட்டுப்பாட்டு அறைகள் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் சில முக்கிய நகரங்களில் இயங்கி வருகின்றன. இவை அந்தந்த மாவட்டம் அல்லது ஆணையரக எல்லைகளுக்குள்ளான பகுதிகளில் அமைந்துள்ள காவல் நிலையங்கள் மற்றும் வாகனங்களுடன் தொடர்பு வசதி கொண்டவையாகும். மாநிலத்தின் எந்த ஒரு பகுதியில் காவல் துறையின் உடனடி செயல்பாடு தேவைப்பட்டாலும், அப்பகுதிக்கு போதுமான காவல் படையை அனுப்பவும்; அவர்களது செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும்; மாநில அளவில் ஒரு முதன்மைக் காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும். அனைத்து காவல் நிலையங்கள், காவல் நிலைய வாகனங்கள், நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் மற்றும் ஏனைய ரோந்து வாகனங்கள் முதலியன கம்பியில்லாத தொடர்பு வசதி மூலம் மாநில முதன்மை காவல் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்படும்.

10. தமிழ்நாடு தொழில் பாதுகாப்புப் படையை நிறுவுதல்

Establishment of a Tamil Nadu Industrial Security Force

வங்கிகள், சில மத்திய அரசு நிறுவனங்கள் முதலியவற்றின் அன்றாட காவல் பணிகளுக்காக காவல் துறையினர் பணி அமர்த்தப்படுகின்றனர். இதனால் காவல் துறையில் சட்டம் ஒழுங்கு பராமரித்தல்; குற்றப் புலனாய்வு போன்ற வழக்கமான பணிகளுக்காக கிடைக்கப் பெறும் காவல் துறையினரின் எண்ணிக்கை குறைந்து விடுகிறது.

வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் காவலர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு தொழில்

பாதுகாப்புப் படை வாரியம் அமைக்கப்படும். இந்தப் படை ஒரு காவல் துறை உயர் அதிகாரியின் தலைமையின் கீழ் இயங்கும். படையின் பயிற்சியாளர்களாக ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகளும்; ஓய்வு பெற்ற ராணுவ வீரர்களும் அமைவர். நன்கு பயிற்சி பெற்ற திறமை வாய்ந்த தனியாரைக் கொண்டு இயங்கும் இந்த படை, கட்டணத்தை வசூலித்துக் கொண்டு வங்கிகள், இதர நிறுவனங்கள் முதலியவற்றில், காவலர்களை, பாதுகாப்புப் பணிகளுக்காக, பணி அமர்த்தும்.

11. கடற்கரைப் பகுதிகளில் ரோந்து பணிக்காக அனைத்து நிலப் பரப்பிலும் இயங்கக் கூடிய 9 வாகனங்கள் வழங்குதல்

Purchase of 9 all Terrain Vehicles for Beach Patrolling

சென்னையில் மெரினா, எலியட்ஸ் மற்றும் திருவான்மியூர் முதலிய கடற்கரை பகுதிகளில் ரோந்து பணிகளை திறம்பட மேற்கொள்ள 30 லட்சம் ரூபாய் செலவில் அனைத்து நிலப் பரப்பிலும் இயங்கக் கூடிய 9 வாகனங்கள் வழங்கப்படும்.

12. சிறுவர் மற்றும் சிறுமியர் குழுக்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்

Increasing the Number of Boys and Girls Clubs

இளம் சிறுவர் மற்றும் சிறுமியர்கள் தவறான பாதையில் சென்று குற்ற நிகழ்வுகளில் ஈடுபடாமல் பயனுள்ள செயல்களில் அவர்களை ஈடுபடுத்த 1993ஆம் ஆண்டு முதன்முதலாக தமிழ்நாட்டில் சிறார் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. 2012–2013ஆம் ஆண்டில், ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும் 10 குழுக்கள் என்ற வீதத்தில், 400 சிறுவர் மற்றும் சிறுமியர் குழுக்கள் புதியதாக ஏற்படுத்தப்படும். இக்குழுக்களில் உள்ள சிறுவர் மற்றும் சிறுமியருக்கு மோட்டார் வாகனம் ஓட்டுதல் உள்ளிட்ட பல்வேறு திறன் வளர்க்கும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

13. தமிழக எல்லையில் உள்ள 25 காவல் சோதனைச் சாவடிகளை வலுப்படுத்துதல்

Strengthening of 25 Checkposts in the Border Areas

தமிழக எல்லைப் பகுதிகளில் 107 காவல் சோதனைச் சாவடிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமான 25 காவல்

சோதனைச் சாவடிகள் 5 கோடி ரூபாய் செலவில் நவீனமயம் ஆக்கப்படும்.

14. தடய அறிவியல் துறையின் செயல் திறனை மேம்படுத்துதல்

Strengthening the Capabilities of the Forensic Sciences Department

தடய அறிவியல் துறையின் திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மண்டல ஆய்வகங்களில் உள்ள குருதி வடிநீரியல் ஆய்வுப் பிரிவுகள் ரத்த மாதிரிகளை பரிசோதிக்கும் வசதிகளுடன்

1 கோடியே 23 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். இந்த ஆய்வகங்கள் ரத்த மாதிரிகளை பகுப்பாய்வு செய்யக் கூடிய செயல் திறனைப் பெறுவதால் குற்றவாளிகளைக் கண்டறிவதில் துறையின் செயல்பாடு மேன்மை அடையும்.

15. காவல் நிர்வாகப் பிரிவை தரம் உயர்த்துதல்

Upgradation of the Administrative Wing

சென்னைக் காவல் ஆணையரகத்தில் உள்ள மண்டல அலுவலகங்களில் நிர்வாக பணியில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு பெற ஏதுவாக 5 முதுநிலை நிர்வாக அலுவலர் பதவிகள் 32 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

16. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையை வலுப்படுத்துதல்

Strengthening of CBCID Wing

குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்துவதற்காக 3 கோடி ரூபாய் செலவில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தகவல் தொடர்புக் கருவிகள், கணினிகள் போன்ற தளவாடங்களும் வழங்கப்படும்.

17. சென்னை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகத்திலுள்ள படைக் குடியிருப்பினைப் புதுப்பித்தல்

Reconstruction of barracks in Chennai Commissioner’s Office

சென்னை மாநகர காவல் ஆணையரக அலுவலக வளாகத்தில் உள்ள 500 ஆயுதப்படை காவலர்களுக்கான படைக் குடியிருப்பு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்த படைக் குடியிருப்பு 3 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

18. போக்குவரத்து காவல் நிலையங்கள் உருவாக்குதல்

Formation of Traffic Police Stations in important Cities

தமிழ்நாட்டில் மொத்தம் 213 போக்குவரத்து காவல் நிலையங்கள் உள்ளன. மேலும், சில நகரங்களில், போக்குவரத்தை சரி செய்யவும்; போக்குவரத்து தொடர்பான காவல் பணிகளை செம்மையாக மேற்கொள்ளவும்; போக்குவரத்துக் காவல் நிலையங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 5 புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் 2 கோடியே 71 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இவை மணப்பாறை, தாராபுரம், திருப்பத்தூர், அவனியாபுரம் மற்றும் சென்னை மாநகரத்தில் குரோம்பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.

19. காவல் துறை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக குண்டு துளைக்காத கவச மேற்சட்டைகள் வழங்குதல்

Providing Bullet Proof Jackets for the protection of Police Personnel

அபாயகரமான மற்றும் ஆபத்தான சூழ்நிலைகளில் பணிகளை மேற்கொள்ளும் காவல் துறை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக 32 லட்சம் ரூபாய் செலவில் 80 குண்டு துளைக்காத கவச மேற்சட்டைகள் கொள்முதல் செய்யப்படும்.

20. தகவல் தொடர்பு கோபுரங்கள் 10 இடங்களில் நிறுவுதல்

Erection of Communication Towers at 10 Places

மிக உயர் அலை (VHF) தகவல் தொடர்பு அமைப்பினை மேம்படுத்த 40 மீட்டர் உயரமுள்ள தகவல் தொடர்பு கோபுரங்கள், திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டையிலும்; சிவகங்கை மாவட்டத்தில் திருப்பாச்சேத்தியிலும்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் எம்.எல்.புரம் மற்றும் கவரக்கல்லிலும்; ராமநாதபுரம் மாவட்டத்தில்

திருவாடனையிலும்; மற்றும் 60 மீட்டர் உயரமுள்ள தகவல் தொடர்பு கோபுரங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் பேராவூரணியிலும்; மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழியிலும் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

மேலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதியிலும்; நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி மற்றும் தொட்டபெட்டாவிலும்; 70 லட்சம் ரூபாய் செலவில் தகவல் தொடர்பு வசதிகளை சீராக்க அதி உயர கோபுரங்கள் நிறுவப்படும்.

21. சூரிய சக்தியினால் இயங்கக் கூடிய பதிலி சாதனங்கள் மூலம் (Back up system) மின் வசதிகளை காவல் நிலையங்களில் ஏற்படுத்துதல்

Installation of Solar Power Back up System for Police Stations

குற்றம் மற்றும் குற்றவாளிகள் வலைப்பின்னல் திட்டத்தினை செயல்படுத்தும் காவல் நிலையங்களுக்கு தடையில்லா மின்சக்தி வழங்கக் கூடிய சூரிய சக்தியினால் இயங்கும் பதிலி சாதனங்கள், Back up system, 65 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

22. காவல் துறை அலுவலர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்

Providing Two-wheelers for Police Personnel

காவல்துறையில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக 1 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் 228 இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

23. இணைய வழி குற்ற ஆய்வுக் கூடம் தோற்றுவித்தல்

Formation of Cyber Lab

உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் செயல்படும் சில குற்றவாளிகள் இணைய வழி மூலம் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றனர். அவர்களது நடவடிக்கைகளைக் கண்காணிக்கக் கூடிய திறனை உள்நாட்டு பாதுகாப்பு நுண்ணறிவுப் பிரிவில் வளர்க்கும் வகையில், ஒரு

இணைய வழிக் குற்ற ஆய்வுக் கூடம் 60 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்.

24. வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயல் இழப்பு பிரிவுக்கு குண்டு துளைக்காத ஆடைகள் வழங்குதல்

Providing of Bomb suits to Bomb Detection and Disposal Squads

வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயல் இழப்பு பிரிவினருக்கு 80 லட்சம் ரூபாய் செலவில் குண்டு துளைக்காத ஆடைகள் வழங்கப்படும்.

25. வேலூரில் உள்ள ஆயுதப்படை பிரிவுக்கு கட்டடம் கட்டுதல்

Construction of Armed Reserve Building in Vellore

வேலூரில் உள்ள ஆயுதப்படை பிரிவுக்கு 2 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

26. படைக் குடியிருப்புகளுக்கு அடுக்குப் படுக்கைகள் வழங்குதல்

Provision of Bunker Beds in Police Barracks

சிறப்புக் காவல் படை மற்றும் ஆயுதப் படை வளாகங்களில் குடியிருக்கும் காவலர்களுக்கென அடுக்குப் படுக்கை அமைப்புகள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

27. காவல் துறையின் நுண்ணறிவுப் பிரிவின் திறனை கிராம அளவில் வலுப்படுத்துதல்

Strengthening the Intelligence Network of the Police Department at the Village Level

நுண்ணறிவுப் பிரிவின் செயல்திறனை மேலும் வலுப்படுத்த, கிராம அளவில் முக்கிய தகவல்களைச் சேகரித்து உடனுக்குடன் தெரிவிக்கக் கூடிய ஒரு செயலமைப்பு 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

28. குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கு முக்கியத்துவம் அளித்தல்

Prevention of Crime to Receive Top Priority

குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கு இவ்வரசு முன்னுரிமை வழங்கி குற்றவியல் விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தின் கீழ் இதற்கென அமைந்துள்ள அதிகாரங்களைக் கொண்டு, காவல் துறை ஆணையர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கவனமாக மேற்பார்வையிட தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர் மற்றும் காவல் துறை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

29. புறக் காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக தரம் உயர்த்துதல்

Upgradation of Out Posts into regular

Police Stations

கடந்த நிதியாண்டில் 12 புறக் காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டன. அதே போல் இந்த நிதியாண்டில் 12 புறக் காவல் நிலையங்கள் 13 கோடி ரூபாய் செலவில் முழு அளவிலான காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

30. ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கான இல்ல அலுவலக உதவியாளர் படி

Residential Office Assistant Allowance for IPS Officers

உயர் கால முறை ஊதிய நிலை மற்றும் அதற்கு மேம்பட்ட நிலையில் உள்ள, அதாவது Super-time Scale and above நிலையில் உள்ள, அனைத்து இந்தியப் பணிகளைச் சேர்ந்த, அதாவது All India Services–ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கு, அவர்களது இல்லத்தில் அலுவலக நிமித்தமான வேலைகளைச் செய்ய உதவுவதற்கு அலுவலக உதவியாளர்கள் அனுமதிக்கப்பட்டு, ஒரு அலுவலக உதவியாளரை மாதம் 8,000 ரூபாய் ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக் கொள்ளலாம் என்று 28.02.2011இல் முந்தைய அரசு அறிவித்திருந்தது.

இந்த சலுகை சென்னையில் பணிபுரியும் I.A.S. மற்றும் I.F.S. அதிகாரிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்தது. இந்தச் சலுகை இனி I.P.S. அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

I.P.S. அதிகாரிகள் பலர், உயர் கால முறை ஊதியம் மற்றும் அதற்கு மேம்பட்ட ஊதியத்தில் சென்னைக்கு வெளியே, காவல் துறை துணைத் தலைவர், காவல் துறை தலைவர் ஆகிய பதவிகளில் இருப்பதால், இந்தச் சலுகை சென்னை நகரம் மட்டுமின்றி, மாநிலத்தில் பிற இடங்களில் பணிபுரியும் I.P.S. அதிகாரிகளுக்கும் வழங்கப்படும்.

31. போக்குவரத்துக் காவலர்களுக்கு எலுமிச்சம் பழச் சாறு வழங்குதல்

Supply of Lime Juice for Traffic Police

போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவது காவல் துறை பணிகளில் முக்கியமான ஒன்றாகும். இப்பணியைச் செய்யும் காவல் துறையினர் கோடைக் காலத்தில் கடும் வெயிலில் சாலைகளிலும், சாலை சந்திப்புகளிலும், நிழலுக்கு ஒதுங்கக் கூட இயலாத இடங்களில் நின்று பணிபுரிய வேண்டியுள்ளது. இவர்கள் பொதுவாக, ஒரு நாளில் காலையில் நான்கு மணி நேரமும், மதியம் நான்கு மணி நேரமும் வெயிலின் தாக்கத்தைப் பொருட்படுத்தாமல் பணிபுரிகின்றனர். இவர்களது சிரமத்தைக் குறைக்கும் வகையில், இவர்களுக்கு பணியில் இருக்கும் போது, காலை எட்டு மணி முதல் மாலை நான்கு மணிக்கு உள்ள நேரத்தில், இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை எலுமிச்சம் பழச் சாறு வழங்கப்படும். இது கோடை காலத்தில் நான்கு மாதங்களுக்கு வழங்கப்படும். காவலர்கள் முதல் உதவி ஆய்வாளர்கள் வரையில் சுமார் 6,500 பேர் இதனால் பயனடைவர்.

32. குடிமைப் பாதுகாப்பு

Civil Defence

பயிற்சி பெற்ற குடிமக்கள் அடங்கிய குடிமைப் பாதுகாப்பு அலகுகள் சென்னை, மாமல்லபுரம், திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் தொடங்கப்படும். இயற்கைச் சீற்றங்கள் மற்றும் எதிர்பாரா விபத்துகள் போன்ற பேரிடர் நிகழும் காலங்களில் இந்த அலகுகள் அரசுத் துறைகளுக்கு உதவியாகச் செயல்படும்.

33. ஊர்க்காவல் படையினருக்கு மூன்று அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

Construction of three Unit Offices for Home Guards

ஊர்க்காவல் படையினர் திறம்பட செயல்பட கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் 45 லட்சம் ரூபாய் செலவில் மூன்று அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

34. வான் நோக்கி உயரும் நீட்டிப்பு ஏணி கொண்ட ஊர்தி வழங்குதல்

Provision of Sky lift

சென்னை நகரில் அடுக்குமாடி கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள 6 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் ஒரு வான் நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு வழங்கப்படும்.

35. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை அதிகரித்தல்

Enhancement of Risk Insurance for Fire and Rescue Services Department Personnel

காவல் துறை பணியாளர்களுக்கு, தமிழ்நாடு காவல் காப்பீட்டு திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதற்கு ஈடாக, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் காப்பீட்டுத் தொகை 1 லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

36. அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு தற்காப்பு உடைகள் வழங்குதல்

Fire Protection equipment for all Fire Personnel

தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையில் 175 ‘தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள்’ மட்டுமே உள்ளன. எந்த ஒரு நேரத்திலும் தீ விபத்துகளை எதிர்கொண்டு பணியாற்ற வேண்டிய நிலையில் 1980 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும்

தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள் வழங்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் தீ விபத்து எங்கு ஏற்பட்டாலும் அதனை எதிர்கொள்ள உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். ஆகவே, 28 கோடி ரூபாய் செலவில் 1980 'தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள்' தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை வீரர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும்.

37. பல்பொருள் அங்காடிகள் Canteens **வசதியை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்கும் விரிவுபடுத்துதல்.**

Extension of Canteen facility to the personnel of Fire and Rescue Services

இந்தியாவிலேயே முதன் முறையாக, காவல் துறையினர், குறைந்த விலையில், பொருட்களை பெறும் வகையில், பல்பொருள் அங்காடிகள், அதாவது Canteens, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் என்னால் திறந்து வைக்கப்பட்டன.

இங்கே பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் Canteen வசதியை நீட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையினை ஏற்று, காவல் துறையினருக்காக என்னால் அண்மையில் சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்ட பல்பொருள் அங்காடிகள், அதாவது Canteens மூலம் பொருட்களை குறைந்த விலையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையில் பணிபுரியும் அலுவலர்களும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும். இதனால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையில் பணிபுரியும் 6,800 அலுவலர்கள் பயன் அடைவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின்மீது நான் ஆற்றிய பதில் உரையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிய விடை கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு என்னால் பதில் அளிக்கப்படாமல் ஏதேனும் இருந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர்களின் பேச்சு அவைக் குறிப்பேட்டில் இருப்பதால், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள்

எடுக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஒவ்வொரு பிரச்சனைக்கும், கேள்விக்கும், பதில்கள் தயாராக இருக்கின்றன. ஆனால் அனைத்திற்கும் பதில் சொல்வது என்றால், இன்று இரவு 8 மணியானால் கூட முடியாது. ஆகவே இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு, பலதரப்பட்ட கருத்துகளை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★